தமிழ் பதிப்பு

6,800—5—37.

கிராமவாசியின் பஞ்சாங்கம்

1937-38




மதராஸ் விவசாய டிபார்ட்மெண்டு.

ஈஸ்வர வருஷத்திய பஞ்சாங்கம்.

விலை, 1 அணா] [தபாற்கூலி, 2¼ அணா.

பஞ்சாங்கம் வேண்டுபவர்கள் 3¼ அணா ஸ்டாம்பு அனுப்பி அருகாமையிலுள்ள விவசாய டிப்டி டைரெக்டர் அல்லது டிமான்ஸ்ட்ரேடரிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டியது. வி. பி. தபால் மூலமாய் அனுப்பப்படமாட்டாது.

A



பி. எஸ். ஜி. அண்டு ஸன்ஸ்,
தர்ம ஸ்தாபன
கைத்தொழிற் சாலை,
பீளமேடு, கோயமுத்தூர்.


இந்த படம் எங்களுடைய நூதன பால் பேரிங் கவலை வண்டி ஸ்டாண்டில் அமைக்கப் பட்டிருப்பதை காட்டுகிறது. இந்த உயர்தர மான கவலை வண்டி நம்முடைய குடியான வர்களின் உபயோகத்திற்காகவே சிரத்தை யுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது முதல் தரமான உருக்கு பால் பேரிங்களால் அமைக் கப்பட்டிருப்பதால் எருதுகளுக்கு அதிக சிர மம் கொடுக்காமல் சுலபமாய் சுற்றுகிறது. கயிறுக்கும் கெடுதல் உண்டுபண்ணுவதில்லை.

இந்தக் கவலை வண்டிகள் மதராஸ் விவ சாய டிபார்ட்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட் டிருக்கின்றன. அநேக வண்டிகள் நாங்கள் டிபார்ட்மெண்டாருக்கு கொடுத்திருக்கிறோம்.

கயற்றின் ஜாஸ்தி அளவு ..	2½″
சக்கரத்தின் அதிகமான டையா மீட்டர்	14½″
சக்கரத்தின் அதிக; அகலம் ..	4″
இருசின் நீளம்	10″
இருசின் டையாமீட்டர்	1″
இடை	28 ராத்தல்

விலை: Ex. இன்ஸ்டிடியூட். ரூ. 9-8-0. F.O.R. கோயமுத்தூர் டெலிவரி ரூ. 10-8-0.

வரப்பு கட்டும் கருவி



நாங்கள் இரண்டு வகை அளவுடைய வரப்புக் கட்டும் கருவிகளை தயார் செய்கிறோம். (மர நுகத்தடி இல்லாமல்).

பெரிய வரப்பு கட்டும் கருவி யானது இஞ்சினால் நிலங்க ளுக்குத் தண்ணீர் பாய்ச்சும்குடியானவர்க ளுக்கு உபயோகமுள்ளது.

சிறிய வரப்பு கட்டும் கருவியானது 2 அல்லது 3 ஜோடி எருதுகளைக்கொண்டு நிலங்க ளுக்குத் தண்ணீர் பாய்ச்சும் குடியானவர்க ளுக்கு உபயோகமுள்ளது.

ஒரு மனிதன் ஒரு நாளில் 6 ஏக்கர் பூமியில் வரப்பு கட்டலாம்.

இந்த வரப்பு கட்டும் கருவிகள் மதராஸ் விவசாய டிபார்ட்மெண் டாரால் ஆதரிக்கப்பட்டிருக்கின்றன. அநேகம் விவசாய டிபார்ட்மெண்டாருக்கு சப்ளை செய் திருக்கிறோம்.

உருவம்.	தகட்டின் நீளம்.	சுமார் இடை.	விலை.					
			எக்ஸ். இன்ஸ்டிடியூட்.			F. O. R. கோயமுத்தூர்.		
			RS.	AS.	P.	RS.	AS.	P.
No. 1	3′ 6″	56 lb.	10	0	0	10	4	0
,, 2	2′ 6″	30 ,,	7	8	0	7	12	0

ணணெண்ணெ.

கோ ஞ்சல்’ 150°



‘ அல்லிப்பூ ’ 150°

சுத்தமாயும் உயர்ந்ததாயும் பெட்டியில் அடைக்கப் பட்ட எண்ணெ.

‘ லங்கர் ’ 125°



வெள்ளையெண்ணெ பெட்டியிலும், பெட்டி இல்லாமலும் கொடுக்கப்படும். மிகச் சிறந்த எண்ணெ. உபயோகத்தை நோக்குங் கால் மிக்க குறைந்த விலை யுள்ளதே.

‘ சிங்கம் ’ 125°



‘ உதய சூரியன் ’ 125°



பேர்பெற்ற வெள்ளை யெண்ணெ முக்கியமாக விளக்கு ஸ்டவ், பங்கா முதலியவைகளில் உபயோகிக்கப் படுகிறது.

‘ சக்கரம் ’ 125°



மேற்கூறிய எண்ணெகளை விட சரசமான விலைக்கு வாங்க விரும்புவர்கள் உபயோகப்படுத்தும் யெண்ணெ.

‘ ஆந்தை ’, ‘ இராணி ’

சிவப்புயெண்ணெ ஏழைகளுக்கு தகுந்த யெண்ணெ.

பர்மா - ஷெல்

ஆயில் ஸ்டோரேஜ் அண்ட் டிஸ்ட்ரிபியூடிங் கம்பெனி ஆப் இந்தியா, லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது).

மதராஸ், உதகமண்டலம், சிக்கந்திராபாத், திருச்சி, விசாகபட்டணம்.

பிரசுரம்

நாமுத்த

திற்கும்.

புண்ணிய க்ஷேத்திரமாகிய திருப்பதிகள். ஒவ்வொரு நாளும் உற்சவ தினமே.

அழகியகண் காட்சியும், புநித நீர்வீழ்ச்சியும், பரிசுத்த மலைக்காற்றும் வருஷமுழுவதும் திருப்பதிக்கு அழகும் அலங்காரமும் அளித்து மேன்மையுடன் விளங்கச் செய்கின்றன.

இந்து புராணப்படி திருப்பதியிலிருக்கும் வெங்கடாசலமென்னும் திருமலைக்குன்று, சுவர்க்கத்தில் சிவனுக்கு வாசஸ்தானமாகிய மேருமலையின் சிகரங்களிலொன்றுக ஆதியில் விளங்கினதாக தத்வமுளது. ஆனுல், பிறகு சர்ப்பராஜனுகிய ஆயிரந்தலை அதிசேஷனுக்கும், காற்றின் அதிதேவதையாகிய வாயு பகவானுக்கும் நேர்ந்த சண்டை காரணமாக அச்சிகரம் பரிசுத்த மலையினின்றும் பிளவுபட்டு பூமியில் வீழ்ந்தது.

ஸ்ரீ விஷ்ணு, தன் வாசஸ்தானமாகிய வைகுண்டத்தை விட்டு திருமலைக்குன்றுக்கு எழுந்தருளி இக்கலியுகத்தில் கலிதீர்க்கும் கடவுளாக விளங்குகிருர். ஜனங்களை பாபத்திலிருந்தும் கரையேற்றும் காருண்ய மூர்த்தியாகத் திகழ்கின்ருர்.

திருப்பதியிலிருக்கும் அப்பேர்ப்பட்ட ஸ்ரீவெங்கடேஸ்வரருக்கு உங்கள் காணிக்கையைச் செலுத்துவது அவசியம்.


இண்டஸ்ட்ரியல் டிபார்ட்மெண்டு

(கைத்தொழில் இலாகா.)

இன்ஜினீரிங் செக்ஷன்.

பின்டோ செக்கு,

1. எள், வேர்கடலை (மணிலாபருப்பு), கொப்பரை, முத்துக்கொட்டை (ஆமணக்கு) முதலிய எண்ணெ விதைகளை சுலபமாயும் நேர்த்தியாயும் ஆட்டி எண்ணெ எடுக்க மிகவும் உபயோகமுள்ளது. ஸ்டீம் (நீராவி) குரூட் ஆயில், கியாஸ் (Gas) என்ஜின்கள், எலெக்டரிக் மோட்டார்கள் ஏற்கனவே வைத்து வேலை செய்து வருபவர்கள், பின்டோ செக்கை, தங்களிடமுள்ள சக்தியை கொண்டே, செலவில்லாமல் நடத்தலாம்.



2. வெகு கால உழைப்பினால், பலசோதனைகளின் பிறகு, இச்செக்கானது இண்டஸ்ட்ரியல் இன்ஜினீரிங் ஒர்க்ஷாப்பில் தயாரிக்கப்பட்டது.

3. முக்கியமான விஷயங்கள்—

(a) எண்ணெ விதைகள், இரும்பு முதலிய உலோகங்களிலாகிய சாமான்களோடு கலப்பதில்லை, மர உலக்கையும் மர பீடமும் போடப்பட்டிருக்கிறது.

(b) **(Ball bearing)** பால் பேரிங்மேல் அடிபீடமும் (உரல்) வைக்கப்பட்டிருப்பதால், அதிக சுலபமாகவும் வலுவாகவும், சுற்றுகிறது.

(c) கல் முதலிய கடினபதார்த்தங்கள் உலக்கைக்கும் பீடத்துக்கும் மத்தியில் சிக்குவதால், மிஷினுக்கு ஒருவித கெடுதலும் உண்டாகாத வண்ணம் அமைக்கப்பட்டிருக்கிறது.

(d) அதிக வலுவாகவும் பெரியதாகவும் உள்ள பல்சக்கரங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

(e) பக்க பளுவினால் பீடம் சாயாவண்ணம், பக்கரோலர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

(f) விதைகளுக்குத் தகுந்தபடி அரைக்கும் வலுவை, செக்கோடு அனுப்பப்படும் அரும்பு குண்டுகளை எற்றி இறக்குவதினால் சுலபமாக மாற்றிக் கொள்ளலாம்.

(g) செக்கு முழுவதும் இரண்டு வலுவுள்ள இரும்பு கர்டர்களின்பேரில் ஏற்பட்டிருப்பதால் எரெக்ஷன் செய்வது சுலபமாயிருக்கிறது.

சாதாரணமாக ஒரு காணம் அல்லது ஒரு தடவையில் போடும் எள்ளின் அளவு.	10 பட்டணம்படி (26 ராத்தல்).
ஒரு காணத்துக்கு சாதாரணமாய் ஏற்பட்ட நேரம்	45 அல்லது 50 நிமிஷம்.
கிடைக்கும் எண்ணெய்	$3\frac{1}{2}$ வீசை (11 ராத்தல்).
சுற்று (வேகம்)	நிமிஷத்துக்கு 9 சுற்று.
குதிரை பவர் தேவை	$2\frac{1}{2}$.

4. பின்டோ செக்கில் தயாரித்த எண்ணெ, வேறு எண்ணெயைப் பார்க்கிலும் உயர்ந்ததாகவும், சகல விதமான உண்டிகளுக்கும் ஏற்றதாகவும் இருக்கிறது. புண்ணாக்கு படல் படலாக கிடைக்கின்றது. கால் நடைகளுக்கு சிறந்த தீனியாகிறது.

5. பின்டோ செக்குக்கும், இதர மாட்டுச் செக்குக்கும் இரும்புச் செக்குக்கும் உள்ள பேதாபேதங்கள்.

பின்டோ செக்கு.

மாடுச்செக்குக்கு வேண்டிய இடத்தில் கால் பாகமிருந்தால் இச்செக்குக்கு போதுமானது.

சத்தமின்றி நேர்த்தியாக வேலை செய்யும்.
அறைக்கும் சக்தி அதிகம்.
எண்ணெ அதிகம்.

எண்ணெ ஆட்டும் செலவு குறைவு.
ஒரு டன் எள்ளு ஆட்டுவதற்கு மொத்த செலவு ரூ. 23.

பின்டோ செக்கு.

சுத்தமானதும் ஆரோக்கியமுள்ளதுமான எண்ணெ. உண்டிகளுக்கு மிகவும் ஏற்றது.
சுலபமாக விலைபோகும் புண்ணாக்கு, மாட்டுச் செக்கில் கிடைப்பதுபோல், படல் படலாக கிடைக்கிறது.

ரிப்பேர்கள் சுலபமாக கிராமங்களில் உள்ள கொல்லனாலும் தச்சனாலும் செய்துகொள்ளலாம்.

மாட்டுச் செக்கு.

செக்குபோட அதிக இடம் தேவை.
அதிக சத்தம் போடுகிறது.
எருதுகள் அதிக சீக்கிரம் உபயோகமற்றவைகளாகின்றன.

ஒரு டன் எள்ளு ஆட்டுவதற்கு மொத்த செலவு ரூ. 48.

இரும்புச் செக்கு.

இரும்பு சாமான்களில் தயாரிக்கப்படுவதால் எண்ணெ நிறம் மாறி சிவந்துபோகிறது. உண்டிகளுக்கு ஏற்றதல்ல.

புண்ணாக்கு பொடிப் பொடியாக கிடைப்பதால், கால் நடைக்கு ஏற்ற உணவாவதில்லை.

கிராமங்களில் ரிப்பேர் செய்வது கஷ்டம்.

6. மதராஸ் டவுனிலும் வெளியூர்களிலும் பின்டோ செக்குகள் அநேகம் வேலைசெய்து வருகின்றன. இவைகள் வேலை செய்வதை பார்க்க விரும்புவோர்களுக்கு அவ்வாறு பார்ப்பதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப்படும்.

7. பின்டோ செக்குகளை, சென்னை ராஜதானியில் வேண்டும் எவ்விடத்திலாவது எரெக்ஷன் செய்து கொடுக்க இவ்விலாக்கா தயாராயிருக்கின்றது.

8. இன்னும் ஏதாவது விபரங்கள் தேவையானால், கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.


இண்டஸ்ட்ரியல் இன்ஜினீரிங் ஒர்க்ஷாப்,

கத்திவாக்கம் ஹைரோட்,
பழைய வண்ணாரப்பேட்டை, மதராஸ்

ஆர்டீஸியன் போரிங்.

(குமிழ் குழாய்கள்.)

சென்னை இன்டஸ்டிரியல் டிபார்ட்மெண்டு இன்ஜினிரிங் பகுதியாரால் செய்யப்படும்.



பெயர்—மாணிக்கம் பிள்ளை.
இடம்—காவனூர் கிராமம், சிதம்பரம் தாலூகா.
குழாய்—6 அங்குலம் குறுக்களவு.
ஆழம்—பூமிமட்டத்திற்கு 253 அடி கீழ்.

ஜலம்—1 நிமிஷத்திற்கு 420 காலன் தண்ணீர் இரவும் பகலும் வந்து கொண்டு இருக்கிறது.

குறிப்பு.—இதேமாதிரி குமிழ் குழாய்கள் அந்த கிருமத்தில் மூவருக்கு இறக்கி 300 முதல் 420 காலன் தண்ணீர் நிமிஷத்திற்கு வருகிறது.

இதர விபரங்களுக்கு இப்புஸ்தகத்தில் உள்ள கைத்தொழில் இலாகா குறிப்புகளை பார்க்கவும்.

பம்பாய் ராஜதானி .. (சிந்து நீங்கலாக) ..	பி. முன்செர்ஜி அண்ட் கம்பெனி, 10, ஹமாம் தெரு, கோட்டை, பம்பாய்.
சிலோன்	தேவர் அண்ட் கம்பெனி, 116, உடைபெந்தால் தெரு, கொழும்பு.
சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சித்தூர், நெல்லூர். ..	கான் பஹதூர் ஆடம் ஹாஜி மஹம்மத் ஸேய்ட் பஹதூர், நெ. 7, பந்தர் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.
மலையாளம், கோயம்புத்தூர், நீலகிரி, தென் கன்னடம், பெங்களூர் நகரமும் கன்டோன்மெண்டும் உட்பட மைசூர் சுதேச சமஸ்தானம். ..	ஆர். சி. தலால், கள்ளிக்கோட்டை.
மதுரை, திருச்சினுப்பள்ளி, ராமநாதபுரம், திருநெல்வேலி. ..	ஜி. பழனியப்ப முதலியார், சிலோன் பான்சி ஹால், நெ. 7, கூட்ஷெட் தெருவு, மதுரை.
தஞ்சாவூர் ஜில்லா	கே. ராகவேந்திர ராவ், 180, பெரிய கடைத்தெரு, கும்பகோணம்.
மேற்கு கோதாவரி, கிருஷ்ணு, குண்டூ, ர்கஞ்சம், விசாகப்பட்டணம், கிழக்கு கோதாவரி, கர்நூல். ..	எஸ். சி. எச். மல்லப்ப ராஜு, சாமான்கள் உற்பத்தி செய்பவரின் பிரதிநிதி, பெஜவாடா.
கொச்சி சமஸ்தானம்	பி. கோவிந்த மேனன்: இன்ஷியூரென்ஸ் ஏஜெண்ட், திரவுண்ட், திருச்சூர்.
திருவாங்கூர்	ராமு ப்ரதர்ஸ், வியாபாரிகளும் கம்மிஷன் ஏஜெண்டுகளும், ஆலப்புழை.
நிஜாம் ராஜ்ஜியம்	எம். பி. சுப்பாராவ் அண்ட் ஸன், 942, ஹனுமான் தக்டி, ஹைதராபாத் (டெக்கான்).
மத்ய மாகாணம்	சி. முஸும்தார் அண்ட் கம்பெனி, பலசரக்கு வியாபாரிகள், நெ. 164, கோல் பஜார், ஜபல்பூர், மத்ய மாகாணம்.

ஸ்டாக் வைத்திருப்பவர்கள்.

கௌஸ்கான் லோஹானி, பலசரக்கு வியாபாரிகள், கடப்பை.

கே. அர். பாஸ்கரையா அண்ட் ப்ரதர்ஸ், பலசரக்கு வியாபாரிகள், ஹீந்துபூர்.

தி நாஷனல் ப்ரொவிஷன் ஸ்டோர்ஸ் சொந்தக்காரர், வொன்டிகொப்பல், மைசூர்.

மதுரை டிஸ்ட்ரிக்ட் போர்ட்.

மதுரை ஜில்லா உசிலம்பட்டி விவசாய பள்ளிக்கூடத்தில் சேருவதற்கு விதிகள்.

---

1. இந்த விவசாய பாடசாலை மதுரை ஜில்லா டிஸ்டிரிக்ட் போர்டு மேல் பார்வையில் இருக்கிறது.

2. இந்தப்பள்ளிக்கூடம் உசிலம்பட்டியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஊர் மதுரையிலிருந்து போடிநாயக்கனூருக்குப் போகும் ரயில் பாதையில் ஒரு ஸ்டேஷன். ஒரு விவசாய பண்ணை இந்த பள்ளிக்கூடத்தைச் சேர்ந்திருக்கிறது. இது 15 ஏக்கர் விஸ்தீரணமுள்ளது. இதில் புன்செய் தோட்டக்காற் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

3. விவசாய அபிவிருத்தி முறைகளை நிதர்சனமாக கற்றுக்கொடுக்கப்படும். மாணாக்கர்களுக்கு இரும்புக் கலப்பைகள், விதைக் கலப்பை முதலான பலவித கருவிகளை உபயோகிக்கும் விதத்தை கற்றுக்கொடுக்கப்படும்மாதலால் இதில் சேரும் மாணாக்கர்கள் தாங்களே அவைகளை உபயோகிக்கவேண்டிவரும். பாடசாலை நடந்துவரும் தினங்களிலெல்லாம் மூன்றுமணி நேரத்துக்குக் குறையாமல் பண்ணையில் ஏற்படும் சகல வேலைகளையும் செய்யவேண்டும்.

4. ஜாதி, மதம் வித்தியாசமில்லாமல் எல்லா வகுப்பினரைச் சேர்ந்த மாணாக்கர்களையும் எடுத்துக்கொள்ளப்படும். இதில் சேருபவர்கள் நன்றாய்த் தமிழ் தெரிந்தவர்களாயும் கணக்குத் தெரிந்தவர்களாயு மிருக்கவேண்டும். லோயர் செக்கண்டரி அல்லது 8-வது வகுப்பு வரையில் படித்தவர்களாயிருந்தால் சிலாக்கியம். ஆனால் பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொடுக்கும் பாடங்களை கற்றுக்கொள்ளக்கூடியவர்களென்று தெரிந்தால் விவசாய ஸ்கூல் ஹெட்மாஸ்டருக்கு பரீட்சைசெய்து சேர்த்துக்கொள்வதற்கு அதிகாரம் உண்டு. நிலம் உள்ளவர்களுக்குத் தான் மற்றவர்களைவிட சேர்ப்பதற்கு வசதி உண்டு. மாணாக்கர்கள் தகுந்த பலமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் கலப்பை முதலிய கருவிகளைத் தாங்களே உபயோகிக்க சக்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஜமீன்தார்களோ அல்லது பெரிய பண்ணைக்காரர்களோ தங்களிடத்தில் வேலை பார்க்கிறவர்களையும் அனுப்பலாம். மாணாக்கர்கள் 15 வயதுக்கு மேற்பட்டவர்களாயிருக்கவேண்டும். இந்த பாடசாலையில் சேரும் மாணாக்கர்கள் 2 வருஷம் படிக்கவேண்டும். பிறகு பரீட்சை செய்து சர்ட்டிபிகேட் கொடுக்கப்படும். பாடம் சம்பளமில்லாமல் சொல்லிக்கொடுக்கப்படும். III-பாரம் பாஸ் செய்தவர்களுக்கும் ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில் VIII-Standard பாஸ் செய்தவர்களும் மற்றும் உயர்தர படிப்பாளிகளுக்கும் ஒரு வருஷ படிப்புத்தான்.

5. பிரான்மலை கள்ளர் ஜாதியைச் சேர்ந்த மாணாக்கர்களுக்கு லேபர் டிபார்ட்மென்டார் இனாமாக சாப்பிடும் இடமும் கொடுத்து வருகிறார்கள். மற்ற வகுப்பினர்கள் ஏழையாகவும், தகுந்த யோக்கியதையுள்ளவர்களாயு மிருந்தால் டிஸ்டிரிக்ட் போர்டு பண்டிலிருந்து இனாமாக சாப்பாடும் இடவசதியும் செய்து கொடுக்கப்படும்.

6. தவிர இப்பள்ளிக்கூடத்தில் படித்து பாஸ் செய்த மாணவர்களை டிரெயினிங் ஸ்கூலில் ஹையர் எலிமெண்டரி கிளாசில் சேர்த்துக்கொள்ளலாமென்று எல்லா தமிழ் ஜில்லாக்களிலுள்ள கல்வி இலாகா ஜில்லா இன்ஸ்பெக்டர்களுக்கும் மதராஸ் கல்வி இலாகா டைரக்டர் அவர்கள் புரோசிடிங்ஸ் நெ. 2559-E/33, 1933-ம் வருஷம் டிசம்பர்மீ 6உயில் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணாக்கர்களெல்லாம் மூன்று ரூபாய் காஷன் தொகையாக டிபாசிட் செய்யவேண்டும். இதைத் தவிர டிஸ்டிரிக்ட் போர்டார் ஏற்படுத்தியிருக்கும் ஹாஸ்டலில் சாப்பிடும் மாணாக்கர்கள் ஏழு ரூபாய் பிரத்தியேகமாக டிபாசிட்டு கட்டுவதுடன் குறிப்பிட்ட பாரத்தில் எக்ரிமெண்டும் எழுதிக்கொடுக்கவேண்டும். தவிர ஒவ்வொருவரும் வருஷம் ஒன்றுக்கு விளையாட்டுக் கட்டணம் ரூ. 1. செலுத்தவேண்டும்.

8. சேரவிரும்பும் மாணாக்கர்கள் ஜூன்மீ 15உக்குள் மனு செய்துகொள்ளவேண்டும். ஒவ்வொரு வருடமும் ஜூலைமீ முதல் வாரத்தில் பள்ளிக்கூடம் திறக்கப்படும்.

மற்ற விஷயங்களுக்கு உசிலம்பட்டி விவசாய ஸ்கூல் ஹெட்மாஸ்டர் அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

பிரசிடெண்டு,

உசிலம்பட்டி, விவசாய பள்ளிக்கூடம். டிஸ்ட்ரிக்ட் போர்ட், மதுரை.

கிராமவாசியின் பஞ்சாங்கம்.

ஈஸ்வர வருஷம்.

அட்டவணை.

I. விவசாயம்.

II. வெட்டரினரி.

III. கூட்டுறவு இலாகா.

IV. கைத்தொழில் இலாகா.

V. மீன் இலாகா.

VI. சுகாதார இலாகா.

VII. இதர விவரங்கள்.

கிராமவாசியின் பஞ்சாங்கம்.

1, மதராஸ் விவசாய டிபார்ட்மெண்ட்—அதன் நோக்கம்.

இந்த ராஜதானியின் முக்கிய தொழிலாகிய விவசாயத்தை, சீர்திருத்தப்பட்ட முறையில் அனுஷ்டித்துவர ஏற்பாடு செய்யவேண்டும் என்ற அவசியத்தை, 1854-ம்ஸூ்த்திலேயே அறிந்திருந்தும், சிப்பாய் கலகத்தின் காரணமாக 1863-ம்ஸூவரை தீவிரமான முயற்சி ஒன்றும் செய்ய மார்க்கமில்லாமிலிருந்தது. இதற்கு முதல் ஆரம்பத்தில் 1864-ம்ஸூ சைதாபேட்டையில் மாதிரிப்பண்ணை ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதிலிருந்து படிப்படியாய் இந்த டிபார்ட்மெண்ட் விரிவடைந்துகொண்டு வருகிறது. தற்சமயம், சில இடங்கள் தவிர, ஒவ்வொரு தாலூக்காவுக்கும் ஒரு டிமான்ஸ்ட்ரேட்டர் இருக்கிறார். இந்த இலாகாவானது, கீழ்கண்ட நான்கு வழிகளில் விவசாயிகளுக்கு உதவி செய்து வருகிறது :—

(a) **ஆராய்ச்சி.**—ஆராய்ச்சி வேலை என்பது இருவகைப்படும். முதலாவது, கோயம்பத்தூர் விவசாய காலேஜில் நிபுணர்களால், விவசாய முறைகளின் நுட்பங்களை ஆராய்ச்சி செய்வது என்பது ஒருவகை. பிறகு இந்த ஆராய்ச்சியின் தொடர்ச்சியாகவே, ஆங்காங்குள்ள விவசாய டிப்டி டைரெக்டர்கள் அவரவர்கள் பிராந்தியங்களில், மேற்படி கோயம்பத்தூரில் செய்த ஆராய்ச்சியின் முடிவானது எவ்வளவு தூரம் பொருந்தும் என்று பார்க்க, தங்கள் தங்கள் ஆதீனத்தின்கீழ் நடைபெறும் ஆராய்ச்சி பண்ணைகளில் மேற்படி விஷயத்தை சோதனை செய்வது என்பது இரண்டாவது வகை. இந்த டிப்டி டைரெக்டர்கள் அவரவர்களின் பிராந்தியங்களைக் குறித்த விவசாய விஷயங்களையும் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

(b) **பிரசாரம்.**—அதிகாரம் நடந்தேறும் விஷயமாக இவ்விராஜதானியை எட்டு சர்க்கிளாகப் பிரித்து ஒவ்வொரு சர்க்கிளுக்கும் ஒவ்வொரு டிப்டி டைரெக்டரும், அவருக்கு உதவியாக ஒன்று இரண்டு அஸிஸ்டெண்டு டைரெக்டர்களும், அநேக டிமான்ஸ்ட்ரேட்டர்களும் இருந்துவருகிறார்கள். டிமான்ஸ்ட்ரேட்டர் ஒவ்வொருவரும் ஒரு தாலூகா மாத்திரம் பார்க்கும்படி ஏற்பட்டிருக்கிறது. இவ்விராஜதானியில் 221 தாலூகாக்கள் இருக்கின்றன. தற்சமயம் இருந்துவரும் டிமான்ஸ்ட்ரேட்டர்களின் நம்பர் 150. இன்னும் டிமான்ஸ்ட்ரேட்டர்கள் இல்லாத தாலூகாக்கள் சில இருக்கின்றன. ஒவ்வொரு தாலூக்காவுக்கும் ஒரு டிமான்ஸ்ட்ரேட்டர் ஏற்படுத்த வழி செய்து கொண்டிருக்கிறது. பிரசார வேலையின் விவரங்களுக்கு இதை வாசிப்போர், "வெவ்வேறு சர்க்கிளில் நடக்கும் வேலைகள்" என்ற தலைப்பின்கீழ் பார்க்கலாம். **சாதாரண விவசாயிகளால் இயலாத முறைகளை ஒன்றும் டிபார்ட்மெண்டார் சிபார்சு செய்து வரவில்லை.** தவிர இவர்கள் போதிக்கும் முறைகளும், சிபார்சு செய்யும் விதை வித்துகளும் ஆராய்ச்சிப்பண்ணைகளில் வெகு காலமாக சோதனைசெய்து நல்ல பலிதம் கிடைத்தவைகளே.

(c) **கல்வி.**—புஸ்தகங்கள் மூலமாயும், நேரிலேயே செய்து தெரிந்தும் படிப்பதற்காக விவசாயத்திற்கு என்றே கோயம்பத்தூரில் ஒரு காலேஜ் இருக்கிறது. அங்கு படிப்பு 3 வருஷம். இதில் படிப்பவர்கள் தாமே, நஞ்சை, புஞ்சை, இறவைப் புஞ்சை முதலியவற்றிலுள்ள சகல வேலைகளையும் செய்துவந்து, பின் தங்கள் சொந்த விவசாய விஷயங்களை நன்கு பார்க்கக் கூடியவர்களாகிறார்கள். மேலே சொன்ன 3 வருஷப்படிப்பும் படிக்க முடியாத நிலஸ்வான்களாயுள்ள சிறுவர்களுக்காக ஜூலை முதல் மார்ச்சு முடிய ஒரு வகுப்பு கோயம்பத்தூர் காலேஜில் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வகுப்பில் பண்ணையை வைத்து நடத்தல், பால் பண்ணை வைத்தல், மாடுகளைப் போஷித்தல், வெல்லம் புட்டி மாவு தயார் செய்தல், தேன் ஈக்களை வைத்து தேன் சேர்த்தல் முதலான விஷயங்கள் கற்பிக்கப்படுகின்றன. மதுரை ஜில்லா, உசிலம்பட்டியில் ஒரு விவசாய பள்ளிக்கூடம் ஜில்லா போர்டாரால் நடத்தப்பட்டுவருகிறது.

(d) **கடன்.**—சர்க்கில் சார்ஜிலிருக்கும் டிப்டி டைரெக்டர்கள் குடியானவர்களுக்கு விவசாயக் கருவிகள் வாங்குவதற்கு ரூ. 25 வரையிலும் கடன் கொடுக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். அத்துகைக்கு மேற்பட்ட கடன் துகைகளைக் கொடுக்க விவசாய டைரெக்டருக்கு அதிகாரமுண்டு. 1934-35-ல் ரூ. 15,063-12-0 குடியானவர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டது 1935-36-ல் ரூ. 15,910 ஷ கடன் கொடுத்த துகையில் வாங்கின கருவிகளின் தினுசுகளும் ஒவ்வொரு தினுசுக்கு எவ்வளவு ரூபாய் செலவான தென்பது கீழே கண்டிருக்கிறது.

கருவிகளின் தினுசுகள்.

	ரூ.	அ.	பை.
(1) இரும்பு கலப்பைகளும், தனிப்பட்ட பாகங்களும்	9,228	0	0
(2) நீரேற்றங்கள்	3,300	0	0
(3) எச். எம். குண்டகாவும், அதன் பாகங்களும்	215	0	0
(4) ரோல் ஈஸி, இதர கவலை வண்டிகள்	2,560	0	0
(5) ஸ்ப்ரேயர்கள்	344	0	0
(6) தட்டுவெட்டிகள், முகடுகள் போடும் கருவி, ப்ரூனிங் கருவிகள் முதலிய இதர சாமான்கள்.	263	0	0
மொத்தம் ..	15,910	0	0

2. விவசாய கலாசாலை.

விவசாயத்தைக் கற்றுக்கொடுக்க ஒரு கலாசாலையால் என்ன உபயோகம். விவசாயத்தைத் தெரிந்துகொள்ளுவதற்கு அதிக அனுபவம் வேண்டுமென்பதை அறிந்திருக்கும் கிருஷிகர்கள் இக்கேள்வியை அடிக்கடி கேட்கிறார்கள். விவசாயமானது தலைமுறையாய் வெகு நாளைய பழக்கத்தினின்று தெரிந்துக்கொள்ளப்படுகிற தென்றும், இவ்வித அனுபவம் பயிற்சியை புத்தகப்படிப்பு கொடுக்காதென்றும் எண்ணிக்கொண்டு இவர்கள் கலாசாலை வைத்திருப்பதைப்பற்றி இகழ்ந்து அவர்களுடைய பையன்களை விவசாய கலாசாலைக்கு அனுப்புவதில்லையென்று தீர்மானிக்கக்கூடும். நிற்க, கிருஷிதொழிலையே அறியாத சிலர், விவசாய சம்பந்தமான புத்தகத்தைப் படிப்பதினாலும், உபந்நியாசங்களை கேட்பதினாலும், பயிர்த்தொழில் மெத்த தேர்ச்சியடையலாமென்று நினைக்கிறார்கள்.

2. ஒன்றிற்கொன்று முரண்பாடுள்ள இவ்விரு அபிப்பிராயங்களும் பிசகுதான். ஆனால் உண்மையானது இரண்டிற்கும் மத்தியிலிருக்கின்றது. எங்ஙனமெனில் அனுபவப்பயிர்ச்சிக்கு புத்தகப்படிப்பு மாற்றாகாவிடினும் அனுபவப் பயிற்சியே போதாது. ஆகையின் புத்தகப்படிப்பு, அனுபவப் பயிர்ச்சி ஆகிய இரண்டும் கலந்திருப்பதுதான் சரியான விவசாய கல்வியென்று சொல்லவேண்டும். **சாதாரண கிருஷிகரொருவருக்கு அனுபவப் பூர்வமாய் அநேக விவசாய விஷயங்கள் தெரிந்திருக்கலாம். இவ்விஷயங்களை பாரம்பாரியமாய்த் தெரிந்துகொண்டிருக்கிறாரேயொழிய அவைகளின் காரண காரணங்களைத் தெரிந்திலர்.** எதையும் அதன் சிறப்பிற்கான காரணமறிந்து செய்வது, அதை மாமூலாய்ச் செய்வதுபோல் செய்வதைவிட நலமென்பது நிச்சயம் - ஆகையால் சிறந்த விவசாய முறைகளின் சிறப்பின் காரணங்களை மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கவேண்டிய விஷயங்களில் முக்கியமானவையாம் - தவிர கிருஷிகர்கள் அனுபவத்தில் சாதாரணமாய் தெரிந்துக்கொள்ளக்கூடாத விஷயங்களும் இக்கலாசாலையில் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. திருஷ்டாந்தமாக, ரஸாயன எருக்களின் உபயோகம் அவைகளைப் போடும் விதம் பயிர்களுக்கு வரும் நோய் நொடிகளின் விவரம், அவைகளைத் தடுக்கும் முறைகள், இரவைக்கான ஆயில் எஞ்சினைப்பற்றிய விவரம் முதலியவைகளையும் விவசாய கலாசாலையில் அறிந்துக்கொள்ளலாம்.

3. விவசாய கலாசாலையாவது என்ன? அது என்ன செய்கிறது என்று பார்ப்போம்.—**விவசாய கலாசாலையும், ஆராய்ச்சி சாலையும் கோயமுத்தூருக்கு மேற்கே மூன்று மைல் தூரத்தில் இருக்கின்றன.** அங்கு இரண்டு பிரதான கட்டடங்கள் இருக்கின்றன. அதிலொன்று கலாசாலையாகவும்

மற்றொன்று விவசாய ஆராய்ச்சி, சிறந்த பொருக்கு விதையை உண் டாக்குதல் முதலிய விஷயங்களைக் கவனிக்கும் உத்தியோகஸ்தர்களால் உபயோகப்பட்டுவருகிறது.

4. இந்த இலாகாவின் புஸ்தகாலயம் ஆராய்ச்சி சாலையில் நிருவப்பட் டிருக்கிறது. தறபோது இதில் 36,000 கிரந்தங்கள் இருக்கின்றன. வரு டந்தோறும் 2,000 புஸ்தகங்களும் பிரசுரங்களும் சேர்க்கப்படுகின்றன. இப்பூலோகத்தின் எல்லா தேசங்களிலிருந்தும் சுமார் 500 விவசாய சாஸ்திரீய பத்திரிகைகள் பிரதி வருடமும் நிரந்தரமாய் கிடைக்கப் பெறு கின்றன. இதுவுமன்றி, பாஷாந்தரங்களில் பிரசுரிக்கப்படுகிற சாஸ்திரீய விஷயங்களின் ஆங்கில மொழி பெயர்ப்புகள், சாஸ்திரஞ்ஞர்களுடைய உபயோகத்திற்கென்று தருவிக்கப்பட்டு கோர்வையாய் வைக்கப்படுகின்றன. விமரிசையாய் தரம் பிரிக்கப்பட்ட இந்தப் புஸ்தக பாண்டாகாரத்தில், புஸ் தகங்களும் மற்ற பிரசுரங்களும், எளிதில் கண்டுகொள்ளுமாறு விஷயக் கிரமமாய் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன.

5. இக்கலாசாலை சுமார் 500 எக்கர் விஸ்தீர்ணமுள்ள ஒரு பண்ணையின் மத்தியிலிருக்கிறது. இப்பண்ணையில் கரிசல் நிலமும், மானுவாரி, தோட்டக் கால்களான செவ்வல் நிலமும், ஏரியின் பாசனத்திலுள்ள நஞ்சை நில மும் அடங்கியிருக்கிறது. அதனால் இப்பண்ணையில் பலவித நிலங்களிருக் கின்றன வென்பதும், வருஷத்தில் எக்காலத்திலும் ஏதாவதொரு பயிரு வது இருக்கும் என்றும் விளங்கும். சிறந்த நவீன இயந்திரங்களை உப யோகப்படுத்திவரும் ஒரு பால் கிடங்கும், பால்மாடுகளுள்ள ஒரு மந்தையும் இப்பண்ணையிலுள. தவிர கொல்லுபட்டரையும், தச்சுபட்டரையும், அநேக விவசாய இயந்திரங்களும், சிறந்த விவசாயக் கருவிகளும் இப் பண்ணையில் வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், வெளிமாடுகளுக்கு வரும் சாதாரண நோய்களுக்கு சிகிச்சை செய்ய ஒரு கால்நடை ஆஸ்பத்திரியு மிருக்கிறது.

6. மேற்சொன்னதினின்று, கிருஷிகர்கள் யாவரும் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய ஒவ்வொரு விஷயமும் விவசாய கலாசாலையில் போதிக் கப்படுகிறதென்று விளங்கும். ஒவ்வொரு வேலையும் எவ்விதம் செய்ய வேண்டுமென்பது மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. செய்து ம் காட்டப்படுகிறது. மிகவும் முக்கியமானது என்னவெனில், கிருஷித்தொ ழில் சம்பந்தமான ஒவ்வொரு வேலையும் மாணவர்களே செய்து பயிற்சி அடையும்படி செய்யப்படுகிறது. மேலும், மாணவர்களின் போதனுகாலத் தில் அதிகபாகம் பண்ணையில் வேலைசெய்வதிலும், பால்கிடங்கிலும், மாட்டுக் கொட்டில்களிலும், மிருக ஆஸ்பத்திரியிலும், பட்டரைகளிலும் செலவழிக் கப்படுகிறது. இவ்விதம் பயின்றால்தான் மாணவர்களுக்கு எவ்விஷயமும் நன்கு தெரியும்.

7. தாமே உழுது ஜீவிப்பவர்கள், மேஸ்திரிகள், நிலத்தில் வேலை செய் யும் கூலிகள் முதலானவர்களை நல்ல விவசாய முறைகளில் பழக்குதல் மட்டுமல்லாமல், விவசாய கலாசாலையில் 3 விதமான படிப்புகள் சொல்லி கொடுக்கப்பட்டு வருகிறது.

(a) நவீன விவசாய முறைகளை "குறுகிய காலத்தில்" கற்றுக்கொள் ளுதல்.

(b), (c) சென்னை சர்வ கலாசாலைக்கு இணைக்கப்பட்ட நிமித்தம் டிக்கிரி பரீக்ஷை.

8. தங்களுடைய நிலங்களை சிறந்த முறையில் சாகுபடி செய்வதில் தங்களுடைய குமாரர்களின் உதவியைக்கோரும் கிருஷிகர்களும், குடும் பச்சொத்தை தங்களுடைய குமாரர்களிடம் ஒப்புவிக்க விரும்பும் பெரிய குடித்தனக்காரர்களும் தங்களுடைய பிள்ளைகளை குருகிய காலத்தில் கற் றுக்கொள்ளக்கூடும் வகுப்பிற்கு அனுப்புதல் நலம். அப்படிப்பட்ட பையன் கள் சுமார் ஸ்கூல் பைனல் (எஸ்.எஸ்.எல்.சி.) பையனுக்கு சமானமான படிப்புத் தேர்ச்சி இருந்தால்போதும். அங்கு சொல்லிக்கொடுக்கும் பாடங்

களாவன.—(1) பண்ணையை மேல் பார்த்தல். (2) பால் கறத்தல், வெண்ணெ எடுத்தல் முதலியன. (3) ஆடுமாடுகளை பராமரித்தல். (4) செடிகளுக்கு வரும் பூச்சிகளும் நோய்களும். (5) வெல்லம் தயாரித்தல். (6) புட்டிமாவு செய்தல். (7) எரு தினுசுகள். (8) வெள்ளாண்மை அபிவிருத்தி. (9) தேன் ஈக்களை வளர்த்து தேன் சேகரித்தல். (10) பழச்செடி வைத்து உண்டாக்குதல். கறிகாய் பயிர் செய்தல், அதாவது மாணுக்கர்களை, மிகவும் பிரயோஜனமாயும், என்றும் அவசியமாயும், லாப நஷ்ட விவரங்களும் அடங்கியுள்ள விவசாய படிப்பிலேயே பழக்குதல் கொள்கை. தற்சமயம் பாடங்கள் இனுமாகவே சொல்லிக் கொடுக்கப்படும்.

9. கலாசாலையில் சேரவிரும்பும் மாணவர்கள் சென்னை சர்வ கலாசாலை அல்லது ஆந்திர சர்வ கலாசாலை அல்லது அண்ணுமலை சர்வ கலாசாலை எதிலாவது இண்டர் மீடியேட் பரீக்ஷையில் சயன்ஸ் (Science) எடுத்துகொண்டு தேறியிருக்கவேண்டும். இக்கலாசாலையில் படிக்கவேண்டிய காலம் மூன்று வருஷம். இம்மூன்று வருஷங்களில் சாஸ்திர விவசாய அனுபவ பயிர்ச்சியும் விவசாயத்தை ஒட்டிய வேறு பிரதான சாஸ்திரிய பயிர்ச்சியும் கற்றுக்கொடுக்கட்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வருஷமும் 48 மாணுக்கர்கள் சேர்க்கப்படுகிறுர்கள். அவர்கள் சென்னை ராஜதானியின் எல்லாப் பிரதேசங்களிலிருந்தும் வருகிறுர்கள். யூனிவெர்சிடி பரீக்ஷக்கு ஒவ்வொரு வருஷமும் உட்கார்ந்து தேற வேண்டும். தவிர வருஷத்திற்கு ரூ. 120 சம்பளம் கொடுக்கவேண்டும்.

வருஷத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் உதவிச் சம்பளம் 5 பேருக்குமட்டும் கொடுக்கப்படுகிறது. எப்படியெனில்—

(1) முகம்மதிய பிள்ளைகள் இருவருக்கு.

(2) ஒதுக்கப்பட்ட அல்லது கீழ்தர வகுப்புப் பிள்ளைகள் மூவருக்கு.

10. சென்னை சர்வ கலாசாலை எம்.எஸ் சி. (M.Sc.) டிக்கிரி பரீக்ஷக்கு, சயன்ஸ் (Science) செக்ஷனில் உள்ள அசிஸ்டெண்டுகளும் பி. எஸ்சி.எஜி. (B.Sc.Ag.) டிக்கிரி உள்ளவர்களில் கொஞ்சம் கெட்டிக்காரர்களுமாய் உள்ள்வர்கள் உட்காரலாம். அவர்கள் எக்ஸ்பெர்ட்டுகள் அல்லது லெக்சரர்களின் பார்வையின்கீழ் வேலை செய்யவேண்டும். அவர்களின் நம்பர் மிகவும் கொஞ்சம்.

11. பரீக்ஷயில் நன்ருய் தேறிய மாணவர்களுக்கு விவசாய டிபாரட்மெண்டிலும் வேலைகள் கிடைக்கும்.

கலாசாலையில் சேர்த்துக் கொள்ளுதல்.—குறுகிய வகுப்பிற்கு சேர எண்ணமுடையவர்கள் ஜூன்மீ 1-ம் தேதிக்குள்ளும், டிக்கிரி எடுக்க உத்தேசிப்பவர்கள் ஜூன்மீ 15-ம் தேதிக்குள்ளும் மனுப் போடவேண்டும். மனு பாரங்களும் கலாசாலையைப்பற்றிய மற்றும் விவரங்களும் மார்ச்சுமீ முதல் தேதிக்கு அப்புறம் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். இவ்விஷயங்களைத் தெரிந்துக்கொள்வதற்கும் மனு பாரத்திற்கும் கோயம்புத்தூர் லாலி ரோட் போஸ்டு விவசாய கலாசாலை பிரின்ஸிபாலுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவேண்டியது.

3 (a) 1-வது சர்க்கில்.

முதலாவது சர்க்கிள், மேல் கோதாவரி, கீழ் கோதாவரி, விசாகபட்டணம், கஞ்சம் பாகம் உள்பட்ட ஜில்லாக்களை அடங்கியது. மேல் கோதாவரி, கீழ் கோதாவரி ஜில்லா வாசிகள் விவசாய விஷயமாய் வேண்டிய உதவி, ஆலோசனைகளுக்கு, இராஜமகேந்திரத்திலிருக்கும் விவசாய அசிஸ்டெண்டைரெக்டர் அவர்களுக்கும், விசாகபட்டணம் ஜில்லாவில் வசிப்பவர்கள் ஷ உதவிக்கு விசாகபட்டணத்திலிருக்கும் விவசாய அசிஸ்டெண்டு டைரெக்டர் அவர்களுக்கும், எழுதிக்கொள்ளவேண்டியது.

(a) பிரசாரம்.

குடியானவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒவ்வொரு தாலூகாவிலும் ஒவ்வொரு டிமான்ஸ்ட்ரேட்டர்களிருக்கிறார்கள். அவர்கள் அந்தந்தத் தாலூகாக்களிலும் மூன்று அல்லது நான்கு கிராமங்களில் தீவிரமாக வேலை செய்துவருகிறார்கள். அந்த கிராமங்களின் விவரம் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன :—ஷை கிராமங்களில் வேலை பிரபலமாக, இதர கிராமங்களில் வேலை ஆரம்பிக்கப்படும்.

விசாகபட்டணம் ஜில்லா.

தாலூகா.	டிமான்ஸ்டிரேடரின் இருப்பிடம்.	வேலை நடக்கும் கிராமங்கள்.
1 சோம்பேட்டை	சோம்பேட்டை	பலசாபுரம், பொல்லுபாடா, இச்சபூர், புச்சபாடு, பருவா, ஜாடுபுடி.
ஷை	ஷை	ஜலந்தரா-பெல்லுபாடா (உதாருஜ்பூர்ணம்), ராஜப்பூர், துரகஸாசனம் கர்கா.
2 தெக்கலி	தெக்கலி	கிராமங்கள் இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.
3 நரசன்னபேட்டை	நரசன்னபேட்டை	நரசன்னபேட்டை, போவிகி, ஸ்ரீகூர்மம் அமிதலவலச, அச்சுதபுரம், ஜலமூர் லக்கிம் டிட்டி, சிங்குபூர்.
4 பாலக்கொண்டா	பாலக்கொண்டா	வீரகட்டம், நவகம், பாலகொண்டா, சங்க்வி, உணுக்கூர், பூர்ஜா, தொடவாடா, குதவல்லி.
5 பார்வதிபுரம்	பார்வதிபுரம்	நரசிபுரம், நாகூர், பெத்தமெரஞ்சி, பெத்த பொண்டபல்லி, பண்டலுப்பி, மார்க்கண்டபட்டி, கொமரதா, பெட கோடபா.
6 பொபிலி	பொபிலி	காசாபேட் நிடகொள்ளு, பார்லி, பிரிடி, பர்டாஞ்சி, மரதம், மல்லம் பேட்டா, தெர்லம்.
7 விஜயநகரம்	விஜயநகரம்	மொயிடா, தென்காடா, ஜொன்னவல்சா, ரெட்டிபல்ல அக்ரஹாரம், தல்லவல்சா, தக்கமரி, ராமதீர்த்தனு, கஜபதிநகரம்.
8 ஸ்ருங்கவரப்புகோட்டா.	ஸ்ருங்கவரப்புகோட்டா.	ஸ்ருங்கவரப்புகோட்டா, ஜாமி, பிம்லி, லக்கவரப்புகோட்டா, வல்லம்புடி, கொத்வல்ச, பொனஞ்சி, ஜகரம்.
9 விசாகப்பட்டணம்	விசாகப்பட்டணம்	பெனது தேதி, சிம்மாச்சலம், மதுரவாடா, கம்பிராம், கணிதி, கண்டையாடா, ஹனுமக்தபரகா, மறிபாலம்.
10 அனகாபள்ளி	அனகாபள்ளி	தும்மபாலா, சித்தநகரம், சப்பாவரம், பாயவரம், அகனம்புடி, பரவாடா, அச்சுதபுரம், முலகாபாகா.
11 விரவள்ளி	சோடவரம்	சோடவரம், ராஜும், மெடிவாடா, வடாடி, கொடபடு, கோகூர், கவரவரம், தருவா.
12 சர்வசித்தி	எல்லமஞ்சிலி	எல்லமஞ்சிலி, நரசிங்கபல்லி, பஞ்சதர்ல, பத்பநாபராஜுபேட்டை, லிங்கராஜுபாலம், நக்கபல்லி, கொடிசேர்ல, ஸ்ரீராமபுரம்.
13 கொலுகொண்டா	நரசபட்டணம்	நரசபட்டணம், பச்சம்மாள்பேட்டை, வமுலபுடி, கொத்தமல்லம்பேட்டை, குசார்லபுடி, எரகபூபதி அக்ரஹாரம், கொத்த கோடா, கோடா ஊர்தலா.

கீழ் கோதாவரி ஜில்லா.

1 இராஜமகேந்திரம்	இராஜமகேந்திரம்	இராஜமகேந்திரம், கடியம், ராஜநகரம் தேவன் செருவு, தோசக்காயலுபள்ளி, கடாலா, சீதாநகரம், கொருகொண்டா.
2 காக்கிநாடா	காக்கிநாடா	காக்கிநாடா, பெனுகுதுரு, கொள்ளபாலம், கரபா, சோலங்கிபேட், நெல்பள்ளி, இருசரா, திம்மாபுரம், மெடபாடு, கொல்வலம் மிட்டா.
3 ராமசந்திரபுரம்	ராமசந்திரபுரம்	ராமசந்திரபுரம், திராக்டசாமா, கொடிபள்ளி, அலமூர், அனபர்த்தி, பிக்காவோல், வெடுருபகா, மண்டபேட்டை, கபலேஸ்வரபுரம்.

தாலூகா.	டிமான்ஸ்டிரேட்டரின் இருப்பிடம்.	வேலை நடக்கும் கிராமங்கள்.
4 ரஷோல்	கொத்தபேட்டை	கொத்தபேட்டை, [illegible]பள்ளி, புளேடிகுரு, மா[illegible], அட்ரீயபுரம், ரஷோல், பசார்லபுடி, மா[illegible], சிண்டலபள்ளி, நாகுலங்கா.
5 தூணி	தூணி	தூணி, கொடந்தூர், போ[illegible], டொண்ட எரக, கொத்தபள்ளி, கொட குண்டா, ஹம்சாவரம், வண்டிமமடி.
6 பெத்தப்பூர் ..	பெத்தப்பூர்	பெத்தப்பூர், புளிமேரம், வீரவரம், பிராட்டிபடு, ஜக்கம்பேட்டை, எற்றவரம், வடிசிலேரு, எலேஸ்வரம், கண்டபள்ளி.
7 அமலாபுரம் ..	அமலாபுரம் ..	அமலாபுரம், போடசகுரு, குமாரகிரிபட்டணம், மும்மிடிவரம், குட்டனுதேவி, முக்டேஸ்வரம், வீரவல்லிபாலம், லங்கா, கட்ரேனிகோனு, சல்வபள்ளி.
8 பத்ராசலம் ..	பத்ராசலம்	பத்ராசலம், நரசாபுரம், தும்மகூடம், பர்ணசாலை, கௌரிதேவிபேட்டை, கன்னவரம், வட்டிகூடம்.

மேல் கோதாவரி ஜில்லா.

1 நரசபுரி	நரசபுரி	இல்லப குரு, நரசபுரி, பாலகோல், கொப்பரு, லங்கால கோடேரு, மொகல்குரு, எலமஞ்சிலி, கும்மலூர், காளடம், அச்சாண்டர்.
2 எல்லூர்	எல்லூர்	கைகரம், பீமடோல், பங்கிடிகூடம், வட்லூர், போடுநூர், முண்டூர், பெத்தபடு, குண்டுகோலனு, எல்லூர்.
3 தணுகு	தணுகு	தணுகு, அத்திலி, பெனுமந்தரா, சித்தாந்தம், கந்தவில்லி, தீபரு, துவ்வர, அரவில்லி, மாருதேர், விப்பாரு.
4 தாடேபள்ளிகூடம் ..	தாடேபள்ளிகூடம் ..	தாடேபள்ளிகூடம், பிப்பாரா, கணப்பவரம், நிடமாரு, அனந்தபள்ளி, உங்குதூர், நல்லஜீர்ல, கரிஎட்ட, நலாப்பாலம், ராவிபடு.
5 பீமாவரம் ..	பீமாவரம்	பீமாவரம், உண்டி, கரகபரு, விரவாசர்ம், கொலமுரு, அகிவிடு, வெந்தரா, கோனேடிவாடா, கல்லா, லோசரிகிட்லபாடு.
6 கொவ்வூர்	கொவ்வூர்	கொவ்வூர், சகல்லு, நிடடவோல், தல்லபுடி, கோபாலபுரம், இசகாபட்லபங்கிடி, விச்சேஸ்வரம், எர்னுகூடம்.

டிமான்ஸ்டிரேட்டர் இல்லாத தாலூகாக்கள்.

விசாகபட்டணம் ஜில்லா	..	சாலூர், சிப்புரப்பல்லி, பாதபட்ணம், சிகாகோல்.
கீழக்கோதாவரி ஜில்லா	..	பித்தாபுரம் டிவிஷன்.
மேல் கோதாவரி ஜில்லா	..	சிந்தலப்பூடி.

அனகாபள்ளி விவசாய ஆராய்ச்சி பண்ணையில் பழக்கப்பட்ட விவசாய மேஸ்திரிகளை விசாகப்பட்டணம் ஜில்லாவிலுள்ள 9 தாலூகாக்களில் ஒவ்வொரு தாலூகாவிலும் உள்ள 8 செண்டர்களில் ஒவ்வொரு செண்டருக்கு ஒரு மேஸ்திரி வேலை செய்யும்படி செய்திருக்கிறது (விசாகபட்டணம் தாலூகா தவிர). இவர்கள் விவசாய டிமான்ஸ்டிரேட்டர் சொல்லிய வேலைகளை விவசாயிகள் செய்து முடிப்பதற்கு உதவியாயிருந்து அம்முறைகளை எப்பொழுதும் விவசாயிகள் கையாடக்கூடியதாக செய்யவேண்டும். இவ்வாறு செய்யப்படாததற்கு காரணம் விவசாய டிமான்ஸ்டிரேட்டருக்கும், விவசாயிகளுக்கும் ஊடே விவசாய மேஸ்திரி இல்லாமலிருந்ததே காரணம். ஒவ்வொரு மேஸ்திரியும் தான் இருக்கும் கிராமத்தை சேர்த்து ஐந்து கிராமங்களில் வேலை நடத்தவேண்டும். இவ்வைந்து கிராமங்களிலும் போதுமான வேலை நடந்த பிறபாடு வேறு ஐந்து கிராமங்களில் வேலை செய்யலாம்.

விவசாய டிபார்ட்மெண்டாரால் அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் பயிர்களில் முக்கியமானவை நெல், கரும்பு, கேப்பை, இப்பயிர்களின் சாகுபடியின் சீர் திருத்தங்கள் தவிர, உரங்களை சரியான முறையில் பத்திரஞ் செய்வதிலும், பசுந்தாள், ஜாடுபயிர் முதலியவற்றை பயிர் செய்வதையும் பயிர்களில் பூச்சிகளும் நோய்களும் விழாமல் காப்பாற்றுதலையும், மாடுகளை பரிபாலனம் செய்யும் விதத்தையும், கலவனில்லாமல் சுத்த விதையை எடுத்து காப்பாற்றும் முறைகளேயும் நிரூபணைசெய்து காட்டுகிறார்கள். தண்ணீர் இறைப்பதற்கான நூதன கருவிகளேயும், இரும்பு கலப்பை உழுவதிலும் குண்டகா என்னும் கருவியை உபயோகம் செய்யும் விதத்தையும் காட்டுகிறார்கள். மற்றும் நயம் கரும்பாலே, வெல்லம் காய்ச்சும் கொப்பரை முதலியவைகளை வாங்குவதில் யோசனை சொல்வார்கள். ஏற்கனவே கையாளப்பட்டுவரும் முறைகளை எவ்விதமாக சீர்திருத்தம் செய்யலாம் என்பதை குடியானவர்களுடைய நிலத்திலேயே உயர்ந்த முறைப்படி பயிர் செய்து காண்பிப்பார்கள். இந்த விஷயத்தில் எல்லா விதத்திலும் சமமாயுள்ள இரண்டு வயல்களிலோ அல்லது ஒரே நிலத்திலோ, டிபார்ட்மெண்டார் சொல்லும் முறைப்படியும், நாட்டு முறைப்படியும், அடுத்தடுத்து பயிர்செய்து காண்பிப்பதுடன், சௌகரியப்பட்டால் அறுவடை செய்தும் இரண்டு முறைகளுக்குமுள்ள வித்தியாசத்தையும் காண்பிப்பார்கள்.

மேலும் ஆடு, மாடு முதலியவைகளை சரியான முறைகளில் எப்படி வளர்ப்பது, அடைப்பது வம்ச அபிவிருத்தி செய்வதென்பதையும் கோழிப் பண்ணைகளேயும் தேன்கூடுகளேயும் பட்டுப்பூச்சிகளேயும் எப்படி பராமரிப்பதென்பதையும் காண்பிக்கப்படும்.

நெல் பயிரில் செய்துவரும் அபிவிருத்தியாவன :—

(1) உயர்தர நெல் சாகுபடி செய்தல். உதாரணமாக மைபாளி நெ. 7-ம், 30-ம், நவகோட்டிசன்னம் நெ. 4-ம், 3-ம் பங்காரு தீகா 7-ம், 9-ம் ரத்தன சூடி நெ. 7-ம், 9-ம், குருபுரம் சன்னம் நெ. 47. ஜி.இ.பி. நெ. 24, புனுக அக்குல்லு நெ. 3 சுன்கிசன்னம் நெ. 5, பொப்பிலிகண்டி நெ. 1 முதலிய தினுசுகள் கஞ்சாம், விசாகப்பட்டணம் ஜில்லாக்களிலும் அக்குல்லு புனுசக்குனுமணி என்னும் தினுசுகள் கோதாவரி ஜில்லாக்களிலும் பயிர் செய்யப்படுகின்றன. (2) சிக்கனமாக நாத்துப்பாவுதல். (3) பசுந்தாள் உரத்துடன் எலும்புத்தூள் அல்லது சூபர் உரத்தை சேர்த்து உபயோகித்தல் முதலியன.

கரும்பு சாகுபடியில் செய்துவரும் அபிவிருத்தியாவன :—

(1) உயர்தர ஜாதிக்கரும்புகளை பயிர் செய்தல்.—உதாரணமாக ஜே. நெ. 247, கோ. நெ. 213, கோ. நெ. 281 ஆகியன. (2) சூப்பர் கலப்பை நெ. 11, நெ. 1, 2 எச். எம். குன்டக்கா கலப்பைகளால் ஆழ உழுது நிலத்தை நன்றாக தயாரித்தல். (3) குறைந்த கரணைகளை தகுந்த இடம் விட்டு நடுதல். (4) விதைக்காக உயர்ந்த ஜாதிக் கரும்புகளை நடுதல். (5) மனிதர்கள் செய்யவேண்டிய களைக் கொத்து முதலிய வேலைகளுக்கு மாடுகளை உபயோகித்தல். (6) கரும்புச்சார் பிழிவதிலும், வெல்லம் காய்சுவதிலும் சீர்திருத்தப்பட்ட முறைகளை அனுசரித்தல் முதலியன.

புனுசா கேழ்வரகில் அபிவிருத்தி செய்யப்பட்ட இரண்டு ஜாதிகள். (நெ. 525-ம், 355-ம்) விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகின்றன. ஜொன்னு விதையை தரம் பிரிப்பதற்கும் அதில் ஏற்படும் பூஞ்சாள நோயை விலக்குவதற்கும் முறைகள் போதிக்கப்படுகின்றன.

மற்றும் இதர பயிர்களில் செய்யும் வேலைகள் யாதெனில் நிலக்கடலையை ஒவ்வொரு சால்களிலும் விதைத்தலும் வாழைகளை நூதன முறைப்படி பயிர் செய்வதுமாகும். பழவர்க்க செடிகளுக்கு உரமிடுதலேயும் தண்ணீர் வார்ப்பதையும் நூதன முறைகளால் செய்து காண்பிக்கப்படும். வேண்டும்போதெல்லாம் அந்நிய செடிகளை கொண்டுவந்து பயிர் செய்யப்படுகிறது.

மேற்கூறியவைகள் தவிர ஜமாபந்தி, மாட்டுத்தாவணி, உற்சவங்கள், முதலிய சமயங்களில் சிறிய கண்காட்சிகளை நடத்திவருகிறார்கள். இந்த கண்காட்சிகளில் மலிவாயும், உபயோகமுள்ளதுமான கருவிகளும், விதை உர தினுசுகளும் காண்பிப்பதுடன், அக்கருவிகளை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்பதையும் நேரில் செய்து காண்பிப்பார்கள். மேலும் விவசாய ஆராய்ச்சி சம்பந்தமானதும், செடிகளில் விழும் பலவித நோய், பூச்சிகளின் ஜீவிய சரித்திரங்களை விளக்கும்படியாயுமுள்ள படங்களையும் காண்பிப்பார்கள். இச்சிறு கண்காக்ஷிகள் தவிர வருஷம் ஒருமுறை பெரிய கண்காக்ஷி ஒன்றும் நடைபெறுவதுடன் விவசாய கண்காக்ஷி மோட்டார் அநேக கிராமங்களுக்கு விஜயம் செய்து, அவ்விடங்களில் மாஜிக்லாண்டர்ன் உதவியாலோ உதவியன்னியிலோ, பிரசங்கங்கள் நடைபெறும்.

தற்சமயம் பயிர்களின் சீர்திருத்தத்தைப்பற்றி மாஜிக்லாண்டர்ன் படங்கள் ஏராளமாய் தயாராயிருப்பதால் இந்த படங்களின் மூல்யமாய் பிரசங்கங்கள், வேலைசெய்துகாட்டும் கிராமங்களில் நடைபெருகின்றன. மற்ற சந்தர்ப்பங்களில் ஜில்லா அதிகாரிகளாலும் பிரசங்கங்கள் செய்யப்படுகின்றன.

டிப்போக்களில் கிடைக்கும் சாமான்களின் விவரம் கீழே குறிக்கப்பட்டிருக்கிறது. எந்த உத்தியோகஸ்தருக்கு மனுசெய்து சாமான் வாங்கிக்கொள்ள வேணுமோ அவர் விலாசமும் குறித்திருக்கிறது. டிப்போவிலல்லாத சாமான்களையும் விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர் மற்ற விடங்களிலிருந்து வரவழைத்து கொடுக்கக்கூடும்.

விவசாய டிபார்ட்மெண்டாரால் செய்யக்கூடிய உதவியைத் தவிர, **கோஆபரேடிவ் டிபார்ட்மெண்டும் குடியானவர்களுக்கு உதவிசெய்து வருகிறது.**—இந்த டிபார்ட்மெண்டாரால் ஆரம்பிக்கப்பட்ட கிராம ஐக்கிய நாணய கூட்டுறவு சங்கங்களின் மூலம் குடியானவர்கள் தங்கள் தசை கூலி செலவிற்கு கடன் வாங்கிக்கொள்ளலாம். இது விஷயமான யோசனைகளுக்கு கஞ்சம் ஜில்லாவிலுள்ளவர்கள் பர்ஹாம்பூரிலுள்ள டிப்டி ரெஜிஸ்ட்ராருக்கும் விசாகபட்டணத்திலுள்ளவர்கள் விசாகபட்டணம் டிப்டி ரெஜிஸ்ட்ராருக்கும், மேல் கோதாவரி, கீழ் கோதாவரி ஜில்லாவிலுள்ளவர்கள் இராஜமகேந்திரத்திலிருக்கும் டிப்டி ரெஜிஸ்ட்ராருக்கும் மனு செய்து கொள்ளவேணும்.

கைத்தொழில் இலாகாவைச் சேர்ந்த பம்பிங், போரிங் பிரிவு, விவசாயிகளுக்கு சுரங்கம்போடும் கருவிகளை கொடுத்து வாங்கவும் சோதனை குழிகள் போடுவதிலும் உதவி செய்துவருகிறது. இது விஷயமாய் கட்டண முதலிய விதிகளுக்கு பெஜவாடா அசிஸ்டெண்டு இண்டஸ்டிரியல் என்ஜினியருக்கும் எழுதி தெரிந்துகொள்ளலாம். இந்த டிபாரட்மெண்டின் உதவியால் தண்ணீர் வசதி ஏற்படுத்திக்கொண்டால் மேற்செய்யவேண்டிய சாகுபடி விஷயமாய் விவசாய டிபார்ட்மெண்டார் எப்பொழுதும் உதவி செய்ய காத்திருக்கிறார்கள். கைத்தொழில் இலாகாவிலிருந்து தண்ணீர் இறைக்கும் என்ஜின் வாங்க கடன் கேட்டால் ஷை என்ஜின்கள் வைப்பதினால் லாபமுண்டா என்பதை பார்வையிட்டும் சொல்வார்கள். இந்த கடன் சம்பந்தமான விஷயங்களை பின்னால் கூறப்பட்டிருக்கிறது.

சாமான்களின் விவரம்.

	சாமன்கள்.	விலை. ரூ.அ.பை.	ஷரா.
1	கூப்பர் 11-ம் கலப்பை (இரும்பு பாகம் மாத்திரம்) ..	7 0 0	ஒன்றுக்கு.
2	கூப்பர் கலப்பை கொழு	0 8 0	ஷை
3	கூப்பர் 26 (இரும்புபாகம்)	8 12 0	ஷை
4	கூப்பர் கலப்பையின் கொழுவும் கொழு முனையும் ..	1 1 0	ஷை
5	கூப்பர் கலப்பை கொழுமுனைமாத்திரம்	0 3 6	ஷை
6	எச். எம். குண்டகா நெ. 0, இரும்பு பாகம் மட்டும் ..	4 8 0	ஷை
7	கூப்பர் குண்டகா விடு கத்தி	1 8 0	ஷை
8	எச். எம். குண்டகா, நெ. 1	8 0 0	ஷை
9	எச். எம். விடுகத்தி	2 12 0	ஷை

சாமான்கள்.	விலை. ரூ.அ.பை.	ஷரா.
10 எச். எம். கலப்பை நெ. 2 (இரும்பு பாகம் மட்டும்) ..	14 4 0	ஒன்றுக்கு
11 எச். எம். விடுகத்தி	3 14 0	ஷ
12 மண்வாரி	10 4 0	ஷ
13 கவலைச்சால்—1—10½ அங்குலம் சைஸ்	8 8 0	ஷ
ஷ 2—3 இன்ச் சைஸ்	9 10 0	ஷ
ஷ 2—6 இன்ச் சைஸ்	14 0 0	ஷ
14 கவலை வடக்கயிறு (1½ அங்குலமும், ¾ அங்குலமும்).	0 2 0	ராத்தல் ஒன்றுக்கு.

11 விதை, செடி தினுசுகள்.

1 பெரு நெல் சுமார்	4 8 0	164 ரத்தல் கொண்ட மூட்டை ஒன்றுக்கு.
2 பொடி நெல் சுமார்	5 8 0	ஷ
3 சணல் விதை	0 1 0	ராத்தல் ஒன்றுக்கு.
4 தக்கை பூண்டு	0 1 6	ஷ
5 பில்லிப்பசரா	0 1 6	ஷ
6 அவுரி	0 1 0	ஷ
7 கொளிஞ்சி	0 1 0	ஷ
8 கம்போடியா விதை	0 1 0	ஷ
9 கரும்பு விதை (ஜே. 247, கோ. 213, எம். எ. 21, கோ. 281)	2 8 0	500 ராத்தல் கொண்ட பாரம் ஒன்றுக்கு.
10 ஹுமாயூடன் ஒட்டு மா	1 0 0	ஒன்றுக்கு.
11 எனுமிச்சை, நார்த்தை, ஒரு வயசுள்ள கன்றுகள் ..	0 2 0	ஷ

குறிப்பு.—காலத்திற்கு தக்கவாறு விலை மாறலாம். வேண்டியவர்கள் அந்த தாலூகா டிமான்ஸ்டிரேட்டருக்கு எழுதினால் தரவழைத்து கொடுப்பார்.

9, 10, 11 அனகாபள்ளி விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் கிடைக்கும்.

விதை, உரம் முதலியவைகள் கிடைக்கும் இடமும், அவைகள் எந்த அதிகாரி பொறுப்பிலிருக்கின்றனவோ அவர் விலாசமும்.

ஜில்லா.	டிப்போ இருப்பிடம்.	உத்தியோகஸ்தர் பெயர்.
விசாகப்பட்டணம் ..	விசாகப்பட்டணம் ..	அஸிஸ்டெண்ட் அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், விசாகப்பட்டணம்.
மேல்கோதாவரி ..	நரசபுரி	அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், நரசபுரி.
	தனுகு	அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், தனுகு.
	எல்லூர்	அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், எல்லூர்.
	தாடேபள்ளிகூடம் ..	அஸிஸ்டெண்ட் அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், தாடேபள்ளிகூடம்.
	பீமாவரம்	அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், பீமாவரம்.
	கொவ்வூர்	அஸிஸ்டெண்ட் அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், கொவ்வூர்.
கீழ்கோதாவரி ..	இராஜமகேந்திரபுரம்.	அஸிஸ்டெண்ட் அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், இராஜமகேந்திரபுரம்.
	சாமல்கோட்டை ..	மானேஜர், விவசாய ஆராய்ச்சி பண்ணை, சாமல்கோட்டை.
	காகிநாடா	அக்ரிகல்சரல் டிமாஸ்டிரேட்டர், காக்கிநாடா.
	ராமசந்திரபுரம் ..	அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், இராமசந்திரபுரம்.
	கொத்தப்பேட்டை ..	அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், கொத்த பேட்டை.
	தூனி	அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், தூனி.
	பெத்தபூர்	அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், பெத்தபூர்.
	அமலபூர்	அஸிஸ்டெண்ட் அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், அமலபூர்.
	பத்ராசலம்	அகரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், பத்ராசலம்.

கோதாவரி ஜில்லாவிலுள்ள டிப்போக்களில் கிடைக்கும் சாமான்களின் விவரம்.

	ரூ.அ. பை.	
நெல் விதை நயமானது	4 12 0 முதல் 4 15 0	166-ராத்தல் கொண்ட மூட்டை ஒன்றுக்கு.
நெல் விதை பருமன்	3 12 0	....
தக்கைபூண்டு விதை	0 1 3	ராத்தல் ஒன்றுக்கு.
பில்லிப்பசரா	0 1 0	ஷை
கம்போடியா பருத்தி விதை	0 1 0	ஷை
கொடுக்காபுளி விதை	0 0 9	..
கரும்பு விதை	2 8 0	500 ராத்தலுக்கு.
கூப்பர் கலப்பை நெ. 11—		
இரும்பு பாகம் மட்டும்	8 2 0	ஒன்றுக்கு.
இரும்பு புது மாதிரி கலப்பை	7 0 0	ஷை
இரும்பு கலப்பை கொழு	0 9 0	..
இரும்பு புதுமாதிரி கலப்பை கொழு	0 8 0	..
கூப்பர் நெ. 26 கலப்பை இரும்பு பாகமட்டும்	8 12 0	..
கூப்பர் கலப்பை கொழுவும் கொழு முனையும்	1 1 0	..
கொழுமுனை	0 3 6	..

கீழ்க்கண்ட சாமான்களை ஆடருக்கு தருவித்து கொடுக்கப்படும்.

வாழை கன்று	6 4 0	100-க்கு.
யானைப்புல்	0 2 0	ராத்தல் ஒன்றுக்கு.
இனிய புல்	0 2 0	ஷை
கவலை வட்டு	12 12 0	ஒன்றுக்கு.
பக்ஸ்கிரேப்பர்	9 4 0	ஷை
எச். எம். குண்டகா நெ. 0—		
நேரான விடுகத்தியுடன் (இரும்பு பாகம் மட்டும்)	4 8 0	ஷை
விடுகத்தி	1 8 0	ஷை
எச். எம். குண்டகா நெ. 1—		
15அங்குலமுள்ள வளைந்த கத்தியுடன்	8 0 0	ஷை
ஷை விடுகத்தி	2 12 0	ஷை
எச். எம். குண்டகா நெ. 2—		
வளைந்த கத்தியுடன் இரும்பு பாகம் மட்டும்	14 4 0	ஷை
ஷை குண்டகா விடுகத்தி 24 அங்குலம்	3 14 0	ஷை
கூப்பர் கலப்பை 25-ம் நெ—		
இரும்பு பாகமட்டும்	4 8 0	ஷை
ஷை கலப்பை கொழு	0 5 6	ஷை

குறிப்பு.—காலக்கிரயப்படி விலை மாறலாம்.

(b) ஆராய்ச்சி.

விவசாய ஆராய்ச்சிப்பண்ணை, சாமல்கோட்டை.

இந்த பண்ணை 1902-ம்ஞு ஆரம்பிக்கப்பட்டது. இது கீழ் கோதாவரியின் கழி பாகத்தின் வடகோடியில் சாமல்கோட்டை வாய்க்கால் தென் கரையில் காக்கிநாடா ரோட்டில் சாமல்கோட்டை ஸ்டேஷனிலிருந்து அரை மைல் தூரத்திலுள்ளது. இப்பொழுது இதன் விஸ்தீர்ணம் 57.42 எக்கரா. அவைகளில் கட்டிடங்களும் ரோட்டுகளும் போக பாக்கி 45 எக்கர்கள் சாகுபடியாகின்றன.

என்ன பார்க்கலாம், எப்பொழுது பார்க்கலாம்.

ஜனவரி.—நெல் நாத்தங்கால், நஞ்சை நிலம் உழவு, இரண்டாம் போக நெல் நாத்து நடவு, வாழைக்குலை வெட்டுதல், ஒரே மூங்கிலால் முட்டுக்கொடுத்தல், வாழைக்கண்ணு நடுதல், கரும்பு நட நிலம் தயார் செய்தல், பருத்தி முதலிய பயிர்களுக்கு மாடுகளை உபயோகித்து களை வெட்டுதல்.

பிப்ரவரி.—மேற்சொன்னவைகளுடன், கரும்புகரணைகள் பொருக்கியெடுத்தல், அவைகளை சால் சாலாய்நடுதல் கரும்பு அறுவடை, கோதாவரி சிந்துவாகி அடுப்புகளில் வெல்லம் காய்ச்சுவதையும் பார்க்கலாம்.

மார்ச்.—வெல்லம் காய்ச்சுதல், வாழைக்குலை வெட்டுதல், வாழைப் பழங்களை நறுக்கி உலரவைத்தல், மாடுகளினால் களைகொத்து கொடுத்தல்,

ஏப்ரல்.—இரண்டாம்போக நெல் அருவடை, சணல் முதலிய பசுந்தாள் விதை விதைத்தல், கரும்புக்கு வடிகால்கள் வெட்டுதல்.

மே.—கரும்பு, வாழை, பசுந்தாள் பயிர்கள், அன்னுசிப்பழம் அறுவடை, பருத்தி பரித்தல், நெல் புழுதி நாத்து விதைத்தல், ஆர்கமீடியன் கருவி வேலை செய்தல்.

ஜூன்.—புழுதி, சேத்து நெல் நாத்தங்கால்கள், பசுந்தாள் பயிர்களை உழுதுமடித்து நெல்நட நிலத்தை தயாரித்தல், மழையினலேயே விளையக் கூடிய கரும்பு தினுசுகள் நடுதல், கம்போடியா பருத்தி, சோளம், எள்ளு, மொச்சை, புடாமா நெல், காய்கரி இவைகளை உற்பத்தி செய்தல், கரும்புக்கு பிண்ணுக்கு, அம்மோனியம் சல்பேட் சூப்பர்பாஸ்பேட் முதலிய எரு வைத்தல்.

ஜூலை.—ஒற்றை நாத்து நடுதல், நெல் பயிருக்கு எலும்புத்தூள், அம்மோனியம் சல்பேட் முதலிய எருக்கள் வைத்தல், கரும்பில் அதிமாயிருக்கிற நச்சுக்களை எடுத்தல், வாழைக்கும் அன்னுசிபழத்துக்கும் எரு வைத்தல்.

ஆகஸ்ட்.—நஞ்சையில் களையெடுத்தல், கலவன்களை அப்புறப்படுத்தல், கரும்புக்குத் தோகை சுற்றுதல், கரும்பு சாயாமலிருப்பதற்கு முட்டு கட்டுதல்.

செப்டம்பர், அக்டோபர்.—முந்தின நெல் அறுவடை, நடவு.

நவம்பர், டிசம்பர்.—நெல் அறுவடை, அறுவடையான நஞ்சையில் பயர் பசுந்தாள் விதைகள் தெளித்தல், சீமை காய்கரி தினுசுகள்.

மேற்கூறியவைகளைத் தவிர இன்னும் அனேக சங்கதிகளை எக்காலத்திலும் பார்க்கலாம். பலவித மாட்டுத்தொழுக்களிருக்கின்றன. அவைகளில் காய்ந்த மண்ணும், கழித்த வைக்கோலும் போட்டு எரு சேகரம் செய்யப்படுகிறது. எருக்குழிகள் பண்ணையிலுள்ள கழிவு செத்தையை எருவாகச் செய்யப்படுகிறது. இத்துடன் நூதன முறையில் கோழி வளர்க்கப்படுகிறது, தேனீ வளர்த்தல், தேனெடுத்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், மீன் வளர்த்தல், பயிர்களுக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்கும் விதங்களையும் பார்க்கலாம். புதிய பலவித பழவர்க்க மரங்களும், கபாக், சணல் ஆரோரூட் செடிகளும் வளர்க்கப்படுகின்றன. கொடுக்காப்புளி வேலியும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

சோதனையிலிருந்துவரும் விஷயங்கள்.

கரும்பு.—(a) கோயம்புத்தூர் கரும்பு தினுசுகள், ஒட்டுக்கட்டின சோளக் கரும்புகள் பயிரிட்டுப் பார்த்து ரசாயன விவசாய முறைகளால் சோதிக்கப்பட்டு நல்லதென்று தெரிகிறதோ அவைகளை தேர்ந்தெடுத்தல்.

(b) புஞ்சை நிலங்களில் ஒரே தண்ணீர் பாய்ச்சியும், மானுமாரியாயும், தண்ணீர் வடியாத நிலங்களிலும் கரும்பு நட்டு சோதனை பார்த்தல்.

(c) கரும்பு சாகுபடியில் சிலவு எவ்வளவு குறைக்கலாம். எவ்வளவு இடம்விட்டு நடலாம், முளைக்கவைத்த கரணைகளை நடுதல், கரணைகளை முளைக்க வைத்தல், மாதந்தோரும் நடுதல், எந்தெந்த கரும்புக்கு எவ்வளவு தழைசத்து எரு வேண்டியதென்பதும் சோதித்து பார்த்தல்.

(d) பலவித கரும்பு ஆலைகளை வேலை செய்து பார்த்தல், அடுப்புகளில் எது நல்லதென்றும், வெல்லம் காய்ச்சல்.

நெல்.—(a) பலதினுசு நெல் பயிரிட்டு விதை பொருக்கி எடுத்தல், தேர்ந்தெடுத்த பொருக்கு விதைகளை தாரதம்மியம் பார்த்தல், கலவனில்லாமல் விதைகளை பயிரிட்டு அபிவிருத்தி செய்தல்.

(b) நஞ்சை நிலங்களில் வரல் உழவு செய்வதினலும் மணலடிப்பதினலுமுள்ள பாதக சாதகங்களை கவனித்தல், சாத்து நடவு, குறைத்து தண்ணீர் இறைத்தல், இரண்டாம்போக நெல் பயிரில் நடவுக்கும் தெளிக்கும் தாரதம்மியம் பார்த்தல், கரும்புக்கு பின் நடும் நெல் பயிருக்கு வேண்டிய எரு எவ்வளவென்றும் சோதனை செய்தல்.

வாழை.—(a) புதிய வாழை தினுசுகள் நட்டு சோதனை செய்தல்.

(b) காலத்தில் நடுதல், செய்நேர்த்தி வாழைக்கன்றுகளையும், இவைகளை கவனித்தல்.

(c) வாழைகளுக்கு எவ்வளவு எருவேண்டுமென்பதையும், எருவிடுவதினால் பழத்தின் ருசியையும், சீக்கிரம் கெட்டுப்போகாமல் மாற்றமுடியுமாவென்பதையும்.

(d) வாழைப்பழத்தை வத்தல் செய்துபார்த்தல்.

இரண்டாம்போக பயிர்கள்.—கம்போடியா பருத்தி, கேழ்வரகு, எள்ளு, சீமைத்தக்காளி, கத்திரி, மற்ற காய்கறி தினுசுகளும், கொட்டைமுத்து, புகையிலை இவைபோன்ற பயிர்கள் நஞ்சை நிலங்களில் இரண்டாம்போக நெல் நடுவதற்குப் பதிலாக நட்டால் லாபகரமாயிருக்குமா வென்பதை சோதனை செய்தல்.

பசுந்தாள் பயிர்களும், மாட்டுத் தீவனப்பயிர்களும்.—பில்லபசாரா, கினியாப்புல், கொளக்கட்டைப்புல், சணல், தக்கப்பூண்டு பயிர்களை பயிர் செய்து பார்க்கப்படுகிறது.

பழவர்க்கங்கள்.—புது தினுசு பழ மரங்களை உண்டு பண்ணுதல்.

மற்றவைகள்.—நெல் கரும்பு இவைகளுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டியதென்பதும், நோய்களை அடக்கும் முறைகளும் கவனிக்கப்படுகின்றன.

விரும்புவோர் எப்பொழுதும் வந்து பார்க்கலாம்.

விவசாய பரிசோதனை பண்ணை, அனகாபள்ளி.

இந்தப் பண்ணை 1913-ம் வருஷம் துவக்கப்பட்டது. அப்பொழுது 41 எக்கர் தானிருந்தது. 1926-ம் வருஷம் 104 எக்கர் ஆக ஏற்பட்டது. அதில் 69-80 எக்கர் சாகுபடியிலிருக்கின்றது. மற்ற நிலங்களில் கட்டடங்களிருக்கின்றன. ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே ஒரு பர்லாங்கு தூரத்தில் சோதாவரம்-மதுகுலா ரோடில் இருக்கிறது. ரெயில் மார்க்கமாயும் ரோட் மார்க்கமாயும் போகலாம்.

பண்ணையில் பார்க்கக்கூடியவைகள்.

ஜனவரி 15உ முதல் பிப்ரவரி 15உ வரை.—சிறிய இரும்புக் கலப்பைகள் வேலை செய்தலும், நிலங்கள் மேடுபள்ளமில்லாமல் சமப்படுத்தல், மாடுகளை கயிறு இல்லாமல் எப்படி பூட்டுவது, சரியான ஆழத்தில் உழ கலப்பைகளை எப்படி கட்டவேண்டும், அருவடைக்கிருக்கும் கரும்பு, கோடக் கேப்பை நடவு, நெல் அருவடை, முதலியவைகளை பார்க்கலாம்.

பிப்ரவரி 15உ முதல் ஏப்ரல் 15உ வரை.—கரும்பு அருவடையும், சால்களில் கரும்பு நடுகையும், நல்ல கரும்பு ஆலைகளில் சார் பிழிவதும், நிறமுள்ள வெல்லம் காய்ச்சுவதும், விதைக்காக நிற்கிற கரும்புப் பயிரையும், கோடை கேப்பையும் பார்க்கலாம். சைலேஜ் மாட்டுத்தீவனம் மாடுகளுக்கு கொடுப்பதையும் பார்க்கலாம்.

ஏப்ரல் 15உ முதல் மே 31உ வரை.—கோடையில் மழையைக் கொண்டே விளைவிக்கப்படும் கரும்புகளையும், நூதன முறைகளில் முன் பட்ட கேள்வரகு, கம்பு நாற்றங்கால்களும், கரும்பிலிருந்தும் பதனியிலிருந்தும் சர்க்கரை செய்வதும், புஞ்சையில் கரும்பு நடவும், கைக்களக் கொத்தினாலும் மாடுகளை உபயோகப்படுத்தி வேலை செய்யும் களைக் கொத்தினாலும் பூமியிலுள்ள ஈரத்தைக் காப்பாற்றுதலையும் பார்க்கலாம்.

ஜூன், ஜூலை.—பசுந்தாள் உரத்திற்கும், மாட்டுத் தீவனத்திற்காகவும் சைலேஜ் செய்வதற்கும் பயிர்கள் விதைத்தல், நெல்நாத்து விடுதல், கரும்புக்கு பார் பிடித்தல், உரமிடுதல், தோகை சுற்றுதல், சைலேஜ் செய்யும் முறை, கேள்வரகு கந்தி நடவு, இவைகளை பார்க்கலாம்.

ஆகஸ்ட், செப்டம்பர்.—கம்பு, கேள்வரகு தட்டையுடன் சணல் பயிரை கலந்து சைலேஜ் செய்தல், சீர்திருத்த முறைகளில் நெல்நடவு, சால் சோடி நாற்றங்கால் தெளி, விதை முதல் விருத்திக்காக கரும்பு நடவு, பலவித கரும்பு பயிர்களையும் பார்க்கலாம்.

அக்டோபர், நவம்பர்.—சுத்த நெல் விதை தயாரிப்பதற்காக கலவனை அப்புறப்படுத்தல், நாள் குறைந்த கரும்பு அறுவடை, நெல், கரும்பு, கேள்வரகு இவைகள் நன்றாய் வளர்ந்திருக்கும் காலம் இதுவேயாதலால் பண்ணையைப் பார்க்க இதுவே சமயம்.

டிசம்பர்.—நெல் அருவடை செய்தல், கோடைகேப்பை நாற்றங்கால் தெளித்தல், கரும்பு அருவடை செய்து வெல்லம் காய்ச்சல், இரும்புக் கலப்பைகள் வேலை செய்தல்.

மேற்கூறியவைகளைத் தவிர எக்காலத்திலும் கீழே குறிப்பிட்டவை களைப் பார்க்கலாம். தொழு எரு சேகரம் செய்து காப்பாற்றும் விதம், அதிகச் சிலவில்லாமலும் நன்றாயும் மாடுகளுக்கு தீவனம் வைப்பது, பட்டுப்பூச்சி வளர்ப்பது, தேனீக்கள் வளர்ப்பது, காய்கறி பூக்கள் உற்பத்திப் பண்ணுதல். பொருள்காக்ஷி அறைகளையும் கோழி வளர்க்கும் விதத்தையும் பார்க்கலாம்.

பரிசோதனையிலிருந்துவரும் விஷயங்கள்.

I. **நெல்.**—(a) அதிக ராசி காணக்கூடிய நெல் விதை பொருக்கி யெடுத்து நாட்டுதினுசுடன் ஒப்பிட்டுப் பார்த்தல்.

(b) பசுந்தாள் எரு விடுவதினால் நிலத்தின் விளைவு அதிகப்படுமா வென்றும், பலதினுசு நெல் ராசி அதிகம் எது காணுமென்றும்.

II. **கரும்பு.**—(a) தினுசுகளின் சோதனை—பல தினுசு கரும்புகளையும் பயிரிட்டு ஒப்பிட்டுப் பார்த்தல்.

(ii) ஏக்கருக்கு 56 பவுண்ட் நைட்ரஜனும் தண்ணீர் குறைத்து விட்டும், ஏக்கருக்கு 100 பவுண்ட் நைட்ரஜனும் போதுமான தண்ணீர் பாய்ச்சியும், கரும்பு தினுசுகள் எப்படி வளருகின்றது என்று பார்த்தல்.

(iii) குறைத்தலாய் எருவிட்டும் தண்ணிர் தட்டியும் கரும்பு தினுசு கள் எப்படி வளருகின்றது வென்றும்.

(iv) நல்ல கரும்பு தினுசுகளை வருஷத்தில் 4 மாதத்திற்கு மேல் $1\frac{1}{2}$ அடி தண்ணிர் நிற்கக்கூடிய பள்ளதாக்கு நிலங்களில் நட்டு எந்த தினுசு ராசி கொடுக்கக்கூடியதென்று பார்த்து பொருக்கியெடுத்தல், கோயம்பத்தூர் 281 கரும்பு பள்ளதாக்கு நிலங்களில் நன்றாய் வருகிறது.

(v) நடும்போது மாத்திரம் கரும்புக்கு ஒரு தண்ணீர் பாய்ச்சி நடுதல், கரும்புகள் முன்னும் பின்னுமாய் நடுதல், முன் நடக்கூடியது ஏரியிலாவது வாய்க்காலிலிருந்தாவது தண்ணீர் பாயக்கூடியதற்கும், பின் நடக்கூடியது, கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்சி நடக்கூடியதற்கும்.

(vi) கரும்பு தினுசுகளை நஞ்சை, தோட்டக்கால், புஞ்சை நிலங் களிலும் மானுமாரியாக பயிரிடல். கரும்பு நன்றாய் வளரக்கூடிய காலம் ஜுலைக்கு பிற்பாடுதான், பெப்ரவரி மாதத்தில் நடவேண்டியதை எப்ரல் மாதத்தில் நடுகிறதினால் ராசி குறையாததினாலும் ஈரம் காக்க போதுமான மழை பிப்ரவரி முதல் எப்ராலுக்குள் பெய்கிறதினாலும் இச் சோதனை கரும்பு மானுமாரியாக வளருமாவென்பதை பார்க்க துவக்கப் பட்டிருக்கிறது.

(vii) வெல்லம் அதிகம் தரக்கூடிய தினுசுகளை ஒப்பிட்டுப் பார்த்தல்.

(viii) நஞ்சையிலும் இரவை புஞ்சையிலும் புனஸாப்பயிருக்குப் பிறகு நன்றாய் வளரக்கூடிய கரும்புகளை நட்டுப்பார்த்தல்.

(ix) சோளத்திற்கும் கரும்புக்கும் ஒட்டு சேர்த்த கரும்புகளை நட்டு சோதனை செய்தல்.

(b) எரு சோதனை.—(i) கரும்புக்குத் தேவையான உணவுபொருள்களை கவனித்தல், தொழு எருவுடனும் தொழு எருவில்லாமல் நைட்ரஜன், பாஸ்பாரிக்காஸிட், பொட்டாஷ் இவைகளை தனியாகவும் சேர்த்தும் போட்டுப் பார்த்தல்.

(ii) நன்ருய் வளரக்கூடிய கரும்புகளுக்கு அதிக நைட்ரஜன் சத்து எரு வைத்து பார்த்து, எவ்வளவு நைட்ரஜன் சத்து கொடுக்கலாமென்பதை சோதனை செய்தல்.

(iii) அதிக எருவிட்ட கரும்பின் கரணைகளையும், அதிக எரு விடாத கரும்பின் கரணைகளையும் நட்டு பார்த்தல். ஒரேவித ராசி கிடைக்க நன்ருய் எருவிட்ட கரும்பின் கரணைகளுக்கு எரு அதிகம் கொடுக்கவேண்டியதில்லை யென்பது தெரிகிறது. இது உண்மைதாஞவென்று பார்க்க இச்சோதனை துவக்கப்பட்டிருக்கிறது.

(i) சாகுபடிமுறை சோதனைகள்.—(e) அதிக கருணைகள் நட்டால் அதிக ராசி கிடைக்குமா.

(ii) கரும்பு சாயாமலிருக்க அதிக ஆழத்தில் நடுகிறது நல்லதா அல்லது சாதாரண ஆழத்தில் நடுவது நல்லதா என்று நட்டுப்பார்த்தல். இவைகளில் எதிஞல் ராசி அதிகம் கிடைக்கிறதென்பதை கவனித்தல்.

(iii) மாதந்தோரும் நடுதல்.—கரும்பு தினுசுகளை ஒவ்வொரு மாதத்திலும் நட்டுப் பார்த்தல். கோயம்புத்தூர், மதுரை ஜில்லாக்களில் இரண்டு பட்டம் நடவாகிறது போல் இங்கும் நடமுடியுமா வென்பதை கவனிக்க இச்சோதனை.

(iv) கஞ்சம், விசாகப்பட்டணம் ஜில்லாக்களில் கையாண்டுவரும் வழக்கப்படி கரணைகளை முளைக்கவைத்து நாத்தாக நடுகிறது போல் இங்கும் நடமுடியுமாவென்பதைப் பார்க்க கரணைகளை முளைக்கவைத்து நாத்தையும் முளைக்காத கரணைகளையும் நட்டும் ஒப்பிட்டு பார்த்தல்.

(v) காலத்தில் தண்ணீர் பாய்ச்சுவதிஞல் கரும்பு முத்துகிறதையும், வெல்லத்தின் குணத்தையும் கவனித்தல்.

(vi) தற்காலம் முட்டுக்கட்டுவதைவிட சிலவு குறைவாயும் அதே வித பலனைத்தரக்கூடியதாயுமுள்ள விதத்தைக் கண்டுபிடித்தல்.

(vii) கரும்பு அறுவடையான பிறகு தூர்களை அழிக்காமல் விட்டு எந்த தினுசு கரும்பு நன்ருய் வருகிறதென்பதை கவனித்தல். தூர்களை மருசாலில் வளரவிடுவதிஞல் கிடைக்ககூடிய லாபத்தை கவனித்தல். ஒரு காலத்தில் அங்ஙனம் செய்வது லாபகரமில்லையென்பது நினைக்கப்பட்டது. கோயம்புத்தூர் கரும்புகள் லாபம் தரக்கூடுமென்று நினைக்க விலை குறைந்த இக்காலத்தில் இடம் தருகிறது.

III. கேள்வரகு.—சுத்தமான கேப்பை தினுசுகளை பிரித்து எடுப்பதுடன் நாட்டுகேப்பையுடன் ஒப்பிட்டுப் பார்த்தல்.

IV. இதரப் பயிர்கள்.—(a) தெனை, காண்டி தினுசுகளில் வேலை நடக்கின்றது. அதிக ராசி தரக்கூடியது எதுவென்று கண்டுபிடிப்பதற்காக அனேக தினுசுகள் பயிரிடப்படுகின்றன.

(b) எண்ணை தரக்கூடிய பயிர்கள்.—எள்ளு, கொட்டைமுத்து, நிலக்கடலை இவைகளெல்லாம் பயிரிடப்படுகின்றன. கோயம்புத்தூர் எண்ணை நிபுணரிடமிருந்து அனேக தினுசுகள் வரவழித்து பயிரிட்டு நல்லராசி தரக்கூடியது எவையென்று சோதனை செய்யப்படுகின்றன.

(c) மற்றவைகள்.—புகையிலை, மிளகாய், சாயபீன், கடலை, வாழை இவைகளிலும் சோதனை செய்யப்படுகின்றது.

(d) மாட்டுத் தீவனப் பயிர்களும், பசுந்தாள் பயிர்களும்.—மாட்டுத் தீவனத்திற்காக சோளமும், பசுந்தாளுக்காக சணலும் பில்லிப் பசராவும் பயிரிடப்படுகின்றன.

(e) பழ மரங்கள், மற்றமரங்கள்.—எலுமிச்சையைச் சேர்ந்த பல தினுசுகளும், மற்ற பழ மரங்களும் மற்றயிடங்களிலிருந்து கொண்டுவந்து நட்டு பரீக்ஷையாகின்றன.

(f) காய்கரி தினுசுகள்.—நாட்டு தினுசும் மற்ற ஊர் தினுசுகளும் பயிரிடப்படுகின்றன. ஒட்டுச்சேர்த்து புதிய உபயோகமுள்ள தினுசுகள் கிடைக்கக்கூடுமாவென்று பார்க்கப்படுகின்றது.

(g) புஷ்பச் செடிகள்.—ரோஸ், ஜாதி புஷ்பம், ஜவந்தி இவைகளைப் போல பல தினுசுகள் பயிரிட்டு விற்பனைக்கு கொடுக்கப்படுகிறது.

V. இதர கைத்தொழில்கள்.—பட்டுப்பூச்சி வளர்த்தல், தேனீ வளர்த்தல், கோழி வளர்த்தலும் நடக்கின்றது. சுத்தமான தேன் எடுக்கப்படுகின்றது. பட்டுநூல் நூற்கப்படுகின்றது. லெக்கார்ன், ரோட் ஐலன்ட் கோழிகள் வளர்த்து முட்டைகள் விலைக்குக் கொடுக்கப்படுகின்றன.

ஆராய்ச்சிப் பண்ணை, மாரத்தேரு.

இப்பண்ணை 1925-ம் ஞு ஜூலைமீ ஏற்பட்டது. மேல கோதாவரி ஜில்லா, தனுகு தாலூகா, நெக்கிப்புடி கிராமத்திலுள்ளது. நரசபூர் வாய்காலில் மாரத்தேரு லாக்கின் $\frac{1}{4}$ மைல் தூரத்திலிருக்கிறது. எம்.எஸ்.எம். ரெயில்வேயிலுள்ள நிடடவோல் ஸ்டேஷனிலிருந்து மோட்டார் வழியாகவும், நரசபூர் வாய்க்கால் வழியாகவும் போய்ச் சேரலாம். 21 மைல் தூரமிருக்கிறது. இப்பண்ணை 50 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ளது.

பண்ணையில் பார்க்ககூடியவைகள்.

மே. ஜூன்.—சேத்திலும், புழுதியிலும் தயாரித்த நெல் நாத்தங்கால்களில் விதை தெளித்தல், பசுந்தாள் பயிர்கள், மாட்டுணவுக்காக பயிரிட்டிருக்கும் பசும்பயிர்கள், நஞ்சையில் மட்டப்பலகை உபயோகித்து சமன் படுத்தல்.

ஜூலை.—நாத்துவிடுதல், சிக்கன நடவு, மட்டப்பலகை நஞ்சையில் உபயோகித்தல்.

ஆகஸ்ட்.—நாள்குறைந்த நெல் தினுசுகள், குருவையும் சொர்ணுவும் கதிராயிருப்பது, விதை முதலுக்கான நஞ்சைகளில் கலப்புக் கதிர் எடுத்தல், வரப்புகளில் பயிர், உளுந்து போடுதல்.

செப்டம்பர்.—கரிக சன்னுவரி நெல்கதிர் வாங்குதல், கலப்பு கதிர் பொருக்குதல், பயர் தினுசுகள் வரப்பில் தெளித்தல்.

அக்டோபர்.—பாசங்கி, ராசங்கி, அக்குலு நெல் பயிர்கள் கதிரிலிருப்பது, கலப்புக் கதிர் எடுத்தல், வரப்புகளில் பயிரிட்டிருக்கும் பயர் தினுசுகள்.

நவம்பர்.—கிருஷ்ணுக்குலு, கோனுமணி, ஜி.இ.பி. 24, அட்ராகரடா, குசுமா, வங்கிசன்னம் இந்த நெல் தினுசுகள் பயிராயிருத்தல், கலப்புக் கதிர் எடுத்தல், வரப்புகளில் பயர் தினுசுகள்.

டிசம்பர்.—நெல் பயிரின் ஊடே பயர் விதைக்காக தெளித்திருப்பது.

ஜனவரி.—இரண்டாம்போக நெல் சிக்கனமாய் நடுதல், ஷி பயிரில் உழுதுமடிக்க பசுந்தாள் தயாராயிருத்தல், மாட்டுத் தீவனத்துக்காக சணல் பயிர், பசுந்தீவனத்துக்காக வரப்புகளில் பயர் தினுசுகள், புழுதியில் தெளித்த நெல் நாத்தால் டால்வா அல்லது இரண்டாம்போக நெல் நடுதல்.

பிப்ரவரி.—இரண்டாம்போக நெல் பயிருக்குள்ள பசுந்தாள் எரு, நெல் பயிரில் ஊடே தெளித்திருக்கும் மாட்டு தீவனத்திற்குள்ள சணல் பயிர், நெல் நாத்து சிக்கனமாய் நடுதல், கரும்பு அருவடை, ஆலையில் கருப்பஞ்சார் பிழிதல், வெல்லம் செய்தல், சின்துவாகி என்னும் அடுப்பில் சார் காய்ச்சல்.

மார்ச்.—பலவித பயிர்கள், வெங்காயம், கொட்டைமுத்து, கேள்வரகு, கரிகாய் தினுசுகள், இரண்டாம்போக நெல்லுக்கு பதிலாக பயிரிட்டிருப்பது. கரும்பு அருவடை செய்து வெல்லம் காய்ச்சல்.

ஏப்ரல்.—இரண்டாம்போக நெல் பயிராயிருப்பது, கோடையில் மாட்டுக்கு தீவனத்திற்காக பயிரிட்டிருக்கும் பசும்பயிர்கள், பைரு பயிர்கள்.

குறிப்பு.—நூதன முறைப்படி கரும்பு, வாழை சாகுபடி செய்தல், ஆர்க் மீடியன் என்னும் தண்ணீர் இறைக்கும் கருவி வேலை செய்தல், மாட்டுத்தீவனத்துக்குள்ள சணல் சோளத் தட்டை இவைகளை சாப்கட்டரால் துண்டித்தல், காலம் தவராமல் மாட்டுக்குத் தீனிவைத்தல், அதிக ஆழமில்லாத மாட்டுக்கொட்டைகளில் எரு சேகரஞ் செய்தல் இவைகளையெல்லாம் எக்காலத்திலும் பார்க்கலாம்.

பரிசோதனையிலிருந்துவரும் விஷயங்கள்.

1. சுத்தமான விதை பொருக்குவதிலிருந்து விளைவை அதிகப்படுத்துவது.

2. ஒட்டுகட்டுவதிலிருந்து ராசியை அதிகப்படுத்துவது.

3. பிசானம் அல்லது தால்வா பயிர்களை கொஞ்சம் முன்னதாகவே தட்டுப்பார்த்தல்.

4. **உரச்சோதனைகள்.**—

(a) பயிர்களுக்கு லாபகரமான வழியில் எப்படி உரம் போடலாமென்று கவனிப்பது.

(b) உரங்களைப்பற்றிய சோதனைகள்.

5. நெல் சாகுபடியின் பின் மற்ற பயிர்களைப்போட்டு குடியானவருக்கு அதிக லாபம் கிடைக்கச்செய்வது—

(a) கம்போடியா பருத்தி.

(b) கரும்பு.

(c) நெல்லுக்குப் பின் குச்சிக்கரும்பு, பெருங்கரும்பு திஞுசுகள் சாகுபடி செய்வதினுல் வரும் லாப நஷ்டங்கள்.

(d) வாழை. (1) நெல்லுக்குப் பிறகு வாழை போடுவதினுல் வரும் லாப நஷ்டங்கள்.

(2) வாழையடியில் வழக்கத்திற்கு மாறுக இரண்டு கன்றுகளை விட்டு வருவாயை அதிகப்படுத்தல்.

6. பலவகைப்பட்ட சோதனைகள்—

முதல் போகத்தில் ஒரே திஞுசு நெல்லையும் ஊடு பயிரையும் போட்டு ஒப்பிட்டுப்பார்த்தல்.

7. நெல் சாகுபடியை குறைந்த சிலவில் செய்வதின் மூலம் லாபத்தை அடைதல்.

8. தண்டு பூச்சியை அடக்குவதற்கு வழிகளை கண்டுபிடித்தல்.

9. **மாரத்தேருவில் உத்கிருஷ்டப்படுத்தப்பட்ட பொருக்கு நெல் திஞுசுகள்.**—கோதாவரி, கிருஷ்ணு ஜில்லா நெல் பயிரிடும் சம்சாரிகளுக்குத் தாராளமாய் வினியோகம் செய்வதற்காக விடுவிக்கப்பட்ட சிலாக்கியமான பொறுக்கு நெல் விதைகளின் காலம், மாசூல் முதலிய விவரங்களைப் பற்றிய சிறு குறிப்புகள் கீழே வரையப்படுகின்றன. அவரவர்களுடைய தேச காலவர்த்தமானங்களுக்கேற்றவாறு தாங்களே நிஷ்கரித்துக்கொள்ளும்பொருட்டு இக்குறிப்புகள் ஷி ஜில்லா குடித்தனக்காரர்களுடைய உபயோகத்திற்காக இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பொறுக்கு விதை நம்பர்.	விதைத்தது முதல் அறுவடை வரை நாட்கள்	நாட்டுநெல்லைவிட அதிகரிக்கப்பட்ட மாசூலும் இதர விபரங்களும்.
மாரத்தேரு 1	194	'அக்குள்ளு' விலிருந்து தனிப்பிக்கப்பட்டது. 100-க்கு 20 அதிகப் பலிதமுடையது. கோதாவரி ஜில்லா பாதியிலும் கிருஷ்ணு ஜில்லா பாகத்திலும் பயிராகின்றது. உவர் நிலம், சதுப்பு நீர்ப்பிடி நிலங்களுக்கு லாயக்கானது. எக்கர் 1-க்கு 2,800 முதல் 3,700 ராத்தல் மாசூல்.

பொறுக்கு விதை நம்பர்.	விதைத்தது முதல் அறுவடை வரை நாட்கள்.	நாட்டுநெல்லைவிட அதிகரிக்கப்பட்ட மாசூலும் இதர விபரங்களும்.
மாரத் தெரு 2	196	'அக்குள்ளு' விலிருந்து தனிப்பிக்கப்பட்டது. 100-க்கு 16 அதிகப் பலிதமுடையது. கோதாவரி கிருஷ்ணு ஜில்லா பாகங்களில் பயிராகின்றது. நல்ல செய்காலான பூமிகளுக் கேற்றது. எக்கர் 1-க்கு 2,800 முதல் 3,500 ராத்தல் மாசூல்.
௸ 3	167	'பஸங்கி' யிலிருந்து தனிப்படுத்தப்பட்டது. 100-க்கு 12 அதிகப் பலிதமுடையது. மேல் கோதாவரி, கீழ் கோதாவரி ஜில்லாக்களில் சாகுபடியாகின்றது. நல்ல உரக்காலான பூமிகளுக்கு லாயக்கானது. சாய்ந்து போவதில்லை. 3,500 முதல் 4,508 ராத்தல் எக்கர் 1-க்கு மாசூல் தரத்தக்கது.
௸ 4	172	'பஸங்கி' யிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 100-க்கு 9 அதிக மாசூல் தரத்தக்க பொறுக்கு நெல். சுமாரான பூமிகளுக்கேற்றது. தண்ணீர்த்தட்டு லேசாய் ஏற்பட்டாலும் தாங்கக் கூடியது. கீழ் மேல் கோதாவரி டெல்டாகளில் பயிராகின்றது. எக்கர் 1-க்கு 3,200 முதல் 3,800 ராத்தல் மாசூல்.
௸ 5	200	'கிருஷ்ணகாடுகலு' விலிருந்து பொறுக்கப்பட்டது. 100-க்கு 12 வீதம் அதிகப் பலிதமுடையது. மேல்கோதாவரி ஜில்லாவில் 5-ல் 2 பாகத்தில் பயிராகிறது. தக்க விலை தரத்தக்க பொடி நெல் தினுசு. எக்கர் 1-க்கு 2,800 முதல் 3,400 ராத்தல் மாசூல்.
௸ 6	208	'அட்ரகடா' விலிருந்து தனிப்படுத்தப்பட்டது. 100-க்கு 16 வீதம் அதிகப் பலிதமுடையது. கோதவரி தீரத்தின் இறுதி பாகத்திற்கேற்றது. எக்கர் 1-க்கு 2,800 முதல் 3,000 ராத்தல் மாசூல்.
௸ 7	220	'கட்டிகுஸுமா' விலிருந்து பொறுக்கப்பட்டது. 100-க்கு 16 வீதம் அதிக மாசூல் தரத்தக்கது. கிருஷ்ணு டெல்டா பாதியிலும் குண்டூர் ஜில்லா பாகங்களிலும் பயிராகின்றது. சாய்ந்து போவதில்லை. எக்கர் 1-க்கு 3,400 முதல் 3,700 ராத்தல் மாசூல்.
௸ 8	212	'வங்கிஸன்னம்' தினுசிலிருந்து தனிப்பிக்கப்பட்டது. 100-க்கு 10 வீதம் அதிகப் பலிதமுடையது. கிருஷ்ணு டெல்டாவில் விளைவாகிற வங்கிஸன்னம் நெல்லில் 5-ல் 1 பங்கு இந்த 8-ம் நம்பர். குண்டூர் ஜில்லா பாகங்களிலும் பயிராகிறது. டெல்டாவின் மேட்டுத் தட்டுகளில் நல்ல வடிகால் வசதியுள்ள பூமிகளுக்கு ஏற்றது. எக்கர் 1-க்கு 3,200 முதல் 3,400 ராத்தல் மாசூல்.

மேற்சொன்ன ஜாப்தாவிற்கு சீக்கிரத்தில் உபரி நான்கு தினுசு பொறுக்கு விதைகள் சேர்க்கப்படலாம் என்று உத்தேசிக்கப்படுகிது.

முதலாவது.—கரிகஸன்னவரி 925 என்ற பொறுக்கு விதை கோதாவரி டெல்டாவில் சாமான்னியமாய் இரண்டாம்போகம் பயிர் செய்யப்பட்ட கரிகஸன்னவரியிலிருந்து பொறுக்கப்பட்டது.

இரண்டாவது.—மாரத்தேரு 5 நம்பரைக் காட்டிலும் சற்று சிறு ராசியான கிருஷ்ணகாடுகலு 1,749 என்பது.

மூன்ருவது.—கிருஷ்ணு ஜில்லாவின் பெத்த அட்ரகடாவிலிருந்து பொறுக்கப்பட்ட அட்ரகடா 4,717 என்பது.

நான்காவது.—கிருஷ்ணு ஜில்லாவின் கொளுமணியிலிருந்து பொறுக்கப்பட்ட கொளுமணி 3,414 என்பது.

மேல் விவரிக்கப்பட்ட பொறுக்கு விதை தினுசுகள் பூராவும் வெள்ளே சுரிசிரகங்கள். மேலும் தக்க மாசூல் கொடுக்கப்பட்டவைகள் என்று பரீக்ஷிக்கப்பட்டவை.

பண்ணையைப் பார்வையிட சகலரும் ஸ்வாகதம்.

நெல் ஆராய்ச்சிப்பண்ணே, பர்ஹாம்பூர்.

இந்தப் பண்ணே 1932-ம் வருஷம் துவக்கப்பட்டது. இது கஞ்சம் ஜில்லா, பர்ஹாம்பூர் தாலூகாவில் மதராஸ் ராஜதானியிலிருந்து புதிதாய் ஏற்படுத்தப்பட்ட ஒரிஸ்ஸா மாகாணத்திற்கு ஜாரி செய்யப்பட்ட பாகத்தில், பர்ஹாம்பூரிலிருந்து முறையே அஸ்காவுக்கும், திகுபாண்டுக்கும் போகின்ற ரஸ்தாக்களின் சந்திப்பில் சங்கரபூர் கிராமத்தில் இருக்கிறது. இந்த பண்ணே 33 எக்கர் விஸ்தீர்ணம் உள்ளது.

என்னென்ன எப்போது பார்ப்பது.

மே.—முதல் உழவுக்கு கூப்பர் இரும்புக் கலப்பை உபயோகித்தல்.

ஜூன்-ஜூலே.—சணப்பும், தக்கைப்பூண்டும் (பசுந்தாள் உரப்பயிர்கள்) விதைத்தல்; நாத்து கலக்கவிடுதல்; நிலங்களேத் தயார் செய்து விதை விதைத்தல்.

ஆகஸ்ட்.—பசுந்தாள் உரங்களே உழுது சேற்றில் மடித்தல், லேசான பூமிகளில், கூப்பர் இரும்புக் கலப்பைகளால் சேர் கலக்குதல்; சிக்கன நாற்று நடுகை.

செப்டம்பர்.—மழை பிந்தினல் சிக்கன நடுகை; நெல் பயிர்களே பிடுங்குதல்.

அக்டோபர்-நவம்பர்.—எல்லா நெல் தினுசுகளும் பூத்திருத்தல்; கலவீனே அப்புறப்படுத்தல்.

டிசம்பர்.—தக்காளி, நோல்கோல் முதலிய சீமை காய்கறி தினுசுகளே நஞ்சையில் பயிர் செய்தல்; நிலங்களே உழுது பசுந்தாள் உரத்திற்காக பயிறு தினுசுகளுடன் அவுரி விதையை கலந்து விதைத்தல்.

ஜனவரி முதல் ஏப்ரல் வரை.—நாற்றங்கால்களும், கைத்தெளி வயல்களும் தயார் செய்தல். அவுரி, கொளிஞ்சி முதலிய பசுந்தாள் உரப் பயிர்கள் வளர்ந்துவரும்.

ஆராய்ச்சி வேலேகள்.—(a) அந்தப் பிராந்தியத்திலிருக்கிற பலவேறு தினுசு நெற்களிலிருந்து பொறுக்கி யெடுக்கப்பட்ட “சுத்தம் பண்ணப்பட்ட” ராசி நெல் பொறுக்கு விதைகளே விர்த்தி செய்வது.

(b) அந்தப் பிராந்தியத்து நெல் தினுசுகளில் காணப்படும் குறைகளே விதைகள் தேர்ந்தெடுத்தலினுலும் ஒட்டு முறைகளினுலும் விருத்தி செய்தல்.

(c) நெல்பயிர் உண்டாகும் சாதாரண மாறுதல்களின் குண விசேஷங்களேயும் இயற்கை குணதோஷங்கள் எவ்வளவுதூரம் மறுபயிரில் மாறுதல் அடைகின்றன என்னும் விஷயத்தைப்பற்றியும் ஆராய்ச்சி செய்தல்.

(d) **நெல்சாகுபடி முறைகளில் ஆராய்ச்சியாவன :—**

(i) எருவுடனும் எருவிடாமலும் செடிக்குச் செடி இருக்கவேண்டிய சரியான இடைவெளி.

(ii) நாற்றின் வயதிற்கும், மாசூலுக்கும் உள்ள சம்பந்தம்.

(iii) விதைத்தலுக்கும், நாற்றுவிட்டு நடுதலுக்கும் உள்ள தாரதம்யம்.

(iv) கைத்தெளி விதைப்பதற்குப் போதுமான நெல்விதை அளவு.

(e) **உரப் பரிசோதனேகளாவன—**

(i) சுண்ணும்பினுல் மாசூலுக்கு ஏற்படும் ஏற்றத்தாழ்வு.

(ii) பசுந்தாள் உரப்பயிர்களே விசேஷ லாபம்தரக்கூடிய முறைகளில் எப்படி உபயோகிப்பது.

(iii) பசுந்தாள் உரத்தோடு செயற்கை எருக்களை சேர்த்து உபயோகித்தலினால் ஏற்படக்கூடிய குணாகுணங்கள் ; செயற்கை எருக்களை எவ்வளவு சேர்ப்பது ; எப்படி சேர்ப்பது என்பதும்.

(iv) நாற்றங்காலில் எருவிடுதலுக்கும் நட்ட நிலங்களில் எருவிடுதலுக்கும் உள்ள தாரதம்யங்கள்.

(v) அம்மோனியம் ஸல்பேட், ஸோடியம் நைட்ரேட் இவைகளைப் தனிமையிலும் பலவேறான சேர்க்கையிலும் பரிசோதிப்பது.

பண்ணையைப் பார்வையிட எல்லாரையும் அபேட்சிக்கிறோம்.

பி. ராமய்யா,
விவசாய டிப்டி டைரெக்டர், 1-வது சர்க்கிள்.

3 (b) 2-வது சர்க்கில்.

இந்த சர்க்கிளில் கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் ஜில்லாக்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த சர்க்கில் ஒரு விவசாய டிப்டி டைரக்டர் அதிகாரத்திற்குட்பட்டது. இவருக்கு உதவியாய் ஒரு விவசாய அஸிஸ்டெண்டு டைரெக்டர் நெல்லூரில் இருக்கிறார். அவருக்கு எல்லை குண்டூர், நெல்லூர் ஜில்லாக்களாகும்.

எ. பிரசாரம்.

2. விவசாயத்தில் சீர்திருத்தப்பட்ட முறைகளை போதிப்பதற்காக அநேக தாலூகாக்களில் விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்கள் வேலை செய்கிறார்கள். 8 முதல் 10 வரை கிராமங்கள் கூடியுள்ள கூட்டங்களில் வேலை தீவிரமாக நடத்துவதால் 40 முதல் 50 கிராமங்கள் வரை நன்மையடைகின்றன. இக்கிராமங்களில் வேலை நடந்தேறிய பிறகு புது கிராமங்களில் வேலை ஆரம்பிக்கப்படும். விவசாய டிமான்ஸ்ட்ரேடர்களின் கடமை என்னவெனில் இக்கிராமங்களுக்குச் சென்று புதிய விவசாய சம்மந்தப்பட்ட முறைகளைப் போதித்து விவசாயிகளுக்கு உதவி செய்வது.

தற்சமயம் கீழ்கண்ட இடங்களில் விவசாய டிமான்ஸ்ட்ரேடர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு டிப்போ உண்டு.

கிருஷ்ணா ஜில்லா.

தாலூகா.	டிமான்ஸ்ட்ரேடர் இருப்பிடம்.	வேலை செய்யுமிடங்கள்.	டிமான்ஸ்ட்ரேடர் இல்லாத இடங்கள்.
1 பந்தர் ..	.. மசூலிபட்டணம் ..	சென்னூர், பண்டுமல்லி, வெட்லமண்டை, கூடூர், மசூலிபட்டணம், பெடனா, நந்தமூர், முஞ்சுலூர்.	
2 குடிவாடா	.. குடிவாடா ..	குடிவாடா, சித்தாந்தம் அக்ரஹாரம், குட்லவல்லேறு, அட்டடா, பாமரு, வெந்தரபிரகடா, நந்திவாடா, பெடப்பலப்பரு, முதினபள்ளி.	டிவி, கைகலூர் தாலூகாக்கள், திருவூர், நுஸ்விட் டிவிஷன்கள்.
3 கண்ணவரம்	.. கண்ணவரம் ..	கண்ணவரம், முஸ்டபடா, விரவள்ளி, கணுமோல், நந்தமூர், வுய்யூர், முடுனூரு, கபிலேஸ்வரபுரம்.	..
4 பெஜவாடா	.. பெஜவாடா ..	பெஜவாடா, பொரங்கி, கன்கிபடு, ராமவரபாடு, கொல்லபுடி, கொண்டபள்ளி, சண்ணும்படு, மைலாவரம்.	..

தாலூகா.	டிமான்ஸ்ட்ரேடர் இருப்பிடம்.	வேலை செய்யுமிடங்கள்.	டிமான்ஸ்ட்ரேடர் இல்லாத இடங்கள்.
கிருஷ்ணு ஜில்லா—தொடர்ச்சி.			
5 நந்திகாமா ..	நந்திகாமா ..	நந்திகாமா, முப்பலா கொனகஞ்சி, கஞ்சிக சேர்வ, கஞ்சல, மொக்கபேட்டை, ஜகய்யாபேட்டை, நடிகூடம், கந்திராயி, விரல்லபடு.	..
6 அவணிகட்டா ..	செல்லபள்ளி ..	செல்லபள்ளி, அவணிகட்டா, கோடூர், நாகையலங்கா, கண்டசால், ஸ்ரீ ககுலம், நிடுமொலு, பட்லபெனுமரு, மொவ்வு, மங்கலாபுரம்.	..
குண்டூர் ஜில்லா.			
1 குண்டூர் ..	குண்டூர்	குண்டூர், பெடகாகணி, மங்களகிரி, பெடவட்லபுடி, வெஜண்ட்ல, பேரசேர்ல, எணமடல, வாமெல்ல.	சட்டணப்பள்ளி நரசராவ்பேட்டை.
2 தென்னலி ..	தென்னலி ..	தென்னலி, சில்லுவூர், துக்கிரால, சங்கம் ஜகட்லமுடி, செப்புரோல், ட்சுண்டுரு, கொள்ளிப்பாரா, கொள்ளூர்.	
3 பாப்பட்லா ..	பாப்பட்லா ..	பாப்பட்லா, மாமில்லபள்ளி, முனிபள்ளி, நிதுபுரோல், அபிகட்ல, ஜம்முவபாளையம், சிராலா, பார்சூர்.	..
4 பலநாடு ..	குருசலம்	குருசலம், ரெண்டசிண்டலா, மச்சீர்லா, துர்கி, அதிகொப்புல, காரம்புடி, தச்சிபள்ளி, பிராமணபள்ளி, பிடுகுரல்ல.	..
5 விணுகொண்டா.	விணுகொண்டா ..	விணுகொண்டா, இனவொலு, முக்கெல்லாபடு, பெடக்கணசேலா, சாவல்யாபுரம், கொச்சேர்லா, இபுரு, வெள்ளத்தூரு.	..
6 ரேபள்ளி ..	ரேபள்ளி ..	ரேபள்ளி, உல்லிபாலெம், பெல்லம்வன்பாலெம், நெகரம், ஒலேரு, பல்லிகோனெ, வெள்ளதூர்.	..
7 ஒங்கோல் ..	ஒங்கோல்	நிஷ்கரிஷிக்கப்படவில்லை.	..
நெல்லூர் ஜில்லா.			
1 நெல்லூர் ..	நெல்லூர் ..	நெல்லூர், ஜகதேவிபேட்டை, மைபாட், நருகுரு, தொட்டபள்ளி, கூடூர், காடுபள்ளி, பிரமதேவம், காகுதூரு, சர்வபள்ளி, அமன்சேர்ல்.	கணிகிரி, உடையகிரி, போளூர் தாலூகாக்கள், தரிசி, பொடிலி, வெங்கிடகிரி டிவிஷன்கள்.
2 கூடூர்	நாயடுபேட்டை ..	நாயுடுபேட்டை, மர்லபள்ளி, ஒஜிலி, எகொள்ளு, மேலுபக்கம், சூளூர், பேட்டை, கூடூர், கோட்டை, வக்காடு, கடிவாடு.	
3 ஆத்மகூர் ..	ஆத்மகூர் ..	ஆத்மகூர், வாவிலி, கார்டம்பாடு, தேவராயபள்ளி, வீரூர், செஜெர்லா, நாவூர், ஆனந்தசாகரம், பொங்கூர், ராவூர்.	..

தாலூகா.	டிமான்ஸ்ட்ரேடர் இருப்பிடம்.	வேலை செய்யும் மிடங்கள்,	டிமான்ஸ்ட்ரேர் இல்லாத இடங்கள்.
	நெல்லூர் ஜில்லா—தொடரச்சி.		
4 காவாலி ..	காவாலி	காவாலி, தல்லபாலம், முங்கமூர், பித்ரகுண்டா, ஜலாதாங்கி சினாக்ராக, காளிகிரி அடிமுத்துபுரம், கோட்டபள்ளி, பிரமமனக்ராக.	..
5 கந்துகூர் ..	கந்துகூர் ..	கந்துகூர், ஒலவபாடு, சிங்கராயகொண்டா, போகூர், பாலக்குரு, பொன்னலூர், கூட்லூர், மேடு, ராமையாபட்டணம், பெத்தபவானி.	..
6 கோவூர் ..	நெல்லூர் ..	கோவூர், அல்லூர், பூச்சிரெட்டிபாளையம், சொங்கசேர்ல, தாமரமடுகு, தண்டிகொண்டான், கந்தவரம், சங்கம், வேர்கூர், விதவலூர்.	..

பலவிதமாகூல் சம்மந்தமாக விவசாய டிபார்ட்மெண்டாரால் அபிவிருத்தி செய்யப்பட்ட அநேக விதைதினுசுகளும், மற்றும் விவசாய சம்பந்தமான சாமான்களுக்கும் மேல்கண்ட இடங்களில் விலைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. டிபார்ட்மெண்ட் பிரசுரங்களும் இங்கு கிடைக்கும். இருப்பிலிருக்கும் சாமான்களின் ஜாபிதாவும், அவைகளின் விலையும் ஆங்காங்குள்ள உத்தியோகஸ்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆராய்ச்சி பண்ணைகளில் அபிவிருத்தி செய்யப்பட்ட நெல், கரும்பு, ஜொன்னு, ராகி, வேர்க்கடலை, மிளகாய், புகையிலை, பருத்தி முதலியவைகளை சோதனை செய்து, அதிகப்படுத்தி விவசாயிகளுக்கு கொடுக்கும் வேலை நடந்துவருகிறது. முதலில் சமுசாரியின் நிலத்திலேயே உள்நாட்டு தினுசுகளுடன் இவைகளை சோதனை செய்து, லாபகரமானவைகளை அதிகப்படுத்தப்படும். விதைகள் டிப்போக்களின் மூலமாகவும், விதைகளை சுத்தமாக உண்டாக்குவதாக ஒப்புக்கொண்ட சமுசாரிகளின் மூலமாகவும் கொடுக்கப்படும். நெல்லில் கொனுமணி, வங்கிசன்னம், அட்ரகடா இன்னும் சில தினுசுகளும் சோதனையிலிருக்கின்றன. யம்.டி.யு. 8, யம்.டி.யு. 7, ஜி.இ.பி. 24 முதலிய நெல் தினுசுகளை எராளமாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. கரும்பில் சி.ஒ. 213, 243, 281, பி.ஒ.ஜே. 2,878 முதலிய தினுசுகள் சிபார்சு செய்யப்படுகின்றன. பருத்தி, புகையிலை, ஜொன்னு, ராகி, மிளகாய் முதலியவைகளில் நல்ல வர்க்கங்கள் சோதனையிலிருக்கின்றன.

கூப்பர் கலப்பைகள், நெ. 11, 25, 26, கிர்லோஸ்கர் குர்ஜார் கலப்பைகள் ரிட்ஜ் கலப்பைகள் கொத்துக் கருவிகள், கமலை வண்டிகள், ஆர்கிமீடியன் ஸ்குரு பெர்சியன் சக்கரம் முதலியவைகளின் உபயோகத்தைப் பற்றி ஆலோசனை கூறப்படும். வேண்டும்போது அவைகளை வேலைசெய்து காண்பிக்கப்படும்.

சாகுபடி முறைகளில் நெல் புகையிலை முதலியவைகளுக்கு நாத்தங்காலில் குறைந்த விதை விதைத்தல், கரும்பு, பழச்செடிகளை விலாசமாக நடுதல். மண்ணில் ஈரத்தை பாதுகாப்பதற்கு எச்.யம். குண்டக்கா, பிளாநெட் ஜூனியர் ஹோ முதலியவைகளை உபயோகித்தல், மக்கார்மிக் டீயரிங் கல்டிவேடர்ரை உபயோகித்தல் முதலியவைகளை சொல்லப்படும்.

நெற்பயிருக்கும் பழத்தோட்டங்களுக்கும் பசுந்தாள் உரமிடலாம். பசுந்தாளுடன் எலும்புத்தூள் சேர்த்து நெற்பயிருக்கும் பழத்தோட்டங்களுக்கும் உரமிடலாம். பிண்ணாக்கும், சீமை உரங்களும் கரும்புக்கு வைக்கலாம்.

சமுசாரிகளுக்கு மாட்டு உரத்தை சரியான வழியில் சேகரிப்பதன் அவசியத்தை சொல்லிக்கொடுக்கப்படுகிறது. பைர், ஹூஸ்பாக்ஸ் டிரையர்த்தமுதலிய விதமாக மாட்டின் சாணத்தையும் மூத்திரத்தையும் அநேக விதமாக சேகரிப்பது, உரக்குளிகளை பந்தல் போட்டுமூடுவது, உரக்கும்மல்களை மண்ணால் மூடுவது முதலியவைகளை காண்பிக்கப்படுகின்றன. முனிசிபல் குப்பை, மலம் முதலியவைகளை நல்ல உரமாக்குவதற்கும் சொல்லிக் கொடுக்கப்படும்.

பயிர்களில் உண்டாகும் பூச்சி, புழு, நோய் முதலியவைகளுக்கு சிகிச்சை செய்வதற்காக குண்டூரில் ஒரு அஸிஸ்டெண்ட் இருக்கிறார். வேண்டுமானால் இவர் ஸ்தலங்களை பார்வையிடுவார்.

ஆடுமாடு முதலியவைகளின் அபிவிருத்தியும் கவனிக்கப்படுகிறது. ஸ்தல ஸ்தாபனங்களையும் சமுசாரிகளையும் பொலிகாளைகளை வாங்கி வளர்க்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு சர்க்கார் நன்கொடையும் கொடுக்கும்படி ஏற்பாடாகியிருக்கிறது. கால்நடை ஆஸ்பத்திரிகளும் பொலிகாளைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு குண்டூர், ஒங்கோல், கொமாரிகா தொண்டபடு, பிட்ரகுண்ட, காவூர் (விநாயசரமம்), ஸ்ரீ காகுளம், சுண்ணம்படு முதலிய இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் பொலிகாளைகளிருக்கின்றன.

மாட்டுத் தீவனப்பயிர்களை பயிர் செய்வதும், சைலேஜ் செய்வதும் காண்பிக்கப்படுகின்றன. நல்லஜாதிக் கோழிகளையும் முட்டைகளையும் தருவித்து கொடுக்கப்படுகின்றன.

முக்கியமான திருவிழாக்களிலும், சந்தைகளிலும் காக்ஷிகளின் மூலமாகவும், படங்களின் மூலமாகவும் உபந்நியாசங்கள் நடைபெறுகின்றன.

விதைகள், உரங்கள், கலப்பைகள், ஆலைகள் வாங்குவதற்காக சர்க்காரால் கடன் கொடுக்கப்படுகிறது.

கூட்டுறவு இலாகா கூட்டுறவு சங்கங்களை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய உதவி புரிகிறது. பெஜ்வாடா, குண்டூர், நெல்லூரிலுள்ள டிப்டி ரெஜிஸ்ட்ராரிடமிருந்து விஷயங்களை அறிந்துகொள்ளலாம்.

கிணறுகள் வெட்டுவதற்கும், கிணறுகளில் குழாய் போடுவதற்கும் இஞ்சின்கள், தண்ணீர் இறைக்கும் பம்புகளைப்பற்றித் இஞ்சின் கரும்பாலை மற்றும் இதரவிவசாய இஞ்சின்களைபற்றி தெரிய விரும்புபவர்கள் பெஜ்வாடாவிலுள்ள கைத்தொழில் உதவி இஞ்சினீயரிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

கால்நடைகளுக்குண்டாகும் வியாதிகளை நிவர்த்திப்பதற்காக பெஜ்வாடா, நெல்லூர், குண்டூரிலுள்ள ஜில்லா வெடரினரி ஆபீசர்கள் மூலமாகவும் ஆஸ்பத்திரிகள் மூலமாகவும் அஸிஸ்டெண்டுகள் மூலமாகவும் உதவி செய்கிறார்கள்.

விவசாய டிமான்ஸ்ட்ரேடர்களின் டிப்போக்களில் கிடைக்கும் சாமான்களின் விபரம்.

விதைகள்—
(a) பில்லிபெசரா.
(b) தக்கைபூடு.
(c) வெம்பளி.
(d) சணப்பு.
(e) நெல் தினுசுகள்.

கருவிகள்—
(a) கூப்பர் கலப்பைகள்.
(b) மேல்கண்ட கலப்பைகளுக்கு கொழுமுனைகள்.
(c) எச்.யம். குண்டக்கா வகைகள்.
(d) மேல்கண்ட குண்டக்காகளுக்கு இரும்பு பாகங்கள்.

பி. ஆராய்ச்சி.

விவசாய ஆராய்ச்சிப்பண்ணை, குண்டூர்.

5. இந்தப் பண்ணை குண்டூரிலிருந்து அமராவதிக்குச் செல்லும் ரஸ்தாவில், குண்டூரிலிருந்து ஐந்துமைல் தூரத்தில் இருக்கிறது. இது 1922-ம் ஞூ மேமீ ஏற்படுத்தப்பட்டது. சுமார் 150 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு புஞ்சை நிலப் பண்ணையாகும். பருத்தி, புகையிலை, மிளகாய், சோளம் முதலிய தானியங்களை மேன்மையுறச் செய்யுமுறையில் இங்கு ஆராய்ச்சி

செய்யப்படுகிறது. தவிரவும் டெல்லி எருமைகளையும், ஒங்கோல் மாடுக ளையும் வளர்ப்பதற்காக சுமார் 150 எக்கர் புல் பண்ணையும் ஸ்தாபிக் கப்பட்டிருக்கிறது.

என்ன பார்க்கலாம்.	எப்பொழுது பார்க்கலாம்.
1 மேன்மையுள்ள இரும்பு கலப்பைகள்	வருட முழுவதும்.
2 கொருக்கலப்பைகளும், கொருவில் விதைப்பும்—	
(a) புனசம் அல்லது முதற்போகம்	ஜூன் - ஜூலை.
(b) பயிரு அல்லது பிற்போகம்	அக்டோபர் - நவம்பர்.
3 கரிப்பூட்டு, நோய்க்காக விதைத்தவசங்களில் துத்தம் கலக்கும் விதம்—	
(a) புனசம் அல்லது முதற்போகம்	ஜூன் - ஜூலை.
(b) பயிறு அல்லது பிற்போகம்	அக்டோபர் - நவம்பர்.
4 நாத்தங்கால் செப்பனிடும் முறையும், விதை விதைக் கும் முறையும்—	
மிளகாய்	ஜூலை மாதம் முற்பகுதி.
புகையிலை	ஆகஸ்ட் மாதம் முற்பகுதி.
5 புஞ்சைப்பயிர்களுக்குப் பப்படத்தால் களை முதலிய வெடுத்தல்.	ஜூலை - ஆகஸ்ட்.
6 கொருவுக்குப்பின் அக்கடியின் வழியாய் பருத்தி விதைத்தல்.	செப்டம்பர் முற்பகுதி.
7 நடுவதற்காக நிலத்தில் பாத்தி போடாமலும், நிலத்தைச் சமன் படுத்தலும்—	
மிளகாய்	செப்டம்பர்.
புகையிலை	அக்டோபர்.
8 பருத்தி, புகையிலை, மிளகாய் இவைகளுக்குச் சூனியர் ஹோவால் பயிரடித்தல்.	அக்டோபர் முதல் ஜனவரி வரையில்.
9 எச். எம். குண்டக்காவால் நிலக்கடலையெடுத்தல் ..	நவம்பர் - டிசம்பர்.
10 சுத்தமாய் பருத்தியெடுத்தல்	பிப்ரவரி - மார்ச்சு.
11 புகையிலை அறுத்துப் பாடஞ் செய்தல்	பிப்ரவரி, மார்ச்சு, எப்ரல்.
12 கோடைக்காலச் சாகுபடி—	
(a) இறக்கை இரும்புக்கலப்பைகளின் உழவு ..	டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி.
(b) நிலத்தின் களையை நீக்கவும், சுத்தமாய் வைக்கவும், அடிக்கடி குண்டகா உபயோகிக்கும் விதம்.	பிப்ரவரி, மார்ச்சு, எப்ரல்.
13 விதையைத் தேர்ந்தெடுத்தலும், பக்குவம் செய்தலும்.	அறுவடைக்கு பதினைந்து நாட்களுக்குமுன்.
14 தட்டை வெட்டும் கருவியையும், வெட்டும் முறையையும் மாட்டுகளுக்குப் போடும் வழியையும்.	வருஷம் பூராவும்.
15 மாட்டுரத்தைப் பக்குவம் செய்தலும், ஹூஸ்பாக்ஸ் முறையின் மாதிரியும்.	ஷெ
16 தழையை மக்கவடித்து குப்பையாக்கும் முறைகள் ..	ஷெ

6. ஆராய்ச்சி நடத்தப்படும் நோக்கங்கள் :—

(a) பயிரை வளர்த்தல், கலத்தல்.—பருத்தி, சோளம், மிளகாய் இவைகளினின்றும் தனிமுறைத் தேர்தலால் பொருத்தமானவைகள் உண் டுபண்ணல்.

(b) கம்போடியா பருத்தி, கரும்பு இவைகளைப் புஞ்சை நிலங்களில் பயிர் செய்தல்.

(c) பசுந்தாள் உரம், சூப்பர் பாஸ்பேட்டு உரங்களால் மிளகாய், புகையிலை, பனிவரகு, பருத்தி இவைகளில் உரப்பரீக்ஷை செய்தல்.

(d) மிளகாயில் விழும் [திரிப்பிஸ்] என்னும் சிறு பூச்சிகளைத் தடுக் கும் முறைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்தல்.

(e) மாடு வளர்த்தல்.—சுத்தமான டெல்லி எருமைகள், கலப்பு டெல்லி எருமைகள், ஒங்கோல் மாடுகள் இவைகள் மேன்மையான முறை யில் வளர்த்தல் ; தீனிபோடல் முதலியன.

கனவான்கள் இந்த ஆராய்ச்சிப் பண்ணையைப் பார்க்கலாம், ஆராய்ச்சி பண்ணையிலுள்ள உத்தியோகஸ்தர்கள் பண்ணையைச் சுற்றிலும் காண்பிப் பார்கள். டிசம்பர், ஜனவரி மாதங்கள் பார்ப்பதற்குத் தகுந்த சமயமாகும்.

டி. பூதவிதேய ராவ்,
விவசாய டிப்டி டைரக்ட

3 (c) 3-வது சர்க்கிள்.

மூன்றுவது சர்க்கிளில் பெல்லாரி, அனந்தபூர், கர்நூல், கடப்பை ஜில்லாக்கள் அடங்கியுள்ளன. பல்லாரியை பிரதம ஸ்தானமாக வைத்துக் கொண்டிருக்கும் ஒரு சர்க்கிள் ஆபீஸரின் ஆதிக்கத்திலிருக்கிறது. இவருக்கு உதவியாக பல்லாரியையும் கர்நூலையும் பிரதம ஸ்தானமாக உடைய இரண்டு அதிகாரிகள் இருக்கிருர்கள். பல்லாரியிலுள்ள உதவி ஆபீசர், பல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களிலும் கர்நூலிலிருக்கும் ஆபீஸர் கர்நூல், கட்ப்பை ஜில்லாக்களிலும் நடக்கும் பிரசார வேலைகளை முறையே மேல்பார்த்து வருகிருர்கள்.

(a) பிரசார வேலைகள்.—விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காக விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்கள் இந்த ஜில்லாக்களில் பிரயாணம் செய்துகொண்டிருக்கிருர்கள். ஆனல் படிப்பும் அனுபோகமுமுள்ள உத்தியோகஸ்தர்கள் கிடையாததினுல் அவர்கள் சங்கியை குறைவாயிருக்கிறது. இந்த சர்க்கிளில் டிமான்ஸ்ட்ரேட்டர்களில்லாத தாலூகாக்கள் இன்னும் 17 இருக்கின்றன. இந்த சர்க்கிளில் டிமான்ஸ்ட்ரேட்டர்கள் இருக்கிற இடமும் அவர்களின் பிரதம ஸ்தானமும் எல்லையும் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன :—

A. டிமான்ஸ்ட்ரேட்டர்கள் உள்ள தாலூகாக்கள்.

பெல்லாரி ஜில்லா.

தாலூகா.	இருப்பிடம்.	தீவிரமாய் வேலை செய்யப்படும் இடங்கள்.
பெல்லாரி	பெல்லாரி	பெல்லாரி, மோகா, குட்தினி, பேவினஹள்ளி.
ஹாஸ்பெட்	ஹாஸ்பெட்	கம்பளி, கமலாபுரம், குருகுப்பி, சித்வடிகி.
சிறுகுப்பா	சிறுகுப்பா	சிறுகுப்பா, கரூர், சிரிகேரி.
அதோனி	அதோனி	ராமபுரம், எம்மிகனூர், கௌதாலம், மாதரி.
ராயதரகு	ராயதரகு	ராயதுர்க்கம், ஹீரேஹாளு, பொம்மனஹள்ளி, வேப்ரால, ஹனுமாபுரம், கல்லுகோடு, ஜாஜுராம்ஹள்ளி, கணேகல்.

அனந்தப்பூர் ஜில்லா.

தாலூகா.	இருப்பிடம்.	வேலை நடக்கும் இடங்கள்.
கூட்டி	கூட்டி	கூட்டி, உரவகொண்டா, பம்மிடி, பகடூரி.
ஷெ	குண்டக்கல்	பல்லாரி ஜில்லா, ஆலூர் தாலூகாவைச் சேர்ந்த பந்தனஹாலும் குண்டக்கல்லே சுற்றிலும் முள்ள பருத்தி சம்பந்தமான வேலைகளும்.
கதிரி	கதிரி	கதிரி, ஒபலதேவர்செருவு, தாணகல்லு.
ஹிந்துப்பூர்	ஹிந்துப்பூர்	ஹிந்துப்பூர், பாலசமுத்திரம், கௌலூர், சோளஸமுத்திரம்.
அனந்தப்பூர்	அனந்தப்பூர் ..	அனந்தப்பூர், சிங்கனமலா, கல்லுமதி, ஆத்மகூர்.
தாத்பத்திரி	தாத்பத்திரி ..	தாத்பத்திரி, ராயல்செருவு, எர்ரகுண்டபல்லி, புத்தூர்.

கர்நூல் ஜில்லா.

தோன்	தோன்	தோன், பேதம்சொ்லா, வெலதுருத்தி, வெங்கிடபுரம்.
கர்நூல்	கர்நூல்	கர்நூல், கடிதமடுகு, கோடுமூர், நன்னூர், கால்வா, போபாலசிங்கவரம்.
நந்தியால்	நந்தியால்	நந்தியால், பன்யம், பூசலுர், நிம்மாபுரம் (மகாநந்தி), கொண்டஜுடூர்.
கம்பம்	கிட்டலூரு	கிட்டலூரு, சோமிதேவபள்ளி, குண்டுசெட்டிபள்ளி, கோமரோலு, கம்பம், பூசலபாடு.

தாலூகா.	இருப்பிடம்.	வேலை நடக்கும் இடங்கள்.
சிர்வெல்	அல்லகட்டா	அல்லகட்டா, சாகல்மாரி, சிர்வெல், தீப குண்டல்.
கோயில்குண்டல ..	கோயில்குண்டல ..	கோயில்குண்டல, தோர்ணிப்பாடு, ஆக், நொஸ்ஸம்.
நந்திகோட்கூர் ..	ஆத்மகூர்	ஆத்மகூர், பன்னூர், நந்திகோட்கூர், பாமுலபாடு.

குறிப்பு.—தோனில் வெங்கடபுரம் கம்மாயில் வேலை செய்ய ஒரு மேஸ்திரி நியமனம் செய்திருக்கிறது.

கடப்பை ஜில்லா.

கடப்பை	கடப்பை	காஜிபேட்டை, சேனூர், கடப்பை, சிந்த கொம்மடின்னி, கமலாபுரம், வெள்ளத்தூர்.
புரோதத்தூர்	புரோதத்தூர் ..	புரோதத்தூர், துவ்வூர், சின்னதந்துலூர், வணிபெண்டா, மைதுகூர்.
ராஜம்பேட்டை	நந்தலூர்	ராஜம்பேட்டை, நந்தலூர், பெணகலூர், கோடூர்.

B. டிமான்ஸ்டிரேட்டர்கள் இல்லாத தாலூக்காகள்.

பெல்லாரி ஜில்லா.—ஆலூர், ஹடகல்லி, ஹர்பனஹள்ளி, கூட்லிகி.

அனந்தபூர் ஜில்லா.—தர்மாவரம், கல்யாணதுர்கம், மடகசிரா, பேணு கொண்டா.

கர்நூல் ஜில்லா.—மார்க்காபூர், பத்திகொண்டா.

கடப்பை ஜில்லா.—பாட்வேல், ஜம்மலமடுகு, புலிவெண்டலா, ராய சோடி, சித்தவட்டம், கமலாபுரம்.

3. இந்த சர்க்கிளில் நடக்கும் விவசாய சீர்திருத்த வேலைகளில் முக்கியமானது என்னவென்றால் : ஹகரி, நந்தியால் பரிசோதனை பண்ணைகளில் கண்டுபிடிக்கப்பட்ட எச்-1, என்-14 என்ற பொருக்கு பருத்தி விதைகளை அதிகரிப்பதும் பரவச் செய்வதும். கோயம்புத்தூர் ஜில்லாவிலிருந்து வந்த கோ-2 என்ற கம்போடியா பொறுக்கு விதையை சமீப காலத்தில் தான் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஹகரி பரிசோதனைப் பண்ணையில் கண்டுபிடிக்கப்பட்ட டி-8 என்ற கேழ்வரகு, டி-1 என்ற சோளம் நந்தியால் பரிசோதனைப் பண்ணையில் கண்டுபிடிக்கப்பட்ட டி-6 என்ற சோளம் என்ற பொறுக்கு விதைகளை விவசாயிகளுக்கு கொடுத்துவருகிறார்கள். இவைகள் தவிர விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்கள் விவசாயிகளுக்கு ஜி.ஈ.பி.-24 போன்ற பொறுக்கு நெல் தினுசுகளையும் பொறுக்கு கரும்பு கரணைகளையும் கொடுக்கிறார்கள்.

சீர்திருத்தமாய் விவசாயம் செய்யும் வகைகளில், முக்கியமான ஒழவுக் குத்தகுந்த இரும்பு கலப்பைகளையும், குறைந்த சிலவிலும் திருப்திகரமாயும் களையெடுத்து புழுதி படுத்தக்கூடிய எச். எம். குண்டகா போன்ற கருவிகளையும் விவசாயிகளின் புலங்களில் உபயோகித்து அதன் அனுகூலங்களை பிரத்யக்ஷமாக விவசாயிகளுக்கு காண்பித்து வருகிறார்கள். கரும்பு பயிரிடப்பட்ட இடங்களில், சமமான பாத்திகளில் நடுவதைக்காட்டிலும் படைச்சால்களில் கரும்பு நடுவதும் சிறந்த அடுப்புகளைக்கட்டி அதன் மூலமாய் சிலாக்கியமாக வெல்லம் செய்வது மேலானதென்றும் மெய்ப்பித்திருக்கிறார்கள்.

பிரசார வேலைகளில் மிகவும் முக்கியமான, மாட்டெருவை சரியான படி சேகரிப்பதும், அதைப் பாதுகாப்பதுமே. கிடைக்கக்கூடிய கழி தீவனங்களை உபயோகித்து மாடு கட்டும் தொழுவிலேயே எரு சேகரிப்பதில் உள்ள அனுகூலங்களை அடிக்கடி விவசாயிகளுக்கு சொல்லப்படுகின்றது. நிலக்கடலைத் தோல், உலர்ந்த தழைகள், சோளக்கட்டைகள் முதலானவைகளைக்கொண்டு உரம் செய்யும் விதம் குடிகளுக்கு காட்டப்பட்டிருக்கிறது.

விவசாய பண்ணைகளில் கண்டுபிடிக்கப்பட்ட பொறுக்கு தினுசு விதைகளை விதைத்து கிடைத்த மாசூல்களை நல்ல விலைக்கு விற்பதற்கு வேண்டிய சாதனங்களை விவசாயிகளுக்கு சர்க்கார் ஏற்பாடு செய்கிறார்கள்.

பயிர்களுக்கு ஏற்படும் வியாதிகளையும் நோய்களையும் தடுப்பதற்கு வேண்டிய முறைகள் விவசாயிகளுக்கு சொல்லப்படுகின்றன. பயிர்களுக்கு பூச்சிகளினால் ஏற்படும் சேதத்தையும், பூஞ்சாளத்தினால் ஏற்படும் வியாதிகளையும் தடுப்பதற்கு வேண்டிய முறைகளை விவசாயிகளுக்கு போதனை செய்வதற்காக பிரத்தியேகமாக இரண்டு உத்தியோகஸ்தர்கள் பல்லாரியில் இருக்கிறார்கள். பயிர்களை பார்வையிடவேண்டியது அவசியமாயிருந்தால், குடிகளுக்கு யாதொரு சிலவன்னியில் பார்வையிடப்படும். விவசாய சம்பந்தமாவது அல்லது பொருக்கு விதைகள் சப்ளையைப்பற்றியாவது சமுசாரிகளுக்கு ஏதாவது விவரம் தெரியவேண்டியிருந்தால், சமீபத்திலுள்ள விவசாய டிமான்ஸ்ட்ரேட்டருக்காவது அல்லது அந்தப் பிரிவைச் சேர்ந்த உதவி உத்தியோகஸ்தருக்காவது விவசாயிகள் மனு செய்துகொள்ளவேண்டும்.

4. இந்த சர்க்கிளிலுள்ள விவசாய டிப்போக்கள் இருக்கும் இடங்களும் அவைகளில் கிடைக்கக்கூடிய சாமான்களும் அவைகளின் சுமாரான கிரயங்களும் காட்டக்கூடிய ஜாபிதா கீழே குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த டிப்போக்களிலுள்ள விவசாய டிமான்ஸ்ட்ரேடர்களிடம் அப்போதைக்கப்போதுள்ள நிலவரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

பல்லாரி ஜில்லா.

டிப்போக்கள்.	கிடைக்கக்கூடிய சாமான்கள்.
பல்லாரி	எச்-1 பருத்தி விதை. சணப்பு விதை.
ஹாஸ்பெட்	ஜி.ஈ.பி.-24 நெல் விதை. சணப்பு விதை. டி-8 கேழ்வரகு விதை. டி-1 சோள விதை.
ஆதோணி	எச்-1 பருத்தி விதை.
சிறுகுப்பா	எச்-1 பருத்தி விதை. ஜி.ஈ.பி.-24 நெல் விதை. சணப்பு விதை.

அனந்தபூர் ஜில்லா.

குண்டக்கல்	எச்-1 பருத்தி விதை.
கூட்டி	எச்-1 பருத்தி விதை. ஜி.ஈ.பி.-24 நெல் விதை. சணப்பு விதை. டி-8 கேழ்வரகு விதை. டி.-1, டி.-6 சோள விதை. வெங்காய விதை. எலும்புத்தூள்.
அனந்தப்பூர்	கூட்டியிலுள்ளதுபோல்.
கதிரி	டி.-8 கேழ்வரகு விதை. ஜி.ஈ.பி.-24 நெல் விதை. சணப்பு விதை.
ஹிந்துப்பூர்	ஜி.ஈ.பி.-24 நெல் விதை. டி.-8 கேழ்வரகு விதை. டி.-1 சோள விதை. சணப்பு விதை.
தாத்பத்திரி	கூட்டியிலுள்ளதுபோல்.

கர்நூல் ஜில்லா.

கர்நூல் நந்தியால் கிட்டலூரு கம்பம் அல்லகட்டா	என்.-14 பருத்தி விதை. கம்போடியா பருத்தி விதை. சணப்பு விதை. ஜி.ஈ.பி.-24 நெல் விதை. கோ.-1 நெல் விதை. டி.-6 சோளம் விதை. தக்கைப்பூண்டு விதை. விவசாய ராயல் கமிஷனின் விவசாய சம்பந்தமான ரிபோர்ட்டு சுருக்கம் தெலுங்கில், புஸ்தகம் 1-க்கு ரூ. 1-8-0.

டிப்போக்கள்.	கிடைக்கக்கூடிய சாமான்கள்.		விலை. ரூ.அ.பை.
கர்நூல் ..	.. எச்.எம். குண்டகா நெ. 0.	இரும்பு பாகம் மட்டும் ..	4 8 0
		அலகு 1-க்கு ..	1 8 0
நந்தியால்	.. எச்.எம். குண்டகா நெ. 1.	இரும்பு பாகம் மட்டும் ..	8 0 0
		அலகு 1-க்கு	2 12 0
கிட்டலூர்..	.. எச்.எம். குண்டகா நெ. 2 ..	இரும்பு பாகம் 1-க்கு ..	14 4 0
		அலகு 1-க்கு	3 14 0
கம்பம் ..	.. கூப்பர் கலப்பை நெ. 25 ..	இரும்பு பாகம் மட்டும் ..	4 8 0
		கொழு 1-க்கு	0 5 6
அல்லகட்டா	.. கூப்பர் கலப்பை நெ. 26 ..	இரும்பு பாகம் மட்டும் ..	10 12 0
		முனையுடன் கொழு 1-க்கு.	1 1 0
		கொழு முனை 1-க்கு ..	0 3 6

கடப்பை ஜில்லா.

டிப்போக்கள்.	கிடைக்கக்கூடிய சாமான்கள்.
கடப்பை புரோதத்தூர் ராஜம்பேட்டை	கர்நூல் ஜில்லாக்களிலுள்ள டிபோக்களில் கிடைக்கக்கூடிய சாமான்களில் என் 14, H.-1 பருத்தி விதைகள் தவிர மற்றவைகள் கிடைக்கும்.
புரோதத்தூர் ராஜம்பேட்டை.	என்.-14 பருத்தி விதை. எச்.-1 பருத்தி விதை.

கடப்பை, கர்நூல் ஜில்லாக்களிலுள்ள டிபோக்களில் கிடைக்கக்கூடிய சாமான்களில் தவிர மற்றவைகள் கிடைக்கும்.

குறிப்பு.—மேலே சொல்லப்பட்ட டிப்போக்களில் மயில்துத்தம் பொட்டலங்களும் கிராம வாசியின் பஞ்சாங்கமும் 1 அணு கிரயத்திற்கு பெற்றுக்கொள்ளலாம்.

5. **கூட்டுறவு இலாகா.**—இந்த சர்க்கிளில் இரண்டு டிப்டி ரிஜிஸ்ட்ரார்கள் இருக்கிறார்கள். இவர்களின் பிரதான ஸ்தானங்கள் பெல்லாரியும், கடப்பையும். அவர்கள், பல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களின் வேலையையும் கடப்பை, கர்நூல், ஜில்லாக்களின் வேலையையும் முறையே மேல் பார்த்துவருகிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு சப்-டிப்டி-ரிஜிஸ்ட்ரார் இருக்கிறார். கூட்டுறவு சம்பந்தமான விஷயங்கள் தெரியவேண்டுமானால் மேலே சொன்ன உத்தியோகஸ்தர்களுக்கு மனுச் செய்துக்கொள்ளலாம். விவசாய டிபார்ட்மென்டாரும், கூட்டுறவு இலாகாதாரும் ஒன்று சேர்ந்து கடன் கொடுத்தல் வாங்கல் சம்பந்தமில்லாத, வேலைகளைச் செய்துவருகிறார்கள். பல்லாரி, ஆதோனி, நந்தியால், முதலிய இடங்களில் கடன் கொடுப்பதற்கும் சரக்குகளை விற்பதற்கும் ஏற்படுத்திய கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பந்தனஹாலிலுள்ள விவசாய சீர்திருத்த சங்கத்திற்கும், விதை பரவச்செய்வது, விவசாயிகளின் பருத்தியை ஒன்றுசேர்த்து அறைத்து விற்பனை செய்வது முதலிய வேலைகளை, ஒப்புவிக்க ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள்.

6. (a) **கைத்தொழில் இலாகா.**—பெஜவாடாவை பிரதான ஸ்தானமாக வைத்துக்கொண்டிருக்கும் உதவி கைத்தொழில் இஞ்சினீர் பல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களின் வேலையையும், கோயம்பத்தூரிலிருக்கும் உதவி கைத்தொழில் இஞ்சினீர் கடப்பை, கர்நூல் ஜில்லாக்களின் வேலையையும் மேல்பார்த்துவருகிறார்கள். சோதனைக்குழிகள் போடுவது, கிணறுகள் வெட்டுவது, யந்திரங்கள் ஸ்தாபிப்பது சம்பந்தமான விஷயங்கள் தெரியவேண்டியவர்கள் மேலே சொன்ன அதிகாரிகளுக்கு மனுச் செய்துக் கொள்ளலாம்.

(b) **பரிசோதனைகள்.**—இந்த சர்க்கிளில், பல்லாரி ஜில்லாவைச் சேர்ந்த ஹகரியென்ற இடத்திலும், கர்நூல் ஜில்லாவைச் சேர்ந்த நந்தியால் என்ற இடத்திலும் இரண்டு விவசாய சம்பந்தமான பரிசோதனைப்பண்ணைகள் இருக்கின்றன. கடப்பை ஜில்லா, கோடூரில் கனிவர்க்க பரிசோதனைப் பண்ணை ஒன்றும் இருக்கின்றது.

ஹகரியிலுள்ள பரிசோதனைப் பண்ணை.

1906-1907-ம் வருஷ இப்பண்ணை ஸ்தாபிக்கப்பட்டது. தென் மஹாராஷ்டர இருப்புப்பாதையிலிருக்கும் ஹகரி ஸ்டேஷனுக்குத் தெற்கே ஒன்றரை மைல் தூரத்திலிருக்கிறது. இதிலுள்ள நிலங்கள் பரமதேவனஹள்ளி, கக்கல் கிராமங்களைச் சேர்ந்தவை. இது பல்லாரி நகரத்திலிருந்து 10 மைல் தூரத்திலிருக்கிறது. ரயில் மார்க்கமாகவாவது அல்லது பல்லாரிக்கும் குத்திக்கும் செல்லும் மோட்டார் மார்க்கமாகவாவது இப்பண்ணைக்குச் சுலபமாக வரலாம். இப்பொழுது இப்பண்ணையின் விஸ்தீர்ணம் 318 ஏக்கர். இதில் ஒரு பாதி விவசாயத்திலிருக்கிறது. இதன் மறு பாதி மணல்கண்டம். ஆனால் இதை சுமாரான மேய்ச்சல் பூமியாக சிறிது சிறிதாக மாற்றப்பட்டிருக்கிறது. விவசாயத்திலிருந்து வரும் 155·34 ஏக்கர் விஸ்தீர்ணத்தில் 14 ஏக்கருக்கு மணல் பூமிக்கு பக்கத்திலிருக்கும் ஒரு சிறிய கிணற்றிலிருந்து நீர் பாயக்கூடிய வசதியுண்டு. பாக்கி விஸ்தீர்ணம் கரிசல். இதில் பருத்தி, சோளம் முதலிய மானவாரி பயிர்கள் முக்கியமாய் சாகுபடியாகின்றன. இம்மணல் சார்ந்த நிலமானது தென்மேற்கு திசையிலிருந்து வீசும் பருவக்காற்று காலத்தில் பலத்த காற்றினால் நதியின் மணலைக் கொண்டு குவித்ததினால் ஏற்பட்டது. சில பாகங்களில் இம்மணல் கண்டத்தின் கீழே கரிசல் மண் இருக்கிறது. மற்ற பாகங்களில் பூமியின் மட்டத்துக்குக் கீழே 2 முதல் 15 அடி ஆழமுள்ள களிமண்மேல் கருப்பு நிறமுள்ள வண்டலும் மணலும் சேர்ந்த பாகங்கள் காணப்படுகின்றன.

2. நவம்பர், டிசம்பர் மாதங்களில் பண்ணை நிலங்கள் எல்லாவற்றிலும் பயிரிட்டிருப்பதை பார்க்கலாம். பருத்தி, சோளம், தினை இவைகளில் நல்ல பொருக்கு விதை உற்பத்தி பண்ணுவதை பார்க்கலாம். வருஷம் முழுவதிலும் தொழு எரு சிறந்த முறைப்படி சேகரிப்பதையும், மாட்டுக் கொட்டிலில் கூளத்தைபோட்டு எரு அதிகமாய் சேகரிப்பதையும், காய்ந்த தழை, சோளக்கட்டை இவைகளை சேர்த்து எரு பண்ணுவதையும் பார்க்கலாம். மணல் முட்டுகளையெல்லாம் கலைத்து கருவைமரம் உற்பத்தி செய்து மாடுகளுக்கு மேய்ச்சலுக்கு தகுதியானயிடமாய் பண்ணியிருப்பதையும் பார்க்கலாம். பண்ணையில் எந்தெந்த மாதங்களில் என்ன நடக்கிறதென்பதை விபரமாய் கீழே கண்டிருக்கிறது.

3. மழைஜல வசதியினால் மட்டும் பயிர் செய்யப்பட்டு வருகிற புஞ்செய் பூமிகளின் விஷயமான விசாரணைகளைப் பரிசீலனை செய்வதற்கென்று ஏற்படுத்தப்பட்ட பண்ணை ஹகரி பரிசோதனை ஸ்தானம். சீதோஷ்ண நிலைகளுக்கேற்றவாறு சமாளித்துக்கொண்டு தக்க மாசூலைத் தரத்தக்க மாதிரியான சோளம், தினை முதலிய தான்யங்களில் தரமான ஒரு பயிர் கொடுக்கக்கூடிய வித்தை கண்டுபிடிப்பதுதான் இந்த வேலையின் முக்கிய அம்சம். இந்நோக்கத்துடன் இந்த பரிசோதனைச் சாலையில், பூமி, செடி இவைகளிரண்டும் நன்கு ஆராயப்படுகின்றன. மண்ணின் பௌதிக இரஸாயன குணகுணங்கள், மண்ணில் இருக்கும் ஈரம் மேல் கீழ் நோக்கிச் செல்லும் கதி, முதலியவைகள் நன்கு உணரப்படுகின்றன. பலவேறான தினுசுகளின் வேர்ப் போக்குகள், பக்க வசதிகளுக் கேற்றவாறு மேற்சொன்ன செடிகள் தங்களுடைய உடற்கூறுபாட்டை அனுசரித்துக்கொள்ளக்கூடிய சக்தி, தக்க மாசூல் தரத்தகுந்த ரகங்களைப் பயிர் செய்து நாளாவர்த்தியில் கண்டெடுப்பது முதலியவைகளும் இங்கே நடத்தப்படுகின்றன. இம்மாதிரியாக உத்கிருஷ்டம் பண்ணப்பட்ட தினுசுகளில், நீர்த்தட்டைத் தாங்கக்கூடிய எச்.-1 என்னும் பருத்தி விதையிலிருந்து நாட்டுப்பருத்திப் பஞ்சைவிட அதிகமான பஞ்சு கட்டுமாலாவதோடு, ஷை பஞ்சு, நாட்டுப் பஞ்சைவிட அதிக விலைக்கும் மதிக்கப்படுகிறது. இதே பண்ணையில் ஜனிப்பிக்கப்பட்ட டி.-1 என்ற சோள விதை, மாசூல் விஷயத்தில் அதிகம் பலன் தருவதாலும், தான்யம், தட்டு இவ்விரண்டிலும் சிரேஷ்டமானதாயிருப்பதாலும், நாட்டுச்சோள விதையைவிட அதிகமாய் சம்சாரிகளால் நன்கு மதிக்கப்பட்டுவருகிறது. கேப்பை, கம்போடியா பருத்தி, வெங்காயம், மக்காச் சோளம் முதலிய தோட்டப் பயிர்களும் ஒரு சிறு தோட்டத்தில் பயிர்

செய்யப்பட்டுவருகின்றன. சரிவர கவனித்து வந்தால் இவ்விறவைப் பயிர்களால் தக்க லாபம் உண்டென்பதை அந்தப்பிராந்தியத்துக் குடியானவர்களுக்கு நிதர்சனபூர்வமாய் ரூபிப்பதற்காக இது செய்யப்பட்டுவருகிறது.

ஹகரிபண்ணையில் முதலில் கண்டெடுத்துப் பயிராக்கப்பட்டுவந்த டி-8 என்னும்கேப்பை தினுசைப் பார்க்கிலும் அதிக மாசூல் தரத்தக்க இ.ஹி. 593 என்னும் கேப்பை தினுசும் இங்கே பயிராக்கப்படுகிறது.

மண்ணின் தன் ஈரத்தைப் பாதுகாத்தல் என்னும் விஷயம், மழை அரிதாய்ப் பெய்யும் இந்தப் பிராந்தியங்களில் மிகவும் முக்கியமானது. உழுது, வரப்பு கட்டி, ஒன்றுவிட்டு மறு வருஷம் பூமியைத்தரிசாய்க்கி விட்டுவைப்பதால் பூமியின் ஈரம் காக்கப்படுவதுடன் பயிர் நஷ்டமடைந்து போவது குறைக்கப்படுகிறது என்பது இங்கேயும் பிறிதிடங்களிலும் அனுபவத்தில் கண்டவை. எப்பொழுது, எத்தனை தடவைகள் துல்லிபமாய்ப் பயிருக்கு ஊடே கலப்பித்துப் பயிரடிக்க வேண்டியது அவசியம் என்பதைக் கணக்கிடவில்லை. குடியானவர்கள் சாதாரணமாய்க் கையாடி வருகிற கலப்புப்பயிர், தனிப் பயிர் செய்வதைப் பார்க்கிலும் சிலாக்கியமானது. ஏனென்றால் காலம் பருவம் முதலிய வேறுபாடுகளால் கலப்புப்பயிர்களில் ஏதேனுமொன்றிரண்டு பலதப்பட்டு அல்ப ஸ்வல்பமாவது மாசூல் கொடுத்துக் குடியானவனைச்சற்று ஆயாஸந்தீர்க்கும். இவ்விதமான விஷயாந்தங்களைக்கற்றுக் கண்டுபிடிக்கவேண்டிய முயற்சிகளும் இங்கே நடைபெறுகின்றன. பயிர்கள் முக்கியமாய் பருத்தி, சாலுக்கும் சாலுக்கும் இடையே விட வேண்டிய சரியான தூரம் எவ்வளவு என்பதையும் தீர விசாரிக்கிறார்கள். போதுமான அளவுமாட்டெரு கிடைக்காததால் சம்சாரிகள், கிராமத்திற்கு சமீபத்திலுள்ள பூமிகளுக்கு மட்டும் சற்று எருவைப்போட்டுவிடுகிறார்கள். பெரும்பாகமான இதர பூமிகள் எருவைப்பார்ப்பதே கிடையாது. இந்த தோஷத்தை நிவர்த்திக்கவேண்டிய மார்க்கங்களுக்கான பரிசோதனைகளும் இந்த பண்ணையில் நடத்தப்படுகின்றன.

ஏப்ரல் முதல் ஜூன் வரை.—பருத்திச் செடிகளை எச்.எம். குண்டகாநெ. 2-னுல் அப்புறப்படுத்தல் சோளம் அருவடை செய்தபின் வயல்களை கோடை மழை உதவியைக்கொண்டு உழுதபிற்பாடு பெத்தகுண்டகாவை வேலை செய்தல். சிறந்த கலப்பைகளால் நிலங்களை உழுது தரிசாக விடுதல். நிலங்களை சமதனஞ் செய்தல். உபயோகமற்ற அழுகக்கூடிய சாமான்கள் யாவற்றையும் சேர்த்து மடிக்கச் செய்தல்.

ஜூன்.—விதை குறைத்து கேழ்வரகு நாத்துவிடுதல், இரவைப் புஞ்சையில் மாட்டுத்தீவனப் பயிர்கள் பயிரிடல்.

ஜூலை.—கேழ்வரகு நடவு, மாட்டுத்தீவனப் பயிர்கள் பயிரிடல். மழை காலத்திற்குமுன் பெய்தால் தினையும் நிலக்கடலையும் சாகுபடி செய்தல். மழை பெய்த ஜலம் ஓடிப்போகாமலிருக்க வரப்புப்போடும் கருவி இந்த மாதக்கடைசி இரண்டு வாரங்களிலும் வேலை செய்யப்படும்.

ஆகஸ்ட்.—காலத்திற்கேற்றபடி தினையும், நிலக்கடலையும் விதைக்கப்படும். இறவைப் புஞ்சையில் விதைக்காக கரும்பு நடப்படும்.

செப்டம்பர்.—கேழ்வரகு நன்றாய் பயிராயிருப்பதைப் பார்க்கலாம் பருத்தி விதைக்கப்படும்.

அக்டோபர்.—பருத்தி விதைத்தானவுடன் சோளம் முதல் வாரத்திலேயே அனேகமாய் விதைக்கப்படும். கடலை, குசும்பா, கோதுமை, மாதக்கடைசியில் தெளிக்கப்படும்.

நவம்பர்.—கேழ்வரகு அருவடை, வெங்காயம், சீமைத்தக்காளி இவைகள் நடவாகும். மாட்டுத்தீவனத்திற்கு மக்காச்சோளம் விதைக்கப்படும். புஞ்சையில் களையெடுக்கும் கருவிகள் வேலை செய்வதை பார்க்கலாம்.

டிசம்பர்.—நிலக்கடலை சிறந்த கருவிகளைக்கொண்டு அருவடை செய்தலை பார்க்கலாம். பண்ணையைப் பார்க்க இம்மாதமே சரியான காலம். எல்லாப் பயிர்களையும் பார்க்கலாம்.

ஜனவரி.—புஞ்சைப் பயிர்களுக்கு கடைசியாக களை யெடுக்கப்படும். பிற்பாதியில் மக்காச்சோளம் அருவடை செய்து ஸைலேஜ் செய்யப்படும்.

பிப்ரவரி.—பிற்பாதியில் சோளம் அருவடை துவக்கமாகும். கரும்பு அருவடையும், கரும்பு நடவும் பார்க்கலாம்.

மார்ச்.—அருவடையான தானியங்களை இயந்திரத்தின் மூலமாக சுத்தமாக தூத்துவதைப் பார்க்கலாம். பருத்தி யெடுப்பது இம்மாதத்துடன் முடியும். தானியங்கள் அருவடையான புஞ்சைகளை உழப்படும்.

நந்தியால் விவசாயப் பரிசோதனைப் பண்ணை.

இது மதராஸ் - தென் மஹாராஷ்டிர இருப்புப்பாதையைச் சேர்ந்த குண்டக்கல் - பெஜவாடா, கிளைப்பாதையிலுள்ள நந்தியால் ஸ்டேஷனுக்கு ½ மைல் தூரத்திலும், கம்பம்-கர்நூல் ரோட்டும், நந்தியால்-கோயில்குண்டலா ரோட்டும் சந்திப்பில் இருக்கிறது. இந்தப் பண்ணையானது 1906-ம் ஞு ஸ்தாபிக்கப்பட்டது. இதன் விஸ்தீர்ணம் 92 எக்கர். இதில் ஒரு பாதி 1911-ம்ஞு சேர்க்கப்பட்டது. இந்தப் பண்ணையின் பூமியானது சாக்கலெட் நிறமுடைய மிருதுவான கரிசல். இதற்கு கீழே மஞ்சள் நிறமுள்ள இறுகிய களிமண் இருக்கிறது. இது காய்ந்துபோனால் பளிங்கு கற்கள்போல் கட்டியாக மாறும் தன்மையுடையது. இது இந்தப் பிராந்தியத்திலுள்ள கரிசல் மண்ணை ஒத்திருக்கிறது. பண்ணை பார்க்க வருபவர்களுக்கு எல்லாக் காலத்திலும் பண்ணைக்குவர ஸ்டேஷனில் வண்டிகள் கிடைக்கும்.

2. நவம்பர் - டிசம்பர் மாதங்கள்தான் பண்ணை பார்க்க வருகிறவர்களுக்கு மிகவும் சரியான காலம். அக்காலத்தில் பண்ணையில் எல்லாப் பாகத்திலும் பயிர்களையும், விசேஷமாய் நடக்கும் செய்நேர்த்தி வேலைகளையும் பார்க்கலாம். பருத்தி, சோளம், இவைகளிலிருந்து பொருக்குவிதை எப்படி எடுக்கிறார்கள் என்பதை செப்டம்பர் மாதம் முதல் மார்ச்சு மாதம் வரை பார்க்கலாம். மாட்டெருவை சரியான முறையில் சேகரித்து பந்தோபஸ்து செய்வதையும், உலந்த தழைகள், சோளக்கட்டைகளை இந்திரிய உரங்களாக செய்வதையும், மாடுகளுக்கு தகுந்த தீவனங்கள் கொடுப்பதையும் அவைகளைச் சரியானபடி நல்ல தொழுவில் கட்டி போஷிப்பதையும் எக்காலத்திலும் பார்க்கலாம். எந்தெந்த சமயத்தில் என்னென்ன பயிர்களையும் வேலைகளையும் பார்க்கலாம் என்னும் அட்டவணை பண்ணை பார்க்க வருபவர்களின் சௌகர்யத்திற்காக கீழே குறிக்கப்பட்டிருக்கிறது :—

ஜனவரி மாதம்.—சீர்திருத்த சோள தினுசுகள் மாசூல் செய்யப்படுவது, சோளக்கதிர்களிலிருந்து கல்லுருளைகள் உபயோகத்தால் சோளமெடுப்பது, பருத்தி, கடலை, காய்கரி பார்க்கலாம்.

பிப்ரவரி மாதம்.—சுத்தமான பருத்தி எடுப்பது, கல்லுருளையைக் கொண்டு கடலை எடுப்பது, கதிர்களிலிருந்து பிரித்த மாசூல்களை காற்றுடி கொண்டு சுத்தம் செய்வது, கடலை அருவடை, பருத்தி, காய்கரி பார்க்கலாம்.

மார்ச்சு மாதம் முதல் மே மாதம் வரை.—2-ம் நெம்பர் எச். எம். குண்டகாவினால் பருத்திச் செடி, சோளக்கட்டைகள் எடுப்பது, கரும்பு, பருத்தி, காய்கரி பார்க்கலாம்.

ஜூன் மாதம்.—ஆழமாய் உழுத புஞ்சைகளை கல்லுருளை உபயோகித்து விதைப்பதற்கு நிலத்தை பண்படுத்தல்.

ஜூலை மாதம்.—கொருவினால் நிலக்கடலை விதைப்பும், தெனை விதைப்பும், கரும்பு, மாட்டுத்தீவனத்திற்காகவுள்ள சோளப்பயிர், பில்லி பசராவும், பசுந்தாள் பயிரும் பார்க்கலாம்.

ஆகஸ்ட் மாதம்.—பருத்தி, கொருவினால் விதைப்பும், கரும்பு, சோளப்பயிர், பில்லிபசரா, பசுந்தாள் பயிர்கள், நிலக்கடலை, பசுந்தாளை உழுது மடித்தல் பார்க்கலாம்.

செப்டம்பர் மாதம்.—சோளம் கொருவினால் விதைப்பது, காய்கரி, நடவு, பருத்தி, கரும்பு, சோளம், பில்லிபசரா நிலக்கடலை பார்க்கலாம்.

அக்டோபர் மாதம்.—பருத்தி, சோளப்பயிர்களின் நடுவே நந்துனு கருவி கொண்டு களையெடுத்து புழுதி படுத்துவதும், சோளப்பயிரை ஸைலேஜ் பண்ணுவதும், சோளம், பருத்தி, காய்கரி, கரும்பு, பில்லிபசரா, நிலக்கடலை இவைகளையும் பார்க்கலாம்.

நவம்பர் - டிசம்பர் மாதங்கள்.—கொருவினுல் கடலை விதைப்பதும் சோளம், பருத்தி, கரும்பு, இதர பயிர்களையும் எச். எம். குண்டகாவினுல் நிலக்கடலை அருவடையும் பார்க்கலாம்.

3. இந்தப் பண்ணையில் முக்கியமாய் பருத்தி, சோளம், நிலக்கடலை, தென்னை முதலியவைகளின் பொறுக்கு விதைகளை பரித்தெடுத்து சோதனை செய்து பார்த்தல்தான் வேலை.

இந்த பிரதேசங்களிலுள்ள இயற்கை, செயற்கை உரங்களை பருத்தி, சோளத்திற்கு உபயோகித்து பரீக்ஷை செய்து பார்க்கப்படுகிறது. பருத்திக் குப்பின் சோளம் விதைப்பது வழக்கம். அதற்கு பிற்பாடு நிலக்கடலையும் போட்டு பார்க்கப்படுகிறது.

கடப்பை ஜில்லா, கோடூர் கனிவர்க்க பரிசோதனைப் பண்ணை.—1935-ம் இறுதியில் இப்பண்ணை துவக்கப்பட்டது. இராஜம்பேட்டை தாலூகாவில், மதராஸ் தென் மஹாராஷ்டிர ரயில்வே கோடூர் ரயில் ஸ்டேஷனிலிருந்து $3\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள அனந்தராஜுபேட்டை என்ற ஊரில், திருப்பதிக்கும் கடப்பைக்கும் போகிற ரஸ்தாவுக்கருகில் இந்தப் பல விருக்ஷ பரிசீலனை பண்ணை இருக்கிறது. சுமார் $50\frac{1}{2}$ ஏகரா விஸ்தீரண முள்ள இந்தப் பண்ணையில் அந்தப் பிரதேசத்து மண்பாட்டுக்கொப்பா யுள்ள ஆழ்ந்த செந்தரைப் பசளை மண்கண்டம், அதிக களிப்புள்ள கரிசல் நிலம், மண்பாடான பொசபொசப்புள்ள பூமி இவை மூன்றும் இருக்கின் றன. இந்தப் பண்ணை ஒரு சூப்பிரண்டெண்ட் அதிகாரத்தின் கீழ் இருக் கிறது. கிணற்றிறவை ஆதாரத்தின் கீழ் சாகுபடி செய்யப்படவேண்டிய இறவைப் புஞ்சையாக கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தப் பண்ணையின் முழு விஸ்தீரணமான பூமி, சமபூமியில் பயிராக்கப்பட்டுவருகிற, எலுமிச்சை, நாரத்தை, மா போன்ற பலத் தோட்டங்களுக்கு மத்தியப் பிரதேசத்தில் இந்தப்பழசோதனைத் தோட்டம் அமைந்திருக்கிறது.

இந்த பரிசோதனை ஸ்தானத்தில் கவனிக்கப்படுவதும், பின்னும் கண்டு பிடிக்கப்போவதுமான முக்கிய விஷயங்கள் என்னவென்றல், எலுமிச்சை, நாரத்தை முதலிய ஜாதிகளில் உள்ள எல்லா ரகங்களும், மா முதலிய இதர பல விருக்ஷங்களையும், பல வேறு இடங்களிலிருந்து தருவித்துப் பயிராக்கிப் பரீக்ஷை செய்து விர்த்தியாக்கி, அந்த பிரதேசத்து தக்க வகை யானதாகக் கண்டுபிடிக்கப்பட்டவைகளை, லாபகரமானவை என்று தெரிய வேண்டிய சோதனைகளைச் செய்வது. ஆரோக்கியமானவையாயும், சடுதியில் வளர்ந்து அதிக மாசூல் தரத்தக்கவையாயுமுள்ள விருக்ஷ வர்க்கங்களை, ஒட்டுக்கட்டியோ, மொட்டுச் சேர்த்தோ, தோட்டங்களில் அபிவிர்த்தி செய்யப் படவேண்டிய மார்க்கங்களும் இங்கே லகுவாயும் சிக்கனமாயும் நடத்தக் கூடிய வழிகளையும் கண்டு பிடிக்கிறர்கள். பயிர் செய் நேர்த்தி, எரு விடுதல், நீரிறைவை முதலிய அம்சங்களும் பரிசோதிக்கப்பட்டு வருவதுடன், இவ்விதமான செய்முறைகளை ஒழுங்குபடுத்தும் முறைகளும் நன்கு பரி சீலனை செய்யப்படும். வம்சாவாரி தெளிவாய்த் தெரிந்தும் சிலாக்கியமான தென்று பரீக்ஷித்தறியப்பட்டுமுள்ள பழ விருக்ஷங்களின் கன்றுகளைப் பல பெருக்கும் விற்பனைக்குத் தயார் செய்வதும் முக்கியமான வேலையாகும்.

புதிதாகத் துவக்கப்படுகிற பண்ணையாகையால் தற்போது காடு வெட்டி யும், பூமியை ஸமப்படுத்தியும், ரஸ்தாக்கள் போட்டும், வடிகால்கள் அமைத்து, சோதனை தாக்குகள் பிரித்தும், சோதனைக்காக பல வேறு விருக்ஷங்கள், செடிகள் இவைகளை நட்டுப் பயிர் செய்வதுமே முக்கிய மான வேலையாய் இருந்து வருகிறது. புதிதாகப் பழத் தோட்டங்களை

3

உண்டாக்க விரும்புகிற நிலஸ்வான்கள், ஒட்டுக்கட்டுதல், மொட்டு ஸம்ஸர்க்கம், பின்னும் உள்ள நர்ரசரி தோட்ட வேலைகள் இவைகளை நன்கு கற்றுக்கொள்ளவேண்டுமென்று அபேக்ஷிக்கிறவர்கள் தங்களுடைய அறிவை அதிகரித்துக்கொள்ளத்தக்கவாறான பல விஷயங்களையும் இங்கே அடையப்பெறலாம். நாற்றங்காலிலிருந்து நாற்றுகளைப் பிடுங்கி தோட்டத்தில் நட வேண்டிய முறைகள் ஒட்டுகட்டுதல், மொட்டுச் சேர்த்தல் முதலிய வேலைகளை நேரில் பார்த்துத் தெரிந்துகொள்வதற்கேற்ற சமயம் இந்தத் தோட்டத்தை ஆகஸ்டு மாதம் முதல் நவம்பர் மாதம் முடியப் போய்ப் பார்ப்பது தான்.

கே. வி. நாயக்,
பழப் பரிசோதனைப்பண்ணை சூப்பிரண்டெண்டெள்ட்.

பண்ணைக்கு எல்லாரும் வரவேற்கப்படுகிறார்கள்.

கே. உண்ணி கிருஷ்ண மேனன்,
3-வது சர்க்கிள் விவசாய டிப்டி டைரெக்டர்,
பெல்லாரி.

3. (d) 4-வது சர்க்கிள்.

இந்த சர்க்கிளில், செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சித்தூர் ஆகிய நான்கு ஜில்லாக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை பாங்கி மலையிலுள்ள (போஸ்ட் ஆபீஸும், ரயில்வே ஸ்டேஷனும்) விவசாய டிப்டி டைரெக்டர் மேல் பார்வையில் இருக்கின்றன. இவருக்கு உதவியாக இரண்டு விவசாய அசிஸ்டெண்ட் டைரெக்டர்கள், ஒருவர் தென ஆற்காடு, செங்கல் பட்டு ஜில்லாக்கள் பார்வையிட கடலூரிலும், மற்றொருவர், வட ஆற்காடு, சித்தூர் ஜில்லாக்கள் பார்வையிட வேலூரிலும் இருக்கிறார்கள்.

(*a*) பிரசார வேலை.

விவசாய அசிஸ்டெண்ட் டைரெக்டரின்கீழ் அநேகமாக ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒரு டிமான்ஸ்ட்ரேட்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார். நானுவித அபிவிருத்தி முறைகளையும் ஒருங்கே அனேகமாக எல்லோராலும் அனுஷ்டித்துவரும்படிச் செய்ய ஒவ்வொரு தாலூகாவிலும் தகுந்த கிராமங்கள் சில சேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய கிராமங்கள் ஒவ்வொன்றிலும் உள்ளூரில் வழங்கிவரும் முறைகளைக்காட்டிலும் மேன்மையான முறைகள் எவைகளோ அவைகளைச் செய்ய டிமான்ஸ்ட்ரேட்டர் ஏற்பாடு செய்கிறார். ஒவ்வொரு கிராமத்திலுள்ள எல்லா விவசாயிகளும் புதிய முறைகளையே அனுஷ்டித்துவரும்படிச் செய்வதுதான் இவர் நோக்கம். அநேகமாக ஒவ்வொரு டிமான்ஸ்ட்ரேட்டருக்கும் உதவியாக ஒரு மேஸ்திரி இருக்கிறார். ஒவ்வொரு டிமான்ஸ்ட்ரேட்டரின் தலைமை இருப்பு ஸ்தலத்தில் ஒரு டெப்போவும் ஏற்படுத்தியிருக்கிறது.

பொதுப்படையான அபிவிருத்தி முறை விஷயங்களாவன :—

(1) தொழு எருவின் சத்து கொஞ்சமேனும் வீண்போகாமல், சரியாக சேகரிப்பதும், குப்பை கூளங்களை வீண்போக்காமல் குழிகளில் மக்கவைத்து எருவாகச் செய்வதும்.

(2) பசுந்தாள் உரப்பயிர்களை வளர்த்து உரமாக உபயோகிக்கச் செய்வது.

(3) அதிக சத்துள்ள எருக்களை விஸ்தாரமாக எல்லோரையும் உபயோகிக்கச் செய்வது.

(4) ஆள் சிலவை குறைப்பதற்காக ஏற்பட்ட விவசாயக் கருவிகளை உபயோகிக்கும்படி பரவச் செய்வது.

(5) உயர்தரமான பொருக்குவிதை நெல் தினுசுகளைக் கொடுத்தும், விதையைக் குறைத்து நாத்துவிடச்சொல்வதும், நாத்தங்காலிலும் வயலி லும் செவ்வையாக எருவிட்டும் சிக்கனமாக விதைத்தும் பயிரிடச் செய் வது.

(6) கரும்பு இல்லாத இடங்களில், புதிதாய் கரும்பு பயிரிடவும், பயிரிட்டுவரும் இடங்களில் மேலான கரும்பு தினுசுகளை பயிரிடக் கொடுக்க வும, செவ்வையாக எருவிடவும், பயிரிடுவதிலும், வெல்லம் காய்ச்சுவதி லும் சிக்கன முறைகளை அனுஷ்டிக்கவும் ஏற்பாடு செய்வது.

(7) எந்த முறை சிலாக்கியம் எனப் பரிசோதித்தறிய பரிசோதனைத் துண்டு நிலங்களையும், சிலாக்கியம் எனத்தெரிந்த முறைகளை நிரூபித்துக் காட்ட நிரூபண நிலங்களையும், பசுந்தாள் விதை, நெல் முதலிய விதை களை அதிகமாக விருத்தியாக்கி எங்கும் பரவச் செய்வதற்காக விதைப் பண்ணைகளையும் நடத்துவது.

(8) விவசாய பொருள்களை வைத்து காக்ஷிகள் ஏற்படுத்தி, அபி விருத்தி முறைகளை நேரில் செய்து காண்பித்தும், புகைப்படங்களோடும் புகைப்படம் இல்லாமலும், சீர்திருத்தமான முறைகளைப்பற்றி உபந்நியாசங் கள் செய்வது.

(9) அதிகமான பயிர்கள் அடிக்கடி செய்து விவசாயிகளின் நிலைமை யை முன்னுக்கு வரும்படியாகச் செய்வது.

(10) விவசாயத்திற்கு பக்கபலமாக பழவர்க்கங்களைக் பயிரிடவும், கோழிகளை வளர்க்கவும், இன்னும் சில முறைகளை அனுஷ்டிக்கவும் ஏற் பாடு செய்வது.

(11) கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் வைத்திருக்கும் நல்லஜாதி பொலி காளைகளைக்கொண்டு பசுக்களை பொலியச் செய்து, உள்ளூர் மாடுகளின் வம்சத்தை விருத்திசெய்ய ஏற்பாடு செய்வது.

(12) தென் ஆற்காடு, வட ஆற்காடு ஜில்லாக்களில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் மூல்யமாக குடியானவர்களுடைய மணிலா மாசூலை விற்பனை செய்ய ஏற்பாடு செய்வது.

பயிர்களுக்கு பூச்சிகளாலும், பூஞ்சணத்தினாலும் உண்டாகும் வியாதி களைப்பற்றிய ரிபோர்ட்டுகளை டிமான்ஸ்ட்ரேட்டர்களே கவனிக்கிறார்கள். ஆனால், முக்கியமான சில நோய்களாயின் இந்த சர்க்கிளில் பூச்சி வியாதிக் கென்றும், பூஞ்சண வியாதிக்கென்றும், தனியாகவே ஏற்பட்டுள்ள டிமான்ஸ்ட்ரேட்டர்கள் கவனிப்பார்கள்.

ஐக்கிய இலாகா.—செங்கல்பட்டு ஜில்லாவிற்காக சென்னையில் ஒரு டிப்டி ரெஜிஸ்ட்ராரும் ஒரு சப்-டிப்டி ரெஜிஸ்ட்ராரும் இருக்கிறார்கள். தென் ஆற்காடு ஜில்லாவிற்காக கடலூரில் ஒரு டிப்டி ரெஜிஸ்ட்ராரும், ஒரு சப்-டிப்டி ரெஜிஸ்ட்ராரும் இருக்கிறார்கள். வட ஆற்காடு ஜில்லாவிற்கு ஒரு டிப்டி ரெஜிஸ்ட்ராரும் ஒரு சப்-டிப்டி ரெஜிஸ்ட்ராரும் வேலூரில் இருக்கிறார்கள். ஆனால் சித்தூர் ஜில்லாவானது நெல்லூர் ஜில்லா டிப்டி ரெஜிஸ்ட்ரார் ஆதீனத்தின் கீழ் இருக்கிறது. இதற்கு சப்-டிப்டி ரெஜிஸ்ட்ரார் மாத்திரம் சித்தூரிலேயே இருக்கிறார்.

கைத்தொழில் இலாகா.—தென் ஆற்காடு ஜில்லாவிற்காக கடலூரில் ஒரு சூபர்வைஸர் இருக்கிறார். இந்த ஜில்லாவை மேல்பார்வையிடும் கைத் தொழில் உதவி எஞ்சினீர் தஞ்சாவூரிலும், செங்கல்பட்டு ஜில்லாவைப் பார்வையிடும் எஞ்சினீர் சென்னையிலும், வட ஆற்காடு, சித்தூர் ஜில்லாக் களைப் பார்வையிடும் எஞ்சினீர்கள் முறையே கோயம்புத்தூரிலும், பல்லாரி யிலும் இருக்கிறார்கள். சித்தூர், வட ஆற்காடு ஜில்லாக்களுக்காக ஒரு சூபர்வைஸர் வேலூரில் இருக்கிறார்.

கூடலூர் டிவிஷன்.

A. டிமான்ஸ்டிரேட்டர்கள் இருக்கப்பட்ட தாலூகாக்கள்.

செங்கல்பட்டு ஜில்லா.

தாலூகா.	இருப்பிடம்.	வேலை நடக்கும் இடங்கள்.
காஞ்சிபுரம்	காஞ்சிபுரம் ..	காஞ்சிபுரம், மகரம், கோவிந்தவாடி, பாலசெட்டிசத்திரம், உத்திரமேரூர், வல்லஜபாடு, கலியபேட்டை, வேடல்.
மதுராந்தகம்	மதுராந்தகம் ..	செய்யூர், போலம் பாககம், பருக்கால், மதுராந்தகம், பாக்கம், மாமந்தூர், நெல்வாய், வீரணக்குன்னம்.
செங்கல்பட்டு	செங்கல்பட்டு ..	செங்கல்பட்டு, குடுவஞ்சேரி, மானமட்டி, திருப்போரூர், திருக்கழுக்குன்றம், களத்தூர், சத்ராஸ், சிங்கபெருமாள் கொயில்.
திருவளளூர்	திருவள்ளூர் ..	திருவள்ளூர், பெரத்தூர், பூச்சியாதிபேட்டை, பாக்கம், பட்டர பெரம்பதூர், பெரம்பாக்கம், தண்ணீர்குளம், கன்னிகபேயிர், மப்பேடு, பெனலூர்பேட்டை.
சைதாப்பேட்டை ..	சைதாப்பேட்டை ..	சைதாப்பேட்டை, மைலாப்பூர், திருவொற்றியூர், போரூர், மதுரவாயல், வில்லிவாக்கம், பல்லாவரம், மாடவரம்.

தென் ஆற்காடு ஜில்லா.

தாலூகா.	இருப்பிடம்.	வேலை நடக்கும் இடங்கள்.
திண்டிவனம்	திண்டிவனம் ..	திண்டிவனம், ஒலக்கூர், காட்டேறுப்பட்டு, ரெட்டணை, ஓமந்தூர், திவனூர், வெள்ளைமேடு, பிரமதேசம்.
விருத்தாசலம் ..	விருத்தாசலம் ..	விருத்தாசலம், எம். பாரூர், மங்கலம். பேட்டை, ஊமங்கலம், பென்னுடம், திட்டகுடி, தொளுதூர், கம்மாபுரம்.
கடலூர்	கடலூர்	பண்ருட்டி, கந்தரக்கோட்டை, கீழ்காவரபட்டு, பாலூர், நெல்லிகுப்பம், கூடலூர், தொண்டமநாதம், குள்ளன்சாவடி, வடலூர்.
விழுப்புரம்	விழுப்புரம்	விழுப்புரம், விக்ரவாண்டி, ராதாபுரம், வளவனூர், மாம்பழபட்டு, கண்டமங்கலம், சொந்தனூர், நேமூர்.
கள்ளகுரிச்சி	கள்ளகுரிச்சி ..	கள்ளகுரிச்சி, சின்னசேலம், சங்கரபுரம், ஆலத்தூர், தியாகதுர்கம், ரிஷிவந்தியம், மதூர், முடியனூர்.
சிதம்பரம்	சிதம்பரம்	தில்லைவடங்கம், போர்டோநோவோ, வில்லியநல்லூர், வடக்குமாங்கிடி, பூவநகிரி, கோமராக்ஷி, சிதம்பரம், செட்டியதோப்பு, மன்னார்குடி, பாலையங்கோட்டை.
திருக்கோயிலூர் ..	திருக்கோயிலூர் ..	திருக்கோயிலூர், அரியூர், பிடாகம், திருணமணலூர், அரசூர், யூ. கூரனூர், பென்னவலம், தவலூர்.
ஜிஞ்ஜி	ஜிஞ்ஜி	வல்லம், ஜிஞ்ஜி, மீனமூர், பாலப்பட்டு, சத்தியமங்கலம், ஆலம்பூண்டி, வேலாத்தி, மேலச்சான்.

B. டிமான்ஸ்டிரேட்டர்கள் இல்லாத தாலூகாக்கள்;

செங்கல்பட்டு ஜில்லா	ஸ்ரீ பெரும்புதூர் தாலூகா, பொன்னேரி தாலூகா.
தென் ஆற்காடு ஜில்லா ..	(செஞ்சி தாலூகா)

C. ஸ்பெஷல் டிமான்ஸ்டிரேட்டர்கள்.

கடலூர்	கடலூர் (N.T.) ..	கடலூர் (N.T) ல், நிலக்கடலை விற்பனை சம்பந்தமாய்.
திருக்கோயிலூர் ..	திருக்கோயிலூர் ..	திருக்கோயிலூரில் நிலக்கடலை சம்பந்தமாய்.

வேலூர் டிவிஷன்.

A. டிமான்ஸ்டிரேட்டர்கள் இல்லாத தாலூகாக்கள்.

வட ஆற்காடு ஜில்லா.

தாலூகா.	இருப்பிடம்.	வேலை நடக்கும் இடங்கள்.
வேலூர்	வேலூர்	சாணுன்குப்பம், அகரம்சேரி, ஒடுகத்தூர், அணைகாத்தூர், பைகை, உஸ்ஸுர், வெங்கிடபுரம், நெல்வாய், அல்லிபுரம்.
குடியாத்தம்	குடியாத்தம்	சாணுகுப்பம், வெளிகுட்டி, செம்பேடு, கோட்டமிட்டா, ராமலி, கவனூர், அகராம்குப்பம், காட்பாடி.
போளூர்	போளூர்	போளூர், சந்தவாசல், முண்ட கலத்தூர், செட்பட், இலத்தூர், சிருவாலூர், களம்பூர், மதிமங்கலம்.
திருவண்ணாமலை	திருவண்ணாமலை	திருவண்ணாமலை, துரிஞ்சிபுரம், நாயுடு மங்கலம், மங்கலம், பெண்ணத்தூர், கீரவனூர், விரயூர், ஆவூர்.
வாலாஜா	வாலாஜா	கலவை, திமிரி, ஆற்காடு, ராணிபேட்டை, (பொன்னேரி அணைகட்டு) கடப்பேறி மறுமண்டலம், வள்ளுவம்பாக்கம், வேலூர்.
திருப்பத்தூர்	திருப்பத்தூர்	ஏகலாசபுரம், நட்ராம்பள்ளி, மாடவுளம், ஆண்டியப்பனூர், அழங்காயம், விசமஞ்சலம், கண்டிலி.
செய்யார்	திருவெட்டிபுரம்	வக்கடை, அணக்காரம், பல்லாவரம், திம்பனுமீன், நெடும்பாரை, வீரம்பாக்கம், நாட்டேரி, தண்டாரை.
செங்கம்	செங்கம்	செங்கம், பரமானந்தல், மேல்செங்கம், பாச்சல், கோலப்பாடி, காஞ்சி, ராதாபுரம், தண்டரம்பட்டு, இரயூர்.
வந்தவாசி	வந்தவாசி	தாள்ளூர், தேசூர், பொன்னூர், நடுங்குன்றம், சாலவீடு, மருதாடு, பரனமல்லூர், வல்லம்.

சித்தூர் ஜில்லா.

சித்தூர்	சித்தூர்	உக்ராணம்பள்ளி, பாரூர், கொத்திகாட, தவிணும்பள்ளி, குண்டல கட்டாமஞ்சி, பைஜுரெட்டி பள்ளி, பரடாரிமி, மபாக்ஷி.
மதனபள்ளி	மதனபள்ளி	வெண்பள்ளி, ரெட்டிவார்பள்ளி, கரபூர்ஸா, தம்பலபள்ளி, கொள்ளபள்ளி, சாம்பள்ளி, பெத்ததிப்பசமுத்திரம், கொத்தகோட, கண்டலமடுகு.
பழமனேரி	பழமனேரி	பழமனேரி, கல்லுபள்ளி, பாலுபள்ளி, பாய்ரெட்டிபள்ளி, வெங்கிடகிரிகோட்டை, கொங்கட்டம், ராமுகுப்பம், சமுத்திரப்பள்ளி.
திருத்தணி	திருத்தணி	ஆர்காட் குப்பம், அத்திமஞ்சேரி, கொளத்தூர், மானூர், சிருகாமி, பொன்பதி, முடிபள்ளி, திருத்தணி, வேதியங்காடு.

B. டிமான்ஸ்டிரேட்டர்கள் இல்லாத தாலூகாக்கள்.

வட ஆற்காடு ஜில்லா	ஆரணி, அரக்கோணம்.
சித்தூர் ஜில்லா	புங்கனூர், குப்பம், காளஹஸ்தி, சந்திரகிரி, வயல்பாடு, புததூர்.

பொலிகாளைகளின் ஜாபிதா.

ஜில்லா.	இருக்குமிடம்.	ஜாதி.
1 வ ஆற்காடு	காட்பாடி மிஷன் பண்ணை	சிந்தி நெ. 100. காங்கயம் காளை.
	சிறுகாடு	காங்கயம் நெ. 101.
	சாணுன்குப்பம்	காங்கயம் நெ. 109.
	காட்பாடி கைத்தொழில் பள்ளிக்கூடம்.	காங்கயம் நெ. 74.
	மேல்பாடி	காங்கயம் நெ. 102.
	பொன்னை	காங்கயம் நெ. 1.
	மொ[illegible]ர்	காங்கயம் காளை.
	திருப்பததூர்	சிந்தி நெ. 42.
	வேலூர் ஜில்லா ஜெயில்	ஒங்கோல் நெ. 50.
2 சித்தூர்	மதனபள்ளி கால்நடை ஆஸ்பத்திரி.	காங்கயம் நெ. 25.
	நடிகட	காங்கயம் நெ. 141
	செவரம்பாக்கம்	காங்கயம் நெ. 143.
	நங்கமங்கலப்	காங்கயம் நெ. 113.
	காளஹஸ்தி டண்ணை	ஓங்கோல் நெ. 136.
3 தென் ஆற்காடு	அலீஸ்நகர் குடியிருப்பு	காங்கயம் நெ. 106.
	பாலூர் விவசாய ஆராய்ச்சி பண்ணை.	காங்கயம் நெ. 75.
4 செங்கற்பட்டு	ஸ்காத்லாந்த் மிஷன் சர்ச், மேல் ரோசைபுரம்.	காங்கயம் நெ. 128.
5 மதராஸ்	கால்நடை காலேஜ்	ஒங்கோல் காளை 2. சிந்தி காளை 2. (அயர்ஷயர் ஒங்கோல்) காளை நெ. 1. எருமைக்கடா 4. அயர்ஷயர் நெ. 1.
	அடயார் தியஸாபிகல் ஸொஸைடி	ஓங்கோல் நெ. 17.

டிப்போக்களில் கிரையத்திற்குக் கிடைக்கக்கூடிய சாமான்களின் ஜாபிதா.

சாமான்களின் பெயர்.	சாமான்களின் பெயர்.
எச். எம். குண்டகா நெ. 0	சணல் விதை
எச். எம். குண்டகா நெ. 1	நெல் விதை—
எச். எம். குண்டகா நெ. 2	கார் தினுசுகள்
கூப்பர் கலப்பை நெ. 25	சம்பா தினுசுகள்
கூப்பர் கலப்பை நெ. 25 கொழு மாத்திரம்.	க்ரூட் ஆயில் எமல்ஷன்
கூப்பர் கலப்பை நெ. 26	மீன் எண்ணை சோப்பு
கொழுவும், கொழு முனையும்	லெட் ஆர்சினேட்
கொழுமுனை மாத்திரம்	பாரிஸ் க்ரீன்
கொளிஞ்சி விதை	கிராமவாசியின் பஞ்சாங்கம்
தக்கைப்பூண்டு விதை	பிரசுரங்கள்
பில்லிபசரா விதை	

காலகிறயப்படி விலை மாறலாம். வேண்டுமானல் அருகிலிருக்கிற டிமான்ஸ்ட்ரேட்டருக்காவது, அஸிஸ்டெண்ட் டைரெக்டருக்காவது எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மேல் கண்டவைகளெல்லாம் டிப்போவில் கிடைக்கும். எதாவதொன்று கிடைக்காவிட்டால் முன் பணமாக விலையை கொடுத்துவிட்டால், பின்னுல் சாமானை பெற்றுக்கொள்ளலாம்.

விவசாய சம்பந்தமான எல்லா விஷயங்களைப்பற்றியும் இலவசமாக ஆலோசனை சொல்லப்படும்.

(*b*) ஆராய்ச்சி.

[விவசாய ஆராய்ச்சிப்பண்ணை, எரயானூர், திண்டிவனம் போஸ்ட்.]

1925-ம் வருஷம் ஜூன் மாதம் தார்க்காலிகமாய் பலாக்குப்பத்தில் துவக்கப்பட்ட ஆராய்ச்சிப் பண்ணை பத்து வருஷ குத்தகை பூர்த்தியாய் 1935-ம் வருஷம் மே மாதம் 31உ முடிவடைந்தது. 1935-ம் வருஷம் மே மாதம் 16உ திண்டிவனம் தாலூகா எரயானூர் கிராமத்தில் 49·28 எக்கர் விஸ்தீரணமுள்ள புதியவிடம் வாங்கி நிலங்கள் திருத்தப்பட்டு பண்ணைக்கு வேண்டிய சாமான்களும் கருவிகளும் சேகரிக்கப்படுகின்றன. இப்புதிய பண்ணை திண்டிவனம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இரண்டு மயில் தூரத்தில் திண்டிவனம் - கிழியானூர் ரஸ்தாவிலிருக்கிறது.

பொருக்கி எடுத்தாலும் ஒட்டு செய்வதாலும் புது விதை தினுசுகளை உற்பத்தி செய்வதும் அவைகளை சோதனை செய்வதுமான வேலைகள் இப் பண்ணையில் விரிவான முறையில் நடக்கிறது.

இங்கு என்ன பார்க்கலாம், எப்பொழுது பார்க்கலாம்.

ஜனவரி.—மானுவாரி எள்ளு, பிந்தின நிலக்கடலையும் கொட்டை முத்தையும் அருவடை செய்வதையும் பார்க்கலாம்.

பிப்ரவரி.—மானுவாரி எள்ளும், கொட்டை முத்து அருவடையானதும் பார்க்கலாம்.

மார்ச் - ஏப்ரல் - மே.—தரிசு நிலங்களை சிறந்த கலப்பைகளால் உழுதல், இறவைப் புஞ்சையில் எள்ளு விதைப்பு, மானுவாரி எள்ளு அருவடை கொட்டை முத்துச்செடி அப்புறப்படுத்தல்.

ஜூன் - ஜூலை.—மானுவாரி நிலக்கடலையும், கொட்டைமுத்து தினுசுகள் விதைப்பு, இறவை எள்ளு அருவடை சோதனை செய்தல்.

ஆகஸ்ட் - செப்டம்பர்.—நிலக்கடலை, கொட்டை முத்து பயிர்களை பார்க்கலாம். புதிய பயிர்களின் சோதனை.

அக்டோபர்.—முன்னுல் விதைத்த நிலக்கடலை அருவடையாகும்.

நவம்பர் - டிசம்பர்.—மானுவாரி எள்ளு விதைத்தல், கொட்டை முத்து, நிலக்கடலை பயிர்கள். நிலக்கடலை அருவடையாகும்.

விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, பாலூர் (தென் ஆற்காடு ஜில்லா).

பாலூர் விவசாய ஆராய்ச்சிப் பண்ணையானது, கடலூர்-பண்ருட்டி ரஸ்தாவில் நெல்லிக்குப்பம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 5 மைல் தூரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பண்ணை 1905-ம்வருஷத்தில் துவக்கப்பட்டது. பண்ணையின் மொத்த விஸ்தீர்ணம் 55 ஏக்கர். இதில் 26·82 ஏக்கர்கள் நீரிறவைப்புஞ்செய்த்தோட்டம். 17·23 ஏக்கர் நஞ்செய். மீதமான விஸ்தீர்ணம் கட்டிடங்களும் ரஸ்தாவும், சாகுபடிக்கு லாயக்கற்ற மேடுகளுமாக இருக்கின்றன.

இங்கு என்ன பார்க்கலாம், எப்பொழுது பார்க்கலாம்.

அக்டோபர் மாதத்தில் இப்பண்ணையில் எல்லா நிலங்களிலும், எல்லாப் பயிர்களும் இருப்பதால் பார்ப்பதற்கு இதுவே சமயம்.

சொல்ப தூரத்திலிருந்து தண்ணீர் இறைப்பதற்கு ஆர்கிமீடியன் ஸ்குரு என்னும் மிஷினையும், சீர்திருத்தப்பட்ட சுற்றுக்கவலையையும், ரவைகள் போடப்பட்ட கவலைச்சக்கரங்களையும், மாடுகளை ஜாக்கிரதையாக கவனிப்பதையும், ஒழுங்காக தீனி கொடுப்பதையும், மாட்டின் சாணத்தையும், மூத்திரத்தையும் தொழு எருவாக கொட்டகையில் சேர்ப்பதையும், வருஷ முழுவதும் பார்க்கலாம்.

அதிக முட்டையிடுவதில் பெயர்பெற்ற வெள்ளை லெக் ஆரன் கோழியும், முட்டையிடுவதற்கும் உண்பதற்கும் சிலாக்கியமான லைட் சஸெக்ஸ் கோழியும் வளர்த்து, குஞ்சு பொரிக்க முட்டைகளும் கோழிகளும் விலைக்கு சகாயமாய்க் கொடுக்கப்படும்.

நல்ல ஜாதி மீன்கள் தின்பதற்காக பண்ணையின் கிணறுகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

வருஷம் பூராகவும் இந்தியன் தேனீக்கூட்டங்களைப் பரிபாலித்தலும் தேன் உண்டாகும் காலத்தில் தேன் கூட்டிலிருந்து தேனைப் பிரித்தெடுப்பதையும் பார்க்கலாம். (மார்ச்சு முதல் மே வரையும்).

ஜனவரி - பிப்ரவரி.—இரும்பு கலப்பைகளால், கேழ்வரகு, மணிலா பயிர்களுக்காக நிலங்களை உழுவதையும், வரப்பு மடிக்கும் கலப்பையால் வரப்பு மடிப்பதையும் வாய்க்கால்கள் போடுவதையும், மணிலா விரைப்பையும், கேழ்வரகு நடவையும், பசுந்தாள் உரப்பயிர்களை மடக்கி உழுவதையும், கரும்பு நடுவதற்காக இரண்டு ரக்கைகள் உள்ள கலப்பையால் கிடங்கு எடுப்பதையும், தூற்றும் மிஷின் வேலை செய்வதையும் பார்க்கலாம்.

மார்ச் - ஏப்ரல்.—கரும்பு தினுசுகள் அறுவடை, கரும்புகளை பவர் யந்திரத்தினால் அறைப்பது, வெல்லம் காய்ச்சுவது, ராப், சர்க்கரை செய்வது சிந்துவாகி அடுப்பும், ரோகில்கண்ட் அடுப்புகளும் வேலை செய்யும். கல் உருளையைக் கொண்டு கேழ்வரகு அடித்தல், கரும்பு புட்களை தயாரித்து கரும்பு நடுதல், முதலிய வேலைகள் எப்பிரல் மாதத்தில் பார்க்கலாம்.

நிற்கும் பயிர்கள்.—இளம்வாழை, கரும்பு, மணிலா.

மே.—கோரையை ஒழிப்பதற்காக எச்.எம். குண்டகாவை உபயோகப் படுத்துவது, நாத்தங்கால் தயார் செய்து விரையைக் குறைத்து தெளிவாக நாத்துவிடுதல் இவைகளைப் பார்க்கலாம். தக்கைப்பூண்டு, சணப்பு, மணிலா, கரும்பு, வாழை, இப்பயிர்களைக் காணலாம். மணிலாப்பயிரை அழிக்கும் "சுருள்பூச்சி" என்னும் பூச்சியைப் பிடிப்பதற்காக இராத்திரியில் விளக்கு வைத்து (வெளிச்சம்போட்டு) பிடிப்பதைப் காணலாம்.

ஜூன் - ஜூலை.—நஞ்சைகளில் தழைப் பயிர்களை ஹிந்துஸ்நான் கூப்பர் கலப்பைகளினால் மடக்கி உழுவதையும், முதல்போக நெல்பயிர் தினுசுகளை ஒத்தை நாத்தாக நடவு போடுவதையும், கரும்புக்கு இரண்டாவது தீனி வைத்து ரெட்டைரக்கை கலப்பையினால் மண் அணைப்பதையும், இறைப்பு மணிலா அறுவடையையும் கம்பு சால் விதைப்பு, சோளம் நெல் முதலிய வைகளையும் பார்க்கலாம்.

ஆகஸ்ட்.—நஞ்சையில் பசுந்தாள் உரப்பயிர்களை மடக்கி உழுவது, பார் கட்டி கம்போடியா பருத்தி மேட்டில் விதைப்பது, கரும்புக்கு கடைசிமுறை எருவிட்டு மண் அணைப்பது, தந்தியினாலாவது எச்.எம். குண்டாக நெ. 0-வினாலாவது கரும்பில் ஒட்டுவது இவைகளைப் பார்க்கலாம். கம்பு, சோளம், முதல்போக நெல், கரும்பு, வாழை, நெல்லில் பொருக்கி எடுக்கப்பட்ட தினுசுகள் இவைகளெல்லாம் பயிராக இருப்பது. கரும்பு கரணைகளை சீக்கிரத்தில் அதிகமாக உற்பத்தி செய்வதற்காக இளங்கரும்பு பயிர்களை வெட்டி கரணைகள்போட்டு நடுவது.

செப்டம்பர்.—நஞ்சையில் ஆராய்ச்சிக்காக ரசாயன சத்துக்களையும், நெல் தினுசுகளையும் வெவ்வேறாக தனி நிலங்களில் வரிசை வரிசையாக நெல் நடவுபோட்டு பரீக்ஷிப்பதையும், பசுந்தாள் உரத்துடன் எலும்புத்தூளை உபயோகிப்பதையும், முதல்போக நெல் அறுவடையையும், இரண்டாம் போக நெல்லுக்கு நஞ்சையை தயார் செய்வதையும், பள்ளம் தோண்டு வதற்காக கண்டுபிடிக்கப்பட்ட கடப்பாறையினால் பள்ளம் தோண்டி மூங்கில், கம்பி இவைகளால் கரும்புக்கு விட்டம் கட்டுவதையும், கம்பந்தட்டை மிஷினினால் அறுப்பதையும் பார்க்கலாம்.

அக்டோபர் - நவம்பர் - டிசம்பர்.—இரண்டாம்போக நெல் நடவையும், கரும்பு நடப்போகிற நிலத்திற்கு பசுந்தாள் உறத்திற்காக பசுந்தாள் விதையை விறைப்பதையும் பார்க்கலாம். நெல், கரும்பு, வாழை ஆகிய இப்பயிர்களையும் காணலாம்.

கீழ்கண்ட விஷயங்களை கண்டுபிடிப்பதற்கும் சோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன :—

நெல்.—(1) நாட்டு தினுசுகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட நெல் விதைகளை அதனுடன் சோதனை செய்து பார்த்தல்.

(2) மானவாரி நெல் தினுசுகளை பரீக்ஷைசெய்து பார்த்தல்.

(3) பசுந்தாள் உறத்துடன் எலும்புத்தூளை பல அளவாக எருவிட்டு பரீக்ஷை பார்த்தல்.

கரும்புகள்.—(1) அந்நிய நாடுகளிலிருந்து அநேகவித கரும்பு தினுசுகளை இங்கு உற்பத்தி செய்வதற்கு பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டன. ஆனால் இவைகள் வர வர நல்ல பலன் கொடுக்கவில்லை. நல்ல ஜாதிக்கரும்பு களுக்கு ஏற்படும் தேவையை முன்னிட்டு அநேக கரும்புகள் பரீட்சிக்கப் பட்டு சோதனையிலிருக்கின்றன. வியாதி, காய்ச்சல், தண்ணீர் தேக்கம் முதலியவைகளை பொருட்படுத்தாது வளரும் கரும்புத் தினுசுகளும் சூக்ரோஸ் என்னும் சர்க்கரையை அதிகமாக கொடுக்கக்கூடிய கரும்பு தினுசுகளும் சோதனையிலிருக்கின்றன.

(2) முதல்தரமான விதையோடு கரும்பு உற்பத்தியில் உரங்கள் மிகவும் அவசியமாயிருக்கின்றன. தற்சமயம் சோதனையிலிருக்கின்றவை (a) குறைந்த சிலவில் நல்ல மகசூல் கிடைப்பதற்கு பாஸ்பேட் உரமும் பொடாஷ் உரமும் எவ்வளவு வேண்டும். (b) தாவர உரத்தினுடனாவது அல்லது தனியாகவாவது சோடியம் நைட்ரேட்டின் குணம்.

சோதனையிலிருந்து வரும் விஷயங்கள்.

1. கரும்பு வெட்டின தூர்களிலிருந்து பயிர் உண்டாகுவது.

2. சி.ஓ.-213, 243, 281, 285, பி.ஓ.ஜெ.-2878 முதலிய கரும்புத் தினுசுகளுக்கு குறைச்சலாக தண்ணீர் பாய்ச்சி அவைகளின் இடையையும் குணத்தையும் கவனிப்பது.

3. இளம் கரும்பு பயிர்கள் மூலம் சுருசுருப்பாய் வளர்க்கக்கூடிய விதைக் கரும்புகளை அதிகரித்தல்.

4. சோகை உரித்து, சாரங்கட்டுவதின் குணதோஷ லாபநஷ்டங்கள்.

5. தேவையான தூரத்தைக் கண்டுபிடிக்கவேண்டிய சோதனைகள்.

மற்ற பயிர்கள்.—(1) புதிய தினுசு கொடுப்பதற்காக அநேக தினுசு மணிலா, எள்ளு, கேழ்வரகு இவைகள் சோதனை செய்யப்பட்டுவருகின்றன.

(2) நெல் முதலிய பயிர்களுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டும் என்று கண்டுபிடிப்பதற்கு சோதனைகள் செய்யப்பட்டுவருகின்றன.

(3) அநேகவிதமான தண்ணீர் இறைக்கும் யந்திரங்கள், கலப்பைகள், கருவிகள், வேலை செய்யக்கூடிய ஆயுதங்கள் இவைகளை உபயோகித்து எதற்கு எது சௌகரியம் என்று கண்டுபிடிப்பதற்கு பரீக்ஷைகள் செய்யப்பட்டுவருகின்றன.

காளஹஸ்தி விவசாய பள்ளிக்கூடப் பண்ணை.

சித்தூர் ஜில்லா.

காளஹஸ்தி விவசாயப் பள்ளிக்கூடப்பண்ணை திருப்பதி-காளஹஸ்தி ரோட்டில் காளஹஸ்தி ஊரிலிருந்து 3 மைலுக்கு அப்பாலும், காளஹஸ்தி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 2 மைல் தூரத்திலும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பண்ணை 1926-ம்௵த்தில் ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பண்ணை 30 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ளது. இதில் 9 ஏக்கர் நஞ்சையும், 5 ஏக்கர் 55 செண்ட் புஞ்சையும், 4 ஏக்கர் 80 செண்ட் தோட்டக்கால் நிலமுமாகவும், மற்ற நிலங்கள் ரோடுகளாகவும் கட்டடங்களாகவும் இருக்கிறது. ஊரத்தூர் ஏரி மேலணையிலிருந்து நஞ்சைக்கு தண்ணீர் பாய்கிறது. இத்துடன், 10-ம் நெம்பர் வயலிலிருக்கும் கிணற்றிலிருந்தும் தண்ணீர் இறைக்கப்படும். 20-ம் நெம்பர் வயலில் இரண்டு கவலைகள் போடப்பட்ட கிணற்றின் வசதியால் தோட்டக்கால் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. இவ்விடத்திற்கு சராசரி ஒரு வருஷத்திற்கு 55 சேர் மழை பொழிகிறது. இதில் வடகிழக்கு மழைகாலத்தில் 100-க்கு 60 பங்கும், தென்மேற்கு மழை காலத்தில் 100-க்கு 30 பங்கும், மற்றவை கோடைகாலத்திலும் கிடைக்கிறது. இப்பண்ணை நிலங்களின் மண் மிகவும் களராகவும், மேல் மண் மணலாகவும் அடிமண் கெட்டிக் களியாகவும் இருக்கிறது. இப் பண்ணை ஒரு விவசாயப் பள்ளிக்கூடத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இன்னும் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கவில்லை. இப்பள்ளிக்கூடத்தில் எவ்விதமான படிப்பு கற்றுக்கொடுக்கவேண்டியது என்பது இன்னும் நிச்சயிக்கப்படவில்லை. மிராசுதார்களின் படிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஒழுங்காக சாகுபடி செய்ய பழக்கப்படுத்தப்படும். இதுவுமல்லாமல், சில செகண்டரி வாத்தியார்களுக்கு ஒரு வருஷம் விவசாய சமாசாரங்களை இங்குக் கற்றுக்கொடுத்தால், அவர்கள் பிற்பாடு பள்ளிக்கூடங்களில் நன்றாக சாஸ்திரப் பிரதம படிப்பை சொல்லிக்கொடுக்கக்கூடும்.

தற்சமயம் இப்பண்ணையில் முக்கியமான வேலை என்னவென்றால், புஞ்சை நிலங்களில் குப்பை, மக்கின செத்தை, ஏரிவண்டல் முதலியவைகளை அடித்தும், தோட்டக்கால் நிலங்களில் காராமணி, கொள்ளு முதலிய பசுந்தாள் உரப்பயிர்களை மடக்கி உழுதும், நஞ்சை நிலங்களில் நல்ல வடிகால் வசதியை கவனிப்பதுடன், பசுந்தாள் உரப்பயிர்கள், பசுந்தழைகள் முதலியவைகளை மடக்கி உழுது, இவ்வாறெல்லாம் செய்து, நிலத்தி

லுள்ள களரை சீர்திருத்தப்படுகிறது. மிகவும் ஜாக்கிரதையாக வருஷா வருஷம களரை சீர்திருத்தி இப்பொழுது லாபம் தரக்கூடிய பயிர்களாகிய கரும்பு, மணிலா, நெல், வாழை முதலியவைகளை பயிர்செய்ய இந்நிலங்கள் லாயக்காக இருக்கின்றன.

பண்ணையில் என்ன பார்க்கலாம், எப்பொழுது பார்க்கலாம்.

ஜனவரி - பிப்ரவரி.—மானவாரி நெல் அறுவடை, வாடன்சம்பா, கோயபத்தூர் நெ. 2, ஜி.இ.பி. 24, கோ. 5, காசிப்பிச்சோடி இவைகளையும், புழுதிக்கால் நெல்களாக பார்க்கலாம். வாழை நடவு, கேசரி நெல் நடவு, பின்பருவ நெல் தினுசுகளான கோ. 10, ஆடுதுரை 3, எம்.டி.யு. 9, ஒட்டுச்சேர்த்த கரும்பு தினுசுகளாகிய கோ. 290, கோ. 281, கோ. 419, பி.ஒ.ஜே. 2878 முதலியவைகளையும், பசுந்தாள் உரப்பயிர்களான சணல், தைஞ்சா, கொள்ளு இவைகள் விதைப்பதையும் பார்க்கலாம்.

மார்ச்சு - ஏப்ரல்.—சும்மா இருக்கப்பட்ட புஞ்சை நிலங்களுக்கும், தோட்டக்கால் நிலங்களுக்கும் எரிவண்டல் அடிப்பது, புல் இருக்கும் இடங்களிலும், வாழை இருக்கும் இடத்திலும் இரும்புக்கலப்பையால் உழுவது, ஜூனியர் கலப்பையால் ஓட்டுவது, வரப்பு மடிக்கும் கலப்பையை உபயோகப்படுத்துவது. கரும்பு அறுவடை, வெல்லம் காய்ச்சுவது, கரும்பு நடவு, எச்.எம். குண்டகாவினால் மணிலா அறுவடை செய்வது, கேழ்வரகு அறுவடை செய்வது.

மே - ஜூன்.—சும்மா இருக்கப்பட்ட நிலங்களை இரும்புக் கலப்பைகளால் உழுதல், நாத்தங்கால் தயார் செய்தல், கேழ்வரகு, கம்பு நடவு, தக்கைப் பூண்டை அறுத்து மக்கவைத்தல், வெங்காய நாத்து தயார் செய்வது, கரிகாய் நாத்துகளும் தயார் செய்வது, வாடன்சம்பா நிலத்துக்கு எரு விட்டு கலப்பையால் உழுதல்.

ஜூலை - ஆகஸ்ட்.—கேழ்வரகு பயிருக்கு இரும்பு களைவாரிகளால் களை கொத்தி கொடுப்பது. வாடன்சம்பா, ஜி.இ.பி.-24, கோயம்பத்தூர் நெ. 2, இவைகளை கொருவினால் விதைப்பது. நஞ்சையில் தக்கைப்பூண்டு பயிராக இருப்பது. துவரை, ஆரிகா இவ்விரண்டையும் கலப்பு பயிராக கொர்ரு என்னும் விதைக்கலப்பையாலும், அக்காடியினாலும், சால் சாலாக 5 வரிசை ஆரிகா பயிருக்கு 1 வரிசை துவரை பயிராக விதைப்பது. மானவாரி நிலங்களில் பூதம் நெல்லையும், துவரையையும் கலப்பாக விதைப்பது. ஆமணக்கு விதைப்பது. தினையையும், கம்பையும் விதைக்காகவும் மாட்டுத் தீவனத்திற்காகவும் விதைப்பது. வெங்காய நாத்து நடுவது.

செப்டம்பர் - அக்டோபர்.—கேழ்வரகு கம்பு அறுவடை செய்வது, விதைக்காக செடிகள் பொறுக்கி எடுப்பது. வாடன்சம்பா பயிராக இருப்பது. நஞ்சையில் தக்கைப்பூண்டு, பசுந்தாள் பயிராக இருப்பது. அறுவடை செய்யப்பட்ட மானவாரி, தோட்டக்கால் நிலங்களில் காராமணி, கொள்ளு, இவைகளை பசுந்தாள் உரத்திற்காக விதைப்பது. தினை, வெங்காயம், கம்பு, ஜி.இ.பி.-24, துவரை இவை பயிராக இருப்பது. "பண்ட்லமானு" என்னும் மர களைவாரியால் புழுதிக்கால் நெல்லுக்கு களை கொத்தி கொடுப்பது. கோயம்புத்தூர் நெ. 2 நெல் விதைப்பது. அன்னுசிசெடியை பயிராகப் பார்க்கலாம்.

நவம்பர் - டிசம்பர்.—மாட்டுத் தீவனத்திற்காக விதைக்கப்பட்ட கம்பை அறுவடை செய்வது. தக்கைப்பூண்டை அறுவடை செய்வது. எச்.எம். குண்டகாவினால் மணிலா அறுவடை செய்வது. நஞ்சை நிலத்தில் தக்கைப் பூண்டை பசுந்தாள் உறமாக மடக்கி உழுவது. நஞ்சைக்கு கேசரி, ஜி.இ.பி.-24 இவைகளை நாத்துவிடுவது. கரும்பு தினுசுகள் பயிராக இருப்பது. மாட்டுத் தீவனப்பயிர்களைக்கொண்டு, "சைலேஜ்" செய்வது.

வயல்களெல்லாம் இன்னும் ஒன்றுபோல் இல்லாததினாலும், பூசாரம் ஏற்றத்தாழ்வாய் இருப்பதினாலும், இப்பண்ணையில் எவ்வித ஆராய்ச்சியும் இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், நெல்லை விதைத்தும், நடவு நட்டும், கொர்ரு கலப்பையால் விதைத்தும், இவைகளில் ராசி எவ்வளவு அதற்கு கிடைக்கிறதென்றும் சிலவு எவ்வளவு ஆகிறதென்றும் தெரிய ஒருவிதமான பரீக்ஷை செய்யப்படுகிறது. விரும்புவோர் வந்து பார்க்கலாம்.

எஸ். யூ. கான்,
விவசாய டிப்டி டைரெக்டர், நாலாவது சர்க்கிள்.

3. (c) 5-வது சர்க்கிள்.

திருச்சிறுப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய இரண்டு ஜில்லாக்களும் இச்சர்க்கிளில் அடங்கியுள்ளன. திருச்சிறுப்பள்ளியைத் தலைமை ஸ்தானமாகக் கொண்டுள்ள ஒரு விவசாய டிப்யுடி டைரெக்டரவர்களுடைய ஆதிக்கத்திலிருக்கிறது. இச்சர்க்கிள் ஆபீஸ் புத்தூரிலுள்ள பழய போலீஸ் ஆஸ்பத்திரி கட்டிடத்திலிருக்கிறது. அவர்களுடைய மேல்விலாசம்: விவசாய டிப்டி டைரெக்டர், 5-வது சர்க்கிள், திருச்சிறுப்பள்ளி.

(a) பிரசாரம்.

தற்சமயம் ஒவ்வொரு தாலூகாவிலும் மூன்று, நான்கு கிராமங்களில் வேலை செய்வதைவிட்டு புதிய முறை ஒன்று அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர் உள்ள ஒவ்வொரு தாலூகாவிலும் எட்டு மத்திய கிராமங்களைப் பொருக்கியெடுத்து ஒவ்வொரு மத்திய கிராமங்களை சேர்ந்த ஐந்து கிராமங்களில் வேலை நடக்கிறது. இவ்வாறு நாற்பது கிராமங்களில் டிமான்ஸ்ட்ரேடர் 2, 3 வருஷங்களுக்கு தான் நேராக வேலை நடத்தின பிறகு புதிய கிராமங்கள் எடுக்கப்படும். இவைகளைத் தவிர மற்ற கிராமங்களுக்கும் டிமான்ஸ்ட்ரேடர் தேவையானால் போகலாம். இம்முறைப்படி 10 வருஷ காலத்திற்குள் தாலூகாவிலுள்ள எல்லா கிராமங்களிலும் வேலை தீவிரமாக நடந்துவிடுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. கிராமத்தில் பயிர்களுக்குள்ள எல்லாவித அபிவிருத்தி முறைகளையும் நிரூபித்துக் காட்டுவதற்கு ஒவ்வொரு மத்திய கிராமங்களிலும் 5 அல்லது 6 சோதனை பிளாட்டுகள் உண்டாக்கப்படும்.

தற்சமயம் கீழ்கண்ட இடங்களில் டிமான்ஸ்ட்ரேடர்கள் டிப்போக்களுடன் இருக்கிறார்கள். மத்திய கிராமங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன :—

திருச்சிறுப்பள்ளி ஜில்லா.

தாலூகா.	டிமான்ஸ்ட்ரேடர் இருப்பிடம்.	வேலை நடக்கும் இடம்.	டிமான்ஸ்ட்ரேடர் இல்லாத இடங்கள்.
1 திருச்சிறுப்பள்ளி.	திருச்சிறுப்பள்ளி.	திருப்புலாதுரை, வெள்ளி திருமுத்தம், திருவாளர் சோலை, அகரம், அரசங்குடி, எட்டரைகொப்பு, குத்தப் பட்டு அரியலூர், செம்புட்.	..
2 லால்குடி ..	லால்குடி ..	கிளியநல்லூர், இருங்களூர், சிருகனூர், லால்குடி, அரியூர், வீரகலூர், வெள்ளனூர், கள்ளகுடி.	..
3 குளித்தலை ..	குளித்தலை ..	மாயனூர், மகாதனபுரம், வைகநல்லூர், மருதூர், பொய்யாமணி, மணப்பாரை, வையம்பட்டி, கழுகூர், உடையபட்டி.	
4 கரூர்	கரூர்	கரூர், வெள்ளையனே, நேரூர் பரமதி, புகளூர், சின்ன தாராபுரம், உப்பிடமங்கலம், கூடலூர்.	..
5 முசிரி	முசிரி	ஆமூர், முசிரி, தொட்டியம் காட்டுபுத்தூர், ஜம்புநாதபுரம், தாத்தையங்கார்பேட்டை, வீரச்செட்டிபாளையம், துரையூர்.	..
6 பெரம்பலூர் ..	பெரம்பலூர் ..	பெரம்பலூர், பேராளீ, நாரணமங்கலம், செட்டிகுளம், நக்காசீலம், அரும்பாவூர், வழிகொண்டபுரம், ஒகளூர்.	..
7 உடையார்பாளையம்.	அரியலூர் ..	திருமானூர், அரியலூர், செந்துரை, விளாங்குடி, உடையார்பாளையம், ஆண்டிமடம், டி. பளூர், கங்கைகொண்ட புரம்.	..

தாலுகா.	டிமான்ஸ்ட்ரேடர் இருப்பிடம்.	வேலை நடக்கும் இடம்.	டிமான்ஸ்ட்ரேடர் இல்லாத இடங்கள்.
	தஞ்சாவூர் ஜில்லா.		
1 தஞ்சாவூர் ..	தஞ்சாவூர் ..	திருக்காட்டுபள்ளி, ராயம்பேட்டை, அம்மன்பேட்டை, ராமபுரம், சூரக்கோட்டை, வண்ணார்பேட்டை, பூதலூர், வள்ளம்.	அரந்தாங்கி.
2 பாபநாசம் ..	பாபநாசம் ..	சந்திரசேகரபுரம், நல்லூர், உத்தமதானபுரம், கபிஸ்தலம், அகரமாங்குடி, காளாஞ்சேரி, திருக்கருகாவூர், ஐயம்பேட்டை.	..
3 கும்பகோணம் ..	கும்பகோணம் ..	உடையலூர், மருதநல்லூர், கும்பகோணம், சுவாமிமலை, கோவிலாசேரி, திருப்பணேந்தல், கூத்தனூர், திருமங்கல்குடி.	..
4 மாயவரம் ..	மாயவரம் ..	மாயவரம், மங்கநல்லூர், தேரளந்தூர், குத்தாலம், மணமேடு, செம்பனூர் கோயில், திருக்கடையூர், டிரான்குபார்.	..
5 சியாழி ..	சியாழி	சியாழி, குன்னம் ஹனுமந்தபுரம், எடகுடிவேதபட்டி, திருவெங்காடு, மாதனம், வடகால், பனங்காட்டாங்குடி.	..
6 நன்னிலம் ..	நன்னிலம் ..	ஊர்குடி, செருக்கலத்தூர், கடம்பங்குடி, கடகம், கூத்தனூர், நன்னிலம், பள்ளிவிலக்கம், வீர்குடி.	..
7 நாகப்பட்டணம்.	திருவாரூர் ..	மூளங்குடி, மேட்டிப்பாலம், கொரடாச்சேரி, வழிவலம், வச்சிக்கரை, நமசிவாயபுரம், சிக்கல், இலுப்பூர்.	..
8 மன்னார்குடி ..	மன்னார்குடி ..	சித்தன்குடி, பூதமங்கலம், பூவனூர், மேலநத்தம், கோவில்வெண்ணி, நெடுவக்கோட்டை, குன்னியூர், ஒவர்சேரி.	..
9 திருத்துரைப் பூண்டி.	திருத்துரைப் பூண்டி.	நெடும்பலம், உப்பூர், மேட்டுபாளையம், தென்பட்டி, கரம்பையூர், நீர்முலை, தென்னம்பலம், வேதாரண்ணியம்.	..
10 பட்டுக்கோட்டை ..	பட்டுக்கோட்டை ..	பட்டுக்கோட்டை, பாப்பாநாடு, தாமரைக்கோட்டை, கண்ணுகுடி, முடுக்கூர், ராஜமடம், ஆண்காடு, பண்ணைவயல், திருச்சிற்றம்பலம், நம்பி வயல்.	..
11 பட்டுக்கோட்டை ..	ஒரத்த நாடு ..	ஒரத்தநாடு, சைதம்பலபுரம், வடுவூர், மஹாதானபுரம், தொண்டரம்பட்டு, நெமெலி, வெட்டிக்காடு.	..

3. இச்சர்க்கிளில் விவசாய அபிவிருத்தி சம்பந்தமாக நடந்துவரும் வேலைகள்.—

(a) தொழு எருவை வீணாக்காமல் சரியான முறைகளில் சேகரித்து மடித்துப் போதும்படி செய்வது.—எருவைச் சரியாக சேகரிக்காதவர்கள் தங்கள் சொத்தில் அதிக பாகத்தை இழக்கிறார்களென்று சொல்லவேண்டும். ஆகையால் டிமான்ஸ்ட்ரேட்டர்கள் அதிக முயர்ச்சி யெடுத்து எருவை சரியாக சேகரிக்கும்படி சமுசாரிகளுக்கு சொல்லுகிறார்கள்.

(b) **பசுந்தாள் உரப்பயிர்களின் உபயோகமும் அவைகளை உண்டாக்குதலும்.**—தக்கைபூண்டு, சணப்பு, கொளிஞ்சி, அவுரி இவை நான்கையும் சமுசாரிகள் தங்களுடைய நிலங்களிலேயே உண்டுபண்ணும்படி போதிக்கப் படுகிறார்கள். நஞ்சைகளுக்கு இவைகள் மிகவும் மலிவான உரமாகும்.

(c) **ரசாயன உரங்களை அதிகமாக உபயோகப்படுத்தல்.**—தொழு எரு மிகவும் குறைச்சலாக கிடைப்பதால் அதை குறைத்து அத்துடன் ரசாயன எருக்களாகிய அமோனியம் சல்பேட், சூபர்பாஸ்பேட், நைசிபாஸ் முதலிய உரங்களை சேர்த்து உபயோகப்படுத்தலாம்.

ரசாயன எருக்களை தனியாக உபயோகப்படுத்த கூடாதென்று எச்சரிக்கப்படுகிறது. ஆனால் பசுந்தாள் உரம், மாட்டெரு, பிண்ணாக்கு முதலியவைகளுடன் சேர்த்து உபயோகிக்கலாம்.

(d) **அபிவிருத்தி செய்யப்பட்ட விவசாய கருவிகளை உபயோகித்தல்.**—இரும்பு கலப்பைகளில் கூப்பர் கலப்பை நெ. 11, 25 முதலியவைகளை உழுது காண்பித்து அவைகளின் நன்மையை சமுசாரிகளுக்கு சொல்லப் படுகிறது. விவசாய டிபார்ட்மெண்டு ஆபீஸர்கள் கலப்பைகளை வாங்குவதற்கு தக்காவி கடன்கள் கொடுப்பதால் ஒவ்வொரு சமுசாரியும் இரும்பு கலப்பைகள் வாங்கி உபயோகிக்கலாம்.

(e) **விருத்தி செய்யப்பட்ட நெல் தினுசுகளை அதிகப்படுத்தி சமுசாரிகளுக்கு கொடுத்தலும், நாத்தங்காலில் குறைச்சலாக விதை பரவுதலும், நடுகை நடுதலும்.**—கட்டசம்பாவைத் தவிர மற்ற முக்கியமான ஜாதிகளில் பொறுக்கு விதைகளிருக்கின்றன. இரண்டு வருஷங்களுக்கு முன் உண்டாக்கப்பட்ட கட்ட சம்பா பொறுக்கு விதை இப்போது அதிகமாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி பண்ணையிலிருந்து கொண்டுவரப்பட்ட விதைகள் சர்க்கிளுக்கு போதிய அளவில்லாததால் மிராஸ்தாரர்களுக்கு சீட் பாரம் நிபந்தனையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அவர்களுடைய சிநேகிதர்களுக்கும் மற்றவர்களுக்கும் தங்களுடைய மகசூலிலிருந்து சப்ளை செய்வார்கள். நாத்தங்காலில் குறைச்சலாக விதை பரவுவதற்கும் பின்னால் பிடுங்கி 2, 3 நாத்துகள் சேர்த்து நடுவதற்குக் கீழ்கண்ட விகிதத்தை அனுசரிக்கலாம் :—

(1) 10 படி சம்பா விதையை 8 அல்லது 10 செண்டு நாத்தங்காலில் பாவினால் ஒரு ஏக்கர் நடுவதற்கு சரியாக இருக்கும்.

(2) 15 படி குருவை விதையை 10 செண்டு நாத்தங்காலில் பாவினால் ஒரு ஏக்கர் நடுவதற்கு சரியாகயிருக்கும்.

(f) **சிறந்த கரும்பு தினுசுகளை சிறந்த முறையில் சாகுபடி செய்தல், எருவிடல், வெல்லம் காய்ச்சல்.**—சிறந்த கோயம்புத்தூர் கரும்புகரணைகள் சமுசாரிகளுக்கு கொடுக்கப்படுகின்றன. கரும்பு சாகுபடி குறைச்சலாகவுள்ள தஞ்சாவூர் ஜில்லாவில், காய்ச்சல், தண்ணீர் தேங்கல் முதலியவைகளை பொருட்படுத்தாமல் வளரக்கூடிய கரும்பு தினுசுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அபிவிருத்தி செய்யப்பட்ட முறைகளில் கரும்பு நடுதல், எருவிடுதல், வெல்லம் காய்ச்சல் இவைகளை சமுசாரிகளுக்குப் போதிக்கப் படுகிறது.

(g) ஒவ்வொரு வருஷமும் கம்போடியா பருத்தியிலும், கருங்கண்ணி பருத்தியிலும் நல்ல பொருக்கு விதைகள் கோயம்புத்தூரிலிருந்து வரவழைக்கப்பட்டு சமுசாரிகளுக்கு கொடுக்கப்படுகின்றன.

(h) ராகி, சோளம் இவைகளில் பொருக்கு விதைகளும் நிலக்கடலையில் ஏ.எச். 25, எச்.ஜி. 1 தினுசுகளும் சமுசாரிகளுக்கு கொடுக்கப்படுகின்றன.

(i) **நிருபணை பிளாட்டுகள்.**—சிறந்த விவசாய முறைகள் சமுசாரிகளின் நிலங்களில் அவர்களுடைய சிலவிலும் விவசாய உத்தியோகஸ்தர்கள் மேற்பார்வையிலும் நிரூபித்து காட்டப்படுகின்றன. அநேகமாக எல்லா

மத்திய கிராமங்களிலும் இம்மாதிரி நிரூபணை பிளாட்டுகள் வெவ்வேறு பயிர்களுக்கும் போடப்படுகின்றன. இந்த நிரூபணைகளின் முழுப் பிர யோஜனத்தை விவசாயிகள் அடையும்பொருட்டு இவைகளை விஸ்தாரமாக செய்துபார்க்க விவசாய ஐக்கிய சங்கங்களை ஏற்படுத்தி சங்கத்தின் அங்கத் தினர்களின் நிலத்திலாவது குத்தகைக்கு எடுத்து வேறு நிலங்களிலாவது நிரூபித்து காட்டப்படுகிறது.

(j) **அதிக லாபம் தரக்கூடிய பயிர்களை தஞ்சாவூரில் பயிர் செய்வது.**—நெல் விலை அதிகமாக இறங்கியவுடன் அதிக லாபம் கொடுக்கக்கூடிய பயிர்களை சாகுபடி செய்வதின் அவசியத்தை தஞ்சாவூர் சமுசாரிகள் உணர்ந்தார்கள். புஞ்சை பயிர், தோட்டப் பயிர், காய்கறி முதலியவைகளை மாற்றி மாற்றி நஞ்சையில் சாகுபடி செய்யும் விஷயம் ஆடுதுரை ஆராய்ச்சி பண்ணையில் கவனிக்கப்பட்டுவருகிறது. இப்பண்ணை 5-வது சர்க்கிள் டிப்டி டைரெக்டர் அவர்கள் ஆதீனத்திலிருக்கிறது.

(k) விதைகள், உரங்கள், கரும்பு கரணைகள், மற்றும் உதவிகள் வேண்டியவர்கள் அருகிலுள்ள டிமான்ஸ்ட்ரேட்டருக்கு மனு செய்துகொள்ளவேண்டியது. கடனுக்கு வியாபாரம் செய்வதில்லை.

4. ஒவ்வொரு டிமான்ஸ்ட்ரேடர் இருக்கும் இடங்களில் டெப்போ உண்டு. இதில் பசுந்தாள், ஷி விதைகள், நெல் தினுசுகள், விவசாய கருவி முதலியவைகள் விலைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

5. பயிர்களில் விழக்கூடிய பூச்சிகளையும் நோய்களையும் டிமான்ஸ்ட்ரேடர்கள் கவனிப்பார்கள். முக்கியமான விஷயங்களை ஆடுதுரையிலுள்ள எண்டமாலஜி டிமான்ஸ்ட்ரேடரும், மைகாலஜி டிமான்ஸ்ட்ரேடரும் கவனிப்பார்கள். இவர்களுடைய உதவியை நாடினால் ஆடுதுரை ஆராய்ச்சி பண்ணை தலைவருக்காவது, அல்லது 5-வது சர்க்கிள் டிப்டி டைரெக்டருக்காவது மனுச் செய்துகொள்ளவேண்டியது.

6. உள்நாட்டு கால் நடைகளை அபிவிர்த்தி செய்வதற்கு விவசாயிகளையும், ஸ்தல ஸ்தாபனங்களையும் பொலிகாளைகளைப் பிரிமியா திட்டத்தில் வளர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. வருஷமொன்றிற்கு ரூ. 100 வீதம் 3 வருஷங்களுக்கு சர்க்கார் பண்ணையில் வாங்கின பொலி காளைகளுக்கு பிரிமியம் கொடுக்கப்படுகிறது.

7. **காவேரி-மேட்டூர் பாசன விஸ்தீர்ணம்.**—இந்திய பிராந்தியத்தில் வேலை வெகுவாய் நடத்தப்பட்டுவருகிறது. இந்த விஸ்தீர்ணத்தில் அதிக பாகமாகிற பட்டுக்கோட்டை தாலூகாவை, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி இந்த மூன்று ஊர்களைத் தலைமையிடமாகக் கொண்ட மூன் பிரிவுகளாகப் பங்கிட்டு ஒவ்வொன்றிலும் ஒரு விவசாய டிமான்ஸ்ட்ரேட்டரை நியமித்திருக்கிறார்கள். மேம்படுத்தப்பட்ட விவசாய கருவிகள், ஏற்ற நெல் தினுசுகள், தன வரவை யதிகரிக்கக்கூடியவைகளான கரும்பு, வாழை, மஞ்சள், பருத்தி முதலிய பயிர்களை விளைவிப்பது முதலான விஷயங்களை நிருபித்துக்காட்ட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

8. **கைத்தொழில் இலாகா.**—தஞ்சாவூரில் உதவி கைத்தொழில் இஞ்சினீயர் இருக்கிறார். தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள் இவரைச் சேர்ந்தவை. இரண்டு ஜில்லாக்களுக்கு ஒரு சூபர்வைசர் இருக்கிறார். கிணறு வெட்டுவதற்கு கருவிகளுக்கும், தண்ணீர் இறவை இயந்திரங்கள் வாங்க கடன் சம்பந்தப்பட்ட விஷயங்களை கவனிப்பதற்கும், புதிதாக வாங்கின இயந்திரங்களை கூட்டுவதற்கும் கைத்தொழில் இலாகாவிற்கு மனுச் செய்துகொள்ளவேண்டியது.

9. **கூட்டுறவு இலாகா.**—ஒரு சப்-டிப்டி ரெஜிஸ்ட்ராரின் உதவியுடன் ஒரு டிப்டி ரெஜிஸ்ட்ரார் திருச்சினாப்பள்ளியிலும், தஞ்சாவூரிலும் இருக்கிறார். நாணய சம்பந்தமானவையும், நாணய சம்பந்தமில்லாதவையுமான ஐக்கிய சங்கங்களை ஏற்படுத்தல், அவைகளை ரிஜிஸ்தர் செய்தல்

முதலிய வேலைகளுடன் இச்சங்களின் வேலைகளையும் மேற்பார்த்துவருகிறார்கள் டிப்டி ரெஜிஸ்ட்ரார்கள். இவர்களின் மேல்விலாசம் அடியிற் கண்டவாறு :—

(1) கூட்டுறவு சங்கங்களின் டிப்டி ரிஜிஸ்ட்ரார், வில்லியம்ஸ் ரோடு, கண்டோன்மெண்டு, திருச்சினுப்பள்ளி.

(2) கூட்டுறவு சங்கங்களின் டிப்டி ரிஜிஸ்ட்ரார், கூட்டுறவு கட்டடங்கள், மேல வீதி, தஞ்சாவூர்.

10. திருச்சினுப்பள்ளி, தஞ்சாவூர் இந்த இரண்டு ஜில்லாவுக்கும் ஒரு ஜில்லா கால்நடை ஆபிஸர் திருச்சினுப்பள்ளியிலிருக்கிறார்.

11. விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்களின் டிப்போக்களில் கிடைக்கும் சாமான்களின் ஜாபிதா கீழ் கொடுத்திருக்கிறது. காலக் கிரயப்படி விலைமாறலாம். அருகிலுள்ள டிமான்ஸ்ட்ரேடருக்காவது டிப்டி டைரெக்டருக்காவது மனுச் செய்து சாமான்களை பெற்றுக்கொள்ளலாம்.

சாமான்களின் பெயர்.

கொளிஞ்சி விதை.	கருங்கண்ணி பருத்தி விதை.
தக்கை பூண்டு	வெங்காய விதை.
சணப்பு.	நெல் விதை தினுசுகள்.
பில்லிபெசரா.	கூப்பர் கலப்பை நெ. 11.
அவரி.	கூப்பர் கலப்பை நெ. 25.
வேர்க்கடலை.	கூப்பர் கலப்பை நெ. 26.
கம்போடியா பருத்தி விதை.	

12. விவசாய விஷயமாக இலவசமாக ஆலோசனை கூறப்படும்.

(b) ஆராய்ச்சி வேலை.

1. பரிசோதனைப்பண்ணை எப்பொழுது எவ்விடத்தில் வைக்கப்பட்டதென்பது.—1922-ம் வருஷம் ஆடுதுரையில் ஆராய்ச்சிப்பண்ணையொன்று வைக்கப்பட்டது. தஞ்சாவூர் - மாயவரம் ரெயில்வே லைனிலுள்ள ஆடுதுரை ஸ்டேஷனுக்கு தெற்கே இரண்டு பர்லாங்கு தூரத்திலுள்ள மருத்துவக்குடியென்ற கிராமத்தில் இப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி பண்ணையின் மொத்த விஸ்தீர்ணம் சுமார் 50 எக்கர் ; அதில் சுமார் 45 எக்கர் சாகுபடியிலிருக்கின்றன. பாக்கி நிலத்தில் கட்டடங்கள், ரோட்டுகள், உயர்த்திடல்களுள.

பண்ணையில் எப்பொழுது என்ன பார்க்கலாம் என்பது.

ஜுன்-ஜுலை.—தனிக்குருவை, ஊடு குருவைகளுக்காக புழுதி நாற்றங்கால் தயாரித்தல். குருவை வயல்களில் தக்கைப்பூண்டு பிடுங்கி உழுது மக்கவைப்பது. குருவைப் பயர் நடவு. அதிகமான பசுந்தாள் உரம் போட்டு சம்பாப் பயிருக்கு நாற்றங்கால் தயார் செய்தல். சம்பா வயல்களுக்கு சணல், தக்கைப்பூண்டு, பில்லிபெஸரா, ஸோயாபீன், காராமணி முதலிய பசுந்தாள் உரப்பயிர்கள் உண்டாக்குவது ; 1, 2 மாதங்கள் வளர்ந்த இளங் கரும்புப் பயிர், சம்பா வயல்களில் கம்போடியா பருத்தி இளம் மணிலாக்கொட்டைப் பயிர் இதுகளைப் பார்க்கலாம்.

ஆகஸ்டு-செப்டம்பர்.—சம்பா நாற்றங்கால், பசுந்தாள் உரப்பயிர்களைப் பிடுங்கி மடக்கி உழுது சம்பா வயல்களை நடுவது. குருத்து விட்டும், கதிரிலும் அறுவடைக்கு லாயக்காயுமிருக்கிற குருவை நெல் கழனிகள், சீமைத் தக்காளி, பல வேறு ரகங்களான அவரைகள், முள்ளங்கி, சிவப்பு சீமை முள்ளங்கி (காரட்டு), கத்தரி இன்னும் உள்ள நாட்டுக்காய் கறி வகைகள் மேட்டாங்காடுகளில் பயிர் செய்வது. கரும்புக்கு மண் அணைப்பது, பருத்தி பொருநர்குவது, மாட்டுத் தீவனப்பயிர்களான பில்லிபெஸா, கினியாபுல், யானைப்புல் முதலியன, நெல்வயல்களில் மீன் வளர்ப்பது, காய்ப் பிடித்திருக்கும் வேர்க்கடலை, இளம்பருவத்து ஸோயாபீன், குருவை தினுசுகளிலிருந்து கலப்புப் பயிரை களைவது, மஞ்சள் பயிர் இளசாய் இருப்பதுபோன்றனவையெல்லாம் இப்போ பார்க்கத் தகுந்தவைகள்.

அக்டோபர்-நவம்பர்.—குருவைக் காலப் பயிர்கள் அறுவடை, இரண்டாம் போக சாகுபடியும் நடவும் முழு விளைச்சலான சம்பா பயிர், சதுப்பு நிலங்களில் கரும்பு சாகுபடி, நீர்ப்பிடியின்றி வயல்களை வடிகால் ஏற்படுத்திப் பயிர் வளர்ப்பது, பூவும் பிஞ்சியுமாயிருக்கிற வாழை பூராவும் வளர்ந்து முதிர்ந்த மஞ்சள் பயிர், காய்கறிப் பயிர்கள் முக்கியமாய் சீமைத் தக்காளியைப் பார்க்கத்தக்க சமயம் இது. பொறுக்கு நெல் தினுசுகளின் புஷ்பங்களை பரீக்ஷக்காக அடையாளமிடல், இதுவெல்லாம் இப்போ பார்க்கத்தக்கவை.

டிசம்பர்-ஜனவரி.—எல்லா வயல்களிலும் பயிர் செய்யப்பட்டிருப்பதைக் காண ஏற்ற சமயம் இதுவே. பலவேறு வளர்ச்சியோடு கூடின சம்பா பயிர் காணலாம். மொத்தமாய்க் கலவன்களைப் பொறுக்கி யெறிதலும், நல்ல வித்துகளைப் பொறுக்குவதும், தனி முதல் பயிர்களையும், சங்கிரஜாதிப் பயிர்களையும் அவற்றின் குண விசேஷத்திற்காக ஆராய்ச்சி செய்வது. முன்னறுக்கும் சம்பா தினுசுகளின் மாசூல், வாழைத்தார்கள் முற்றுவது, தக்கைப்பூண்டு, கொளிஞ்சி, உளுந்து, பச்சைப்பயறு முதலிய பசுந்தாள் உரப் பயிர்களை அறுவடைக்கு முன் நெல் வயல்களில் விதைப்பது.

பிப்ரவரி-மார்ச்சு.—பொதுவாக சம்பா அறுவடை, அடிப்பு, தூத்துவது, நெல் காயப்போட்டு களஞ்சியம் சேர்ப்பது, காய்கறிகளும், தக்காளியும், இளம் பசுந்தாள் உரப்பயிர்களும், கொள்ளு, காராமணி முதலிய கோதுக்காய் வகைகளும் முன்பயிர் கரும்பு அறுவடை, கரணை வெட்டி வெளியே அனுப்புவதும் கரும்பு கசக்கிச் சாறு பிழிந்து வெல்லம் காய்ச்சுவது. கரும்பு நடுகைக்காக கழணிகளைத் தயார் செய்வது, வாழைத்தார் வெட்டி மாசூல் செய்வது, தக்கைப்பூண்டு, கொளுஞ்சி முதலிய பசுந்தாள் உரப் பயிர்கள், தேன் கூடுகளிலிருந்து தேன் எட்டல்.

ஏப்ரல்-மே.—நெல் வைக்கோலை மாட்டுத்தாம்பு கட்டி சூடு அடிப்பதும், நெல் விதையல் போட்டு. வெளியூர்களுக்கு விதைகளை அனுப்புதல், கரும்பு அறுவடை, கரும்பு கசக்கி சாறு பிழிந்து வெல்லம் காய்ச்சுதல், கரும்புக்கரணை நடுதல், பசுந்தாள் உரப்பயிருக்காக நாற்றங்கால் பூமி சம்பா வயல்களை உழுதல், குருவை நஞ்சையில் தக்கைப்பூண்டு, மஞ்சள் மினுக்கும் யந்திரத்தில் மஞ்சளின் மேல் தோலைப் போக்கி மினுக்கி நயமூட்டுவது. மீன் குட்டத்தில் மீன் பிடிப்பது, வாழைப்பழ வற்றல் செய்வது, அன்னுசி பழுத்திருப்பது, இலவம் பஞ்சு மரங்கள் காய்த்துத் தொங்குவது. மேற்சொன்ன விஷயங்களன்றி, தேன்கூடுகள், பல ஜாதி கோழி வளர்த்தல், கறவைப் பசு மாடுகள், பொலி காளைகள், வேலைக்காளை மாடுகள், எக்குஞ்சுகளைப் பிடிக்கும் பொறி, மீன் குட்டை, இவைகளும் வளர்ந்து நிறகும் வாழை, கரும்பு, பப்பாளி, தென்னை, அன்னுசி, இலவு முதலியவைகள் ஸதாகாலமும் இங்கே பார்க்கலாம்.

இப்பண்ணையில் ஆராய்ச்சியிலிருக்கும் விஷயங்கள்.

துவக்கத்தில் நெல் உற்பத்தி பண்ணையாக ஆரம்பிக்கப்பட்டு 1931-ம் ஹூ வரை அந்த வேலையிலேயே ஈடுபட்டு வந்தது. இதன் பிறகு, நெல் உற்பத்தி வேலை முன் போலவே ஊக்கத்துடன் செய்துவரப்பட்டபோதிலும், பலவேறு துறைகளிலும் இப்பண்ணையில் வேலை நடந்துவருவதால் இப்பண்ணையின் கிரியாம்சம் அதிகப்பட்டிருக்கிறது. அதிக திரவியலாபம் தரத்தக்க பயிர்களான கரும்பு, வாழை, பருத்தி, மஞ்சள், சோயாபீன் இவைகளைத் தனித்தாவது, நெற்பயிருக்குப் பின்னுவது போட்டுப் பயிர் செய்து பார்ப்பது இப்பண்ணையின் தற்கால நோக்கம். மேட்டு பூமிகளில் சீமைத் தக்காளி, அவரை, நாட்டுக்காய்கறி தினுசுகள், இலவம் பஞ்சு, கரும்பு, பருத்தி, அன்னுசிப்பழம் முதலிய பல செடிகளும் அதிக லாபகரமாய்ப் பயிராக்கப்படலாம் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பொதுப்படையாக நிலந் திருத்திப் பயிர் செய்யும் விவசாயத்திற்குத் துணைத்தொழிலாக தேனீ வளர்த்தல், கோழி, பசு மாடுகளை வளர்த்தல், மீன் வளர்ச்சி, வாழைப்பழத்தைப் பதமாக நறுக்கி சரக்காகச் செய்தல் முதலியவைகளும் நடைபெறுகின்றன. நாடோடி குடியானவனுக்கு இம்மாதிரியான சிறு கைத்தொழில்கள் அதிக லாபகரமானவையாயிருக்கும் என்பது எளிதாய் காண்பிக்கப்படுகிறது.

ஆடுதுரை ஆராய்ச்சிப் பண்ணையிலிருந்து வெளியாக்கப்பட்ட பொறுக்கு நெல் தினுசுகளைப்பற்றிய சிறு குறிப்புகள்.

ஆடுது 1. சிவப்பு சிறுமணியிலிருந்து எடுக்கப்பட்டது. தஞ்சாவூர் ஜில்லாவில் முக்கியமான இநத தினுசு முதலில் மங்கநல்லூரில் பொறுக்கப்பட்டது. நாட்டு நடப்பு நெல்லைவிட 100-க்கு 16 வீதம் அதிக மாசூல் கொடுக்கிறது. விதைத்து அறுவடைக்கு வர 175 நாட்கள் ஏக்கர் 1-க்கு சராசரி 2,500 ராத்தல் மாசூல். சீயாழி, மாயவரம், நன்னிலம், நாகப்பட்டணம் தாலூகாக்களில் விஸ்தாரமாகப் பரவி சம்சாரிகளுக்கு திருப்தி அளித்திருக்கிறது. தென் ஆற்காடு ஜில்லா, சிதம்பரம், கூடலூர் தாலூகாகளிலும் பரவி சிலாக்கியமாயிருக்கிறது என்று கருதப்படுகிறது. இரண்டாவது சர்க்கிளிலும் ஏக தேசம் பயிராக்கப்பட்டுவருகிறது. மணி முற்றின பிறகு சிவப்பு தாரைகள் காணப்படுவதால் இந்த நெல் "சிவப்பு சிறுமணி" என்று பெயர் பெற்றது.

ஆடுது. 2. இந்த தினுசும் மங்கநல்லூரில் வெள்ளைச்சிறுமணியிலிருந்து பொறுக்கப்பட்டது. 165 நாட்களில் தயாராய் 100-க்கு 10 வீதம் அதிக மாசூல் கொடுக்கிறது. சாரசரி ஏக்கர் 1-க்கு 2,400 ராத்தல் மாசூல். சிறு உருண்டையான தங்க வர்ணமான மணிகளுடைய இந்த நெல் சாப்பாட்டுக்கு அதிக சிரேஷ்டமானதாக மதிக்கப்படுகிறது. இலங்கையில் இதன் புழுங்கல் நெல்லுக்கு தக்க மதிப்பும் விலையும் உண்டு. தஞ்சாவூர் கீழ்பாகத்திலும் 4-வது சர்க்கிலிலும் விஸ்தாரமாய் பரவி இருக்கிறது.

ஆடுது. 3. தஞ்சாவூர் குருவை தினுசில் முன்னுடியே அறுவடைக்கு வரத்தக்க பொறுக்கு விதை இது. 95 நாட்களில் தயாராய் சராசரி ஏக்கர் 1-க்கு 2,000 ராத்தல் மாசூல் தரக்கூடியது. நெல் சற்று மங்கலான நிறத்தோடும் அரிசி வெள்ளையாயும் இருக்கும் என்றுலும் பருமணியானது சீக்கிரம் அறுவடைக்கு வருவதால் தஞ்சாவூர், திருச்சினுப்பள்ளி ஜில்லாக்களில் ஏராளமாய்ப் பரவி வந்திருக்கிறது. விசாகப்பட்டணம், பல்லாரி முதலிய ஜில்லாக்களிலும், சீக்கிரம் விளையக்கூடிய தினுசு வேண்டிய இடங்களிலெல்லாம் வெகுவாய்ப் பரவி வருகிறது. நெல்லூர் சம்பாவுக்கும் இதற்கும் அதிக வித்தியாசம் நெல் நிறத்தில் காணப்படுவதில்லை.

ஆடுது 4.—தஞ்சாவூர் குருவையின் பொறுக்கு நெல். ஆடுது 3ஐ விட ஒரு வாரம் அதிகரித்துப்பலத்துக்குவருவது. 100-க்கு 10 பங்கு அதிக மாசூல் கொடுக்கும். சற்றே மணி நிரம்பாமல் இருப்பதுபோல் காணப்பட்டாலும் மாசூல் ஒரு விதத்திலும் கம்மியாவதில்லை. சராசரி 2,300 ராத்தல் மாசூல் ஏக்கர் 1-க்கு கொடுக்கிறது. ஆடுது 3 ஐபோல் சிவப்பு ராசி நெல்லானுலும் அதி மாதிரி அவ்வளவு கருஞ் சிவப்பாய் இல்லை.

ஆடுது 5.—தஞ்சாவூர், திருச்சினுப்பள்ளிஜில்லாக்களில் பரவலாய் விளைகிற நெல்லூர் சம்பாதினுசின் பொறுக்குவிதை,185 நாட்களில் அறுவடை, 100-க்கு 25 வீதம் அதிக மாசூல் தரத்தக்கது. சராசரி ஏக்கர் 1-க்கு 2,500 ராத்தல் மாசூல். தஞ்சாவூர் மேல் பாகத்தில் அதிகப்பிரபல்யப்பட்டது. நெல்லூர்ஜில்லாவில் விளைகிற மொலகொலு குலுவைவிட சிலாக்கியமானதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் பிசானம் தினுசுப்பயிர்களில் ஒன்றுகப் பரவி வருகிறது. நெல் கருஞ்சிவப்பு நிறமானுலும் அரிசி துய்ய வெள்ளையாயிருக்கிறது.

ஆடுது 6.—மங்கநல்லூரில் பிரதமத்தில் சிவப்பு ஒட்டடத்திலிருந்து பொறுக்கப்பட்டது. 220 நாட்களில் தயாராய் நாட்டு நெல்லைவிட 100-க்கு 15 வீதம் அதிக மாசூல் கொடுக்கிறது. குருவையுடன் "ஊடு" ஆகப் பயிர் செய்கையில் ஏக்கர் 1-க்கு சராசரி 1,400 ராத்தல் மாசூல் தருகிறது. முற்றின மணி சிவப்பு உமியோடிருத்தலால் இந்தப் பெயர் பெற்றது.

ஆடுது 7.—இதுவும் ஒட்டடன் தினுசு பொறுக்கு நெல், ஆனுலும், மேற்சொன்ன 6-ம் நெம்பரைவிட சற்று வெண்மையாய் வைக்கோல் நிறமுள்ளது. 220 நாட்களில் அறுவடைக்குவந்து 100-க்கு 13 வீதம்

அதிக மாசூல் கொடுக்கிறது. "ஊடு" பயிராய்ச் செய்கையில், சராசரி ஏக்கர் 1-க்கு 1,400 ராத்தல் மாசூல் கொடுக்கிறது. மணியின் நுனியில் சிறுமுள் அப்பொழுதப்பொழுது காணப்படலாம்.

ஆடுது 8.—ஆடுது 2-ம் மிளகு சம்பா இவ்விரண்டையும் ரங்கலிதம் பண்ணின ஒட்டு தினுசு, வெள்ளைச் சிறு மணிபோன்ற பொறுக்கு விதை. ஆடுது 2-ம் நம்பரைவிட இரண்டு வாரம் முன்னால் அறுவடைக்கு வருவதால் இலங்கை மார்க்கட்டுக்கு ஏற்றது. இரண்டாம் போக இறுதியில் ஜலத்தட்டு ஏற்படக்கூடிய இடங்களுக்கு ஆடுது 2 நம்பருக்குப் பதிலாக இது பயிராக்கப்படலாம். ஆடுது 2 நம்பரைப்போலவே மாசூல் தருவதோடு சில இடங்களில் அதைவிட அதிகமாகவும் கண்டுமுதல் ஆனதாக தெரிகிறது.

ஆடுது 9.—பூங்கார் தினுசின் பொறுக்கு நெல். 100-க்கு 13-க்கு மேல் அதிக மாசூல் கொடுக்கிறது. லால்குடியில் நடத்தப்பட்ட ஜில்லா சோதனையில் 100-க்கு $30\frac{3}{4}$ பங்கு அதிக மாசூல் கொடுத்தது. முன்னுடியே தண்ணீர் வரத்துள்ள இரங்களில் குருவைக்குப்பதிலாக இது பயிர் செய்யப்படுவதால் குருவையைவிட நெல், வைக்கோல் இரண்டும் அதிகரித்த மாசூல் தருவதாகக் கண்டிருக்கிறார்கள். 112 நாட்களில் தயாராய் ஏக்கர் 1-க்கு 2,500 ராத்தல் சராசரி மாசூல் கொடுக்கிறது.

ஆடுது 10.—காவேரி தீரக்கரையில் கீழ்பாகத்தில் சுமார் 4 லக்ஷம் ஏக்கர் பூமியில் பயிராகிற குரங்கு சம்பா நெல் தினுசின் பொறுக்கு விதை உள் நாட்டு வித்தைவிட 100-க்கு 10 பங்கு அதிகப்பட்ட பலன் கொடுக்கிறது. மணியின் வெளிப்புறம் கருஞ் சிவப்புக் கொடுகள் உண்டு. 166 நாட்களில் அறுவடைக்குத் தயாராய் சுமார் 2,500 ராத்தல் மாசூல் ஏக்கர் 1-க்கு தருகிறது.

ஆடுது 11.—நெல்லூர் சம்பா (அ. 1 இ. பி. 65)விலிருந்து பொறுக்கப்பட்ட பொடிராசி பொறுக்கு விதை 100-க்கு 7 வீதம் அதிகப்பலிதமுடையது. இது பழைய எ.இ.பி. 65 பொறுக்கி விதையைப்பார்க்கிலும் சிலாக்கியமானதால் அதை விரைவில் மாற்றிவிடும். திருச்சுறுப்பள்ளி டெரியாற்றுப் பாசனம், திருநெல்வேலி முதலிய இடங்களில் முக்கியமாய் வியாபித்து வருகிறது. நெல்லூர் ஜில்லாவில் மொலகொலு குலுவைவிட சிலாக்கியமாய்க் காணப்படுவதால் அங்கே சமீபத்தில் இந்த தினுசு கொடுக்கப்பட்டு வருகிறது. 176 நாட்களில் அறுவடை, சராசரி ஏக்கர் 1-க்கு 2,500 ராத்தல் நெல் மாசூல் கொடுக்கிறது.

ஸ்தாபனம், பண்ணையின் இருப்பிடம்.—பட்டுக்கோட்டை விவசாய ஆராய்ச்சிப்பண்ணை—1935-ம் வருஷத்தில் தக்கலாபம் தரத்தக்க பயிர்களை நெல் பயிருக்குப் பின்னும் முன்னும் பயிர் செய்து சோதனைகளாலும் ஆராச்சியாலும் கண்டு பிடித்தும், மேட்டூர் வாய்க்கால் பாசனத்தால் பயிர்களுக்கு தண்ணீர் பாய்த்து தக்க லாபகரமான பயிர்களை உண்டாக்கலாம் என்பதை நிரூபிக்கவும் இப்பண்ணை ஸ்தாபிக்கப்பட்டது. இப் பண்ணை பட்டுக்கோட்டை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு மைல் தூரத்தில் பட்டுக்கோட்டை முத்துப்பேட்டை ரஸ்தாவில் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்டுமெண்டு கட்டடங்களுக்கருகாமையிலிருக்கிறது. 36 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இப் பண்ணையில் 32 ஏக்கர்களில் நஞ்சை, புஞ்சை, தோட்டப்பயிர் சாகுபடி செய்யப்படுகின்றன. மீதமுள்ள பூமியில் ஆபீஸ், களஞ்சியம், மாட்டுக் கொட்டகை, உத்தியோகஸ்தர்களுடைய வாசஸ்தலம், ரஸ்தாக்கள் முதலியவை போடப்பட்டிருக்கின்றன.

எப்பொழுது என்னனென்ன பார்க்கலாம் என்பது.

ஜூன்-ஜூலை.—குருவை விதைப்புக்குப் புழுதிக்கால் நாற்றங்கால் தயார் செய்வது. முதல் போகப் பயிருக்குக்கலக்கத் தெளித்த நாற்றங்கால்களும், சம்பா நாற்றங்கால் தயாரிப்பதும், நஞ்சையில் கரும்பு நடவு,

மாட்டுத் தீவனச் சோளப்பயிர், நஞ்சையில் மஞ்சள் கிழங்கு நடவு, நஞ்சை, புஞ்சை, தோட்ட பூமிகளில் மேலான கலப்பைகளால் உழவு செய்தல். இருபோக நஞ்சை பூமிகளில் குருவைக்குப் பதிலாக சுவல்ப காலத்தில் மாசூலாக கூடிய வேர்க்கடலை தினுசுகள் விளைவிப்பது.

ஆகஸ்ட்-செப்டம்பர்.—சம்பா வயல்கலைத் தயார் செய்து நடவு செய்தல், குருவை நெல் பயிர்கள் பூத்திருக்கும் மேட்டுக்காடுகளில் வேர்க்கடலை விதைப்பு, புஞ்சை தோட்ட பூமிகளில் பருத்தி விதைப்பு, கேப்பை நடவு, சோயா பீன், தூலியா வெங்காயம்.

அக்டோபர்-நவம்பர்.—முதல் போக நஞ்சை அறுவடை. இரண்டாம் போக நடவு. புகையிலை நடவு.

டிசம்பர்-ஜனவரி.—முன் பட்ட சம்பா தினுசுகள் அறுப்பு. கொளுஞ்சி, தக்கைப் பூண்டு, அவுரி, சணல் முதலிய பசுந்தாள் உரப்பயிர்கள் விதைப்பு. வேர்க்கடலைவெட்டிக் கண்டுமுதல் செய்வது. புஞ்சை நஞ்சைகளில் எள் விதைப்பு.

பிப்ரவரி.—இரண்டாம் போக நெற்பயிர்கள் அறுவடை, பசுந்தாள் உரப்பயிர்கள்.

மார்ச்சு-ஜூன்.—விதை வினியோகம், குருவை நாற்றங்கால் தயாரித்தல் புஞ்சை, தோட்டம், நஞ்சை நிலங்கள் மேலான இரும்பு கலப்பைகளால் உழவு. பருத்தி பொருக்குதல், கரும்பு கசக்கி வெல்லம் காய்ச்சுதல்.

சதா காலங்களிலும்.—பூமியை சுத்தமாய் வைத்துப் பயிர் செய்தல், மாட்டுச் சாணத்தையும் மூத்திரத்தையும் உலர்ந்த மண்ணில் சேகரித்தல், மாட்டு எருவை பத்திரமாக கூட்டி காப்பாற்றுதல், மாட்டுத் தீவன விஷயம், மேலான உழவேத்தனங்கள், பீச்சியடிக்கும் யந்திரங்கள், இதுபோன்ற பலவேறு தட்டு முட்டுகளும் விஷயங்களும்.

என். எஸ். குழந்தைசாமி பிள்ளை,
விவசாய டிப்டி டைரக்டர், 5-வது சர்க்கள், திருச்சிறுப்பள்ளி.

3. (f) 6-வது சர்க்கிள்.

1. ஆறுவது சர்க்கில், மதுரை, இராமனுதபுரம், திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்கள் அடங்கியது. இது மதுரையிலிருக்கும் விவசாய டிப்டி டைரெக்டரவர்களின் விவகார எல்லைக்குள்ளிருக்கிறது. அவர்களுக்கு உதவியாக மதுரையிலும், திருநெல்வேலியிலும் ஒவ்வொரு விவசாய அசிஸ்டெண்டு டைரெக்டர் இருக்கிறுர்கள். ஷ விவசாய டிப்டி டைரெக்டரவர்களின் ஆபீசும், மதுரை அஸிஸ்டெண்டு டைரெக்டரவர்களின் ஆபீசும், மதுரையிலிருந்து பசுமலைபோகும் ரோட்டிலிருக்கும் கவர்ன்மெண்டு இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட் கட்டிடமொன்றில் இருக்கின்றன.

திருநெல்வேலி ஜில்லா, விவசாய அஸிஸ்டெண்டு டைரெக்டரவர்களின் ஆபீசு, கவர்ன்மெண்டு ட்ரெயினிங் ஸ்கூலுக்கு எதிரில் திருநெல்வேலி டவுனில் இருக்கிறது.

மதுரை ஜில்லாவும், இராமனுதபுரம் ஜில்லாவில் கீழ் பாகத்திலுள்ள ஆறு தாலூகாக்களும் மதுரை விவசாய அஸிஸ்டெண்டு டைரெக்டரவர்களின் பொறுப்பிலும், திருநெல்வேலி ஜில்லாவும், இராமனுதபுரம் ஜில்லாவிலுள்ள ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர், அருப்புக்கோட்டை முதலிய தாலூகாக்களும், திருநெல்வேலி விவசாய அஸிஸ்டெண்டு டைரெக்டரவர்களின் பொறுப்பிலும் இருந்து வருகின்றன. அநேகமாக ஒவ்வொரு தாலூகாவிலும் ஒவ்வொரு டிமான்ஸ்ட்ரேட்டர் நியமிக்கப்பட்டு அவர் பிரசார வேலை செய்துவருகிறுர்.

(a) பிரசாரம்.

2. ஆருவது சர்க்கிளில் வேலே செய்துவரும் டிமான்ஸ்ட்ரேட்டர்களின் இருப்பிடமும், அவர்களுக்குட்பட்ட விவகார எல்லேயும்.

மதுரை டிவிஷன்.

ஜில்லா.	தாலூகா.	இருப்பிடம்.	வேலே நடக்குமிடங்கள்.
மதுரை	மதுரை	மதுரை	மதுரை, திருமுகூர், அப்பன்திருப்பதி, காவனூர், சமயநல்லூர், கீழ் மாத்தூர், கூத்தியார்குண்டு, சோளவந்தான்.
	மேலூர்	மேலூர்	மேலூர், திருவாதூர் வெள்ளலூர், நத்தம் கொட்டாம்பட்டி, வெள்ளாலப்பட்டி, நரசிங்கம்பட்டி, அழகர்கோயில்.
	பெரியகுளம்	பெரியகுளம்	பெரியகுளம், அல்லிநகர், ஆண்டிபட்டி, உத்தமபாளேயம், வீரபாண்டி, கோம்பை, கீழமங்கலம், கங்குவார்பட்டி.
	திருமங்கலம்	திருமங்கலம்	திருமங்கலம், பன்னிகுண்டு, சிந்துபட்டி, உசிலம்பட்டி, செக்கானூரணி, சேடபட்டி, கல்லுபட்டி, கள்ளிகுடி,
	நிலக்கோட்டை	நிலக்கோட்டை	நிலக்கோட்டை, பதலகுண்டு, சித்தயன் கோட்டை, வாடிப்பட்டி, அலங்காநல்லூர், அம்மைநாயகனூர், தனிச்சியம்.
	திண்டுக்கல்	திண்டுக்கல்	திண்டுக்கல், பாலகனூத்து வேடசெந்தூர், எரியோடு, ஐயலூர், வடமதுரை, குசவபட்டி, கன்னிவாடி.
	பழனி	பழனி	பழனி, வேலூர், கொசவபட்டி, இடைய கோட்டை, மேல்கரைபட்டி, தாழையூத்து, கீரனூர், பாப்பம்பட்டி.
இராமனுதபுரம்	திருப்பத்தூர்	திருப்பத்தூர்	திருப்பத்தூர், பட்டமங்கலம், A. தெக்கூர், குன்னக்குடி, சிங்கம்புணரி, திருக்கோஸ்ட்டியூர், காரைக்குடி, சத்துரு சங்காரகோட்டை.
	சிவகங்கை	மானுமதுரை	மானுமதுரை, சிவகெங்கை, திருப்புவனம், முத்தனேந்தல், அக்கூர், காளேயார் கோயில், பார்த்திபனூர், அபிராமம்.
	இராமநாதபுரம்	இராமநாதபுரம்.	இராமநாதபுரம், திருப்புள்ளாணி, தேவிபட்டணம், சத்திரக்குடி, வளந்தருவை.

திருநெல்வேலி டிவிஷன்.

ஜில்லா.	தாலூகா.	இருப்பிடம்.	வேலை நடக்குமிடங்கள்.
இராமனுதபுரம் ..	சாத்தூர்	சாத்தூர்	மொட்டமலை, மீனம்பட்டி, ஒத்தக்கல், ஒப்புலாபுரம், கவலூர், நடுவபட்டி, வீரார்பட்டி, மேட்டுபட்டி, சாத்தூர், சிவலார்பட்டி.
	ஸ்ரீவில்லிபுத்தூர்.	ஸ்ரீவில்லிபுத்தூர்.	ஸ்ரீ வில்லிபுத்தூர், வத்தராயிருப்பு, குன்னூர் ராமகிருஷ்ணபுரம், மம்சாபுரம், நாச்சியார் கோயில், நல்லமநாகன் பட்டி, ராஜபாளையம், சோளபுரம், கீழராஜகுலராமன்.
	அருப்புக்கோட்டை.	அருப்புக்கோட்டை.	அருப்புக்கோட்டை, ராணி சேதுபுரம், ரெட்டியபட்டி, மல்லம்பட்டி, சிதம்பராபுரம், பாம்பாட்டி, பெரியநாயகிபுரம், வெள்ளையாபுரம், சோயிலிபட்டி, பாலனத்தம்.
திருநெல்வேலி ..	திருநெல்வேலி ..	திருநெல்வேலி ..	திருநெல்வேலி, கங்கைகொண்டான், மானூர், புதூர், மேலகல்லூர், கீழ நத்தம், கீழபட்டம், ரெட்டியபட்டி, பேட்டை.
	திருசெந்தூர் ..	திருசெந்தூர் ..	திருசெந்தூர், அம்மன்புரம், அங்கமங்கலம், ஆழ்வார்திருநகரி, ஆறுமுகநேரி, ஆத்தூர், குலசேகரப்பட்டணம், சஸ்தவிநல்லூர், சாத்தாங்குளம், தெந்திரிப்பேரி.
	நாங்குநேரி ..	நாங்குநேரி ..	நாங்குநேரி, திருக்கரங்குடி, களக்காடு, வள்ளியூர், மூன்றடைப்பு, மூலக்கரைப்பட்டி, பன்குடி, பளவூர், ராதாபுரம், விஜயநாராயணம்.
	தென்காசி ..	தென்காசி ..	தென்காசி, சிவராமபேட்டை, இடகால், பம்புளி, குத்தாலம், மேலப்பாவூர், திப்பனம்பட்டி, கீழப்பாவூர், ஆலங்குளம், கடையநல்லூர்.
	கோவில்பட்டி ..	கோவில்பட்டி ..	கோவில்பட்டி, நாலாட்டின்புத்தூர், தளவாய்புரம், கயத்தார், மணியாச்சி, குருக்குசாலை, எப்போது வென்றான், எட்டையாபுரம், விளாத்திகுளம், நாகலாபுரம்.
	அம்பாசமுத்திரம்.	அம்பாசமுத்திரம்.	அம்பாசமுத்திரம், மேட்டூர், கடையம், ஆழ்வார்குரிச்சி, விக்ரமசிங்கபுரம், வீரவநல்லூர், சேர்மாதேவி, மேலச்செவ்வல், பாப்பாக்குடி, இடைகரல்.

திருநெல்வேலி டிவிஷன்—தொடர்ச்சி.

ஜில்லா.	தாலூகா	இருப்பிடம்.	வேலை நடக்குமிடங்கள்.
திருநெல்வேலி—தொடர்ச்சி.	சங்கரன்கோவில்.	சங்கரன்கோவில்.	சங்கரன்கோவில், முள்ளிகுளம், மடத்துப்பட்டி, விஸ்வனுதபேரி, பெரும்பத்தூர், கலிங்கப்பட்டி, சங்குப்பட்டி, செவ்வல்குளம், மெய்ப்பாரை, வாசுதேவநல்லூர்.
	ஸ்ரீவைகுண்டம் ..	ஸ்ரீவைகுண்டம் ..	ஸ்ரீவைகுண்டம், கருங்குளம், சேரகுளம், வல்லநாடு, பெருங்குளம், அணியாபரநல்லூர், வர்த்தகரெட்டிபட்டி, புதுக்கோட்டை, ஆறுமுகமங்கலம், மேல்தட்டப்பாரை.

விவசாய டிமான்ஸ்டிரேட்டர்களில்லாத தாலூகாக்கள்.

ஜில்லா.	தாலூகா.
ராமனுதபுரம் ..	பரமகுடி.
	முதுகுளத்தூர்.
	திருவாடானை.

3. மேற்சொன்ன தாலூக்காக்களிலுள்ள ஒவ்வொரு வேலை செய்யும் இடங்களிலும் டிமான்ஸ்டிரேட்டர்கள் நூதன விவசாய முறைகளை பிரசாரம் செய்வதுடன் பிரத்தியட்ச பிரமாணமாகவும் காண்பிப்பார்கள். ஒவ்வொரு டிமான்ஸ்டிரேடருக்கும் ஒவ்வொரு டிபோ இருக்கிறது. அதில் நூதன கருவிகளும், சுத்தமான விதைகளும் வாங்கின விலைக்கே கொடுக்க சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் குடியானவர்கள் அவர்களுடைய கிராமங்களின் சுற்றுப்புரங்களையும் தெருக்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டிய உதவியையும் செய்துவருகிறார்கள்.

(i) **எருவை சேகரித்தலும் பாதுகாத்தலும்.**—மாட்டு எருவில் விசேஷமானதாகிய மாட்டு நீரை வீண் போகாமல் சேகரிக்கும் முறைகளைக் குடியானவர்களுக்குச் சொல்லுவது.—அஃதாவது மாட்டுக்கொட்டத்தில் மண்ணையும் கழிகூளத்தையும் தூவிப்போட்டு வைக்கவேண்டியது. இவ்வாறு போட்ட கூளமும், மண்ணும் மாடுகளுக்கு நல்ல படுக்கையாவதுடன் மாட்டு நீரை உறிஞ்சி நல்ல உரமுமாகிறது. இவ்விதமாகச் சேகரிக்கப்பட்ட உரத்தை அதிக ஆழமில்லாத கிடங்குகளில் போட்டு மண்ணைப் பரப்பி மூடவேண்டியது. வயல்களில் எதேஷ்டமாய் கிடைக்கும் புல், பூண்டுகளையும், கரும்புத்தோகை சக்கை முதலியவைகளையும் சமிக்க வைத்து உரமாக்கிக் கொள்வது.

(ii) விதைப்பதற்கு முன்னும் பின்னும் குண்டகா, இரும்புகலப்பை முதலிய கருவிகளை உபயோகித்து எப்படி நிலத்தை களைகளில்லாமல் சுத்தமாக வேத்துக்கொள்ளலாமென்பது.

(iii) மழைத்தண்ணீரை வெளியில் போகாமல் நிலம் உறிஞ்சும்படி பூமியை சமப்படுத்தியும் வரம்புகள் போட்டும் வைத்துக்கொள்வது.

(iv) **கால்நடை அபிவிருத்தி.**—குடியானவர்கள் தங்களுடைய கால்நடைகளை விருத்தி செய்ய தகுந்த பொலிகாளைகளை வைத்திக்கொள்ளச் சொல்வதுடன் பிண்ணுக்கு, மாட்டுக்கென்று தனியாக வளர்க்கப்பட்ட புற்கள், சாடுப்பயிர்கள் வைக்கோல், சேலேஜ் முதலான சிறந்த தீனி வகைகளைக் கொடுத்து நன்ருக போஷித்து வரும்படியும் சொல்லப்படுகிருர்கள். பொதுஜன உபயோகத்திற்கு இந்த வட்டையில் ஆங்காங்கு பொலிகாளைகள் இருக்கின்றன. பொலிச்சல் ஒன்றுக்கு அணு 8 விகிதம் சார்ஜ் செய்யப்பட்டு வருகிறது.

பொலிகாளைகளின் இருப்பிடங்களும் ஜாதி விபரமும், கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

மதுரை டிவிஷன்.

இடம்.	நம்பர்.	ஜாதி.
ரெவரெண்ட் லார்பீர், பசுமலே	15	சிந்தி.
கருப்பத் தேவர், நக்கலகோட்டை	125	காங்கயம்.
பி. எஸ். சிவனாண்டித்தேவன், அய்யன்மேட்டுப்பட்டி ..	127	ஷை
ஏ. எல். வி. ஆர். எஸ். டி. வீரப்ப செட்டியார் அண்டு ஸன்ஸ், தேவகோட்டை.	51	ஷை
ஞானமுத்து, சாத்தங்குடி	65	ஷை
ஆர். வெங்கடசாமி, செங்கப்படை, திருமங்கலம்	61	ஷை
ரெவரெண்ட் டட்லி, திருமங்கலம்	72	ஷை
எம். பழனி கவுண்டர், கஞ்சநாயக்கன்பட்டி	82	ஷை
வி. சாமி நாயக்கர், வேலூர், சத்திரப்பட்டி, பி.ஓ.	112	ஷை
சேர்மன், திண்டுக்கல் முனிசிபாலிடி	105	ஷை
இராமநாதன் செட்டியார், நெய்குப்பை	139	ஷை
நல்லதம்பி சேர்வை, தம்பிபட்டி	131	ஷை
துரைராஜ், ரிடையர்டு டிப்டி கலெக்டர், சிலுக்குவார்பட்டி, நிலக்கோட்டை தாலூகா.	126	ஷை
டிரஸ்டி, கள்ளழகர் தேவஸ்தானம்	149	ஷை
பால்ராஜ் தாமஸ், திருமங்கலம்	14	எருமைக்கிடா. (லாஸ்ட் ஹோப்.)
ரெவரெண்ட் லார்பீர், பசுமலே	15	(ஹோப் புல்).
ஜி. வெங்கடசாமி நாயுடு, பாப்பம்பட்டி	172	காங்கயம்.
கிருஷ்ணசாமி நாயக்கர், வேலூர், சத்திரப்பட்டி	171	ஷை
ரெவரெண்ட் ரிக்லி, ஷெண்பகனூர்	156	இருஜாதி.
ஹெட்மாஸ்டர், இண்டஸ்டிரியல் ஸ்கூல், முத்தனேந்தல் ..	171	காங்கயம்.
பிரஸிடெண்ட், பஞ்சாயத்து போர்டு, தொட்டனூத்து	167	ஷை

திருநெல்வேலி டிவிஷன்.

அகிலாண்டம் பிள்ளை, இலஞ்சி	123	காங்கயம்.
தேவாங்கப்பெருமாள் பிள்ளை, இலஞ்சி	170	ஷை
வெங்குபட்லு, கீழப்பாவூர்	108	ஷை
எஸ். எம். இராமலிங்கம் பிள்ளை, மேலச்செவல்	152	ஷை
எஸ். சீதாராம், அனவரதநல்லூர்	116	ஷை
ஏ. பெருமாள் நாய்க்கர், படந்தால்	134	ஷை
கே. அழகிரிசாமி ரெட்டியார், செவல்பட்டி	140	ஷை
ராமலிங்க அண்ணாவி, கல்லிடைகுறிச்சி	148	ஷை
ஷேக்மான்சூர் தரகனார், மேலப்பாளயம்	164	ஷை
டி. வி. கிருஷ்ணய்யங்கார், தென்திருப்பேரை	168	ஷை
சுப்பா நாய்க்கர், ஜமீன்தார், செவ்வல்பட்டி	177	ஷை
எல். என். எஸ். அச்சய்ய நாய்க்கர், இடைசெவல்	..	காங்கயம் இருஜாதி.
வி. ஆர். அய்யப்ப நாய்க்கர், ஒட்டநத்தம்	122	காங்கயம்.
ஏ. கே. தர்மராஜா, ராஜபாளையம்	121	ஷை
ஷை	137	ஷை
பி. ஏ. வி. ராமசாமி ராஜா, ராஜபாளையம்	138	ஷை
வி. சங்கரநாராயண ரெட்டியார், மலைப்பட்டி	142	ஷை

கோழிகள்.—விவசாயிகளுக்கு அதிகமாக முட்டையிடக்கூடிய ஜாதிக் கோழிகளை வாங்கி, வளர்த்து விருத்தி செய்ய உதவி செய்யப்பட்டுவருகிறது.

(v) **நிரூபணை பிளாட்டுகள்.**—டிபார்ட்மெண்டாரால் போதிக்கப்பட்டு வரும் நூதன சாகுபடி முறைகளும், உரமிடும் வகைகளும், விதை தினுசுகளும், நாட்டுவகைகளைவிட சிறந்ததென்பதைக் காட்டுவதற்கு, குடியானவர்களின் நிலங்களில் நிரூபணை பிளாட்டுகள் ஏற்பாடு செய்கிறார்கள். அக்கம்பக்கத்து குடியானவர்களை இப்பிளாட்டுகளுக்கழைத்துக்கொண்டுபோய் அவ்விடத்தில் நடக்கும் வேலைகளைப்பற்றி விவரித்துச் சொல்லுகிறார்கள். சிறந்த விவசாயக் கருவிகளை வாங்கச் சொல்வதற்குமுன் அவைகளை குடியானவர்களின் நிலத்தில் வேலைசெய்து காட்டுகிறார்கள்.

(vi) **கண்காட்சிகளும், பிரசங்கங்களுகம்.**—கண்காட்சிகள் முக்கியமான திருவிழாக்களிலும் சந்தைகளிலும் நடத்தப்படுகின்றன. இவ்விடங்களில் நூதன விவசாய முறைகளைப்பற்றி புகைப்படங்கள் மூலம் பிரசங்கங்கள் செய்வார்கள். சவுகரியப்பட்ட விடங்களில் சீர் திருத்தப்பட்ட கலப்பைகளையும், மற்ற கருவிகளையும் உபயோகித்தும் காண்பிப்பார்கள்.

(vii) **விவசாய அபிவிருத்தி சங்கங்கள்.**— பழனித் தாலூகாவில் வேலூர் கிராமத்தில், ஷை சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அச்சங்கத்தின் வேலைகளாவன.—அபிவிருத்தி செய்யப்பட்ட சுத்தமான கருங்கண்ணி, கம்போடியா பருத்தியைப் பயிர் செய்து அவைகளின் விதைகளைப் பெருக்கி இக்கிருமத்து விவசாயிகளுக்கும் அக்கம்பக்கத்து விவசாயிகளுக்கும் கொடுத்தல்; விவசாய நூதனக் கருவிகளை உபயோகிக்கும்படி ஒவ்வொரு அங்கத்தினர்களையும் தூண்டுதல்; மாட்டு உரங்களைத் தக்க முறையில் சேகரித்துக் குழியில் போட்டு பாதுகாக்கச் செய்தல்; இன்னும் தங்களுக்குத் தேவையானவைகளைக் கூட்டாக வாங்கவும் விற்கவும் செய்தல்.

மற்றொரு சங்கம் ஸ்ரீ வைகுண்டம் தாலூகா, ஸ்ரீ வைகுண்டம் கிராமத்தில் இருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் யாவரும் நிலச்சுவான்தார்கள். அச்சங்கம் அபிவிருத்தி செய்யப்பட்ட நெல் விதைகளை, விதைப்பண்ணை முறையில் பயிரிடுகிறது. விவசாய டிபார்ட்மெண்டாரால் சொல்லப்படும் நூதன விவசாய முறைகள் அச்சங்கத்தின் சிலவிலேயே செய்து பிரத்தியட்சமாக எல்லோருக்கும் நிரூபித்துக் காண்பிக்கப்படுகிறது.

இம்மாதிரி சங்கங்களை பலவிடங்களிலும் ஆரம்பிப்பதற்கு பிரயத்தனம் செய்யப்பட்டுவருகிறது.

(viii) **விதையைப்பரவச் செய்தல்.**—அபிவிருத்தி செய்யப்பட்ட பொறுக்கு நெல் விதைகளாகிய ஜி.இ.பி. நெ. 24, எ.இ.பி. நெ. 65, கருங்கண்ணி பொருக்கு பருத்தி விதையாகிய கம்பெனி நெ. 7, எ. நெ. 10, கம்போடியா, கோ. நெ. 2, முதலிய விதைகளைக் குடியானவர்களின் நிலங்களிலேயே விதைப் பண்ணை மூலமாக சாகுபடி செய்து பரவச் செய்யப்படுகிறது. ஷை விதைப் பண்ணையில் கிடைக்கும் விதையை வாங்கி டிபார்டுமெண்டு டிப்போக்களில் வைத்து விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிறது.

நெல்.—நெற்சாகுபடி விருத்தி செய்யப்படும் முறைகள்.—

(a) பசுந்தாள் உரப்பயிர்களைத் தங்கள் நிலங்களில் விளைவித்து, அவைகளுடன் எலும்புத்தூள் அல்லது மற்ற செயற்கை உரங்களை விவேகமாக உபயோகப்படுத்துதல்.

(b) நாற்றங்கால்களில் விதையை குறைத்துப்பாவி பெரு நாற்று உண்டாக்குவதுடன் விதையையும் மிச்சப்படுத்துதல்.

(c) சிறு இரும்புக் கலப்பைகளை உபயோகித்து கொஞ்சம் உழவில் நல்ல தொழியாக்குதல்.

பருத்தி அபிவிருத்தி முறைகள்.—(a) விதைகளை சால் சாலாக விதைத்து அதனால் பின்னால் தசை கூலி மிச்சம் செய்யக்கூடிய களைவெட்டு முதலிய கருவிகளை உபயோகித்தல்.

(b) பருத்தி சுத்தமாக எடுத்தலும், அதைக்கூட்டுறவு சங்கங்களின் மூலம் விற்பதும்.

(ix) **பூச்சி பூஞ்சண நோய்களைத் தடுத்தல்.**—ஒவ்வொரு தாலூகாவிலும் பிரசார வேலை செய்துவரும் டிமான்ஸ்டிரேட்டர்கள் தவிர, பயிர்களில் விழும் பூச்சி பூஞ்சண நோய்களை தடுப்பதற்கென்று, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு ஒரு உத்தியோகஸ்தர் கோவில்பட்டி ஆராய்ச்சி பண்ணையிலிருக்கிறார். அவர் குடியானவர்களுக்குப் பூச்சி பூஞ்சண நோய்களை அடக்க உதவி செய்வார். அவருடைய விவகார எல்லை பெரியதாயிருப்பதால் முக்கியமான தேவையைத்தான் கவனிக்க முடியும்.

விவசாய டிமான்ஸ்டிரேட்டர்கள் இருக்குமிடங்களில் டிப்போக்களிருக்கின்றன. அவைகளில் நூதன விவசாய கருவிகளும் சுத்தமான விதைகளும் விற்கப்படும்.

4. டிப்போக்களின் ஜாப்தாவும், அவைகளிலுள்ள சாமான்களின் விபரமும், கிரயமும்.

(a) விவசாயக் கருவிகள்.

சாமான்கள்.	விலை. ரூ.	அ.	பை.	ஷரா.
கூப்பர் கலப்பை நெ. 25, கலப்பை 1-க்கு	4	8	0	மொத்தமாய் அதிக கலப்பைகளைவாங்கினால் விலை இன்னும் குறையும்,
கூபர் கலப்பை நெ. 25, கலப்பை 1-க்கு	7	0	0	
கூப்பர் கலப்பை நெ. 26, கலப்பை 1-க்கு	8	12	0	
தோண்டும் முள் கரண்டு 1-க்கு	4	0	0	முதல்
	5	0	0	வரையில்.
கூப்பர் கலப்பை நெ. 25-க்கு கொழு 1-க்கு ..	0	5	9	....
கூப்பர் கலப்பை நெ. 11-க்கு, கொழு 1-க்கு ..	0	9	0	....
கூப்பர் கலப்பை நெ. 26-க்கு கொழு நுனியுடன் ..	1	1	0	....
எச். எம். குண்டகா நெ. 0, 1-க்கு	3	12	0	உத்தேச விலை. ஆர்டர் கொடுத்தால் சப்ளை செய்ய முடியும்.
எச்.எம். குண்டகா நெ. 1, 1-க்கு	6	8	0	
எச்.எம். குண்டகா நெ. 2, 1-க்கு	12	4	0	
கவலை சக்கரம் 1-க்கு	11	0	0	

(b) விதைகள்.

கொளிஞ்சி	விலைகள் கால நிலவரத்துக்கு தக்கவாறு மாறுபடும். சமீபத்திலுள்ள விவசாய டிமான்ஸ்ட்ரேட்டரிடமிருந்து கிரயத்தொகை தெரிந்துக்கொள்ளலாம்.
டெயின்சா	
அவுரி	
சணல்	
நெல்	
நிலக்கடலை	
பருத்தி, கம்போடியா	
கருங்கண்ணி	
பெரிய மஞ்சள் சோளம்	

குறிப்பு.—மேலே குறிக்கப்பட்ட விலைவாசிகள் கால நிலவரத்துக்கு தக்கவாறு மாறும்.

5. **இதர அபிவிருத்திகள்**—அபிவிருத்தி செய்யப்பட்ட நிலக்கடலை, வெங்காயம், கரும்பு, முதலியவைகளின் விதைகளைக்கொடுத்தல், வெல்லம் காய்ச்சுவதற்கு "சிந்துவாஹி" அடுப்பு செய்து கொடுத்தல் முதலியன.

6. **கூட்டுறவு இலாகா.**—இந்த சர்க்கிளில் இரண்டு கூட்டுறவு இலாகா டிப்டி ரிஜிஸ்ட்ரார் அவர்கள் இருக்கிறார்கள். மதுரை ஜில்லாவும், இராமநாதபுரம் ஜில்லாவும் மதுரை டிப்டி ரிஜிஸ்ட்ராரவர்களின் பொறுப்பிலும், திருநெல்வேலி ஜில்லா, திருநெல்வேலி டிப்டி ரிஜிஸ்ட்ராரவர்களின் பொறுப்பிலும் இருக்கின்றன. இவர்களின் பிரதான ஸ்தலம் முறையே மதுரை, திருநெல்வேலியாகும். ஐக்கிய கூட்டுறவு சங்கங்களைப்பற்றிய விஷயங்களை மேற்சொன்ன ஆபீசர்களுக்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

7. **கைத்தொழில் இலாகா.**—இவ்விலாகா சம்பந்தப்பட்ட தஞ்சாவூர் அஸிஸ்டெண்டு இண்டஸ்டிரியல் என்ஜினியரவர்களே மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களை மேல்பார்த்து வருகிறார். தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைப்பற்றியும், கிணறுகளைத் தோண்டுவதற்காக துளை போடும் உபகரணங்களைப் பற்றியும் மேற்சொன்ன உத்தியோகஸ்தர்களுக்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

(b) ஆராய்ச்சி.

விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, கோவில்பட்டி.

1. இப்பண்ணை 1901-ம் வருஷம் துவக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் இரண்டு பாகங்களுண்டு. செவ்வல் பூமியாகிய ஒரு பாகமானது ரெயில்வே ஸ்டேஷனின்று $\frac{1}{2}$ மைல் தூரத்திலிருக்கிறது. இதில் பண்ணைக் கட்டடங்கள், ஆபீஸ், களஞ்சியம், பண்ணை உத்தியோகஸ்தர்களின் விடுதிகள் முதலியவை அமைந்துள்ளன. இதின் விஸ்தீர்ணம் 25 எக்கர்; ஆனால் 16 எக்கர்தான் சாகுபடியிலிருக்கிறது. மிகுதி பாகத்தில், கட்டடங்கள், ரோட்டுகள், மாட்டுக்கொட்டில் முதலியவைகளிருக்கின்றன. இப்பாகத்தில்

12 எக்கர் நிலத்திற்கு போதிய ஜலமிருக்கக்கூடிய வசதியுள்ள 4 கிணறுகளுமிருக்கின்றன. இதில் பருத்தி அரைப்புச்சாலேயுமிருக்கின்றது. இச் சாலேயில் பண்ணேயில் உற்பத்தியாகும் கலப்பற்ற சுத்தமான பருத்தியும் விதைப்பண்ணேகளின் பருத்தியும் அரைக்கப்பட்டு, விதைகள் குடித்தனக்காரர்களுக்கு கொடுக்கப்படுகிறது. ரிஷபங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. பசு ஒன்றுக்கு தடவை ஒன்றுக்கு ஒரு ரூபாய் கட்டணத்திற்கு ஜனங்களின் மாடுகளேப் பொலிவதற்கு விடப்படுகின்றன.

பண்ணேயின் மற்றொரு பாகமாகிய கரிசற்காடானது சாத்தூர் ரோட்டில் ரெயில்வே ஸ்டேஷனின்று இரண்டு மைல் தூரத்திலிருக்கிறது. இப்பாகத்தின் விஸ்தீர்ணம் 115 எக்கர். ஆனல் சாகுபடியிலிருக்கும் நிலத்தின் விஸ்தீர்ணம் 105 எக்கர்தான். இப்பாகத்தின் மண்ணுனது இப்பிரதேச நிலங்களின் மண்ணேப்போன்ற சரியான கரிசல்.

ஆராய்ச்சியிலிருக்கும் விஷயங்கள்.

2. (a) தற்சமயம் பயிரிட்டுவரும் கம்பெனி 7, ஏ-10 என்ற பொறுக்கு கருங்கண்ணிப்பருத்தி தினுசைவிட சிறந்த கோவில்பட்டி நெ. 1 என்ற பொறுக்குக் கருங்கண்ணி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

(b) சோளம், கம்பு, கொத்தமல்லி, உளுந்துப் பயிர்களில் தற்காலம் உபயோகத்திலிருக்கும் கலப்பு விதைகளேவிட நல்ல விளேவு கொடுக்கக்கூடிய பொறுக்கு விதைகளே எடுக்க முயற்சி செய்தல்.

(c) கரிசற் காட்டில் சாகுபடியாகும் பயிர்களுக்கு எவ்விதமாய் நிலத்தை பண்படுத்தவேண்டுமென்பதைப்பற்றிய பரிசோதனே.

(d) பருத்திக்கு எம்மட்டும் எம்மாதிரியுமான ஊடு சாகுபடி தேவை என்பதை நிர்ணயித்தல்.

(e) தீவனச் சோளத்தடியில் போடப்படும் பருத்தியின் மாசூல் குறைவதற்கேதாவது பரிகாரம் கண்டுபிடிக்கும்பொருட்டு குறைவதின் காரணத்தை ஆராய்தல்.

(f) பருத்திப் பிஞ்சுகள் உதிர்ந்து போவதேன் என்னும் விஷயத்தை பரிசீலனே செய்வதற்கான மார்க்கங்கள் தேடப்படுவதோடு, அகால மழையால் இலகுவில் கொடுக்கப்படாத பொறுக்கு தினுசுகளே உற்பத்தி செய்ய வேண்டிய வழிகளும் தேடப்படுகின்றன.

(g) நம் நாட்டைச் சேர்ந்தவையும், பிர நாட்டைச் சேர்ந்தவையுமான பலவித பயிர்களே இட்டு எது இப்பிரதேசங்களுக்கேற்றது என்பதைக் கண்டு பிடித்தல்.

பண்ணேயில் எப்பொழுது என்னென்ன பார்க்கலாமென்பது.

3. **அக்டோபர் மாதம்.**—பருத்தி, கம்பு, சோளம் முதலியவைகளின் சால் விதைப்பு.

நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்கள்.—மாடுகளால் வேலே செய்யப்படும், தந்துலுவென்னும் களே வெட்டி கருவியால் பருத்தி, கம்பு முதலிய பயிர்களில் களேவெட்டல், நடை முதல் பயிர்களேயும், பருத்தி, கம்பு சோளம் முதலியவைகளில் விதை பொருக்கல். இப்பயிர்களேப்பற்றிய பரிசோதனேகளேயும் விதை பொறுக்கு வேலேகளேப்பற்றிய விவரங்களேயும் பார்க்கலாம். சோளத்திலும் வேறு தீவனப்பயிர்களாலும் சைலேஜ் தயாரித்தலேயும் பார்க்கலாம்.

பிப்ரவரியினின்று ஜூலே வரையும்.—தானியப்பயிர்களின் அறுவடை, பருத்தி எடுத்தல், சிறந்த கலப்பையால் உழுதல்.

ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்கள்.—நிலத்தை உழுது விதைப்பதற்குத் தயார் செய்தல்; சரியான முறையில் எருவிடுதல்; கம்போடியா பருத்தியை விதைக்கப் பார்போடும் கலப்பையால் பார் போடுதல்.

எக்காலத்திலும் பார்க்கக்கூடியது.—நிலத்தைச் சீராய்ப் பண்படுத்தி சுத்தமாய் வைத்துக்கொண்டிருத்தல்; சிறந்த தொழு எருவை பள்ளத் தொழுவத்தில் சேகரித்தல்; மாட்டெருவை சரியான முறையில் சேகரித்தல்; பொலி கிடாக்கள், ரிஷபங்கள்; மாடுகளுக்குச் சரியாய் தீனி போடுதல்; சிறந்த கலப்பைகள், சால் விதைப்பு எத்தனங்கள்; வெள்ளை லெக்ஹாரன் (with legheorn) கோழிகள்; கினியாபுல்; நோய்ப்பயிர்களுக்கு மருந்துத் தண்ணீர் அடிக்க உபயோகிக்கும் பீச்சாங்குழாய் போன்ற யந்திரங்கள்; பயிர்களுக்கு நோய்கள் வராமல் தடுத்தல், பர்ஷியின் (Persian) தண்ணீரிரைக்கும் சக்கரம் முதலியவைகளைப் பார்க்கலாம்.

ஒய். ஜி. கிருஷ்ண ராவ்,
விவசாய டிப்டி டைரெக்டர்,
6-வது சர்க்கிள், மதுரை.

3. (g) 7-வது சர்க்கிள்.

இந்த சர்க்கிலில் மேற்குக் கடற்கரை ஜில்லாக்களாகிய மலையாளம் தென்கன்னடம் இரண்டும் அடங்கி இருக்கின்றன. இது ஒரு விவசாய டிப்டி டைரக்டரின் மேற்பார்வையில் இருக்கிறது. அவருடைய தலைமை ஸ்தானம் வடமலையாளத்தில் உள்ள தலைச்சேரி.

(a) பிரசார வேலைகள்.

மலையாளம் ஜில்லாவில் 9 தாலூகாக்களும், தென்கன்னடம் ஜில்லாவில் 6 தாலூகாக்களும் இருக்கின்றன. இந்த ஒவ்வொரு தாலூகாவிலும் விவசாய அபிவிருத்தி சம்பந்தமான வேலைகளைச் செய்ய ஒரு விவசாய டிமான்ஸ்டிரேட்டர் இருக்கிறார். இந்த ஒவ்வொரு தாலூகாவும் 8-10 பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகத்திலும் விவசாய அபிவிருத்தி வேலையை தீவிரமாகச்செய்துகாட்ட ஒரு மத்திய கிராமமும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மத்திய கிராமங்களிலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் தீவிரமாய் விவசாய அபிவிருத்திகள் செய்துகாண்பித்த பிறகு வேறு மத்திய கிராமங்கள் தேர்ந்து எடுக்கப்படும். டிமான்ஸ்டிரேட்டர்கள் இந்த மத்திய கிராமங்களுக்கு மாதம் ஒருமுறை சென்று அங்கு 4, 5 நாட்கள் தங்கி பிரசார வேலைகள் செய்கிறார்கள். ரயத்துகள் இந்த மத்திய கிராமங்களுக்குச் சென்று அவ்விடம் நடந்துவரும் விவசாய அபிவிருத்திகளை கவனித்து தங்களுக்கு தேவையான விவசாய அபிவிருத்தி முறைகளை டிமான்ஸ்டிரேட்டரிடம் கேட்டு தெரிந்துகொள்ளலாம். அவர்கள் விரும்பினால் டிமான்ஸ்டிரேட்டர், அவர்களுடைய நிலங்களைப் பார்வையிட்டு தேவையான யோசனைகளை இலவசமாகச் சொல்லுவார். விவசாய டிமான்ஸ்டிரேட்டர்களின் தலைமை ஸ்தலங்கள் அவர்கள் பிரசாரவேலை செய்யவேண்டிய எல்லைகளும் விவசாய அபிவிருத்தி நடத்தப்படும் மத்திய கிராமங்களும் அடியில் குறிப்பிட்டிருக்கின்றன: —

தென்கன்னடம் ஜில்லா.

தாலூகா.	தலைமை ஸ்தானம்.	அபிவிருத்தி செய்யப்படும் மத்திய கிராமங்கள்.
கூண்டப்பூர் ..	கூண்டப்பூர் ..	(1) கூண்டப்பூர், (2) பெண்டூர், (3) பாஸ்ரூர், (4) தெக்கட்டி, (5) கண்டவார், (6) காவ்ருடி, (7) ஹர்டலிமண்டலி, (8) திராசி, (9) உப்பண்டா, (10) சங்கரநாராயண.
உடுப்பி	உடுப்பி	(1) உடுப்பி, (2) சர்வா, (3) காப், (4) ஆரூர், (5) காட்பாடி, (6) கலியான்பூர், (7) பிரமாவர், (8) பாலிமார், (9) கோட்டா, (10) பொம்மர் பெட்டு.
கார்க்கால்	மூட்பிட்ரி ..	(1) கார்க்கால், (2) கரிமணல், (3) மூட்பிட்ரி, (4) கள்ளமுட்கூர், (5) பல்லட்கா, (6) மாரூர், (7) பெல்மன்னு, (8) பெயிலூர், (9) அஜேகர், (10) பனபிலா.

தாலூகா.	தலைமை ஸ்தானம்.	அபிவிருத்தி செய்யப்படும் மத்திய கிராமங்கள்.
புத்தூர் ..	.. புத்தூர் ..	.. (1) புத்தூர், (2) பெல்தங்காடி, (3) சுல்லியா, (4) விட்டல், (5) மட்னூர் (காவ), (6) உப்பி னங்காடி, (7) மானி, (8) பெல்லேர், (9) கனியானு, (10) வீரகம்பா.
மங்களூர் ..	.. மங்களூர்	.. (1) பங்ராகுலூர் (மங்களூர்) (2) பரங்கிப்பேட், (3) புஞ்சல்கட்ட, (4) பஜ்பி, (5) பண்ட்வால், (6) பனிமங்களூர், (7) கோடிகர், (8) சூரத்கால் (9) மூக்லி, (10) கர்பூர்.
காசர்கோடு	.. காசர்கோடு	.. (1) உடுமா, (2) கண்ணன்காடு, (3) திரிகரிப்பூர், (4) காசர்கோடு, (5) மஞ்சேஸ்வர், (6) மங்கல பாடி, (7) முலையார், (8) பெர்தால், (9) பனத்தடி, (10) பாயார்.

மலையாளம் ஜில்லா.

சிரக்கல் ..	.. கண்ணனூர்	.. (1) எடக்காடு, (2) இளையவூர், (3) அன்ஜ கண்டி, (4) தலிபரம்பா, (5) பாளையங்காடி, (6) பாப்பினிசேரி, (7) பாயனூர், (8) அழிக் கோடு.
கோட்டயம் ..	.. தலைச்சேரி	.. (1) கூத்தபரம்பா, (2) மேனூர், (3) கதிரூர், (4) கன்னவரம், (5) மட்டனூர், (6) சோக்லி, (7) பானூர், (8) இருட்டி.
வயநாடு ..	.. மானன்டாடி	.. (1) மானன்டாடி, (2) காளியம்பேட்டா, (3) கல பட்டா, (4) சுல்தான் பாட்டரி, (5) தாருவன, (6) பேரியா, (7) மேப்படி, (8) மீனங்காடி.
குரும்பரநாடு	.. படகாரா	.. (1) நாடபுரம், (2) பய்யோலி, (3) ஒர்கட்டேரி, (4) குட்டியடி, (5) வள்ளியபள்ளி, (6) பெரம் பரா, (7) சோமாஞ்சேரி, (8) பானுசேரி.
கள்ளிக்கோட்டை	.. கள்ளிக்கோட்டை.	(1) செருவனூர், (2) நன்மிண்டா, (3) இலத்தூர், (4) சேவையூர், (5) கொடுவள்ளி, (6) தாமர சேரி, (7) மக்கடா, (8) கள்ளிக்கோட்டை.
எரநாடு ..	.. மஞ்சேரி ..	.. (1) மஞ்சேரி, (2) நிலம்பூர், (3) கொண்டொட்டி, (4) வள்ளிக்கொன்னு, (5) பெரோக், (6) ராமனத்கர, (7) பரப்பனங்காடி, (8) திருரங் குடி, (9) மல்லபுரம்.
பொன்னனி	.. பொன்னனி	.. (1) பொன்னனி, (2) இடபால், (3) குமார நல்லூர், (4) திரிதலா, (5) திரூர், (6) பொன் மண்டம், (7) ஆலத்தூர், (8) சென்காட், (9) அண்டத்தோட்.
வள்ளுவனாடு	.. பெரிதலைமன்னு.	(1) பெரிதலைமன்னு, (2) பட்டாம்பி, (3) மன்னூர் காட், (4) ஒட்டபாலம், (5) செருபல்சேரி, (5) புளமந்தால், (7) மங்கடா, (8) மேலாத்தூர்.
பாலக்காடு ..	.. பாலக்காடு	.. (1) பாலக்காடு, (2) கஞ்சிகோட், (3) ஆலத்தூர், (4) வடக்கஞ்சேரி, (5) கொடுவையூர், (6) கொல்லங்கோடு, (7) தோங்காட், (8) மாங்கரை.

டிமான்ஸ்டிரேட்டர்கள் மத்திய கிராமங்களுக்குப்போய் ரயத்துகளுக்கு விவசாய அபிவிருத்தியில் முக்கியமாய் கலப்பில்லாத சுத்தமான விதையை விதைப்பதால் ஏற்படும் அனுகூலங்களையும், கால்நடைகளை சரியாக போஷிக் கவேண்டிய விஷயத்தையும், எரு சேகரிக்கவேண்டிய விஷயத்தையும், சாணி உரத்தைச் சரியாக சேகரிக்கவேண்டிய முறையையும், பயிர்களுக்கு ஏற்படும் பூச்சி பூஞ்சண நோய்களைத் தடுக்கும் முறைகளையும், போதிக்கிறார் கள். மேலும், நெல், கரும்பு, தென்னை, மிளகு பழவர்க்கம் முதலிய பயிர்களில் நூதன அபிவிருத்தி முறைகளை இடங்களுக்குத் தகுந்தாற் போல், மாதிரி பிளாட்டுகளிலும் பரிசோதனை (trial) பிளாட்டுகளிலும் ரயத்து களின் நிலங்களில் பயிரிட்டு காண்பிக்கிறார்கள்.

விதை கொடுத்தல்.—சுத்தமான விதைகளை விதைக்கவேண்டிய முக் கியத்தை ரயத்துகளுக்கு எப்பொழுதும் எடுத்துக்காட்டி, அவர்களின் உப யோகத்திற்காக சர்க்கார் ஆராய்ச்சி பண்ணைகளிலிருந்து பொறுக்கி எடுத்த கலப்பில்லாத உயர்ந்த விதைகளை வரவழைத்தும் கொடுக்கிறார்கள். சென்ற வருஷத்தில் இந்த சர்க்கல் 76 டன் நிறையுள்ள நெல்

விதைகள் ரயத்துகளுக்குக் கொடுக்கப்பட்டன. 76 ரயத்துகளுக்குத்தேவையான நெல் விதை பூராவும் சப்ளேசெய்ய சாத்தியபடாததால் அவர்களே சுத்த விதையை சேகரிக்கும் வழியை கற்றுக்கொடுக்கப்படுகிறார்கள்.

தென்னை சாகுபடி இந்த சர்க்கிளில் விருத்தியாகிக்கொண்டு வருகிறது. காசர்கோடு ஆராய்ச்சிப் பண்ணையில் அதிகமாய்க் காய்க்கும் தென்னைகளிலிருந்து எடுத்த நெத்துகள் ரயத்துகளுக்குக் கொடுக்கப்படுகின்றன.

தேவையுள்ள ரயத்துகளுக்கு, நல்ல ஜாதி மிளகுச் செடிகள், அஞ்சி கன்று, வாழைக்கன்றுகள், மா, சப்போடா ஒட்டுக்கன்றுகள் மிந்திரி விதை கொடுப்பதுடன் அவைகளை பயிரிடும் முறையும் கற்பிக்கப்படுகிறது.

நல்லஜாதி மிளகுச் செடிகள் தேவையுள்ள ரயத்துகளுக்கு கொடுக்கப்படுகின்றன.

இந்த சர்க்கிளிலுள்ள ரயத்துகளை பழம் தரக்கூடிய செடிகளை பயிரிடும்படி சொல்வதுடன், முக்கியமாய்....(பைன்ஆப்பிள்) அஞ்சிபழம், வாழை, மா, சப்போடா முதலியவைகளின் கன்றுகள் கொடுக்கப்படுகின்றன. குடித்தனக்காரர்கள் கேட்கும்போதெல்லாம் நல்ல விதைகளைக் கொடுப்பதுடன் அவைகளைப் பயிரிடும் விஷயத்திலும் சரியான யோஜனைகளும் சொல்லப்படுகின்றன.

மாட்டுத் தீவனத்தை பதன் பண்ணும் முறையை காட்டுதல்.—மழைகாலத்திற்குபின் மலைச்சாரலிலும், மேய்வு நிலங்களிலும் ஏராளமான புல்கள் அகப்படுகின்றன. அவை கோடைகாலத்தில் உலர்ந்து சேதமாகிவிடுகிறது. அப்படிச் சேதமாகாமல், அவற்றை பச்சையாகவே பதன் பண்ணி உபயோகிக்கும் முறையை செய்து காட்டப்படுகிறது.

பசளை எரு செய்தல்.—ரயத்துகளுக்கு அதிக எரு தேவையிருப்பதால் வீணாகப்போகும் காய்ந்த சரகு, பச்சை இலைகள், புற்பூண்டுகள் பயிர்களின் வேர்க்கட்டைகள் முதலிய மக்கும் வஸ்துக்களை குழியில்போட்டு பக்குவப் படுத்தும் முறைகளை செய்து காட்டப்படுகிறது.

தொழு எருவை செவ்வனவே சேகரிக்கும் முறை.—தொழு எரு மிகவும் எளிதில் கிடைக்கும் வஸ்து. அது மிகச் சிறந்தது. ஆனால் இதை சேகரிப்பதில்தான் ரயத்துகள் அலட்சியமாக இருக்கிறார்கள். அதனால் ஏராளமான நஷ்டம் ஏற்படுகிறது என்று பலமுறை எடுத்துச்சொல்லப்பட்டு வருகிறது. கால்நடைகளை பள்ளத்தொழுவங்களில் கட்டிவைக்கும் முறையை அனுஷ்டிப்பதால் இந்த நஷ்டத்தை அதிகமாகத் தடுக்கலாம். தகுதியான மாட்டுக்கொட்டடங்களைக் கட்டும்படிக்கும் கொட்டில்களில் கீழே காய்ந்த சரகு, பச்சை இலை, உபயோகமற்ற வைக்கோல், கூளம், வேர்க்கட்டைகள் முதலியவற்றைப் பரப்பி, எருவின் குணத்தையும் அளவையும் அதிகப் படுத்தும்படி ரயத்துகளுக்கு சொல்லப்படுகிறது. இம்மாதிரி எரு சேகரிக்கும் முறை தென்கன்னடம் ஜில்லாவில் கையாளப்படுகிறது. இம்முறையை மலையாளம் ஜில்லாவிலும் அனுஷ்டிக்கும்படி ரயத்துகளிடம் சொல்லப் படுகிறது.

கால்நடைகளை காப்பாற்றும் விதம்.—கால்நடைகளைச் சரியாக போஷிக்கவும், விருத்தி செய்யவும், சரியான கொட்டத்தில் கட்டவேண்டிய விஷயங்களைப்பற்றியும் பிரசாரம் செய்யப்படுகிறது. மாடுகளுக்கு பிண்ணாக்கும் வேறு தீனியும் போடும்படி குடியான்வர்கள் போதிக்கப்படுகிறார்கள். சோளம், கினியாபுல், யானைபுல் முதலிய மாட்டுத் தீவனப்பயிர்களைச் சாகுபடி செய்யவேண்டிய முக்கியத்தைப் பலமுறை ரயத்துகளுக்கு எடுத்துச் சொல்லப்பட்டுவருகிறது. தவிர அவைகளின் நாத்துகளும் சப்ளை செய்யப்படுகிறது.

கூட்டுறவு சங்கங்களும் பொது சமுகங்களும் பணக்கார ரயத்துகளும் பொலிகாளைகளை பிரீமியாமூலம் வைத்துப் போஷிக்கத் தூண்டப்படுகிறார்கள். அம்மாதிரி 11 விருபஷங்கள் இந்த சர்க்கிலில் இருக்கின்றன. தவிர, மங்களூர் மாட்டு ஆஸ்பத்திரியில் 2 பொலிகாளைகளும், கன்னனூர்

மாட்டாஸ்பத்திரியில் ஒரு பொலிகாளையையும் தலிப்பரம்பா சர்க்கார் விவசாயபண்ணையில், ஒரு எருமைக்கிடாவையும் சர்க்கார் வைத்திருக்கிறார்கள். சொற்ப கட்டணத்திற்கு இவை ரயத்துகளின் உபயோகத்திற்கு கிடைக்கும்.

இந்த சர்க்கிளில் வருஷத்தில் ஆறு மாதத்திற்குமேல் அதிக மழை இருப்பதால், கால்நடைகளை நல்ல கொட்டகைகளில் கட்டவேண்டியது மிகவும் அவசியம். இவ்விஷயத்தை ரயத்துகளுக்கு சொல்வதுடன் அவர்கள் நல்லமாட்டுக் கொட்டகைகளைக் கட்டும்படிக்கும் தூண்டப்படுகிறார்கள்.

கோழிகள்.—உயர்ந்த ஜாதிக் கோழிகளும், முட்டைகளும் ஹோசூர் மாட்டு ஆராய்ச்சிப் பண்ணையிலிருந்து வாங்கிக்கொடுத்து விருத்தி செய்தல். முட்டைகளுக்கும் கோழிகளுக்கும் ஏற்பட்டிருக்கும் கிராக்கியை யனுசரித்து தளிப்பரம்பா விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் கோழி வளர்ப்பு வேலை துடங்கப்பட்டிருக்கிறது. தேன் கூடு வைத்து விருத்தி செய்யவேண்டிய வழிகளையும், தேனீக்களும் தருவித்துக்கொடுக்க உதவி செய்வார்கள்.

பயிர்களில் விழும் பூச்சிகளை அடக்குதல்.—இவைகள் தோன்றும் இடங்களிலெல்லாம் அவைகளை தடுக்கவேண்டிய முறைகளை உடனே அனுஷ்டிப்பதுடன் ரயத்துகளுக்கு அவைகளின் ஜீவிய சரித்திரங்களும் தடுக்கும் முறைகளும் சொல்லப்படுகிறது.

பூஞ்சண நோய்.—இந்த சர்க்கிளில் கனத்தமழை பெய்வதால், பாக்கு மரத்தில் மாகாளி நோயும், தென்னை, பனை மரங்களில் குருத்து அழுகுதல் நோயும் அடிக்கடி காணப்படுகிறது. பாக்குமரத்தில் விழும் மாகாளி நோயைத் தடுக்க போர்டோ மருந்து மிகவும் சிலாக்கியமாகவிருக்கிறது. வியாதி காணும்போதெல்லாம் இம்மருந்து தெளிக்கப்படுகிறது. குருத்து அழுகும் நோய்கண்ட தென்னை, பனை மரங்களை வெட்டி எரித்துவிடுவதால் அந்த நோய் மற்ற மரங்களுக்கு பரவாமல் தடுக்கப்பட்டுவருகிறது. நோவு கண்ட இடங்களில் இதற்காக தீவிரமான பிரசார வேலைகள் செய்யப்பட்டு வருகிறது. இவ்வியாதியை தடுப்பதற்காக பெஸ்ட் ஆக்ட் (pest act) பாலக்காட்டு தாலூகாவில் அமுலிலிருக்கிறது. இதரப் பயிருகளில் பூச்சியினாலோ அல்லது பூஞ்சணத்தாலோ வியாதிகள் ஏற்பட்டதாக தெரிந்தவுடன் அவ்விடங்களுக்குச் சென்று அவற்றை பார்வையிட்டு அவைகளைத் தடுக்கு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

டிமான்ஸ்ட்ரேஷன் பிளாட்டுகளும், டிரயில் பிளாட்டுகளும்.—பரிசோதனைப் பண்ணைகளில் செய்யப்பட்ட முறைகளை முதலில் ரயத்துகள் நிலங்களில் பரீக்ஷிக்கப்படுகிறது. இங்கும் இம்முறைகள் சிலாக்கியமாகவிருந்தால் இவைகள் இன்னும் மற்ற கிராமங்களிலும் பரவச் செய்யப்படுகிறது. இம்மாதிரி சர்க்காரால் செய்யப்பட்ட சிலாக்கியமான முறைகள் ரயத்துகளால் கையா ப்படும்படி செய்யப்பட்டு வருகிறது.

காட்சிகளும், பிரசங்கங்களும்.—பிரதி வருஷமும் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு பெரிய கண்காட்சி வைக்கப்படுகிறது. தவிர ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு சிறிய காட்சி நடைபெறுகிறது. இவை, உற்சவ காலங்களிலோ கோவாபரேடிவ் மீட்டிங்கிலோ அல்லது ஜமாபந்தி நடக்கும் போதோ வைக்கப்படுகின்றன. இக்காட்சிகளில், இரும்புக் கலப்பைகள், உயர்ந்த விதைகள், எரு தினுசுகள், பயிர்களைத் தாக்கும் பூச்சி, பூஞ்சண நோய்களின் படங்கள், அவைகளை தடுக்கும் முறைகளைக் காட்டும் படங்கள், ஆராய்ச்சிப் பண்ணைகளில் செய்யப்பட்ட வேலைகளின் படங்கள் முதலியன காண்பிக்கப்படுகின்றன. இரும்புக் கலப்பை முதலியவற்றை உழுதுகாண்பித்தும் பயிர்களில் பூச்சி, பூஞ்சண முதலிய வியாதிகள் தோன்றுவதை எவ்வாறுதடுப்பது என்பதையும் பிரத்தியட்சமாக செய்தும் காண்பிக்கப்படுகின்றன. தவிர, மாஜிக் லாண்டர்ன் படங்கள் மூலமாக விவசாய அபிவிருத்தி விஷயங்களைப்பற்றி பிரசங்கங்களும் செய்யப்படுகின்றன.

டிபார்ட்மெண்டு விவசாயக் காக்ஷி மோட்டார் வானைவருஷத்தில் மூன்று அல்லது நான்குமாதங்களில் இச்சர்க்கிளிலுள்ள பல விடங்களுக்கும் கொண்டுபோய் காக்ஷி காண்பிக்கப்படும்.

டிபார்ட்மென்டின் சகாயத்தை கோரும் ரயத்துகள் அந்தந்த தாலூகாவிலுள்ள விவசாய டிமான்ஸ்டிரேட்டருக்காவது அல்லது தலைச்சேரியிலுள்ள 7-வது சர்க்கில் விவசாய டிப்டி டைரெக்டர் அவர்களுக்காவது எழுதிக்கொள்ளவேண்டியது.

ஒவ்வொரு டிமான்ஸ்டிரேடர் தலை ஸ்தானத்திலும், ஒரு டிப்போவும் ஒரு சிறிய காட்சிசாலையும் இருக்கின்றன. இந்த டிப்போவில் அந்த தாலூகாவிற்கு ஏற்ற கலப்பைகளும், விதை தினுசுகளும் வைக்கப்பட்டு இருக்கின்றன. காட்சிசாலையில் விதை, எரு தினுசுகள், படங்கள், துண்டு பிரசுரங்கள், கிராமவாசியின் பஞ்சாங்கம், மற்ற விவசாய விஷயமான பிரசுரங்கள் முதலியன இருக்கும். விதை முதலியவைகள் இந்த டிப்போக்களினின்று குடியானவர்களுக்கு சப்ளை செய்யப்படுகின்றன. விதை முதலியவற்றின் விலை விபரங்களுக்கு டிப்போவிற்கு நேரில் சென்றோ அல்லது டிமான்ஸ்டிரேடர்களுக்கு எழுதியோ தெரிந்துக்கொள்ளலாம்.

கூட்டுறவு இலாகா.—மலையாளம் ஜில்லாவில் கள்ளிக்கோட்டை தலைமை ஸ்தலமாயும், தென்கன்னடம் ஜில்லாவில் மங்களூர் தலைமை ஸ்தலமாயும் வைத்துக்கொண்டு ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு டிப்டி ரிஜிஸ்ட்ரார் இருக்கிறார்கள். இவர்கள் கூட்டுறவு சங்கங்களை ஸ்தாபித்து, ரயத்துகளுக்கு விவசாய அபிவிருத்திகளை செய்வதற்காக தேவையான கடன்களைக் குறைந்த வட்டிக்குக் கொடுத்து உதவுகிறார்கள். ரயத்துக்கள் கூட்டுறவு சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டியிருந்தால் இவர்களுக்கு மனு செய்துகொள்ள வேண்டும்.

கைத்தொழில் இலாகா.—கோயமுத்தூரிலிருக்கும் அசிஸ்டன்ட் கைத்தொழில் இஞ்சினீர் இந்த இரண்டு ஜில்லாக்களிலுமுள்ள கைத்தொழில் வேலைகள் பார்த்துவருகிறார்கள். ரயத்துகள் இஞ்சின் வைத்தல், குழாய் இரக்குதல், தண்ணீர் இறைத்தல் யந்திரங்களைப்பற்றிய விஷயங்களுக்கு ஷ அதிகாரிகளிடம் மனு செய்துகொள்ளவேண்டியது.

(b) பரிசோதனை.

விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, பட்டாம்பி.

பட்டாம்பி பரிசோதனை பண்ணை 1927-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இருப்பிடம்.—பட்டாம்பி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு மைல் தூரத்தில் புலமாந்தோலா, பாலக்காடு ரஸ்தாக்கள் கூடும் இடத்தில் இருக்கிறது. வள்ளுவநாடு தாலூகாவில் நெற்றிமங்கலம், கோட்டலூர் கிராமங்களில் அமைந்திருக்கிறது. இப்பண்ணையின் விஸ்தீர்ணம் 82 ஏக்கர்கள். இவற்றில் ஒரு போக இருபோக நஞ்சைகளும், வீடுகள் கட்ட லாயக்கான கிராம நத்தமும் மலைநெல் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களும் அடங்கியிருக்கின்றன.

இப்பண்ணையில் எக்காலங்களில் எதைப் பார்க்கலாம்.

ஏப்ரல்.—ஒருபோக இருபோக நஞ்சைகளில் கொளுஞ்சி பசுந்தாள் உரப்பயிர். கோடை மழைக்குப்பிறகு காராமணி, சணல் விதைப்பு. இளங்கரும்பு, வாழைப்பயிர்கள், ஒருபோக, இருபோக நஞ்சைகளிலும் ' மோடன் ' பூமிகளிலும் பார்க்கலாம். மாடுகளுக்கு ' ஸைலேஜ் ' தீவனம் அன்னாசிப்பழம் பழுத்திருத்தல்.

மே.—கலக்கத்தெளித்த புழுதி நாற்றங்கால்கள் - அன்னாசிக் கன்றுகள் நட கிடங்கு வெட்டுதல் - முதல் போக நெல் வித்துகள் வினியோகம். அன்னாசிப் பழங்கள் பழுத்திருப்பது.

ஜூன்.—கலக்கத் தெளித்த தொழி நாற்றங்கால்கள், நெல் சாகுபடிக்காக நஞ்சைகளை இரும்புக் கலப்பையால் உழுதல், நாற்றுக் குறைத்து நடவு. மோடன் பூமிகளாகிய மலைப் பிரதேசத்தில் பருத்தி, கேப்பை, வேர்க்கடலை முதலியவை விதைத்தல். வாழை, கரும்பு இவைகளுக்கு மண் அணைத்து கிடங்கு வெட்டி எருவிடுதல்.

ஜூலை - ஆகஸ்டு.—முதல் போக நெல் நடவு முடிவு, அன்ஞசியும் கினியாப்புல்லும் நடவு, மோடன் தினுசுகள் பூத்திருத்தல், சாமை அறுவடை, மோடன் பூமிகளில் காராமணி விதைப்பு, இரண்டாம் போக நெல் தினுசுகள் விநியோகம்.

செப்டெம்பர்.—முதல் போக பொறுக்கு விதை தினுசுகள் பூத்திருத்தல், மோடன் நெல் அறுவடை, எள் விதைப்பு, இரண்டாம் போகத்திற்கு புழுதி, தொழி நாற்றங்கால் விதைப்பு, விதை பிளாட்டுகள் சுத்தம் பண்ணுதல், பண்ணையைப் பார்க்க மெத்த நல்ல காலம், கரும்பு சோகை உரித்தல்.

அக்டோபர் - நவம்பர்.—முதல் போக நஞ்சை தினுசுகள் அறுவடை நாத்தைக் குறைத்து நடவு, இரண்டாம் போக நெல்லும் அன்ஞசிச் செடிகளும் பூத்திருத்தல், வாழை, பருத்திப் பயிர்களின் ஊடே சிறு பயிர்களை மடக்குவது, மலைப்புல்லை என்ஸைலேஜாக்குவது, வேர்க்கடலை, கேப்பை அறுவடை, முதல் போக பூமியில் கொளுஞ்சி விதைப்பு, ஒரு போக பூமி.

டிசம்பர் - ஜனவரி.—இரண்டாம் போக தினுசுகள் பூத்திருத்தல், கரும்புச்சாறு பிழிதல், வெல்லம் காய்ச்சுதல், பருத்திப் பயிர் பூப்பிடித்திருக்கும், அன்ஞசி, வாழை பழுத்திருக்கும், விதை பிளாட்டுகள் சுத்தம் செய்தல், பண்ணையைச்சுற்றிப் பார்க்கப் பிரிதொரு நல்ல ஸமயம்.

பிப்ரவரி - மார்ச்சு.—இரண்டாம்போக நெல் அறுவடையும் அதன் பின்னுல் பசுந்தாள் உரப்பயிராக கொளுஞ்சி விதைப்பும், இருபோக நஞ்சைகளில் இறவையில்லாமல், நெல் அறுவடைக்குப் பின் கரும்புக்குத் தயார் செய்து நடுதல், மாட்டுத்தீவனத்திற்கு ஸைலேஜ் உபயோகிப்பது, விதை முதலை காயப்போட்டு சுத்தம் செய்தல்.

குறிப்பு.—மாட்டெருவை நன்ருய்ப் பாதுகாத்தல், எறியப்பட்ட குப்பை கூளங்களைத்தக்கவாறு குழியிலிட்டு நல்ல மக்கின எருவாக்குவது, பால் கறவைக்கென்று வைத்திருக்கும் எருமைமாடுகளுக்கும் மற்ற கால்நடைகளுக்கும் தக்க உணவை வெகு ஜாக்கிரதையோடும் காலாகாலத்திலும் கொடுத்து போஷிப்பது. அன்ஞசிப்பழப்பயிர் சாகுபடி பல ரகப்பட்டதாயிருப்பது, மாட்டுத்தீவனப் பயிராக கினியா புல் வளர்ப்பது முதலியவைகளையெல்லாம் ஸதாகாலமும் இங்கே பார்க்கலாம்.

ஆராய்ச்சியிலிருக்கும் பல விஷயங்கள்.

மலையாளம், தென்கன்னடம் ஜில்லாக்களில் பயிராகும் நெல் தினுசுகளை விருத்திசெய்யவேண்டும் என்பதுதான் இப்பண்ணையின் முக்கிய நோக்கம். அதற்காகத் தற்காலத்தில் இங்கேயுள்ள நெல்தினுசுகளில் அதிக ராசி கொடுப்பனவற்றை வேறுபடுத்தி அவற்றை விருத்திசெய்து கொடுப்பதும், ஒட்டுமூலமாக நூதன சிறந்த தினுசுகளை உற்பத்தி செய்தல் முதலிய வேலைகள் செய்யப்படுகின்றன. இந்த இரண்டு ஜில்லாகளிலுமுள்ள முதல், இரண்டாம், மூன்ரும்போக நெல் தினுசுகளில் அநேக தினுசுகளைப் பொருக்கி எடுத்து அவற்றின் ராசி முதலியவற்றை பரிசோதனை செய்யப்பட்டுவருகிறது. இவற்றில் தகுதியானவற்றை ரயத்துகளின் நிலங்களில் தேர்ந்தெடுத்த சில இடங்களில் பயிரிடப்பட்டு மேலானது என்று நிர்ணயிக்கப்பட்டு புது நீ கொடுத்து ரயத்துகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. புழுதிக்கால் நெல்களிலும், மடுமுழுங்கி நெல் தினுசுகளிலும் வேலைகள் நடத்தப்பட்டுவருகின்றன.

ஆராய்ச்சியிலிருக்கும் வேறு விஷயங்கள்.

சாத்தியப்பட்டயிடங்களில் நெல்லிற்கு மாற்றுப் பயிர்களாகவும் அதற்குப் பதிலாகவும் எப்பயிர் செய்தால் லாபம் உண்டு என்பது சோதிக்கப்படுகிறது. சோளம், கொள்ளு, எள்ளு முதலிய பயிர்கள் புஞ்சை அல்லது மோடன் நிலங்களில் நெல்பயிருடன் மாற்றுப் பயிராக போடப்பட்டு சோதனை செய்யப்படுகிறது. மணிலாக்கொட்டை, பருத்தி, சோளம், கம்பு, தக்கைப்பூண்டு சணல் முதலியவைப் புஞ்சையிலும் ஒரு போக நஞ்சையிலும் பயிரிடப்பட்டுவருகின்றன. ஒரு போக நிலங்களில் நெல்லுக்கு மாற்றுப்பயிராக கரும்பு சாகுபடி செய்யப்பட்டுவருகிறது. நஞ்சைகளிலும் நெல்லுக்கு பதிலாக தக்கைப்பூண்டு, சணல் முதலியவை மூன்ரும்போக புஞ்சை மாற்றுப் பயிராகப் பயிரிடப்பட்டுவருகின்றன.

புஞ்சை நிலங்களில் பலவித பழவர்க்கச் செடிகள் வைக்கப்பட்டு இந்த தேசத்திற்கு ஒற்று இருக்கிறதா என்று சோதனை பண்ணப்பட்டுவருகிறது. மோடன் நிலங்களில் அன்னசிப்பழச் சாகுபடி லாபகரமாகத் தோற்றுகிறது.

என்சிலேஜ் என்னும் பச்சை மாட்டுத்தீவனம் பலவிதமான பச்சைப் புல்லிலிருந்து தயாரிக்கப்பட்டுவருகிறது. புல்பூண்டுகள், களை முதலியவைகள் பசுனை எருவாகச் செய்யப்படுகிறது. சிறந்த முறைகளால் தொழு எரு சேகரிப்படுகிறது.

கால்நடைகளைச் சரிவர போஷிப்பதனுலும் நல்ல கொட்டில்களில் கட்டுவதாலும் எவ்வாறு நல்லஸ்திதியில் வைத்துக்கொள்ளமுடியும் என்பதை இப்பண்ணையிலுள்ள மாடுகளை பார்த்தாலே தெரியும். இந்த ஜில்லாக்களில் உள்ள மாடுகள் நன்ருக இராமல் இருப்பதற்கு காரணம் சரியான தீனியும், கொட்டில்களும் இல்லாமல் இருப்பதே.

பண்ணையைப்பார்க்க விரும்புவோர் எக்காலத்திலும் அங்கு போகலாம். அவர்களைப் பண்ணையில் உள்ள உத்தியோகஸ்தர்கள் மெத்த சந்தோஷமாய் வரவேற்று பண்ணை முழுவதையும் சுற்றிக் காண்பிப்பார்கள்.

உள் நாட்டுக்குவேண்டிய முக்கிய நெல்தினுசுகளைச் சேகரித்தல் கை விதைப்புக்கும் நடுகைக்குமுள்ள வித்தியாசங்களை பரிசீலனை செய்தல்.

பட்டாம்பி விவசாய ஆரய்ச்சிபண்ணையிலிருந்து வெளியாகப்பட்ட பொறுக்கு நெல் விதைகளைப்பற்றிய குறிப்புகள்.

பட்டாம்பி 1.—வள்ளுவநாடு, ஏரநாடு, பொன்னுணித் தாலூகாக்களில் பயிராக்கப்படுகிற முக்கியமான தினுசாகிய ஆரியன் நெல்லிலிருந்துபொறுக்கின விதை. 145 நாட்களில் அறுவடை. மேமாதம் மத்தியில் விதைத்து செப்டம்பா மாதம் முதலில் அறுக்கிறது. நூற்றுக்கு 15.8 பங்கு வீதம் அதிக மாசூல் நிரந்தரமாய்க் கொடுத்திருக்கிறது. நெல் உமி சற்று கருவலான கோடுகளுடன் கருஞ்சிவப்பு வர்ணமுடையது. அரிசி சிவப்பு, சராசரி ஏகர் 1-க்கு 2,961 ராத்தல் மாசூல்.

பட்டாம்பி 2.—வள்ளுவநாடு, பொன்னுணி தாலூகாக்களில் மேட்டுப்பாங்கான ஒரு போக நஞ்சைகளில் பயிராக்கப்படுகிற பொன்னுரியன் நெல்லிலிருந்து பொறுக்கினவிதை. 135 நாட்களில் அறுவடை. ஜூன் ஆரம்பத்தில் விதைத்து செப்டம்பர் 3-வது வாரத்தில் பூக்கிறது. நெல் பொன் சிவப்பு வர்ணம். அரிசி சிவப்பு, நான்கு வருடப் பரிட்சையில் 100-க்கு 15.4 பங்கு வீதம் அதிக மாசூல் கொடுத்திருக்கிறது. சராசரி ஏகர் 1-க்கு 2,140 ராத்தல் மாசூல்.

பட்டாம்பி 3.—பொன்னுணி வள்ளுவநாடு தாலூக்காக்களில் பயிராகிற இரண்டாவது போக தினுசுகளில் குறுகிய காலமுள்ள இறவைப்பாண்டி நெல்லிலிருந்து பொறுக்கின விதை. 128 நாட்களில் அறுவடை. செப்டம்பர் மத்தியில் விதைத்து டிசம்பர் மத்தியில் பூக்கிறது. அரிசி சிவப்பு. நான்கு வருட சராசரி மாசூல் 100-க்கு 8·3 பங்கு அதிகம். சராசரி ஏகர் 1-க்கு 1,850 ராத்தல் நெல் மாசூல்.

பட்டாம்பி 4.—ஏரநாடு வள்ளுவநாடு தாலூக்காகளில் பயிராகிற சிவப்பு அரிசியுள்ள இரண்டாவது போக நெல் தினுசான வெள்ளாரியிலிருந்து பொறுக்கின விதை. விதைப்பிலிருந்து 140 நாட்களில் அறுவடை. செப்டம்பர் துவக்கத்தில் விதைக்கப்பட்டு டிசம்பர் இறுதியில் புஷ்பிக்கிறது. நான்கு வருட சராசரி மாசூல் 100-க்கு 22.6 பங்கு வீதம் அதிகம். சராசரி ஏகர் 1-க்கு 2,600 ராத்தல் மாசூல்.

பட்டாம்பி 5.—வள்ளுவநாடு, ஏரநாடு, பொன்னுணி தாலூக்காக்களில் முக்கியமாய்ப் பயிராகிறதும் 140 நாள் வயதுமுள்ள சிவப்பு அரிசி முதல் போக நெல் தினுசாகிய வெளுதிருகிழமை என்ற தினுசின் பொறுக்கு விதை. மே மாதம் மத்தியில் விதைக்கப்பட்டு செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் பூக்கிறது. நாட்டு நெல்லைவிட 100-க்கு 13·7 பங்கு வீதம் அதிக மாசூல் தருவதாக 4 வருட பரீக்ஷையில் காணப்பட்டிருக்கிறது. சராசரி ஏகர் 1-க்கு 2,340 ராத்தல் மாசூல்.

பட்டாம்பி 6.—தென் கன்னடம் ஜில்லாவின் முக்கியமான இரண்டாம் போகப்பயிரான **அதிகராய** என்னும் தினுசின் பொறுக்கு விதை. விதைப்பு முதல் அறுவடைவரை 145 நாட்கள் கொண்ட சிவப்பு அரிசியுள்ளது. செப்டம்பர் துவக்கத்தில் விதைக்கப்பட்டு டிசம்பர் இறுதியில் பூக்கிறது. நான்கு வருட சராசரி அதிக மாசூல் 100-க்கு 18 நெல், பார்வைக்கு அழுக்கு பரந்த கருஞ்சிவப்பு நிறம். சராசரி ஏகர் 1-க்கு 2,160 ராத்தல் மாசூல்.

பட்டாம்பி 7.—வள்ளுவநாடு, பொன்னுணி தாலூக்காக்களில் ஒரு போக நஞ்சைகளில் பயிராக்கப்படுகிற நெல். நுனியில் முள்ளுள்ளதும் சிவப்பு அரிசியுள்ளதுமான பரம்புவட்டன் நெல்லின் பொறுக்கு விதை. சமுத்திரக் கரையோரத்து உவர் நிலங்களிலும் சற்று தண்ணீர் தட்டுப்பாடுள்ள இடங்களிலும் சமாளித்துக் கொள்ளுந்தன்மையுடையது. இந்த நெல்லு தினுசு 120 நாட்களில் அறுவடையாவது. சிவப்பு அரிசியும், உமி கருப்புமாக இருக்கிற இநத நெல்லுக்கு முள்நுனி உண்டு. 100-க்கு 13 வீதம் அதிக மாசூல் தரத்தக்கது. ஜில்லா சோதனையில் தக்க பருவத்தில் 100-க்கு 25 வீதம்கூட அதிக மாசூல் கொடுத்திருக்கிறது. சராசரி மாசூல் ஏகர் 1-க்கு 1,400 முதல் 1,800 ராத்தல் வரை, பருவம், மழை, பூஸாரம் இவைகளை யனுசரித்து ஏறத்தாழ இருக்கிறது.

பட்டாம்பி 8.—மலையாள ஜில்லாவிலும் ஏகதேசமாய் தென் கன்னடம் ஜில்லாவிலும் பயிராகிறதும் அந்நாட்டு தவளைக்கண்ணன் நெல் தினுசிலிருந்து ஒதுக்கப்பட்ட சுவன்னுரி தவளைக்கண்ணன் என்ற முதல் போகத்து 135 நாட்களில் அறுக்கிற நெல் தினுசின் பொறுக்கு விதை, சிவப்பும் வெள்ளையுமான கலப்பு அரிசி தினுசு நாட்டு விதை. 6 வருஷ பரிசோதனையில் இந்த விதை 100-க்கு 16·9 பங்கு அதிக மாசூல் கொடுத்தது. நாட்டு வித்தைப்பார்க்கிலும் ஒரு வாரம் முன்பே அறுவடைக்கு வருவது இந்தப் பொறுக்கு நெல்லின் விசேஷமான குணம். இதனுல் இதற்குப் பின்னுல் வருகிற இரண்டாம் போகப்பயிரை சற்று முன்னுடியே ஆரம்பிக்கலாம். சிவப்பு துளியுள்ள வைக்கோல் நிறமான உமியுடையது இந் நெல். வெள்ளை அரிசியுள்ள கீழ்க்குறிக்கும் பட்டாம்பி 9 நம்பரிலிருந்து வேறுபடுத்தும் பொருட்டு சுவன்னுரி (சிவப்பு அரிசி) என்று சொல்லப்படும் இந்த நெல் அரிசி சிவப்பாய் இருக்கும்.

பட்டாம்பி 9.—இரு போக நஞ்சையில் முதல் போகப் பயிராய் விளைகிற தவளைக்கண்ணன் தினுசிலிருந்து தனிப்படுத்தப்பட்ட வெளுத்தரி தவ்ளைக்கண்ணன் என்றது இந்த பொறுக்கு நெல். நாட்டு நெல்லைப் போலவே காலமுள்ளது. சாய்ந்து போகிறதன்றி உயரமாய் நேரே வளரக்கூடியது. 100-க்கு 13.6 பங்கு வீதம் அதிக மாசூல் கொடுத்தது. சராசரி ஏகர் 1-க்கு 2,000 முதல் 2,400 ராத்தல் மாசூல்.

பட்டாம்பி 10.—மலையாள ஜில்லாவில் 3 போகங்களிலும் பயிராக்கப்படுகிறதும் 100 நாட்பயிருமான இளம் வித்தாகிய தெக்கன்சீரா என்ற தினுசின் பொறுக்கு விதை, பட்டாம்பி விவசாய பரிசோதனைப் பண்ணையில் 3 வருஷங்களாக நடத்தின பரீக்ஷையில், வருஷத்தில் எக்காலத்திலும் இதைப் பயிர் செய்யலாம் என்றும் இதன் பூக்கும் காலம் பருவத்தை ஒட்டினதில்லையென்றும் துலங்கிற்று என்றுலும், பிப்ரவரி, மார்ச்சு மாதங்களான புஞ்சைப்பருவமே மிகவும் ஏற்றதென்பதும் விளங்கிற்று. முதல் போகம், மூன்றும் போகங்களில் தனித்தனி 10-ம், 8-ம் பங்கு 100-க்கு அதிக மாசூல் கொடுத்தது. சராசரி ஏகர் 1-க்கு 1,500 முதல் 1,800 ராத்தல் மாசூல். அரிசி சிவப்பு. சாப்பாட்டுக்கு அந்நாட்டு ஜனங்கள் இதை சிலாகிக்கிறுர்கள்.

விவசாய ஆராய்ச்சிப்பண்ணை, தாலிப்பரம்பா.

மிளகு சாகுபடியைப்பற்றி பரிசோதனைகள் செய்யும்பொருட்டு இப் பண்ணை 1905-ம்ஹு ஏற்படுத்தப்பட்டது. இப்பண்ணை தாலிப்பரம்பா—இருக்கூர் ரோட்டிற்குப் பக்கத்தில் தாலிப்பரம்பா ரோட் ரயில்வே ஸ்டேஷனுக்கு 10 மைல் தூரத்தில் இருக்கிறது. தாலிப்பரம்பா டவுனிலிருந்து

ஸ்டேஷன் இரண்டு மைல். பஸ்களும், மோட்டார் வண்டிகளும் வாடகைக்கு ஸ்டேஷனில் இருந்து ஊருக்குக் கிடைக்கும். தாலிப்பரம்பா டவுனின்று இருக்கூர் பக்கம் நாளுக்கொருமுறை பஸ் ஓடுவதுடன் பண்ணைக்குப் போக மோட்டார் கார்களும் கிடைக்கும்.

2. இப்பண்ணையின் விஸ்தீர்ணம் 148 ஏக்கர்கள். அவற்றில் சாகுபடி செய்யப்படுவது 57 ஏக்கர்கள்.

மிளகு	29·60
நஞ்சை	8·59
புஞ்சை	16·86
பழத்தோட்டம்	2·00
	57·05

இப்பண்ணையில் எந்த மாதங்களில் எவற்றை பார்க்கலாம்.

ஏப்ரல்.—நஞ்சை நிலங்களில் இரும்புக் கலப்பைகளால் உழவு. தென்னந்தோப்புகளில் குண்டாகா ஓட்டுவது. க்யூ (Kew) அனுசும், மோரிஸ் அனுசும் காய்த்திருப்பது.

மே - ஜூன்.—(1) மிளகு நடவு, (2) தெளிவு நெல் நாற்றுவிடுதல், (3) பசுந்தாள் பயிரை நஞ்சையில் மடக்கி உழுதல். நஞ்சை உழவு, (4) நெல் நடவு, (5) கரும்புக்குக் கடைசித் தடவை எரு வைத்தல், (6) புஞ்சை நிலங்களில் விதைப்பும், நடவும்.

ஜூலை - ஆகஸ்ட். மிளகு.—நிலங்களைக் கொத்தலும், ஷை நிலங்களில் காலியான இடங்களில் புதிய மிளகுச் செடிகளை வைப்பதும்.

ஆகஸ்ட் - செப்டம்பர்.—இம்மாதங்களில் எல்லப் பயிர்களும் பயிரிடப்பட்டிருப்பதால் இதுவே பண்ணையைப் பார்க்கச் சிறந்த சமயம். (a) நஞ்சைகளில் (1) பொருக்கி எடுத்த விதைகளில் இருந்து சிறந்த முறைகளில் சாகுபடியாயிருக்கும் நெற்பயிரும், (2) உயர்ந்த பல தினுசு கரும்புகளும், (3) நேந்திரம் வாழையும், உள்நாட்டு வாழை தினுசுகளும் பார்க்கலாம், (b) தோட்டக்கால் நிலங்களில் (1) மிளகு தினுசுகளும் அவற்றை நன்ருய் வைத்துக்கொண்டிருக்கும் முறைகளும், (2) மிளகு தோடங்களில் காப்பிக்கொட்டையைப் பயிரிடுதலும், (3) நாளுவித பழச்செடிகள் பயிரிடப்படும் பழத் தோட்டங்களும், (c) புஞ்சையில் (1) மலை நெல்லிற்குப் பதிலாக லாபம் தரக்கூடிய மிளகாய், இஞ்சி, மஞ்சல், மாவள்ளி, அனுசிப் பழம் முதலியவற்றை சாஸ்திரோத்தமாகப் பயிரிடுதலும், (2) ஒட்டு மாமரம் சபோடா முதலியவைகளும், (3) புஞ்சைத் தென்னந்தோட்டங்களும், (4) மாட்டுத் தீவனப்பயிர்களாகிய சோளம், கம்பு முதலியவற்றையும் பார்க்கலாம்.

அக்டோபர் - நவம்பர். சைலேஜ் செய்யும் முறையும், புல்லைக் காய வைத்தலும், மிளகுத் தோட்டங்களை இரண்டாம் முறை கொத்தல், பல விதக் கரும்புப் பயிர்கள் நன்ருய் உண்டாயிருத்தல்.

டிசம்பர் - ஜனவரி.—(1) காய்ப்புடன் கூடிய பழத்தோட்டங்கள், (2) நஞ்சை நிலங்களில் தழைப்பயிர்கள், (3) மிளகு அறுவடை, மிளகுக் கொடிகளைக் கட்டுதல், வெய்யில் படாமலிருக்க மூடிவைத்தல், (4) கரும்பு நட நிலம் தயாரித்தல், நஞ்சைகளில் நேநதிரவாழையும் காய்கறி முதலியவைகளும், (5) கரும்பு ஆடுவது, வெல்லம் செய்வது முதலிய வேலைகளின் துவக்கம்.

பிப்ரவரி - மார்ச்சு.—(1) கரும்பு ஆடுவதும், வெல்லம் செய்தலும், (2) கரும்பு நடவு, (3) நஞ்சையில் நேத்திரம், கோடை கறிகாய்ப்பயிர்கள், (4) பசுந்தாள் உரப்பயிர்கள் முதலியன, (5) சைலேஜ் தீனியை மாட்டுக்குப்போடுதல்.

தேனீ வளர்ப்பது அதைப்பற்றிய விவரங்கள் எக்காலத்திலும் காணலாம். டில்லி எருமைக்கடாவையும் சிறந்த சில எருமை மாடுகளும், நாட்டு மாடுகளை அபிவிருத்தி செய்வதின் அவசியத்தை நிரூபிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கின்றன. தொழு எரு சேகரிக்கும் முறையையும் பசலை எரு தயாரிக்கும் முறைகளையும் எக்காலத்திலும் பார்க்கலாம் :—

பரிசீலனை செய்யப்படும் முக்கிய விஷயங்கள்.—

(1) சீதோஷ்ணத்தால் மிளகு உதிர்ந்துபோகும் காரணம் அறிதல்.

(2) பலவித நிலங்களுக்கு ஏற்ற மிளகு தினுசுகளைக் கண்டு பிடித்தல்.

(3) மிளகுச் செடிகள் ஏறி வளரத்தகுதியான மரங்களையும், அவைகளுக்கு வேண்டிய நிழல்களின் அளவையும் கண்டுபிடித்தல்.

(4) மிளகுச் செடியைப் பயிரிடும் விஷயமும், அதை விருத்தி செய்யும் முறைகளையும் கண்டுபிடித்தல்.

(5) மிளகில் விழும் "பொள்ளு" என்னும் வியாதியை ஆராய்ச்சி செய்தலும் அவற்றை தடுக்கும் முறைகளைக் கண்டுபிடித்தலும்.

(6) மிளகுத் தோட்டங்களில், காப்பி முதலிய இதர பயிர்களைப் பயிரிடுவதால் உண்டாகும் நன்மை தீமைகள் முதலியவற்றை கண்டுபிடித்தல்.

நஞ்சை நிலம்.

(1) பசுந்தாள் உரத்திற்காகக் கொளிஞ்சி, காராமணி முதலிய பசுந்தாள் உரப்பயிர்களைப் பயிர் செய்தல்.

(2) சிறந்த சாகுபடி முறைகளைக் கையாடியும் விதையைப் பொறுக்கியும் நெற் பயிரை அபிவிருத்தி செய்தல்.

(3) வாழைகளில் அநேக தினுசுகளைப் பயிரிட்டுப்பார்த்தல்.

புஞ்சை நிலம்.

(1) சரியான மாற்றுப்பயிர்கள் பயிரிடல்.

(2) பருத்தி, இஞ்சி, மிளகாய், அஞுசி முதலிய மானவாரிப் பயிர்களைப் பயிரிடல்.

(3) பழவர்க்கச் செடிகளைப்பற்றி ஆராய்ச்சி முக்கியமாய் ஒட்டு மாவைப் பற்றி பரிசீலனை.

தவிர, கோடை காலத்தில் மாடுகளுக்குப் போட மலைப் புல்களிலிருந்து சைலேஜ் என்னும் பச்சை மாட்டுத் தீவனம் செய்யும் முறை. வீணுகப் போகும் புல் பூண்டு முதலியவற்றைக்கொண்டு பசலை எரு செய்தல், தொழு எரு செவ்வனவே சேகரிக்கும் முறை முதலியன எக்காலத்திலும் செய்து காண்பிக்கப்பட்டு வருகின்றன.

பில்லிக்கோடு, விவசாய ஆராய்ச்சி பண்ணை.—தென்கன்னடம் ஜில்லா, காஸரகோடு தாலூகா, பில்லிகோடு கிராமத்தில் உள்ள இந்தப்பண்ணை 1916-ம்வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. சர்வத்தூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து தென் கிழக்கே $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் ஒரு அடிப்பாதை வழியே செல்லுகிற வழியில் இருக்கிறது. செஞ்சால் மண்கண்ட பூமியுள்ளது. இந்தப்பண்ணை மொத்தம் 70 ஏக்கர் விஸ்தீர்ணத்தில் 34 ஏக்கர் தென்னை, $5\frac{1}{2}$ ஏக்கர் பழ விருக்ஷங்கள். மா, சபோடா, அவகடோ முதலியவை பயிர் செய்யப்பட்டிருக்கின்றன.

எப்பொழுது என்ன பார்க்கலாம்.

(1) **ஜனவரி-ஏப்ரல்.**—பூமி கம்மலை உடைக்க குண்டகா அல்லது பயிரடிக்கும் கருவியால் வேலை செய்வது.

(2) மே-ஜூன்—(1) பசுந்தாள் உரப்பயிருக்கு உழவு செய்து விதைப்பது. (2) தென்னைமரத்து உச்சிகளை சுத்தம்பண்ணி தொங்கின குலைகளைக் கட்டுதல். (3) பூஞ்சண நோய்களை தடுக்க மருந்து பீச்சியடிப்பது.

(3) **ஜூலை-ஆகஸ்டு**—(1) பசுந்தாள் உரப்பயிர்களை வெட்டித்தள்ளி மடக்கி உழுவது. (2) தென்னைகளுக்கு எருவிடுவது. (3) கேணி வெட்டுதல். (4) நோய்பட்ட மரங்களுக்கு சிகித்சை செய்தல்.

(4) **அக்டோபர்-டிசம்பர்.**—(1) உழவும், ஊடே பயிரடிப்பும். (2) கேணிகளை மூடுதல்.

பரிசீலனை செய்யப்படும் விஷயங்கள்.

(1) மானவாரியில் தென்னை சாகுபடி.

(2) கேணி வெட்டுவதின் பிரயோஜனங்கள்.

(3) நடவேண்டிய ஆழத்தின் கணக்குப் பரிசோதனை. பூமி மட்டத்திலிருந்து 1, 2, 3 அடி ஆழத்தில் தென்னை நடவு.

(4) தென்னையின் பொதுப்படையான குணுகுணங்களை ஆராய்வதும் முக்கியமாய் குறும்பைகள் உதிர்ந்துபோகும் விஷயத்தை ஆராய்வதும்.

(5) இந்த ராஜதானியிலுள்ளவையும் மற்றும் லோகாந்தரமானவையுமான தினுசுகளைப் பயிர் செய்து நாடோடியாக்குவது.

(6) ஸ்வய சிருஷ்டி நெற்றுகளின் கன்றுகளைப்பற்றி தீர ஆராய்தல்.

(7) தென்னையின் நோய்களும் அவைகளைத் தடுக்க முறைகளும்.

(8) மா, சபோடா, அன்னுசி, நாரத்தை ஜாதிகள் முதலிய பழ விருக்ஷங்களை மேல் கரைப் பிரதேசங்களில் பயிர் செய்யவேண்டிய வழிகளை ஆராய்தல்.

நீலேஷ்வர் நம்பர் (2) பண்ணை.

இப்பண்ணை (1)-ம் நம்பர் பண்ணைக்கு 5 மைல் வடக்கேயும் நீலேஷ்வர் ஸ்டேஷனுக்கு 1 மைல் மேற்கேயும் இருக்கிறது. ரெயில்வே ஸ்டேஷனுக்கும், பண்ணைக்கும் வண்டிப்பாதை இருந்தாலும் வாடகை வண்டிகள் கிடையாது.

மற்ற பண்ணைகளுடன் 1916-ம் ௵ ஆரம்பிக்கப்பட்டபோதிலும் முதல் நடவு 1918-ம் ௵ மே மாதத்தில்தான் போடப்பட்டது. இப்பண்ணையின் மண்வளம் மணல்கலந்த செம்மண் பூமி, வயதான தென்னைகள் 1933–34-ம் ௵ அப்புறப்படுத்தப்பட்டு, 1934–35-ம் ௵ புதுக்கன்றுகள் மூன்றடி ஆழமுள்ள குழிகளில் நடப்பட்டன. இந்தப் பண்ணையில் சிவப்பு மண் கண்டமான பூமிகள்.

என்னென்ன பார்க்கலாம்.

ஒட்டவைக்கப்பட்ட கலப்பில்லாத தன்படியாய் உண்டாகிய தென்னம் நெற்றுகளின் பிள்ளை நடப்பட்டிருக்கின்றன. குப்பையை நல்ல உரமாக்கல், தேன்கூடு, ஈப்புழுக்களைப் பத்தயத்தில் பிடித்தல் பார்க்கலாம்.

ஜூன் - ஆகஸ்டு.—காராமணி குழைப்பயிர் பார்க்கலாம்.

பரிசீலனை செய்யப்படும் விஷயங்கள்.

(1) அநேகவித ஒட்டுவினுல் கன்றுகளை உறுதியாய் வளர்த்தல்.

(2) தென்னைக் குண்டான, நிறம், காய்க்கும் தன்மை முதலிய குணங்கள் பரிசீலனை செய்தல்.

(3) 3 அடி ஆழத்திலும் தரை மட்டத்திலும் நடுவதால் வேரும் கன்றும் வளரும் தன்மை ஆராய்தல்.

(4) நயமானதும் நயமில்லாததுமான 15 வருஷத்து மரங்களை இடம் பெயர்த்து நட்டு அதன் வளர்ச்சியை ஆராய்தல்.

நீலேஷ்வர் நெ. 3 பண்ணை.

இது இரண்டாம் நம்பர் பண்ணைக்கு சுமார் 1 மைல் வடமேற்கே இருக்கிறது. இப்பண்ணைக்கு இரண்டாம் பண்ணையினின்று ரோடு இருக்கிறது. ஆனுல் வழியில் ஓடை ஒன்றிருக்கிறது. அக்கரைக்குப்போக அங்கு எப்பொழுதும் படகுகள் கிடைக்கும். நீலேஷ்வர நதி இப்பண்ணைக்கு அருகில் ஓடுகிறது. சுமார் $\frac{3}{4}$ மைல் தூரத்தில் கடல் இருக்கிறது.

சரள் பூமி நீர்மட்டம் கோடை காலத்திலும் அதாவது ஏப்ரல், மே மாதங்களில் பூமி மட்டத்திற்கு கீழ் 18 அடியில் கிடைக்கும்.

பண்ணையின் மொத்த விஸ்தீர்ணம் 48·07 ஏக்கர்கள். அவற்றில் 33·2 ஏக்கர்கள் நடப்பட்டிருக்கின்றன.

என்ன எப்பொழுது பார்க்கலாம்.

ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல்.—நாத்தங்காலுள்ள முதல் வருஷ கன்றுகளுக்குத் தண்ணீரிடல், நாற்றங்காலில் ஏப்ரல், மே மாதங்கள் நெற்றுகள் போடப்படும். எல்லேப்புர மரங்களிலிருந்து மிந்திரிக் கொட்டை சேகரித்தல்.

மே - ஜூன்.—மான்சூன் கலப்பையால் நிலங்களை உழுவது. முதல் மழையில் காராமணிப் பசுந்தாள் விதைப்பு. ஜூன் மாதத்துடன் நாத்து பாவுதல் முடிவடையும்.

ஜூலை - ஆகஸ்ட்.—தென்னை மரங்களின் குருத்துக்களைச் சுத்தம் செய்தல் பசுந்தாள் உரப்பயிருக்கு உரமிட எரு வாங்கி சேகரம் செய்தல்.

ஆகஸ்ட் - செப்டம்பர்.—காராமணிப்பயிரை மடக்கி உழுதலும், மரங்களுக்கு எருக்கள் வைத்தலும்.

அக்டோபர், நவம்பர், டிசம்பர்.—(1) மான்சூன் கலப்பையால் நிலங்களை உழுதல், (2) ஷவல் கல்டிவேட்டர் அல்லது எச்.எம். குண்டகா ஓட்டுதல்.

எல்லாத் தென்னைகளும் புஞ்சை முறையில் சாகுபடி செய்யப்படுகின்றன. உலகத்தில் தென்னை சாகுபடி செய்யும் பலபாகங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட தென்னை மரங்கள், ஓர் பிளாட்டில் நட்டு இருப்பதை இங்கு காணலாம். காசர்கோடு பண்ணையில் உற்பத்தியான ஒட்டுத் தென்னஞ் செடிகள் இங்கு நடப்பட்டிருக்கின்றன. தென்னை நாத்துகளை எவ்வாறு தயார் செய்யவேண்டும் என்னும் முறைகளையும் இங்கு பார்க்கலாம்.

பரிசீலனை செய்யப்படும் விஷயங்கள்.

(1) காசர்கோட்டில் செய்யப்பட்ட பரிசோதனை முடிவுகளை அனுசரித்து இங்கும் பரிசீலனைகள் செய்யப்படும். (2) சுய பிந்துவினால் உண்டாக்கிய நெற்றுகளுக்கும், ஒட்டு நெற்றுகளுக்கும் உள்ள தாரதம்மியங்களையும் அவைகளின் குணகுணங்களையும் இங்கு பரிசீலனை செய்யப்படுகின்றன. (3) நெற்றுகள் இறக்குவதற்கு எந்த வயது தாய் மரங்களுக்கு சிலாக்கியம் என்பதைக் கண்டுபிடிக்கப் பலவித வயதுள்ள மரங்களிலிருந்து கிடைத்த நாத்துகள் நடப்பட்டிருக்கின்றன. பண்ணையின் 5 ஏக்கர் இடத்தில் கொல்லாங்கொட்டை ஆராய்ச்சி நடக்கிறது.

விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, காசர்கோடு.

தென்கன்னடம் ஜில்லாவில், காசர்கோடு தாலூகாவில் கூடலூர்யென்ற கிராமத்தில் இப்பண்ணை இருக்கிறது. காசர்கோடு ரயில் ஸ்டேஷனிலிருந்து வடக்கே 3 மைல் தூரத்தில் உள்ளது. வாடகை மோட்டார்களும், ஜட்காவும் எப்பொழுதும் வாடகைக்கு கிடைக்கும். கடல் பண்ணையில் இருந்து சுமார் மூன்று பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது.

இரண்டாம் நம்பர் நீலேஷ்வர் பண்ணையைப் போல் இங்கும் மணல் கலந்த செம்மண் பூமி, இதன் மொத்த விஸ்தீர்ணம் 30·90 ஏக்கர்கள். அவற்றில் 25·90 ஏக்கர்கள் பயிரிடப்பட்டிருக்கின்றன.

1916-ம் ஸ்ரீ சர்க்காரால் இத்தென்னந்தோப்பு வாங்கப்பட்டது. அப்பொழுது இந்த தோட்டத்திலுள்ள மரங்கள் சுமார் 20 முதல் 25 வரையில் வயதுள்ளவைகளாய் இருந்தன.

என்ன எப்பொழுது பார்க்கலாம்.

இப்பண்ணையின் முக்கியப் பயிர் தென்னை, பரிசோதனைகளுக்குட்படாத நிலங்களில் மாட்டுத்தீவன சோளம், மக்காச்சோளம், ராகி, மணிலாக் கொட்டை முதலிய இதர பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல்.—(1) பூமியைப் புழுதிபடுத்த ஷவல் கல்டிவேட்டர் அல்லது குண்டகாவை நிலங்களில், ஓட்டல், (2) கொப்பரை செய்தல், (3) நெத்து.

மே - ஜூன்.—(1) தென்னை குருத்துகளை சுத்தம் செய்தல் குழி தோண்டுதல், (2) சோதனை இல்லாத பிளாட்டுகளை உழுது காராமணி பசுந்தாள் உரப்பயிரை விரைத்தல், (3) மாட்டுத் தீவனச் சோளம், மணிலாக்கொட்டை முதல் இதர பயிர்களை விதைத்தல்.

ஜூலை - ஆகஸ்ட்.—(1) காராமணியை செதுக்கி நிலத்தில் போட்டு உழுதல் (2) சோதனைபிளாட்டில் எருவிட்டு மான்சூன் கலப்பையால் உழுது மூடுதல், (3) குழிகளை மூடுதல்.

அக்டோபர், நவம்பர், டிசம்பர்.—நிலங்களில் ஈரங்காக்கவும் களைகளைப் போக்கவும், பூமியை புழுதிப் படுத்தவும் உழுதல், ஷவல் கல்டிவேடர் அல்லது எச்.எம். குண்டகா முதலியவற்றை ஓட்டல்.

பரிசீலனை செய்யப்படும் விஷயங்கள்.

(1) தென்னை மரங்களின் பொதுவான குணங்களைப் படித்தல். (2) தென்னைகளுக்கு வேண்டிய உரங்களைக் கண்டுபிடிக்க அநேகவிதமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. அத்துடன் வெவ்வேறு எருக்களை உபயோகிப்பதால் ஏற்படும் குணங்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. ஷை சோதனைகள் விஸ்தாரமாகப் பிறகு நீலேஷ்வர் பண்ணைகளில் செய்யப் படும். (3) தோட்டங்களை அடிக்கடி உழுதலாலும், உழாமல்இருப்பதாலும் ஏற்படும் வித்யாசங்களை கண்டுபிடித்தல். (4) தென்ன மட்டைகளை எரு வாக்கும் முறைகளைக் கண்டுபிடித்தல். (5) தென்னந் தோப்புகளில் இதர பயிர்களைப் பயிரிடுவதால் ஏற்படும் லாப நஷ்டங்கள் முதலியவற்றை கண்டுபிடித்தல் முதலியன.

பண்ணையைப் பார்க்கவருவோர் எப்பொழுதும் நல்வரவேற்கப்படுவார்கள்.

அனுபந்தம்.

டிமான்ஸ்டிரேட்டர்களின் டிப்போக்களில் கிடைக்கும் சாமான்களின் ஜாப்தா.

நெல் விதைகள்—		
தவளைக்கண்ணன்	0 0 7	ராத்தல் ஒன்றுக்கு.
இராஜாக்கயமா		
குருங்கயமா		
தொண்ணூரான்		
மோடன் - கரு உமி		
ஆரியன் - பி.டி.பி. நெ. 1		
பொன்னுரியன் பி.டி.பி. நெ. 2		
வெளுத்தரிகயமா பி.டி.பி. நெ. 5		
பரம்பு வட்டன் பி.டி.பி. நெ. 7		
தவளைக்கண்ணன். சிவப்பு அரிசி பி.டி.பி. நெ. 8.		
தவளைக்கண்ணன். வெள்ளை அரிசி பி.டி.பி. நெ. 9.		
ஜீரக சம்பா		
தெக்கன் சீரா		
நெல் விதை - இரண்டாம்போகம்—		
ஜி.இ.பி. நெ. 24	0 0 9	ஷை
கோ. நெ 2.		
கோ. நெ. 3		
எரவபாண்டி பி.டி.பி. நெ. 3		
வெள்ளரி பி.டி.பி. நெ. 4		
அதிகராய பி.டி.பி. நெ. 6		
கோ. நெ. 5		
கோ. நெ. 8		
பசுந்தாள் உரப்பயிர் விதைகள்—		
கொளிஞ்சி	0 0 8	
தென்னை நெற்றுகள்	5 0 0	நூற்றுக்கு காசர்கோட் பண்ணை டெலிவரி. காசர்கோட் ரயில் ஸ்டேஷன் டெலிவரிக்கு ரூ. 6–8–0.

(The price 0 0 7 applies, by a bracket, to all the paddy seeds in the first group; 0 0 9 applies, by a bracket, to all the second-crop seeds.)

வண்டு குத்தூசி	0	1	3	ஒன்றுக்கு.
கிராமவாசியின் பஞ்சாங்கம்—இங்கிலீஷ், மலையாளம், கன்னடம்.	0	1	0	ஷை
விவசாயத்தைப்பற்றிய ராயல் கமிஷன் எழுதியுள்ள சுருக்க விஷயம், மலையாளம், கன்னடம்.	0	8	0	ஷை
சூப்பர் நெ. 25, கலப்பை	4	8	0	ஷை
ஷை தனிக்கார்	0	5	9	ஷை
ஷை ஆணி	0	2	3	ஷை
அன்ஞுசிகன்றுகள்	4	0	0	1,000 கன்றுகளுக்கு.
மிளகுக் கொடித்துண்டுகள்	4	0	0	1,000 துண்டுகளுக்கு.

3. (h) 8-வது சர்க்கில்.

எட்டாவது சர்க்கிள் என்பது கோயம்புத்தூர், சேலம், நீலகிரி ஜில்லாக்கள் அடங்கியது. அது ஓர் விவசாய டிப்டி டைரெக்டருடைய பொருப்பிலிருக்கிறது. அவருடைய தலைமை இடம் கோயம்புத்தூருக்கு அருகாமையிலிருக்கும் லாலி ரோட் போஸ்டு ஆபீசு விவசாய உயர்தரக் கல்லூரியாகும். இந்த சர்க்கில் நடந்து வரும் வேலைகள் பின் வருமாறு:—

(a) பிரசாரம்.

(1) **ஆராய்ச்சி.**—நஞ்சனுடு விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் முக்கியமாக உருளைக்கிழங்குப்பயிரைப்பற்றியும், மற்றும் நீலகிரி மலை சாகுபடி விஷயமாகவும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இந்த ஆராய்ச்சி வேலைகள் ஒரு சூப்பிரண்டெண்டின் நேர்ப் பார்வையில் இரண்டு மானேஜர்கள் உதவி கொண்டு நடந்து வருகின்றன.

(2) **கிராமங்களில் நூதன முறைகளைப் பிரசாரம் செய்து பிரத்தியட்சப் பிரமாணமாகவும் காண்பித்தல்.**—கோயம்புத்தூர் , நீலகிரி ஜில்லாக்களிலுள்ள வேலைகள் டிப்டி டைரக்டரின் நேர்முக மேல்பார்வையிலிருக்கின்றன. சேலம் ஜில்லாவிலுள்ள வேலைகள் ஒரு விவசாய அஸிஸ்டெண்ட் டைரெக்டரால் டிப்டி டைரக்டர் சொற்படி மேல் பார்க்கப்படுகிறது. சேலம் ஜில்லா, ஹஸூர் தாலூகா, நீலகிரி, கூடலூர் தாலூகா தவிர மற்ற ஒவ்வொரு தாலூகாவிலும் நூதன விவசாய முறைகளைப் பிரசாரம் செய்யவும், பிரத்தியட்சமாகக் காட்டவும் ஒரு டிமான்ஸ்டிரேட்டர் இருக்கிறார்.

(3) **கோ. 2. கம்போடியாப் பருத்தி விதை கொடுத்தலை அதிகரித்தல்.** இந்திய சென்டறல் பருத்திச் சங்கத்தின் பொருளுதவியைக் கொண்டு திருப்பூர் ஐக்கிய வியாபாரக் கழகத்தார் மூலம் கலப்பற்ற கம்போடியா பருத்தி விதை பரவச் செய்யும் வேலை ஒரு பிசினஸ் மானேஜரால் ஆறு டிமான்ஸ்டிரேட்டர்கள் உதவி செய்ய விவசாய டிப்டி டைரெக்டர் மேல் பார்வையில் நடைபெற்றுவருகிறது.

(4) **கீழ்பவானி பாசனத்தில் புஞ்சைப் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் விஷயம்.**

இந்த வேலை ரெவினியு இலாகா, நீர்ப் பாசான இலாகா உதவிகொண்டு ஒரு அஸிஸ்டெண்ட் டைரக்டரால் இரண்டு டிமான்ஸ்டிரேட்டர்கள் உதவி புரிய நடை பெற்றுவருகிறது.

பிரசாரம் நேரில் செய்துகாட்டல்.—டிமான்ஸ்டிரேட்டர்களுக்கு உள்ளடங்கிய இடமும் அவர்களுடைய தலைமை இடமும் ஜில்லா வாரியாக அடியிற் குறிப்பிட்டிருக்கின்றன.

விவசாய டிப்டி டைரக்டர், 8-வது சர்க்கிள் லாலி ரோட்டு போஸ்டு. கோயமுத்தூர்.

கோயம்புத்தூர் ஜில்லா.

உத்தியோகஸ்தர் விலாசம்.	தாலூகா.	வேலை செய்யும் இடங்கள்.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், அன்னூர்.	அவனுசி	(1) கரியாம்பாளையம், (2) அன்னூர், (3) குன்னத்தூர், (4) கரவளூர், (5) அவனுசி, (6) கானூர், (7) வடவள்ளி, (8) மேட்டுப்பாளையம், (9) அம்பொடி, (10) வடுகபாளையம்.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், திருச்சினுப்பள்ளி ரோட், கோயம்புத்தூர்.	கோயம்புத்தூர் ..	(1) பெரியநாயக்கன்பாளையம், (2) இடிகரை, (3) துடியலூர், (4) தெலுங்கபாளையம், (5) தொண்டாமுத்தூர், (6) ஆலந்துரை, (7) கந்தாகவுண்டன்சாலை, (8) சிங்கநல்லூர், (9) செட்டிபாளையம், (10) சிரவேணம்பட்டி.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், தாராபுரம்.	தாராபுரம் ..	(1) தாராபுரம், (2) காங்கேயம், (3) யுடியூர், (4) சூரியநல்லூர், (5) குண்டடம், (6) பொன்னபுரம், (7) மூலனூர், (8) வெள்ளக்கோயில், (9) பச்சபாளையம்.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், ஈரோடு.	ஈரோடு, பவானி தாலூகாக்கள்.	ஈரோடு தாலூகா (1) கொடுமுடி, (2) ஊஞ்சலூர், (3) பாசூர், (4) மொடக்குரிச்சி, (5) ஈரோடு, (6) பெருந்துறை, (7) அரசலூர், (8) ஊத்துக்குளி, பவானி சப்-சர்க்கிள்—(1) அத்தானி, (2) ஆண்டியூர், (3) திருப்பூர், (4) அம்மாபேட்டை, (5) கவுண்டப்பாடி, (6) பவானி, (7) குரிச்சி, (8) பெரியபுலியூர்.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், கோபிசெட்டிபாளையம்.	கோபிசெட்டிபாளையம்.	(1) கோபிசெட்டிபாளையம், (2) குகலூர், (3) பெருந்தலையூர், (4) சிறுவலூர், (5) கள்ளிப்பட்டி, (6) கொங்கரபாளையம், (7) சத்தியமங்கலம், (8) ஆலங்குளி, (9) நல்லகவுண்டன்பாளையம், (10) காசிபாளையம்.
உதவி விவசாய டிமான்ஸ்டிரேட்டர், கொள்ளேகால்.	கொள்ளேகால் ..	(1) கொள்ளேகால், (2) திரம்பள்ளி, (3) சத்தேகால், (4) பாஸ்திபுரம், (5) காமக்கரை, (6) பாளையம், (7) குண்டூர், (8) ஹானூர்.
உதவி விவசாய டிமான்ஸ்டிரேட்டர், பல்லடம்.	பல்லடம்	(1) பல்லடம், (2) சூலூர், (3) இலவந்தி வடுகபாளையம், (4) கேதனூர், (5) புளியம்பட்டி, (6) பள்ளபாளையம், (7) சோமனூர், (8) கரடிபாவி, (9) பொங்கலூர்.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், பொள்ளாச்சி.	பொள்ளாச்சி ..	(1) பொள்ளாச்சி, (2) கோட்டூர்—மலையாண்டிபட்டணம், (3) ஆனைமலை, (4) தொண்டாமுத்தூர், (5) கோமங்கலம்புதூர், (6) நெகமம், (7) கிணத்துக்கிடவு, (8) கோவில்பாளையம், (9) வடக்கிபாளையம், (10) சிங்கநல்லூர்.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், திருப்பூர்.	திருப்பூரில் அமெரிக்கன் பருத்தி வேலை.	(1) பெருமாநல்லூர், (2) எட்டிவீரம்பாளையம், (3) திருப்பூர்.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், உடுமல்பேட்டை.	உடுமல்பேட்டை ..	(1) உடுமல்பேட்டை, (2) குமரலிங்கம், (3) கரத்தொழவு, (4) ஆண்டியூர், (5) கள்ளிபாளையம், (6) பெத்தப்பம்பட்டி, (7) ராமச்சந்திரபுரம், (8) வாலவடி, (9) குமர்பாளையம்.

நீலகிரி ஜில்லா.

விவசாய டிமான்ஸ்டிரேட்டர், கூனூர்.	கூனூர்	....
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், உதகமண்டலம்.	உதகமண்டலம் ..	....

11. விவசாய அஸிஸ்டண்ட் டைரக்டர், சேலம்.

விவசாய டிமான்ஸ்டிரேட்டர், ஆத்தூர்.	ஆத்தூர்	(1) ஆத்தூர், (2) காட்டுக்கோட்டை, (3) திடவூர், (4) மல்லையக்கரை, (5) உளிபுரம், (6) எத்தாப்பூர், (7) பெத்தநாயக்கன்பாளையம், (8) கொத்தவாடி.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், தர்மபுரி.	தர்மபுரி	(1) அடமன்கோட்டை, (2) பென்னகரம், (3) பாலக்கோடு, (4) திருமலவடி, (5) கரிமங்கலம், (6) தர்மபுரி, (7) பாப்பா பட்டி, (8) இந்தூர்.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், ஒசூர்.	ஒசூர்	(1) மத்திகிரி, (2) கேலமங்கலம், (3) பாகலூர், (4) பேரிகை, (5) முடுகொண்டபள்ளி, (6) தள்ளி, (7) சூலகிரி, (8) டெங்கனிகோட்.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், கிருஷ்ணகிரி.	கிருஷ்ணகிரி ..	(1) கிருஷ்ணகிரி, (2) பர்கூர், (3) வர்த்தனப்பள்ளி, (4) ஜகதேவிபாளையம், (5) கம்மந்தகல்லி, (6) காவேரிபட்டணம், (7) பாயூர், (8) குரும்பரபள்ளி.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், நாமக்கல்.	நாமக்கல் ..	(1) நாமக்கல், (2) எருமைப்பட்டி, (3) முத்துகப்பட்டி, (4) லட்டிவதி, (5) பரமட்டி, (6) வேலூர், (7) மோகனூர், (8) கலப்பநாயக்கன்பட்டி.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், ஓமலூர்.	ஓமலூர்	(1) ஓமலூர், (2) நடுவபட்டி, (3) காடையம்பட்டி, (4) பூசாரிபட்டி, (5) மேச்சேரி, (6) பாகல்பட்டி, (7) கருப்பூர், (8) தாரமங்கலம்.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், ராசிபுரம்.	ராசிபுரம் ..	(1) ராசிபுரம், (2) புதுப்பட்டி, (3) வெள்ளாளப்பட்டி, (4) ஆயிபாளையம், (5) மஞ்சவடி, (6) தாத்தையங்கார்பட்டி, (7) ஆலவாய்ப்பட்டி, (8) பொன்குரிச்சி.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், சேலம்.	சேலம்	(1) சேலம், (2) சூரமங்கலம், (3) மல்லூர், (4) வீரபாண்டி, (5) அயோத்திபட்டணம், (6) காரிப்பட்டி, (7) கண்ணன்குரிச்சி, (8) சௌடாபுரம்.
விவசாய டிமான்ஸ்டிரேட்டர், திருச்செங்கோடு.	திருச்செங்கோடு ..	(1) திருச்செங்கோடு, (2) மல்லசமுத்திரம் (கிழக்கு), (3) வைகுண்டம், (4) மங்கலம், (5) இடப்பாடி, (6) இமபல்லி, (7) கருவேப்பன்பட்டி, (8) ஊஞ்சநேரிமிட்டா.

மேலே குறிப்பிட்டுள்ள உத்தியோகஸ்தர்களின் முக்கிய வேலையாவது: நூதன வேளாண்மை முறைகளையும், பொது அபிவிருத்தி விஷயங்களையும் பற்றி விரித்துரைத்தல், நூதன விவசாயக் கருவிகளை நேரில் உபயோகித்துக் காட்டல், மாட்டுச் சந்தைகளிலும், மற்றும் முக்கிய உத்சவ காலங்களிலும் விவசாயப் பொருட் காக்ஷிகள் வைத்துப் பிரசுரம் செய்து, விவசாய டிப்பார்ட்மெண்டாரால் பிரசுரிக்கப்படும் துண்டுப் பத்திரிகைகள் பரவக் கொடுத்தல்.

நடந்துவரும் வேலைகள் பின் வருமாறு:—

(1) நல்ல மாதிரியான கலப்பை, கத்திப்பரம்பு, களை யெடுக்கும் கருவிகள் முதலியவைகளைப் பயன்படுத்தி நிலங்களை அதிகமாகப் பண்படுத்தலும் அவைகளை செய் நேர்த்திக்குக் கொண்டுவருதலும்.

(2) புலங்களுக்குச் சரியானபடி வரப்பு எடுத்துக்கட்டி மேடு பள்ளம் சரிப்படுத்தி சரியானபடி மண்ணைக் கிளறி பண்படுத்துவதால் விழுந்த மழை வெளிப்போகாமல் தடுத்து மண்ணில் இறங்கும்படி செய்தலும் அதன் பின் விழுந்த ஈரம் மிதம்மிஞ்சி வெளிப்போகாமல் காப்பதற்கு மேல் மண்ணைப் புல புலப்பாக்கலும்.

(3) நிலங்களை திருத்துவதற்கும், விதைப்புக்கும் ஊடு விதைப்புக்கும் மாசூலை துப்பரவு செய்வதர்க்கும் லாபகரமான கருவிகளையும் புது வழிகளையும் உபயோகித்தல்.

(4) தொழு வெருவை சேகரம் செய்து குழியில் போட்டு காப்பாற்று தல், பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடி செய்தல், ஒவ்வொரு நடுத்தர மான பண்ணையிலுமுள்ள வேண்டாத தழை கொடிகளையும், பண்ணைக் கழிவுகளையும் மக்கவைத்து இயற்கனவே கிடைக்கும் சொற்ப தொழு எரு வுடன் சேர்த்துக்கொள்ளல்.

(5) லாபகரமான பயிர்களுக்கு நிலுவையான எருவிடலும், ரசாயன உரங்களை என்ன வகையில் உபயோகித்தால் லாபமாயிருக்குமென்று காட்டு தலும்.

(6) நெல், சோளம், கேழ்வரகு, பருத்தி, கரும்பு, வேர்க்கடலை முதலிய பயிர்களில் பல தினுசுகளையும், பொறுக்கு விதைகளையும் பரவச் செய்தல்.

(7) நல்ல பொலிக்காளைகளை வைத்து தங்கள் கன்று காலிகளை மேம்படச் செய்யவும், தங்கள் மாடுகளுக்குச் சுத்தமான உணவுகள் கொடுத் தும், நல்ல வகையான மாட்டுத் தீவனப் பயிர்களை உண்டாக்கி, பேணி வைத்தல் - உதாரணமாக "சைலேஜ்" என்று சொல்லப்படும் புழுக்கல் புல் செய்தல்.

(8) விவசாய விளை பொருள்களை லாபகரமாக விற்கவேண்டிய வழி யைக் காட்டிக் கொடுத்தல்.

(9) பயிர்களிலும், சேகரித்து களஞ்சியங்களில் வைத்திருக்கும் தானி யங்களிலும் விழும் பூச்சி பூஞ்சண நோய்களைத் தடுக்கவேண்டிய வழியைச் செய்துகாட்டல்.

மேலே கூறியுள்ள அபிவிருத்தி வேலைகளைத் தனிப்பட்ட சமுசாரிகள் மூலமாயும், விவசாய அபிவிருத்தி ஐக்கிய சங்கங்கள் மூலமாயும் குறிப்பிட்ட வேலை காட்டும் மத்திய ஊர்களில் செய்து காட்டப்படுகின்றன. ஜில்லாவில் முதல் முதலாகச் செய்து காட்டும் அபிவிர்த்தி முறைகளை குறிப்பிட்ட இடங்களில் சிறிய தளைகளில் டிப்பார்ட்மெண்ட் செலவில் சோதனை நடத்தப் படுகின்றன. லாபகரமுள்ளதென்று தெரிந்த முறைகள் சமுசாரிகள் வயலில் அவர்கள் செலவிலேயே ரூபித்துக் காட்டப்படுகின்றன. அவ்வி தம் செய்வதால் சமுசாரிகள் தாங்களே நேரில் பார்த்து அதன் நன்மையை தெரிந்துகொள்ளுகிறார்கள். அதன் பிறகு அங்குள்ள மற்ற எல்லா சமுசாரிகளும் விருத்தியுள்ள முறைகளைச் செய்யும்படி தூண்டச் செய்கின் றனர். இதுவரை நடந்துள்ள விவசாய அபிவிருத்தி நல்லதாக இருக்கி றது. எனினும் இன்னும் அனேகவித நூதன விவசாய முறைகளி லும், மற்ற வகைகளிலும் முன்னேற்றம் செய்யவேண்டியதிருக்கிறது.

நடந்துள்ள வேலையின் சாராம்சம்.

விவசாயக் கருவிகள்.—கொஞ்ச வருஷங்களுக்கு முன் நூதன கருவி கள் விலை அதிகமாயிருந்தன. சாதாரண சமுசாரிகள் வாங்கக்கூடிய தல்ல. இப்பொழுது இந்தியாவிலேயே இரும்புக் கலப்பைகளும், மற்றக் கருவிகளும் அதிகமாய்ச் செய்யப்படுகின்றன. அவைகளின் விலை ரொம்ப குறைவாகவும், பலவித மண்கண்டங்களுக்கு தக்கபடியும் செய்து விற்கப் படுகின்றன. 1935–36-ம் வருஷத்தில் நூதனக் கருவிகள் கொண்டு 998 மாதிரி உழவுகள் சமுசாரிகள் பூமிகளில் செய்து காட்டப்பட்டன. அதன் பயனாக 351 விவசாயக் கருவிகளும் (முக்கியமாக இரும்புக் கலப்பைகள்) 1191, தனிப் பாகங்களும் (கொழு முதலியவை) விற்கப்பட்டன. தனி பாகங்கள் விற்பனையிலிருந்து இந்தக் கருவிகள் நன்றாய் உபயோகத்தி லிருக்கிறதாகத் தெரிகிறது. எளிய சமுசாரியும் நூதனக் கருவிகளை வாங்க ஏதுவாக வேண்டித் தக்காவி லோன் மூலம் பண உதவி செய்யப்பட்ட தாலே 1935–36-ம் வருஷத்தில் 98 சமுசாரிகளுக்கு ரூ. 990 கருவிகள் வாங்க தக்காவி கடன் கொடுக்கப்பட்டது.

எருக்கள்.—1935–36-ம் ஸூ்த்தில் தொழு எருவைச் சேகரம் செய்து குழியில் போட்டு காப்பாற்றுதல், வேண்டாத தழை கொடிகளை மக்க வைத்தல் ஆகிய முறைகளை செய்து காண்பித்ததில் 541 குழிகள் சமுசாரிகளால் கையாடப்பட்டன. பசுந்தாள் உரப்பயிர்கள் உண்டாக்கும் வழக்கம் வரவரப் பரவி வருகிறது. ஆனால் பசுந்தாள் உர விதைகள் சொற்ப இடங்களில்தான் சமுசாரிகளால் சேகரித்து உபயோகப்படுத்தப்படுகின்றது. மற்றவர்கள் டிப்பார்ட்மெண்டாரிடம் வாங்கி விதைத்தார்கள். 1935–36-ம் ஸூ்த்தில் 22,249 ராத்தல் விதை கொடுக்கப்பட்டது.

அமோன்னியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் முதலிய ரசாயன உரங்கள் அதிகமாகப் பயிர்களுக்கு உரக் கம்பெனிகளிலிருந்தே நேரேயே வாங்கி உபயோகப்படுத்தப்படுகின்றன. நீலகிரி ஜில்லாவிலும் மற்ற இடங்களிலும் ரசாயன உரங்களை என்ன அளவில் கலந்து உபயோகிக்க வேண்டுமென்று டிப்பார்ட்மெண்டாரால் பிரசாரம் செய்யப்பட்டது. முக்கியப் பயிர்களுக்கு உரிய கலவை உரங்கள் ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமாய் விற்கப்பட்டன.

பயிர்கள்.—பிரசாரப் பகுதியாரின் வெளி வேலையானது முந்திய வருஷங்களில் நெல், பருத்திப் பயிர்களில் நூதன விதைகளும், பொருக்கு விதைகளையும் பரவச் செய்தலாக இருந்தது. அதில் அதிக விருத்தி ஏற்பட்டிருக்கிறது.

கோயம்புத்தூர் ஜில்லா கம்போடியா பருத்தி உற்பத்தியிலும், வியாபாரத்திலும் முக்கியமாக இருக்கிறது. திருப்பூர் அதற்கு உயர்ந்த வியாபாரஸ்தலம். பருத்தி ஆலைகளும் இந்த ஜில்லாவில் தற்சமயம் அதிகமாக உண்டாயிருக்கின்றன. ஆகையினால் டிப்பார்ட்மெண்டார் கம்போடியா பருத்தியை விருத்தி செய்வதில் முக்கிய கவனம் செலுத்துகிறார்கள்.

கம்போடியா பருத்தியில் டிப்பார்ட்மெண்டாரால் பொறுக்கி எடுக்கப்பட்ட தினுசு கோ. 2 ஆகும். இந்தக் கலப்பற்ற தினுசு விதைக்கு வருஷா வருஷம் கிராக்கி அதிகப்பட்டு வருகிறது. வியாபாரிகளால் துப்பரவான விதையாகக் கொடுக்க முடியாததால் டிப்பார்ட்மெண்டார் இவ்வேலையில் சிரத்தை எடுத்துக்கொள்கிறார்கள். ஒரு பெரிய உத்தியோகஸ்தர் எழு டிமான்ஸ்டிரேட்டர்கள் உதவிகொண்டு பல்லடம், அவனூசி தாலூகாக்களில் விதைப்பண்ணைகள் மூலம் கலப்பற்ற விதை உற்பத்தி செய்து சப்ளை செய்யும் வேலையை கவனித்து வருகிறார். விதைப்பண்ணைகள் உள்வட்டம், வெளிவட்டம் ஆக இரண்டு பிரிவுகளாக இருக்கின்றன. உள்விதைப் பண்ணை 1,000 எக்கர் விஸ்தீர்ணத்தில் டிப்பார்ட்மெண்டார் நேர் பார்வையில் நடத்தப்படுகிறது. இந்தப் பண்ணையில் உற்பத்தி செய்த விதை வெளிப்பண்ணை 6,000 எக்கருக்கும் கொடுக்கப்படுகிறது. 6,000 எக்கர் விதைப் பண்ணையும், இந்தியன் மத்திய பருத்தி சங்கத்தின் பொருளுதவியைக்கொண்டு விவசாய டிபார்ட்மெண்ட் சிப்பந்திகள் பார்வையில் திருப்பூர் ஐக்கிய வியாபாரக் கழகத்தார் மூலம் நடத்தப்படுகிறது. வெளிப்பண்ணைகளில் உற்பத்தியாக்கப்பட்ட கோ. 2 விதை கோயம்புத்தூர் ஜில்லாவின் பூரா தேவையை அடைக்கும் என்ற நேர்க்கத்தில்தான். இம்முறையில் 5 வருஷங்களில் எங்கும் நூதன விதை கோ. 2 பரவி விடுமென்று நம்பப்படுகிறது. அதன்படி 4 வருஷகாலமாக இந்த ஸ்கீம் நடத்திவரப்படுகிறது. இதன் பயனாக கம்போடியா பருத்தி நயம் சரக்காகி மேம்பட்டிருக்கிறது. 1935–36-ம் ஸூ்த்தில் டிப்பார்ட்மெண்டாரும், திருப்பூர் ஐக்கிய நாணய வியாபார கழகத்தாரும் 1,193,134 ராத்தல் கலப்பற்ற கோ. 2 பருத்தி விதை சமுசாரிகளுக்கு பரவக் கொடுத்தார்கள். ஆனால் ஜில்லாவின் பூராத் தேவையையும் அடைக்கவில்லை.

உடுமலைபேட்டை தாலூகாவில் சர்க்கிளின் தேவைக்காக டிபார்ட்மெண்டாரால் 800 எக்கர் பரப்பில் சி-7 கருங்கண்ணி பருத்தி விதைப் பண்ணை நடத்தப்படுகிறது. 1935–36-ம் ஸூ்த்தில் 54,992 ராத்தல் சி-7 கருங்கண்ணி பருத்தி விதை சமுசாரிகளுக்கு வழங்கப்பட்டது.

பருத்தி ஆராய்ச்சி சாஸ்திரியால் பொறுக்கி எடுக்கப்பட்டு இன்னும் அதிக மாசூல் கொடுக்கக்கூடிய கம்போடியா, கருங்கண்ணி, உப்பம் பருத்தி தினுசுகள் ஜில்லாவில் சோதனையிலிருந்து வருகின்றன.

கரும்பு.—இப்பொழுது கொஞ்ச காலமாக தேசத்தில் சர்க்கரை உற்பத்தி பண்ண எங்கும் அதிக ஊக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த சர்க்கிளில் கோயம்புத்தூர் சேலம் ஜில்லாக்களில் கரும்பு சாகுபடி அதிக விஸ்தீர்ணத்தில் செய்ய எல்லா வசதியும் இருக்கிறது. கோயம்புத்தூரில் இரண்டு பருவங்களில் கரும்புப் பயிர் செய்ய சவுகரியம் இருக்கிறது. நூதன முறையில் சர்க்கரை உற்பத்தி செய்யக் கோயம்புத்தூரில் 1934-ம்வருஷத்தில் ஒரு சிறிய சர்க்கரை கம்பெனியும் இப்பொழுது ஒரு கரும்பு பயிரிடுவோர் சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் இம்பீரியல் கரும்புப் பண்ணையிலிருந்து கொடுக்கப்பட்ட பலவித நூதன கரும்பு தினுசுகள் இந்த ஜில்லாவில் சமுசாரிகளால் பிரியமாக சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்தக் கரும்புகள் இரண்டு வகையாகும். (1) கட்டிக்கரும்பு, (2) நாணல் கரும்பு (அல்லது பொடிக்கரும்பு). பொடிக்கரும்புகள் கடினமாயும் தண்ணீர் தட்டுள்ள இடங்களுக்கு ஏற்றதாயுமிருக்கின்றன. அவை இதுவரை கரும்பு சாகுபடியிராமலிருந்த புதிய நிலங்களிலும் சாகுபடியாகி அதிக விஸ்தீர்ணத்தில் பரவிக்கொண்டு வருகின்றன. 1935–36-ம்வருஷத்தில் 335,835 நூதன கரும்புக் கரணைகள் சமுசாரிகளுக்கு வழங்கப்பட்டன. இவைகளில் முக்கியமானவை கோ. 213, 290 பொடிக் கரும்பு தினுசு, கோ. 417, 419 கட்டிக்கரும்பு தினுசு. கரும்பு பயிரிடுவோர் சங்கத்தின் உதவியைக்கொண்டு டிப்பார்ட்மெண்டாருக்கு இன்னும் கொஞ்ச காலத்திற்குள் அதிகக் கரும்புக் கரணைகள் வழங்க சவுகரியம் ஏற்படும். அவ்விதம் செய்து இந்த சர்க்கிளின் சர்க்கரை உற்பத்தி மேன்மையடைந்துவிடும்.

நெல் தினுசுகள்.—1935–36-ம்வருஷத்தில் 13,237 ராத்தல் நிறையுள்ள 17 வித சம்பா நெல் தினுசுகளும், 6 கார் நெல் தினுசுகளும் சமுசாரிகளுக்கு டிபார்ட்மெண்டாரால் வழங்கப்பட்டன. இவைகளில் முக்கியமானவை.—ஜி.இ.பி. 24, கோ. 1, கோ. 3, கோ. 5 ஆகும். இந்த தினுசுகள் எங்கும் பரவி உள்நாட்டு தினுசுகள் போலாகிவிட்டன. பவானி காவேரிப் பாசனங்களில் புதிய அய்யன் சம்பா, கோபி கார் என்ற தினுசுகள் பரவி வருகின்றன. 1935–36-ம்வருஷத்தில் மேற்சொல்லப்பட்ட தினுசு நூதன விதைகள் சுயமாகவே பரவி 29,838 எக்கர் விஸ்தீர்ணத்தில் சாகுபடியாயிருந்தது.

சிறு தானிய உற்பத்தி பண்ணையில் தெரிந்தெடுக்கப்பட்ட இ.சி. 593 கேழ்வரவு, நாட்டு கேழ்வரகைவிட இந்த சர்க்கிளில் அதிக மாசூல் கொடுத்து எங்கும் பரவி வருகிறது. 1935–36-ம்வருஷத்தில் சேலம் ஜில்லாவில் 3,006 ராத்தல் நிறையுள்ள விதை சமுசாரிகளுக்கு வழங்கப்பட்டது.

மைசூர் நூதன கேழ்வரகு தினுசு எச்-22-ம் சேலம் ஜில்லாவில் 7,000 எக்கர் விஸ்தீர்ணத்தில் புஞ்சைகளில் சாகுபடி செய்யப்பட்டன.

சோளம், கம்பு, தினை, கோதுமையில் நூதன பொறுக்கு விதைகள் சர்க்கிளில் பல இடங்களில் பயிரிட்டு அவைகள் அந்த அந்த இடங்களின் பருவத்துக்கு ஏற்றதாக இருக்கிறதாவென்று சோதனையிலிருந்து வருகின்றன.

உருளைக் கிழங்கு.—நீலகிரியிலுள்ள சமுசாரிகளுக்கு இது முக்கிய உணவுப் பொருளாயிருக்கிறது. டிபார்ட்மெண்டார் கூனூர், உதகமண்டலம் தாலூகாக்களில் விதைப்பண்ணைகள் மூலம் அதிக மாசூல் கொடுக்ககூடிய நோயில்லாத உருளைக்கிழங்கு விதைகளை சமுசாரிகளுக்கு வழங்கப்படும் வேலையைக் கவனித்து வருகிறார்கள். இப்பொழுது கிரேட் ஸ்காட் என்னும் உருளைக்கிழங்கு தினுசு அதிக சாகுபடியிலிருந்து

வருகிறது. ராயல் கிட்னி, பெண்குராசன் தினுசுகள் அடுத்தாப்போல் பரவியிருக்கின்றன. 1935–36-ம்வருஷத்தில் 1,402½ மனு நிறையுள்ள இந்த தினுசு உருளைக்கிழங்கு விதைகள் விதைப் பண்ணைகளில் பயிரிட வழங்கப் பட்டன. 27,527 ராத்தல் இடையுள்ள உருளைக்கிழங்கு விதை சமுசாரி களுக்கு விலைக்கு வழங்கப்பட்டன.

எண்ணெய் வித்துக்கள்.—இந்த சர்க்கிளின் முக்கிய எண்ணெய் வித்துப் பயிர் வேர்க்கடலையாகும். அதின் பொறுக்கு விதை எ. எச். 25 பல இடங்களில் சோதனை சாகுபடியிலிருந்து வருகிறது.

கால் நடைகள்.—1935–36-ம்வருஷ வரை சர்க்காரால் கொடுக்கப்பட்ட உதவி சந்தா முறையில் 19 பொலிக்காளைகள் பல இடங்களில் நிறுவப் பட்டிருக்கின்றன. இவை தவிர ஜில்லா போர்டாராலும் சர்க்கார் மிருக சிகிச்சை ஆஸ்பத்திரிகளிலும் 6 பொலிக்காளைகள் இருந்துவருகின்றன. இந்த முறை நடப்பிலிருந்து வருகிறது. 1935–36-ம்வருஷத்தில் கவர்ன்மெண்டாரும் கோயம்பத்தூர் ஜில்லா போர்டாரும் ஒரு புதிய ஸ்கீம்படி குறிப்பிட்டவர்களுக்கு பொலிக்காளைகளைக் கொடுத்து கால் நடை அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த முறைப்படி பொலிக்காளைகள் இரண்டு வருஷங்களில் நல்ல வர்க்க விருத்தி வேலை செய்திருந்தால் அவைகளை வைத்துப் பரிபாலித்து வந்தவர்களுக்கு சொந்தமாகி விடுகின்றன. இந்த முறைப்படி பொலிக்காளைகளை எங்கும் பரவ நிறுவி கால் நடையில் நல்ல திடமான கன்றுகள் உற்பத்தியாகி கூடிய சீக்கிரம் விருத்தி உண்டாகிவிடும்.

கால்நடைப் பகுதி அதிகாரிகளால் வளர்ப்புக்கு லாயக்கில்லாத காளைகளை சாஸ்திர மூலமாயும் மிகவும் வலியில்லாமல் பர்டிஸோகருவி மூலம் விரையடிப்பதற்கு வேண்டிய முயற்சி செய்யப்படுகிறது.

மற்ற வேலைகள்.—ஒவ்வொரு டிமான்ஸ்டிரேட்டர் டிப்போவிலும் சமுசாரிகளுக்கு முக்கியமாக வேண்டிய விதைகளும், கருவிகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் வேண்டிய மற்றவைகளை வருத்திக் கொடுத்தும் விவசாய சம்பந்தமாக யோசனை கேட்பவர்களுக்கு வேண்டிய உதவி செய்கிறார்கள். இந்த சர்க்கிள் கிடங்குகளிலிருந்து கிடைக்கும் விதைகளும், கருவிகளும் அவைகளுக்குறிய விலைகளும் பின்னால் தொடுத்துக் குறிப்பிட்டிருக்கிறது. **விவசாய உத்தியோகஸ்தர்கள் சமுசாரிகளுக்கு வேண்டிய உதவி செய்யவே இருக்கிறார்கள். சமுசாரிகள் இதை நன்றாய் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். சமுசாரிகள் வேண்டிக்கொண்டால் நேரிலே கிராமத்துக்கு வந்து வேண்டியதை செய்து கொடுப்பார்கள். இதற்கு ஒரு வித செலவும் கிடையாது.**

ஐக்கியப் பகுதி.—ஐக்கியக் கழகங்களின் மத்திய பதிவாளர் ஒருவர் கோயம்புத்தூரைத் தலைமையிடமாக வைத்துக்கொண்டு கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய இரு ஜில்லாக்களையும் பார்வையிட்டு வருகிறார். மற்றொருவர் சேலத்தைத் தலைமையாக வைத்துக்கொண்டு சேலம் ஜில்லாவைப் பார்வையிட்டு வருகிறார்.

தொழில் பகுதி.—உதவித் தொழில் இஞ்சினீயர் ஒருவர் கோயம்புத்தூரைத் தலைமையிடமாக வைத்துக்கொண்டு இந்த சர்க்கிளின் எல்லா ஜில்லாக்களிலும் வேலை செய்து வருகிறார்.

கால் நடை வைத்தியப் பகுதி.—ஜில்லா உத்தியோகஸ்தர்கள் சேலத்திலும் கோயம்புத்தூரிலும் இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவியாக அநேக நிலையானவரும், சுற்றிவருபவருமான அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களின் ஜாப்தா பின் பக்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த அதிகாரிகளிடம் கால்நடைகளுக்கு ஏற்படும் வியாதிகளுக்கு சிகிச்சை உதவி பெறலாம்.

எட்டாவது சர்க்கிள் தாலூகா டிமான்ஸ்டிரேட்டர் டிப்போக்களில் கிடைக்கும் சாமான்களும் அவைகளின் மதிப்புக் கிரயமும்.

கருவிகள்.		ரூ.	அ.	பை.
கூப்பர் நெ. 11 கலப்பை	ஒன்று	7	0	0
தனிப்பட்ட கொழு மாத்திரம்	,,	0	8	6
கூப்பர் நெ. 25 கலப்பை	,,	4	8	0
தனிப்பட்ட கொழு	,,	0	5	9
கூப்பர் நெ. 26 கலப்பை ஒற்றை மேழி போட்டது	,,	8	12	0
தனிப்பட்ட கொழுவும், முனையும்	,,	1	2	3
தனிப்பட்ட கொழுமுனை மாத்திரம்	,,	0	3	6
இ. ம. கத்திப் பரம்பு நெ. 0	,,	4	2	0
ஷை நெ. 1	,,	7	2	0
ஷை நெ. 2	,,	13	8	0
6 அங்குல நீள கத்தி	,,	1	5	0
9 ஷை	,,	1	14	0
12 ஷை	,,	2	2	0
12 அங்குல வளைவு கத்தி	,,	2	4	0
15 ஷை	,,	2	9	0
18 அங்குல நீள கத்தி	,,	3	0	0
24 அங்குல வளைவு கத்தி	,,	3	10	0
36 அங்குல நீள கத்தி	,,	5	5	0
48 ஷை	,,	5	13	0

குடியானவர்களால் முன்னமேயே வாங்கப்பட்ட கருவிகளுக்குக் கொழுக்களும் மற்ற பாகங்களும் அசல் கிரயத்துக்கு கொடுக்கப்படும்.

விதைகள்.—கீழ் குறிப்பிட்டுள்ள பயிர்களின் விதைகள் டிப்போக்களில் அந்தந்தப் பருவங்களில் ஸ்டாக் செய்யப்படுகின்றன. காலக் கிரயப்படி விலைக்குக் கொடுக்கப்படும்.

நெல்—ஜி.இ.பி. 24, கோ. நெ. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, ஆடுதுரை நெ. 3, 4, 5, 11.

பெரிய மஞ்சள் தெல்லசொன்னு சோள விதைகள், தோட்டம், புஞ்சைகளுக்கேற்ற புது சோள விதை தினுசுகள்.

கேழ்வரவு—இ.சி. 593, எச்-22 (சேலம் ஜில்லாவுக்கு மாத்திரம்).

வேர்க்கடலை—எ. எச். 25.

பசுந்தாள் விதை—

தக்கைப்பூண்டு, கொளிஞ்சி, சடம்பு அல்லது சணல், அவுரி, பில்லிப்பிசரா.

உருளைக்கிழங்கு விதைகள்.—(நீலகிரி ஜில்லா டிப்போக்களில் மட்டும்).

பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகள்.—இந்தப் பஞ்சாங்கத்தில் பின்னால் குறித்துள்ள ஜாப்தா கிரயப்படி விவசாயப் பஞ்சாங்கமும் மற்ற பத்திரிகைகளும் கிடைக்கும்.

(b) ஆராய்ச்சி.

கோயம்புத்தூரில் இருக்கும் விவசாயக் கலாசாலையுள் அடங்கிய மத்திய விவசாயப் பண்ணை எனப்படும் பெரிய ஆராய்ச்சிப் பண்ணை ஒன்றுள்ளது. அதே இடத்தில் நெல் அபிவிருத்திப் பண்ணை, சிறு தான்யாதி அபிவிருத்திப்பண்ணை, கரும்பு அபிவிருத்திப்பண்ணை, பருத்தி அபிவிருத்திப்பண்ணை ஆகியவைகள் இருக்கின்றன. இவைகளை முறையே அவ்வப்பகுதி நிபுணர்கள் பார்த்து வருகிறார்கள். இந்தப் பண்ணைகள் கோயம்புத்தூருக்கு 3 மைல் மேற்கே இருக்கின்றன. இப்பண்ணைகளில் (1) தரம்பெற்று நோய் நொடிகளில் அடிப்படாமல் வரக்கூடிய உயர்தர ஜாதி பயிர்கள் உண்டுபண்ணுதலும், (2) பலவிதக் கிருஷிமுறைகளையும் ஆராய்ந்து பார்த்து சிறந்தவற்றை பரிசோதித்து அறிதலும், (3) கால்நடை வர்க்கங்கள் அபிவிருத்தி செய்வதும் ஆகிய முக்கிய வேலைகள் கவனிக்கப்பட்டுவருகின்றன. கிருஷிகர்கள் எக்காலத்திலும் இப்பண்ணைகளைப் பார்வையிட வரலாம்.

கோயமுத்தூர் மத்திய விவசாயப் பண்ணை.

இந்த பண்ணை சுமார் 400 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ளது. கரிசல், செவ்வல், இருமண் பூமிகள், மானவாரி, தோட்டக்கால், நஞ்சைகளும் இங்கே உண்டு. நஞ்சைக்கு நொய்யல் ஆற்றிலிருந்து பிரியும் கால்வாயினுல் பெருகும் குளத்திலிருந்து பாசனம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அநேக விதமான பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு, வருஷம் பூராவும் ஏதாவதொரு பயிர் பூமியில் இருந்துகொண்டேயிருப்பதால் விவசாயக் கல்வி கற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு உபயோகப்படும்படியான வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. தவிரவும் பல நிபுணர்கள் வேலை செய்வதற்கும் சௌகரியமாயிருக்கிறது.

(1) அநேகமாதிரிகளாக அமைக்கப்பட்ட மாட்டுக்கொட்டைகளும் எருவை பத்திரப்படுத்தி சேகரிக்கும் முறைகளையும் இங்கே காணலாம்.

(2) இம்மாகாணத்திலுள்ள பல ஜில்லாக்களிலும் உபயோகிக்கப்பட்டுவரும் அனேக விவசாயக் கருவிகளைச் சேகரித்து ஒரு காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

(3) தட்டுவெட்டு யந்திரம், பருத்தி அரைக்கும் ராட்டை, தான்யம் அடித்துத் தூத்தும் யந்திரங்கள், பிண்ணாக்கு உடைக்கும் யந்திரம் இன்னும் பலவிதமான விவசாய யந்திரங்களையும் பார்க்கலாம்.

(4) கிணறுகளில் தண்ணீரிறைப்பதற்கு உபயோகப்படுத்தும் பலவித எத்தனங்களில் கவலைகள், ஆயில் மோடார் இஞ்சின் முதலியவைகளின் வேலையின் தாரதம்யத்தைப் பார்த்தல். ஆராய்ச்சிச் சாலைக்குத் தெற்கே உயரத்தில் ஒரு காரைத்தொட்டி கட்டி, இதில் என்ஜின்வைத்து தண்ணீரிறைத்து, நிறப்பி, 1,200 ஜனங்களடங்கிய காலேஜ் எஸ்டேட்டுக்கு தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

(5) பண்ணையில் பார்க்கக்கூடிய முக்கியமான பயிர்கள் சோளம், ராகி, பருத்தி, வாழை, கரும்பு, நெல்: மாட்டுத்தீவனப்பயிர்கள், பசுந்தாள் உரப்பயிர்கள் இவைகள் ஒவ்வொன்றிலும் பல தினுசுகள் ஒவ்வொரு வருஷமும் பயிராகிவருகின்றன. பலஜாதிப் பழவர்க்கங்களும், காய் கறி தினுசுகளும் சாகுபடி செய்யப்பட்டுவருகின்றன.

செய்யப்படும் பிரசார வேலை.

விதை வினியோகம்.—பொறுக்கி யெடுக்கப்பட்ட விதைகளை அபிவிருத்தி செய்து கிருஷிகளுக்கு கொடுக்கிறார்கள்.

நெல்.—ஜி. இ. பி. 24-ம் நம்பர், கோ. 1, 2, 3, 5, 6, 7, 8, ஆ. 11-ம் நம்பர்கள்.

ராகி.—இ.சி. 593-ம் நம்பர்.

கரும்பு.—ஜாவா 247-பி, 213-ம் நம்பர், பி. ஒ. ஜெ. 2878-ம் நெம்பர், கோ. 281, 285, 290.

பருத்தி.—கம்போடியா, கோ. 2, 1742, 1267, 920. கருங்கண்ணி—சி. 6, 546.

பெரிய மஞ்சள் சோளம்.—எ. எஸ். 29. எ. எஸ். 1098.

இதர விதைகள்.

சணல், பில்லப்பயறு முதலிய பசுந்தாள் உரப்பயிர் விதைகள் விற்கப்படும்.

பல ஜில்லாக்களிலிருந்து அனேக தினுசு வாழைக்கன்றுகள் இவ்வருஷம் கொண்டுவந்து நட்டிருக்கின்றன. ஒன்றுக்கொன்றுள்ள தாரதம்யங்களைக் கவனித்து எவை லாபகரமாயிருக்கின்றனவோ அவைகளை விருத்தி செய்யலாமென்றுத்தேசம்.

காலிப்ளவர், முட்டகோஸ், தக்காளி, அத்திப்பழம் முதலிய காய்கறி தினுசுகள், பழ வர்க்கங்கள் ஆகியவைகளை பயிர் செய்வதால் ஏற்படும் லாபத்தை காண்பித்திருக்கிறது.

(6) இங்கே இருஜாதிப் பிறவிப் பசுக்கள், பொலிகாளைகள், கன்றுகள் முதலியவைகளையும் தற்கால நாகரீகத்திற்கு ஏற்ற பால், வெண்ணெ யந்திர சாலையும் இருக்கின்றன. அவ்விடத்தில் பால் கறவை முதல் வெண்ணெ யெடுத்தல் வரை மிகவும் சுத்தமாகவும் ஆரோக்கியமான முறைகளிலும் செய்யப்படுகின்றன. விவசாயக் கலாசாலை மாணவர்கள் வெண்ணெயெடுத்தல், மற்றும் இதர இது சம்பந்தமான வேலைகளிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். சிறியதொரு கோழிவளர்ப்புச் சாலையும் இருக்கிறது.

(7) மிருக சிகிச்சை செய்யும் ஆஸ்பத்திரி ஒன்றும் வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே சர்க்கார் கால்நடைகளாகிய பசுக்கள், எருதுகள், இதர குடியானவர்களுடைய கால்நடைகள் வைத்தியம் செய்யப்பட்டு வருகின்றன. பாடசாலை மாணவர்களுக்கும் இத்தொழில் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

(8) இவ்விடத்தில் கால்நடைகளுக்கு சாசுவத மேய்ச்சல் தரை இருப்பது கவனிக்கவேண்டிய விஷயங்களில் ஒன்று. வருஷம் பூராவும் இனியாப் புல், குதிரை மசாலை (Lucerne) முதலியவை இருந்துவருகின்றன. கறவைப் பசுக்களுக்குப் பச்சைப் புல் தீனிக்காக சோளம், மக்காச்சோளம் குறிப்பிட்ட காலங்களில் சாகுபடி செய்யப்பட்டுவருகின்றன.

(9) பச்சை தீவனத்தை மாடுகளுக்கு புழுங்கவைக்கிறது ஒரு முக்கியமான விஷயம். தேவைக்குமேல் இருக்கிற பச்சைத் தீவனம், புல்லுகள் முதலியவை இம்மாதிரி புழுங்கவைக்கப்படுகின்றன.

(10) பண்ணையில் சேதமாகிற குப்பை, கூளங்களை எருவிற்காக மக்க வைத்தல், சாதாரணமாக நடைபெறும் விஷயங்களில் ஒன்று.

(11) முன்னால் கக்கூஸ் மலங்களை சாம்பல் முதலியவைபோட்டு "பூட்ரெட்" என்னும் உரமாகச் செய்தல் வழக்கமாக இருந்தது. ஆனால் தற்சமயம் அதைவிடக் குறைந்த செலவிலும் ஆரோக்கியமான முறைகளிலும் (Activated sludge) ஷெ மலஜலங்களை உபயோகமுள்ள எருவாகச்செய்து வருகிறார்கள்.

(12) இன்னும் சில முக்கியமான விஷயங்கள் பின்வருமாறு :—

(a) நிலங்களை உழுது விதைப்புக்குத் தயாரித்தல். மோட்டார் கலப்பைகளை உபயோகித்தலும் என்னென்ன மாதிரி உபயோகித்தல் என்பதையும், ரெக்கை அமைந்துள்ள சாதாரண இரும்புக் கலப்பைகளில் பலரகங்கள், பாத்திகட்டுவதற்காகப் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் கருவி, இவைகளை உபயோகித்தல்—ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை.

வருஷத்தில் பல காலங்களில் கிருஷிகளுக்கு முக்கியமாய்ப் பிரயோஜனப் படக்கூடிய கருவிகளாகிய எச். எம். குண்டகா, ஜூனியர் ஹோ, இரு பக்கமும் இறக்கை அமைந்துள்ள இரும்புக் கலப்பை, முல்பலுவு கட்டிகளை உடைப்பதற்காக டிஸ்க் ஹாரோ, கேம்பிரிட்ஜ் ரோலர் இவைகள் வேலை செய்வதைப் பார்க்கலாம்.

சில குறிப்பிட்ட காலங்களில் சணல்போலுள்ள பசுந்தாள் உரப்பயிர்களை உழுது நிலத்தில் மடக்குவதற்காக விக்டரி கலப்பை, இரண்டு பக்கமும் திருப்பக்கூடிய ஒற்றைத்தட்டு அமைந்துள்ள கலப்பை, முதலியவைகளை வேலை செய்வது விநோதமாயிருக்கும்.

(b) சால்விதைப்பு.—ஜூலை முதல் செப்டம்பர் முடியவும் நவம்பரிலும் விதைக் கலப்பைக்கொண்டு விதைப்பது, மாட்டின் உதவியைக் கொண்டு சிக்கன முறையில் களை வெட்டக்கூடிய கருவிகள் உபயோகத்திலிருப்பது.

(c) **நெல் நடவு**.—ஜூன் முதல் ஆகஸ்டு முடிய புழுதிக்கால் நாற்றங்கால், சேத்து நாற்றங்கால் முதலியவை தயாரித்தல். விதையைக் குறைத்துச் கலக்கத் தெளித்தல். சிக்கன நடவு முதலியன.

6

(d) பசுந்தாள் உரப்பயிர்கள்.—பிப்ரவரி முதல் ஜூன் வரையில் நஞ்சைகளிலும், மே முதல் ஆகஸ்ட் முடிய தோட்டக்கால் நிலங்களிலும் இவைகளை சாகுபடி செய்தலும் மடக்கி உழுதலும்.

(e) கரும்படித்தல். பிப்ரவரி முதல் எப்ரல் முடிய "சிந்துவாகி" அடுப்புக்கட்டி உயர்ந்த தினுசு வெல்லம் செய்தல்.

பயிர்களின் கால அட்டவணை.

தோட்டகால்.—பங்குனி முதல் ஆனி முடிய சித்தரைச் சோளம்.

வைகாசி 15-ம் தேதி முதல் புரட்டாசி 15-ம் தேதி வரையில் ராகி.

கார்த்திகை முதல் மாசி மாதம் 15-ம் தேதி வரையில் கோதுமை.

ஆவணியிலிருந்து புரட்டாசி வரையிலும் தை முடியப் புகையிலை.

ஆனியிலிருந்து மாசி மாதம் 15-ம் தேதி வரையில் மிளகாய்.

ஆவணி மாதம் 15-ம் தேதியிலிருந்து வைகாசி 15-ம் தேதி முடிய கம்போடியாப் பருத்தி.

பங்குனி, சித்திரையிலிருந்து வைகாசி, ஆனி முடியவும் ஆனியிலிருந்து ஐப்பசி முடியவும், ஐப்பசியிலிருந்து தை வரையிலும், தையிலிருந்து பங்குனி முடிய மாட்டுத்தட்டுக்காக சோளம்.

புஞ்சை நிலம்.—ஆடி முதல் மாசி 15-ம் தேதி வரை துவரை.

ஆடி 15-ம் தேதி முதல் புரட்டாசி 15-ம் தேதி வரை கம்பு.

ஆடி 15-ம் தேதியிலிருந்து மார்கழி 15-ம் தேதி வரை பெரிய மஞ்சள் சோளம்.

புரட்டாசி 15-ம் தேதியிலிருந்து வைகாசி 15-ம் தேதி வரை கருங்கண்ணி, உப்பம் பருத்திகள்.

கார்த்திகை துவக்கத்திலிருந்து மாசி 15-ம் தேதி வரைக்கும் கடலை.

நஞ்சை.—ஆனி முதல் தை மாதம் வரை நெல்லு.

அடுத்த வருஷம் தை முதல் பங்குனி வரை கரும்பு.

ஆடி முதல் பங்குனி வரை மஞ்சள்.

சித்திரை 15-ம் தேதி முதல் ஆடி 15-ம் தேதி வரை பசுந்தாள் உரத்திற்காக சணல்.

சித்திரை முதல் ஆடி 15-ம் தேதி வரை ஷை வகைக்கு தக்கைப்பூண்டு.

சிறுதான்ய உற்பத்திப் பண்ணை, கோயமுத்தூர்.

இப்பண்ணை இவ்விராஜதானியிலுள்ள ஏழைகளின் உணவுப் பொருளாயிருக்கின்ற தானியங்களை விருத்தி செய்வதன் பொருட்டு நிர்ணயிக்கப்பட்டது. சோளம், கம்பு, கேழ்வரகு, தினை இவ்விதப் பயிர்களில் ஆராய்ச்சி செய்யப்படுகின்றது. ஜாஸ்தி விஸ்தீர்ணம் மானவாரியாகவும் சில பாகம் தோட்ட சாகுபடியாகவும் இருக்கிறது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் அனேகமான எல்லாப் பயிர்களும் கதிர் வாங்கியிருக்கும் காலத்தில் இப்பண்ணையைப் பார்த்தால் மிகவும் நலம். மார்ச்சு மாதத்திலும், செப்டம்பர் மாதத்திலும் தோட்டக்கால் கேழ்வரகுப் பயிர் பார்க்கலாம். ஜூன் மாதம் தோட்டத்தில் சோளப்பயிர் இருக்கும். கிருஷிகள் பண்ணையைப் பார்வையிடும் சமயத்தில் சாகுபடியாயிருக்கிற பல பயிர்கள் தினுசுகளையும், தாரதம்மியம் நிர்ணயிக்க வேண்டி செய்யப்படும் பரீட்சைகளையும், தலைமுறை தலைமுறையாகப் பயிர் குணங்கள் மாறித் தேவையான லாபகரமுள்ள ஜாதியே தேர்ந்தெடுக்கச் செய்யப்படும் பரீட்சைகளையும் விஸ்தாரமாக கவனிக்கவேண்டும்.

சில பருவங்களில், பயிர்களின் புஷ்பங்கள் எப்படி மலருகின்றன எந்த வரிசையில் மலர்கின்றன, எப்படி ஆணுறுப்புகளை அகற்றுகிறது, நூதன உயர் ஜாதிப்பயிர் உண்டாக்க ஒட்டு வேலைகளை எப்படிச் செய்வது என்று ஆராய்ச்சி செய்வதை கவனிக்கலாம். சோதனைச் சாலைக்குள் பயிர்களின் ராசி முதலியவை கணக்கிடப்படுகின்றதையும் அதற்குண்டான குணங்களை எழுதி வைத்திருப்பதையும் நன்ருக கவனித்து கிருஷிகர்கள் லாபகரமாக இருக்கும் நல்ல ஜாதி விதைகளையே வாங்கி அனுகூலம் அடையவேண்டுமென்ற நோக்கத்துடன் உழைக்கும் இப்பண்ணையை அவசியம் பார்வையிடவேண்டும்.

ராகி—நம்பர் இ.ஸி. 593.

கேப்பை, இ. ஸி. நம்பர் 593.—கோயமுத்தூர் சிறுதான்ய உற்பத்தி பண்ணையில் உற்பத்தியாக்கப்பட்ட தக்கமாசூல் தரத்தக்க ஒரு பொறுக்கு விதை. ராகிக்கு சாஸ்திரீயப் பெயரான இலுஸைனி கொரக்கானு என்னும் பதங்களின் குறில் இ. ஸி. என்பது. இப்பண்ணையில் அநேகம் பொறுக்கு விதை ரகங்கள் உண்டு. இதுவரை 3,600-க்கு மேலான பொறுக்கு தினுசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த 593 நம்பர், 1925-ம் வருஷத்தில் பொறுக்கப்பட்டது. சேலம் ஜில்லாவிலிருந்து ஆதியில் தருவிக்கப்பட்ட விதையின் பொறுக்கு 1928-ம் வருஷத்தில் பலவேறு தினுசுகளுடன் ஒப்பிடுகையில் இந்த 593 தான் சீக்கிரம் பயிராகி தக்க மாசூலும் கொடுத்தது. 1929, 1930, 1931-ம் வருஷங்களிலும் முன்போலவே சிலாக்கியமாகவே இருந்தது. இந்த ஒரு சிலாக்கியதையால் பண்ணையை விட்டு வெளி ஊர்களுக்கு அனுப்பி பயிர் செய்ய லாயக்கானதென்று கருதப்பட்டது.

இ. ஸி. 593, சுமார் 120 நாள் பயிர், சாதாரணமாய் இறவைப் பயிராகத்தான் விளைவிக்கப்படுகிறது. கோயமுத்தூரிலும் கூடலூரிலும் மானவாரிப் பயிராகவும் இது சிலாக்கியமாகவே காணப்பட்டது. சில இடங்களில் இரண்டு வார காலம் அதிகப்பட்டாலும், தானியம் தட்டை இரண்டிலும் சராசரி 10 முதல் 40 பங்குவரை 100-க்கு அதிக மாசூல் கொடுக்கும்தன்மையதாய் இருப்பதால் இந்த அதிக காலத்ததாய் இருந்தாலும் ஒரு தண்ணீர் அதிகமாக பாய்ச்ச நேரிட்டாலும் பாதகம் இல்லை என்று சம்சாரிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பல்லாரி ஜில்லா ஹகரியிலும், அனந்தபூர் ஜில்லா கதிரி, ஹிந்துபூரிலும் நாட்டுகேப்பையை விட ஒரு வாரம் முதல் இரண்டு வாரங்களுக்கு முன்பே அறுவடைக்கு வந்தது மன்றி மாசூலும் அதிகமாகக் கொடுத்ததாகத் தெரிகிறது. பல்லாரி, மதனபல்லி, வாலாஜா, பழமநேரி, குடியாத்தம், சித்தூர், திருப்பத்தூர், செய்யாறு, திருத்தனி, கூடலூர், திருச்சினுப்பள்ளி, கோவில்பட்டி, சேலம், கோயமுத்தூர் முதலிய பலவிடங்களிலும் சிலாக்கியமானப் பயிராயிருந்ததென்று விபரம் கிடைத்திருக்கிறது. இதுவரை கோயமுத்தூரிலிருந்து கீழ்கண்ட விதம் விவைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே அவ்வப்பிராந்தியங்களில் தானுகவே விளைவிக்கப்பட்டு ரயத்துகள் தங்களுக்குத் தாமே கொடுத்துக்கொண்ட விதையளவைத் தவிர்த்தது தான் இக்கீழ் வரையும் தான்யத்தின் இடை.

வருஷம்.	விதையின் இடை அளவு.
1931–32	78 ராத்தல்.
1932–33	355 ”
1933–34	2,500 ”
1934–35	4,100 ”
1935–36	5,597 ”

சாதாரணமாய் ஏகருக்கு உபயோகப்படுத்த வேண்டிய விதை முதல் இரண்டு ராத்தல். தக்கவண்ணம் எருவிடப்பட்ட நாற்றங்காலில் விதைக்கப்பட்டு, நாற்றுகள் 3 வாரப்பயிராயிருக்கையில் நடப்படவேண்டும். இந்த வித்து வேண்டுமென்று கோறும் ரயத்துகள் அந்தந்த பிராந்தியத்து விவசாய டிப்டி டைரக்டரவர்களுக்காவது அல்லது, கோயமுத்தூர், லாலி ரோட்டு போஸ்டு, மில்லெட்ஸ் ஸ்பெஷலிஸ்டுக்காவது மனுச் செய்து கொள்ளவேண்டியது.

ஜி. என். ரங்கசாமி அய்யங்கார்,
மில்லெட்ஸ் ஸ்பெஷலிஸ்ட்.

பருத்தி உற்பத்திப் பண்ணை, கோயமுத்தூர்.

இது மத்திய விவசாயப் பண்ணைக்கு அடுத்த வடபுரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது 1922-ம் வருஷத்தில் பருத்தி அபிவிருத்திக்கும் உற்பத்திக்கும் வேண்டிய சாதனங்களைச் கண்டுபிடிக்கும் உத்தேசத்துடன் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது இந்தப் பண்ணையின் மொத்த விஸ்தீர்ணம் 87 ஏக்கர், (கரிசல் மண்ணு 30 ஏக்கர், சிகப்பு மண்ணு 57 ஏக்கர்). இதில் 22 ஏக்கர் கிணற்று நீர் பாய்ச்சும் வசதியுள்ளதாகவும் இருக்கின்றது.

இந்தப் பண்ணையில் என்னென்ன, எப்பொழுது பார்க்கக்கூடும்.

வருஷம் பூராவும் தொழு எருவை எவ்வாறு சேகரித்து பத்திரப்படுத்தி வைக்கவேண்டுமென்பதையும், நிலத்தில் களைகள் தோன்றுவண்ணம் எப்படி வைத்திருக்கிறதென்பதையும் கிருஷிகர் பார்க்கலாம்.

மே, ஜூன் மாதங்களில், பருத்திமார்களைப் பிடுங்கி எருவிற்காக மக்கவைத்தலையும், பசுந்தாளுரப்பயிர்களை நிலத்தில் மடக்கி உழுதலையும், கோடை மழைக்குபின் முளைக்கும் களைகளைக் குண்டாகாவினால் களைந்தெரிவதையும் கவனிக்கலாம்.

ஆகஸ்டு மாதத்தில், கம்போடியாப் பருத்தி விதைப்புக்கு வேண்டிய நிலத்தைப் பண்படுத்தி, பட்டம் ஓட்டுவதையும் மஞ்சி வாய்க்கால் ஓட்டுவதையும் பார்க்கலாம். இக்காலத்தில் வயல்களின் மத்தியிலிருக்கும் ஆராய்ச்சிக் கூடங்களில் உத்தியோகஸ்தர்கள் அநேக ஆராய்ச்சிக் கருவிகளைக் கொண்டு பஞ்சின் நீளத்தையும், பருத்தி அறவை செய்தால் பஞ்சு 100-க்கு எவ்வளவு இருக்கிறதென்றும் கணக்கிடுவதைக் கவனிக்கலாம்.

செப்டம்பர் மாதத்தில் கம்போடியாப் பருத்தி விதையைத் தோட்டக்கால் பூமிகளில் ஊன்றித் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.

அக்டோபர் மாதத்தில் காலமழை ஆரம்பித்தவுடன் புஞ்சைகளில் பருத்தியை விதைக்கலப்பையால் வரிசைவரிசையாக விதைக்கப்படும்.

நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்கள். களை யெடுக்கும் கருவியாலும் பயிருழவு ஓட்டும் கருவியாலும் களையெடுத்து பயிருழவு ஓட்டப்படுகிறது. பூக்களில், வண்டுகள் மொய்த்து அதிலுள்ள மகரந்தபொடிகளை வேறு புஷ்பங்களுக்கு கொண்டுபோகாமலும், வேறு புஷ்பங்களிலுள்ள மகரந்தப் பொடிகளை இந்த புஷ்பங்களுக்கு கொண்டுவராமலும் தடுக்கப் புஷ்பங்களைக் களிமண்ணால் தடவிவிடுவார்கள். அநேக பரீக்ஷைகளில் செடிகளைத் தேர்ந்தெடுப்பதையும் காணலாம்.

பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் பருத்தி எடுக்கப்படுகிறது. விதைகளைச் சுத்தமாக வைக்கும்பொருட்டு எடுத்துக்கொள்ளும் விசேஷ ஜாக்கிரதையையும் பலபொறுக்கு ஜாதிகள் ஒவ்வொன்றும் எவ்வளவு மகசூல் கொடுக்கிறதென்று துள்ளியமான கணக்கெடுப்பதையும் காணலாம். இக்காலத்தில் சோளக்கட்டைகளை ஆழமடக்கி உழுதுவிடப்படும்.

தற்சமயம் கீழேகண்டவைகள் முக்கியமாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன :—

(1) சோதனையின்பேரில் நல்ல மாசூல் கொடுக்கும் செடிகளை தேர்ந்தெடுக்கப்படுகிறது.

(2) இப்பொழுதிருக்கும் தினுசுகள் ஒட்டுசேர்த்து அவைகளை அபிவிருத்தி செய்தல்.

(3) நல்ல குணமுள்ள செடிகள் உற்பத்தியாகும் என்று தெரிந்தவுடன் அவைகளின் விதையை உற்பத்தி செய்து, கலப்புள்ள செடிகளின் மகசூலுடன் ஒத்துப்பார்ப்பது.

(4) பின்னால் ஏற்படக்கூடிய வர்க்கங்களுக்கு குடும்ப குண குணங்கள் எம்மட்டில் ஏற்பட்டிருக்கிறதென்பதும், பஞ்சு, விதை இவைகளின் நிறை, நோய் பீடிக்கவிடாமல் எவ்வளவு தூரம் தாங்கக்கூடிய சக்தியுள்ளது என்பவை.

(5) பருத்திக்கு முந்தி சாகுபடியாயிருந்த பயிர்களினுல் பருத்தியி னுடைய குணங்கள் எவ்வாறு மாறுபடுகின்றன என்பது.

(6) பருத்தியில் விழும் வேர்ப் பூச்சிகளைத் தடுப்பதற்கு வேண்டிய முறைகளை நிதானித்தல்.

(7) துவரை, கடலை முதலியவைகளில் நல்ல மகசூல் கொடுக்கக் கூடிய வர்க்கங்களைப் பொறுக்குதல்.

(8) பலவகை முறைப்படி தண்ணீர் இரைப்பதின் குண குணத்தைத் தெரிந்துகொள்ளுதல்.

நெல் உற்பத்திப் பண்ணை. கோயமுத்தூர்.

இந்த நெல் உற்பத்திப் பண்ணை 1915-ம்ஞு ஸ்தாபிக்கப்பட்டது. இது கோயமுத்தூர் தாலூகா, வேடப்பட்டி கிராமத்தில் மத்தியப் பண்ணையின் நஞ்சை பூமிகளுக்கு தென்மேற்கு திசையில் இருக்கிறது. இந்தப் பண் ணைக்கு கரும்பு உற்பத்தி பண்ணையின் வழியாக நரசம்பட்டி ஏரிக்கரைக்கடுத் தாப்போனுள்ள ரோட்டு வழியாகச் செல்லலாம். இந்தப் பண்ணையின் விஸ்தீர்ணம் 1915-ம்ஞு ஆரம்பத்திலிருந்து 1919-ம், 1930-வது வருஷங் களில் அதிகரிக்கப்பட்ட விஸ்தீர்ணத்துடன் சேர்த்து 35·33 ஏக்கர்.

இந்தப் பண்ணையில் என்னவை, எப்பொழுது பார்க்கக்கூடும்.

ஜூன், ஜூலை மாதங்களில்.—ஏவரிஸ் இந்துஸ்தான் என்ற கலப்பையால் உழுதல், பசுந்தாள் உரப்பயிர்களை நாட்டுக்கலப்பையால் மடக்கி உழுதல், நாற்றங்கால் தயார் செய்து பலவகையான நெல் தினுசுகள் விதைத்தல். சேற்று நாத்தங்கால், வரப்புழுதி நாற்றங்கால்கள், ஒத்திட்டுப் பார்க்கும் பரிசோதனை பாத்திகள். ஒத்தைப்பயிர் தேர்ந்தெடுத்து அவற்றின் குணங் களை ஆராய்ச்சி செய்வது முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்தலும் ஒட்டு சேர்ந்த (crossed) விதைகளைச் சட்டிகளில் விதைப்பதும்.

ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில்.—நெல் நடவு ஆரம்பம். பொறுக்கு விதை தினுசுகளைப் பரிசோதனைக்காக சிறிய பாத்திகளில் நடுதல், பலவித மான எருக்கள்போட்டு எந்த எரு அதிக மகசூலைக் கொடுக்கும் என்று சோதித்து அந்த எருக்களைத் தேர்ந்தெடுப்பதும், சாகுபடி முறைகளில் பல பரிசீலனைகள்.

செப்டம்பர், அக்டோபர் மாதம்.—இம்மாகாணத்தில் பலவிடங்களிலிருந் தும் சேகரித்த 500 நெல் தினுசுகளுக்குமேல் வேறுபட்ட குணங்களைப் பரி சோதனை செய்தல். நெல் தினுசுகளிலிருந்து பொறுக்கி எடுத்த விதை களைச் சிறிய பாத்திகளில் நட்டு அவைகளைப் பரிசோதனை செய்தல். நெல் தினுசுகளில் மலரும் காலத்தைக் குறித்தல். ஒட்டு சேர்க்கையிலிருந்து வந்த நெல் தினுசை இரண்டாம் போகத்தில் போட்டுப் பயிர்களில் காணப் படும் குணங்களைப் பரிசோதனை செய்தல்.

நவம்பர் மாதம்.—இந்த நெல் உற்பத்திப் பண்ணையைப் பார்ப்பதற்கு இதுதான் தகுந்த காலம். நெல் தினுசுகள் அநேகமாக இந்தக் காலத் தில்தான் மலர்கின்றன. ஒட்டு சேர்க்கும் வகையையும் ஒட்டுசேர்த்து உற் பத்தியான நெல் தினுசுகளில் எவ்வகை பரிசோதனை செய்யப்படுகின்றன என்ற விஷயத்தைப்பற்றியும், நெல் தினுசுகளில் கிளைத்து வரும் சிம்பு களை எண்ணுவதையும், நெல் தினுசுகளின் உயரத்தை அளப்பதையும், நெல் கதிர்களின் நீளத்தையும், அதிலிருக்கும் தான்யத்தின் அகல நீளத்தை அளப்பதையும் பார்க்கலாம். இளம்வித்து நெல் தினுசுகள் அறுப்பு.

டிசம்பர், ஜனவரி மாதம்.—வலிய வித்து தினுசுகளில் மேலே கூறிய பரிசோதனைகள் செய்தல். நெல் தினுசுகள் வளர்ந்து நிலத்தில் மடிந்து போவதைப்பற்றிப் பரிசோதனை செய்தல், நெல் மகசூலை அறுவடைசெய்து களத்தில் தாள் அடித்தல், நெல்மணிகளைத் தூற்றிக் காயவைத்தல், பிறகு பரிசோதனைக்காக அறுவடை செய்த நெல்தினுசுகள் மகசூலை இடை போடுதல்.

பிப்ரவரி மாதம்.—நெல் விதைகளை உலர்த்தி நன்ருகச் சுத்தம்செய்து இதர ஜில்லாக்களுக்கும் தேவையான குடியானவர்களுக்கும் அனுப்புதல்.

மார்ச், ஏப்ரல், மே மாதம்.—கோடைகாலத்தில் கிணற்றுக்குப் பக்கத்தி லுள்ள நிலங்களில் அடைசோளம், மக்காச் சோளம், சூரியகாந்தி, மாட்டுத் தீவனத்திற்கு வேண்டியும் பசுந்தாள் உரத்திற்கு வேண்டிய சணல், தக் கைப்பூண்டும் பயிர் செய்தல்.

தற்சமயம் பரிசீலனை செய்யும் விஷயங்கள்.

(1) உப-பண்ணைகளில்லாத பிரதேசங்களிலுள்ளதும் மற்றுமுள்ள சாதாரண நெல் தினுசுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நெல் தினுசுகளைத் தனிப்படுத்துவது.

(2) சேர்க்கையால் லாபத்தைத் தரக்கூடிய விசேஷ குணங்களைக்காட் டும் தினுசுகளை விருத்தி செய்தல்.

(3) சேர்க்கை ஆராய்ச்சிக்கு அனுகூலமாயிருக்கும் சுத்தமான தினுசு களையும், மாறுதல்கள் காட்டும் தினுசுகளையும் பார்த்து சேகரித்து வைத் தல்.

(4) நெல்லுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டுமென்பதை நிர்ணயிக்க வேண்டிய சோதனைகள்.

(5) முந்தி விதைக்கப்பட்டதும், சரியான பட்டத்தில் விதைக்கப்பட்ட தும், பிந்திய பட்டத்தில் விதைக்கப்பட்டதுமான நெல் தினுசுகளிலிருந்து நெற்பயிர் சாய்ந்து மடிந்து போவதின் காரணம் என்னவென்பதைக் காணுதல்.

(6) நெற்பயிரில் உண்டாகும் சாதாரண மாறுதல்களின் குணவிசே ஷங்களையும், சேர்க்கையால் காணப்படும் குணங்களையும் இரண்டிற்கும் காரணமான முக்கிய விஷயங்களைக் கண்டுபிடித்தல்.

(7) சாகுபடி முறை, எருவிடுதல் முதலியவைகளில் பரிசோதனை :—

நெல் விதை தெளித்தல், நெல் நாற்று நடுதல், நடும்போது நாற் றின் வயது, நாற்றின் நிலைமை, நாற்றங்காலுக்கு எருவிடல், நடும் வய லுக்கு எருவிடல், பலதினுசு இடைவெளிவிட்டு நடுதல், அமோனியம் சல் பேட் போடவேண்டிய தகுதியான காலம் முதலிய விஷயங்களைப்பற்றிய ஆராய்ச்சி.

கோயமுத்தூர் நெல் அபிவிருத்தி பண்ணையிலிருந்து வெளியே அனுப் பப்பட்ட பொறுக்கு நெல் விதைகளைப்பற்றிய சிறு குறிப்புகள்.

ஜி.இ.பி. நெ. 24.—இதுதான் முதன்மையாகப் பொறுக்கப்பட்ட சிரேஷ்டமான பொறுக்கு நெல் விதை. 1913–14-ல் மத்திய விவசாயப் பண்ணையில் விளைந்திருந்த கொராமணி, நெல் தினுசில் ஒரு தனித்தூர் மற்றைய நெல் தூர்களை விட விசேஷித்த குணங்களுடையதாய்க் காணப் பட்டது. அநேக வருஷங்களாய் சுத்தி செய்யப்பட்டு பல வேறு சோத னைகளின் பின் ஜி.இ.பி. நெ. 24 என்னும் நம்பரிட்டு வெளியே விடப் பட்டது. கோயமுத்தூரில் 149 நாட்களில் அறுவடையாகிறது. பலதூர் கள் கட்டி நன்ருய் விளைகிறது. காலக்குறைவான முதல் போக சம்பா தினுசாக ஜூலை மாதத்தில் நடப்படுகிறது. சராசரி 3,588 ராத்தல் ஸெண்ட் ரல் பாரத்தில் மாசூலானுலும் எருவும் வடிகால் வசதியும் செவ்வனே ஏற்பட்டபொழுது 5,000 ராத்தல் தூத்தின தான்யமும் மாசூலாகக் கொடுத்திருக்கிறது. மணி சிறுத்து வெண்மையான அரிசியாய் சாப்பாட் டுக்கு திவ்யமான ராசியாயிருப்பதுடன் கொட்டுண்டு போவதில்லாமல் உமியும் குறைந்திருப்பதனுலும் நெல் சூரை நோய்க்கும் அடிபடுவதில்லை யானதாலும் சிலாக்கியமான தினுசாயிருக்கிறது. இச்சென்னை ராஜதானி யின் எல்லாப் பாகங்களிலும் இந்த தினுசு நன்கு மதிக்கப்பட்டுவருவ துடன் அதனுடைய மேலான குணத்திற்காகவும் மற்ற தினுசு நெல்களை விட மூட்டை 1-க்கு 1 முதல் 2 ரூபாய் வரைக்கும் அதிக விலை கொடுத்து

வாங்குகிற யோக்யதைக்காகவும் இந்த நெல் அநேக ஜில்லாக்களில் சீக்கிரத்தில் பரவிவருகிறது. கஞ்சம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், கடப்பை, திருச்சிஞப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஜில்லா பெரியார் பாசனம், ஈரோடு, கோபிசெட்டிபாளயம், தாராபுரம், தென்கன்னடம் முதலிய பல இடங்களிலும் இந்த நெல் நன்ருய் மாசூல் கொடுப்பதாய்த் தெரிகிறது. நல்ல வடிகாலுள்ள மணற்கண்டமான பூமிகளுக்கு ஏற்றதாயிருக்கிறது. தண்ணீர்த்தட்டையும் அதிக நீர்ப்பிடிப்பையும் தாளக்கூடியதாயும், ஏகதேசமாய் உவர்த்தன்மையையும் ஸஹித்து வரத்தக்க நெல் தினுசு இது. வாடன் சம்பா என்ற அத்தேசத்து நெல் தினுசுடன் சால் விதைக்கருவியால் விதைக்கப்பட்டதில் ஏக்கர் 1-க்கு ராத்தல் 2,600 கொடுத்ததாயும் வாடன் சம்பா 1,800 ராத்தல் மட்டுமே மாசூல் கொடுத்ததாயும் 4-வது சர்க்கிளிலிருந்து ரிபோர்டு கிடைத்திருக்கிறது. 3-வது சர்க்கிளிலிருந்து சமீபத்தில் வரலான ரிப்போர்ட்டில் துங்கபத்திரா பாசனங்களாகிய ஹொசப்பேட்டை, சிருகுப்பா, இராமாபுரம் முதலிய இடங்களில் அந்த ஸ்தலத்து நெல் தினுசுகளை எடுத்தெறிந்துவிட்டு இந்த தினுசு வெகு விரைவில் பரவி வருவதாகத் தெரிகிறது. சரியான இரண்டாம் போக தினுசாக மலையாள ஜில்லாவில் கருதப்பட்டு வருகிறது. கோயமுத்தூர் பிராந்தியத்தில் இதைக் கிச்சிலிச்சம்பா என்கிருர்கள். வைக்கோல் மாசூல் சற்றே குறைவாயிருந்தாலும் நல்லதாய் இருக்கிறது. இந்த தினுசு மெல்லிய கதிர் தண்டுடன் நேராக வளர்வதால் எளிதில் கண்டுகொள்ள முடியும்.

கோ. நெ. 1.—1914–15-ம்ஸ்லுத்தில் ஜி.இ.பி. நெ. 24 தினுசு நெல் விளைந்து கொண்டிருந்த ஒரு நிலத்தில் ஸ்வயமாக மிச்ரமிக்கப்பட்ட ஒரு தூராகக்காணப்பட்டு பிறகு தனிப்படுத்தப்பட்டது. 1918–19-ம் வருஷத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் ஜி.இ.பி. நெ. 24 ஐ விட 100-க்கு 20 பங்கு அதிகப் பலிதம் கொடுத்ததுமன்றி மணியின் ராசியும் சற்றும் பருத்திருப்பதாக காணப்பட்டதால் உபரியும் பொறுக்கு வேலை செய்யப்பட்டது. இவற்றில் ஒன்றை 1923–24-ம்ஸ்லுத்தில் கோ. நெ. 1 என்ற நம்பருடன் வெளியாயிற்று. 1918–19-ம்ஸ்லுத்துப் பொறுக்கு தினுசைவிட சற்று சிலாக்கியமானதாகவிருந்தது. இந்தப் பொறுக்கு விதை ஜி.இ.பி. நெ. 24 அரிசியவ்வளவு நயமில்லாததும் சற்றே பரு ராசியுமானது. இந்த கோ. நெ. 1 நெல் அரிசி கோயமுத்தூரில் 155 நாட்களில் அறுவடையாய் சராசரி ஏக்கர் 1-க்கு 3,645 ராத்தல் சுத்தமான தூத்தின நெல் சென்ட்ரல் பாரத்தில் மாசூல் கொடுத்தது. ஜி.இ.பி. நெ. 24 ஐ விட வைக்கோல் மாசூல் அதிகம் கொடுக்கிறது. கோயமுத்தூரில் இதற்கு மதிப்பு அதிகம். பின்னும் குண்டூர், திருச்சிஞப்பள்ளி ஜில்லாவின் பாகங்களிலும் இதற்கு சிலாக்கியதை ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர் தட்டு ஏற்பட்ட காலங்களுக்கு ஏற்ற தினுசு என்று முசிரி இலாகாவில் தெரியவருகிறது.

கோ. நெ. 2.—சிவகிரி, பூம்பாளையிலிருந்து பொறுக்கப்பட்ட தனி நெல் தினுசு 1918–19-ல் வெளியாக்கப்பட்டது. 3 வருஷப் பரீக்ஷையில் மொத்தமான பூம்பாளை தினுசைவிட சராசரியில் 100-க்கு 8 பங்கு அதிக மாசூல் கொடுத்துவந்து 1923–24-ல் கோ. நெ. 2 என்று வெளியாயிற்று. கோயமுத்தூரில் சாதாரணமாய் ஜூலையில் பயிராக்கப்பட்டபோதிலும் தன் சுதேசமாகிய திருநெல்வேலியில் கார்த்திகை சம்பா என்ற பெயருடன், பின் பருவ காலமாகிய அக்டோபர், நவம்பர் மாதங்களில் பயிரிடப்படுகிறது. கோயமுத்தூரில் 157 நாட்களில் அறுவடைக்கு வந்து சராசரி ஏக்கர் 1-க்கு 3,898 ராத்தல் மாசூலும், ஸெண்ட்ரல் பாரத்தில் மிகவும் உயர்த்தியான மாசூலாக 4,885 ராத்தல் நெல்லும் கண்டு முதலாயிருக்கிறது. நெல் தினுசு நன்ருயிருப்பதுடன் வைக்கோல் மாசூலும் அதிகமாகவே இருக்கிறது. கோ. நெ. 1 நெல் தினுசு மணிபோலவே இருக்கும். கோ. நெ. 2 நெல்லும் கிருஷ்ணா ஜில்லாவில் விஸ்தாரமான பூமியில் பயிரிடப்படுவதுடன் நெல்லூர் ஜில்லாவிலும் பயிராக்கப்படுகிறது. (கூடூரில் ஈசுவர கொர்ரா என்ற நெல் 2,053 ராத்தல்

மாசூல் கொடுக்கையில் கோ. நெ. 2, 3,267 ராத்தல் மாசூல் கொடுத்த தாகவும் தொட்டிபல்லிகூடுரில் 3,875 ராத்தல் மாசூலும் கொடுத்திருப்ப தாகத் தெரிகிறது). தக்க விலையும் கிடைக்கிறது. வாடன் சம்பா நெல் ஒரு கண்டிக்கு ரூ. 90-க்கு விற்கையில் கோ. நெ. 2, கண்டி 1-க்கு ரூ. 103-க்கு விற்றதாகவும் ரிபோர்ட்டு கிடைத்திருக்கிறது. நல்ல மாசூலுக்கும், முன் அறுவடையாவதற்குமாக 4-வது சர்க்கிளிலிருந்து சமாசாரம் கிடைக்கிறது. வேலூரில் பயிராகிற சின்ன சம்பா நெல் 3,000 ராத்தல் மாசூல் கொடுக்கையில் கோ. நெ. 2, உயர்ந்த மாசூலான 4,500 ராத்தல் கொடுத்ததாகவும் செய்தி கிடைக்கிறது. திருச்சிறுப்பள்ளி, வட ஆற்காடு, திருநெல்வேலி, சேலம், தென்கன்னடம் முதலிய ஜில்லாக் களிலும் இந்த தினுசு சிலாக்கியமானதென்று ரிப்போர்ட்டு எட்டுகிறது.

கோ. நெ. 3.—கோயமுத்தூர் துலுக்க சம்பா தினுசிலிருந்து பொறுக் கப்பட்ட விதை முதலில் 1917-ம் வருஷத்தில் தனிப்படுத்தப்பட்டு 4 வருஷ பரிசோதனையில் 100-க்கு 8·07 பங்கு அதிக மாசூல் கொடுத்திருக்கிறது. முதலாக 1923–24-ல் வெளியாக்கப்பட்டது. கோயமுத்தூரில் சராசரி செண்ட்ரல் பாரத்தில் 4,046 ராத்தல் மாசூல் 161 நாளில் கொடுத்தது. நாட்டு தினுசாகிய சடை சம்பா நெல்லை மாற்றிப்போட்டு கோயமுத்தூர் சுத்துப்படாகைகளில் அந்த கோ. நெ. 3, நன்கு மதிக்கப்படுகிறது. தெனலி பிராந்தியத்திலுள்ள சிலாக்கியமான பூமிகளில் ஏக்கருக்கு சராசரி 3,400 ராத்தல் மாசூல் கொடுக்கிறது. கோபிசெட்டிபாளயத்தில் 100-க்கு 14 பங்கு அதிகமாக மாசூல் கொடுத்திருக்கிறது. 2-வது சர்க் கிளில் விஸ்தாரமாய்ப் பயிராக்கப்பட்டு 3 வருஷ சராசரியில் ஏக்கர் 1-க்கு 3,000 ராத்தல் மாசூல் கொடுத்திருக்கிறது.

கோ. நெ. 4.—கோபிசெட்டிபாளயம், ஆனைக்கொம்பன் நெல்லின் பொறுக்கு விதை இது 8 வருஷங்களுக்கு முன்பு தனிப்படுத்தப்பட்டது. 4 வருஷ பரிசோதனையில் 100-க்கு 11·6 பங்கு அதிக மாசூல் கொடுத்தது. இந்த பொறுக்கு நெல் 1926–27-ல் வெளிப்படுத்தப்பட்டது. கோயமுத் தூரில் ஜூலையில் நடப்பட்டு 192 நாளில் அறுவடையாகிறது. நெல் பருமணியாயிருப்பதுடன் அரிசி வெண்மையான நடுத்தர குணமுள்ளதாய் இருக்கிறது. சரிவர தூர் கட்டக்கூடிய உயரமாய் வளர்கிற தினுசாகையால் நல்ல மாசூல் வைக்கோல் கொடுக்கிறது. கோயமுத்தூரில் சராசரி ஏக்கர் 1-க்கு 3,788 ராத்தல் தூத்தின தான்யம் மாசூல் கண்டிருக் கிறது.

கோ. நெ. 5.—கோயமுத்தூர் சின்ன சம்பாவிலிருந்து பொருக்கப் பட்டு 1926–27-ல் வெளியாக்கப்பட்டது. இந்த கோ. நெ. 5 பொருக்கு விதை நெல், நான்கு வருடங்களாக நடத்தின பரிசீலனைகளில் நாட்டு நெல்லைவிட நூற்றுக்கு 12·2 பங்கு வீதம் அதிக பலம் கொடுக்கக்கூடியது. மற்ற நெல் தினுசுகளோடு இந்த கோ. நெ. 5-ம் ஜூலை மாதத்தில் நடப்பட்டு 164 நாட்களில் அறுவடைக்கு தயாருகிறது. செவ்வையாய் எருவிடப்பட்ட பூமிகளில், ஏருளமாய் தூர்கட்டி தக்க மாசூலையும் தரு கிறது. கதிர்கள் கனத்து நீண்டிருப்பதுடன் நன்ருய் நிரம்பிய மணி பிடித்திருக்கும். அரிசி வெண்மையாய் ஜி.இ.பி. 24 நெல்லின் குணத் திற்கு சமானமாய் சிருமணிகளாயிருக்கும். கோயமுத்தூரில் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி 3,500 ராத்தல் மாசூல் கிடைத்திருக்கிறது.

கோ. நெ. 6.—கோயமுத்தூர் சடைசம்பாவிலிருந்து பொறுக்கப்பட்டு 176 நாட்களில் அறுவடையாகும். பொறுக்கு நெல் விதை இது. உயர மாய் வளர்ந்து நன்ருய்த் தூர் கட்டி வைக்கோல் மாசூல் ஜாஸ்தியாய்க் காணும். கோ. நெ. 3 நெல்லைவிட சற்று அகலமுடைய நடு ராசியான நெல். கோயமுத்தூர் சுற்றுப்படாகைகளில் மற்ற தினுசு நெல்களை விட சடைசம்பா நெல் அரிசி சோறு சற்று ஸத்து அதிகமுள்ளதாகக் கருதப்படுகிறது. செண்ட்ரல் பாரத்தில் 3·75 ஏக்கர் விஸ்தீர்ணத்தில் பயிர் செய்யப்பட்டபொழுது ஏக்கர் 1-க்கு சராசரியில் 3,897 ராத்தல் மாசூல்கொடுத்திருக்கிறது.

கோ. நெ. 7.—கோபிசெட்டிபாளையம் சடை சம்பாவிலிருந்து பொறுக்கப்பட்டது. நன்ருய்த் தூர் கட்டி நெல், வைக்கோல் இரண்டும் தக்க மாசூல் கொடுக்கிறது. 157 நாட்களில் அறுவடைக்குத் தயாராய் சென்டரல் பாரத்தில் எக்கர் 1-க்கு சராசரி 4,157 ராத்தல் மாசூல் கொடுத்திருக்கிறது. கோயமுத்தூர் சடை சம்பா நெல் மணியைவிட மிகவும் சிறு ராசியானது.

கோ. நெ. 8.—திருநெல்வேலி ஜில்லா பிசானம் நெல்லாகிய ஆனைக் கொம்பனிலிருந்து பொறுக்கப்பட்டது. 190 நாட்களில் அறுவடைக்குத் தயாராகிறது. ஜி.இ.பி. நெ. 24 ஐப்போல் சிறு ராசியான தான்யத்தைக் கொடுக்கிறது. சராசரி மாசூல் 3,000 ராத்தல் 6 வருஷ சராசரி கணக்கின் படி இந்த பொறுக்கு விதை 100-க்கு 17 பங்கு வீதம் அதிக மாசூல் கொடுத்திருக்கிறது. தற்காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் விஸ்தாரமாய்ப் பரவிவருகிறது.

கோ. நெ. 9.—திருநெல்வேலி கார் சம்பா நெல்லின் பொறுக்கு விதை. இது சுவல்ப கால முதல்போக நெல் தினுசு. 116 நாட்களில் பயிர் முற்றி சராசரி எக்கர் 1-க்கு 3,000 ராத்தல் மாசூல் கொடுக்கக் கூடியது. கோயமுத்தூரில் நடத்திய 4 வருஷ சோதனையில் உள்ளூர் விதையைவிட 100-க்கு 14 பங்கு வீதம் அதிக மாசூல் கொடுத்தது. நெல் மணி சற்று பருமனுயும் அரிசி சிவப்பாயும் இருக்கும். நெல் சற்றுக் கருவடியான சிவப்பு நிறமுள்ளதாயிருக்கும்.

கோ. நெ. 10.—கோபிசெட்டிபாளையம் கார் என்ற சுவல்ப கால முதல் போக நெல் விதையின் பொறுக்கு விதை. 125 நாட்களில் தயாராய் 2,500 ராத்தல் மாசூல் எக்கர் 1-க்கு தரக்கூடியது. நாட்டு நெல்லைவிட 100-க்கு 17 பங்கு அதிக மாசூல் கொடுத்திருக்கிறது. நெல் பெரியதாய் அரிசி வெண்மையாயிருப்பதுடன் பொரியரிசிக்கு சிலாக்கியமானதென்று தெரியவருகிறது.

கோ. நெ. 11.—கோபிசெட்டிபாளையம் அய்யன் சம்பா நெல்லின் பொறுக்கு விதை. இது நேர்த்தியான அரிசி கொடுக்கக்கூடியது. நீண்ட காலப்பயிர். நெல் மணி, லேசாய் நீண்டதாய் சற்று நுனி வளைந்ததாய் இருக்கும். 185 நாட்களில் அறுவடைக்குத் தயாராகிற சிறுமணி நெல்லாகையால் யாவரும் விரும்புகிருர்கள். நாட்டு நெல்லைவிட 100-க்கு 13 பங்கு அதிக மாசூல் கொடுக்கக்கூடியதாகக் காணப்பட்டிருக்கிறது.

ஹோசூர் கால்நடை அபிவிருத்தி ஆரராய்ச்சிப்பண்ணை.

இந்தப்பண்ணை சேலம் ஜில்லாவைச் சேர்ந்த ஹோசூர் தாலூகாவிலுள்ள ஹோசூருக்கு 3 மைலுக்கு தெற்கே "மத்திகிரி" என்னும் கிராமத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது 1924-ம் ௵ செப்டம்பர் ௴ 1௳ மதராஸ் கவர்ன்மெண்டாரின் பரிபாலனைக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அன்றுமுதல் கால்நடை அபிவிருத்தி ஆராய்ச்சிபண்ணையாக உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றது. அதற்குமுன் 96 வருஷகாலமாக ராணுவக் குதிரைகள் வைத்திருக்கும் மூலஸ்தானமாயிருந்தது.

விஸ்தரிப்பு.—இப்பண்ணையின் நிலங்கள் ஈரம் காக்கக்கூடிய செழுமை பொருந்திய இருமண் முதலாக, செந்நிற சுக்கான் கற்கள் உள்ள கடினமான பொட்டல்பூமி ஈராக இருக்கின்றன. இப்பண்ணையின் விஸ்தீர்ணம் 1,659·91 எக்கர்.

இவற்றுள் 65 எக்கர் நிலங்களுக்கு ஏரிப்பாய்ச்சல் உள்ளது. இப்பண்ணைக்குள் 3 ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகள் முற்றிலும் மழை ஜலத்தை எதிர் பார்ப்பவைகள். இந்த நிலங்கள் செழுமையான கரிசல்மண்ணும் இருமண் கலந்த செம்மண்ணும் உடையன. இது சாதாரணமாக லூசர்ன் தோட்டம் என்று சொல்லப்படும். இது 35 வயல்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலங்களில் விசேஷமாக லூசர்ன் என்னும் குதிரை மசாலைப்புல்லும், ரோட்ஸ் என்னும் ஒருவிதப் புல்லும், சோளப் பயிரும் மாற்றி மாற்றி சாகுபடி செய்யப்படுகின்றன. காரையால் கட்டப்பட்ட சிறு கால்வாய்களின் மூலம் இந்த நிலங்களுக்குப் பெரிய ஏரியிலிருந்து ஜலம் பாய்ச்சப்படுகின்றது.

விஸ்தாரமான மேய்ச்சல் தரையை 46 தோப்புகளாகப் பிரித்து பல திக்குகளிலும் நேர்த்தியான ரஸ்தாக்கள் உண்டுபண்ணி சீஷம், வாகை, மா, புளி, சவுக்கு முதலிய விருக்ஷங்களால் சோலைகள் உண்டுபண்ண பட்டிருக்கின்றன. பண்ணையைச் சுற்றிலும் கத்தாழையைக்கொண்டு வேலி அடைத்திருக்கிறது. பல மேய்ச்சல் தரைகளுக்கு முள்வேலியிருக்கிறது. சுமார் 3,000 சந்தன மரங்களும் செடிகளும்கூட இருக்கின்றன. இன்னும் நூற்றுக்கணக்கான சிறு செடிகள் முளைத்துவருகின்றன. பண்ணையின் வடபாகம் மேடாகவும் தென்பாகம் பள்ளமாகவும் இருக்கின்றன. அதன் மத்தியில் பள்ளமும் மேடாக இருக்கின்றன. பண்ணையின் உன்னதமான பாகம் கடல்மட்டத்திற்குமேல் 3,005 அடியும், தாழ்ந்த நிலம் 2,925 அடி உயரத்திலும் இருக்கின்றன. ஆகையால் பண்ணையிலுள்ள மேட்டுப்பாகத்திற்கும் பள்ள பாகத்திற்கும் 80 அடி வித்தியாசமிருக்கிறது. மொத்தத்தில் இந்தப்பண்ணை ஓர் ஆங்கிலேயே சிங்காரத்தோட்டைத்தைப்போல காணப்படுகிறது.

இந்தப் பண்ணையின் முக்கிய நோக்கம் என்னவென்றால்; உயர்ந்த ஜாதி மாடுகளை விருத்தி செய்வதற்கும் அதிலிருந்து நல்ல பொலிக்காளைகளை விவசாயிகளுக்குக் கொடுத்து அதனால் அவர்களுடைய கால்நடைகளை விருத்தி செய்வதேயாகும். சில சமயங்களில் பொலிகாளைகளுக்கு உபயோகப்படாத மாடுகளை பயிர் வேலைக்கு எருதாக விற்பதும் உண்டு.

இந்தப் பண்ணையில் ஒரு சிறிய பாற்சாலையும் இருக்கின்றது. அது லாபத்திற்காக வைக்கப்படவில்லை. ஏனெனில் இப்பண்ணை முக்கியமாய் கால்நடைகளை விருத்தி பண்ணுவதற்காக ஏற்படுத்தப்பட்டபடியால், கன்றுக்குட்டிகளுக்கு ஊட்டிய பிறகு மிகுதியாயிருக்கும் பாலைமட்டும் தேவையானவர்களுக்கு விற்கப்படும். இன்னும் மிகுதியாகும் பாலை உள்ளூரில் விலையாகக்கூடிய மட்டில் வெண்ணையாகவோ நெய்யாகவோ செய்து விற்கப்படும்.

காங்கேயம் மாடுகள்.—சென்னை ராஜதானியின் தென் பாகத்தில் இழுவை வேலைகளுக்கு அதிக யோக்யமான ஜாதி காளை மாடுகள் நன்றாய் இறுகின கட்டுப்பாடுள்ளதும் கஷ்டமான வேலைகளைச் செய்யவும் சவாரிக்கும் மிகவும் லாயக்கானது. பால் கறவைக்கு சிலாக்கியமற்றபோதிலும் ஆங்காங்கே சில பசுக்கள் வேளாவேளைகளில் நாள் 1-க்கு 5 ராத்தல் பால் கொடுக்கக்கூடியவைகள்ளாக இருக்கின்றன. அடைகளுடைய வேலைப்பாட்டின் மேன்மையைக்குறையவிடாதபடி பால் தரும் குணத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஸிந்தி மாடுகள்.—இந்து தேசத்து பால் கறவை மாடுகளில் அதிகம் சிலாக்கியமானது. பசுக்கள் சிறியவையாய் உடல் இறுகி சாந்தமானவைகளாய் இருப்பதோடு, மற்ற ஜாதி மாடுகளைவிடச் சற்று குறைந்த தீவன தின்கிறவைகளாகவும் இருக்கின்றன. நன்றாய்த் தீனி கொடுத்து வளர்க்கப்படுகிற இந்த ஜாதி பசுக்கள் சராசரியில் கறவை காலம் முடியுமுன் 10, 12 ராத்தல் கொடுக்கும் தன்மையன. மேல் நாடுகளில் உள்ள ஏழ்மைகளுடைய பசுக்கு சமானமானது. சாதாரணமாய் 15, 16 மாதங்களில் பசுக்கள் கன்றுகள் ஈனுகின்றன. காங்கயம் காளையோடு ஒப்பிடுகையில் ஸிந்தி காளைகள் சற்று மந்தமானவைகளாகக் காணப்படினும் கராச்சியில் இழுவை வேலைகளுக்கு அதிகமாய் உபயோகப்படுத்தப்படுகின்றன. தென்னிந்தியாவில் இச்சாதி மாடுகள் நன்றாயிருப்பதால் நகரங்களுக்கு வேண்டிய பால் சப்ளைக்கு ஏற்றதென்று சிபார்சு செய்யப்படுகிறது. அதிகப்பால் தரத்தக்க வர்க்கமொன்றை நாளாவர்த்தியில் விர்த்தி செய்யவேண்டிய முக்கிய நோக்கத்துடன் நகரங்களுக்கும் மேல் கரையூர்களுக்கும் இச்சாதி பொலி காளைகளை வாங்கி வழங்கவேண்டுமென்ற அபிப்பிராயம் இருந்துவருகிறது.

ஒங்கோல் மாடு.—சென்னை ராஜதானியிலுள்ள எல்லா ஜாதி மாடுகளைவிட மிகப் பெரியது. கீழ் ஜில்லாக்களில் இது நன்றாய்த் தெரிந்த விஷயம். மாடு பெரியதாய் இருப்பதுடன் சாதுவானதாயுமுள்ள மிருகம்.

பால் கறவையில் அதிகச் சிறந்தவை. சென்னபட்டணத்தில் ஏராள மான பசு மாடுகள் கறவைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. நாள் 1-க்கு 9, 10 ராத்தல் பால் கொடுக்கும். காளைகள் மெதுவாக நடந்தாலும் பலமுள்ளவைகளாகையால் பளுவான பாரங்களை இழுக்கச் சக்தியுள்ளவை. அவற்றின் குளம்புகள் சற்று மிருதுவானவை. சரியான வண்ணம் பால் தரத்தக்க ஒரு ஜாதியை உத்பத்தி செய்வதுதான் தற்காலத்து நோக்கம். இவ்வுத்தேசங்கொண்டு சரியான பொலிகாளைகள் பல இடங்களுக்கும் வழங்கப்படும்.

கலப்பு ஜாதி மாடுகள்.—இக்கலப்பு ஜாதி மாடுகளிடையே செய்துவந்த வேலை இப்பொழுது நிறுத்தப்பட்டு இக்கலப்பு ஜாதி பசு மாடுகளுக்கு சிந்தி காளைகளையே பொலியவிட்டு சிந்தி ஜாதியை மறுபடி விர்த்திசெய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் வேலை செய்யப்படுகிறது. விவசாய காலேஜ், கோயமுத்தூரில் இருக்கும் பால் கறவை மாடுகளுக்காக இச்சாதி மாடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. காலா காலங்களில் ஏதேனுமொரு பசு மாடு இதிலிருந்து விலைக்குக் கிடைத்தாலும் கிடைக்கும். இவற்றைப் பற்றிசவிஸ்தாரமான கணக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியாகச் செய்துவரும் வேலையின் முடிவு போதுமான அளவு விபரங்கள் கிடைத்தவுடன் பிரசுரிக்கப்படும்.

ஆடுகள்-பல்லாரி.—பெயரிலிருந்து இவ்வாடுகள் பல்லாரியிலிருந்து வரப்பட்டவை என்பது விளங்கும். வெள்ளை ரோமத்துடன் கூடிய நல்ல கறியைக் கொடுக்கக்கூடிய ஒரு ஆட்டினத்தைச் சேகரிப்பது தான் முக்கிய நோக்கம். இதுவரை நடந்த பரிசோதனைகள் முற்றிலும் உத்ஸாகத்தைத் தரத்தக்கவைகளாகவே இருக்கின்றன.

அதிமேன்மையான ஆட்டுக்கிடாக்கள் பொலிச்சலுக்காக விலைக்குத் தயாரிக்கப்படுகின்றன. ஹோசூரிலுள்ள ஈட்டிப்புல் மேய்ச்சல் காடுகளில் புல் நன்றாய் வளர்ந்திருந்தபோதிலும் அங்கேயும், மதராஸ் ரேஸ் கிளப் அருகம்புல் மேய்ச்சல் தரையிலும் மேய விடுவதால் இவ்வாடுகளை நன்றாய்க் கொழுக்கவைப்பது சிரம சாத்தியமான கார்யமாய் இருக்கிறது. ஹோசூரில் வருஷம் 1-க்கு ஒரு ஆட்டிலிருந்து கிடைக்கக்கூடிய கம்பிளி மயிர் 3 ராத்தலுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

பல்லாரி கம்பிளி ஆட்டுக்கிடா.—ஹோசூர் கால் நடைப் பரிசோதனைப் பண்ணையில் மேற்சொன்ன ஆட்டுக்கிடாக்கள் விலைக்குக் கிடைக்கும். கறுப்பு முகமும் வெள்ளை நிறமுள்ள ஆட்டு மந்தையில் பொறுக்கப்பட்ட ஆட்டு கிடாக்கள் இவை, ஒரு வருஷத்தில் ஒரு ஆட்டிலிருந்து சராசரி 2¾ ராத்தல் கம்பிளி ரோமம் கிடைக்கும். ஆனால் இந்தப் பொறுக்குக் கிடாக்கள் 4 முதல் 7 ராத்தல் வரையிலும் தரலாம். நன்றாய் வளர்ந்த கறுப்பு முகமும் வெள்ளை நிறமுமுள்ள ஒரு கிடாவின் சராசரி இடை 120 ராத்தல்.

ஒரு வயதுள்ள ஆட்டுக்கிடாக் குட்டிகளின்விலை ரூபாய் 10 முதல் 15 வரை ஆகும்.

மற்றும் வேண்டும் விபரங்களுக்கு, ஹோசூர் கால் நடைப்பண்ணை, போஸ்டு சூப்பிரின்டென்டெண்டுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கோழிகள்.—வெள்ளை லெக்ஹாரன், ரோட் ஐலண்டுரெட், பிளாக் மைனார்கா, உட் ஏயிட் ஸஸ்ஸெக்ஸ் என்று நான்கு ஜாதிக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இக்கோழிகளின் குணகுணங்களையறியும் பொருட்டு கூட்டில் தனித்தனியாய் அடைக்கப்பட்டிருக்கின்றன. வெள்ளை லெக்ஹாரனும் பிளாக் மைனார்காவும் முட்டையிடுவதில் மத்திபமானவை. ரோட் ஐலண்டு சிவப்பும், லைட்ஸஸ்ஸெக்ஸும் அதிக முட்டைகளிடும். அத்தோடு முட்டையிடுவதற்கும் சாப்பாட்டிற்கும் சிலாக்கியமான இருவகைப் பிரயோஜனத்திற்கும் ஏற்றவை. முட்டைகளைக் கொண்டு குஞ்சு பொரிப்பதற்கும் கோழிகளும் ஜூலை முதல் மார்ச்சு முடிய வருஷம் பூராவும் ஜனங்களுக்கு விற்கப்படும்.

சர்க்கார் பண்ணைகளில் கிடைக்கக்கூடிய கோழிகள், குஞ்சுகள் முட்டைகள் விலை.

அடியிற்கண்ட அன்னிய நாட்டுக் கோழிகள் வைக்கப்பட்டிருக்கின்றன—

(1) வெள்ளை லெக்ஹாரன் 3. லைட்ஸஸெக்ஸ்.

(2) ரோட் ஐலண்டு சிவப்பு 4. கருப்பு மைனுர்கா.

நாட்டு தினுசுகள்.—சிட்டகாங், தலைச்சேரி.

முட்டைகள், குஞ்சுகள், கோழிகள் அடியிற்கண்ட விலைக்கு விற்கப் படும்.—

	ரூ.	அ.	பை.	
அடைவைப்பதற்கு முட்டைகள்	2	0	0	டஜன் 1-க்கு.
ஷை	0	3	0	1-க்கு.
ஷை	1	0	0	½ டஜனுக்கு.

சாப்பிடும் முட்டைகள் இடைபிரகாரம் தரம் பிரிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாய் "A" தரம் முட்டைகள் சற்றேறக்குறைய 2 அவுன்சும், "B" தரம் முட்டைகள் $1\frac{1}{2}$ முதல் 2 அவுன்சும், "C" தரம் முட்டைகள் $1\frac{1}{2}$ முதல் $1\frac{3}{4}$ அவுன்சும், "D" தரம் முட்டைகள் $1\frac{1}{2}$ அவுன்சுக்குக் கீழும் இடையுள்ளவையாயிருக்கும். இம்முட்டைகள் விற்கும் விலை பின் வருமாறு :—

	ரூ.	அ.	பை.	
"ஏ" தரம் முட்டைகள்	0	12	0	டஜன் 1-க்கு.
"பி" ஷை	0	8	0	ஷை
"ஸி" ஷை	0	6	0	ஷை
"டி" ஷை	0	4	0	ஷை

மேலே சொல்லப்பட்ட விலைகள் வளர்ப்பு ஸ்தலத்து விலைகள். வெளி யூர்களுக்கு முட்டைகள் அனுப்பப்படவேண்டுமானால் முதல் டஜனுக்கு அணு பத்தும் அதே பொட்டணத்தில் கட்டியனுப்பப்படத்தக்க இதர டஜன் ஒவ்வொன்றுக்கும் உபரி அணு ஆறும் மதராஸ் பிரசிடென்ஸி யிலுள்ள எல்லா ஸ்டேஷன்களுக்கும் அனுப்புவதற்கு ஆகும் பாக்கிங் ரெயில் சார்ஜ் வகைக்கு வசூலிக்கப்படும்.

குஞ்சுகளும் கோழிகளும்.

குஞ்சுகள் ஒரு நாள் வயதுள்ளவை	3 முதல் 4 அணு ஒவ்வொன்றுக்கு.
குஞ்சுகள் ஒரு வாரம் வயதுள்ளவை	6 முதல் 8 அணு.
குஞ்சுகள் ஒரு மாதம் வயதுள்ளவை	ரூ. 1 முதல் ரூ. 1–4–0.
குஞ்சுகள் இரண்டு மாதம் வயதுள்ளவை	ரூ. 1–4–0 முதல் 1–8–0.
குஞ்சுகள் மூன்று மாதம் வயதுள்ளவை	ரூ. 1–8–0 முதல் 2–0–0.
பெட்டை நான்கு முதல் 6 மாத வயதுள்ளவை	ரூ. 2 முதல் 4 வரை.
பெட்டை 6 முதல் 8 மாத வயதுள்ளவை	ரூ. 4 முதல் 5 வரை.
பெட்டை 8 மாதத்திற்கு மேல் வயதுள்ளவை	ரூ. 6 முதல் 8 வரை.
சேவல் 4 முதல் 6 மாத வயதுள்ளவை	ரூ. 2 முதல் 3 வரை.
சேவல் 6 முதல் 8 மாத வயதுள்ளவை	ரூ. 3 முதல் 5 வரை.
சேவல் 8 மாதத்திற்கு மேல் வயதுள்ளவை	ரூ. 6 முதல் 8 வரை.

மேற்கண்ட விலைகள் வளர்ப்புஸ்தல விகிதங்கள். கோழிகள் அனுப்ப ரயில் சிலவும் கூடை முதலிய சாமான்கள் சிலவும் அனுப்பவேண்டிய உருப்படிகளின் எண்ணிக்கையையும் தூரத்தையும் பொருத்திருக்கும்.

ஆர்டர் செய்த வகைகளின் கிரயம் முழுமையும் ஷை வகைக்கு ஏற் படும் சிலவு துகையும் முன் பணமாக அனுப்பாவிடில் ஆர்டர் கவனிக்கப் படமாட்டாது.

இது விஷயமாய், ஹோசூர் கால் நடைப்பண்ணை போஸ்டு, கால் நடை ஆராய்ச்சிப்பண்ணை சூப்பரின்டென்டெண்டுக்கு எழுதுங்கள்.

பன்றிகள்.—"பாக்ஷயர்" எனப்படும் சீமை ஜாதிப் பன்றிகள் வளர்க் கப்படுகின்றன. பால் பண்ணையிலும் காய்கறி தோட்டத்திலும் ஏற்படும் கழிவு சாமான்களை உபயோகித்தல் பொருட்டும், வளர்க்கவேண்டி கேட்ப வர்களுக்கு உயர்தர ஜாதிப்பன்றிகள் கொடுப்பதற்கும் இவை தருவிக்கப் பட்டன. பொலிவிற்கு நல்ல ஆண் பன்றிகளும் இதர பன்றிகள் கொன்று தின்பதற்கும் கிடைக்கும்.

சாகுபடி பூமியும் மேய்ச்சல் பூமியும்.—கால்நடை இனங்களின் மேய்ச் சலுக்கென ஏராளமான விஸ்தீர்ணம் பூமி இருக்கிறது. ஆனால், மேய்ச்சல் பூமியுடன் சாகுபடி பூமியும் அவசியமுள்ளது. இனியாபுல், "ரோட்ஸ்" புல் முதலியவையும், மக்காச்சோளம், சோளம், குதிரைமசாலை முதலிய தீவனப்பயிர்களும் வருஷ முழுவதும் சாகுபடியிலிருந்து வருகின்றன. தீவனப்பயிர்கள் ஏராளமாய் விளைவதை வெட்டிக் குழியில் பக்குவப்படுத்தி "ஸைலேஜ்" ஆகச் செய்து தீவனம் குறைவாயுள்ள காலங்களில் உப யோகப்படுகிறது.

பொது ஜனங்கள் யாவரும் எக்காலத்திலும் பண்ணையை வந்து பார்த் துப்போகலாம். அச்சமயங்களின் பண்ணையில் கால் நடை அபிவிருத்தி விஷயமாய் செய்யப்படும் விஷயங்களும் தீவனப் பயிர்கள் பயிர் செய்து பக்குவப்படுத்துவதும் இன்னும் இதர பண்ணை வேலைகளும் மேற்படியார் தெரிந்துகொள்ளவேண்டிய வசதிகள் கொடுக்கப்படும்.

நஞ்சநாடு வேளாண்மை ஆராய்ச்சிசாலை.

1. இவ்வாராய்ச்சி சாலை நஞ்சநாட்டில் 1917-ம் ஆண்டில் அமைக் கப்பட்டது. இது நஞ்சநாடு கிராமத்தினின்று அரை மைல் தூரமும் கவர் னர் சோலை ரோட்டில் உதகமண்டலத்தினின்று $10\frac{1}{2}$ மைல் தூரமுள்ளது. சாலையின் பரப்பு 161·31 ஏக்கர். அதில் 42·83 ஏக்கரே இப்பொழுது சாகு படியிலிருக்கிறது. மண்ணானது நீலகிரியில் மற்ற இடங்களிலிருப்பது போல மிகவும் வளமற்றது. இடம் பூராவும் புஞ்சையே. பண்ணையைப் பார்க்க வருபவர்களுடையவும் மேல் உத்தியோகஸ்தர்களுடையவும் சௌக ரியத்திற்காக ஒரு முசாபரி பங்களாவுமிருக்கிறது.

2. பண்ணையில் பரிசோதனை செய்யப்படும் விஷயங்கள் :—

(1) பலவகை உருளைக்கிழங்கை பரிசோதனை செய்து அவைகளுள் எவை நீலகிரி ஸ்திதிக்குத் தகுதியானவை, நோயால் பீடிக்கப்படாதவை, என் பதை ஆராய்தல்.

(2) உருளைக்கிழங்கு தினுசுகளைக் கலப்பில்லாமல் வைத்தல்.

(3) பலவகைக் கலப்பு எருச்சத்துகளைப் போட்டுப் பரிசோதித்தல்.

(4) மேலான முறையில் சாகுபடி செய்வது எப்படி என்பதையும் தக்க மாற்றுப் பயிர்கள் எவை என்பதையும் கண்டு பிடித்தல்.

(5) நல்ல பயன் கிடைக்குமாறு விதைக்கிழங்குகளுக்கு பக்குவமிடுதல்.

3. பண்ணையில் இன்னின்னவை எவ்வப்பொழுது பார்க்கலாமென்பது.

டிசம்பர் - ஜனவரி மாதங்கள்.—இரண்டாவது போக உருளைக்கிழங்கு அறுவடை, சாபூல், விக்டரி கலப்பைகளால் ஆழ உழுதல்.

பிப்ரவரி - மார்ச்சு.—விக்டரி கலப்பையால் உழுதல். கட்டி உடைக்கும் கருவியால் கட்டிகளை உடைத்தல், களைகளைப் போக்க எச். எம். குண்டகா வால் பரம்படித்தல், தோட்டக்கால் உருளைக்கிழங்கு நடவு.

மார்ச்சு - ஏப்ரல்.—இரட்டை இறகு இரும்பு கலப்பையால் பாரும் மஞ்சியும் போடுதல், உரங்களைக் கலந்து பார்களில் போடுதல், பருவப் பயிர் உருளைக் கிழங்கைப் போடுதல், விதைக்காகவும் பசுந்தாளுக்காகவும், சாமை, லூபின் (Lupin) முதலிய விதைகளைச் சால் விதைப்புச் கலப் பைகளால் விதைத்தல்.

மே - ஜூன்.—பருவப் பயிர் உருளைக்கிழங்குப் பயிர் நன்றாய் வளர்ந் திருத்தல் ; ஒற்றை மாட்டால் வேலை செய்யப்படும் களைவெட்டுக் கருவியால் களை வெட்டுதல், இரட்டைச் சிறகு இரும்புக் கலப்பைகளால் மண்ணணைத் தல், எச். எம். குண்டகவால் தானியப் பயிருகளில் பயிருழவு.

ஜூலை.—விக்டரி கலப்பையைக்கொண்டு பசுந்தாள் பயிர்களை மடக்கி உழுதல், இரண்டாம்போக உருளைக்கிழங்குக்காக நிலத்தை தயாரித்தல்.

ஆகஸ்ட் - செப்டம்பர்.—உருளைக் கிழங்கு வெட்டியால் பருவப் பயிர் உருளைக் கிழங்கை வெட்டியெடுத்தல், மாசூலை சாப்பாடு, விதை இரண்டாம் போக சாகுபடிக்கு வேண்டியவைகளாகப் பலவிதமாகப் பிரித்தெடுத்தல். விதைக்காகப் போட்டிருக்கும் லூபின் பயிர் நன்ருய் வளர்ந்திருத்தல்.

அக்டோபர் - செப்டம்பர்.—சாமை, லூபின் இரண்டாம்போக உருளைக் கிழங்கு முதலியவைகள் பயிராயிருத்தல்.

நவம்பர் - டிசம்பர்.—சாமை, லூபின் முதலியவைகள் அறுப்பும் அடிப்பும்.

எக்காலத்திலும் பார்க்கக்கூடியது.—சிறந்த தொழு எருவைப் பள்ளத் தொழுவிலும், குழிகளிலும் சேகரித்தல், சீராய் மாடுகளுக்குத் தீனி போடுதல், சிறந்த கலப்பைகள், பயிரடிக்கும் கருவிகள், அறுப்புக்கருவிகள், சால்விதைப்புக் கலப்பைகள் முதலியன: நிலத்தின் மேடு பள்ளத்துக்குத் தக்கபடி நிலத்தைப் பிரித்து வரப்பு போட்டிருத்தல், விதை உருளைக்கிழங்கை பரண்களில் போட்டுக் கெடாமல் வைத்துக்கொண்டிருத்தல், கிகுயூபுல் மேய்ச்சல் தரை.

4 நீலகிரி கனிவர்க்க சோதனை தோட்டங்கள்.

நீலகிரியில் சென்னை விவசாய டிபார்ட்மெண்டாரால் மூன்று சோதனைப் பழத் தோட்டங்கள் வைத்து ஆதரிக்கப்பட்டு வருகின்றன. ஒன்று குன்னூரிலுள்ள கனிவர்க்க சாஸ்திர தோட்டமும் மற்றவை பர்லியாரிலும் கல்லாரிலுமுள்ள கனிவர்க்கச் சோதனைத் தோட்டங்களாவன.

2. குன்னூரிலுள்ள பழவர்க்க சாஸ்திரத் தோட்டம் "ஸிம்ஸ்" பார்க் என்கிற சிங்கார வனத்திற்கு அடுத்துள்ளது. அது சமுத்திர மட்டத்திற்கு மேல் 5,800 அடி உயரத்திலுள்ளது. அதின் விஸ்தீர்ணம் 12 ஏகரா. இது 1920-ம் வருஷம் துவக்கப்பட்டு தற்சமயம், முக்காலும் **(Temperate and Sub-tropical)** சமசீதோஷ்ண ப்ரதேசக் கனிவர்க்கங்களாகிய ஆப்பில், பேர், ப்ளம், பீச், க்வின்ஸ், பெர்சிம்மன், கொய்யா, செரிமாயர், லோக்வாட், அத்தி, கிச்சிலி, திராக்ஷை, நார்த்தை, எலுமிச்சம் முதலியன பயிரிடப்பட்டு வருகின்றன.

இந்த ஸ்தாபனத்தின் முக்ய நோக்கங்கள் என்னவென்ருல் :—

(1) தென்னிந்திய மலைப் பிரதேசங்களில் செழிக்கக்கூடிய பற்பல ஜாதி கனிவர்க்க மரங்களை வைத்துப் பயிரிடுவது.

(2) ஒட்டுக் கட்டுவதற்கு தகுதியான அனேக வித கொட்டைச் செடிகளை ஆராய்ந்தறிந்து அவற்றுள் தகுதியானவற்றை விருத்தி செய்வது.

(3) அனேக வித கனிவர்க்கங்களையும், அவற்றுள் பற்பல ஜாதிகளையும், போட்டுப் பார்த்து நமது பிரதேசங்களுக்குத் தகுதியானவற்றை விருத்திசெய்து விற்பனைக்குத் தயார் செய்வது.

(4) கசி பண்ணுவது **(Pruning)**, உரமிடுதல், ஒட்டுக்கட்டுதல், இரு ஜாதி குணங்களை ஒன்றில் பிணைத்தல், முதலிய செய்நேர்த்தி வேலைகளில் ஆராய்ச்சி செய்வது. இதுவரை ஜப்பானிய "ப்ளம்" கனிகளிலிருந்து பத்து ஜாதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் மிகவும் சிலாக்யமானவை குணதிசய வரிசைக் கிரமமாய் இங்கு விவரிக்கப்பட்டன :— ஹேல், ரூபியோ, ஷீரோ, ஸாட்ஸுமா, கெல்ஸி இவற்றுள் ஹேல், ரூபியோ, ஷீரோ, ஆகிய ஜாதிகள் கோடையின் மத்தியில் அதாவது மேமீ இறுதியில், மலைகளுக்கு ஏராளமாய்ப் பிரமுகர்கள் வசந்த கால சுகவாஸம் செய்ய வருங்கால் பழுக்கின்றனவாகையால் அவற்றின் கிராக்கி அதிகரித்து நல்ல விலைக்கு விற்கப்படும். "ரூபியோ" என்னும் ஜாதி, கனி ரஸப் பாகுகள் செய்வதற்கு வெகு சாதகமானது. "ஷீரோ" ஜாதி, ஐரோப்பியர் முக்ய சாப்பாட்டிற்கு பின்னர் உபயோகிப்பதற்கும் மற்றும் பிரபல தனிகர்கள் வழங்கும் விருந்துகளில் சாப்பிடுவதற்கும் ஓர் இனிமையான கனியாகும். "ஹேல்" ஜாதி கனி ரஸப்பாகுகளுக்கும் விருந்துண்ணலுக்கும் லாயக்கானது.

ஆப்பில்களில் சுமார் முப்பது ஜாதிகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் பழத்தின் குணாதிசயங்களில் சிறந்தவையும், செம்மையாய் காய்ப்பதுமாகிய ஜாதிகள் "ரோம் பியூடி," "ஐரிஷ் பீச்," "விண்டர்ஸ்டின்", ஆகியவை.

ஜப்பானிய பர்ஸிம்மன் மரங்களும் நன்ருய் காய்த்து வருகின்றன. அதன் பழங்கள், விருந்து, சிற்றுண்டி முதலியவற்றிற்கு அதிகம் கோரப்பட்டு வருகின்றன. ஆனால் தற்சமயம் இக்கனிவர்க்கம் உள்ளூரில் விருத்தி செய்யப்படுவதற்குத் தேவையான கொட்டை செடிகள் கிடைப்பதில்லை.

பற்பல ஜாதி "ப்ளம்" செடிகளும், அந்த ஸ்தலத்திலேயே ஏராளமாய் கிடைக்கக்கூடிய "பீச்" கொட்டைச் செடிகளில் அரும்புகளை ஒட்டு கட்டி விருத்தி செய்யப்படுகின்றன. "ஆப்பில்" ஜாதிகளை பழைய பேரிக்காய்த் தோட்டங்களில் உண்டாகும் கிளை நாற்றுகளில் ஒட்டுக்கட்டி உற்பத்தி செய்யப்படுகின்றன. "பேர்ஸ்" ஒட்டு கட்டுவதற்குச் சாதாரணமாக விளையும் "சீனுபேர்" கிளைகள் உதவுகின்றன. இதன் கிளைகள் சுலபமாய் வேர் பிடித்துவருவதால் அது ஒரு சிலாக்கியமான செடியாகிறது.

கீழ்கண்ட சில முக்ய கனிவர்க்கங்களின் செடிகள் குறிப்பிட்டிருக்கின்ற விலைக்கு கிடைக்கும் :—

	ரூ.	அ.	பை.	
"ஆரஞ்சி", (ஒட்டு) ஒன்றுக்கு	2	0	0	நவம்பர் முதல் பிப்ரவரி வரை கிடைக்கும்.
பலஜாதி "ப்ளம்", ஒன்றுக்கு	1	0	0	
"ஆப்பீல்" மூன்று ஜாதிகளும் ஒவ்வொன்றிற்கும்	1	8	0	
"பேர்" சிரேஷ்டமான ஆறு ஜாதிகள், ஒவ்வொன்றும்.	1	8	0	
"பீச்" மிகவும் சிறந்த இரண்டு ஜாதிகள், ஒவ்வொவன்றும்.	1	8	0	
"செரிமாயர்" (நாற்றுகள்) ஒவ்வொன்று ..	0	4	0	வருஷம் பூரா எப்போதும் கிடைக்கும்.

குன்னூர் கனிவர்க்க ஆராய்ச்சி ஸ்தலத்தை பார்வையிட விரும்புவோர் கூடுமானவரையில் சில நாட்கள் முந்தியே, உதவிப் பண்ணை மானேஜருக்குத் தங்களது விருப்பத்தை அறிவிப்பது நலம். அப்படி செய்வதனுல் தோட்டத்தை சுற்றிக்காட்டி வர அவர் ஏற்பாடுகள் செய்வார். கனிவர்க்கங்கள் பயிரிடுவதில் சிரத்தையுள்ளவர் குன்னூருக்கு போவதாயிருந்தால் அவ்விடம் சர்க்கார் பழத் தோட்டத்தை அவசியம் பார்வையிடுவது நலம். அப்படிப் பார்வையிடுவதற்கு மே, ஜூன் மாதங்கள் சிறந்த காலம். அதே காலத்தில் தோட்டவாயிலில் தயாரித்துள்ள கண்காக்ஷி மண்டபத்தையும் அவசியம் பார்வையிட்டுப் பழச்செடிகளின் சாதாரண நோய் நொடிகளும் அவற்றின் நிவாரணமும் விளக்கிக் காட்டும் பற்பல காக்ஷி சாமான்களையும் சித்திர படங்களையும் கண்டு தேவையான விஷயம் தெரிந்துகொள்வதே நலம். சந்தேகங்கள் உண்டானுல் அவற்றை விளக்க அவ்விடத்திய உத்தியோகஸ்தர் சந்தோஷத்துடன் அச்சந்தேகத்தை தீர்க்க பதிலளிப்பார். பழங்கள், பழச்செடிகள், ஸ்வாதீனப்படுத்தப்பட்ட பிரதேச புஷ்ப விதைகள் முதலியவைகள் விற்கப்படும். வேண்டுவோர் அவ்விட உத்தியோகஸ்தரிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம். விவசாய சம்பந்தமான சர்க்கார் பிரசுரங்களும், விலைக்கு கிடைக்கும். டிபார்ட்மெண்ட் துண்டு பத்திரிகைகள் மட்டும் இலவசமாய் பெற்றுக்கொள்ளலாம்.

3. **"பர்லியார்" கனி ஆராய்ச்சி ஸ்தலம்.**—குன்னூர் காட் ரஸ்தாவில் மேட்டுபாளயம்-குன்னூர் ரஸ்தாவிற்கருகாமையில் இருக்கின்றது. அதன் உச்சம் கடல் மட்டத்திற்கு மேல் 2,500 அடிகள் உள்ளது. இந்த இடம் உஷ்ணப்பிரதேசப் பழவர்க்கங்களும் வாசனைச் சரக்குகளும் விருத்தியாவதற்கு மிகவும் தகுந்தது. தற்சமயம் இவ்விடம் "மாங்கோஷ்டின்," ஜாதிக்காய் கிராம்பு, லவங்கம், மா, வாழை, கிச்சிலி, நார்த்தை, "லாங்சாட் லிச்சி," வெள்ளை மிளகு நன்ருய் பயிராகின்றன. "பாரா ரப்பர்" மரமும் செழிப்பாய் வளர்ந்து வருகின்றது. சமீபத்திலுள்ள ஒரு சிறு தோட்டத்தில் இந்தியாவிலேயே வயது முதிர்ந்த மரங்களில் ஒன்று 1882-வது வருஷம் நடப்பட்டதை இன்றும் காணலாம்.

வெகுகாலமாய் "மாங்கோஷ்டின்" செடிகள் உற்பத்தி செய்வது வெகு கஷ்டமாயிருந்தது. அதற்கு முக்கிய காரணம் செடிகளின் நீண்ட ஆணிவேர் வளரும்பொழுது பாரை அல்லது கடினமான பாகம் குறுக்கிட்டால் செடிகள் பட்டுப்போயின என்பதாம். பூமியை ஆழமாய் வெட்டி அல்லது உழுது பண்படுத்தி, கன்றுகளை நீண்ட மூங்கில் குழாய் அல்லது பாய்க்கூடைகளின் நடுவில் நட்டுப் புதைத்தால், மேலே சொன்ன இடையூறுகளால் செடிகள் பட்டுப்போகாமல் வளர்கின்றன. இப்படி இடையூறுகளை நீக்கி சமீப காலத்தில் திரளான நாற்றுகள் கொட்டைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டன. "மாங்கோஷ்டின்" பழங்கள் அந்தஸ்துள்ளவர் பலராலும் அதிகமாய் வாங்கி உபயோகிக்கப்படுகிறது. டஜன் 1-க்கு ரூ. 2 வீதம் சுலபமாய் விலை போகும். பலனுக்கு வந்த மரம் 1-க்கு சாதாரணமாய் ரூ. 50 மதிப்புள்ள பழங்கள் வருஷந்தோறும் கிடைக்கக்கூடும். காய்ப்பும் துடர்ந்து அநேக வருஷங்களுக்கு நீடித்திருக்கும். ஆனால் மரங்கள் காய்க்க ஆரம்பமாவதற்கு 10 அல்லது 15 வருஷங்கள் பிடிப்பது ஒரு இடையூறு எனினும் இந்த இனிமையான கனிகள் போடுவதால் தகுந்த லாபம் கிடைக்கும் என்பதில் மட்டும் சந்தேகமில்லை.

"கல்லார்" கனிவர்க்கப் பரிசோதனைத் தோட்டம்.—இது நீலகிரிக்குப்போகும் பழைய மலை ரஸ்தாவில், அது புதியமலை ரஸ்தாவைக் கூடிப் பிரிவதினின்று அரை மையில் தூரத்திலுள்ளது. இது குன்னூர் காட்டின் அடிவாரம் மேட்டுப்பாளையத்திலிருந்து $5\frac{1}{2}$ மையில் தூரத்தில் இருக்கிறது.

பழைய ரஸ்தாவும், புதியதும் கூடுமிடத்திலும், பழய ரஸ்தாவிலிருந்து தோட்டத்திற்கு செல்லும் கால் பாதை பிரியுமிடத்திலும் நோட்டீஸ் போர்டுகள் காணலாம். இவற்றின் உதவியால் தோட்டத்திற்கு செல்லுவதில் யாதொரு கஷ்டமும் உண்டாகாது. ஆனால் ஒரு வாரத்திற்கு குறையாமல் அவகாசம் கொடுத்து விண்ணப்பம் செய்தால் பழத் தோட்டங்களுக்கு, அதிகாரியான க்யூரேடர் என்பவர், தோட்டத்தைப் பார்க்க விரும்பும் பிரமுகர்களை சந்தித்து தோட்டத்தைக் காட்டி வரத் தகுந்த ஏற்பாடுகள் செய்வார்.

இந்த "கல்லார்" பழத்தோட்டத்தின் உச்சம், சமுத்திர மட்டத்திற்கு மேல் 1,400 அடி. இஃது 1901-ம் வருஷம் மலேயாவில் மிகவும் கொண்டாடப்படுகிற "ட்யூரியன்" என்னும் கனியின் மரங்களைப்பற்றிய பரிசோதனைகள் செய்வதினிமித்தம் துவக்கப்பட்டது. ஆனால் அப்பொழுது ரப்பர் உண்டாகும் மரங்களைப்பற்றி ஊக்கமதிகரித்ததால் தோட்டம் முழுவதும், பாரா, சியாரா, காஸ்டிலோவா, எனப்படும் ஜாதி ரப்பர் மரங்கள் நடப்பட்டன. அவை விதை சேகரிப்பதற்கும், ரப்பர் எடுக்கும் முறைகளில் ஆராய்ச்சி செய்வதற்கும் உதவியன. பிறகு, சில வருஷங்களுக்கு முன் ரப்பர் மரங்கள் அழிபட்டு, கனி வர்க்கங்கள் போடப்பட்டன. அவற்றுள் அநேகம் தற்சமயம் காய்க்க ஆரம்பித்துவிட்டன. உதாரணமாக, "ஸபோடில்லாவில்" மிகவும் பெரிய ஜாதி ஒன்று காலம் தவராமல் காய்த்து அவை விருத்தி செய்யப்பட்டு, விற்பனையாகி வருகின்றன.

சோதனை செய்யப்பட்டுவரும் கனிவர்க்கங்களில் உள்ளவை பின்வருவன :—

"மாங்கோஷ்டின்" ஸப்போடில்லா, ஆரஞ்சு, அவகொடா, பப்பாளி, மா, லிச்சி, ராம்பூடான், சீதா, எலுமிச்சை (இவற்றில் பற்பல ஜாதிகள்). அன்னாசிப் பழமும் ஏராளமாய்ப் பயிரிடப்படுகின்றது. பழ வகை மரங்கள் தவிர லாபகரமான மருந்துச் செடிகளும், நார் உற்பத்தியாகும் செடிகளும் கூட பயிரிடப்பட்டு வருகின்றன.

தென்னிந்தியாவில் சுமார் அரை நூற்றாண்டுக்கு மேல் பிரயாசப்பட்டும் சரிவர பயிராகாத "ஐபிகாகவானா" எனப்படும் கொயினா ஜாதியைச் சேர்ந்த வாந்தி மருந்து உற்பத்தியாகும் செடி முக்யமாய் இங்கே நன்கு விளைந்து வருகிறது. மேற்கூறிய பயிர்களில்லாமல் பற்பல சிங்கார நந்தவன செடிகளும் பயிரிடப்படுகின்றன. கம்பீர், டையோஸ்பீராஸ் மொன்லை மரங்களும் பயிராக்கப்படுகின்றன. எல்லாமாக சேர்ந்து தோட்டம் மிகவும் சிறந்து விளங்குவதை யாவரும் கண்டு அவசியம் சந்தோஷம் கொள்ள

வேண்டும். "கல்லாரிலும்" "பர்லியாரிலும்" ஜாதிக்காய், கிராம்பு, லவங்கம், வெள்ளைமிளகு, லாங்ஸாட், சப்போடா, மா, சீதாப்பழம், அன்னாசிப்பழம், லிச்சி, ஆரஞ்சி, பொம்ளிமாஸ், மாங்கோஸ்டின், கொய்யா முதலிய கனிகளின் செடிகள் 1-க்கு ரூ. 0–4–0 முதல் ரூ. 2 வரை விற்கப்படும்.

நீலகிரி கனிவர்க்கத் தோட்டங்களில் கிடைக்கக்கூடும் செடிகளின் விலை ஜாப்தா தேவையானால் உதகமண்டலத்திலுள்ள தோட்டங்கள் அதிகாரியான "க்யூரேட்டர்" எனப்படும் ஆபீசருக்கு ரூ. 0–4–0 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

பி. ஏ. நாதன்,

அபீஷியேடிங் க்யூரேட்டர், சர்க்கார் தோட்டம், உதகமண்டலம்.

5. உமது தாலூகா விவசாய டிமான்ஸ்டிரேடருடைய உதவியைத் தேடி லாபமடையும்.

கோயமுத்தூர் விவசாய காலேஜில் சாஸ்திரீயமான விவசாயப்படிப்பில் தேர்ச்சியடைந்த ஒரு உத்தியோகஸ்தரை நம்முடைய கவர்ண்மெண்டார் அதிகச் சிலவில் நமக்கு நியமித்துக் கொடுத்திருக்கிறார்கள். யூனிவர்ஸிடியில் பட்டப் பரீக்ஷை கொடுக்க லாயக்கான சிறுவர்களுக்கு இந்த விவசாய காலேஜில் கிருஷி சாஸ்திரமும் பயிர்த்தொழில் செவ்வனே நடத்தப்படவேண்டிய முறையும் அப்படிக்கு அனுகுணமான இதர சாஸ்திர ஞானமும் நன்றாய்க் கற்றுக்கொடுக்கப்படுகிறது. பயிர்த்தொழில் சம்பந்தமான எல்லா வேலைகளும் நேரில் தானாக செய்து பயில்வதுடன் தத்ஸம்பந்தமான சாஸ்திராந்தங்களில் முழு வித்பத்தியும் இம்மாணவர்கள் அடைகிறார்கள். விவசாயத் தொழில் விஷயமான கிரியாம்சங்களில் வித்பன்னர்களாக ஆவதுமன்றி, கூலியாட்களைப் பக்ஷமோடு நடத்தவும் சரிவர வேலை வாங்கவும், பலவேறு உழவேத்தனங்கள், கருவிகள், யந்திரங்கள் இவைகளை லேசாய்க் கையாடவும், பயிர்களுக்குக் காணும் நோய் நொடிகள் புழு பூச்சி பாதைகள் இவைகளைத்துலைக்கும் மார்க்கங்களைச் செய்யவும், அவ்வப்பிரதேச மண்பாடு, சீதோஷ்ண நிலைகளுக்கேற்ற பயிர்களைக் கண்டு விளையவைக்க வேண்டிய வழிகள் இவற்றை குடித்தனக்காரர்களுக்குத் தெளிவாய் போதிக்க லாயக்கானவர்களாயிருப்பதால், சுருக்கிச் சொல்லுமிடத்து, சம்சாரிகளுக்கு இந்த விவசாய இலாகா உத்தியோகஸ்தர் அத்தியந்த ஸ்நேகிதர் ஆகிறார்.

அந்தந்த ஸ்தலங்களுக்கேற்ற விவசாய கருவிகளும் இதர சாமான்களும் பொது ஜனங்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும் ஒரு காக்ஷிசாலையும் அவருடைய கார்யாலயத்தில் உண்டு. அப்பிராந்தியத்து சம்சாரிகளுக்கு விலைக்குக் கொடுக்க தேசத்திற்கேற்ற நல்லமாசூல் தரத்தக்க சுத்தமான விதை தினுசுகளும் இங்கே கிடைக்கும்.

பயிர்த்தொழில் சம்பந்தமான சகல பிரச்னைகளுக்கும் இலவசமாயும் மிகுந்த உத்ஸாகத்துடனும் ஸமாதானம் சொல்லப்படும். முன்கூட்டியே ஏற்பாடு செய்துகொண்டால் ஸ்தல விவசாய உத்தியோகஸ்தர்கள் ஸ்தல சோதனை செய்து பலவேறான பயிர்பச்சை, விருக்ஷாதிகளுக்கு அப்பூமி லாயக்கானதா அயோக்யமானதா வென்று கண்டுபிடித்துச் சொல்வார்.

இந்த விவசாய உத்தியோகஸ்தர் உங்கள் பிரதேசத்து கால் நடைகளின் அபிவிர்த்தியைப்பற்றி ஸதாகாலமும் கவனித்துக்கொண்டே இருக்கிறார். உங்களுடைய கிராமத்தின் பசுமாடுகளின் விர்த்திக்காக தக்க ஒரு பொலிகாளையை வாங்கித் தரவேண்டும் என்று அவருக்குத் தெரியப்படுத்துங்கள். அப்படிப்பட்ட காளை ஒன்றை நீங்கள் பெறுவதற்கான மார்க்கத்தை அவர் உங்களுக்கு நிச்சயமாய்ச் சொல்லி ஸகாயம் செய்வார்.

உங்களுடைய பசுமாடுகளின்மேல், வயது வராதகாளையான காளைக் கன்றுகள் விழுந்து ஷி பசுக்களை சினையாக்க வொட்டாமல் தடுக்கவேண்டியது அவசியம். இதற்காக இப்பிரயோஜனமற்ற காளைக்கன்றுகளை காயடுத்துவிடவேண்டும்—ஸ்தல மிருக சிகித்ஸை வைத்தியருக்குத் தெரியப்படுத்தி உங்கள் கிராமத்தில் தக்க எண்ணம் காளை கன்றுகள் காயெடுக்கத் தயார

யிருக்கின்றனவென்று கண்டு, உங்கள் ஊரிலுள்ள பசுமாடுகள் நிரந்தரமாக வெகுகாலம் சிலாக்கியமடையும் வழியாக, இக்காளைக் கன்றுகளை விதை யெடுத்துப் போடவேண்டிய வேலையையும் இவ்விவசாய உத்தியோகஸ்தர் செய்வார்.

தக்க துறைகளில் உங்களுடைய தான்ய முதலிய மாசூல்களை சரியான விலைக்கு விற்று லாபமடையும் பொருட்டு நீங்கள் ஒருங்கு கூடி ஒரு ஐக்கிய சங்கம் ஸ்தாபித்துக்கொள்ளவேண்டியது. இச்சங்கத்தின் சார்பாக சங்க அங்கத்தினர்கள் தங்களுக்கு வேண்டிய உழவு எத்தனங்கள், விதை, எரு முதலியவையும், இதையொட்டி ஐக்கிய நாணய சங்கமும் தொடுத்து, அதன்மூலமாய் லெகுவிலும் சலிஷிலும் பணம் வேண்டும்போது வாங்கிக் கொள்ளவும் இயலும். "ஒன்றுபட்டால் பலம், துண்டுபட்டால் முறிவு" என்பது உங்கள் எல்லாருக்கும் நன்கு தெரியும். இந்தப் பழமொழியின் ஸாராம்சத்தை நன்குணர்ந்து அதன்படி நடவுங்கள். உங்கள் கிராம வாழ்வை உயர்த்துங்கள். ஏற்கனவே இப்பேற்பட்ட சங்கம் ஒன்று உம்முடைய கிராமத்தில் இருந்தால் அதைப்பலப்படுத்துங்கள்: இல்லையென்றேல், தக்ஷணமே ஒன்றைக்கூட்டி ஆரம்பியுங்கள். இந்த விஷயமாகவும் உமது தாலூகா விவசாய டிமான்ஸ்டிரேடர் உமது பிராந்தியத்து ஐக்கிய இலாகா இன்ஸ்பெக்டரைக்கண்டு பேசி உங்களை அவர் வந்து பார்த்து மேற்சொன்ன மாதிரியான சங்கஸ்தாபனம் செய்யவேண்டிய கார்யத்தில் உங்களுக்கு உதவிபுரியும் வழியையும் செய்து வைப்பார். காலதாமதம் அபாயகரமானது. ஆகையால் கார்யாம்சத்தில் கருத்துடனிருந்து உடனே ஆரம்பியுங்கள்.

உங்கள் பூமியின் ஜாமீன் ஈட்டின்மேல், உழவு மாடு வாங்கவும், கவலை மாடுகள் வாங்கவும், கிணறு வெட்டச்சிலவுக்காகவும், பொதுவாக உங்கள் பண்ணைத் தொழிலை அபிவிருத்தி செய்யவும் கவர்ன்மெண்டார் ரெவினியூ இலாகாதாரால் உங்களுக்குக் கடன் கொடுக்க ஸித்தமாய் இருக்கிறார்கள். உங்கள் தாலூகா தாசில்தாருக்கு விண்ணப்பம் செய்யுங்கள். உங்களுக்கு தேவையானதைப்பற்றி தாராளமாய் உங்கள் தாலூகா விவசாய டிமான்ஸ்டிரேடருக்குத் தெரியப்படுத்துங்கள். நேரில் அவர் வந்து உங்கள் பூமியை சுற்றிப்பார்த்தும் உங்களுடன் கலந்து பேசியும் உங்களுடைய தேவையை நன்றுயறிந்து கொண்டு, தாசில்தாருக்காவது ரெவினியு இன்ஸ்பெக்டருக்காவது உங்களுடைய அவசியத்தைப்பற்றி தெரியப்படுத்தி உங்களுக்கு சகாயம் செய்யவேண்டி சிபார்சு செய்வார்.

எது எப்படி ஆயினும் ஆகுக, உங்கள் பண்ணைத்தொழிலை லேசாய் நினைத்து மோசம் போகாதீர்கள். சரிவர பூமிகளை எருவிட்டு வளத்தைப் போக வொட்டாமல் காப்பதைவிட்டு, திரும்பத் திரும்ப யிரேற்றுவதால் உங்கள் பூமி முழுதும் கெட்டுப்போகும். உம்முடன் போகாமல் இப்பாதகம் உம்முடைய வம்சாவளியையும் தாக்குவதனால் இந்தப் பாவம் உம்மையே சேரும். உங்கள் பூமிகளில் பசுந்தாள் உரப்பயிர்களை விளைய வைக்கவேண்டிய விஷயமாய் நமது கவர்ன்மெண்டார் செய்திருக்கிற அநேக சகாயங்களைக்கைகொண்டு முன்னேற்றமடையுங்கள். இவ்வுபாயத்தால் உங்கள் பூமிகளுக்கு அத்தியாவசியமான மக்கினதழைசத்தாகிற இந்திரிய வஸ்து சேர்க்கப்படுவதால் உங்கள் பூமிகளில் வளப்பம் அதிகரித்து நீங்கள் க்ஷேமமடைய ஹேது உண்டு. இது அதிக சிலவு பிடிப்பதல்ல, உழவு சிலவு மட்டில் ஏராளமான தழை அதே இடத்தில் இலகுவில் கிடைக்கிறது. நல்ல ரஸ்தாக்களில்லாத பாதைகளில் அதிக தூரம் மிகவும் பளுவான பாரத்தை இழுத்துச் செல்ல வேண்டிய சிலவும் கஷ்டமும் இல்லை. உம்முடைய காட்டுக்கும் பூமிக்கும் ஏற்ற பசுந்தாள் உரப்பயிர் விதைக்காக கொடுக்கும்படி உம்முடைய விவசாய டிமான்ஸ்டிரேரிடம் சென்று கேட்டுக்கொள்ளுங்கள்.

எஸ். நாராயணய்யா,
அபீஷியேடிங் விவசாய அஸிஸ்டெண்டு டைரெக்டர்,
திருநெல்வேலி.

6. சர்க்காரால் கொடுக்கப்படும் கடன்களும் இன்னும் மற்ற வசதிகளும்.

1883-ம் வருஷத்திய லாண்டு இம்புரூவ்மெண்டு லோன்ஸ் ஆக்டின்படியும் 1884-ம் வருஷத்திய அக்ரிகல்சரிஸ்டு லோன்ஸ் ஆக்டின்படிக்கும் உள்ள கீழ் கண்ட முக்கிய விதிகளை, ஷெ வசதிகள் இருப்பதை அறியாத சம்சாரிகளின் சுகத்திற்காக இத்துடன் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

விதிகள்.

I. நிலச்சொந்தக்காரர்களும், நிலத்தை கையாண்டு வருகிறவர்களுக்கும் கடன் கொடுக்கலாம்.

(a) **லாண்டு இம்புரூவ்மெண்டு லோன்ஸ் ஆக்ட்.**—விதைத் தவசம், எருதுகள், பொலிக்காளைகள் முதலியன வாங்கவும், புதிதாய் குடியேறப்பட்டு சாகுபடி செய்யப்பட்ட பிருந்தியங்களில் வீடுகள் கட்டவும், தீயினுலோ அல்லது வெள்ளத்தினுலோ சேதப்பட்ட மாட்டுக்கொட்டகைகளையும், வீடுகளையும் கட்டவும், இன்னும் மற்ற விவசாய சம்மந்தமான காரியங்களுக்கு அதாவது, பண்ணையிலுள்ளவும், மற்றும் வளர்த்து வரும் கால்நடைகளுக்கு பருத்திக்கொட்டை முதலிய தீவனப்பொருள்களும், எருவும் வாங்கவும், கரும்பு ஆலைகள் அல்லது வெல்லம் காய்ச்சும் அடுப்புக்கட்டுவதற்கு, தண்ணீர் இறைக்கும் சாதனங்கள் ஏற்படுத்தல் மற்றும் (சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டால்) குடிகளின் கஷ்ட நிவாரணைக்கு, அதாவது நிலச் சொந்தக்காரரும் நிலத்தை கையாண்டுவருபவரும் அடுத்துவரும் அறுவடை வரையில் சுதாரிக்கும் பொருட்டும் கீழ்கண்ட பழவர்க்கங்களை பயிர் செய்யவும் கடன்கள் கொடுக்கப்படும் :—

காப்பி, தென்னை, மாமரம், பெலா, ஆரஞ்சி, எலுமிச்சம், மிந்திரி, சீத்தாப்பழம், கொய்யா, மாதுளை, அத்தி, திராக்ஷை.

II. டிப்டி தாசில்தார் அவர்கள் கிரேட்டுக்குமேல் உள்ள ரிவினியு அதிகாரிகள் ஷெ கடன்கொடுக்க அதிகாரம் பெற்றவர். ஷெயார்களுக்கு மனு செய்துக்கொள்ளவேண்டியது.

III. வட்டி ரூ. 100-க்கு வருஷம் 1-க்கு 6 வீதம் அதாவது ரூபாய் 1-க்கு மாதம் 1-க்கு பை ஒன்று வீதம்). ஆனுல் கஷ்ட நிவர்த்தி கடன்களுக்கு இந்த விகிதம் அல்லாமல் ரூ, 100-க்கு வருஷம் 1-க்கு ரூ. 3 வீதம் கொடுக்கலாம். கலெக்டருக்கு அவர் உசிதம்போல் ஏழை என்று தெரிந்தவருக்கு வஜா செய்யலாம். உள்நாட்டு சர்க்காருக்கு கடன் கொடுப்பதில் ஸ்பெஷல் விஷயத்தில் வட்டியுடனே அல்லது வட்டியில்லாமலோ கொடுப்பதற்கு சுதந்தரம் உண்டு.

*   *   *   *

(x) ஷெ லோன் உதவியால் செய்த வேலை கடன் வாங்கினவரின் கைக்கு அடங்காத காரணத்தினுலும் பங்கப்பட்டதானுல் ரிவினியூ டிவிஷனல் ஆபிஸரும் ஜில்லா கலெக்டரும் போர்ட்டாருக்கும் பாக்கி பூராகவோ ஒரு பாகத்தையோ வஜா செய்ய அதிகாரமுண்டு.

(xi) கிராமங்களின் குளங்களை சரிபண்ணவோ அல்லது கரைபோடுவதற்கோ மற்றும் மேல்கண்டவாறு பொது அக்கரையுள்ள காரியங்களுக்கு கிராமத்தாருக்கு ஜாயிண்டு பொறுப்பிலோ அல்லது சமுதாயத்துக்கோ ஜாயிண்டு நபர் ஜாமீன்பேரில் அந்த ஜாயிண்டு கிராமத்தாரின் மொத்த கிஸ்தித் தொகையின் 5 மடங்கு தொகைக்கு மேல்படாமல் கலெக்டர் கொடுக்கலாம்.

*   *   *   *

(xxv) கடன் வாங்குபவரின் சௌகரியத்தை உத்தேசித்து கலெக்டர், தாசில்தார், சுய அதிகாரமுள்ள டிப்டி தாசில்தார் ஆகிய இவர்கள் தங்கள் முகாமின்போது அந்தந்த இடங்களில் கடன் துகையை பட்டுவாடா செய்லாம்.

(விவரமாக விதிகளைப் பார்க்கவேண்டுமானால் தக்காவி மானுயலைப் பார்க்கவும்.)

2. கலப்பை, மோட்டார் கலப்பைகள், குண்டகா, விதை கலப்பை, கரும்பாலை முதலிய இயந்திரங்கள் வாங்குவதற்காகக் கடன் கொடுக்க விவசாய டைரெக்டருக்கு அதிகாரமுண்டு.

3. இதே பிரகாரம் கைத்தொழில் டைரெக்டர் அவர்கள் தண்ணீர் இறவை என்ஜின் பம்பு வாங்குவதற்கு கடன் கொடுக்கலாம்.

4. கடன் வாங்குவது ஒரே புள்ளி ஒரே காலத்திலாவது பலதடவைகளிலாவது வெவ்வேறு காரியங்களுக்காகவும் வெவ்வேறு அடமானத்தின் பேரிலுமாவது இருந்தால் கடன் கொடுப்பதற்கு ஆக்ஷேபனை இல்லை.

5. ஷை ரூல்படி கடன்பெற விரும்பும் நிலச்சொந்தக்காரர்களும் அல்லது நிலத்தை கையாளுபவர்களும் அவர் அவர்களுக்கு அருகாமையிலுள்ள விவசாய உத்தியோகஸ்தர் மூலமாக மனுக்கள் அனுப்பப்படவேண்டும். ஷை உத்தியோகஸ்தர் மனுதாரின் அவசியத்தையும் கடன் துகையின் அவசரத்தைப்பற்றியும் விவசாயிதான் என்பதைப்பற்றியும் இண்டார்சு செய்து அனுப்புவார்கள்.

ஸ்டாண்டிங் ஆர்டர் ரிவினியூ போர்டு, லாண்ட் ரிவினியு செட்டில்மெண்ட் 19 (B) தற்காஸ்து விதிப்படி ஜாரி செய்வதற்கு லாயக்கில்லாத புறம்போக்கு நிலங்களில் விவசாயிகள் மரம் பயிரிடும் விதங்கள்.

1920-ம் வருஷத்திய 15-வது ஆக்டுப்படி ஏற்படுத்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்துக்குக்கீழ் வைக்கப்படாத புறம்போக்கு நிலங்களில் சம்சாரிகளுக்கு மரத்துக்காவது, விறகுக்காவது, தழை உறத்துக்காவது, மரம் வைக்க லைஸென்ஸ் பெற்றதின்மேல் உத்தரவு கொடுக்கப்படும். லைஸென்ஸ்கள் கீழே கண்ட நிபந்தனைகளுக்கு உள்பட்டது :—

(i) சர்க்காரால் நடப்பட்டவும் நடப்படாததுமான மரங்களைக் கண்டுபிடிப்பது பின்னுடி கஷ்டமாயிருக்குமாதலால் ஏற்கனவே விலையுயர்ந்த சர்க்கார் மரங்களிருக்கும் நிலங்களில் ஷை உத்தரவு கொடுக்கப்படமாட்டாது.

(ii) மரம் நடுவதற்கு முன்னுடியே தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தார் அனுமதி பெறவேண்டும். பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் ஆதீனத்திலிருக்கும் நிலத்தில் ஷை மரங்கள் நடுவதற்கு அந்த டிபார்ட்மெண்டார் முன் உத்தரவு இல்லாமல் அனுமதி கொடுக்கக்கூடாது ; பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தும் நிபந்தனைக்கும் ஷை மரம் நடுவதற்கு உள்பட்டதாகவும் இருக்கலாம்.

(iii) லைஸென்ஸ்விலேயே நிலத்தின் எல்லையும் நம்பரும் இன்னவிதமான மரம் என்பதின் விபரங்கள் குறிக்கப்படவேண்டும்.

(iv) இந்த அனுமதியானது நிலத்திற்கு யாதொரு சுதந்தரமும் கொடுக்கிறதாகாது.

(v) லைஸென்ஸ்தார் இளமரங்களை காவல் காப்பதின் நிமித்தம் தவிர வேறு வேலி ஒன்றும் போடக்கூடாது. ஸ்பெஷல் கேஸ்களில் கலெக்டர் தொடுத்தாற்போல் குறிப்பிட்ட சொல்ப காலத்திற்கு மட்டும் வேலி போட உத்தரவு கொடுக்கலாம். சம்பாத்தி வேலியாகப் போடக்கூடாது.

(vi) எதிர் நஷ்டத்துகை கொடாமல் அவசியம் ஏற்படும்போது மரங்களை அப்புறப்படுத்த சர்க்காருக்கு அதிகாரமுண்டு. இந்த சந்தர்ப்பத்தில் மரத்தை பகிரங்க ஏலத்தில்விட்டு கிரயத்தை லைஸென்ஸ்தாருக்கே கொடுக்கப்படும். அல்லது அந்த மரத்தை லைஸென்ஸ்தார் கோரினால் அவர்களுக்கே கொடுக்கப்படும்.

(vii) ஏகதேசம் குறித்த வாயிதாவில் மரம் நடப்படாவிட்டாலும் மரங்கள் சரியாய் பரிபாலனஞ் செய்யப்படாவிட்டாலும் லைஸென்ஸ் கான்ஸல் செய்யப்படலாம்.

(viii) லைஸென்ஸ்தார் மரங்களின் மாசூலையும் மரத்தையும் கிரய மண்ணியில் ஆதீனஞ் செய்துகொள்வதானால் பழமரங்களுக்கு உள்பட்ட தீர்வை பலனடையும்போது செலுத்தவேண்டும்.

(ix) மரத்தை வெட்டுவதற்கு முன்கூடியே தாசில்தார் உத்தரவு பெறவேண்டும். ஆனால் பொதுவாக உத்தரவு கொடுத்துவிடுவார்கள்.

(x) இந்த விதிகள் கிராம பஞ்சாயத்திலிருந்துவரும் ஒவ்வொரு மனுக்களின்பேரிலும் தகுந்தவாறு திருத்தஞ் செய்யப்படும்.

லைஸென்ஸ் பாரம் ஸ்டாண்டிங் ஆர்டர் புத்தக அனுபந்தம் XII–A-ல் கண்டிருக்கிறது.

ஷை சுதந்திரத்தை பெற விரும்பும் ஒவ்வொரு சம்சாரியும் பக்கத்தி லுள்ள விவசாய உத்தியோகஸ்தர் மூலமாக மனுச்செய்தால் அவர்களுக் காக லைஸென்ஸு வாங்கிக்கொடுப்பார்கள்.

மாட்டுத்தீவனப் பயிர்களுக்கு கன்செஷன்.

தென் இந்தியா ரெயில்வே கம்பெனியார் வைக்கோல் முதலிய காய்ந்த புல்லை ஏற்றுமதி செய்வதற்கு கட்டுப்போடப்பட்டிருந்தால் கோயமுத்தூர், சேலம், திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர் இந்த ஜில்லாவிற்கும், ஜில்லாவி லிருந்து வருவதற்கு மைல் 1-க்கு மணங்கு 1-க்கு பை மூன்று வீதம் ஸ்பெஷல் விகிதம் விதித்திருக்கிறார்கள்.

ஷை விஷயத்தில் அனுகூலம்பெற விரும்புகிறவர்கள் பக்கத்திலுள்ள விவசாய உத்தியோகஸ்தர்கள் மூலம் எழுதவும் இல்லாவிட்டால் நேரில் வேணுமானால் சீப் கம்மர்ஷியல் சூப்பரின்டெண்டெண்ட், திருச்சி, என்று எழுதிக்கொள்ளவும்.

கடன்களைப்பற்றிய விசேஷ விதிகள்.

1. யாதொரு நிலச்சொந்தக்காரரும் நிலத்தை ஆதீனம் பெற்றவர் களும் விவசாய கருவிகள் வாங்குவோர் அல்லது வேறு மிஷின்கள் வாங் கவோ ஷை காரியங்களினால் ஏற்படக்கூடிய சீர்திருத்தங்களுக்கோ மதராஸ் சேப்பாக்கம் விவசாய டைரெக்டர் அவர்களுக்கு மனுசெய்யவேண்டியது.

2. இந்த விதியின் விஷயத்திற்கு விவசாயக் கருவி வேறு மிஷின் கள் என்பது தனி விவாசாயத்துக்குள்ள உழவு, அறுவடை, வேறு சரக்கு களாக்கும் உபகரணங்கள் என்பது அர்த்தம். அதாவது கரும்பு ஆலை மெஷின் உள்பட,

3. விவசாய டைரெக்டர்களுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் ரூ. 10,000 வரை கடன்கொடுக்க அதிகாரமுண்டு.

4. வட்டி விகிதம் ரூ. 100-க்கு வருஷம் 1-க்கு ரூ. 6–4–0.

5. கடன் துகை வட்டியும் முதலிலும் சேர்த்து வருஷம் ஒருமுறை செலுத்திவரவேண்டும்.

6. தவணையும் செலுத்தவேண்டிய துகையும் சீர்திருத்தம் நிலைக்கக் கூடிய காலத்தைப் பொறுத்தும் ஜாமீன் காட்டியிருக்கும் நிலத்தின் மதிப்பை பொறுத்தும் கடன் வாங்குகிறவர் சௌகரியத்தைப் பொறுத்தும் டைரெக்டரால் தீர்மானிக்கப்படும். அப்படி குறிக்கப்பட்ட தவணை கீழே குறிக்கப்பட்ட நீடித்த வாயிதாவுக்குமேல் போகாது :—

(i) கடன் நில ஜாமீன் பேரிலானால்—20 வருஷம்.
(ii) கடன் மெஷின் பேரிலானால்—5 வருஷம்.
(iii) கடன் நபர் ஜாமீன் பேரிலானால்—2 வருஷம்.

7. எப்போதாவது கடன் வாங்கினவர் எந்த நிபந்தனைகளின்பேரில் கடன் வாங்குகிறாரோ அந்த நிபந்தனைகளின்படி காரியம் நடத்தத்தவறின தாக டைரெக்டருக்குத் தெரியவந்தால் அதற்கு உள்ள காரணங்களை புள்ளி களிடமிருந்து எழுத்துமூலம் வாங்கி பாக்கித் துகையை வட்டியுடன் நில வரியைப்போலவே வசூல்செய்ய ஆர்டர் செய்து ஜில்லா கலெக்டருக்கு அந்த ஆர்டர் நகலை அனுப்புவார். கலெக்டர் அவர்கள் வசூல் செய்ய ஆரம்பிப்பார்.

8. மேற்கொண்டு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள விவசாய உத்தி யோகஸ்தரை கேளுங்கள்.

விவசாயிகளுக்கு சர்க்காரால் காட்டப்பட்ட நன்மைகள்

சில பயிர்களுக்கு தண்ணீர் தீர்வை அல்லது பசலி ஜாஸ்தியில்லை.

உரத்துக்காகவும், மாட்டுத் தீவனத்துக்காகவும் சணல், அவுரி, பாசிப் பயிறு, டைன்சா, கொளுஞ்சி விளைவிப்பதின் அனுகூலங்களை அடிக்கடி கிராமவாசியின் பஞ்சாங்கங்களில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த டிபார்ட் மெண்ட் இது விஷயத்தில் அனேக துண்டுப் பத்திரிகைகளும் பிரசுரம் செய்திருக்கிறார்கள். கிராமவாசியின் பஞ்சாங்கத்தின் கடைசிப் பக்கத்தில் அந்த விவரங்கள் அடங்கிய அட்டவணை ஒன்று எழுதப்பட்டிருக்கிறது. பெரும் பான்மையோருக்கு இந்த மாதிரி பயிர்களை விளைவிக்க சர்க்காரால் கொடுக்கப்பட்டிருக்கும் அனுகூலங்கள் தெரியாது. அப்பேர்ப்பட்டவரின் நன்மையைக்குறித்துக் கீழேகண்ட விவரங்கள் எழுதப்பட்டிருக்கிறது :—

2. பசுந்தாள் பயிர்களை நஞ்சையிலே விளைவித்து அதே நிலத்தில் மடித்து உழவோ அல்லது அறுத்து வேறு நிலத்துக்குப் போடவோ செய்வது வழக்கம். இவற்றுள் முன்கூறியது அதாவது, அதே இடத்தில் உண்டாக்கி மடித்து விழுவதே சிலாக்கியம். சில இடங்களில் இப்பயிர்களை புஞ்சையில் விதைத்து நஞ்சைகளுக்கு கொண்டுவரப்படுகிறது. விதைப்புக் காலத்திலும் பிந்தின காலத்திலும் கொஞ்சம் பதம் வேண்டும். ஆகவே நிலத்தில் பதம் இருக்கும்போதே விதைக்கவேண்டும். அதாவது ஒருபோக நஞ்சையில் அறுவடைக்கு கொஞ்சம் முன்னமோ அல்லது பிந்தியோ விதைக்கவேண்டும் அல்லது நெல் நடுகைக்கு முன்னமே விதைக்கவேண்டும். கொஞ்ச காலத்திற்கு தண்ணீரும் பாய்ச்சவேண்டும்.

3. முந்தியிருந்த விதிப்படி இப்படி தழை உரப்பயிருக்கு வாட்டர் ரேட் அல்லது பசலி ஜாஸ்தி விதிக்கப்பட்டிருந்தது. சம்சாரிகள் இம்முறையினின்று அடையும் பெரிய நன்மையை உத்தேசித்து கவர்ன்மெண்டார் நல்ல சித்தத்துடன், சம்சாரிகள் தங்கள் சொந்தத்திற்கென்றாவது அல்லது விற்பனைக்கென்றாவது நஞ்சைகளிலாவது இறவைப் புஞ்சைகளிலாவது பசுந்தாள் உரப்பயிர்களைச் செய்தால், மறு உத்திரவு பிறப்பிக்கிறவரையும் கீழ்க்கண்ட அனுகூலங்களைச் செய்வதாக ஆர்டர் செய்திருக்கிறார்கள்.

(a) மற்றப்பயிர்களுடன் சேர்த்துப் பயிர் செய்யப்பட்டால் அவைகளுக்குத் தண்ணீர்த்தீர்வை வஜா உண்டு.

(b) எந்தப் பூமியிலானாலும் சரியே, அந்தப்பயிர் மட்டும் பயிர் செய்யப்பட்டால் அதற்கு ஏற்படும் தீர்வை விகிதம் பின்வருமாறு—

(1) புஞ்சை பூமியானால் கிஸ்தி வஜா செய்யப்படுவதில்லை. ஆனால் தண்ணீர் தீர்வை கிடையாது.

(2) ஒரு போக நஞ்சையானால், வேறே பயிர் பின்னால் செய்யப்பட சவுகரியம் இருந்தாலும் இல்லாமற்போனாலும், இப்பயிர் செய்வதற்கு கிஸ்தி வசூலிப்பதில்லை.

(3) இருபோக நஞ்சை நிலங்களில், ஒரு போகத்திற்கு மட்டும் தண்ணீர் போதுமானதாயிருந்தால், இந்தப் பசுந்தாள்உரப்பயிர் செய்யப்பட்டபொழுது, முழு இருபோக சர்க்கார் தீர்வையும் வஜா செய்யப்படும். இரண்டு போக பயிர்களுக்கும் வேண்டுமான ஜலம் இருந்தபோது, பசுந்தாள்உரப்பயிர் ஒரு போகத்தில் செய்யப்பட்டால், ஒரு போக நஞ்சைத்தீர்வை மட்டும் வசூலிக்கப்பட்டு, மற்ற போக தீர்வை வஜா செய்யப்படும்.

(4) கம்பவுண்ட் இருபோக நஞ்சைகள் சாதாரண இருபோக நஞ்சைகள் போலவே கருதப்படும். மேல் சொல்லப்பட்ட (2) (3), (4) பாராக்களில் கண்ட வஜாக்கள், பசுந்தாள்உரப்பயிர் செய்யப்பட்ட விஸ்தீரணத்தின்மேல் மட்டும் அமுலுக்குவரும்.

4. ஒரு வருஷ கெடுவு கொடுத்து பொதுவாக எல்லா இடங்களிலாவது அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்திலாவது மேற்சொன்ன வஜா விதிகளை நிறுத்திப்போட கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் உண்டு.

5. நிலச்சுவானுடைய சொந்த உபயோகத்திற்காகமட்டும் நஞ்சையிலாவது இறவைப் புஞ்சையிலாவது, நடுகைக்குச் சற்று முந்தியாவது அறுவடைக்குச் சற்றுப் பிந்தியாவது, மாட்டுத்தீவனப்பயிருக் கென்று விளைவிக்கப்பட்ட பயிர்கள் பூமியில் மடக்கி உழப்படவாவது, அறுக்கப்படவாவது அல்லது மேய்க்கப்படவாவது உத்தேசத்துடன், அப்பயிர்கள் மணிகள் முற்றிப் போவதன்முன் உபயோகிக்கப்பட்டால் இப்பயிர்களுக்குத் தண்ணீர்த் தீர்வை இல்லை. புஞ்சை பூமிகளுக்கு ஒழுங்கீனமாய் நீர் பாய்ச்சப்பட்டாலும் ஒரு போக நஞ்சை பூமிகளில் பயிர் செய்விக்க முடியுமான இரண்டாம் போக நஞ்சைத்தீர்வைக்கு குந்தகம் ஏற்படும்படி நேரிட்டாலும் மேற்சொன்ன சவுகரியத்தை கவர்ன்மெண்டார் ரத்து செய்யக்கூடும்.

6. புஞ்சையில் செய்யப்படும் நாத்துச் சோளப் பயிருக்கும், நஞ்சையில் இரண்டாம் போக சாகுபடியாகச் செய்யப்படும் நாத்துச் சோளப்பயிருக்கும் இறைக்கும் தண்ணீருக்கு யாதொருவிதமான நிபந்தனையும் விதிக்கப்படுவதில்லை என்றால் விட்டு விட்டு ஒழுங்கின்றி இறவை செய்யப்படக்கூடாது. நஞ்சை பூமியானாலும் சரியே அல்லது அந்தப் பசலியில் தண்ணீர் இறைத்துக்கொள்ளக்கூடிய பாத்தியதையளிக்கப்பட்ட புஞ்சைகளின் இறவைக்காவது யாதொரு மனுவும் செய்துகொள்ளவேண்டியதில்லை. தண்ணீர்பாய்ச்சுதல் முறை தப்பில்லாமல் நடந்தால், நாத்துச் சோளப் பயிர் புஞ்சையிலானாலும் இருபோக நஞ்சையில் இரண்டாம் போகப்பயிர்களானாலும் செய்யப்பட்டால் தண்ணீர் தீர்வையாவது இரண்டாம் போகத் தீர்வையாவது விதிக்கப்படமாட்டாது.

முழு விவரத்திற்கும் எந்தெந்த பயிர் விளைவிக்கலாம் என்றதற்கும் கீழ்கண்டவர்களிடம் தெரிந்துகொள்ளலாம்.

விவசாய டிப்டி டைரெக்டர்—(i) சர்க்கில், விசாகப்பட்டணம்.
ஷை (ii) ஷை குண்டூர்.
ஷை (iii) ஷை பெல்லாரி.
ஷை (iv) ஷை செண்ட் தாமஸ் மௌண்ட்.
ஷை (v) ஷை திருச்சினுப்பள்ளி.
ஷை (vi) ஷை மதுரை.
ஷை (vii) ஷை தலைச்சேரி.
ஷை (viii) ஷை கோயம்பத்தூர், லாலி ரோட் போஸ்ட்.

7. சொந்த உபயோகத்திற்காக காய்கறி பயிர் செய்தல்.

அப்பொழுது பறித்த புதிய காய்கறிகளை அதிகமாய் தினந்தோறும் உபயோகிக்கவேண்டுமென்பதை ஸர்வஸம்மதமாய் தற்காலம் ஒப்புக்கொண்டு அனுஷ்டித்தும் வருகிறார்கள். நகரத்திலுள்ள காய்கறிக் கடைகளில் கிடைக்கக்கூடிய காய்வர்க்கங்கள் அந்நகரத்திற்குப் போதிய அளவுக்குக் கம்மியாகவே இருப்பதால், அந்நகரவாசிகள் தங்கள் வீட்டைச்சுற்றியாவது பின்னாலாவது இருக்கக்கூடிய காலி பூமிகளில் கறிகாய் தினுசுப் பயிர்களை வளர்த்துவரலாம். கிராமாந்தங்களில் காய் வகையறா சாதாரணமாய்ப் பயிராக்கப்பட்டு வந்தாலும், நகரவாசிகள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற பல வேறு பிரவர்த்திகளால் இம்மாதிரியாக காய்கறிப்பயிர் செய்ய முடியாமல் இருக்கின்றனர். தானாகவே பயிர் செய்து சாப்பிடுவதைவிட கடையில் விலை கொடுத்து வாங்குவது சலீசு என்று சிலர் நினைக்கிறார்கள். நாடோறும் வேண்டிய காய்கறிவகையின் சிலவு மொத்தம் மாதத்தில் கணக்கிட்டுப்பார்த்தால் சற்று அதிகமாகவேதான் ஆகும். இந்தத் தொகையைவைத்து வேறு முக்கியமான சிலவுகளை நடத்தலாம். இந்த மிச்சம் ஒருபுறமிருக்க, தானே சொந்தப்பிரயாசைபட்டு பயிர் செய்த காய்கறிகளைப்புசிப்பதில் ஒருவிதமான ஸந்தோஷமும் ஏற்படும். அவ்வக்குடும்பங்களிலுள்ள ஸகலரும் தினந்தோறும் தனித்தனி 1 மணி நேரம் தோட்டத்தில் நல்ல காற்றில் தேகப்பிரயாசைபட்டு பூமியைக் கொத்திக்கிளறி,

எருவிட்டு, விதையூன்றி, நீரிறைத்துக் களைபிடுங்கி இது போன்ற பல வேலைகளைச் செய்வதால் சரீர ஆரோக்கியமடைவதுமன்றி, தினே தினே செய்துவரும் ஒரேவிதமான தொழிலால் ஏற்படும் சிரமத்திற்கு ஒருவித உத்ஸாஹத்தைத் தரத்தக்க பரிஹார ஹேதுவுமாகும். இப்படி அன்றாடம் உணவுக்குவேண்டிய காய்கறிகளை வளர்க்கும் தோட்டவேலை அவ்வளவாக சிரமஸாத்தியமானதுமில்லை. ஏராளமான முதல் முடக்கவேண்டியது மில்லை.

ஒரு காய்கறித் தோட்டத்தைப் பரிபாலிக்கவேண்டிய சில பொதுக் குறிப்புகள் கீழே குறிக்கப்படுகின்றன :—

பூமி.—செடிகளின் ஸரியான வளர்ச்சிக்கு லாயக்கான நல்ல பூமி அவசியம். கறிகாய்த்தோட்டத்திற்கு மணற்கண்டமான பசளை பூமி ஏற்றது. மற்ற பூமிகளையும் தக்கவாறு மணலோ, வண்டலோ அடித்து மேம்படுத்தலாம். ஒரு அடி ஆழத்திற்கு நன்ருய் வெட்டி கீழ்மேல் புரட்டிவைப்பதால் வேர்கள் கீழ்நோக்கி எளிதில் சென்று பரவ லாயக்காக இருக்கும். இந்தத்தோட்ட பூமியில் வடிகால் வசதி நன்ருய் வாய்த்திருப்பது முக்கியமான விஷயம். ஒரு சிறு மண்வெட்டி, ஒரு குத்துமுள், ஒரு களைகொத்து முதலிய சிறு கை எத்தனங்களும் தயாராய் இருக்க வேண்டும்.

எரு விடுதல்.—எதானுமொரு பயிர் செய்வதன் முன்பு தப்பாமல் பூமிக்குத்தக்க எருவைச் சேர்க்கவேண்டும். சதுர கஜம் ஒன்றுக்கு 5 அல்லது 6 ராத்தல் பிரகாரம் எருவிட்டு நன்ருய்க் கொத்திக் கலக்கி மண்ணில் சேரவைக்கவேண்டும். வீட்டில் கழித்த குப்பை கூளம் முதலியவற்றைக்குழியில் போட்டு நன்ருய் மட்கவைத்துப் பின்னுல் எருவாய் உபயோகிக்கலாம். இப்படிக் குழியிலிட்ட தழை, குப்பை, கூளம் இவற்றை வேண்டும்போது சற்று நனைத்து அப்பொழுதப்பொழுது பிரட்டிக்கொடுப்பதால் நல்ல ஸத்துள்ள எருவாகும். மாட்டுச்சாணத்தையும் மூத்திரத்தையும் மேற்சொன்ன குப்பைக் குழியில் சேர்ப்பதால் எரு ஸ்லாக்யமாவதுடன், அவ்வெருவையும் சீக்கிரத்தில் நல்ல வண்ணம் மட்கவும்வைக்கும். இரண்டு எருக்குழிகள் இருப்பது அவசியம். ஒன்றில் புதிதாகக் கிடைக்கும் குப்பை கூளங்களைச் சேர்க்கவும், மற்றதில் பழைய எரு குப்பை, கூளம், சாணி, மூத்திரம் இவைகள் 5 அல்லது 6 வாரங்கள் கிடந்து மட்கவும் லாயக்காகும். பலவேருன கறிகாய் வகைகளுக்கு அப்பொழுதப்பொழுது சமயங்கண்டு சாதுர்யத்துடன் நல்ல சேர்க்கை உரங்களைச் சிறுகச்சிறுக போடுவதால் கறிகாய்களின் மாசூல், குணம், வாசனை ருசி முதலியவற்றை அதிகரிக்கச்செய்யும்.

பயிர் செய்தல்.—சிறியதொரு புழக்கடை தோட்டத்தில் பலவேருன காய்கறிகளை வளரத்தக்கவிதமாய் அநேக பாத்திகள் போடவேண்டும். இதனுல் இடம்விட்டு இடம் பெயர்த்துப் பின்வரும் பருவத்தில் பயிர் மாற்ற சாத்தியப்படும். உயரமாய் வளரக்கூடிய காய்ச்செடிகளை பாத்திகளின் ஓரங்களில் விதைப்பதனுல் இவைகளின் நிழல் பாத்திகளில் அதிகமாய் விழாது. எந்த தினுசுகள் பயிர்பண்ணவேண்டுமென்பது அவரவர்களுடைய மனோத்ஸாகத்தைப் பொறுத்தது. எல்லா இடங்களிலும் சகலமான காய்கறிப் பயிர்களும் சரிவர வளர்வதில்லை. சமுத்திர மட்டத்திற்குமேல் வெகு உயரத்தில் வளரக்கூடிய காய்கறி ஜாதிப் பயிர்கள், சமவெளியான பூமியில் உண்டாவதில்லை. தென்னிந்தியாவில் இவை ஜூன், ஜூலை மாதங்களில் பயிர் செய்யப்படலாம். கீரை தினுசுகள் போன்ற தழைப் பயிர்கள் அருங்கோடையில் தளதளப்பாய் இராமல் நார்பிடித்துப்போயிருக்கும், கத்தரி, மிளகாய், சீமைத்தக்காளி போன்ற சில கறி தினுசுகள் முதலில் நாற்றங்காலில் நாற்றுவிடப்பட்டுப் பிறகு நாற்றுகள் பிடுங்கி நடப்படும். ஒரே இடத்தில் திருப்பித்திருப்பி அதே பயிராவது அல்லது அதற்கு இனமான பயிராவது விளையவைக்கக்கூடாது. இப்படிச் செய்வதால் நோய் நொடிகள் அப்பயிர்களை அணுகாமல் காக்கமுடியும்.

நீர் பாய்ச்சுதல்.—குடியிருக்கும் வீடுகளிலெல்லாம் கிணறுவது, தண்ணீர்க் குழாயாவது இருக்கும். இவற்றினுதாரத்தால் தண்ணீர் பாய்ச்சக் கூடும். வீட்டுக்கு வெளியே கழிக்கப்படுகிற தண்ணீரை அப்படியே தேக்கும்படியாக பாத்திகளில் பாயவிடக்கூடாது. அதன்றி சிமிண்டினுல் கட்டப்பட்ட ஒரு தொட்டியில் அதைச் சேரும்படிவிட்டு, அதிலிருந்து பக்கிட் அல்லது சட்டிகொண்டு, காய்கறிச் செடிகளுக்கு எடுத்து ஊற்றவேண்டியது.

செடிகளுக்குச் செய்யவேண்டிய பின் செய்நேர்த்தி.—பாத்திகளை சுத்தமாய் வைப்பதற்காக, களைப்பூண்டுகள் தலைகாட்டுந்தோறும் பிடுங்கியாவது கொத்தியாவது களைந்தெறியவேண்டும். மிகவும் நெருங்கிக்கிடக்கும் காய்த் தோட்டங்களில், ஜாக்கிரதையாய்ச் செடிகளைக் கலப்பித்து வருவதால் செடிகளின் மாசூல் அதிகரித்து குணமும் சிலாக்கியப்படும். படரக்கூடிய கொடியினங்களும், தண்டு பலமற்ற செடிகளும் தக்க கொம்புகளால் அணைக்கப்பட்டால் படர்ந்து தளைத்து வலுக்கும். சுதாவில் பயிர் வளர்த்துக் கையாண்டு வருவதால் மாத்திரம் பலவேறுன விசேஷ ஞானம் ஏற்படும்.

புழு, பூச்சி, நோய், நொடிகள்.—செடிகளுக்கு அநேகவிதமான பூச்சிகள் விழுந்து பயிர் நஷ்டத்தை விளைவிக்கும். புது பத்ததி 34 நம்பர் கைப்புத்தகத்தில் இதைப்பற்றியதொரு விரிவுறை வரையப்பட்டிருக்கிறது. மதராஸ் விவசாய இலாகாவால் பிரசுரம் பண்ணப்பட்ட இந்த சிறு நூலைப்பார்த்துத் தெரிந்துகொள்ளவும். நோய்பட்ட செடிகளை கண்ட தக்ஷணமே பிடுங்கியெறிந்து நெருப்பிட்டு பொசுக்குவதால் அந்நோய் பரவாமல் தடுக்க இயலும். எருக்குழியில் எக்காரணத்தையிட்டும் இவைகளைப் போட்டுவிடவேண்டாம். அப்படிச் செய்தால் எருவிடும்பொழுது இந்நோய் மறுபடியும் பரவ ஸாத்தியமாகும்.

மாசூல் சேகரித்தல்.—அநேகமான கறி பயிர்களைத் தக்க பருவத்தில் பறிக்கவேண்டியதவசியம். இதை அசட்டைசெய்தால், மாசூலும் கம்மிபட்டு சரக்கும் நயம் குறையும்.

விதை முதல் காப்பாற்றுதல்.—நன்ருய் முற்றி விளைந்த பழங்களையே விதைக்கென்று தனிபடுத்தவேண்டும். வெயிலில் நன்ருய்க்காயவைத்து மறுபடியும் விதைக்கும் காலம் வரும்வரை பத்திரமாய்க் காற்றுப்புகாத ஏனங்களில் வைக்கப்படவேண்டும். இருஜாதியான விதைகளைத் தக்க விதை வியாபாரிகளிடமிருந்து விலைக்கு வாங்கிப் பயிர் செய்வது தரம். தானே விளையவைக்கிற ஒருவர்வேண்டும்பொழுது பறித்துக்கொள்ளமுடியுமாகையால், வாசனை, ருசி, முதலியவை அதிகமாயுள்ளவைகளான கறி காய்வகைகளை அடையலாம். கறித்தோட்ட வேலையில் எல்லாரும் அதிகமான சிரத்தை எடுத்துக்கொள்ளும்பொருட்டு இச்சிறு வியாசம் எழுதப்பட்டது.

எஸ். ஆர். ஸ்ரீனிவாசய்யங்கார்,

லைப்ரேரியன், விவசாய காலேஜ், கோயமுத்தூர்.

8. தான்யத்தை முளைகட்டி மாவு திரித்துச் செய்யும் குடிசைக் கைத்தொழில்.

ஹார்லிக்ஸ் மால்டெட் மில்க், பெஞ்ஞர்ஸ் புட், ஓவல்டின் என்ற ஆகாரங்கள் தேசாந்தரங்களிலிருந்து ஏராளமான பணச் செலவில் இந்தியாவிற்கு இறக்குமதியாகின்றனவென்பது நன்கு தெரிந்த விஷயம். இந்த உணவு பொருட்கள் யாவும் வாற்கோதுமையை முளையவைத்துக்காயப் போட்டு இளம் வறுவலாக வறுத்துப் பொடி திரித்து அதணின்று செய்யப்படுகின்றன.

கோயம்பத்தூர் விவசாய இரசாயன சாஸ்திரி செய்த பரிசோதனைகளால் ஒவ்வொரு வீட்டிலும் சோளத்திலிருந்து சரியான முளைகட்டின மாவுசெய்து ஒரு ஆகாரம் உண்டாக்கலாம் என்று தெரியவருகிறது. (மதராஸ் விவசாய டிபார்ட்மெண்டு துண்டுப் பிரசுரம் 4-ம் நம்பரைப் பார்க்கவும்.)

இந்த மால்ட் செய்வதில் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சம் என்ன வென்றால், நனையவைத்த ஒரு தான்யத்தை முளைகிளம்ப விட்டுவைப்பதால், முளைகிளம்புந்தருவாயில் தான்யத்தில் ஏற்படுகிற சில வேறுபாடுகளால் உணவுபொருட்கள் பதப்படுகின்றன. இதனால் பல நுட்பமான ரசாயன வேறுபாட்டினால் ஒருவிதமான சர்க்கரை ஸத்தும் சில வாசனையுள்ள புளிப்புப் பதார்த்தங்களும் உண்டாகின்றன. முன்பே சிறுக ஜீர்ணிக்கப் பட்டிருத்தலால், சிறுவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இந்த மால்ட் ஆகாரங்கள் சிலாக்கியமானவை.

சோளத்திலிருந்து லெகுவாய் மால்ட் செய்யும்வழி. ஒரு நாள் தான்யத்தைத் தண்ணீரில் ஊறப்போட்டு வைக்கவும். இந்த 24 மணி நேரத்தில் ஊறப்போடவிட்டிருக்கும் தண்ணீரை 4 தரம் மாற்றவேண்டும். இப்படி நனையவைத்த தான்யம் 3 நாட்களில் சிறுமுளைகள் காணும்படியாகச்செய்து பிறகு வெயிலில் உலரவைக்கவேண்டும். முளைகளும் உமியும் ஒரு மர உரலில் குத்திப் புடைத்துத்தள்ளப்படவேண்டும். பிறகு இந்த சுத்தம்பண்ணப்பட்ட தான்யத்தை இளம் வறுவலாக வறுக்கவேண்டும். தக்கதொரு வாசனை உண்டாகும். இந்த வறுத்தசோள தான்யத்தை இயந்திரத்தில் போட்டு மாவாகத் திரித்து வைத்துக்கொண்டு பலவகையான விதங்களில் உபயோகிக்கலாம்.

வியாதிஸ்தருக்கு, லேசான தெளிவு கஞ்சியாகவும், பால் சர்க்கரையுடன் கலந்து கொடுப்பதால் நோயாளிக்குத் தக்க போஷணை செய்யும். வேண்டியபடி சற்று கட்டியாகவோ தண்ணீர்ப்பாகமாகவோ செய்து வைத்துக்கொண்டு இந்தக் கஞ்சியைச் சிறு குழந்தைகளுக்கும் ஜீர்ணசக்தி கம்மியடைந்த பெரியவர்களுக்கும் உபயோகிக்கலாம். எல்லாரும் சாமான்னியமாய் உபயோகப்படுத்தும்பொருட்டு கொக்கோவுடன் கலந்து சாப்பிடுவதால் அதிக போஷணையைக் கொடுக்கும். கோதுமை மாவுடன் சோள மால்ட் மாவைக்கலந்து மற்ற சரக்குகளுடன் கூட்டி, பிஸ்கத்துகள், கேக்குகள் முதலியவைகளையும் செய்யலாம். மற்ற தான்யங்களையும் மேற் சொன்ன முறையில் மால்ட் ஆகச் செய்து கொள்ளக்கூடுமாகையால் இந்த மால்ட் செய்வது குடிசைத் தொழிலாக சீக்கிரத்தில் விசாலமாய் ஏற்பட மார்க்கம் உண்டு. இன்னும் வேண்டிய விபரங்களுக்கு கோயம்புத்தூர் சர்க்கார் விவசாய இரசாயன சாஸ்திரிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

9. ஊர்ஜிதப்படுத்தப்பட்ட உமிக்கரியும் பால் வெல்லஞ் செய்வதில் அதன் உபயோகமும்.

தென்னிந்திய மக்களில் அநேகமாய் எல்லாருடைய உணவு பொருளில் சேரக்கூடிய முக்கியமான பதார்த்தம் வெல்லம். வருடந்தோறும் ஏராளமாய் இந்த வெல்லம் இப்பிராந்தியத்தில் செய்யப்பட்டு உண்ணப்படுகிறது. தற்போது அமுலிலிருந்துவரும் வெல்லச்செய்கையின் குற்றங்குறைகளால் நாடோடியாய்ச்செய்யப்படுகிற வெல்லம் அசுத்தமாயும், கருப்பாயும் இருப்பதால் கண்ணுக்கு பஸந்தாயில்லை. ஆகையால் உயர்ந்ததொரு வெல்லச்சரக்கு செய்யப்படவேண்டியது முக்கிய அவசரமானதென்று கருதப்பட்டது. கவர்ன்மெண்ட் விவசாய கெமிஸ்டு சென்ற சில வருஷங்களாகச்செய்துவந்த பரிசீலனைகளால் எளிய சம்சாரிக்கும் வலிய சம்சாரிக்கும் சரிசமத்வமாய் எளிதிலும் செய்முறை கஷ்டமின்றியும் செய்யக்கூடியதும் நல்ல உத்கிருஷ்டமானதுமான வெல்லம் செய்முறை ஒன்று கைகூடிற்று. இம்முறையின் சாராம்சமென்னவென்றால், பலப்படுத்தப்பட்ட நெல் உமிக்கரியின் ஊடே கருப்பஞ்சாற்றை வடியவிட்டு, தெளிய வைக்கப்பட்ட இந்த ரஸத்தைக் கொப்பரையில் விட்டு சாதாரணமாய் வெல்லங்காய்ச்சும் முறையில் செய்வது.

ஆக்டிவேடெட் கார்பன் என்பது என்ன.

ஊர்ஜிதம் பண்ணப்பட்ட உமிக்கரியின் வழியாக கருப்பஞ்சாற்றுடன் கரைந்துபோகக்கூடிய சில வஸ்துக்கள் இருந்ததைத் தன்னுள்ளடக்கிக் கொண்டு சுத்த ஸ்படிகம்போன்ற தெளிந்த ரஸத்தைமட்டும் வெளியே

விட்டுவிடுவதால் இந்த உமிக்கரிக்கு ஆக்டிவேடட் கார்பன் என்று பெயர். முதலில் எடுத்துக்கொண்ட பிரதம வஸ்துக்களை சிலமுறைகளில் இயக்கி வைப்பதால் இந்தக்கரிக்குத்தன்னுள்ளேயே சில அழுக்கு பதார்த்தங்களை அடக்கிவைத்துக்கொள்ள சக்தி ஏற்படுகிறது.

ஆக்டிவ் கார்பன் செய்யும் விதம்.

சம்சாரிக்கு வேண்டிய இந்தக்கரி மிகவும் சலிஸாயும் மலிவாயும் செய்யப்படவேண்டியது அவசியம். இப்படியிருந்தால்தான் சுத்தமான வெல்லஞ்செய்முறை இலாபகரமானதாக இருக்கும். வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆக்டிவ் கார்பன் அதிக விலைபெற்றதாயிருப்பதால் (ராத்தல் ஒன்றுக்கு 8 முதல் 10 அணு) அவைகளை நாம் வருவித்துக் கொள்வது அசாத்தியமான கார்யம். ஆகையால் தக்க முறையில், நாட்டில் இலகுவாய்க்கிடைக்கும் வஸ்துக்களைக்கொண்டு மலிவானதாயும் நல்ல குணமுடையதாயுமுள்ள கார்பன் என்ற கரியைச் செய்முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கார்பன் செய்வதற்கென்று பரீக்ஷிக்கப்பட்ட பதார்த்தங்களாகிய, நெல் உமி, நிலக்கடலைப்பொட்டு, தென்னைக்கொட்டாங்கச்சி, கழித்த ஆவாரம்பட்டை முதலியவற்றிலெல்லாம் நெல் உமியே சிலாக்கியமானதென்று பின் சொல்லப்படும் காரணங்களால் கண்டுகொள்ளப்பட்டது.

(1) நெல் கரும்பு விளையக்கூடிய எந்தக் கிராமங்களிலும் இந்த நெல் உமி ஏராளமாய்க்கிடைக்கும்.

(2) சாமான்யமான சம்சாரிகூட எளிதில் செய்யக்கூடியவிதமாய் இந்த உமியிலிருந்து ஆக்டிவ் கார்பன் செய்யப்படலாம்.

(3) ராத்தல் ஒன்றுக்கு 2 அணு சிலவில் செய்யப்படலாம்.

சுருக்கமாக இவ்வுமியைக் கார்பன் செய்யுமுறை :—

திறந்த கொப்பறைகளில் முதலாக உமியைக் கருவலாக வறுத்து, இந்தக் கரிய உமியை நன்றாய் 2 மணிநேரம் காற்று உட்புகாவண்ணம் பழுக்கச்சுடவேண்டியது. உமி இடையின் 100-க்கு 15 பங்கு சோடாகாரங்கலந்த தண்ணீரில் 2 மணி நேரங்கொதிக்கவிட்டுப் பிறகு தண்ணீரில் நன்றாய்க்கழுவி பிறகு உலர்த்தி, மூடின இருப்புக்குழாய்களில் ஒரு மணி நேரம் மறுபடியும் சுடவேண்டியது.

க்ரீம் வெல்லம் என்ற வெள்ளை வெல்லம் செய்வதில் அதன் உபயோகம்.

பச்சைச்சாற்றை கொதிவரும்வரை சுடவிட்டு மேல் எழும்புகிற நுரை அழுக்கு எடுத்துப்போட்டுக் கொதிக்கிற ரஸத்தை, அடியில் துவாரமுள்ள கோணமான ஒரு குழாய்ப்பாத்திரத்தில் மணலும் ஆக்டிவ் கார்பனும் போட்டு நிறைத்திருக்கும் மொத்தையின் வழியாக ஊற்றவேண்டும்.

இந்த ஆக்டிவ் கார்பன் கண் திறந்திருத்தலால் கருப்பஞ்சாற்றிலுள்ள தான அழுக்கில் பெரும்பான்மையைத் தன்னுள் கிரஹித்து அடக்கிக் கொண்டு, (பிசின்கள் வர்ணங்கொடுக்கும் பதார்த்தங்கள் முதலிவற்றை,) தெளிவான ரசத்தைமட்டும் வெளிவிடுகிறது. இந்தத்தெளிவான ரஸத்தைக்காய்ச்சியெடுத்த வெல்லம் பார்வைக்கு வெண்மையாய் இருப்பதோடு அதிக நாட்களும் கெட்டுப்போகாமல் தாங்கும்.

இந்த விஷயமாய் இன்னும் விபரங்கள் வேண்டுவோர், கோயமுத்தூர் லாலி ரோட்டு போஸ்டு, கவர்ன்மெண்ட் அக்ரிகல்சரல் கெமிஸ்டுக்கு எழுதிக் கொள்ளவேண்டியது.

10. டிபார்ட்மெண்டாரால் பரிட்சித்து அங்கீகரிக்கப்பட்ட கலப்பைகளின் ஜாபிதா.

1. **கூப்பர் நெ. 25.**—சடாரா ரோட்டிலிருக்கும் கூப்பர் இஞ்ஜினீரிங் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டவை. மிகவும் குறைந்த பளுவுடையது; கொழுவல்லாத அடி பாகம் உருக்கு இரும்பினால் செய்யப்பட்டது; மண்

பிரட்டும் தகடு எஃகினால் செய்யப்பட்டது ; கொழு சரியானபடி பதனிடப் பட்ட உருக்கு. இக்கலப்பை பிடிப்பில்லாத லேசான நிலங்களுக்கென வே தயாரிக்கப்பட்டவை. 5 அங்குல அகலமாயும் 4 அங்குல ஆழத்தில் படைச்சால் ஓடும். ஒரு கருவுத்தடியுடன் ஒரே கைபிடியுடன் உபயோகிக்க லாம். சிறுமாடுகளும், கஷ்டமில்லாமலிருக்கும். கலப்பை இரும்பு பாக மும் ஒரு அதிகப்படியான கொழுவும் சேர்ந்து விலை ரூ. 4-8-0-த்தான். கொழுவின் விலை ரூ. 0-5-9. இக்கலப்பை மேற்சொன்ன கம்பெனியாரி டமும் விவசாய டிமான்ஸ்டேட்டர்களிடமும் கிடைக்கும்.

2. **கிர்லோஸ்கர்—குர்ஜகார் கலப்பை.**—கிர்லோஸ்க்கர்வாடி, கிர்லோஸ்கர் கம்பெனியாரால் செய்யப்பட்டவை. மேற்சொன்ன கூப்பர் கலப்பையை போன் றது. இது தென்னிந்தியாவில் எந்த ரயில்வே ஸ்டேஷனிலும் இதர ரயில் சார்ஜ் ஒன்றுமில்லாமல் கலப்பையின் இரும்பு பாகமும் ஒரு அதிகப் படியான கொழுவும் சேர்ந்து ரூ. 4-4-0க்கு ஒப்பிக்கப்படும். தனிக்கொழு வின் விலை ரூ. 0-6-6. சென்னை பாரி கம்பெனியார் இதற்கு ஏஜண்டு.

3. **கூப்பர் நெ. 11.**—சடாராவிலிருக்கும் கூப்பர் இன்சினீரிங் கம் பெனியாரால் செய்யப்பட்டவை. அதிக கனமில்லாதது ; சரியான பதத் தில் செய்யப்பட்டவுருக்குக் கொழுவுடையது ; களிமண் நிலத்திற்கும், ஈரத்தில் பிடிப்புள்ள நிலங்களுக்கும் உபயோகப்படும். நன்றாய் மண்ணை பிறட்டி உழக்கூடியது. நஞ்சைக்கும் உபயோகிக்கலாம். 7 அங்குல அக லத்தில் 5 அங்குல ஆழப்படைச்சால் ஓடும். ஒரு கருவத்தடியுடன் ஒரே கைபிடியுடன் உபயோகிக்கக்கூடியது. மிகவும் சிறிய மாடுகளும் சிரமமின் றி இழுக்கும். கலப்பையின் இரும்பு பாகம் உருக்கு கைபிடியுள்பட விலை ரூ. 7-0-0. தோய்ந்த தனிக் கொழு விலை ரூ. 0-8-6. மெரு கேற்றப்பட்ட தகட்டின் விலை ரூ. 2-13-0. கூப்பர் கம்பெனியாரிடமும் விவசாய டிமான்ஸ்டிரேட்டர்களிடமும் கிடைக்கும்.

4. **கிர்லோஸ்கர்ஸ் நெ. 14.**—கிர்லோஸ்கர்வாடி, கிர்லோஸ்கர் கம்பெனி யாரால் தயாரிக்கப்பட்டது. மேற் சொல்லிய கூப்பர் நெ. 11 கலப் பையை போலுள்ளது. இரும்பு பாகத்தின் விலை தென்னிந்தியாவில் எந்த ஸ்டேஷனுக்கும் டெலிவரிக்கு ரூ. 6-0-0. கொழு ரூ. 0-8-6. அவர்கள் ஏஜெண்டாகிய சென்னை பாரி கம்பெனியாரிடமிருந்து கிடைக்கும்.

5. **ரான்ஸம்ஸ் ஜாட்.**—சீமையில் ரான்ஸம்ஸ், ஸிம்ஸ், ஜெவிர்ஸ் கம்பெனியாரால் செய்யப்பட்டது. கலப்பை பூரா உருக்கு. கொழு பதப்படுத்திய உருக்கு. சுமாரான நிலங்களுக்கு உபயோகிக்கலாம். ஆறு அங்குல ஆழமும் 8 அங்குல அகலமுள்ள படைச்சால் ஓடும். குட்டை கருவத்தடியும் இரட்டை எஃகுமேழியுடனாவது அல்லது நீண்ட ஒத்தை கருவத்தடியுடனாவது ஷ கலப்பையை பூட்டலாம். மேற்சொன்ன கலப் பைக்குச் சுமாரான ஜோடி எருதுவேண்டும். கொழுவின் முனை தேயத் தேய வேறு முனை போட்டுக்கொள்ளலாம். மதராஸ் விலை ரூ. 11-7-0, பதப்படுத்தப்பட்ட உருக்குக் கொழு விலை ரூ. 0-12-0. கொழுமுனையின் விலை ரூ. 0-4-0. வில்லியம் ஜாக்ஸ் கம்பெனி, மதராஸ் அவர்களிட மிருந்து கிடைக்கும்.

6. **ரான்ஸம்ஸ் மான்சூன்.**—மேற்சொன்ன கம்பெனியாரால் சீமையில் செய்யப்பட்டது. ஜாட்டு கலப்பையைபோலுள்ளதாகிலும், இக்கலப்பை வலது பக்கத்திலில்லாமல் இடது பக்கம் படைச்சால்போடும். மதராஸ் ப்ரீ டெலிவரி, இரும்புபாகமட்டும் ரூ. 11-7-0. பதப்படுத்தப்பட்ட கொழு ரூ. 0-12-0. கொழு முனை ரூ. 0-4-0. மதராஸ் வில்லியம் ஜாக்ஸ் கம்பெனியில் கிடைக்கும்.

7. **கூப்பர் நெ. 26.**—சடாரா ரோட் கூப்பர் இன்ஜினீரிங் ஒர்க்ஸில் செய்யப்பட்டது. பூரு உருக்கி பதப்படுத்திய உருக்கால் தயாரிக்கப்பட்டது. இக்கலப்பையின் அடிப்பட்டரை கொஞ்சம் சாய்வாயிருக்கும். எவ்வித உழுவிற்கும் லாயக்குள்ளது. மணல் பூமியில் மிகவும் நன்றாய் உழும். ஆறு அங்குல ஆழமும் 8 அங்குல அகலமுள்ள படைச்சால் ஓடும்.

குட்டை கருவத்தடி. இரட்டை எஃகு மேழிகளுடன் அல்லது நீண்ட கருவத்தடி ஒத்தை மேழியுடன் இக்கலப்பை பூட்டலாம். இக்கலப்பையை இழுக்க சுமாரான ஜதை வேண்டும். இரும்புபாக மட்டும் ஒற்றை உருக்குக் கைபிடியுள்பட ரூ. 8-12-0, கொழுமுனைமட்டும் ரூ. 0-3-6, கொழுமட்டும் ரூ. 0-14-9, இரக்கை மட்டும் ரூ. 3-1-3. சடாரா ரோட் கூப்பர் இன்ஜினீரிங் ஒர்க்ஷிலாவது, விவசாய டிமான்ஸ்டேட்டர்களிடமாவது கிடைக்கும்.

8. கிர்லோஸ்கர்.—ஜெமின்தார்.—கிர்லோஸ்கர் கம்பெனியில் கிர்லோஸ்கர் வாடியில் செய்யப்பட்டது. கூப்பர் நெ. 26 போலுள்ளது. இரும்புப்பாகமும் ஒரு உருக்கு மேழியும் விலை ரூ. 11-0-0. கூழைக்கருவத்தடியுடனும் எஃகு இரட்டை மேழியுடனும் தென்னிந்திய எந்த ஸ்டேஷனிலும் விலை ரூ. 25-0-0. பதப்படுத்த கொழு விலை ரூ. 1-0-0. கொழுமுனை ரூ. 0-6-0, இரக்கை ரூ. 3-8-0. ஏஜண்டுகள், பாரி கம்பெனி, மதராஸ்.

9. ரான்ஸ்மஸ் விக்டரி.—ரான்ஸ்மஸ், ஸிம்ஸ், ஜெவிரிஸ் கம்பெனியாரால் சீமையில் செய்யப்பட்டது. பூரு கலப்பையும் கருவத்தடியுடன் எஃகு இரும்பு, ஒத்தை அல்லது இரட்டை மேழியுடன் பூட்டலாம். ஆறு அங்குல ஆழமும் 9 அங்குல அகலமுள்ள படைச்சால் ஓட்டும் ஒரு ஜதை நல்ல மாடு வேண்டும். மதராஸ் விலை இரட்டை மேழியுடன் ரூ. 32 எஃகு கொழு விலை ரூ. 1-1-0. மதராஸ் 2-வது லயன் பீச் வில்லியம் ஜாக்ஸ் கம்பெனியாரிடம் கிடைக்கும்.

10. இலகுவான எஃகு இரட்டை இரக்கை வரப்பு போடும் கலப்பை.—வார்ப்பு இரும்பு இருப்புச்சட்டமும் புதிப்பிக்கக்கூடிய பதம் பண்ணித் தோய்ந்த சொருகு முனையும் எஃகு இரட்டை மேழியுள்பட்டது. கருவத்தடியும் மேழியும் குருகவும் நீட்டவும் கூடும். 12 அங்குல அகலமும் 9 அங்குல ஆழமும் உள்ள 'V' போன்ற உழவு சால் போட லாயக்கானது. சுமாரான ஒரு ஜதை மாடு இழுக்கத்தக்கது. மரத்தடியுடன் 65 ராத்தல் இடையுள்ளது. மரத்தடி நீக்கி கலப்பையின் விலை ரூ. 10-8-0 மதராஸ் பிராவின்ஸில் எந்த ஸ்டேஷன் டெலிவரிக்கும் ஸடாரா ரோட் கூபர் இஞ்சினீரிங் ஒர்க்ஸ் கம்பெனியில் கிடைக்கும்.

11. வாய்க்கால் வரப்புகட்டும் கருவி.—வரப்புகளும் மஞ்சு முகடுகளும் போடத்தகுந்ததாய் லேசாய் சிலவு சுருக்கமாய் தோட்ட பூமிகளுக்கு பாத்திபோட லாயக்கானது. புஞ்சை பூமிகளில் பெரு மழையால் நஷ்டம் ஏற்படாதபடியும் ஈரம் காத்து நிற்பதற்காகவும் வரப்பு கட்டவும் ஏற்றது. மரத்தடியுள்பட 70 ராத்தல் இடையுள்ளது. சிறு ஜதை மாடுகளால் இழுக்கதக்கது. மாடுகளின் உயரத்துக்குத்தக்கபடி மரத்தடியை சரிப்படுத்திக்கொள்ளமுடியும். கோயமுத்தூர் டெலிவரிக்கு ரூ. 8-4-0, சென்னை சமஸ்தானத்தில் எந்த ஸ்டேஷன் டெலிவரிக்கும் ரூ. 8-12-0. பி.எஸ். ஜி. ஸன்ஸ் சாரிடி இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடுட், பீளமேடு, கோயமுத்தூரில் கிடைக்கும்.

12. முன் பல்களை வெட்டி.—எஃகுத்துண்டு முக்குப்பட்டம் பிடித்து கெட்டி பண்ணப்பட்ட முக்கோண சட்டத்தில் 9 எஃகு முள்ளாணிகள் பதிக்கப்பட்டது. 3½ அங்குளம் ஆளம் பாயும் இடை 56 ராத்தல். சிறு மாடுகள் ஒரு ஜதை இழுக்கும். உழவுக்குப்பின் கட்டியை உடைத்து பூமியை புழுதியாக்க லாயக்கானது. விதை மூடவும், கைத்தெளி விதைப்பு பயிர்களின் ஊடே அடிக்கவும், பூமியைகௌறி காற்றோட்டம் உள்ளே செல்லும்படி செய்யவும், சிறு களைப்பூண்டுகளை அடியோடு ஒளியவைக்கவும், மேல்தரை கம்மலை உடைக்கவும், தரை மட்டத்தைப்பொலபொலப்பாக வைக்கவும் ஏற்ற கருவி. கோயமுத்தூர் டெலிவரி விலை ரூ. 10-8-0. எந்த ஸ்டேஷனுக்கும் டெலிவரி ரூ. 11-4-0. மேற்சொன்ன பி.எஸ். ஜி. ஸன்ஸ் கம்பெனியில் கிடைக்கும்.

13. மண்வாரி.—3 கன அடி மண் அள்ளும் ஒற்றைத்தகட்டு மெல்லிய எஃகினால் செய்யப்பட்டது. அடியில் இரு பட்டைகள் கொடுக்கப்பட்டது. லேசில் மண்ணை முகர்ந்து சென்று பள்ளத்தில் கொட்டவும்

ஒரு ஜதை மாட்டினுல் சுலபமாய் இழுத்துச்செல்லவும் லாயக்காய்ச் செய்யப்பட்டது. இடை 83 ராத்தல். பூமிகளை மேடுபள்ளம் பார்த்துச் சமப் படுத்த தக்க ஒரு சாதனம். இதனுல் ஓடை வெட்டவும், கம்மாய்கள் ஏரிகள் இடங்கு செய்யவும், ஓடைகளை மண் வெட்டி சுத்தப்படுத்தவும் இதுபோன்ற பல மண்வேலைகளுக்கும் மிகவும் உபயோகமான ஒரு கருவி. இரண்டு மரப்பிடிகளுடன் கோயமுத்தூர் டெலிவரிக்கு விலை ரூ. 10-8-0. இதர ஸ்டேஷன் டெலிவரிக்கு ரூ. 11-4-0. மேற்சொன்ன பி.எஸ். ஜி. கம்பெனியில் கிடைக்கும்.

14. **மெக்கார் மிக்ஷரிங் மாட்டுக்களை வெட்டிகள் பயிர் அடிக்கும் கருவி கள்.**—5 அல்லது 7 பற்களுள்ளவையாய் குறுக்கவும் நீட்டவும் சவுகரிய முள்ள லீவர் ஏற்பாட்டுடன் கூடினது. முகடுகளும் பள்ளங்களும் போடத்தகுந்த துணைக்கருவிகளும் இத்துடன் உண்டு. பயிர்களின் இடை வெளி மத்தியில் ஓட்ட மிகவும் சிலாக்கியமானவை. மதராஸ் டெலிவரி ரூ. 29. மதராஸ் வால்கார்ட் பிரதர்ஸிடம் கிடைக்கும்.

15. **சிந்துவாகி ஆலை அடுப்புக்கான கிழக்கு இரும்பு அக்னி கம்பிகள்.** 27 அங்குளம் நீளம், 15 அங்குல அகலம். இடை வெளி ½ அங்குலம். அடுப்பின் உஷ்ணத்தால் வளைந்துபோவதில்லை. வெகு காலம் உழைக் கும். இரண்டு வார்ப்புத் தட்டுகளுடன் விலை ரூ. 9-0-0 எல்லா ஸ்டேஷன் டெலிவரிக்கும் ஸடாரா ரோட் கூபர் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ் கம்பெனியாரிடம் கிடைக்கும்.

16. **பி.எஸ்.ஜி. 11 இரும்பு உருண்டை போடப்பட்ட கபலை வண்டிகள்.** 1 அங்குல எஃகு அச்சும், 14½ அங்குலம் சுற்றளவுமுள்ள இரும்புருண் டைகள் உள்ளே போடப்பட்ட குடம் உண்டு. உருளையின் மேல் உள்ள உள்ளாழி 3½ அங்குல அகலமும், 1-3/8 அங்குல ஆழமும் உள்ளது. இடை 20 ராத்தல்.

சாதாரணமாய் வைக்கப்பட்டிருக்கும் மரச்சட்டத்தின் மேல் இருத்தி முறுக்கப்பட்ட இரும்பு அச்சில் சக்கரம் சுழலும். மரச்சக்கரங்களைப் பார்க்கிலும் வெகு காலம் சுலபமாய் சிக்கில்லாமல் ஓடுவதால் மாடுகள் தண்ணீர்ச் சால்களை லேசாய் இழுத்துவர முடியும். கோயமுத்தூர் டெலி வரிக்கு ரூ. 10. எந்த ஸ்டேஷனுக்கும் டெலிவரி ரூ. 10-8-0. பி.எஸ்.ஜி. ஸன்ஸ் கம்பெனியில் கிடைக்கும்.

17. **கிர்லோஸ்கர் ரோலர் பேரிங் கவலை வண்டிச்சக்கரம் நெ. 2.**— 1-3/4 அங்குல அகலமுள்ள குழி சக்கரம் எந்த ஸ்டேஷன் டெலிவரிக்கும் ரூ. 7. 3 அங்குல அகலமுள்ள குழிச்சக்கரம் ரூ. 9-4-0. . கிர்லோஸ் கர்வாடி, கிர்லோஸ்கர் பிரதர்ஸ் கம்பெனியாரால் செய்யப்பட்டது. ஏஜண்டு கள் பாரி கம்பெனி, மதராஸ்.

என். ஜி. சார்லி,
அக்ரிகல்சரல் ரிஸர்ச் இஞ்சினீர்.

11. இரும்புக் கலப்பைகளை உபயோகிப்பவர்களுக்கு ஆலோசனை.

1. உங்களுடைய நிலத்திற்கும், நீங்கள் செய்ய விரும்பும் சாகுபடிக்கும் ஏற்ற கலப்பைகளைக்கொண்டு உழவேண்டும். இதைப்பற்றி உங்களுடைய தாலுகா விவசாய டிமான்ஸ்ட்ரேடரை கலந்து கொள்ளவேண்டியது. களிமண் நிலங்களுக்கேற்ற கலப்பை மணற் சாரிக்கேற்றதினின்று மாறு படும். எஃகைவிட தோய்த்த இரும்பு நாட்பட நிற்பதால் தோய்ந்த இரு ம்பால் செய்யப்பட்ட கலப்பைகளைத்தான் மணற்சாரி நிலங்களிலும் சறள் தரைகளிலும் உபயோகப்படுத்தவேண்டும்.

2. நிலத்தில் சரியான பதமிருக்கும்போதுதான் உழவேண்டும். சில தினுசு நிலங்களில் அதிக ஈரமாயிருக்கும்போது உழுதால் கலப்பைக்கு மண் ஒட்டிக்கொள்ளும். நிலம் அதிகமாய்க் காய்ந்திருப்பின் கட்டிகள்

கிளம்பும். அதிக ஈரத்திலும் காய்ச்சலிலும் உழுவதற்கேற்ற கலப்பைகள் செய்யப்பட்டிருந்தும், சாத்தியப்பட்டமட்டும் உங்களுடைய நிலத்திற்கேற்ற கலப்பைகளைக்கொண்டு உழுவதற்கு வேண்டிய பதமிருக்கும்போதே உழுதல் தான் நலம்.

3. பிரதிதினமும் உழுவதற்குமுன், கலப்பையிலுள்ள ஆணிகள் பிகுவாயிருக்கிறதாவென்பதைப் பார்த்து, பிகுவில்லாதவைகளை முடிக்கிவைத்துக்கொள்ளவேண்டும்.

4. சரியாய் உழும்படியாகவும், மாட்டிற்கு அதிக சிரமமில்லாமலிருக்கும் படியும், கொழு சரியாய் வேலை செய்யும்படியாகவும் கலப்பைகளை ஒழுங்காய்ப்பூட்டி உழவேண்டியது. கலப்பையின் கொழு நுணிமட்டும் பூமியில் பதியும்படி வைத்துக்கொண்டு உழக்கூடாது. கலப்பையின் அடிபாகம் படைசாலுக்குச் சரியாய் நிலத்தில் பதியும்படி வைத்து உழவேண்டியது. ஏனெனில் கலப்பையின் கொழு நுணி பூமியில் ஊடுருவிச்செல்லும்படி செய்யப்பட்டிருக்கிறது. தவிர, கலப்பைக் கொழுவின் நுனிமட்டும் பூமியில் பதியும்படிவைத்து உழுதால், கலப்பையின் மண் பலகை (mould board) அது சாதாரணமாயிருக்கவேண்டிய இடத்தினின்று தூக்கப்பட்டு உழவு சீராயிருப்பதில்லை. கொழுநுணியும் சீக்கிரம் தேய்ந்துவிடும்.

5. கலப்பைச் சங்கிலி அல்லது ஏர்காலை நுகத்தடியில் கட்டுமிடமானது கூடியமட்டும் கலப்பைக்கு நேராயிருக்கும்பொருட்டு, மாடுகளை நெருக்கிப் பூட்டவேண்டியது. அப்படியில்லாமல் நுகத்தடியில் ஏர்காலைக் கட்டுமிடம் கலப்பைக்கு ஒரு பக்கமாயிருக்கும்படி மாடுகளைப் பூட்டினுல் படைச்சால் அதிகமாகாதிருப்பதற்காக கலப்பையைச் சாய்த்துப்பிடிக்க வேண்டியிருக்கும் அப்பொழுது கலப்பையின் மண்பலகை (mould board) சரியாய் வேலை செய்யாது. கலப்பையின் அடிபாகம் எப்பக்கத்திலும் சமமாக படிந்திருக்க வேண்டும்.

6. கட்டை ஏர்க்கால் கலப்பைகளில் முன்சக்கரத்தை உபயோகப்படுத்தின், அதைப் படைசாலின் ஆழத்தை ஒழுங்குபடுத்துவதற்காக உபயோகித்தல்கூடாது. ஏர்க்காலை வெடிசு தனிசு பார்த்துப் பூட்டவேண்டியது. அதற்காக ஏர்க்காலில் வரம்புகள் வரையப்பட்டிருக்கின்றன. பிடியின் நீளத்தை மாற்றியும் படைசாலின் ஆழத்தை ஒழுங்கு படுத்தியும் கொள்ளலாம். அதன் பிறகுதான் சக்கரம் பூமியில்பட்டு ஓடும்படி அதை வைத்துக்கொள்ளவேண்டும்.

7. கொழுக்களையும் கொழு நுணிகளையும் தேய்ந்தவுடன் மாற்றவேண்டும். தேய்ந்த கொழுக்களுடன் உழுதல் மாட்டுக்கு அதிக சிரமத்தைக் கொடுக்கிறது. வேலையும் சீராயிருப்பதில்லை. கலப்பையின் மண்பலகையில் அழுக்கடையாமல் சுத்தமாயும் வழுவழுப்பாயுமிருக்கும்படி வைத்துக் கொண்டிருக்கவேண்டும். இல்லாவிடில் மண்சரியாய் கீழே விழாது. மண் பலகையை கல்லைக்கொண்டு சுரண்டக்கூடாது. அப்படிச் செய்யின் கீற்றுகள் உண்டாகும். அப்படி கீற்றுகள் ஒன்றுமில்லாமல் மண்பலகை வழவழப்பாயிருக்கவேண்டும்.

8. கலப்பைகளின் தனிப் பாகங்களுக்கு ஆர்டர் செய்யும்பொழுது கலப்பைகளின் விவரங்களைத் தெளிவாய்ச் சொல்லவேண்டும். கலப்பைகளில் ஏதாவது, ஒரு இடத்தில் காணப்படும். கலப்பை செய்தவர் பெயர், கலப்பையின் நம்பர் இவைகளையும் தெரியப்படுத்தவேண்டும். இந்த விவரங்கள் தெரியவில்லையானுல், தேய்ந்துபோன சாமான்களையும் அவைகளின் உருவப் படங்களையும் அனுப்பவேண்டும்.

9. அடுத்த உழவு காலம் வரை கலப்பையை உள்ளே வைப்பதற்கு முன், அதை நன்றுகச் சுத்தம் செய்து மண் பலகைக்கும். தேயக்கூடிய மற்றுமுள்ள பாகங்களுக்கும் எண்ணெயிட வேண்டும்.

10. கலப்பை தேவையானவர்கள் இந்தப் பஞ்சாங்கத்தில் கண்டிருக்கும் கலப்பைகளின் ஜாபிதாவிலிருந்து தேர்ந்தெடுக்கவேண்டும்.

12. I.—பரிசோதனைக்கு சாமான் அனுப்புவதில் கவனிக்கவேண்டிய குறிப்புகள்.

(1) பரிசோதனைக்காக மண், உரம் முதலியவை அனுப்புதல்.
(2) புழுப்பூச்சிகளால் ஏற்படும் நாசம் தெரிவித்தல்.
(3) நோய்கண்ட பயிர், செடி முதலியவற்றில் மாதிரி அனுப்புதல்.
(4) பெயர் முதலிய விவரங்கள் தெரிவதற்கு அனுப்பும் வகைகள்.

கிருஷி வேலையில் காரியசித்தி அடைவதற்கு அதன் அம்சங்கள் பலவற்றையும் நன்குணர்ந்து ஒவ்வொன்றையும் ஊக்கத்துடன் நுட்பமாய் கவனித்துவரவேண்டும். முக்கியமாய், பூமி செம்மையாய்ப் பண்படுத்த வேண்டும்; நல்ல உரம் கொடுக்கவேண்டும்; கிரமப்படி தண்ணீர் கட்ட வேண்டும். காலக்கிரமத்தில் விதைத்தல் முதலிய வேலைகள் தவராமல் செய்யவேண்டும். புழுப்பூச்சிகளாலும், இதர நோய்களினின்றும் பயிர் நாசமடையாமல் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். இப்படியாக பலவிதமான விஷயங்களையும் சீர்தூக்கித் தராதரம் அறிந்து வேலை செய்ய வேண்டும்.

ஆதலால் கிருஷி செய்பவர் தனது பூமி எத்தகையது, அதில் உரச்சத்துகள் எவை குரைவுபட்டிருக்கின்றன. பூமியை எந்தெந்த விதங்களில் சீர்திருத்தம் செய்துகொண்டு அதனுல் விளைவை அதிகரித்துக்கொள்ளலாம் என்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். பயிர்களுக்கான உரங்கள் அநேக வகைகள் விற்பனையாகின்றன. அவற்றில் அந்தந்த பயிர்களுக்கும் பூமிகளுக்கும் எவை சிறந்தவை, எவ்வளவு, எப்பொழுது போடவேண்டும் என்று பற்பல விஷயங்களையும் கிருஷி செய்பவர் தெரிந்துகொள்வதவசியம். பூமியின் தன்மையையும், பயிர்களின் வளர்ச்சியையும் பற்றி விவரமான ஆராய்ச்சிகள் செய்துவருவதற்கென சர்க்கார் ரசாயன சாஸ்திரி ஒருவர் இருக்கிறுர். ஷ விஷயங்களில் ஆலோசனைக்கு கிருஷிகர் அனைவரும் ஷ ரசாயன சாஸ்திரியைக் கலந்து கொண்டு நன்மையடையலாம். மண், உரம் முதலியன இவருக்கு அனுப்பினுல் அவைகள் பரீக்ஷை செய்யப்பட்டு ஒவ்வொரு இனங்களிலும் என்ன செய்தல் நலம் என்று தெரிவிக்கப்படும். **பரிசோதனைக்காக மண், உரம் முதலியவை அனுப்புவதில் கவனிக்கவேண்டிய குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டிருக்கின்றன.**

அநேகமாய் எல்லாப்பயிர்களும் புழுப் பூச்சிகளாலோ, பூஞ்சாணக் கிருமிகளால் ஏற்படும் நோய்களாலோ ஓரோர் சமயங்களில் நாசமடைகின்றன. முக்கியமான தானியப்பயிர்களில் அடிக்கடி விழும் படைப்புழுக்களும், காட்டு வெள்ளாமைகளில் தோன்றும் கம்பளிப் பூச்சிகளும் சர்வசாதாரணமானவை. இவை இருந்தாற்போலிருந்து திடீரென்று அபாரமாய்த் தோன்றி, பயிர்களுக்கு மகத்தான நாசம் விளைவித்துவிட்டுப் பொசுக்கென்று மறைந்துவிடுகின்றன. இப்பூச்சிகளின் பழக்கவழக்கங்கள் தெரியாமல், நஷ்டமடையும் குடியானவர்கள், யாது செய்வதென்று அறிந்துகொள்ளமாட்டாமல் தவித்து விழிக்கின்றனர். இதே மாதிரி செம்மையாய் எருவிட்டு அளவாய்த் தண்ணீர் கட்டிக்கொண்டுவரும்போது கூட, தோப்புகளில் பாக்குகள் பிஞ்சிலேயே உதிரும்போதும், சோளத்தில் கரிப்பூட்டைவிழும்போதும், இதர பயிர்களில் செடிகள் தானுகத் திடீரென்று காய்ந்துவிடும்போதும் காரணம் விளங்காமல் சங்கடமடைகின்றனர். மேல் சொன்ன கெடுதல்களெல்லாம் பூஞ்சானம் எனப்படும் அதி நுட்பமான தாவர வர்க்கக்கிருமிகளால் ஏற்படுகின்றன. இவை பயிர்களில் ஒவ்வொரு செடியிலும் ஊடுருவிப்பாய்ந்துகொண்டு, பயிற் செடிகள் தமக்காகக் கிரகிக்கும் உணவு சத்துக்களைத் திருடித்தின்று தாம் வளர்ந்து பயிர்கள் செழிக்கவொட்டாமல் தடித்து நோய்க்குள்ளாகின்றன. இப்படியாகப் பூச்சிகளாலும் பூஞ்சாணக்கிருமிகளாலும் ஏற்படும் நாசத்தை அவை பலமாய் முத்திவிட்ட பிறகுதான், சாதாரணக் குடியானவர்கள் உணர்ந்துகொள்கின்றனர். "வெள்ளம் வருமுன் அணைபோடு" என்ப

தாகப் பெரியோர் வசனம் சொல்வார்கள். அவை வெள்ளாமை விஷயத்தில் பயிர்களை நோய் நொடிகளினின்றும் காப்பாற்றிக்கொள்ளவும் ஏற்றதாக நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். பயிர்களில் தோன்றும் புழுப் பூச்சிகளையும், பூஞ்சாணக் கிருமிகளையும்பற்றி ஆருய்ச்சிகள் செய்து கிருஷிகருக்கு அவற்றைத் தடுக்கவோ, அடக்கவோ யுக்திகள் சொல்லிக் கொடுப்பதற்கெனவே, கோயம்புத்தூர் விவசாய ஆருய்ச்சி நிலயத்தில் பூச்சி சாஸ்திரி, பூஞ்சாண சாஸ்திரி என்பதாகப் பிரத்தியேக உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். பயிர் செடிகள் பூச்சிகளாலும், பூஞ்சாண நோயினுலும் பீடிக்காமல் அவற்றில் மேற்கண்ட உத்தியோகஸ்தர்களுக்கு மாதிரி அனுப்பி அவர்களது ஆலோசனையும் உதவியும் பெறலாம். **இது விஷயமாய் கவனிக்கவேண்டிய குறிப்புகள் விவரமாய் வேறொரு பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.**

செம்மையாய்ப் பயிரிடும் முறைகளைக் கிருஷிகர்களுக்கு எடுத்துக்கூறி அவற்றைச் செய்து காட்டுவதற்கென அநேகமாய் ஒவ்வொரு தாலூகாவிலும் விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். முன்பு சொன்ன விஷயங்கள் பலவற்றிற்கும் அவர்களை தகுந்த யோஜனையும் உதவியுமளிக்கக்கூடும்.

ஆகையால் கூடுமானவரையில் கோயமுத்தூரிலுள்ள ஆராய்ச்சி நிபுணர்களுக்கு எழுதுமுன் டிமான்ஸ்டிரேட்டர்களையே கலந்து கொள்வது நலம்.

1. மண், உரம் முதலியவைகளை சாஸ்திரோக்த பரிசோதனை செய்வதற்கு மாதிரி அனுப்பவேண்டிய முறை.

கோயமுத்தூரிலிருக்கும் சர்க்கார் விவசாய ரஸாயன சாஸ்திரி விவசாய இலாகா விஷயமாய் ஏற்பட்ட வேலையோடு கூடத் தனக்குக் கிடைக்கும் சாவகாசத்துக்குள், சாத்யப்பட்டமட்டும், நிலச்சுவான்தார்களும், சமுசாரிகளும் அனுப்பும் மண், எரு இவை போன்றவைகளை பரீக்ஷை செய்து கொடுக்கச் சித்தமாயிருக்கிறுர். இவ்வித ஆராய்ச்சிக்கு விதிக்கப்படும் கட்டணங்கள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன :—

A. மண்.—ஒரு நிலத்தின் செழிப்பு அநேக காரியங்களைப் பொருத்தது. ஆகையினுல் ஒரு நிலத்தில் என்னென்ன பயிர்கள் எம்மட்டிற்கு விளையுமென்பதை நிர்ணயிப்பதற்கு அந்த மண்ணின் ரஸாயனப் பரீக்ஷை ஒரு பாங்குதான் பிரயோஜனப்படுமென்று சொல்லவேண்டும். ஆனுல் பரிசோதனைக்கு அனுப்பும் மாதிரி மண் கிரமப்படி சேகரிக்கப்பட்டும், அத்துடன் கீழே குறிப்பிட்டிருக்கும் விஷயங்களுக்குச் சரியான பதில்களும் அனுப்பும் பக்ஷத்தில் அந்த மண்ணின் ரஸாயன பரீக்ஷையைக் கொண்டு, அப்பூமியில் குறைவாயிருக்கும் பயிருணவுப் பொருள்கள் எவையென்றும், அதில் ஏற்பட்டிருக்கும் வேறு குறைபாடுகள் இன்னென்னவென்றும், அவைகளுக்குப் பரிகாரங்கள் எவை என்றும் ஆலோசனை தெரிவிக்கப்படும்.

பரிசோதனைக்கு அனுப்பும் மண், அது எந்த நிலத்திலிருந்து எடுக்கப்பட்டதோ, அந்த நிலத்தின் எல்லாவிதமான தாரதம்மியங்களையும் காட்டக்கூடியதாயிருக்கவேண்டுமென்பது மிகவும் முக்கியமான விஷயம். பூமியில் அதிக செழிப்பான ஒரு பாகத்திலிருந்தாவது, அல்லது, மிகவும் சத்து குறைவுள்ள இடத்திலிருந்தாவது மாதிரி மண் எடுக்கக்கூடாது. **ஆகையினுல் கீழே சொல்லிய முறைப்படி மாதிரி மண்எடுத்து அனுப்பவேண்டும்.** பூமியில் பல பக்கங்களில், சுமார் 12 இடங்களில், 8 அல்லது 9 அங்குலம் ஆழம் மண்ணை வெட்டி எடுத்து, இவைகள் எல்லாவற்றையும் ஒன்ருய்க் கலக்கவேண்டும். மாதிரி மண் எடுக்கும் இடங்களில், மேலாக புல் பூண்டுகள் ஏதேனும் முளைத்திருந்தால், அவைகளைச் செதுக்கி அப்புறப்படுத்தியபின், மாதிரி மண் வெட்டி எடுக்கவேண்டும். இம்மாதிரி 10, 12 இடங்களில் எடுத்து, ஒன்ருய்ச் சேர்த்து, மண்ணை நிழலில் உலர்த்தி அதில் ஐந்து ராத்தல் மண்ணை ஒரு துணிப்பையில் போட்டு, நன்ருய்த் தைத்து, அதற்கு மேல் ஒரு சாக்கு (கோணி) போட்டுத் தைத்து, அதைக்

கோயமுத்தூர், லாலி ரோடு போஸ்டைச் சேர்ந்த கவர்ன்மெண்டு அக்ரி கல்சுரல் கெமிஸ்ட் (சர்க்கார் விவசாய ரஸாயன சாஸ்திரி) அவர்களுக்கு விலாசமிட்டு அனுப்பவேண்டும்.

மாதிரி மண் அனுப்பும் நபரின் பெயரும் விலாசமும் ஒரு கடிதத்தில் எழுதி, மாதிரி மண் மூட்டையுடன் சேர்த்து அனுப்பவேண்டும். அதுவு மன்றி கீழே குறிப்பிட்டிருக்கும் விஷயங்களுக்குப் பதில் எழுதிய தனிக் கடிதம் ஒன்று கவர்ன்மெண்ட் அக்ரிகல்சுரல் கெமிஸ்ட் அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

(1) மாதிரி மண் அனுப்பும் நபரின் பெயரும், விலாசமும்.
(2) ஸ்தலம்—நிலமிருக்கும் கிராமம், தாலூகா, ஜில்லா.
(3) நிலத்தின் சர்வே நெம்பர்.
(4) நிலம்—நஞ்சையா, புஞ்சையா, தோட்டமா, நஞ்சையானுல் ஒரு போகமா, இருபோகமா.
(5) அந்த நிலத்தில் சாதாரணமாய் சாகுபடி செய்யும் பயிர்கள் எவை.
(6) தண்ணீர் பாய்வதற்குள்ள வசதிகள்.
(7) தண்ணீர் வடிகால் வசதிகள்.
(8) அந்த நிலத்திற்கு இதுவரை போட்டிருக்கும் உரங்களின் விபரம்.
(9) அனுபோகதாருக்குத் தெரிந்தமட்டில் அந்த நிலத்தின் குறை கள் என்ன ?

ஒரே மூட்டையில் இரண்டு மூன்று மாதிரி மண்கள் அனுப்பவேண்டி யிருந்தால், அவைகளைத் தனித்தனிப் பைகளில் போட்டு, ஜாக்கிரதையாய் தைத்து, அவைகள் வழியில் தூக்கி எடுக்கும்போது ஒன்றோடொன்று கலவாமலிருக்கும்படி, பந்தோபஸ்தாய்க்கட்டி, அனுப்பவேண்டும்.

B. உரங்கள்.—நன்ருய் மூட்டை கட்டி ஒரு ராத்தல் இடைக்கு குறை யாமல் மாதிரி உரம் அனுப்பவேண்டியது. சுண்ணும்பு போன்ற சரக்கு களை பரீக்ஷைக்கு அனுப்புவதானுல், அவைகளை காற்று உள்போகாதபடி தகர டப்பாவில், நன்ருய் அடைத்து அனுப்பவேண்டும். அனுப்பும் மாதிரி உரம், அந்த உரம் பூராவின் தாரதம்மியங்களைக் காட்டக்கூடியதாயிருக் கவேண்டும். மொத்தம் உள்ள உரம் அதிகமாயிருந்தால் 10 மூட்டைக்கு ஒரு மூட்டையிலிருந்து மாதிரி உரம் எடுத்து, இம்மாதிரி பல மூட்டை களிலிருந்து எடுத்த உரத்தை நன்ருய்க் கலந்து, இவ்வாறு ஒன்ருய்க் கலந்த உரத்திலிருந்து பரிசோதனைக்கு மாதிரி உரம் எடுத்தனுப்பவேண் டும். மொத்த உள்ள உரம் கொஞ்சமானுல் உரம் முழுவதையும் நன் ருய்க் கலந்து, அதன்பின் அதில் மாதிரி உரம் எடுக்கவேண்டும்.

கட்டணம்.—ரஸாயன பரிசோதனைக்குக் கீழே குறிப்பிட்டிருக்கும் ஜாபி தாப்படி, பணம் வசூலிக்கப்படும். தென்னிந்தியா யூனைடெட் பிளாண்டர்ஸ் (தேயிலை, காபி, ரப்பர் தோட்டக்காரர்) சங்கத்து மெம்பர்களுக்கு 100-க்கு ரூபாய் பத்து தள்ளுபடி செய்யப்படும். அவர்கள் கட்டவேண்டிய பணத்தை அவர்கள் சங்கத்து காரியதரிசி மூலமாய் வசூல் செய்யப்படும்.

பூமியைத் தாங்களே பயிர் செய்யும் குடிகளுக்கும் அல்லது பூமியுள்ள குடியானவர்களுக்கும் தங்கள் சொந்தத்திற்கும் செய்துகொள்ளும் பரி சோதனைகள்க்கு அடியிற் கண்ட தொகைகளில் ஐந்தில் ஒரு பாகம்தான் விதிக்கப்படும். இந்த சகாயம் அடைய விரும்பும் சமுசாரிகள் அவரவர் கள் இலாகா அஸிஸ்டெண்ட், அல்லது டிப்டி டைரெக்டர் அவர்களிட மிருந்து இவ்விதப் பணச்சகாயம் செய்யலாமென்பதற்கறிகுறியான அத் தாட்சி ஒன்று பெற்று, மாதிரி மண் அனுப்பும் சமயத்திலே, அந்த அத்தாட்சியையும் சர்க்கார் விவசாய ரஸாயன சாஸ்திரிக்கு அனுப்ப வேண்டும். பரிசோதனைக்கு ஏற்பட்ட பணத்தை சமுசாரிகள் முன் கூட்டி யே கட்டாவிடில், பரிசோதனையின் தாற்பரியம் அடங்கிய கடிதம், வி.பி. தபாலில் அனுப்பப்படும்.

A. மண்.

	ரூ.
(1) பூர்த்தியான ரஸாயனப் பரிசோதனையுடன் பயிருக்கு உடனே கிடைக்கக்கூடிய சாம்பல் கார சத்தும் (potash) பிரகாசிதமிலம் அதாவது எலும்பு சத்தும் (phosphoric) (acid) கண்டுபிடிக்க	25
(2) மண்ணின் வாசி, அதாவது மண்ணில் எவ்வாறு, எவ்வளவு மணல், களிமண், வண்டல்மண் முதலியவைகள் இருக்கின்றன என்பதை நிர்ணயிக்க	5
(3) மேற்கண்ட இரண்டுவித பரீக்ஷைகளும் செய்ய	30
(4) களர் சம்பந்தமான பூமி (அதற்காக அதிகம் செலுத்த வேண்டிய கட்டணம்)	10

B. உரங்கள்.

(1) பிண்ணாக்குகள் (தழைக்காரல் அல்லது நைட்ரோஜன்) (Nitrogen)	5
(2) இரத்தப் பொடி (நைட்ரோஜன்)	5
(3) நைட்ரோலிம் அல்லது கால்ஷியம் ஸ்யனமைடு (நைட்ரோஜன்) (Nitrogen)	5
(4) நைட்ரேட் ஆப் சோடா (Nitrote of Soda) (நைட்ரோஜன்)	5
(5) நைட்ரேட் ஆப் லைம் (Nitrate of lime) (நைட்ரோஜன்)	5
(6) கேநிட் (Kainit) மியூரியேட் ஆப் பொட்டாஷ் அல்லது சல்பேட் ஆப் பொட்டாஷ் (Muriate of Potashor Sulphate of potash)—சாம்பல் சத்து	5
(7) சுண்ணாம்புக்கல் அல்லது நீற்றின் சுண்ணாம்பு (சுண்ணாம்பு சத்தும் கரியமிலவாயும்) (lime and carbon di-oxide)	5
(8) மீன் எரு—(நைட்ரொஜன் பிரகாசிதமிலம் அதாவது எலும்புச்சத்து) (nitrogen and phosphoric acid) ..	10
(9) எலும்புத்தூள் (நைட்ரொஜன், பிரகாசிதமில சத்து) ..	10
(10) சூப்பர்பாஸ்பேட், பேசிக்சிலேக் - Superphosphates and basic slag (கரைக்கக்கூடிய மொத்தம் எலும்புச்சத்து).	10
(11) வெடியுப்பு அல்லது பொட்டிலுப்பு (நைட்ரொஜன், சாம்பல் கார சத்து)	10
(12) சாம்பல் (சாம்பல் கார சத்து, சுண்ணாம்பு சத்து) ..	10
(13) பிண்ணாக்கும் எலும்புத்தூளும் கலந்த உரம் (நைட்ரொஜன், பிரகாசிதமிலம்)	10
(14) பிண்ணாக்கும், மீன் எருவும் கலந்த உரம் (நைட்ரோஜன், பிரகாசிதமிலம்)	10
(15) மீன், எரு, பிண்ணாக்கு, சல்பேட் ஆப் பொட்டாஷ் sulphate of potash மூன்றும் கலந்த உரம் (நைட்ரோஜன், சாம்பல்காரம், பிரகாசிதமிலம்)	10
(16) நைட்ரோஜன், சாம்பல்காரம், பிரகாசிதம், சுண்ணாம்பு ஆகிய 4 சத்தும் அடங்கிய கலப்பு உரம்	20
(17) மாட்டு எரு	15
(18) பசுந்தாள் எரு (green nanure)	15
(19) தழை, இலை, மக்கிய பசளை உரம் (vegetable compost).	15

. ஆடுமாடுகளுக்கு உபயோகப்படும் சாமான்களும் தீவனமும்.

(1) மேற்படி சரக்குகளை பூர்த்தியாய் ஆராய்ச்சி செய்ய ..	30
(2) மேற்படி சரக்குகள் (உரத்தில் கிடைக்கக்கூடிய) சாம்பல்கார சத்தும் பிரகாசிதமில்சத்தும் கண்டுபிடிக்க அதிகம்	10

D. பலதினுசு சாமான்கள்.

(1) எள்ளு, நிலக்கடலைப் போன்ற எண்ணெ சத்துள்ள வித்துகள் (எண்ணெ சத்துமட்டும் கண்டு பிடிக்க) 5
(2) தண்ணீர் (பயிர்களுக்கு உபயோகம்படும் ஜலத்திற்கு மாத்திரம்) 10

II—புழுப்பூச்சிகளால் ஏற்படுகிற சேதத்தைப்பற்றி ரிப்போர்ட் செய்வதிலும், அப்பூச்சிகளைப் பரீக்ஷைக்கு அனுப்புவதிலும்--கவனிக்கவேண்டிய விதிகள்.

வெள்ளாமைப் பயிர்களிலும், தோட்டங்களில் பயிர் செய்திருக்கிற செடிகளிலும், பூச்சிகள் விழுந்து நாசஞ் செய்வதாகக் கண்டு, அப்பூச்சிகளாலுண்டாகும் நஷ்டங்களைத் தடுப்பதற்கு ஒரு வழியும் தெரியாவிட்டால், பயிர்களுக்கு சொந்தக்காரர்கள் உடனே சர்க்கார் பூச்சி சாஸ்திரிக்கு (Government Entomologist) தெரியப்படுத்தவேண்டும். பெரும்பான்மையும், பூச்சிகளாலுண்டாகும் நஷ்டங்களை, குடியானவர்கள், காலம் மீறிப்போன பின், பூச்சி சாஸ்திரிக்கு தெரிவிக்கிறார்கள். அதனால் அவர் ஒருவிதமான உதவியும் செய்வதற்கு இயலாமல் போய்விடுகிறது. இப்பூச்சிகளால் உண்டாகிற சேதத்தை, மிகவும் அதிகமாகிற வரை, அநேகமாய் ஒருவரும் கவனிக்கிறதில்லை. இப்பேர்ப்பட்ட இடங்களில், அநேகமாய், உதவி ஒன்றும் செய்யமுடியாமல் போய்விடுகிறது. அந்தந்தப் பயிர்களுக்குச் சாதாரணமாய் விழும் பூச்சிகளைக் குடியானவர்கள் சதா கவனித்துக் கொண்டே வரவேண்டும். சில பூச்சிகள் வருஷாவருஷம், குறிப்பிட்ட ஒரு காலத்தில் விழுந்து, அழிவு செய்து வரும். அவைகளைக் குடியானவர்கள் சமயம் அறிந்து கவனித்து வந்தால், அப்பூச்சிகள் அதிக சேதம் செய்யாமல் தடுத்துக்கொள்ளலாம். வேறு சில பூச்சிகள் ஏதோ ஒரு வருஷத்தில் திடீரென்று தோன்றி மறுபடி, பல வருஷம், வருகிறதில்லை. இந்த விஷயத்தில்கூட, சர்க்கார் பூச்சி சாஸ்திரிக்கு, காலாகாலத்தில், பூச்சிகள் தோன்றியவுடன், தெரிவித்தால் அவைகளால் ஏற்படும் கெடுதிகளை அதிகரிக்கவிடாமல் தடுத்து பயிரையும் அநேகமாய் காப்பாற்றிக்கொள்ளலாம்.

பயிர்களில் பூச்சி விழுந்ததைக் குறித்து எழுதும்போது பின்வரும் விஷயங்களைக் கவனித்து எழுதவேண்டும் :—

(i) பூச்சிகள் தென்பட்ட உடனே ரிப்போர்ட் செய்யவேண்டும்.

(ii) பூச்சிகளைப்பற்றி வர்ணிக்காமல், கூடுமானால் உயிருடன் இருக்கிற பூச்சிகளில், சிலவற்றை அனுப்பவேண்டியது.

(iii) அவ்விதம் பூச்சிகளை அனுப்பும்பொழுது அந்தப் பார்சலுக்குள் கீழ்கண்ட விவரம் அடங்கிய காகிதமொன்றை வைக்கவேண்டியது :—

(1) அனுப்புகிறவர் பெயரும், விலாசமும்.

(2) கிராமம் அல்லது கிராமங்களின் பெயர்.

சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன், பூச்சிகள் உண்டாயிருக்கிற தாலூகா, ஜில்லாக்களின் பெயர்கள்.

(3) பூச்சிகள் இருக்கிற பயிர் அல்லது பயிர் தினுசுகள்.

(4) அவ்வித பூச்சிக்கு, சுய பாஷையில் ஏதாகிலும் பெயருண்டா அப்பெயர்.

(5) பூச்சி, முதல் முதல் தோன்றின தேதி.

(6) பூச்சிகளை ஒழிக்கக் குடியானவர்கள் ஏதாவது உபாயம் செய்திருந்தால், அது இன்னதென்பதைப்பற்றிய விவரம்.

(7) அந்தப்பூச்சி, புதிதாய் சமீபத்தில்தான் ஏற்பட்டிருக்கிறதா, அல்லது வருஷா வருஷம் தோன்றுகிறதா.

(8) பூச்சி சாஸ்திரிக்கு உபயோகப்படக்கூடியதென்று தோன்றும் வேறு ஏதாவது விஷயமிருந்தால், அவைகளைப்பற்றியும் எழுதவும்.

(iv) ரிஜிஸ்டர் போஸ்டு மூலமாய் அனுப்பக்கூடாது.

(v) பார்சல்களை சர்க்கார் பூச்சி சாஸ்திரிக்கு அனுப்பும்பொழுது விலாசத்தில் அவருடைய சொந்த பெயரை எழுதி அனுப்பக்கூடாது; அதாவது "பூச்சி சாஸ்திரி" என்று எழுதினால் போதும்.

உயிருடன் இருக்கும் பூச்சிகளைத் தகர டப்பாக்களில் காற்றுப்போகும்படி மூடியில் துளைகளை செய்து தபாலில் அனுப்பினால் சரியாய்ப் போய்ச் சேரும். டப்பாவிற்குள், புல், பாசி முதலியவைகளில் கொஞ்சம் போட்டனுப்பினால் பூச்சிகள் அசங்காமல் போய்ச் சேரும். பூச்சிகளை அனுப்பும் போது அவைகளின் பிரயாணத்தின்போது வேண்டிய அளவு இரையை வைத்தனுப்பவேண்டும்.

செடிகளின் தண்டு, கிளைகள் முதலியவைகளை, துளைத்துக்கொண்டு போகிற பூச்சிகளாயிருந்தால், அச்செடிகளின் எந்த பாகத்தில் பூச்சி இருக்கிறதாகத் தெரிகிறதோ, அந்த பாகத்தை மேற் கூறிய பூச்சியுடன் அடக்கஞ் செய்தனுப்பவேண்டியது.

செத்த பூச்சிகளை, ஒரு சீசாவில் நாட்டுச்சாராயம் விட்டு, அதற்குள் போட்டு அனுப்பவேண்டும். வண்ணாத்திப் பூச்சிபோன்றவை அனுப்பும்போது அந்தப் பூச்சிகளின் இறக்கைகளை முதுகுக்குமேல் மடித்து கடுதாசி உரைகளில் (கவரில்) போட்டு, சுற்றி "பாக்கிங்" செய்தனுப்பவேண்டியது.

பூச்சிகள் செய்யும் கெடுதிகளை மாற்றவேண்டுமானால், பூச்சிகளின் வர்ணனையாவது, அவைகள் செய்யும் கெடுதிகள் இன்னவை என்பதை யாவது மட்டும் எழுதியனுப்பினால் அதற்கு பரிகாரம் சொல்லமுடியாது என்பதை நன்றாய் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஒரு பயிரில் பூச்சி விழுந்த தக்ஷணமே அதைப்பற்றி ரிப்போர்ட்டு செய்யவேண்டும் என்பது மிகவும் அவசியம். இதை வற்புறுத்திச் சொல்லவேண்டியகாரணம் என்னவென்றால், பூச்சி இலாகா உத்தியோகஸ்தர்கள் ரிப்போர்ட்டு வந்த ஸ்தலத்தைப் போய்ப் பார்க்கப்போகும்போது, இரண்டொரு மாதத்திற்கு முன்பே ரிப்போர்ட்டில் கண்ட கெடுதிகள் உண்டானதென்று தெரிகிறது. அதனால் அவர்கள் வந்தது வியர்த்தமாகப் போவதோடு சர்க்காருக்கு வீண் செலவும் உண்டாகிறது. **அடிக்கடி சாதாரணமாய்ப் பயிரில் விழும் பூச்சிகளைக் குறித்தும், அவைகள் விசேஷமாய் எந்த சமயத்தில் அதிகக் கெடுதி உண்டுபண்ணுகிறது என்பதைக் குறித்தும் தெரிந்துகொள்ள பூச்சி சாஸ்திரிக்கு ஆவல் அதிகம்.** இவைபோன்ற சங்கதிகள் மிகவும் உபயோகமுள்ளவை. இதைக்கொண்டு பூச்சி சாஸ்திரி, பூச்சிகளைத் தொலைக்க உடனே வழி தேடவாவது, அல்லது பின் எப்போதாகிலும் அவைகள் தோன்றும்போது அந்தப்படி செய்யவாவது, உதவும்.

எல்லா பார்சல்களையும் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவேண்டியது:

சர்க்கார் பூச்சி சாஸ்திரி,
விவசாய காலேஜ், லாலி ரோட் போஸ்ட்,
கோயமுத்தூர்.

III.—நோயினால் பீடிக்கப்பட்ட செடிகளை சர்க்கார் பூஞ்சான சாஸ்திரிக்கு அனுப்புவதில் கவனிக்க வேண்டிய விதிகள்.

விவசாயத்தில் சிரத்தையுள்ள குடியானவர்கள் அனுப்பும், நோய் பீடிக்கப்பட்ட, செடிகளைப் பரிசோதனை செய்யவும், நோயைத் தடுப்பதற்கும், திரும்ப வரவிடாமலிருப்பதற்கும் வேண்டிய முறைகளைப்பற்றி யோசனை சொல்ல கோயமுத்தூரிலிருக்கும், சர்க்கார் பூஞ்சாண சாஸ்திரி அவர்கள்,

எப்பொழுதும் தயாராக இருக்கிறார். பரிசோதனை செய்வதற்கும், நோயின் விஷயங்களைப்பற்றி அறிந்துகொள்வதற்கும் பணம் கொடுக்கவேண்டியதில்லை. ஆதலால் குடியானவர்கள் சென்னை ராஜதானியில் எந்த பாகத்தில் இருந்தாலும்கூட, நோயால் தாக்கப்பட்ட பயிர்களிலிருந்து, மாதிரி செடிகளைத் தபால் மூலமாகவோ, அல்லது ஜாஸ்தியாக இருக்கும் பக்ஷத்தில், ரயில் மூலமாகவோ அனுப்பி இந்த செடி டாக்டருடைய உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

வெகு தூரத்திலிருந்து அனுப்பப்பட்ட நோய்ச் செடிகள் வந்துசேரும்பொழுது, பொதுவாக அவை பூஞ்சாணத்தால் மூடப்பட்டு வருவதால் எவ்விதமான பூஞ்சாண நோய் என்று கண்டுபிடிப்பதே கஷ்டமாகிறது. **செடியின் மாதிரிகளை அனுப்புகிறவர்கள், அடியில் விவரித்த விதிகளை அனுசரிப்பார்களாகில் அவை சரிவர, சோதனைக்குத் தகுந்த நிலைமையில் வந்துசேரும்.**

A.—பொதுவாய் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. செடிகள் மாதிரிகளைத் தபாலில் அனுப்பும்பொழுது ஆபீஸரின் பெயரை விலாசத்தில் எழுதக்கூடாது. எல்லாக் கட்டுகளையும் "**சர்க்கார் பூஞ்சாண சாஸ்திரி, லாலிரோட் போஸ்ட், கோயமுத்தூர்**", என்று விலாசம் அனுப்பவேண்டும். இப்படி செய்தால்தான், பூஞ்சாண சாஸ்திரி, கோயமுத்தூர் ஹெட் குவார்ட்டரில் இல்லாமல் சர்க்கியூட் போயிருந்த போதிலும், அந்த ஆபீஸில் அந்த வேலை பார்த்துவருகிற உத்தியோகஸ்தர், அக்கட்டுகளை உடைத்து உள்ளிருப்பதைப் பரிசோதனை செய்ய சாத்தியமாகும்.

2. மாதிரிகளை ஈரமாயிருக்கும்பொழுது கட்டியனுப்பக்கூடாது. அவைகளை கொஞ்சமாகிலும், உலரவைத்துக் கட்டவேண்டும். ஈரத்துடன் கட்டினுல், பூஞ்சாணத்தால் மூடப்பட்டு, செடிகளில் உண்டாயிருக்கும் பூஞ்சாணம் இன்னதென்பதைக் கண்டுபிடிக்கக் கஷ்டமாகும்.

3. கூடுமானவரையில், செடிகளில் பூஞ்சாண அணுக்கள் ஆரம்பத்திலிருந்து கடைசிவரையில், தாக்கப்பட்டமாதிரிகளை அனுப்பவேண்டும். அதாவது, முதலில் தாக்கப்பட்ட மாதிரிகள், முற்றிலும் தாக்கப்பட்ட மாதிரிகள், கடைசி நிலைமையிலுள்ளமாதிரிகள்—இவைகளை அனுப்பவேண்டும். இப்படி நோயால் தாக்கப்பட்ட மாதிரிகளை அப்பயிர்கள் சாகுபடியாகிற நிலத்திலேயே ஏராளமாகச் சேகரித்துப் பிறகு சாவகாசத்துடன் பரிசோதனைக்கு வேண்டிய மாதிரிகளைப் பொறுக்கி எடுப்பது நல்லது.

4. அதிகமாகவே மாதிரிகளை அனுப்பவேண்டும். இப்படி செய்தால்தான் பீடிக்கப்பட்ட வியாதியைச் சுலபமாகவும், நன்றாகவும் கண்டுபிடிக்க சாதகமாயிருக்கும். இப்படி செய்யாத பக்ஷத்தில், இது விஷயமாய், போதுமான அளவு அனுப்பும்படியாக மறுபடியும் அவர்களுக்கு எழுதவேண்டியதாயிருக்கும். இதனால் காலதாமதம் ஏற்படும். இப்படியெல்லாம் செய்வதற்குள்ளாக, பீடிக்கப்பட்ட செடிகளின் மாதிரிகள் சோதனைக்கு வேண்டிய அளவு கிடைக்காமல் போய்விடும்.

5. நோயினுல் பீடிக்கப்பட்ட செடியின் பெயர் தெரியாமற்போனுல் அச்செடியின் தழையையும், பூவையும் இரண்டு மையொற்றும் காகிதத்திற்கு நடுவில் வைத்து நன்றாகக் கட்டி அனுப்பினுல் இன்னதென்று தெரிந்துகொள்ள சாதகமாகும்.

6. கூடுமானவரையில் பின்வரும் விஷயங்களைக் குறித்துப் எழுதவேண்டும் :—

(1) இடம், கிராமம், ஜில்லா.
(2) நோய் தாக்கப்பட்ட பயிரின் விஸ்தீர்ணம்.
(3) நோயின் பெயர் (அவ்வூரில் வழங்கப்பட்ட பாஷையில்).
(4) நோய் தாக்கப்பட்ட செடியின் பெயர்.
(5) நோயின் கொரேம் எவ்வளவு ?
(6) நோய் ஆரம்பமான தேதி.

(7) ஒவ்வொரு வருஷத்திலும் எந்தக் காலத்தில் உண்டாகிறது.

(8) இதற்கு முன் காணப்பட்டிருந்தால், அதன் விவரம்.

(9) இந்த நோயை அதிகப்படுத்துவதற்கு, அல்லது தடுப்பதற்குக் காரணமான சீதோஷ்ண ஸ்திதி, வகையரா.

(10) நோயை தடுப்பதற்கு உபயோகித்த முறைகள் ஏதாவதிருந்தால், அவைகளின் விவரம்.

(11) அவ்வூரில் எந்த முறையில் சாகுபடி செய்கிறார்கள் என்பதையும், பயிர்களுக்கு எப்படி உரமிடுகிறார்கள் என்பதைப்பற்றிறியும் விவரம்.

B.—முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. **பூராகச் செடிகள்.**—செடிகளில் நோயினால் தாக்கப்பட்ட பாகம் இன்னதென்று தெரியாமலிருந்தால் முழுச் செடிகளையும் அனுப்பவேண்டும். சிறு செடிகளாயிருந்தால் அப்படியே கட்டியனுப்பிவிடலாம். கரும்புபோன்ற பெரிய பயிர்களை வெய்யிலில் காயவைத்துக் கோணிப்பைகளிற்சுற்றி ரயில் மார்க்கமாக அனுப்பலாம். செடிகள் பருமனாயிருப்பின் அவைகளை அப்படியே முழுச் செடிகளாக அனுப்பமுடியாவிட்டால், நோயினால் தாக்கப்பட்ட பாகங்களைமட்டும் அனுப்பினால் போதுமானது.

2. **கிளைகளும் வேர்களும்.**—இவைகளைக் கட்டி அனுப்புவதற்குமுன் கொஞ்சம் காயவைக்கவேண்டும். வெட்டின முனைகளில் தாராவது, சொலிக்கனம் (solignum) என்னும் எண்ணெயாவது தடவி அனுப்பவேண்டும். இப்படி செய்வதினால் வெட்டப்பட்ட பாகங்களின் மூலமாக வேறே கிரிமிகள் நுழையாமல் தடுக்கலாம்.

3. **இலைகளும் துளிர்களும்.**—இவைகளைப் பசுமையாயிருக்கும்பொழுதே இரண்டு மை யொற்றும் காகிதங்களுக்கு மத்தியில் வைத்து கெட்டியாகக் கட்டவேண்டும். இப்படி செய்வதினால், செடிகள் காயும்போது சுருளாது. இக்காகிதங்களைப் பிரதிதினமும் மாற்றிவரவேண்டும். இம்மாதிரி 3 அல்லது 4 நாட்கள் செய்துவரவேண்டும். இவ்விதம் காயவைத்தால் அதிகமான இலைகளையும், துளிர்களையும், கொஞ்ச இடத்தில் அடக்கி, இரண்டு அட்டைகளில் கட்டி தபால் மூலமாகவே அனுப்பிவிடலாம்.

4. **பழங்கள்.**—சாத்தியப்பட்டவரையில் அடியில் விவரித்திருக்கிறபடி மூன்றுவிதமான மாதிரிகளை அனுப்புவது நலம் :—

(a) நோய் தாக்கப்பட்ட பழங்கள்.
(b) நோய் ஆரம்பமாயிருக்கும் பழங்கள்.
(c) நோய் முற்றின பழங்கள் (ஆனால் முற்றிலும் அழுகிப்போன பழங்கள் அனுப்பக்கூடாது).

இவைகளை தனித்தனியாக அனுப்பாமல் எல்லாவற்றையும் ஒரே பார்சலில் அனுப்பும்படி ஏற்பட்டால், ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பஞ்சில் வைத்துக்கட்டி, காகிதத்தில் சுருட்டி, பிறகு எல்லாவற்றையும் சேர்த்துப்பார்சல் செய்து அனுப்பலாம்.

5. **மரக்காளான் முதலியன.**—மரங்களில் உண்டாகிற பெரிய காளான்களை, வெய்யிலில் காயவைத்து, இலேசான காகிதத்தில் சுற்றி பிறகு பெட்டியில் வைத்து அனுப்பவேண்டும்.

6. **மிருதுவான, முறியக்கூடிய நாய்க்குடைபோன்ற காளான்கள்.**—நாய்க்குடைபோன்ற மிருதுவான முறியக்கூடிய காளான்களை சீசாக்களில் போட்டு, அச்சீசாவில் சாராயம் (ஸ்பிரிட், விஸ்கி, அரக் முதலியன) நிறப்பி, பிறகு சரிவரச் சீல் செய்து கட்டியனுப்பவேண்டும்.

IV.—விவசாய கல்லூரி பிரின்சிபாலுக்கு செடிகள் முதலியன பெயர் தெரிந்துகொள்வதற்கு மாதிரி அனுப்பும் விதம்.

1. பெயர் தெரிந்துகொள்வதற்காக அனுப்பும் மாதிரிச் செடிகள் இலையுடன், பூவும், காயும் உடையவையாயிருத்தல் அவசியம். ஆகையால் இவையெல்லாம் உடைய செடிகளைக் கண்டெடுத்து அனுப்பவேண்டும். பூவில்லாமல் அனுப்பக்கூடும் மாதிரிகளைக் கொண்டு அவை இன்னதுதான் என்று நிர்ணயிக்க முடியாது.

2. அனுப்பிவைக்கும் மாதிரிகள் 18 அங்குல நீளம், 12 அங்குல அகலம், இதற்கு அதிகமில்லாமல் தயாரிக்கப்படவேண்டும். மாதிரிச் செடி முதலியவற்றை ஒரு ப்ளாட்டிங் (மையொற்றும்) காகிதத்தில் விரித்து வைத்து அதன் மேல் மற்றொரு ப்ளாடிங் காகிதம் வைத்து இரண்டையும் கெட்டி அட்டையின் நடுவில் வைத்துக் கட்டிவிடவேண்டும். ஒன்றுக்கு அதிகமான மாதிரிகள் அனுப்பவேண்டி வருமானால் இதே மாதிரியாக ஒவ்வொன்றையும் இரண்டு ப்ளாடிங் காகிதத்தின் இடையில் விரித்து வைத்து ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கி, அடுக்கின் மேலும் கீழும் கெட்டி அட்டை கொடுத்துக்கட்டியபின், மேல் விலாசம் கோயமுத்தூர், லாலி ரோட் போஸ்ட், விவசாயக் கல்லூரித் தலைவர் (அல்லது பிரின்சிபால்), என்று எழுதித் தபாலிலேயே அனுப்பிவிடலாம்.

3. இப்படிப் பந்தோபஸ்தாய்க் கட்டியனுப்பவேண்டியதன் அவசியம் யாதென்றால், அனுப்பும் மாதிரி செடிகள் அவற்றின் இயற்கை நிலைமையில் சுலபமாய் அடையாளங்கள் கண்டுபிடிக்கும் ஸ்திதியில், தாவர வஸ்துக்கள் பகுதியில், கிடைககவேண்டுமென்பதேயாம். பூச்சிகளாலும் பூஞ்சாணத்தாலும் செடிகள் கெட்டு விடாமலிருப்பதற்காகவே ப்ளாடிங் காகிதத்தில் வைத்தனுப்பும் ஏற்பாடு சொல்லப்பட்டிருக்கிறது.

4. புல் முதலிய வருஷாந்திர செடிகளில் வேறுடன்கூடிய முழுச்செடிகளே அனுப்பப்படவேண்டும்:—

5. மாதிரியாய் அனுப்பும் வகைகளுடன் பின்கண்ட விவரங்கள் குறித்து அனுப்பவேண்டும்.

(i) மாதிரி சேகரம் செய்த தேதி.

(ii) எடுத்த இடம், அது சமுத்திர மட்டத்துக்கு மேல் எவ்வளவு அடி உயரம்.

(iii) அது சிறு செடியா, புதரு அல்லது மரமா என்னும் விவரம்.

(iv) பூவின் நிறம்.

(v) மாதிரி சேகரம் செய்யும் சமயத்தில் கவனித்த மற்றுமுள்ள முக்கியமான விஷயங்களின் விவரம்.

6. சதைப்பத்தான தாவரவர்க்கங்களில் மாதிரி அனுப்புமுன், அவற்றை ஒரு மாதிரியாகத் தண்ணீரில் கொதிக்கவைத்தப் பிறகு தண்ணீர் வடிய விட்டபின், மற்ற செடிகளுக்குப் போல் காகிதத்தில் அமுக்கி அனுப்புவதினால், அனுப்பும் மாதிரி கெடுதலடையாமல் வந்து சேரும்.

7. விதைகள் மாத்திரம் அனுப்புவதினால் அவற்றை வெய்யிலில் நன்றாய் உலர்த்தியபின் அட்டைப் பெட்டியிலோ, ஜாதிக்காய் பெட்டியிலோ போட்டு அத்துடன் நாப்தலீன் குண்டுகள் சில போட்டு அனுப்பவேண்டும். கூடுமானவரையில் விதைகள் உண்டாகும் கிளைகளையும் இலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

8. மாதிரிச் செடிகள் அனுப்பும் பார்சல்களில் உத்தியோகஸ்தர் சொந்தப் பெயரை ஒருக்காலும் குறித்தனுப்பக்கூடாது. அப்படிச் செய்வதால் அனுவசியமான காலதாமதம் ஏற்படும்.

13. செடிகளின் நோவை அடக்கு முறைகள்.

புழு பூச்சிகள், மிருகங்களால் பாழடைவதும் அல்லாமல் பயிர்ச் செடிகளுக்கு பூஞ்சாள நோயினால் நாசமேற்பட்டு அதிக நஷ்டம் உண்டாகிறது. நோய் தோன்றி பரவுவதை தடுக்க அநேக விதங்களில் இந்த நோயை தடுக்கவேண்டும். முதலில் பயிர் சரியான இடத்தில் பயிரிடப்பட்டிருக்கிறதா என்று கவனிக்கவேண்டும். நாம் செடிகள் திடமாயிருக்கவேண்டுமென்றும் அதிக மாசூலைக் கொடுக்கவேண்டுமென்றும் பயிரிடுகிறோம். இதற்கு ஒருவரை உண்டு. அதற்கு மீறி அதிகமான செடிகளைப் பயிரிட்டால் செடிகளின் திடம் குறையும் அது (parasitic plants) ஏற்படசாதகமாகும். உதாரணமாக காப்பி, ஆரஞ்சி இவைகளுக்கு அதிக விளைவிற்குப் பிறகு நோய் உண்டாகிறது. சிலர் இத் (parasitic plants) திடமான செடிகளைத் தாக்கி நாசமாக்குவதாக தெரிவித்திருக்கின்றனர். பூஞ்சாளத்தினால் ஏற்படும் நோவை அடக்கும் வழிகளாவன.

(1) சுத்தமான இடம்.
(2) பயிர்களை மாற்றுதல்.
(3) விதை பொறுக்கல்.
(4) பலவித நோய் தாங்கக்கூடிய விதை.
(5) (பூஞ்சண வியாதி தடுக்கும் மருந்து) உபயோகப்படுத்தல்.
(a) விதை.
(b) செடிகளின் வியாதியால் பீடிக்கப்பட்ட இடங்களுக்கு (பூஞ்சண வியாதி தடுக்கும்) மருந்து தெளித்தல்.

செடிகளுக்கு சுற்றுப்புற விளைவுகளை கவனிப்பது முதல் வேலையும் அதன் பிறகு அவைகளை நாசம் செய்யும் பொருள்களை சுத்தம் செய்வதுமாகும். காய்ந்துபோன பொருள்களை அப்புறப்படுத்துவதே நோய் வராமல் தடுக்க முதன்மையான வழியாகும். காய்ந்த செடிகளையும் மிலாறுகளையும் சிறு கிளைகளையும் அழுகிய பழங்களையும் உபாயச் சிலவில் அழித்துவிடுவதில் சாதகமான பலன் கிடைக்கும். இது சாத்தியப்படாவிட்டால் அவை பூமியில் ஆழத்தில் சுண்ணும்பு நீருடன் கலந்து குழியில் போட்டு மூடுவது சாத்தியமான காரியம். காய்ந்த பாகங்களை அவ்வப்போது அழிக்கவேண்டிய அவசியத்திற்கு அனுபோகத்திலிருந்து சில உதாரணங்களைக் கூறலாம். பனை, தென்னை மரங்களின் கெட்டுப்போன குறுத்துகள் உள்ள பனைகளை வெட்டி சிறு துண்டுகளாக்கி எரித்துவிடவேண்டும். சார்நோய்கண்ட தென்னை மரங்களில் அந்த நோய்கண்ட பாகங்களை துண்டித்து எடுத்து எரித்துவிட்டு காயமான பாகத்திற்கு சூடான தார் பூசிவிடவேண்டும். ஆரஞ்சு, எலுமிச்சை முதலியவைகளின் பட்டுப்போகும் நோய்க்குப் பட்டுப்போன கிளைகளை வெட்டி நெருப்பிலிட்டு எரித்துவிட்டு வெட்டிய பாகங்களுக்கு தார் பூசிவிடவேண்டும். அடிபாகம் காய்வதும் பிசின் நோய் முதலான கண்ட ஆரஞ்சு செடிகளுக்கு கெட்டுப்போன பாகங்களிலுள்ள பட்டைகளை நீக்கிவிட்டு அந்த பாகங்களுக்கு (மயில்துத்தம் சுண்ணும்பு நீர் தெளிக்கவேண்டும்) பூசவேண்டும். மாகளிநோய் கண்ட பாக்கு மரங்களின் பட்டுப்போன பாளைகளையும் மரங்களில் தொங்கும் மட்டைகளையும் கீழே உதிர்ந்த மட்டைகளையும் சேர்த்து மழை பெய்வதற்குமுன் எரித்துவிட்டு புது குலைகளுக்கு மருந்து அடிக்கவேண்டும். பருத்தி துவரை முதலான செடிகளானுல் பட்டுப்போன செடியை முழுதும் பிடுங்கி எடுத்துவிடவேண்டும். வேர் நோய் சம்பந்தமாயும் (foot rot) நோய் கண்ட பாக்கு மரங்களை பிழைக்க வைப்பது சாத்தியப்படாததால் மற்ற திடமான மரங்களுக்கும் அந்நோய் பரவாமலிருப்பதை தடுக்க நோய்கண்ட மரத்தை சுற்றி கிடங்கு தோண்டி அந்த நோய் சுற்றுமுள்ள மரங்களுக்குப் பரவாமல் தடுக்கவேண்டும். நோய்பட்ட பாகங்களை எரு குழிகளில் போடக்கூடாது. போட்டால் அந்த எருவில், அந்த நோய்க் கிருமிகள் உற்பத்தியாகின்றன. கூடுமானவரை நோய்பட்ட பாகங்களை வயலுக்கு வயல் எடுத்துப்போகாமலிருக்கவேண்டும். உதாரணமாக நெல் அல்லது கேழ்வரகு இவைகளின் பைருகுலேரியா நோய் பட்ட தாள்களை வேறு வயலுக்கு கொண்டுபோனுல் நல்ல வயலிலுள்ள பயிர்களும் பீடிக்கப்படுகிறது.

வயல்களில் வேலை செய்யும் கூலி ஆள்கள் வயலுக்கு வயல் நோயைப் பரவவிடாவண்ணம் கவனிக்கவேண்டும்.

மனிதனுக்கு ப்ளேக், காலரா, வைசூரி, மிருகங்களுக்கு கோமாரி (Anthrax, rinderpest) போன்ற தொத்து வியாதிகள் சம்மந்தமாக அனுசரிக்கும் முறைகளே. செடிகளின் ஆரோக்கிய விஷயத்திலும் அனுசரிக்கவேண்டும். மேற்கொண்ட உபாயங்கள் பயனடைய அண்டை நிலக்காரர்களின் ஒத்துழைப்பு முக்கியமானதாகும். இது சாத்தியப்படாததல்ல. ஒருவரின் அண்டை நிலக்காரர் ஒத்துழைத்தால் மற்றவர்களையும் இசையச் செய்யலாம். சில அண்டை நிலக்காரர்கள் சாதாரண வழிகளுக்கு இசையாத சந்தர்ப்பத்தில் நோய் சட்டம் (pest act) அத்தியாவசியம்.

ஒரு புது இடத்தில் விதைகள் வாங்கும்பொழுது அவைகளில் நோய் சம்பந்தமான விதைகள் இல்லையென்பதை நிச்சயத்தலவசியம். ஆதலால் அவைகளை விதைக்கு முன் நன்ருகப் பரிசீலனை செய்து பரிசுத்தப்படுத்த வேண்டும். நாற்றுகளானுல் அவைகளில் நோயிருப்பதை அறிய முதலில் தனித்த இடத்தில் நடவேண்டும். போதுமான நாள் பொறுத்து அவைகளில் நோய் தோன்றினுல் அவைகளை அழித்து எரித்துவிடவேண்டும்.

நோய்கள் பரவாவண்ணம் தடுப்பதற்குள்ள வழிகளில் ஒன்று. இப்பூஞ்சாள நோய் அதன் நுண்ணிய வித்து அல்லது அதன் வேறு மெல்லிய கம்பிகள் பூமியில் அநேக மாதங்கள் அல்லது வருஷங்கள் வரை உயிருடனிருக்கும். இவ்விதமாக கெட்ட பூமியில் ஒரே பயிரிட்டால் முன்போகத்தில் பூமியிலிருக்கும் பூசாணம் புது பயிருக்கும் தொற்றி நோய் சம்பவிக்கும். நிலக்கடலைக்கு (Rhizoctonia) என்னும் வாடும் நோயையாவது வெற்றிலைக்கு (Phytophthora) என்னும் வாடும் நோயையாவது உதாரணமாகக் குறிப்பிடலாம். அப்படிப்பட்ட நோய்கள் வருஷந்தோறும் உண்டாவதைத் தடுக்க ஏற்ற பயிர்களை மாற்றி வருவது சாத்தியமானது. பூசாணத்தினுல் பாதிக்கப்படாத ஒன்று அல்லது பல பயிர்களை சில நாள் மாற்றிப் பயிரிடுவதின் நோக்கம். அந்த பூசாணங்கள் உணவின்றி அழிவதற்கேயாகும். இதுபோலவே இந்தியாவில் உருளைக்கிழங்குகளுக்கும் வட்ட நோய் (Ring disease) சம்பவிக்கும் (Bacterium) என்பது பூமியில் ஒரு வருஷத்திற்கு மேற்பட்டுமிருக்கின்றது. நீலகிரி மலையில் அனேக காரணங்களை முன்னிட்டு வருஷா வருஷம் ஒரே நிலத்தில் இருமுறை உருளைக்கிழங்கு பயிரிடுவதால்தான் நோய் அதிகரித்து அபிரிமிதமாகக் குறைந்திருக்கிறது.

விதை பொருக்குதலினுலே சாதாரணமாக நோயை அடக்கலாம். நோயுள்ள விதையால் பயிருக்கு பயிர் நோய் பரவுகிறது. உதாரணமாக பீன்ஸ் (அவரை) கொட்டையின் (Anthracnose) என்னும் நோய், இதில் காயில் நோவுபட்டிருந்தால் அதன் உள்ளிருக்கும் விதையில் நோயின் குறிகள் தெரியாவிட்டாலும் விதைத்தவுடன் நோயிருப்பது நன்ருய் விளக்கி காட்டப்பட்டிருக்கிறது. நெல் விதைகளுக்கு Fungicides மருந்து பிரயோகிப்பதில் பலிதமில்லை. விதைகள் பொருக்குவதில் வியாதிப்பட்ட விதைகளைக் கழித்து நல்ல விதைகளாக பொருக்கி எடுக்கவேண்டும். கரும்பில் ஏற்படும் செம்பாடு நோய், நோயுள்ள கரணைகளை நடுவதினுல் அதிகரிக்கிறது. நோயில்லாத கரணைகளாக பொருக்கி நட்டால் இவ்வியாதியை சுலபமாக தடுக்கலாம். நல்ல கரணைகளை பொருக்குவதால் கரும்பின் (Mosoic) வியாதியைத் தடுக்கலாம்.

நோயை சகிக்கக்கூடிய தினுசுகளை பயிரிடுதல்.

விதைகளில் சில வர்க்கங்கள் (Parasitic Fungus) வியாதியால் பீடிக்கப்படுவதில்லை. சிலவர்க்கங்கள் பீடிக்கப்படும். மற்றவை சில சந்தர்ப்பத்தில் பீடிக்கப்படும். நிதானமாகவும் ஜாக்கிரதையாகவும் பொறுக்கினுல் (Fungus) வியாதியை சகிக்ககூடும் விதைகள் கிடைக்கும். இருந்தபோதிலும் பூசாரத்திற்கும் சீதோஷ்ண ஸ்திதிக்கும் தக்கவாறு விதைகளின் சகிக்கும் தன்மை மாறும். ஒரு இடத்தில் வியாதியைத் தாங்கும் விதைகள் மற்றொரு இடத்தில் வியாதியைத் தாங்காது. நெல் கரும்பு இவைகளில்

அநேக தினுசு விதைகள் பல வியாதிகளைச் சகிக்கக்கூடியனவாயிருக்கின்றன. சின்ன இச்சிலிச்சம்பா, கோயமுத்தூர் நெ. 4 நெல் தினுசுகள் **(Blast)** என்னும் நோயை தாங்கும் சக்தியுடையன. கொரங்கு சம்பா நெல்லை **(Piricularia)** என்னும் நோயிலிருந்து தடுக்க கோயமுத்தூரில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விதைக்கும் வளரும் பயிருக்கும் நோய் மருந்து பிரயோகித்து நோயை அடக்கலாம்.

சிலவற்றில்தான், கெடுதல் விளைவிக்கும் பூஞ்சாளத்தை கொல்ல முடியும். சில விதை அல்லது செடிகளில் பூஞ்சாள வித்துக்கள் உதிர்ந்து அவ்விதை விளையாதிருக்கவே மருந்து பிரயோகிக்கப்படுகிறது. பூஞ்சாளங்களின் விதைகளைக் கொல்லவும் முளைக்காமலிருக்கவும், **Formalin corrosive sublimate** அல்லது **copper sulphate** என்றவைகளை உபயோகப்படுத்தினுல் பூஞ்சாளக்கம்பிகளும் விதையும் விழுந்து ஒட்டிக்கொள்ளும் வியாதியைக் கொல்கின்றன. சில திராவக மருந்துகளினுல் சோளம் தினை இவைகளின் கரிப்பூட்டை நோயையும் நெல்லின் வேர் அழுகும் நோயையும் தடுக்கலாம். மயில் துத்த ஜலத்தினுல், விதைகளின் தொத்து நோயை தடுக்கலாம். ஆனுல் வளரும் பயிரில் தெளித்தால் இலைகள் காய்ந்துவிடும். அதற்காக சுண்ணும்பு நீருடன் துத்தமும் கலந்தால் மேல்கண்ட கெடுதல் ஏற்படாது. இம்மருந்துக்கு (**Bordeaux mixture** என்று பெயர். தெளிக்கும் மருந்துகளில் சிறந்தது.

கீழ்கண்ட வியாதிகளை தென்னிந்தியாவில் (போர்டோமிக்ஸர்) என்ற மருந்து நிவர்த்தி செய்திருக்கிறது.

1 பாக்குமரம்	..	..	..	..	மாகளி அல்லது கொலரோகம்.
2 மிளகாயில்	..	..	..	..	பழ அழுகல், இலை காய்தல்.
3 இஞ்சி, மஞ்சள்		..	..	..	இலை புள்ளி நோய்.
4 காப்பிச்செடியில்		..	..	..	துரு ீருகால் நோய்.
5 ரப்பரில்	..	..	..	..	இரண்டாவது இலை உதிர் நோய்.
6 திராக்ஷையில்	..	..	..	..	பூஞ்சாளம்.
7 மாஞ்செடியில்		..	..	..	பூஞ்சாளம், பிஞ்சு உதிர்தல்.
8 ஆரஞ்சு எலிமிச்சை		..	..	..	பூஞ்சாளம், கிளை காய்தல்.
9 மாதுளையில்	..	..	..	..	பிஞ்சு அழுகுதல்.
10 உருளைக்கிழங்கு		..	..	..	இளஞ்செடி சாகுதல்.
11 வெற்றிலை	..	..	..	..	கொடி வதங்கி காய்தல்.

(போர்டோமிக்சர் போலவே) **Burgundy mixture lime-sulphur solution, Potassium sulphide, flowers of sulphur** முதலிய இவைகளையும் நோய் கொல்லி மருந்தாக உபயோகிக்கலாம். கந்தகப்பொடி மருந்து திராக்ஷையின் பூஞ்சாள நோய்க்கும் அத்தியின் ரஸ்டுநோய்க்கும் உபயோகப்பட்டு வருகிறது. இப்பொழுது மயில் துத்தமும் கந்தகமும் கலந்த நோய்க் கொல்லி மருந்துகள் வியாபாரிகளால் அனேக இடங்களில் விற்கப்படுகின்றன.

பூஞ்சாள நோய் விஷயமாய் மேற்சொல்லப்பட்டிருக்கும் அநேக வழிகள் வியாதி வராமல் தடுக்க ஒரு வழியே அல்லது வந்த நோயை நிவர்த்தி செய்யக்கூடியவையல்லவென்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். ஆகையால் பயிர்களை வளர்ப்பதில் செடிகளின் ஆரோக்கியத்திற்கும், வந்த நோய் அதிகரிக்காமல் தடுப்பதற்கும் மேற்சொன்ன வழிகளை அனுஷ்டிப்பதினுல் நோயற்ற பயிர்களைச் செய்து கிருஷிகள் தங்கள் படும் கஷ்டத்திற்குத் தகுந்த லாபமடையலாம். இத்துடன் பயிர்களுக்கு எந்தெந்தக்காலங்களில் என்னென்ன வியாதிகள் வருகிறதென்றும் அவைகளை எப்படி சமாளிப்பதென்பதையும்பற்றி ஒரு பஞ்சாங்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் பிரத்தியேகமாய் குறித்த நோய்களைப்பற்றி அதிக விபரமோ அல்லது குறிப்புகளும் வேண்டியவர்கள் பூஞ்சாளசாஸ்திரி. லாலி ரோடு தபாலாபீஸ் விலாசத்திற்கு எழுதித்தெரிந்துகொள்ளலாம்,

எஸ். சுந்தரராமன்,

1934-ம் வருஷம் மேமீ 30உ.

கவர்ன்மெண்டு மைக்காலஜிஸ்ட்.


MADRAS PRESIDENCY
JANUARY
FEBRUARY
MARCH
APRIL
MAY
JUNE
JULY
AUGUST
SEPTEMBER
OCTOBER
NOVEMBER
DECEMBER
SOUTH ARCOT.
TANJORE, MADURA
RAMNAD.
TINNEVELLY.
MALABAR.
SOUTH KANARA, COIMBATORE & SALEM
N. CIRCARS, CEDED DISTRICTS, SALEM, COIMBATORE, MADURA, RAMNAD, TINNEVELLY
GODAVARI, KISTNA, NORTH ARCOT.
ANANTAPUR SALEM & MADURA
N. CIRCARS, BELLARY, N. ARCOT, S. ARCOT, SALEM, COIMBATORE & S. KANARA.
COCHIN, MALABAR & S. KANARA
ANANTAPUR, SALEM & MADURA
GODAVARI, COIMBATORE
GODAVARI, GUNTUR, KURNOOL, SALEM, COIMBATORE & MALABAR.
TANJORE, TRICHINOPOLY
KISTNA, TRICHINOPOLY
KURNOOL & MALABAR
BELLARY & KURNOOL
1
2
3
4
5
6
7
8
9

14. பூஞ்சாள நோய்களை நிவர்த்திக்க உபயோகிக்கும் மருந்துகள் செய்யும் விதங்கள்.

1 போர்டோ மிக்சர் .. .. .. (நூற்றுக்கு ஒன்று வீதம் மருந்துள்ளது).

மயில் துத்தம்	5 ராத்தல்.
சுண்ணும்புக்கல்	5 ஷை
தண்ணீர்	50 காலன்.

ஒரு மரத்தொட்டி, மண் பானை அல்லது செப்புப் பாத்திரத்தில், 25 காலன் தண்ணீர் விட்டு, அதில் மயில் துத்தத்தைக் கரைக்க வேண்டும். மற்றொரு பாத்திரத்தில் சுண்ணும்புக் கற்களைப் போட்டு சிறிதளவு தண்ணீர் தெளித்து நீற்றவேண்டும். நீற்றின சுண்ணும்பை வெண்ணெய்ப் பசை போலாகும் வரை தண்ணீர் சேர்த்துக் கலக்கினபின் மீதியிருக்கும் தண்ணீரையும், ஊற்றிக் கரைக்கவேண்டும். இந்தச் சுண்ணும்பு நீரை, மயில் துத்தம் கரைந்த நீர்த்தொட்டியில், மேற்படி நீரைக்கலக்கிக்கொண்டே சிறிதளவாக வடிகட்டி இறுத்துவிடவேண்டும்.

பக்குவம் சரி பார்க்க, தீட்டிப் பளபளப்பான கத்தி முனையையோ அல்லது இரும்புத்துண்டையோ, சுமார் ஒரு நிமிஷ நேரம், மருந்தில் தோய்த்தால், கத்தியில் செம்பு நிறம் படியாமல் இருக்கவேண்டும். அப்படிப் படிந்தால் மறுபடியும் புதிதாய்த் தோய்த்துப் பார்க்குந் தோறும் செம்பு நிறம் படியாமல் இருக்கும் வரை சுண்ணும்பு நீர் சேர்க்கவேண்டும்.

2. படிகாரம் சேர்ந்த போர்டோ மிக்ஸர்.

மயில் துத்தம்	4 ராத்தல்.
படிகாரம்	4 ஷை
சுண்ணும்பு	6 ஷை
தண்ணீர்	50 காலன்
கேசீன்	1 ராத்தல்.

50 காலன் மருந்து செய்ய—

(a) 4 ராத்தல் மயில் துத்தமும், 4 ராத்தல் படிகாரமும், செப்பு பாத்திரம், மரத்தொட்டி, அல்லது மண்பானையில், 24 காலன் தண்ணீரில் கரைக்கவேண்டும்.

(b) 5 ராத்தல் சுண்ணும்புக்கல்லை நீற்றி 24 காலன் தண்ணீரில் கரைக்கவேண்டும்.

மேற்சொல்லிய இரண்டையும் நன்ருய்க் கலக்கிக் கொண்டே ஒன்றேடொன்று சேர்க்கவேண்டும்.

(c) ஒரு ராத்தல் கேஸீனை, ஒரு காலன் தண்ணீரில் ஊரவைத்து (ஒரு ராத்தல் சுண்ணும்பு கலந்த ஒரு காலன்) சுண்ணும்பு நீரில் கரைத்து, ஷை நீரை மேலே செய்து வைத்திருக்கும், படிகாரம் கலந்த போர்டோ மிக்ஸருடன், ஒட்டும் சக்கியாகச்சேர்க்க வேண்டும்.

3. சுண்ணும்பும் கந்தகமும் கலந்த மருந்து. 50 காலன் மருந்து செய்ய கீழ் கண்ட மருந்துகள் அவற்றிற்கு நேராகக் குறிப்பிட்டிருக்கும் எடையுடன் தேவை—

சுண்ணும்புக்கல்	50 ராத்தல்.
கெந்தகப்பொடி	100 ஷை
தண்ணீர்	50 காலன்.

4. 50 காலன் மருந்து செய்யும் மளவில், செம்பல்லாத இரும்பு அல்லது துத்தநாகப் பாத்திரத்தில் போதுமான தண்ணீர் விட்டு சுண்ணும்பு கலந்து கலக்கிக்கொண்டே கொதிக்க விடவேண்டும். பிறகு கந்தகம், சேர்த்துக் கலக்கவேண்டும். பிறகு ஒரு மணி நேரம் கொதிக்க விட்டால் ஒருவித ஆரஞ்சு செந்நிறமான நீரும், நீரில் படிமானமும் உண்டாகும். படிமானத்தை ஒரு கோணியில் வடி கட்டவேண்டும். வடி நீரை வேண்டும்போது உபயோகிக்குங்கால் தண்ணீர் கலந்து உபயோகிக்கலாம். புதி

தாய் இலைகளையும் கிளைகளையும் கத்தரித்த செடிகளில் மருந்தடிக்க ஏற்பட்டால், ஒன்றுக்கு ஐந்து பங்கு தண்ணீர் கலந்துகொள்ளவேண்டியது. இலைகளின் பேரில் உபயோகிக்க வேண்டுமானால் பதினைந்து மடங்கு தண்ணீர் கலந்துகொள்ளவேண்டும்.

குறிப்பு.—தயாரித்த மருந்தை காற்றுப்புகாத பாத்திரத்தில் பின் உபயோகத்துக்காக பந்தோபஸ்து செய்து வைத்துக்கொள்ளலாம். மருந்தின்மேல், சிறிது மண்ணெண்ணெய் விட்டு விட்டால் காற்றினால் கெடாது.

5. சோளத்தில் விழும் சிறிய கரிப்பூட்டை நோய்க்கு கந்தகத்தை உபயோகிக்க—

காய்ந்த விதைகளின்பேரில் நன்றாய்ப் பொடி செய்து உலர்ந்த கந்தகத்தூளை தூவுவதுதான் பிரயோகம். ஒவ்வொரு விதையின் பேரிலும் கந்தகத்துள் இடைவிடாமல் பரவும்படி தூளையும் விதையையும் கலக்க வேண்டியது. 60 ராத்தல் விதைக்கு 4 அவுன்ஸ் தூள் அவசியம்.

விதைப்பதன்முன் மயில்துத்த நீரில் நனைக்கும் பழைய மாதிரியை விட கந்தகத்தூளில் கலக்குகிறதில் உள்ள மேன்மைகள்—

(1) உலர்ந்த பக்குவத்தில் உபயோகிக்கக்கூடியது.
(2) வேண்டும்பொழுது பிரயோகிக்கலாம்.
(3) பிரயோகித்த வித்து பலமாதங்களுக்கும் வைத்திருக்கலாம்.
(4) அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பிரயோகிப்பதால் உண்டாகும் பயமில்லை.
(5) மயில்துத்த மருந்தில் ஏக்கருக்கு வேண்டிய விதைக்கு ஆறு பைசா செலவென்றால் புதிய மருந்தால் ஒரு பைசாவுக்கு குறைக்கலாம்.

எஸ். சுந்தரராமன்,
மைக்காலஜிஸ்ட்.

15. வேண்டாத விருட்சங்கள்—இலகுவாயும், நிச்சயமாயும் அழிப்பதெப்படி ?

விருட்சங்கள் வேண்டாத இடங்களில் வளர்வதனால் ஏற்படும் நஷ்டமும் அபாயமும் எல்லாருக்கும் அறிந்த விஷயம். அவைகளை எப்படி எளிதாய் அழிப்பதென்பதை எவரும் உணர்ந்திருப்பார்கள். மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் நிறைந்த நம்மாகாணத்தில், சுவர்களிலும், மேல் மாடிகளிலும், கோபுரங்களிலும், சிறு பிளவுகள் ஏற்படுவதையும், சிறு செடிகள் முளைத்து, நாளுக்கு நாள் செழிப்பாய் வளர்ந்து அழிக்க முடியாவண்ணம் இருப்பதை நாம் கஷ்டமனதுடன் காண்கிறோம். மரங்கள் வளர வளர பிளவுகள் விசாலமாய், கட்டடங்கள் பின்னப்படவோ அல்லது இடிந்து விழவோ ஏதுவாகிறது.

இவ்வித நஷ்டத்தை தடுக்கவும் மரங்கள் செடிகளின் எந்தப்பருவத்திலும் அழிக்கவும் ஒரு மருந்து தயாராய் இருக்கிறது. பொதுக்கட்டட இலாகா அதிகாரிகளும், வீடுகளின் சொந்தக்காரரும், விவசாயிகளிடம் சிரத்தையுடையோரும், இந்தச் சுலபமான மருந்தை உபயோகித்து, தங்களுடைய சொத்துக்களைக் காப்பாற்றிக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மருந்தின் பெயர் அட்லாஸ் மரங் கொல்லி. கள்ளிக்கோட்டையிலுள்ள மெஸர்ஸ் பீயர்ஸ் லெஸ்லி கம்பெனி ஹெட் ஆபீசிலும் மற்றும் ஷெ கம்பெனி கிளை ஆபீஸுகளிலும் ஒரு பைண்ட் டின் ரூ. 2–2–0. ஆகவும், $\frac{1}{2}$ பைண்ட் டின் ரூ. 1–4–0 ஆகவும் விலைக்குக் கிடைக்கும். இது கொடிய பாஷாணம் ஆனபடியால் குழந்தைகளும், அறிவீனர்களும் நடமாடும் இடத்தில் இருக்கப்படாது.

உபயோகிக்கும் முறை.

1. தரை மட்டத்திற்கு மேல் ஒரு அடிக்கு மேற்படாமல், மரப்பட்டையை 4 அங்குல அகலத்துக்கு, மரத்தைச்சுற்றி உரிக்கவேண்டும்.

2. ஒரு 'பிரஷ்' (Brush) கொண்டு மருந்தை தோல் உரித்த பாகத்தில் நன்றாய்த் தடவவேண்டும். மிருதுவான மரமானால் ஒரு பாக மருந்துக்கு மூன்று பாகம் தண்ணீர் கலந்து உபயோகிக்கலாம். மருந்து வேர் மட்டும் சீக்கிரம் எட்டவேண்டுமானால் தரை மட்டத்திற்கு மேல் அருகாமையில் பட்டை உரிக்கவேண்டும். மருந்து வேர்களுக்கும், அதன்மூலம் மற்ற பாகங்களுக்கும் சீக்கிரமாய்ப் பரவும். இப்படிச் செய்யமுடியாத மரங்களுக்காவது அல்லது மருந்து தடவப்பட்ட இடத்தை ஆடுமாடு முதலிய மிருகங்கள் நக்கிவிடுமென்ற பயமிருந்தால் கீழேகண்டிருக்கும் முறைப்படி செய்யவேண்டும்.

விருக்ஷத்தின் பருமனுக்குத் தகுந்தவாறு ஒன்று அல்லது இரண்டு சாய்வான துளைகளை விருக்ஷத்தின் அடிபாகத்தில் போட்டு, ஒரு புனல் (Funnul) மூலம் மருந்தை அத்துவாரங்களில் ஊற்றி நிரப்பி, துவாரங்களின் மேல்வாயை களிமண்ணாலாவது அல்லது மற்ற எவ்வகை சாமான்களாலாவது அடைக்கவேண்டும். வயதுக்குத் தகுந்தபடி 3 முதல் 7 நாட்களுக்குள் மரம் பட்டுவிடும். கடினமான மரங்கள் அதிக நாட்கள் பிடிக்கும்.

எஸ். சுந்தரராமன்,
கவர்ன்மெண்ட் மைக்காலஜிஸ்ட்.

16.—நமது தோட்டக்கால் பயிர்களில் விழும் சில சாதாரண பூச்சிகளும் அவைகளை அடக்கும் முறைகளும்.

இவ்விராஜதானியில் பலபாகங்களிலிருந்தும், காய்கறி, புஷ்பம், பழம் முதலிய தோட்டங்களில் விழும் பூச்சிகளைப்பற்றியும், அவைகளை அடக்கும் முறைகளைப்பற்றியும் அநேகர் அடிக்கடி கேட்கிறார்கள். அவர்களுக்கு அடியில் கண்டிருக்கும் அடக்குமுறைகள் பிரயோஜனப்படுமென நம்பப்படுகிறது.

பயிரைத் தாக்கும் பூச்சிகளை இருவகையாய்ப் பிரிக்கலாம்.

(1) இலை தண்டு முதலியவற்றை கடித்துத் கிழித்து மென்று தின்பவை.

(2) செடிகளில் உள்ள சாரத்தை உறிஞ்சிக்குடித்து அவைகளைவாடச் செய்து உலரும்படி செய்பவை. முதலில் கூறியவற்றில் வெட்டுகிளிகள், வண்டுகள், இலைகளைத் தின்னும் புழுக்கள் முதலியவற்றையும் பின்னால் கூறப்பட்டவைகளில் நாவாய்ப்பூச்சிகள், பேன் அல்லது அசுகுணி முதலியவற்றையும் சேர்க்கலாம்.

உருஞ்சும் பூச்சிகள்.—(Plant lice) பேன்கள்.—சாதாரணமாய் இதைத் தமிழில் பேன் அல்லது அசுகுணி என்றும் தெலுங்கில் பங்கா என்றும் சொல்லுவார்கள். இவை அநேகமாய் எல்லாச் செடிகளையும் பீடிக்கின்றன. மிகவும் சிறியன. மிருதுவான தேகமுடையவை. செடிகளின் குருத்து கொழுந்து, மொட்டு புஷ்பம் முதலிய மிருதுவான பாகங்களில் கூட்டங் கூட்டமாய் மொய்த்துக்கொண்டிருக்கும். இப்பாகங்களிலிருந்து செடிகளின் வளர்ச்சிக்கு வேண்டிய சாற்றை இப்பேன்கள் உருஞ்சிவிடுகின்றன. நூற்றுக்கணக்கான பூச்சிகள் செடிகளைப் பீடிப்பதால் செடியின் துளிர்களும் மொட்டுகளும் வாடுகின்றன. இலைகள் சுருட்டை ஆகின்றன. குருத்துக்களின் வளர்ச்சி தடுக்கப்படுகின்றன. பீடிக்கப்பட்ட பாகங்கள் வரவர உலர்ந்து வாடிவிடுகின்றன. உற்றுநோக்கிப் பார்த்தால் ஒரு பேனுக்கு 6 கால்களும் 2 மீசை மயிர்களும் தலையின்கீழ் ஊசிபோன்ற கூர்மையான மூக்கும் இருக்கிறது. தவிர தேகத்தின் பின் பாகத்தில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு குழாய்களும் இருக்கின்றன. இவற்றிற்கு ஹனிடியூப்

அல்லது தேன்குழாய்கள் என்று பெயர். ஏனெனில் இவற்றிலிருந்து பூச்சிகள் தேன்போன்ற ருசியுள்ள ஓர் பதார்த்தத்தை வெளியிடுகின்றன. இவற்றை புசிக்க எறும்புகள் கூட்டங்கூட்டமாய் வருகின்றன. பெரும்பாலான பேண்களுக்கு இறக்கைகள் இல்லை. அவை மெதுவாகத்தான் ஊர்ந்து செல்லும். சாதாரணமாய் இப்பேண்கள் (அசுகுணி) பீடிக்கப்படும் செடி யாவருக்கும் தெரிந்த அவரைக் கொடியே. ஆயிரக்கணக்கான பூச்சிகள் இளங்கொடிகளிலும், துளிர்களிலும், பூக்களிலும் மொய்த்துக் கொண்டிருப்பதை நாம் எப்பொழுதும் அவரைச் செடிகளில் பார்க்கலாம். இதைத் தவிர பருத்தி, புகையிலை, கத்திரி, காபேஜ், முள்ளங்கி, அகத்தி, ரோஜா, மா, ஆரஞ்சி முதலிய செடிகளும் இப்பேண்களால் பீடிக்கப் படுகின்றன.

2. **Mealy bugs.—(நாவாய் பூச்சிகள்)** இவை அசுகுணியைப் போலவே செடிகளைத் துன்புறச் செய்கின்றன. ஆனால் பார்வைக்கு அவற்றை போலில்லை. இவை மிருதுவான தேகமுடையவை. இவற்றின்மேல் வெண்மைநிறமுள்ள தூளிதம் படிந்திருக்கும். சிலவற்றில் இத்தூளிதம் அதிகமாயும் சிலதில் குறைந்துமிருக்கும். இன்னும் சிலவற்றில் தேகங்களின் மேல் நீண்ட கோடுகள்போல் இருக்கும். நாவாய் பூச்சி என்ற பெயர் இக்காரணத்தைக்கொண்டே அவைகளுக்கு ஏற்பட்டது. இதைச் சாதாரணமாய் நாம், குரோட்டன் செடிகளில் பார்க்கலாம். இவற்றில் பலவகைகள் உண்டு. இவை பலவகைச் செடிகளைத் தாக்குகின்றன. அவற்றில் பருத்தி, கத்திரி, மா, கரும்பு, தக்காளி முதலிய யாவருக்கும் தெரிந்த செடிகள்.

3. **Scale insect (ஓடுபோல் ஒட்டியிருக்கும் நாவாய் பூச்சிகள்).—** இவை முன் கூறப்பட்டவைகளைப்போலவே செடிகளுக்கு கெடுதல் பண்ணுகின்றன. ஆனால் பார்வைக்கு உயிரற்ற ஜந்துக்களைபோல் இருக்கும். நன்றாய் வளர்ந்தபின் இவைகளில் அநேகம் செடிகளோடு செடிகளாய் ஒட்டிக்கொண்டிருக்கும். பார்வைக்குச் செடிகளின்மேல் உள்ள மேல் ஓடு போல் இருக்கும். அவை குருத்துகள், கிளைகள், மற்ற எல்லா மிருதுவான பாகங்கள் முதலியவற்றின்மேல் மொய்த்துக்கொண்டிருக்கும். பழவர்க்க மரங்களும், காப்பி, தேயிலை, ஆரஞ்சு முதலிய லாபம் தரக்கூடிய மரவர்க்கங்களும் இவற்றால் பீடிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு முக்கிய உதாரணம் மலைப்பிரதேசங்களில் உள்ள காப்பி தோட்டங்களில் காப்பிச் செடிகளை அழிக்கும் பச்சை, சிகப்பு நாவாய் பூச்சிகளே. இவற்றை நாம் சாதாரணமாய்க் குரோட்டன்ஸ் செடிகளிலும், கொய்யா, நாரத்தை, வேம்பு கருவை (கருவேல்), மா முதலிய மரங்களில் பார்க்கலாம்.

மேற்கூறிய மூன்று இனங்களே தோட்டக்கால் பயிர்களைத் தன் கூர்மையான மூக்குகளால் செடிகளின் சாரத்தை உருஞ்சி கெடுதல் செய்யக்கூடியவைகளில் முக்கியமானவை. இவைகளை தவிரத் சில சமயங்களில் **(Leaf hoppers)** லீப் ஹாப்பர்ஸ், **(Moaly wings)** மீலி விங்க்ஸ், **(Plant bugs)** பிளாண்ட் பக்ஸ் முதலியவைகளும் காணப்படும்.

கடித்துக் கிழித்து மென்று தின்னும் பூச்சிகள்.

உருஞ்சிக்கொல்லும் பூச்சிகளைப்போல் இவை அவ்வளவு அதிகம் கெடுதல் செய்வதில்லை. இவற்றில் முக்கியமாய்—

(1) இலைகள் தின்னும் வண்டுகள்.—இவற்றில் இரவில் ரோஜா முதலிய செடிகளை அழிக்கும் **(Cock chafer)** காக்சேபர் என்று சொல்லப்பட்ட வண்டுகளும், கத்திரியில் விழும் **(Epilachna)** கடலை வண்டுகளும், பூசினி வண்டுகளும், காபேஜ், முள்ளங்கி முதலியவற்றில் இருக்கும் சிறு வண்டுகளும் சேர்ந்தவை. இவ்வினத்தில் சேர்ந்த சில வண்டுகளின் சிறு பூச்சிகள் பலவகைச் செடிகளின் வேர்களையும், தண்டுகள், குருத்துகள் முதலியவற்றையும் பீடிக்கின்றன.

(2) புழுக்கள்.—புழுக்களில் அநேக வகையுண்டு. மயிரால் மூடப்பட்டவை, முள்போன்ற மயிர் உள்ளவை, வழவழப்புள்ளவை, கொம்புகள் உடையவை, வளைந்து உள்ளவை முதலியன. இவைகளின் நிறம் பல

வர்ணங்கள் அடங்கியவை. அவற்றின் பழக்கவழக்கங்களும் மாறுபட்டு உள்ளன. இவைகளில் சில இலைகளையும் மொட்டுகளையும் தின்னும். சில பூமி மட்டத்திற்கு சரியாய் செடிகளை வெட்டிவிடும். சில பழங்களையும் குருத்துகளையும் துளைக்கும். இவ்வகுப்பில் பயிர்களுக்குக் கெடுதல் செய்பவை புழுக்களே அன்றி பட்டாண்கள் அல்ல.

(3) வெட்டுக்கிளிகளும் இலையை வெட்டும் தேனீ இனத்தைச் சேர்ந்த ஈக்களும்.—வெட்டுக்கிளிகள் சாதாரணமாய்ச் சிறு செடிகளையே தாக்கும். சில ஈக்கள் (தேனீயல்ல) ரோஜா முதலிய செடிகளின் இலைகளை வெட்டித் தங்கள் கூண்டுகளுக்கு எடுத்துப்போம்.

அடக்கு முறைகள்.—அடக்குமுறையில் சிகிச்சையைக்காட்டிலும், பூச்சிகள் வருமுன் தடுப்பதே நலத்துடன் சுலபம். பயிரிடும் ரயத்துக்கள் தாங்கள் பயிரிடும் பயிர்களைத் தினந்தோறும் கவனத்துடன் பார்த்துவரவேண்டும். தங்கள் சுய அனுபவத்தைக்கொண்டு, பயிர்களுக்கு எக்காலத்தில் பூச்சிகள் வரும் என்பதை முன்கூட்டியே தெரிந்துகொள்ளவேண்டும். உடனே பயிர்கள் நாசமடையாமல் இருக்க, பூச்சிகளைத் தடுக்கும் முறையை கையாளவேண்டும். இப்பூச்சிகளை அடக்கும் முறைகளில் (1) பூச்சிகள் விழ ஆரம்பிக்கும்போதே அவற்றை பொறுக்குதல், (2) வலை, பைகளால் பிடித்தல், (3) நிலத்தைக் கொத்தல், (4) செடிகளைக் கத்தரித்தல் முதலியவற்றை கையாள்வதால் செலவில்லாமல் பூச்சிகளை அடக்கிவிடலாம். மற்ற சாதனங்களைக்கொண்டு பூச்சிகளை அடக்கமுடியாத காலங்களிலேயே மருந்து பிரயோகிக்கும் முறைகளை அனுஷ்டிக்கவேண்டும். மருந்தை உபயோகிக்கும்படி நேரிடும் காலத்திலேயும், அம்முறையை சீக்கிரத்தில் பிரயோகிப்பதால் மருந்துச் செலவையும் ஆள் செலவையும் மிகவும் குறைக்கலாம். இவ்வடக்கு முறையைச் சரிவர அனுஷ்டிக்கவேண்டுமானால், பூச்சிகளின் ஜீவிய சரித்திரம் தெரிந்திருத்தல் மிகவும் அவசியமென ஏற்படும்.

மருந்து வகைகளில் இருவகை உண்டு. (1) உருஞ்சிக்கொல்லும் பூச்சிகளுக்கு மருந்து, (2) கடித்துத் தின்னும் பூச்சிகளுக்கு மருந்து.

உரிஞ்சும் பூச்சிகளுக்கு மருந்து.—இப்பூச்சிகளைக் கொல்ல சாதாரணமாய் ஒட்டுந்தன்மையுள்ள மருந்துகளை உபயோகிப்பது வழக்கம். இவை பூச்சிகளின் தேகத்தில் பட்டமாத்திரத்தில் அவற்றிற்கு மூச்சுத்திணரலோ அல்லது பொருக்கமுடியாத அறிப்போ ஏற்படுத்தி அவற்றை கொல்லுகின்றன. அவைகளில் சாதாரணமானவை—

(1) **(Soap Solution)** சோப்புத் தண்ணீர்.—அசுகுணி, நாவாய்ப் பூச்சி, மிருதுத்தன்மையுள்ள சிறு பூச்சிகள் இவைகளைச் சாதாரண சோப்பு கலந்த ஜலமே செலவில்லாத ஒட்டுந்தன்மையுள்ள மருந்து. சோடா உப்பு கலந்த **(Caustic soda Soap)** சோப்பைக்காட்டிலும் **(Potash Soap)** சாம்பல் காரம் கலந்த சோப்பே ஜலத்தில் கரைக்க நல்லது. ஏனெனில் காஸ்டிக் சோடா சோப்பை (சோடா உப்பை கலந்த) க்காட்டிலும் இது ஜலத்தில் நன்முய் கரைந்து இருப்பதுடன் பூச்சிகளின்மேல் பட்டதும் அவற்றை சீக்கிரம் கொல்லுகிறது. ஒரு ராத்தல் சோப்பை 5 அல்லது 6 காலன் ஜலத்தில் கரைத்து அசுகுணி முதலிய மெல்லிய சரீரமுடைய பூச்சிகளுக்கு அடிக்கலாம்.

(2) **(Kerosine Emulsion)** கேரோசின் எமல்ஷன்.—தொன்று தொட்டு உபயோகப்படுத்திவரும் மருந்துகளில் இது ஒன்று. இதை வேண்டும்போது செய்து கொள்ளலாம். செய்யும் முறை அரை ராத்தல் சோப்பை மெல்லிய தாகச் சீவி, ஒரு காலன் ஜலத்தில் கொதிக்கவைக்கவும். பிறகு அடுப்பை தணித்து 2 காலன் கிரோசின் எண்ணெயை அத்துடன் சேர்க்கவும். எண்ணெய், சோப்பு ஜலத்தில் நன்முகக் கலந்து ஒன்று சேர்ந்து வெண்ணெய்போல் ஆகும்வரை நன்முகக் கலக்கிக்கொண்டே யிருக்கவும். காற்றடிக்கும் பம்பைக்கொண்டு காற்றடித்தால் சோப்பு ஜலத்துடன் எண்ணெய் நன்முய்க்கலந்துவிடும். இந்த மருந்து சரிவர செய்யப்பட்டிருந்தால் அதிக நாள் வேண்டுமானாலும் வைத்துக்கொண்டிருக்கலாம். இத்துடன் 15முதல்

20 பங்குவரை ஜலத்தைச் சேர்த்து உபயோகிக்கலாம். இதைப் பூச்சிகளுக்கும் செடிகளுக்கும் தகுந்தாற்போல் அதிகமாகவோ குறைச்சலாகவோ ஜலத்தைச் சேர்த்து உபயோகித்துக்கொள்ளலாம். சுத்தஜலமில்லாமல் உளர் சம்பந்தப்பட்டிருக்கும்பக்ஷத்தில் அதிக சோப்பு வேண்டியிருக்கும். மருந்துதுவானங்கள் செடிகளின்மேல் நன்ருய் ஒட்ட ஒன்று அல்லது இரண்டு அவுன்ஸ் வச்சிரத்தைத் தெளிக்குமுன் மருந்துடன் சேர்த்துகொள்ளுதல் நலம்.

(3) (Fish Oil Rosin Soap) **மீன் எண்ணெயுடன் ரோஜன சோப்பு சேர்ந்த மருந்து.**—இம்மருந்து மலையாளத்தில் உள்ள கள்ளிக்கோட்டை கேரளா சோப் பாக்டரியில் ராத்தல் 5 அணு வீதம் விலைக்குக் கிடைக்கும். இது பார்வைக்கு இருண்ட சிவந்த நிறமாய்க் கூழ்போலிருக்கும். இதைக் குளிர்ந்த ஜலத்துடன் கலந்து, உருஞ்சும் எல்லா பூச்சிகளுக்கும் உபயோகப் படுத்தலாம். முக்கியமாய் அசுகுணி, மாவண்டு முதலியவற்றிற்கு மிகவும் சிலாக்கியம். ஒரு ராத்தல் மருந்துக்கு 8 காலன் ஜலத்தைச் சேர்க்கலாம். இதைப் பூச்சிக்கு தகுந்தாற்போல் அதிக ஜலமோ குறைந்த ஜலமொ தேவைக்குப் பிரகாரம் செய்துகொள்ளலாம். மிருதுத் தன்மையில்லாத (Scales) ஸ்கேல்ஸ் என்னும் நாவாய் பூச்சிகளுக்கு 4 அல்லது 5 காலன் ஜலத்தில் 1 ராத்தல் மருந்தைக் கரைக்கவேண்டும். புதிதாக வெளிவந்த சிறு பூச்சிகளையும், முன் தெளித்ததில் தவறிப்போனவற்றையும் கொல்ல இரண்டாந்தரமும் மூன்ருந்தரமும் மருந்து அடிக்கும்படி நேரிடும்.

(4) (Tobacco decoction) **புகையிலை கஷாயம்.**—புகையிலையும் அதிலிருந்து செய்யப்பட்டவைகளும், பூச்சிகளைத் தடுக்க ஓர் நல்ல ஔஷதம். பல பேர்களோடு இதனுல் செய்யப்பட்ட மருந்துகள் அநேகம் வெளிவந்திருக்கின்றன. சாதாரண உபயோகத்திற்குப் புகையிலைக்கஷாயத்தை அடியில்கண்ட முறைப்படி செய்துகொள்ளலாம். ஒரு ராத்தல் புகையிலை (அடிக்கட்டை, காம்பு முதலியவை) ஒரு காலன் ஜலத்தில் அரைமணி நேரம் கொதிக்கவைக்கவும் அல்லது ஒரு நாள் முழுவதும் பச்சை ஜலத்தில் ஊரவைக்கவும். அத்துடன் 4 அவுன்ஸ் சோப்பைச் சேர்க்கவும். சோப்பு சேர்ந்த புகையிலை டிகாக்ஷன் நன்ருய் ஆறினதும் அத்துடன் 6 அல்லது 7 மடங்கு ஜலம் கலந்து, பூச்சிபிடித்த செடிகளின்மேல் அடிக்கவும். அசுகுணி, நாவாய்ப்பூச்சிகளுக்கு இது சிறந்த ஔஷதம். கீரை முதலியவற்றிற்கும் எந்த செடிகளின் இலைகளை சாப்பிட உபயோகப்படுத்தப்படுகிறதோ அவைகளுக்கும் எவைகளுக்குக் கிரோசின் எண்ணெயும் மீன் எண்ணெய் வாசனையும் உதவாதோ அப்பேர்பட்ட செடிகளைத் தாக்கும் பூச்சிகளுக்கு இதை உபயோகிக்கலாம்.

அடிக்கடி பீடிக்கும் புகையிலைப் பேனுக்கு இது மிகவும் சிறந்த ஔஷதம். புகையிலைக் கஷாயத்துடன் சோப்பைக் கலப்பதால், மருந்தைச் செடிகளின்மேல் நன்ருய் பரவச் செய்வதுடன் மருந்தின் குணத்தையும் அதிகப்படுத்துகிறது. இராஜதானியின் பலபாகங்களிலும் தற்காலம் இக்கஷாயத்தையே புகையிலைப் பேனுக்கு உபயோகிக்கிருர்கள். உரிஞ்சும் பூச்சிகளுக்கு புகையிலையிலிருந்து செய்யப்பட்ட மருந்து சிலாக்கியமாயும் சிக்கனமுள்ளதாயும் இருப்பதால் இதன் உபயோகம் நாளாவட்டத்தில் அதிகமாக எங்கும் பரவுமெனத் தோற்றுகிறது. காய்ந்த புகையிலைத்தூளுடன் சுண்ணும்புத்தூள் அல்லது சாக்குத்தூள் (Chalk) இவற்றை கலந்து உயரமாய் வளராத செடிகளைத் தாக்கும் பூச்சிகளைக்கொல்ல லாபகரமாய் உபயோகிக்கலாம். மிகவும் சிறிய பூச்சிகளைக்கொல்ல புகையிலை புகையை உபயோகிப்பது வழக்கம்.

கடித்துத் தின்னும் பூச்சிகளுக்கு மருந்து.—மேற்கூறிய மருந்துகளைக் கடித்துத்தின்னும் பூச்சிகளைக்கொல்லவோ அல்லது விரட்டவோ உபயோகிக்கலாம். ஆனுல் அவற்றைக்காட்டிலும் விலையில் குறைந்தவையும் குணத்தில் மேலானவையும் பாஷாண வர்க்கங்களே. இதைப்பூச்சிகளின் ஆகாரத்தோடு கலந்துவிட்டால் அவ்வாகாரத்தை உட்கொண்ட பூச்சிகள் இறந்துபோகும். இம்மருந்து உரிஞ்சும் பூச்சிகளுக்கு கெடுதல் செய்யா. இப்பாஷாணங்களில் முக்கியமானவை :—

ஈயபாஷாணம் (Lead arsenate).—இது லெட் அசிடேட் (Lead acetate) இருந்தும் சோடா ஆர்சனேட் (Soda arsenate)-ல் இருந்தும் செய்யப்பட்ட வெள்ளை நிறமுள்ள பாஷாணம். இதற்கு ஜலத்தில் கரையும் தன்மை யில்லை. இதனால் செடிகளுக்கு ஒருவித கெடுதலும் ஏற்படுவதில்லை. இதை பவுடராகவோ அல்லது ஜலத்தில் கலந்தோ உபயோகிக்கலாம். இது சாதாரணமாய் பவுடராகவும், பசையாயும் விலைக்குக் கிடைக்கும். ஒரு ராத்தல் விலை சுமார் ரூ. 1 ஆகும்.

உபயோகிக்கும் முறை.—4 காலன் ஜலத்தில் பசையாய் இருந்தால் 1 அவுன்சும் பவுடராய் இருந்தால் 3 அவுன்சும் சேர்க்கவேண்டும். கொஞ்சம் அதிகமாய் மருந்தை சேர்ப்பதால் கெடுதல் ஒன்றும் ஏற்படாது. இத்துடன் கொஞ்சம் சுண்ணும்பும், வெல்லமும் சேர்த்து உபயோகித்தால் மருந்தின் குணத்தை அதிகப்படுத்தும். 1 ராத்தல் பாஷாணத்திற்கு 3 ராத்தல் சுண்ணும்பும், 6 ராத்தல் வெல்லமும் சேர்த்தால் போதுமானது. பவுடராக உபயோகிக்குங்காலத்தில் 1 ராத்தல் பவுடருக்கு 10 அல்லது 15 ராத்தல் சாம்பலோ, பொடித்த சுண்ணும்போ அல்லது ர்ஸ்தா புழுதியோ சேர்த்து செடிகளின்மேல் தூவவேண்டும். இதன் விலை கொஞ்சம் அதிக மாய் இருந்தாலும், இதற்கு செடிகளை எறிக்கும் குணம் இல்லாததினுலும், செடிகளின்மேல் நன்றாய் ஒட்டிக்கொள்ளும் குணத்தாலும், பூச்சிகளைக் கொல்ல ஓர் சிறந்த பாஷாணமாக இருக்கிறது. உலக முழுமையும் இதை யாவரும் கையாண்டு வருகிறார்கள்.

கால்சியம் ஆர்ஸனேட் (Calcium arsenate).—இது அநேகமாய் லெட் ஆர்ஸனேட்டைப்போலவே இருக்கும். இதையும் கடைகளில் பவுடராக விற்கிறார்கள். முன்கூறியதைக் காட்டிலும் குறைந்த விலைக்கு இதை வாங் கலாம். ஒரு ராத்தல் விலை அணு பன்னிரண்டு. இதை முன்கூறியதைப் போலவே பவுடராகவோ, ஜலத்தில் கரைத்தோ உபயோகிக்கலாம்.

மேற்கூறிய பாஷாணங்களை வெட்டுக்கிளி, பூமிக்குள் இருக்கும் பூச்சி கள், எரும்பு, லோகஸ்ட் முதலியவற்றை கொல்லுவதற்கு உபயோகிக்கலாம். மாவு, தவிடு, உருளைக்கிழங்கு முதலியவற்றுடன் கொஞ்சம் கலந்து பூச்சிகள் நடமாடும் இடங்களில் தெளித்துவைத்தால் ஆகாரத்துடன் உள் சென்று அவற்றை கொன்றுவிடும். மேற்கூறிய பாஷாணங்கள் அதிக விஷமுள்ளவையாதலால் அவற்றை உபயோகிக்கும்போது சர்வ ஜாக்கிரதை யுடன் இருக்கவேண்டும். ஆடுமாடுகள் முதலியனவும், மனிதர்களும் இவற்றை உட்கொள்ளாமல் இருக்கவேண்டிய சகல ஏற்பாடுகளும் முதலில் செய்யவேண்டும்.

பாஷாணங்களை வீட்டில் வைக்கும்போது அவற்றின்மேல் பாஷாணம் என்று பெயர் எழுதிவைக்கவேண்டும். அவற்றை எல்லாரும் கையாளக் கூடாது. பொறுப்புள்ளவர்களே கையாளவேண்டும். இம்மருந்தின் வேகம் 3 அல்லது 4 வாரங்களுக்குமேல் இராது. அதன்பிறகு செடிகளின் எல்லாப் பாகங்களையும் நாம் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். மருந்து தெளித்த மரம், செடிகளிலிருந்து எடுக்கப்படும் காய்கறிகள், பழங்கள் முதலியவற்றை நன்றாய் ஜலத்தில் அலம்பியபிறகே உபயோகிக்கவேண்டும்.

பொது குறிப்புகள்.—காலம் சரியாய் இல்லாத சமயங்களில் மருந்து தெளிக்கக்கூடாது. அதாவது முக்கியமாய் அதிக மழை பெய்யுங்காலங் களிலும் அதிகக்காற்று அடிக்கும் காலத்திலும் இவற்றை உபயோகிக்கக் கூடாது. தூளாய் இருக்கும் மருந்தை செடிகளின்மேல் தூவுவதற்கு காற்றில்லாத விடியற்காலமே சிறந்தது. அப்பொழுது செடிகளின்மேல் பனி படிந்திருப்பதால் தூவப்பட்ட மருந்து அவைகளின்மேல் நன்றாய் ஒட்டிக்கொள்ளும். இதைத் சரிவர செய்வதற்கு அதற்கென்று ஏற்பட் டிருக்கும் இயந்திரங்களைக்கொண்டே மருந்தடிப்பதே நலம். அப்படிச் செய்வதால் மருந்தின் செலவு குறைவதுடன் செய்த வேலையும் திருப்தி கரமாய் இருக்கும். மருந்து தெளித்தானதும் இயந்திரங்களை நன்றாய் சுத்தம்செய்து வைக்கவேண்டும். தோட்டங்களுள்ள சம்சாரிகள் மேற்கூறப்

பட்டவைகளில் கொஞ்ச மருந்துகளையும், மருந்துகளை தெளிக்கவும் தூவவும் இயந்திரங்களையும் விலைக்குவாங்கி வைத்துக்கொள்ளுதல் நலம். இவ்வியந்திரங்களில் பலதினுசுகள் கடைகளில் விலைக்குக் கிடைக்கின்றன.

மேற்கூறிய விஷயங்களைப்பற்றி, அதிகம் அறிய விரும்புவோர் கோயமுத்தூர், லாலிரோட் போஸ்டைச் சேர்ந்த பூச்சி சாஸ்திரியாருக்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

17. மிளகாய்ச் செடியில் விழும் இலைச்சுருட்டை நோய்.

பிரஸ்தாவனை.—மிளகாய்ச்செடியில் விழும் 3 அல்லது 4 பூச்சிகளில் மிகவும் முக்கியமானது, மிளகாய் இலைகளைச் சுருட்டிப் பயிரைக் கெடுக்கக் கூடிய மிளகாய் திரிப்ஸ் என்னும் சிறு பூச்சி. இச்சென்னை ராஜதானியின் பல பாகங்களிலிருந்தும் முக்கியமாய் குண்டூர், மதுரை ஜில்லாகளிலிருந்தும் இந்நோய் அதிகமாகப் பரவியிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. தெலுங்கு ஜில்லாக்களில் மிடுத அல்லு கொருவி என்றும் தமிழ் ஜில்லாக்களில் சுருள் என்றும் இந்த நோய்க்குப் பெயர்.

நோயினால் ஏற்படும் கேட்டின் குணமும் விஸ்தீர்ணமும்.—சிறு இலை தழையில் இருக்கும் சத்தைச் சப்பி இலையின் மேல்பாகத்தைக் கீறி உறிஞ்சிவிடுவதால் இலைகள் முதலில் சுருண்டு இறுதியில் காய்ந்துபோகும் வண்ணம் இந்நோயை உண்டாக்குகிற சிறு பூச்சிகள் பயிரை அழிக்கின்றன. பூமொக்குகளையும் இவ்வாறே சப்பி உறிஞ்சி விடுவதால் இவைகள் கொட்டுண்டுபோவதும் உண்டு. பழத்தின் அடித்தட்டில் உள்ள பாகத்தையும் காலா காலங்களில் பாதிப்பதும் உண்டு. இலைத்துளிரைத்தாக்கியழிக்கும் சேதமும் பெரிதானதால் மிகவும் முக்கியமாய்க் கவனிக்கப்படத்தக்கது. நோய் விஸ்தாரமாய் விழுந்த சமயங்களில் ஏற்படும் சேதம் பயிரை முற்றிலுமே துலைத்துவிடத்தக்கது. நூற்றுக்கு 25 முதல் 50 பங்கு வரை சராசரி மாசூல் நஷ்டமுண்டாக்குவதாகவும் ஏற்படும்.

இதே மிளகாய் திரிப்ஸ் என்னும் பூச்சிகள் வேர்க்கடலை, ஆமணக்கு, மாதுளை, அவரை, மா, பருத்தி முதலிய பயிர்களையும் தாக்கியழிப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும் சேதம் சிறிதாகவே இருக்கிறது.

பூச்சியின் வரலாறும் ஜீவிய சரித்திரமும்.—முழுசாய் வளர்ந்தபூச்சி $\frac{1}{4}$ அங்குல நீளமுள்ளது. சற்று நீள வடிவோடு மஞ்சள் வர்ணமுள்ளது. அகலமான மயிர்ப்பட்டையோடுகூடினமெல்லிய குறுகலான ஜவ்வுபோன்ற 4 ரெக்கைகள் இதற்கு உண்டு. இலையின் உள்பாகத்தில் பெண்பூச்சி முட்டைகளையிட்டு விடும். 4, 5 நாட்களில் சிறு குஞ்சுகள் பொறித்து இலைச் சத்தைச் சப்பியிழுத்துப்போட ஆரம்பிக்கின்றன. சிறு பூச்சிகள் பெரிய பூச்சிகளைப்போலவே காணப்படினும் ரெக்கைகள் இல்லை. 6, 7 நாட்களில் இவைகளும் முழுப்பூச்சிகளாக ஆய்விடும்.

அடக்கு முறைகள்.—பலவருஷங்களாகச் செய்துவரப்பட்ட பரிசோதனைகளின் பயனாக பூச்சி சாஸ்திர சாகையார் இந்தப் பூச்சியைத்தடுக்கத்தக்க ஓர் முறையைக்கண்டு பிடித்திருக்கிறார்கள். நோய்பட்ட செடிகளின்மேல் புகையிலைத்தூளை வீசியடிப்பதாலும் அல்லது புகையிலைக்கஷாயமும் சவுக்காரமும் கலந்த நீரினால் செடிகளின்மேல் பீச்சியடிப்பதாலும் இந்நோயைத்தடுக்க முடியும்.

கழிபட்ட புகையிலையை உரலிலிட்டுத்தூளாக்கிக்கொண்டு மலிவாகக் கிடைக்கக்கூடிய பொடி தூவும்யந்திரங்களால் பயிரின்மேல் தூவமுடியும்.

ஒரு ராத்தல் கழி புகையிலையை 10 ராத்தல் தண்ணீரில் அரை மணி நேரம் கொதிக்கவிட்டு அல்லது ஒரு நாள் பூராவும் குளிர்ந்த நீரில் ஊரப்போட்டு, பிறகு 2, 3 அவுன்சு சாதாரண சவுக்காரத்தை மேற்சொன்ன கஷாயத்தில் கரையவிடுவதால் புகையிலைக் கஷாயம் செய்து கொள்ளலாம். இதில் 50 ராத்தல் தண்ணீர் சேர்த்துக்கொண்டு நோய்ப்பட்ட செடிகளின்மேல் பீச்சியடிக்கவேண்டும்.

நாற்றங்கால்களிலேயே பூச்சிகள் காணப்படுமாகையால் நோய்ப்பட்ட நாற்றுகளின்மேல் புகையிலைத்தூளைத் தூவவேண்டும். நோயின் குணத்தைமேலிட்டு அதிகமாயின் 2, 3 தடவைகள் கூட ஷை தூளைத்தூவவேண்டி வந்தாலும் வரும். நடவுக்கு முன்னுல் நாற்றுகளைப் புகையிலைக் கஷாயத்தில் முக்கியெடுத்துக்கொண்டு நடுவதால் நல்ல பயன் கிடைத்திருக்கிறது.

தோட்டத்தில் நட்டு வளர்ந்து வருகிற பயிருக்கும் மேற் சொன்ன சிகித்ஸை அவசியமாகும். நோய் கண்ட தக்ஷணமே, நோய்பட்ட செடிகளைப் பொடி தூவியாவது கஷாயம் பீச்சியடித்தாவது காப்பாற்றவேண்டும். சிறுகச்சிறுக புகையிலைக்காரத்தை வெளிவிட்டுக் கொஞ்ச நாள் வரை பூச்சிகள் வராவண்ணம் தடுக்கலாயக்காயிருப்பதாலும் பீச்சியடிப்பதைப் பார்க்கிலும் எளிதிலும் மலிவாகவும் செய்யமுடியுமானதாலும் தூள் வீசியடிப்பது சிலாக்கியமான முறை. பலத்த காற்று வீசும்பொழுது பொடி தூவி அடிப்பது முடியாதாகையால் கஷாயம் பீச்சியடிப்பதுதான் கையாளப்படவேண்டும். எத்தனை தடவைகள் தூள் வீசவேண்டும், அல்லது கஷாயம் பீச்சியடிக்கவேண்டும் என்பது நோயின் தன்மையைப் பொறுத்தது. சில சமயங்களில் 3, 4 தடவை இம்மாதிரி சிகித்ஸை செய்யவேண்டி நேரிடுவதும் உண்டு.

செடிகளின் வீர்யம் குன்றி விடப்படாமல் காக்கப்பட்டால் இந்த திரிப்ஸ் பூச்சிகளால் ஏற்படும் பாதையைக்குறைக்கலாம் என்பது கவனிக்கத்தக்கது. கலக்கத் தெளித்த நாற்றங்கால்களிலிருந்து நன்ருய் வளர்ந்த வலுவுள்ள நாற்றுக்களை நடுவது, தோட்டங்களுக்கு ஏற்ற எருக்களை இடுவது, பூமியை நன்ருய் உழுது பயிர் செய்திருப்பது போன்ற இம்முறைகளால் நோயின் கேட்டைக்குறைத்துவிட முடியுமென்பது அனுபவத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பருவம் சற்று மழை தண்ணீரால் ஈரம் காத்திருந்தாலும், அல்லது, பூமியில் போதுமான ஈரம் இருந்தாலும் சரியே, ஷை பூச்சியின் தோஷத்தைச் செடிகள் சற்று தாங்குவதற்கு முடியுமென்பதும் அனுபவசாக்ஷியம்.

புகையிலைத்தூள் தூவுவதும், கஷாயம் பீச்சியடிப்பதும் சரியான அடக்கு முறையென்றும் மிகவும் மலிவில் அதாவது எக்கர் 1-க்கு ரூ. 10 சிலவில் முடியக்கூடியதென்றும் சர்க்கார் பூச்சி சாஸ்திர சாகை உத்தியோகஸ்தர்கள் செய்த பரிசோதனைகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

மற்றும் வேண்டும் விவரங்களுக்கு கோயமுத்தூர் லாலி ரோட் போஸ்டு, சர்க்கார் பூச்சி சாஸ்திர நிபுணருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

18. மாமரத்துத் தேன் பூச்சி

பிரஸ்தாவனை.—மாமரத்தைப் பாதிக்கிற கொடிய பூச்சி, இந்த மாமரத்துத்தேன் பூச்சி. பிரபலமான மாந்தோப்புகளுள்ள சேலம், சித்தூர், விசாகப்பட்டணம் முதலிய ஜில்லாக்களிலிருந்து பிரதி வருஷமும் இப்பூச்சியால் விளையும் தீங்கைப்பற்றி அநேக ரிப்போர்ட்டுகள் கிடைத்திருக்கின்றன. சில வருஷங்களில் இப்பூச்சியால் ஏற்படும் நஷ்டம் மிகவும் அதிகமானது.

பூச்சியால் விளையும் தீங்கும் விஸ்தீர்ணமும்.—ஜனவரி மாதம் முதல் குளிர் காலத்தில் பூமொட்டுகள் கட்டினது முதல் பூச்சிகள் ஏராளமாய்க் காணப்படுகின்றன. பூவின் உள்ளிதழ்களுக்குள் பெரிதும் சிறிதுமான பூச்சிகள் தங்கள் நீண்ட மூக்கு நுனிகளை நுழைத்து சத்தைச்சப்பி இழுக்கின்றன. இந்த நோய் காரணமாய் மொட்டுகளும் புஷ்பங்களும் காய்ந்து போகின்றன. சில வருஷங்களில் ஏற்படுகிறவண்ணம் அமோகமாய் முட்டைகள் இடப்பட்டபொழுது பூக்காம்புகள் கெட்டுப்போவதும் உண்டு, பூச்சிகளின் பாதை அதிகரித்த வருஷங்களில் இப்பூச்சிகளுக்கும் இனியதேன் போன்ற பனிநீர் புஷ்பக்கொத்துகளைப் பூரா மூடி கரிப்பூஞணம் பூத்தது போலச் செய்து காய் பிடிப்பதைத்தடுத்துப் போடுகிறது.

மாங்காய்ப் பயிருக்கு ஏற்படும் கேடு பலவேறு இடங்களில் வித்தியா சப்படுகிறது. சில வருஷங்களில் சேதம் அதிகமாயும் வேறு சில வருஷங்களில் சுல்பமாயும் இருக்கும். சேதம் மிகப் பெரிதாயிருந்தால் புஷ்பங்கள் வாடிப்போய் வெகு சில காய்கள்மட்டுமே காய்க்கும்.

பூச்சியின் ஜீவ்ய சரித்திரம்.—மூலேப் பூச்சிகள் என்று சாமான்னியமாய்ப் பெயர் வழங்குகிற ஜாஸிட் இனத்தைச் சேர்ந்த செடிப்பேன்களாகும் இந்த மாமரத்துத் தேன் பூச்சிகள் 1/8 அங்குல நீளத்துடன் ஆப்பு போன்ற உருவையுடையதாய் உறிஞ்சும் வாய்ப்பாகங்களமைந்தவையாய் இருக்கின்றன இந்தப்பூச்சிகள். பூக்கொத்துகளின் உள் பாகங்களில் முட்டைகள் இடப்பட்டு 4, 7 நாட்கள் அந்நிலேயில் இருக்கும். சிறு பூச்சிகள் முழுப்பூச்சிகளேப் போலவே இருப்பினும் சற்று சிறியவையாய் இறகுகளில்லாமல் இருக்கும். சாற்றைச்சப்பிமேல் தோலே 4 தரம் உரிந்துவிட்டு 8, 10 நாட்களில் முழுப்பூச்சிகளாக ஆய்விடும். முட்டைமுதல் முழுப்பூச்சி ஆகும் வரை உள்ள காலம் 12 முதல் 17 நாட்கள்.

அடக்கு முறைகள்.—பூச்சி சாஸ்திர சாகையார் செய்த ஆராய்ச்சிகளினுல், மேல் பூச்சு விஷக் கஷாயத்தால் (மீன் எண்ணே, ரோசன, சவுக்காரக் கஷாயத்தால்) இந்தப் பூச்சியை அடியோடு ஒழித்துவிடலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ராத்தல் 1-க்கு 3 அணு வீதம் இந்த சவுக்காரம் கள்ளிக்கோட்டை கோள சோப் இன்ஸ்டிடூட்டில் கிடைக்கும். ஒரு ராத்தல் சவுக்காரத்தை 100 ராத்தல் தண்ணீரில் கரைத்து பீச்சி அடிக்கலாம். பூச்சிகள் கூட்டங்கூடி இருக்கும் பூங்கொத்துகளே யெல்லாம் சேர்ந்து விழும்படியாக கஷாயம் பீச்சியடிக்கப்படவேண்டும். பூச்சிகள் காணப்பட்டவுடனே ஒரு தரம் மருந்து பீச்சியடிப்பது பொதுவாகப் பேசுகையில் போதுமானது என்றும், மறுமுறையும் பூச்சிகள் முட்டையிலிருந்து குஞ்சுகளாகப் பொறித்துக் காணப்பட்டால் இரண்டாம் முறை மருந்து பீச்சியடிக்கப்படுவது அவசியம் என்றும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

பின்னும் வேண்டிய விவரங்களுக்கு கோயமுத்தூர் விவசாய காலேஜ் கவர்ன்மெண்ட் எண்டமாலஜிஸ்டுக்கு எழுதிதெரிந்து கொள்ளலாம்.

19. பொலிகாளேகளும் அவற்றின் பராமரிப்பும்.

சில பொலி காளேகள் மந்தமாய்ப் பசுக்களே ஏறுகின்றனவென்றும், வேறுசில பசுமாடுகளில் விழுவதே இல்லே என்றும் வேளாவேளேகளில் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன, இந்த மாதிரி ஏன் ஏற்படுகிற தென்பது குடித்தனக்காரருக்குத் தெரியப்படுத்தவேண்டியது அவசியமாகிறது.

(1) காளே மாடுகள் தாமதமாய்ப் பசுமாடுகளேமிதிப்பதனுல் காளேகள் பலிதக்குறைவுள்ளவை என்று ஊகிக்க இடமில்லே. என்றுலும், மிகவும் கொழுத்துப் போய்க்கிடக்கிறவையானுலும் அதன்றி மெலிந்து போய்க் கிடக்கிறவையானுலும் அம்மாதிரி பலிதக்குறையுள்ள பிராணிகளாக இருக்கலாம் என்பது உண்மையே. அபரிமிதமான கொழுப்பைக் குறைக்க வேண்டிய அளவு வேலே கொடுப்பதால் காளேகள் உரப்புள்ளவைகளாக ஆகவேண்டும். உணவு பதார்த்தங்கள் ஸத்துள்ளவைகளாக இருத்தல் அவசியம். பசுவானுலும் காளேயானுலும் பலிதப்படுவதற்கு, தேகக்கட்டு சிலாக்கியமானபொழுதுதான் ஏற்பட்ட ஸமயம். அதில்லாமல் மெலிந்து நலிந்துபோன காலத்தில் பலப்படுவதற்கு லாயக்கற்றவை. பொலிகாளேயை பாதி நாள் ஒற்றை மாட்டு வண்டியிலாவது வேறு மாட்டுடன் சேர்த்துப் பூட்டி பயிர்த்தொழில் வேலேயில் எதாவதொன்றில் கட்டி வேலே கொடுக்க வேண்டியது. காளேக்குச் செவ்வையாய்த் தீனி கொடுத்து பச்சைத் தீவனமும் கிடைக்குந்தோறும் போடவும் வேண்டும்; அதனுடைய தசைகள் வலுப்படத்தக்க விதமாய் இருப்பதோடு கொழுப்புப்பிடிக்கவும் விடக்கூடாது. என்றுலும் மிகவும் மெலிந்து போய் திடக்குறைவடையவும் விடப்படாது. தினந்தோறும் இறுகத் தேய்த்து உண்ணி பற்றியிருந்தால் பொறுக்கிப் போட்டுவைக்கவும் வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் காளேகளேத் தொந்தரவு செய்து அவற்றின் திடத்தையும் குறைத்துப்போடும்.

(2) புதிய இடத்தில் மாற்றப்பட்டதினாலும் காளைமாட்டுக்கு உடைய வனால் கிடைக்கப்பெறும் பராமரிப்பு பேதத்தினாலும் ஏற்படக்கூடிய மன வேறுபாட்டினாலும் சில வேளைகளில் பொலிகாளைகள் தாமதித்துப் பசுக் கள்மேல் ஏறக்காரணம் உண்டாகலாம். இம்மாதிரியாக நேரங்கழித்துப் பசுக்களின்மேல் காளைகள் தாவுகிறதற்கு கோசத்தின்மேல் புண்ணாவது அல்லது பாலுண்ணிகளாவது காணப்படுவது காரணமாகவும் இருக்க லாம். உணவு கொடுத்தவுடனே காளையைப் பசுவுக்கு விடுவதைப்பார்க்கிலு ம் சில மணி நேரங்கழித்துவிடுவதால் அவைகள் சுறுசுறுப்பாய் இருக்கும் சமயமே மிகவும் நல்லது. வெகு தொலையிலிருந்து வழி நடந்து வந்து புதிய இடத்தில் கட்டப்பட்ட பொலி காளைகள் பசுக்களின் மேல் தாவ லாயக்கற்றவையாயிருக்கும் என்றாலும் இது ஸ்வல்ப காலம் மட்டும் இருக்குமாதலால் உணவு கொடுப்பதிலும் பொதுவாக மாட்டுக்குக் கொடுக் கும் பார்வை பராமரிப்பு இவைகளால் காளை சீக்கிரத்தில் நன்கு பலித முள்ளதாக ஆய்விடும். காளையைப் புதிதாய் வாங்கிப் புதிய இடத்திற்குக் கொண்டுவந்தவுடன், முன்னிடத்தில் எந்த ஆகாரம் கொடுத்துவந்தார் களோ அதையே சிறிது காலம் கொடுத்துக் கொண்டுவரவும். கொஞ்ச காலமான பிறகு புதிய ஸ்தலத்திற்கு அது வாடிக்கை பட்டுவிடும், அதைத் தொந்தரவு செய்ய வேண்டாம். நல்ல சாலையில் கட்டி ஏராள மாய் தேகப்பயிற்சி கிடைக்கும் வண்ணம் வேலையிலிட்டு, பசுக்களின்மேல் பிரவர்த்திக்க விடுவதற்குமுன் 2, 3 வாரம் அதற்கு விச்ராந்தி ஏற்படும் படியும் சும்மா விட்டுவிடவேண்டும்.

(3) காளை மாட்டை ஒழுங்காய்ப்பொலி வேலை வாங்கவேண்டியது மிகவும் அவசியம். ஒரு சமயம் நொருங்க அடித்துவிட்டுப் பிறகு வேலை யே இல்லாமல் சும்மா விட்டுவைக்கப்படாது. வெகுகாலம் பசுக்களின்மேல் ஏறவிடாமல் வைப்பதும், அதன்றி அடிக்கடி பசுக்களை ஏறச் செய்வதும், காளை மாட்டின் தாது நாளங்களைத் தளரச் செய்வதுமன்றி சாசுவதமாயும் அவைகளின் வீர்யத்தையும் குறுகச் செய்துவிடும்.

இந்தியாவில் மழைகளுக்குப் பின்னிட்டு ஏராளமான பசுக்கள் காளை யைத் தேடிகதறுவது ஸகஜமானதால் இந்த மாதிரியான காளைகளை ஒழுங்குபட வைப்பது சற்று கடினமானது. மழைகளுக்குப் பின்னால் புல் ஏராளமாய் முளைத்திருக்கும் சமயத்தில் பசுக்கள் மேய்ந்து நன்றாய்க் கொழுத்து நிற்கும் சமயத்தில் அவை காளைக்காகக் கதறுவதை முன்னிட்டு மாடு வளர்ப்போர் சிறு காலத்தில் காளைகளைக் கொண்டு ஏராளமான பசு மாடுகளுக்குப் பலத்துக்கு விடுவது ஸாமான்னியமாய்த் தெரிந்தது தான். இப்படிச் செய்வது தகுதியன்று. இந்த சமயங்களில் ஒரு மாதத்தில் 10, 12-க்கு மேல் பசுக்களில் காளையைப் பிரவிர்த்திக்கவிடக்கூடாது. ஸாத்தியப்படுந்தோறும் வருஷ முழுவதிலும் ஒழுங்காய் சரிவர பொலிச்சல் களை விரிக்க முயலுவது அவசியம்.

(4) காளைக்கன்றுகள் பால்யமாய் இருக்கும்பொழுது அவைகள் ஏறு வதால் பசுக்கள் சினைப்பட்டாலும் அடிக்கடி இவற்றைப் பொலிய விடுவ தால் மாடுகள் கறளைப்பட்டு பின் காலத்தில் பொலிச்சல் சக்தியும் குறைந்து போனவைகளாக ஆய்விடும். தீவனக்குறைவாலும், அதிகப் பொலிச்சலா லும் இளங்காளைகள் கெட்டுப்போகும். வயதான காளைகளோ இதற்கு மாறாக பெருந் தீனியாலும் பொலிச்சலே இல்லாததாலும் கேட்டையும் சில இளங்காளைகள் $2\frac{1}{2}$ வயதிலேயே பொலிய ஆரம்பித்தாலும் 4 வயது ஆகும் முன் தக்கபடி வளர்ச்சி அடையாதவைகளாகையால், $2\frac{1}{2}$ முதல் 3 வயது வரை மாதம் 1-க்கு 3, 4 பொலிச்சலும், 3-வது வயது முதல் 4 வது வயது வரை மாதத்திற்கு 4 அல்லது வருஷத்தில் மொத்தம் 50 பொலிச்சல்களும் தான் கொடுக்கப்படவேண்டும். பால்யத்திலேயே ஒரு இளங்காளையை ஏராளமான பசுக்களுக்குப் பலத்துக்கு விடுவதால் அது செய் யக்கூடிய மொத்த பொலிச்சல் காலம் வெகுவாய்ச் சுருங்கிப்போகும். ஒரு இளங் காளையை நன்றாய்ப் போஷித்துத் தக்க வளர்ச்சியடையும்படி செய்ய வேண்டும். முதிர்ந்து வளர்ந்தகாளைகளுக்கு அவைகள் அதிகமாய்க் கொ ழுப் பேறுவதாகக் காணப்பட்டால் உணவைச்சற்றுக் குறைத்துப்போடலாம்.

(5) பொதுவாக சிறு தேகமுள்ள காளைகள் அதிகமான பசுக்களைச் சினையாக்கும் சக்தியுள்ளவைகளாக இருக்கும். ஒங்கோல் சிந்தி முதலிய பெரிய கனமான காளைகளை விட தேகக்கட்டுள்ள சிறிய காங்கயம் ஹல்லிகர் காளைகள் லேசாயும் துரிதமாயும் பசுக்களின்மேல் தாவிக்குதித்துப் பலப்படுத்தும்.

(6) பொலிச்சல் வேலையற்ற சிறு காளைகள் சில வேளைகளில் துர்ப்புத்தியால் தாது ஸ்கலிதம் செய்து கொள்ளுவதுண்டு. இந்தியாவில் அது ஸகஜமாய்க் காணப்படுகிறது. சாத்தியமான மட்டும், பொலிச்சல் இல்லாத காலங்களில் சரியான வேலையில் கட்டி ஓட்டுவதால் இந்தக் கேட்டை ஒருவாறு நிவர்த்திக்கலாம்.

காளையை நோக்காமலும் நிற்காமலும் அங்குமிங்கும் ஓடித்திரியும் பசுமாட்டின்மேல் ஏறித்தாவி பொலிச்சல் செய்யக் காளை ஸம்மதிக்காது. இந்தப்புகார் காளைமாட்டை அக்கிரமமாய்ச் சேருகிறது. பசுமாட்டுக்கு இவ்வித அவஸ்தை ஏற்பட்டு நிற்பது எல்லாம் 16 மணி காலம் தான் என்பதை எல்லாரும் நன்ருய் உணரவேண்டும். ஆகையால் பசுவின் கதருகிற காலம் ஆறிப்போகுமுன்னரே காளையைச் சேர்த்தவேண்டியதும் மிகவும் முக்கியமானது. இல்லையாஞல் பசு நிற்காது, காளையும் ஏறி மிதிக்காது.

ஆர். டப்ளியு. லிட்டில்வுட்,
கால்நடை விவசாய டிப்டி டைரக்டர்.

ஹோசூர் கால்நடைப்பண்ணை, பி.ஓ.,
1935-ம் வருஷம் நவம்பர் மீ 29உ.

20. ஜனங்களால் வைக்கப்பட்டிருக்கும் பொலிகாளைகளுக்கு சர்க்கார் நன்கொடை (Premium) அடைய அனுசரிக்கவேண்டிய நிபந்தனைகள்.

1. சென்னை விவசாய டைரக்டர் அவர்களால் காளை அங்கீகரிக்கப்படவேண்டும்.

2. அது, தீனி சரிவர போடப்பட்டும், நல்ல வசதியான கொட்டிலில் கட்டப்பட்டும், நல்ல நிலைமையில் வைக்கப்பட்டுமிருக்கவேண்டும்.

3. அடியிற்கண்ட விவரங்களடங்கிய பொலிவு ரெஜிஸ்டர் ஒன்று வைக்கப்படவேண்டும் :—

காளை பொலிந்த தேதி.	பசுவின் சொந்தக்காரர் பெயரும் விலாசமும்.	கட்டணம் வசூலிக்கப்பட்ட தொகை.	பிறந்த கன்றின் விவரம்—காளையா, கிடாரியா, கன்றின் நிறம், முதலியன.

காளை ஒரு வருஷத்தில் 40—80 பசுக்களுக்குக் குறையாமல் பொலியவேண்டும். இளமைப் பருவமுள்ள சிறிய காளையாஞல் நன்கொடைபெற குறைந்தது 25 பசுக்களையாவது பலப்படுத்தியிருக்கவேண்டும்.

5. காளையானது ஒருவராலேனும் அல்லது சங்கத்திலேனும் பரிபாலிக்கப்படலாம்.

6. காளையின் சொந்தக்காரர் இடத்திற்கு தகுந்தபடியும், கிராமத்திற்கு தகுந்தபடியும் பொலிவுகட்டணம் விதித்துகொள்ளலாம்.

7. விவசாய டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் ஒரே காளைக்கு 3 வருஷம் வரை நன்கொடையை வருஷா வருஷம் புதுப்பிக்கலாம்.

(8) ஒருவர் ஒரே இடத்தில் ஒரு காளைக்குமேல் வைக்க அனுமதிக்கமாட்டார்.

பொலி காளையைப் பரிபாலிக்கவேண்டிய விதிகள்.

மந்தைக்குப் பாதி காளை என்பதற்கொப்ப பண்ணையிலுள்ள இதர கால்நடைகளைவிட காளையை அதிகமாய் கவனிக்கவேண்டும்; அப்பொழுது தான் காளைக்குச் செலவழித்திருக்கிற பணத்திற்கு மிகுந்த பிரதிப்பிரயோஜனம், அதாவது நல்ல பலமுள்ள, பலமான கன்றுகள் உண்டாகும்.

காளையை ஒரு புதிய இடத்திற்குக் கொண்டு போனால், விசேஷமாய், தீனி முதலில் சரிவர தின்பதில்லை. ஆதலின், காளை புதிய இடத்திற்கு பழக்கப்பட்டு, தீனி சரிவர தின்னும் வரை, அதாவது 2 அல்லது 3 வாரமாவது பசுக்களை பொலியவிடாமலிருக்கவேண்டும்.

கட்டுத்தரை.—காளையை சரிவர கவனிக்கவேண்டிய விதிகளில் முதன்மையானது, காளைக்குக் கோடையில் வெய்யிலின் உஷ்ணம் படாமலும், மழையில் நனையாமலும் பனிசாரல் அடிக்காமலுமுள்ள இடத்தில் கட்டவேண்டுமென்பது. கொட்டில் 10 அடி சதுரமாயும், பெருங்காற்று உட்புகாமலும், வெளிச்சமுள்ளதாயும் இருக்கவேண்டும். அதில் தீனித்தொட்டி ஒன்று வைக்கவேண்டும். காங்கிரீட் தளம் சிலாக்கியம். கடப்பைக்கல் தளமானால் வழுக்காமலிருக்கும்பொருட்டு கொத்தப்பட்டிருக்கவேண்டும். இந்த தளத்தை அடிக்கடி இலகுவாய் கழுவி சுத்தமாய் வைத்துக்கொள்ளலாம். கூழாங்கற் தரை போதுமானது. ஆனால் அதை கழுவ முடியாது. கொட்டிலை பிரதிதினமும் பெருக்கி சுத்தப்படுத்தவேண்டும்.

தீனி போடுதல்.—காளையினின்று கிடைக்கக்கூடிய முழு பிரயோஜனமும் அடைய விரும்பினால், காளையை நல்ல ஸ்திதியில் வைத்திருக்கவேண்டும்; ஆதலின், அதற்கு போதுமான கூடைத்தீனி ஒழுங்காகக் கொடுக்கவேண்டும்.

காளைக்கு கொடுக்கவேண்டிய தகுதியான தினப்படி தீனி பின்வருமாறு:—

		பவுண்டு (ராத்தல்).
1	பிண்ணாக்கு	1
	கொள்ளு	2
	பருத்தி விதை	1
	அரிசித் தவிடு	2
	காய்ந்த தீவனம்	15
	அல்லது	
	பச்சை தீவனம்	50
2	பிண்ணாக்கு	2
	கொள்ளு	1
	பருத்தி விதை	1
	அரிசித் தவிடு	2
	காய்ந்த தீவனம்	15
	அல்லது	
	பச்சை தீவனம்	50
	மத்தியதரமான காளை.	
3	பிண்ணாக்கு	2
	பருத்தி விதை	1
	அரிசித் தவிடு	3
	காய்ந்த தீவனம்	15
	அல்லது	
	பச்சை தீவனம்	5

		பவுண்டு (ராத்தல்)
4	கொள்ளு	5
	பருத்தி விதை	3
	அரிசித் தவிடு	1
	காய்ந்த தீவனம்	12
	அல்லது	
	பச்சை தீவனம்	50
5	பிண்ணாக்கு	2
	சோளம் அல்லது கம்பு	1
	அரிசித் தவிடு	3
	காய்ந்த தீவனம்	15
6	பிண்ணாக்கு	1
	கொள்ளு	2
	அரிசித் தவிடு	3
	காய்ந்த தீவனம்	15
7	பருத்தி விதை	2
	கொள்	1
	துவரம் பொட்டு	1
	அரிசித் தவிடு	2
	காய்ந்த தீவனம்	15

காளை தீனி சரிவர தின்னுவிடில் தீனியை அப்போதைக்கப்போது கொஞ்சம் மாற்றவேண்டும். கூடைத்தீனியை காலையில் பாதியும் மாலையில் பாதியுமாய் கொடுக்கவேண்டும். காளைக்குச் செய்யவேண்டிய வேலையின் கால அட்டவணை கீழ் கூறப்பட்ட வகை :—

காலை ..	6-30	தொழுவம் சுத்தி செய்தல்.
	7—7-45	காளைக்கு வேலைப்பயிற்சி.
	7-45	தண்ணீர் காட்டுதல்.
	8	கூடைத் தீனியில் பாதி கொடுத்தல்.
	9	தேய்த்து துடைத்தல்.
	11	5 பவுண்டு காய்ந்த தீவனம் போடுதல்.
மாலை ..	5—5-45 ..	வேலைப் பயிர்சி.
	5-45	தண்ணீர் காட்டுதல்.
	6	கூடைத் தீனியில் பாக்கி பாதியை கொடுத்தல்.
	6-30	பாக்கி 10 பவுண்ட் காய்ந்த தீவனம் அல்லது பசுந் தீவனம் போடுதல்.

பிண்ணுக்கைத் தண்ணீரில் 12 மணி நேரம் ஊரவைக்கவேண்டும். கொள்ளை வேக வைக்கவேண்டும். வாரத்திற்கு 2 அல்லது 3 தடவை கொஞ்சம் வெல்லம் தீனியுடன் சேர்க்கலாம்.

கால்நடைகளைப் பரிபாலிப்பதில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷமென்னவெனின் காலாகாலத்தில் இவைகளுக்குப் போடவேண்டிய தீனியைச் சரிவரப்போடுதலே.

வேலை அல்லது பயிற்சி.—காளைகளுக்கு பயிற்சி முக்கியமானது, இல்லாவிடில் காளை மெதுவாகவும் சோம்பலுள்ளதாயும் ஆகிவிடும்; பொலிய விருப்பமில்லாததாகவும் காணப்படும். காளையின் குளம்பை கவனிக்கவேண்டும். அதற்கு போதுமான பயிற்சி இல்லாவிடில் குளம்புகள் நீண்டு வளைந்துவிடும். அதினுல் அதுசரிவர நடக்கமுடியாது.

காளையைக் கெட்டியான ரஸ்தாவில் பயிற்சி செய்தாவது அல்லது குளம்புகளைச் சிறு கத்தியினுல் சீவித்தள்ளியாவது, குளம்பு வளராமலும் உள்ளடி தட்டையாகவும் வைத்திருக்கவேண்டும்.

காளைகளைத் தேய்த்தல்.—தோல் சரியான நிலைமையிலிருப்பதற்கும், பேன், உண்ணிகள் வராமலிருப்பதற்கும், காளையை ஒழுங்காய்த் தேய்த்து துடைக்கவேண்டும். காளையை அப்போதைக்கப்போது சோப்பைத் தேய்த்து கழுவுவது நலம்.

பூச்சிகள் தென்பட்டால், காளையை 2 அல்லது 3 தடவை கிரிஸால் (Cresol) என்கிற தொற்று வியாதிகளை நிராகரிக்கக் கூடிய திராவகங்களினுல் கழுவவேண்டும்; வாரத்திற்கொருமுறையாக திராவகம் போட்ட ஜலத்தால் கழுவவேண்டும். முதல்தரம் கழுவுவது பூச்சிகளை கொல்லுமேயொழிய அதன் முட்டைகளைக்கொல்லாது, மறுதரம் கழுவினுல்தான் முட்டையினின்று வெளிவரும் புழுக்களும் மடியும்.

பசுக்களை பொலியவிடுதல்.—பசுக்களுடன் காளையை திரியும்படி விடுதல் உசிதமல்ல, இப்படிச் செய்வதில், காளை அதே பசுவை பலதடவை பொலிய நேரிடுகிறது. கடைசியாக பசுவும் காளையும் களைத்துப்போய், பசு கருத்தரிக்காமலேயும், காளை இளவயதிலேயே உபயோகமற்றதாகவும் ஆகிவிடுகிறது.

பசு பொலிவுக்குப் பக்குவமான காலத்திலிருந்தால், காளை ஒரு தரம் மிதித்தால் போதுமானது. இரண்டுதரம் மிதித்தால், காளையை யாதொரு காயமுமில்லாமல் களைக்கும்படி செய்கிறதுமன்னியில், அதன் வீரியத்தையும் அபாயத்திற்குட்படுத்தி, அதன் வலுவையும் தேகக்கட்டையும் குறைத்து ஒரு பருவ காலத்தில் அந்த காளை பொலியக்கூடிய பசுவின் சங்கியையும் குறைக்கிறது; ஆதலின் அந்தக் காளையினுல் அந்த ஜில்லாவில் எற்படக் கூடிய சௌகரியமும் குறைகிறது.

பொலி காளைகளை போஷிக்க நன்கொடை, அது சம்பந்தமான சட்டங்களை அநுஷ்டிக்கவேண்டிய முறைகள்.

முதல் முதலில் காளை கால்நடை செக்ஷனைச்சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தராலாவது அல்லது அந்த ஜில்லா விவசாய டிப்டி டைரெக்டர் அவர்களாலாவது அங்கீகாரம் செய்யப்படவேண்டும். காளையை விவசாய டிபார்ட்மெண்ட் எந்த உத்தியோகஸ்தரும் பார்க்க ஆக்ஷேபணையிருக்கக்கூடாது, நன்கொடை கொடுப்பதற்குமுன், விவசாய டிப்டி டைரெக்டராவது அல்லது அவருடைய உதவி உத்தியோகஸ்தரொருவராலாவது, காளையையும் அது சம்பந்தப்பட்ட ரெஜிஸ்டர்களையும் சோதிப்பார், **அவருக்கு காளையின் நிலமையும் ஸர்விஸ் ரெஜிஸ்டர் முதலானதுகள் திருப்திகரமாயிருந்தால் காளைக்கு ரூபாய் 100 கொடுக்க சிபார்சு செய்வார். (ரூ. 50 காளையை பரிபாலிப்பதற்கும் ரூ. 50 பலப்பட்ட பசுவின் சங்கியைக்காகவும்).** *காளைமாத்திரம் நல்ல ஸ்திதியிலும் இதர நிபந்தனைகள் பூராவும் நடைபெறுமலிருந்தால் ரூ. 100-க்கு குறைந்த தொகையும் சிபார்சு செய்யலாம். காளை பரிசோதனைக்குப்பிறகு வருஷக் கடைசியில்தான் நன்கொடை கொடுக்கப்படும். அந்த நன்கொடையை அதே காளைக்கு 3 வருஷத்திற்கு* **மேற்பட்டால்** *அதே நிபந்தனைகளுக்குட்பட்டு பிரதிவருஷமும் புதுப்பிக்கலாம்; உடன் பிறவியை தடுப்பதற்கே காளையை 3 அல்லது 4 வருஷத்திற்கொருதரம் மாற்ற வேண்டுமென்கிற 3 வருஷ காலாவதி விதிக்கப்பட்டிருக்கிறது.*

சர்க்கார் பொலி காளைகளை - ஜில்லா போர்டுகள், மியுனிஸிபாலிடிகள், இதர லோகல் போர்டுகள், ஐக்கிய சங்கங்கள், பஞ்சாயத்துகள் இவைகளுக்கு இரவல் கொடுப்பதற்கான நிபந்தனைகள்.

(a) *காளையை இரவலாக கொடுக்கப்படும்.*

(b) ஜில்லா போர்டு, மியுனிசிபாலிடி, ஐக்கிய சங்கம் அல்லது பஞ்சாயத்து அக்ராசனதிபதி காளையை சரிவர போஷித்து தகுந்த இடத்தில் வைப்பதற்கு ஜவாப்தாரிகள்.

(c) *காளையை நல்ல ஸ்திதியிலும், சுத்தமான தரையிலும், வஸதியான கொட்டிலிலும் வைத்திருக்கவேண்டும்.*

கீழ்கண்ட உணவு அல்லது அதற்கு சமத்துவமான ஆகாரம் தினப்பிரதி இரண்டு வேளையாக கொடுக்கப்படவேண்டும்.

அரிசித் தவிடு	2	பவுண்ட் (ராத்தல்).
உடைத்த பருத்தி விதை	2	ஷை
ஊரவைத்த கொள்ளு	1	ஷை
சோளத்தட்டை அல்லது காய்ந்த புல் ..	20	ஷை
அல்லது		
தவிடு	2	ஷை
பருத்தி விதை	1	ஷை
கடலைப்பிண்ணுக்கு	2	ஷை
சோளத்தட்டை	20	ஷை

(d) *காளையை ஊர்மந்தை மாடுகளுடன் மேயவிடக்கூடாது. ஆனால் பயிராகவேண்டிய பசுக்களை காளையுடன் சேர்த்து, கூடுமானல் ஒரு சிறிய அடைப்பில் விடலாம்.*

(e) *லோகல் போர்டுகள், சங்கங்களின் அபிப்பிராயப்படி ஒரு சிறிய கட்டணம் விதிக்கலாம். இனாமாக பயிராக விடுவதில் சர்க்காருக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை.*

(f) ஒரு வருஷத்திற்கு 80 பசுக்களுக்குமேல் காளையை பொலியவிடக்கூடாது. குறைந்தது 50 பசுக்களையாவது பயிராக்க எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளவேண்டும். *அந்த ஜில்லாவில், யாதொரு தொத்துவியாதியுமில்லாமலிருந்தால் காளையை சந்தைகளுக்கு அவசியமிருந்தால் கொண்டுபோய் பிரசித்தம் பண்ணலாம்.*

(g) *விவசாய டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தரால் எந்த நேரத்திலும் காளை பரிசோதிக்கப்படும்.*

(h) லோகல் போர்ட் அல்லது ஐக்கிய சங்கங்கள், காளை யாருடைய ஜவாப்பில் இருக்கிறதென்பதையும் அவர் பெயர் விலாசத்தையும், அதில் மாறுதல் ஏற்படுங்காலங்களில், அந்த மாறுதல்களையும் விவசாய டிப்டி டைரக்டருக்குத் தெரியபடுத்தவேண்டும்.

(i) காளை வியாதியால் பீடிக்கப்பட்டால், சமீபத்திலிருக்கும் மிருக வைத்தியசாலைக்கு காலதாமதமன்னியில் தெரியபடுத்தி, அவர்களுடைய தொழில் முறைமை உதவியைப் பெறவேண்டும்.

(j) லோகல் போர்டுகள் அல்லது சங்கங்கள், காளையைச் சர்க்கார் பண்ணையிலிருந்து அது சேரவேண்டிய இடத்திற்கு ஏற்படுகிற எல்லாவித சிலவுகளையும் செலுத்தவேண்டும். காளை, தகுதியில்லாததாயிருந்தால், அதைக் கால்நடை பண்ணைக்காவது அல்லது அந்த ஜில்லாவிலுள்ள இதர பண்ணைகளுக்காவது, அவர்கள் சிலவில் அனுப்பலாம்.

(k) காளை சரியாக பரிபாலிக்கப்படாமலும் நல்ல பிரயோசனப்படுத்தப் படாமலும் இருந்தால், லோகல் போர்டுகள், சங்கங்கள் முதலியவைகளிலிருந்து காளையை திருப்பி எடுத்துக்கொண்டுபோகப்படும். அப்படி கொண்டுபோக ஏற்படும் ரயில் சார்ஜ் சிலவு தொகைகளை ஷெ சங்கங்கள் கொடுக்க வேண்டிவரும்.

மேற்கூறிய எந்த பொதுஜன சங்கத்திற்கும் ஒரேயிடத்தில் வைக்க ஒரு காளைக்குமேல் இரவல் கொடுக்கப்படமாட்டாது.

21. தேனீ வளர்த்தல்.

பிரஸ்தாவனை.—மனிதனுக்கு உபயோகப்படகூடிய வஸ்துக்களைக் கொடுக்கக்கூடிய பூச்சியினங்களில் தேனீ மிகவும் முக்கியமானது. இவைகள் நமக்குத் தேன் ஒன்றைமட்டும் கொடுப்பதாக நினைக்கக்கூடாது. நம்முடைய செடிகளின் புஷ்பங்கள் ஸங்கலிதத்தை இத்தேனீக்களே செய்கின்றன. தற்காலத்து வருவாய்க் குறைந்து க்ஷீணித்து வரும் விவசாய விர்த்தியைச் சற்று ஸஹாயம் செய்து ஸ்வல்பமாய் உபரி ஊதியம் கொடுக்கக்கூடிய துணைத் தொழிலாகிய தேனீ வளர்த்தல் என்ற சிறு தொழிலைச் செய்யும்படி குடியானவர்களை வற்புறுத்துகிறோம்.

தேனைச் சேகரித்து கூட்டில் பத்திரப்படுத்தி வைக்கும் தன்மையுள்ள பலவகை நாட்டுத் தேனீக்களான, பாறைக்காட்டுத் தேனீ, இந்திய தேனீ, சிறு தேனீ, டம்மார் தேனீ என்றவற்றுள், இந்திய தேனீ ஒன்றைமட்டும் நாம் செய்ற்கைக் கூடுகளிலிட்டு வளர்க்கலாம்.

தேனீ கூட்டங்களை கூட்டிலிடுவதும் அவைகளை நிர்வகிப்பதும்.—விலைக்குக் கிடைக்கக்கூடிய தேனீக் கூட்டங்கள் சிற்சில இடங்களில் மட்டும் கிடைப்பதால், புதிதாய் ஆரம்பிப்பவன் வழக்கப்படாத தேனீக்கூட்டங்களை பிடித்து அவைகளை நம்மால் செய்யப்பட்ட கூண்டில் பழக்கப்படுத்தவேண்டும். திறந்த வெளியில்லாத மரப்பொந்துகள், சுவர்களின் வெடிப்பு அல்லது பொந்துகள், நிழலுள்ள புதர்கள், வேலிகளில் கிடக்கக்கூடிய உடைந்த கட்டிகள் இவைகளில் இந்திய தேனீக் கூட்டங்கள் சாதாரணமாகக் காணப்படும். இக்கூட்டங்களை கொஞ்சம் புகையிட்டுக் கலைத்து, அவைகளின் கூடுகளை ஜாக்கிரதையாக எடுத்து செயற்கைக் கூட்டின் சட்டங்களில், வாழை நாரைவைத்து கட்டிவிடவேண்டும். பிறகு ராணீ ஈயை கண்டுபிடித்து அதைச் செயற்கைக் கூண்டில் இட்டால் மற்றத் தேனீக்களை வெகு சுலபமாய் அக்கூட்டிற்கு வருத்திவிடலாம். செங்கல் மங்கல் நிறமுடையவரில் கருப்பு வரியுடனும் கருப்பு நிற கால்களையுடைய சிறிய தேனீக்களிலிருந்து, பெரியதாயும் வீக்கமுள்ள வயிருடனும் ஒரே செம்பு நீர்க்காவி நிறமுடைய உடலும் கால்களையும் வைத்து 'ராணி' ஈயைக் கண்டுகொள்ளலாம். 'ராணி' ஈயினிடமிருக்கும் பற்றுதலினால், மற்ற எல்லா ஈக்களும் அவளைத் துடர்ந்து கூட்டில் போய்விடுகின்றன. 'ராணி' ஈ காணப்படவில்லையானால், அந்த வளையிலுள்ள மற்ற தேனீக்களை எல்லாம், கையால் மெதுவாக திரட்டித் தேன் கூட்டில் தள்ளிவிடலாம். இப்படி சில தேன் கூட்டங்களை ஸ்தாபித்த பிறகு, புதிதாய் ஆரம்பிப்பவன் தேனீக்களின் ஜீவ சரித்திரத்தை நுட்பமாயும் தவறில்லாமலும், தெரிந்து

கொள்ளவேண்டும். தவிரவும், திருப்திகரமாயுள்ள அளவு தேன் தயாரிக்க மிக்க அவசியமாயுள்ள சமாசாரங்கள். அதாவது, தேனீக்களுடைய நடவடிக்கைகள், அவைகளின் பகைவர்கள், சாதுர்யமாய் தேனீக்களை கையாடல், தேனீக் கூட்டங்களை இணைத்தல், 'ராணி' ஈயை உட்செலுத்துதல், தேனீத் திரள்களை வெளியில் ஓடவிடாமல் தடுத்தல், செயர்கையாகாரம் கொடுத்தல், தேனீக் கூட்டங்களைச் சரிவர வைத்தல். இவைகளை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும்.

தேனீ வளர்த்தலுக்கு வேண்டிய உபகரணங்கள்.—தேன் குணத்தையும் அளவையும் விருத்தி செய்வதற்கு, செயற்கை தேன்கூடு தேன் வடிக்கும் கருவி இவ்விரண்டும் நவீன முறையில் தேனீ வளர்த்துவதற்கு மிகவும் அவசியமான சாதனங்கள். செயற்கை தேன்கூட்டில், தேனீக்கள் தங்கள் இனத்தை வளர்த்துவதற்கும், தேனை சேகரித்து வைப்பதற்கும பிரத்தியேகமாக அரைகள் இருப்பதால், தேனீக்களை தடை செய்யாமல் தேன் எடுக்கலாம். தேனீக்கள், அவைகளின் தேவை மற்றுமுள்ளது. இவைகளை நுட்பமாய்க் கவனிக்க, எடுத்துத் திரும்பவும் வைக்கக்கூடிய சட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேன் கூட்டை அருத்து அசுத்தமாய் சொற்ப தேன் எடுக்கக்கூடிய அநாகரீகமானபண்டை முறையை மாற்றுவதற்காகவும், கூடுகளுக்குச் சேதமன்னியில் சுத்தமான தேன் எடுக்கவும், தேன் வடிக்கும் கருவி ஏற்பட்டிருக்கிறது. புதிதாய் தேனீ வளர்ப்பவனுக்கு, செய்றகை தேன்கூடு, தேன் வடிக்கும் கருவி இவ்விரண்டையும் தவிர தேனீக்களை அடக்க புகைக்கருவி, தேனீக்கள் கொட்டாவண்ணம் முகாடு கைக்கவசம் இவைகளும் அவசியம். ஆனால் கூடிய சீக்கிரத்தில் முதல் சொன்ன இரண்டைத் தவிர மற்றவைகள் அனவசியமாய்விடும்.

தேனீக்களுக்கான மேய்ச்சல் ஸாதனம்.—தேனீக்களுக்குப் பூந்தூளும் (மகரந்தபொடி) மதுவும் இயற்கையான ஆகாரமாகையால் வருஷம் பூராவும் நானுவிதப் பயிர் தீவிரமாய்ப் பயிர் செய்யும் இடங்களில் தேனீ வளர்த்தல் லாபகரமானது. தேனீக்கள் நானுவித புஷ்பங்களிலிருந்து தங்கள் ஆகாரத்தை சேகரிக்கின்றன வென்றாலும் செடிகளுக்குத் தகுந்தவாறு அவைகளுக்குக் கிடைக்கக்கூடிய ஆகாரம் மாறுபடுகிறது. மக்காச்சோளம், சோளம், கம்பு, சூரியகாந்தி, ஆமணக்கு, பெல்டோபாரம், ஜின்னியா போன்ற அழகான தோட்டச் செடிகள் இவைகளிலிருந்து பூந்தூளும், நாட்டுப்பருத்தி, கம்போடியா பருத்தி, புளி, மா, வாழை, கொத்தமல்லி, இவைகளிலிருந்து மதுவும் தேனீக்களுக்கு கிடைக்கின்றன.

தேனீ வளர்த்தலின் வரவு சிலவு.—தேக்கு மரத்தால் செய்த ஒரு தேன்கூடு விலை ரூ. 4-8-0. ஒரு கூட்டம் தேனீ பிடித்துக்கொடுக்கக் கூலி அ. 8 முதல் ரூ. 1 வரை ஆகலாம். சாதாரண காலங்களில் ஒரு கூட்டிலிருந்து ஒரு வருஷத்தில் சுமார் 12 முதல் 15 ராத்தல் தேன் கிடைக்கும். சராசரி ஒரு கூட்டிற்கு 8 ராத்தல் தேன் ஆக எடுத்துக்கொண்டு ராத்தல் 1-க்கு ரூ. 1-4-0 வீதம் கணக்கிட்டால் ரூ. 10 மொத்தத்தில் கிடைக்கலாம். எனவே தேனீ வளர்த்தல் தக்க லாபந் தரத்தக்க பிரவர்த்தி என்பது ஏற்படுகிறது.

கோயமுத்தூர் விவசாய பரிசோதனை பண்ணையை ஒட்டி தேனீச்சாலை.—தக்க தட்டுமுட்டு ஸாமான்கள் ஸஹிதமான இந்திய தேனீ வளர்க்கக்கூடிய தேனீச் சாலை ஒன்று கோயமுத்தூர் கவர்ன்மெண்ட் பூச்சி சாஸ்திரியின் மேல் பார்வையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கே இது ஸம்பந்தமான ஆராய்ச்சிகள் வெகுவாய் நடத்தப்படுகின்றன. பிரதி வருஷமும் பிப்ரவரி மாதத்தில் மாணவர்கள் இத்தொழிலில் இலவசமாய்ப் பயிலுவிக்கப்படுகிறார்கள்.

தேன் கூடுகளும், தேன் வடிக்கும் கருவிகளும் முறையே ரூ. 4-8-0-க்கும் ரூ. 9-க்கும் விலைக்கு தயாராயிருக்கின்றன.

யாவரும் விரும்பி அழைக்கப்படுகிறார்கள். இன்னும் தேவையான விவரங்களுக்கு கோயமுத்தூர் லாலிரோட் போஸ்டைச் சேர்ந்த கவர்ன்மெண்ட் பூச்சி சாஸ்திரிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

எம். சி. செரியன்,
கவர்ன்மெண்ட் எண்டமாலஜிஸ்ட்.

22. கோழி முதலியவைகளை வைத்து வளர்ப்பதினால் ஏற்படக்கூடிய சில அனுகூலங்கள்.

1. முட்டைகளும், கோழி முதலியவைகளும் தினந்தோறும் சாப்பிடுகிற சாப்பாட்டில் மாமிசமாக உபயோகித்து வருகிறவர்களுக்கு இது ஒரு முக்கிய உணவுக்கு உவந்த ஆகாரமாகும். சமீப வருஷமாக கோழி முதலிய பிராணிகளுக்கு அதிலும் பட்டணங்களில் அருகாமையிலுள்ள இடங்களில் தேவை ஜாஸ்தியாய் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் ஜனங்கள் அதிக சிரத்தை எடுத்து, அதனால் கோழி முதலியவைகளை வைத்து வளர்ப்பதில் மிகுந்த நிபுணர்களாகிக்கொண்டுவருகிறார்கள்.

2. சில ஜனங்கள் காதற்பொருளாக அல்லது பிரியத்துக்காக கோழிகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சில ஜனங்கள் சாவல் சண்டைக்காக கோழிகளை வைத்து வளர்க்கிறார்கள். மற்றும் சிலர் லாபம் கிடைக்கிற வகைக்காக அவைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சுருக்கமாய்த் தெரிவிக்கப்போகிறதின் கருத்து - கோழிகளை லாபத்திற்காக வைத்துக்கொள்ள விரும்புபவர்களை உத்தேசித்தே கோழிகளை வீட்டின் உபயோகத்திற்காக வளர்க்கலாம். அப்படி வைத்து வளர்ப்பதில் கொஞ்சம் லாபம் கிடைக்க வழி இருக்கும்போது ஏன் ஜாஸ்தி கவனம் அது விஷயத்தில் செலுத்தக்கூடாது.

3. பறவைகள் சாந்தமுள்ளதும், மிகவும் இலகுவாய் பழகக்கூடியதுமானவை. ஆகையால் ஒருவனுடைய மனைவியோ அல்லது குழந்தைகளோ, மனிதர்கள் தங்கள் வயல்களில் வேலை செய்துகொண்டிருக்கும்போது இவைகளையும் கவனித்துக்கொள்ளலாம்.

4. கோழிகளை வைத்து பரிபாலிப்பது யாரும் செய்யலாம். அதிலும் சிறு குடியானவனும்கூட சில கோழிகளை லாபத்துடன் வைத்துக்கொள்ளலாம். பெரிய நகரங்களிலும், பட்டணங்களிலும் வசிக்கப்பட்ட ஜனங்கள் கூட அவர்களுக்கு இருக்கப்பட்ட அந்த கொஞ்ச இடத்திலும்கூட சில பறவைகளை வைத்து வளர்க்கலாம். இப்படி வைத்து வளர்ப்பதற்குதான் "கொல்லைக்கோழி வளர்ப்பது" என்று சாதாரணமாய் சொல்வது உண்டு, கொஞ்சம் கவனமும், நல்ல இடவசதியும், சரியான ஆகாரவசதியும் இருக்குமானால் இது ஒரு சின்ன வருமானமாகும்.

5. ஒரு நல்ல பெட்டைக்கோழி நல்ல ஆகாரத்தைக்கொடுத்து நன்றாய் வைத்திருக்கும்போது மாதம் ஒன்றுக்கு அணா ஐந்து பெருமான ஆகாரம் சாப்பிடும். அதற்கு அணா பதினொன்று கிடைக்கக்கூடிய முட்டைகள் இடும். ஆதலால் ஒருவன் முப்பது பெட்டைக்கோழியை வளர்த்துவந்தால் அவனுக்கு மாதத்திற்கு ரூபாய் பதினொன்று லாபம் கிடைக்கும். அதாவது ரூபாய் நூற்றிமுப்பது வருஷத்திற்கு கிடைக்கும். இப்படிக் கிடைக்கிற வருமானம் ஒரு பயிர் சாகுபடி செய்து அதில் கிடைக்கிற வருமானத்துக்கு சமானம் இல்லையா ?

6. விவசாயத்தோடு சிலகோழிகளையும் வைத்து வளர்ப்பதில் அதிக லாபம் இருக்கிறது. பறவைகள் பண்ணையில் சிந்திக் கிடக்கக்கூடிய உபயோகமில்லாத வஸ்துக்களையும்,. தானியங்களையும் காய்கனிகளையும் தின்று ஜீவிக்கின்றன.

7. பறவைகள் அப்பொழுது அறுவடை செய்யப்பட்ட வயல்களில் கிடைக்கக்கூடியதைத் தின்றும், கோழிகள் கீழே உதிர்ந்து கிடக்கக்கூடிய தானியங்களை தின்றும், அவ்விதமாய் வீணாய் போகக்கூடிய வஸ்துக்களை எல்லாம் தங்களுக்கு உணவாகச் செய்துகொள்ளுகின்றன.

8. பறவைகள் நமக்குத் தோன்றபடாததாயுள்ள பயிர்களைக் கெடுக்கக்கூடிய புழுபூச்சிகளைத் தின்று அவ்விதமாக பூச்சிகள் மற்றப்பயிர்களையும் நாசஞ்செய்யவிடாமல் தடுக்கின்றன.

9. சிறு பயிர்களில் ஒரு அடி உயரம் பயிர்கள் இருக்கும்போது புலன்களில் இந்தப் பறவைகளை விட்டுவிடலாம். அவைகளுக்குப் பயிர்களை, நாசஞ்செய்யக்கூடியதாயுள்ள புழுப்பூச்சிகள் ஏராளமாய்க் கிடைக்கும். இந்த முறையினுல் பறவைகளுக்கு அளவுமிகுந்த ஆகாரம் கிடைக்குமாதலால் அவைகளுக்கு உணவைப்பற்றிய கஷ்டம் ஒன்றுமே இல்லை. அவைகளுடைய உரமோ மிகவும் சிலாக்கியமானவை.

10. ஒரு குடியானவன் தன்னுடைய விவசாயத்தோடு, கோழி முதலியவைகளையும் வைத்துவந்தால் அவனுக்கு அநேகவிதங்களிலும் லாபம் கிடைக்கிறது. ஆகையால் கோழி முதலியவைகளை வைத்து வளர்க்க ஒருவன் விரும்பினுல் அவன் ஹோசூர் கால்நடைப்பண்ணை விவசாய டிப்டி டைரக்டர் அவர்களைக் கலந்தால் அவனுக்கு வேண்டிய உதவியையும் ஆலோசனையும் அவர் புரிவார்.

11. ஹோசூரிலுள்ள கால்நடைப் பரிசோதனைப் பண்ணையில் கோழி முதலியவைகளை வைத்து வளர்க்கிறதற்கென்றே ஒரு பகுதி இருக்கிறது. அதில் நாட்டிலிருக்கக்கூடிய பறவை தினுசுகளும், அயல் தேசத்து பறவை வகைகளும் வைக்கப்பட்டு வருகின்றன. அதற்கென்றே தேர்ந்த மனிதர்கள் இருக்கிருர்கள். அவர்கள் அங்கு வருகிறவர்களுக்கு வேண்டிய ஆலோசனை சொல்லுகிருர்கள். அந்த இடத்தில் இயற்கையாய் அடைகாக்கும் முறைகளும், செயற்கை முறைகளும், குஞ்சுகளை வளர்க்கும் செயற்கை முறைகளும், தீவன முறைகளும், ஜனிப்பிக்கிற கோழிகளை வளர்க்கும் முறைகளையும் அவைகளுக்கு கொடுக்கவேண்டிய தீவன முறைகளும், அவைகளைக் காப்பாற்றுகிற அநேகவிதமான வழிகளும் கையாடப்பட்டு வருகின்றன. யாரும் எந்த சமயத்திலும் தாராளமாய் வந்து பார்க்கலாம்.

12. பறவைகளுக்ட ம், குஞ்சு பொரிக்கிற முட்டைகளுக்கும் பொது ஜனங்களிடமிருந்து ஏராளமான தேவையிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் குறைந்த விலைக்கு அப்போதைக்கப்போது பண்ணையிலிருந்து சப்ளைசெய்து வரப்படுகிறது. அடியிற் குறிக்கப்பட்ட ஜாதிகோழிகள் அந்தப்பண்ணையில் வளர்க்கப்பட்டு வருகின்றன :—

(1) வெள்ளை லெக்ஹார்ன்ஸ்.
(2) ரோட் அயலண்ட் ரெட்ஸ்.
(3) லைட் சசக்ஸ்.
(4) கருப்பு மினுர்காஸ்.
(5) சிட்டகாங்க்ஸ்.
(6) நாட்டுப்பறவைகள்.

சென்ற வருஷத்தில் ஒவ்வொரு ஜாதி கோழியிட்ட முட்டைகளின் விவரங்கள்.

கோழியின் இனம்.	பெட்டைக் கோழி.	வருஷத் துக்கு சராசரி இட்ட முட்டைகள்.	மிகவும் ஜாஸ்தியாய் இட்ட முட்டைகள்.	மிகவும் குறைவாய் இட்ட முட்டைகள்.
வெள்ளை லெக் ஹார்ன்ஸ்	12	184	236	158
ரோட் அயலண்ட் ரெட்ஸ்	9	157	181	135
லைட்சசக்ஸ்	6	143	196	109
கருப்பு மினுர்காஸ்	3	149	167	118
சிட்டகாங்க்ஸ்	3	134	149	116
நாடு (டெல்லிச்சேரி)	5	110	141	85

ஆர். டப்ளியு. லிட்டில் உட்,
கால்நடை விவசாய டிப்டி டைரெக்டர்
அண்டு
எச். நரஹரி ருவ்,
கோழி அஸிட்ஸ்டெண்ட்.

23. கோழி இயற்கையில் அடைகாக்கும் விஷயம்.

இயற்கை முறை.—சுமார் 100 குஞ்சுகள் வரவழைத்துக்கொண்டு கோழிகள் வளர்க்கவேணுமென்று எண்ணமுடையவர்கள் அடைகாக்கும் பெட்டைக்கோழிகள் வைத்துக்கொண்டே குஞ்சுகள் பொரிப்பது நலம்.

அடைகாக்கும் கோழியின் அடையாளம்.—எல்லாப்பக்ஷி ஜாதிகளிலும் பெண் பறவைக்கு அடைகாக்கும் குணமிருப்பது சாதாரணம். வம்ச விருத்திக்காக குஞ்சுகள் பொரிக்கிறவரைக்கும் முட்டைகள்மேல் உட்காருவது அதனுடைய சுபாவம். ஒரு நாட்டுக்கோழி சாதாரணமாய் ஒரு தடவைக்கு 10 முதல் 15 முட்டைகளிடும். இப்படி மூன்று அல்லது நான்கு தடவையிடும். ஒவ்வொரு தடவைக்கும் முட்டைகளிட்டதின்பேரில் அடைகாக்கும். அடைகாக்கும் கோழிகளுக்கு பின்னுல் சொல்லப்படும் அடையாளங்களிருக்கும் :—

(1) முட்டையிடுவது நிற்கும்.

(2) ஒரு இருட்டான மூலையில்போய் ஒரு கூண்டு கட்டி சந்தடியில்லாமல் உட்காரப்பார்க்கும்.

(3) அந்தக் கோழிப் பக்கத்தில் ஒரு ஆள் போனுல் சிரகுகளை தூக்கி கொண்டு கத்தும்.

(4) ஆஹாரத்தின்மேல் பிரியமில்லாமலிருக்கும்.

(5) கோழிக்கு கொண்டையும் தாடியும் இந்திரியக்கருவிகளும் சுருங்கும்.

(6) உடம்பில் உஷ்ணம் அதிகரித்து வெது வெதுப்பாயிருக்கும்.

(7) முகம் வாடியிருக்கும்.

சாதாரணமாய் ஒரு கோழியானது தன்னுடைய முட்டைகளை (21) இருபத்தோறு நாட்களில் குஞ்சு பொரிக்கும். ஆனுல் முட்டைகளின் மேல்படும் உஷ்ணத்துக்குத் தக்கபடி கொஞ்ச நாள் ஜாஸ்தி அல்லது குறைவு ஆகலாம். கோழியானது வீட்டில் வளர்க்கக்கூடிய மற்றயினங்களின் முட்டைகளையும் குஞ்சு பொரிக்கும். மற்றயினங்களின் முட்டைகள் இத்தனை நாளில் குஞ்சு பொரிக்குமென்பதை பின்னுல் கூறப்படுகிறது :—

கோழி	.. ..	21 நாள்.
குள்ளவாத்து, வான்கோழி	..	28 ஷை
பெரிய வாத்து	.. .. ..	30 ஷை

அடைகாக்கும் கோழி.—முட்டைகளை அடைகாக்க வைப்பதற்கு முன் அந்தக் கோழிக்கு அடைகாக்கும் குணங்கள் சரியாயிருக்கிறதாவென்று கவனிக்கவேண்டும். ஒரு அடைக்கோழி முட்டைகள்மேல் உட்கார்ந்திருந்து கொஞ்ச நாளைக்குப்பின் முட்டைகளையும் கூண்டையும் விட்டுவிட்டு வெளியே ஓடிப்போகிறது சகஜம். அப்படியானுல் நஷ்டமுண்டாகும். ஒரு கோழி அடைகாக்குமாவென்று பார்க்கவேணுமென்றுல் ஒன்று அல்லது இரண்டு முட்டை அல்லது ஒரு செயற்கை முட்டையாவது இரண்டு மூன்று நாள் வைக்கவேண்டும். அந்தக் கோழி சரியானபடி முட்டைகள்மேல் உட்கார்ந்திருந்தால் அது சரியான அடைக்கோழி என்றே தெரிந்துகொள்ள வேண்டும்.


கோழியை தெரிந்தெடுப்பது.—நடுத்தரமாயும் சாந்தமாயும் நோயற்றதாயும் உள்ள கோழியைத் தெரிந்தெடுக்கவேண்டும். அது சுத்தமாயும் பேன் முதலிய பூச்சிகள் அதின்மேலில்லாததாயும் இருக்கவேண்டும். சன்னமான கால்களாயும் சுத்தமில்லாதிருக்கிற கோழியையும் நீக்கிவிடவேண்டும். ஏனென்றுல், கோழி சுத்தமாயில்லாவிட்டால் தான் பொரிக்கும் குஞ்சுகளுக்கு எல்லாவித நோய்களையும் கொடுத்துவிடும். சில கோழிகள் பார்வைக்கு அறுவருப்பாயும் கலேவதுமாயிருந்து கூண்டைவிட்டு ஒவ்வொரு தடவையிலும் வெளியே போகும்போதும் உட்காரும்போதும்


முட்டைகளை உடைத்துவிடலாம். ஆகையால் அடைக்கோழிகளை சரியான படி தெரிந்தெடுக்கவேண்டும். சரியான கோழியாய் இல்லாவிட்டால் அடை காப்பதற்கு வைக்கக்கூடாது. நீண்ட கால்களுடைய கோழிகளை சில சமயங்களில் நல்லதாய்களாயிருந்தாலும் சாதாரணமாய் அதிகம் முட்டைகளை உடைத்துவிடுவது சகஜம். கட்டைக்கால்களுடைய கோழிகள் ரொம்ப நம்பக்கூடியவைகளாகையால் அவைகளையே தெரிந்தெடுக்கவேண்டும்.

ஒரு அடைக்கோழிக்கு எத்தனை முட்டைகளை வைக்கவேணுமென்பது.—அயல் தேசத்து வம்சத்தைச் சேர்ந்த ஒரு நல்ல கோழி 10 முதல் 12 முட்டைகள் அடைகாக்கும். நாட்டுக்கோழி முட்டையின் தரத்துக்கு தகுந்தவாறு 8 அல்லது 10 வரை அடைகாக்கும். கோழியானது எல்லா முட்டைகளையும் சரியாய் மூடிக்கொள்கிறதாவென்று கவனிக்கவேண்டும். கோழியானது தன்னுடைய முட்டைகளை திருப்பிக்கொடுக்கும்போது ஒன்று அல்லது இரண்டு முட்டைகள் வெளியேவந்து உஷ்ணப் படாமல் ஆறிப் போனாலும் போகலாம். ஆகையால் ஒரு கோழி எத்தனை முட்டைகளை மூடிக்கொள்ளமுடியுமோ அத்தனை வைத்துவிட்டு மீதியை எடுத்துவிட வேண்டும். ஒரு கோழி எத்தனை முட்டை அடைகாக்குமென்பது வம்சத்தையும் கோழி பருமனையும் பொருத்திருக்கிறது. அதின் விபரம் பின்னால் குறித்திருக்கிறது :—

	அயல் நாடு வம்சத்தைச் சேர்ந்த கோழி.	நாட்டுக்கோழி.
கோழி முட்டைகள்	10 முதல் 12	8 முதல் 10.
குள்ளவாத்து முட்டைகள்	7 முதல் 8	6.
பெரியவாத்து முட்டைகள்	5 முதல் 6	4 முதல் 5.
வான்கோழி முட்டைகள்	5 முதல் 7	4 முதல் 5.

கூடு.—கூடு செய்வது மிகவும் சுலபமான காரியம். ஆனால் அதை ஜாக்கிரதையாய் கவனிக்கவேண்டும். 18 அங்குலம் சதுரமுள்ள ஜாதிக்காய்ப் பெட்டியெடுத்து அதற்கு முன்னால் ஒரு திட்டி கதவு வைத்திருக்க வேண்டும். அதற்குள்ளே கொஞ்சம் ஈரமான மணல்போட்டு அதன்மேல் வைக்கோல் போட்டு கூடு செய்யவேண்டும். அந்த வைக்கோல்மேல் கொஞ்சம் மரசாம்பல் போட்டுவைத்தால் பேன் முதலியது வராது.





அடைகாக்கவைக்கும் கூடு.—காற்றோட்டமிருப்பதற்காக பெட்டியின் பக்கங்களில் துவாரங்கள் போட்டிருக்கவேண்டும். அடைக்காக்கும் சமயத்தில் கொஞ்சம் உஷ்ணகாலமாயிருந்தால் கூட்டைச் சுற்றிலும் கூட்டுக்குள்ளிருக்கிற மணல்மேலும் கொஞ்சம் தண்ணீரைத் தெளிக்கவேண்டும். கூடானது வட்டமாயும் மத்தியில் கொஞ்சம் பள்ளமாயும் முன்சொன்ன பிரகாரம் சாம்பல் கொஞ்சம் போட்டிருக்கவேண்டும். கூடானது ரொம்ப ஆழமாயிருக்கப்படாது. ஏனென்றால் முட்டைகளெல்லாம் பள்ளத்தில் மத்தியில் உருண்டு ஓடி உடைந்துபோகலாம்.

பேன், பூச்சிகள் வருமல் இருப்பதற்காக பூச்சிகளைக் கொல்லும் மருந்து பொடியை பெட்டியிலும் கூட்டிலும் தூவ வேண்டும். கெந்தகப் பொடியும் சாம்பலும் கலந்ததும், சோடியம் பிளோரைட் (Sodium floride)ம் புகையிலைத் தூளும் இதற்கு உபயோகிக்கலாம். பெட்றோலும், கார்பாலிக்கும் சரிசமமாக கலந்து சுருட்டுவைத்துக்கொள்ளும் பெட்டி அளவு மருந்து எடுத்துக்கொண்டு ஒரு ராத்தல் பிளாஸ்டர் ஆப் பாரீஸ் மேல் ஊத்தி காயப்போட்டு (plaster of paris) அந்தப் பொடியும் உபயோகிக்கலாம்.

கூட்டை வாரத்திற்கொருதடவை பார்த்து பூச்சி ஏதாவது இருந்தால் அப்புரப்படுத்தவேண்டும். அப்படிக் கவனிக்காத விஷயத்தில் கோழி அமைதியாயில்லாமல் முட்டைகளின்மேல் சரியாய் உட்காராமலும் குஞ்சுகள் பொரித்த பிறகு குஞ்சுகள்மேல் பேன் முதலிய பூச்சிகள் பிடித்துக்கொண்டு அவைகளுடைய வளர்த்தியும் குறையும். கூடானது எப்பொழுதும் சுத்தமாகவும் நாத்தமில்லாமலும் இருக்கவேண்டும். உடைந்த முட்டை அல்லது கோழி எச்சம் ஏதாவது இருந்தால் உடனே அப்புரப்படுத்தி அசுத்தமில்லாமல் வைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் கூடானது உடைந்த முட்டையினாலும் எச்சத்தாலும் நாத்தமெடுத்துக்கொண்டிருந்தால் வேறே சுத்தமான கூடுசெய்து மீதி முட்டைகளை 100 டிகிரி உஷ்ணமுள்ள வெந்நீரில் கழுவிவைத்து அந்த அடைக்கோழியை கூட்டுக்குள் விடவேண்டும்.

அடைக்காகவைக்கும் முட்டைகள்.—புது முட்டைகளாகவும் நீண்ட வடிவுள்ளதும் தெரிந்தெடுக்கவேண்டும். ரொம்ப சிறிய முட்டைகளையும், ரொம்ப பெரிய முட்டைகளையும் தள்ளிவிடவேண்டும். முட்டையின் மேத்தோடு சுத்தமாயும் சுறசுறப்பில்லாமலுலிருக்கவேண்டும். திடமாயும், நல்ல நடு பிராயமான கோழியின் முட்டைகளை தெரிந்தெடுக்கவேண்டும்.

முட்டைகளை சேகரித்துவைக்கும் விதம்.—அடைக்காக சேகரிக்கும் முட்டைகளை நல்ல காற்றோட்டமுள்ளதாயும் அதிக உஷ்ணமில்லாத யிடத்திலும் வைக்கவேண்டும். மலையடிவாரங்களின் ஊர்களில் 10 நாளான முட்டைகளையும் அடைக்கு வைக்கலாம். நாட்டுப்பிரதேசங்களில் முட்டைகளை ஜாஸ்தி நாள் வைத்திருக்கப்படாது. சரியானபடி குஞ்சுகள் பொரிக்க வேணுமென்றால் முட்டைகள் வைத்த 4 முதல் 6 நாளைக்குள் அடைக்கு

வைத்துவிடவேண்டும். முட்டைகள் வாசனையை இழுத்துக்கொள்ளும் குணம் மிருப்பதால் வெங்காயம், கிருஸ்ணுயில் அல்லது மண்ணெண்ணெ பக்கத்தில் வைக்கப்படாது.

அடைக்கோழியை வைக்கும் விதம்.—முன்சொன்ன பிரகாரம் கூடு செய்து அந்த கூட்டுப் பெட்டியை, சொஞ்சம் இருட்டாயும் அமைதியான யிடத்திலும் வைக்கவேண்டும். சாதாரணமாய் கோழியை சாயங்கால வேளையில் அடைகாக்கவைத்து மறு நாள் சாயங்காலம் வரை அதைத் தொடப்படாது. அடைக்கு வைப்பதற்குமுன் அதற்கு வேண்டிய அளவு தானியத்தீனியும் தண்ணீரும் கொடுக்கவேண்டும். மறு நாள் முதல் தினத்துக்கொருதரம் குறிப்பிட்ட நேரத்தில் தீனிக்காகவும் உலாவுவதற்காகவும் வெளியே விடவேண்டும். இப்படிச் செய்வதினுல் முறைப்பிரகாரம் முட்டைகள் பிறட்டப்படுவதற்கும் உஷ்ணம் தணிவதற்கும் ஏதுவாகயிருக்கும்.

உடம்பு சுத்தம்.—கோழிகள் பேன் முதலிய பூச்சிகள் தன் உடம்பிலில்லாமலிருப்பதற்காக மணலில் உட்கார்ந்து ரெக்கையாலடித்து சுத்திபண்ணிச்கொள்வது சகஜம். ஆகையால் கோழி தன்னை சுத்திபண்ணிக்கொள்வதற்காக ஒரு பக்கத்தில் மணலும் சாம்பலும் கலந்து வைக்கவேண்டும்.

தீனி கொடுக்கும் முறை.—அடைகாக்கும் கோழிக்கு மக்காச் சோளம் கோதுமை, சோளம், கம்பு, நெல் முதலிய கெட்டியான தானியங்களை கொடுக்கவேண்டும். இந்த தானியங்கள் ஜீரணமாவதற்கு தாமதமாகுமாகையால் கோழியானது பசியில்லாமல் சுகமாய் முட்டையின்மேல் படுத்திருக்கும். சமைத்த சாதம், நனைத்த தவிடு முதலிய மிருதுவான தீனிகள் அடைகாக்கும் கோழிகளுக்கு பிரயோஜனமில்லை. அடைகாக்கும் கோழிக்கு ஆகாரத்துக்காக தானியம், தவிடு, தண்ணீர் கூட்டுக்குள் வைப்பது கெட்ட வழக்கம்.

நல்ல கோழிகள் சாதாரணமாய் வேண்டும்போது கூட்டை விட்டு வெளியே வருகிறதில்லை. அப்படிச்சமயத்தில் கோழியை எடுத்து வெளியே விடவேண்டும். அப்படி எடுத்துவிடும்போது கோழி ரெக்கைக்குள்ளிருந்து சில முட்டைகள் கீழே விழுந்து உடைந்து போகலாம். ஆகையால் ஜாக்கிரதையாய் எடுத்துவிடவேண்டும். சாதாரணமாய் நல்ல கோழிகள் ஆகாரம், தண்ணீர், உடம்பு சுத்தம் முதலியவைகளை முடித்துக்கொண்டு 15 அல்லது 20 நிமிஷத்துக்குப்பின் கூட்டுக்கு திரும்பிப்போய் விடும். இப்படி தினசரியும் வெளியே வந்துகொண்டிருக்கும்பொழுது சிலசமயம் வியாதி நீக்கக்கூடிய பொடியை கோழி மேலேயும் கூட்டு மேலேயும் தெளிக்கவேண்டும்.

முட்டைகளை சோதித்தல்.—அடைக்குவைத்த பத்தாவதுநாள் முட்டைகளைச் சோதிக்கலாம். ஒரு முறட்டுக் காகிதத்தால் குழல் செய்து ஒரு முட்டையை கட்டவிரலுக்கும் அடுத்த விரல் 3-வது விரல் மத்தியில் பிடித்துக்கொண்டு முட்டையை சூரியவெளிச்சத்தில் வைத்துக்கொண்டு குழாய் வழியாய் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது முட்டைகள் கலக்கமில்லாமல் சுத்தமாய் தெரிகிறவைகள் கருவில்லாதவைகள் என்றே தெரியவேண்டும். முட்டைக்குள் ரத்த நரம்புகள் கோடுகளாகவும் எட்டுக்கால் பூச்சி வடிவமாய்த் தோன்றினுல் அவைகள் கருவுள்ள முட்டைகள் என்றே வைத்துக்கொள்ளவேண்டும்.

அடைகாக்கும் முடிவு.—பத்தொன்பதாவது நாள் சாயந்திரம்தான் கோழியை வெளியே உலாவுவதற்கு விடுவது கடைசி நாள். இருபதாவது நாள் கோழி முட்டைகள்மேல் நெருக்கமாய்ப் படுத்துக்கொள்ளும். அப்பொழுது குஞ்சுகள் பொரிக்க ஆரம்பிக்கும். முட்டைக்குள்ளிருக்கும் குஞ்சுகள் முட்டைத் தோலின் ஒரு பக்கமாக மூக்கை வைத்துக்கொண்டு உடைத்து வெளியே வர பிரயத்தனப்படும். இருபத்தொன்ருவது நாள் பூருவும் குஞ்சுகள் வெளியே வந்துவிடும். முட்டைக்குள் கை வைத்து குஞ்சுகளை வெளியே எடுத்துவிட பிரயத்தனம் செய்யக்கூடாது. அப்படிச் செய்வதினுல் குஞ்சுகள் ரொம்ப பலவீனமாய் நஷ்டமுண்டாகும்.

முடிவு.—குஞ்சுகளையும் தாயையும் வேறே சுத்தமான கூட்டில் விட்டு விடவேண்டும். கோழிக்கு உடனே தீனி கொடுக்கலாம். ஆனால் குஞ்சுகளுக்கு பொரித்த குறைந்தது 48 மணி நேரம் வரைக்கும் தீனி கொடுக்கப் படாது. குஞ்சு முட்டையை விட்டு வெளியே வருவதற்கு முன் முட்டைக் குள்ளிருக்கும் மஞ்சள் சத்து பூறவும் எடுத்துக்கொள்வதால் சில நாள் வரைக்கும் ஆகாரமே வேண்டியதில்லை. ஆகையால் அவைகளுக்கு அதிகத் தீனி போட்டால் அஜீர்ணமும் வயிற்றிளைசுச்சலும் இன்னும் மற்ற எல்லா வியாதிகளும் உண்டாகும். குஞ்சுகளுக்கு கோதுமை மக்காச்சோளம், சோளம், இவைகளின் குருணையும், அரிசிக்குருணையும் ஓட்ஸ் என்னும் தானியமும் சிறந்த உணவு. கோழி குஞ்சுகளுக்கு தானியத்தைகொத்தவும் தண்ணீர் குடிக்கவும் சொல்லிக்கொடுக்கும். நாம் சரியான வீடுகளில் வைத்து பேன் பூச்சி முதலியவைகள் அண்டாமல் வளர்க்கவேண்டியது.

குஞ்சுகள் நன்றாய்ப் பொரிப்பதற்கு முக்கியமாய் ஈரம், உஷ்ணம், காற்று வேண்டியது. ஒரு கோழி அடைகாக்கும்போது உடலில் ரத்தவோட்டம் அதிகரிக்கிறதால் சூடு அதிகரிக்கிறது. இந்த உஷ்ணத்தால் முட்டைகள் 103 முதல் 104 டிக்கிரி வரைக்கும் சூடாகவே இருக்கிறது.

ஒரு முட்டையை சாதாரணமாய் வைத்துப் பார்த்தால் முட்டைக்குள் ளிருக்கும் கருவானது முட்டையின் உச்சிப்பக்கத்திற்குப் போகும். கருவுள்ள மஞ்சள் சத்தானது வெள்ளைச் சத்தைவிட லேசானதால் அதில் மிதக்கும்; உஷ்ணப்படுவதற்காக இந்தக் கருவு முட்டைகள் உச்சிப்பக்கத்துக்கு வருவது இயற்கையில் அமைப்பு. கோழியை தினசரி உலாவவிட்ட பின் சாதாரணமாய் 10 முதல் 15 நிமிஷத்துக்குப் பின் திரும்பி கூட்டுக் குள் வந்துவிடும். முட்டைகள் மேல் படுக்குமுன் முட்டைகளைப் பிரட்டிக் கொடுக்கும். அப்படியில்லாமல் முட்டைகள் ஒரே பக்கமாய் இருந்தால் கருவானது முட்டையின் பக்கத்தில் ஒட்டிக்கொண்டு முட்டைக்குள்ளிருக் கும் குஞ்சு இறந்துபோகக்கூடும்.

இயற்கை முறையில் அடைக் கோழியை வைத்து முட்டைகளிலிருந்து எந்த விதமாய் குஞ்சு பொரிக்குமோ அதே விதமாக செயற்கை முறையில் குஞ்சுகள் பொரிக்க ((இங்குபேட்டர்) என்ற கருவிகள் செய்யப்படுகின்றன.

ஆர். டப்ளியு. லிட்டில் உட்,

கால்நடை டிப்டி டைரெக்டர்.

24 அடை வைத்தலும் கோழிக்குஞ்சுகளின் வளர்ப்பும்.

கோழிப்பண்ணையை பரிபாலிக்கும் முயற்சியில் மூலாதாரமாகவிருப்பது அடைவைத்து குஞ்சுகளை உண்டாக்கி அவைகளை வளர்ப்பதேயாகும். இதை இயற்கையெனவும் செயற்கையெனவும் இரு பிரிவாகப் பிரிக்கலாம். இத்தொழிலில் வெற்றிபெற விரும்பும் ஒருவர் மிகவும் சிறிய விஷயங் களில்கூட அதிக ஜாக்கிரதையாகவும் பொருமையாகவும் கருத்துடனும் இருக்கவேண்டியதவசியம்.

இயற்கை முறையில் அடைவைத்தலும் குஞ்சுகளின் வளர்ப்பும்.— இம்முறையில் அதிக குஞ்சுகளை உண்டாக்கவேண்டிய அவசியமில்லாவிட் டால் மனிதன் இயற்கை வசதிகளை அனுசரித்து கோழிகளை அடை வைப்பதற் கும் குஞ்சுகளை வளர்ப்பதற்கும் உபயோகிப்படுத்துகிறன்.

குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளியே வருவதற்கு எடுத்துக்கொண்ட பிரயாசையின் களைப்பினால் அவைகள் வெளிச்சத்தில் கண்ணைத் திறந்த வுடன் அவைகளுக்கு அதிக ஓய்வுவேண்டியதாயிருக்கிறது. குஞ்சுகளுக்கு சுருசுருப்பும் கூட்டைவிட்டு வெளியே போவதற்கு ஒரு அவாவும் ஏற் படுவதற்குமுன் அவைகளை வெளியே விடக்கூடாது.

ஒரு சுத்தமான பஞ்சாரக்கூடையை தயார் செய்து அதில் தாய்க் கோழியுடன் குஞ்சுகளை அடைக்கவேண்டும். பஞ்சாரக்கூடைகள் எவ்விதமிருந்த போதிலும் சுத்தம், ஈரமில்லாமை, காலவேறுபாடுகளின் கெடுதியை அகற்றுதல் முதலியவைகளைக் கவனிக்கவேண்டும்.

தாய்க் கோழியை மண்ணில் தாராளமாக புரளுவதற்கு விட்டுவிடவேண்டியது. குஞ்சுகளுக்கு பேன் முதலியவைகள் பிடித்து அவைகளைத் தொந்தரவு செய்து, வளர்ச்சியையும் ஒடுக்கி கடைசியாக பொருள் நஷ்டம் ஏற்படாமல் தடுப்பதற்கு மண்ணில் பூச்சிகளைக் கொல்லும் மருந்துகளை கலந்து வைக்கவேண்டும்.

ஒரு கோழிக்கு குஞ்சுகளைப் பொரிக்கும் திறமையைக் காட்டிலும் அவைகளை வளர்க்கும் திறமை அதிகமாக இருக்கிறது. ஆகையால் ஒரு நல்ல தாய்க் கோழி மற்ற கோழிகளால் ஏறக்குறைய ஒரே காலத்தில் பொறிக்கப்பட்ட குஞ்சுகளையும் சேர்த்து 15 முதல் 20 குஞ்சுகள் வரை பரிபாலித்து வளர்க்கக்கூடும்.

இயற்கையாகவே கோழிக்கு குஞ்சுகளை வளர்க்கும் முறைகள் தெரியும். ஆகையால் நாம் சுத்தம், சரியான இரை கொடுத்தல், முதலியவைகளின் அவசியத்தை கவனிப்பதோடு, குஞ்சுகளின் விரோதிகளாகிய ராஜாளி, கருடன், எலி, கீறி, பாம்பு முதலியவைகளிடமிருந்து அவைகளை காப்பாற்றவேண்டும். இதன் நிமித்தம் இரும்பு வலையடித்துவிட்டால் போதும்.

காலவேற்றுமையின் கொடுமையால் குஞ்சுகளின் சுகாதாரம் அதிகமாக பாதிக்கப்படுகிறது. ஆகையால் வலையடிப்பதற்கு நிலத்தை தேர்ந்தெடுப்பதில் நாம் எடுத்துக்கொள்ளும் எச்சரிக்கைகளில் பின் வரும் எச்சரிக்கைகள் மிகவும் முக்கியமாகும்.

(1) போதுமான சூரிய வெளிச்சம்.

(2) சீதளத்தை உண்டாக்கும் காரணங்களை அகற்றவேண்டும். உதாரணமாக ஈரமான புல்தரைகள், ஈரத்தை கொடுக்கும் தரை முதலியவைகள்.

(3) குளிர்காற்றுக்களைத் தடுத்தல்.

குஞ்சு வளர்ப்பின் செயற்கை முறை.—அதிக விமரிசையாக நடத்தப்படும் கோழிப்பண்ணையில் ஜாஸ்தி குஞ்சுகளுக்காக ஏற்படும் தேவையை பூர்த்தி செய்வதற்கு செயற்கை முறையில் "இங்குபேடர்ஸ்" எனப்படும் கருவிகளை உபயோகப்படுத்தி அடை வைத்து குஞ்சுகளை உற்பத்தி செய்யவேண்டும்.

இயற்கை முறையில் குஞ்சுகளை வளர்ப்பதால் ஒரு நன்மை என்னவென்றால்.—தாய்க்கோழி குஞ்சுகளை வளர்ப்பதற்கு அநேக வேலைகளைத் தானே செய்கிறதினால் நமது பொறுப்பு மிகவும் குறைகிறது. குஞ்சுகளின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டால் தாய்க் கோழிக்குப் பதிலாக உஷ்ணம் காற்றோட்டம் இட சௌகரியம் முதலிய வசதிகளை அளிக்கக்கூடிய கருவிகளை உபயோகப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. "பாஸ்டர் மதர்ஸ்," "புரூடர்ஸ்" அல்லது "ஹாவர்ஸ்" எனப்படும் கருவிகளால் மேற்சொன்ன வசதிகள் ஏற்படுகின்றன.


"பாஸ்டர் மதர்" அல்லது "புரூடர்" எனப்படும் வளர்ப்புக்கூடு, விளக்கு, நிலக்கரி அல்லது மின்சார சக்தியால் சூடாக்கப்பட்டு குஞ்சுகளிருக்கும் அறைக்குள் வைக்கப்பட்டிருக்கும் ஒரு பெட்டியைத் தவிர வேறல்ல. இப்பெட்டியின் உஷ்ணத்தை விளக்கின் சுவாலையினால் கூட்டவும் குறைகவும் செய்யலாம்.


"ஹாவர்" என்பது குஞ்சுகளுக்கு மேலே கட்டியிருக்கும் உலோகத்தினால் செய்த குவிந்த வடிவமுள்ளது. இதன் மத்தியில் விளக்கை எரிப்பதனால் உஷ்ணம் கீழே திருப்பியடிக்கப்படுகிறது.


மார்க்கட்டில் "பாஸ்டர் மதர்ஸ்" "புரூடர்ஸ்" எனப்படும் அநேக விதமான வளர்ப்புக்கூடுகளிருக்கின்றன. ஆனால் இவைகளின் உபயோகம் கோழிப்பண்ணையின் அளவைப் பொருத்தியிருக்கிறது.

ஏககாலத்தில் 50 முதல் 60 குஞ்சுகள்வரை வளர்க்கப்படும் சிறிய பண்ணைகளுக்கு உள்ளூரிலேயே "பயர்லெஸ் புரூடர்ஸ்" எனப்படும் வளர்ப்புக் கூடுகளை சொற்ப செலவில் செய்யலாம். இவைகளில் விளக்கைவைத்து எரிக்கவேண்டியதில்லை. இவைகளின் முக்கிய உபயோகமென்னவென்றால் குஞ்சுகளிடத்தில் உண்டாகிற உஷ்ணத்தை சேகரித்து வைத்துக்கொள்வதே.

"**பாஸ்டர் மதர்" இன் விவரம்.**—சுமார் 35 குஞ்சுகளை வளர்ப்பதற்கு 3 அடி நீளமும், 1 அடி 9 அங்குலம் அகலமும், 1 அடி 6 அங்குலமும் உயரமுள்ள ஒரு பெட்டியை எடுத்துக்கொள்ளவும். பெட்டியின் மூடி கூரையைப்போல் சரிவாக இருக்கவேண்டும். மூடிக்குக்கீழ் காற்றோட்டத்திற்காக ஒரு வரிசை துவாரங்கள் ஏற்படுத்தவேண்டும். குஞ்சுகள் சாதாரணமாக மூலைகளில் அடைவதனால் மரச் சக்கைகளை வைத்து பெட்டியின் நான்கு மூலைகளையும் வட்டமாக்கிவிடவேண்டியது. பெட்டியின் தளத்திலிருந்து சுமார் 10 அங்குல உயரத்தில் படத்தில் காட்டியபடி வரிசை வரிசையாக துவாரங்கள் உள்ள ஒரு அட்டையை ஒரு சட்டத்தின்மேல் வைத்து துவாரங்களின் வரிசைகளுக்கு ஊடே பிளானல் துணிகளை தொங்கவிடவேண்டியது. பெட்டியின் தளத்தில் துண்டு துண்டாக வெட்டப்பட்ட காய்ந்த புல் முதலியவைகளைப் போடவேண்டும். பெட்டியின் முன்பக்கத்தில் காற்றோட்டத்திற்காக வேண்டியபோது மூடவும் திறக்கவுமாக 9 அங்குல நீளம் 3 அங்குல அகலமுள்ள ஒரு ஜன்னல் வைக்கப்படவேண்டும். அதற்கு ஒரு சிறிய கதவும் போட்டிருந்தால், மூடவும் திறக்கவும் இலகு.







செக்ஷன்,   துவாரங்கள் ஒன்றுவிட்டு ஒன்றிருக்கவேண்டும்.

பாஸ்டர் மதர்.

குஞ்சுகள் வயதிலும் பருமனிலும் அதிகப்பட கூட்டுக்குள் அவைகளின் எண்ணிக்கையை குறைக்கவேண்டும். அதாவது முதல் வாரத்தில் 35 லிருந்து 40 வரையிலும், இரண்டாவது வாரத்தில் 30-ம், மூன்றுவது வாரத்தில் 25-ம் நான்காவது வாரத்தில் 20-மாக குஞ்சுகளின் எண்ணிக்கையை குறைத்துக்கொண்டே போகவேண்டும்.

இந்த விதமான வளர்ப்புக் கூட்டில் தரையின் விஸ்தீர்ணத்தை கவனிக்கவேண்டும். அதிகமான குஞ்சுகளை ஒரு வளர்ப்புக் கூட்டிற்குள் விடக்கூடாது. இவ்வாறு செய்தால் குஞ்சுகளெல்லாம் ஒன்றோடொன்று நெருக்கிக்கொண்டு செழிப்பாக வளராமல் இறக்க நேரிடும்.

இந்த மாதிரியான வளர்ப்புக் கூடு மலைப் பிரதேசங்களைத் தவிர சென்னை இராஜதானியில் எல்லா ஜில்லாக்களிலும் உபயோகப்படுத்தலாம்.

" ஆவ்டர் மாதர் " எனப்படும் மற்றொரு விதமான வளர்ப்புக் கூடு 4 அடி × 3 அடி × 2 அடி விஸ்தீர்ணமுள்ள ஒரு பெட்டியால் செய்யப்படுகிறது. பெட்டியின் உட்புறத்தில் இரும்பு வலையை வைத்து பலகைக்கும் இரும்பு வலைக்கும் ஊடே வைக்கோல் காய்ந்த புல் முதலியவைகளை வைக்கவேண்டும். குஞ்சுகள் வளர வளர இவைகளை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து கடைசியாக, பூராவும் எடுத்துவிடவேண்டியது. இதன் நோக்கம் குஞ்சுகளின் இளம் வயதில் அதிக உஷ்ணத்தை சேகரித்து வைத்துக்கொள்ளவும் பிறகு குஞ்சுகள் வளர வளர உஷ்ணத்தை குறைக்கவுமே. இவ்வளர்ப்புக்கூட்டில் குஞ்சுகளை 5 வாரத்திலிருந்து 8 வாரம் வரையில் வைத்திருக்கலாம்.

இரை கொடுத்தல்.—குஞ்சுகளுக்கு மரணம் முதல் வாரத்திலிருந்து 3-வது வாரம் வரையில் அதிகமாக ஏற்படுவது அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால் இக்காலத்தில் அவைகளுக்கு மரணம் ஏற்படாதபடி தப்புவிக்கவேண்டிய முயற்சிகளெல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டும். குஞ்சுகளுக்கு இவ்வயதில் போதுமான உஷ்ணமும் முன் சொன்னபடி மற்ற வசதிகளும் செய்வதுடன் அவைகளுக்கு சரியான அளவுப்படி இரை கொடுத்துவந்தால் அவைகள் சுருசுருப்பான பறவைகளாக வளரும்.

அதிகமாக இரை கொடுக்காமல் போதுமான இரை கொடுக்கவேண்டும். குஞ்சுகளுக்கு கொஞ்சம் பசியாக இருப்பதினால் கெடுதியில்லை. இதனால் அவைகள் இரைக்காக மண்ணைக் கிளரிக்கொண்டு திரியும்படி ஏற்படுகிறது.

குஞ்சுகளுக்கு இரை கொடுக்கும் விஷயத்தில் நாம் கவனிக்கவேண்டிய சில முறைகளிருக்கின்றன. தினந்தோறும் கொடுக்கப்படுகிற இரையில் குஞ்சுகளின் வளர்ச்சிக்கு அவசியமான உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டாக்கக்கூடிய உணவு பதார்த்தங்கள் இருக்கவேண்டியது அவசியம்.

முதல் முதலில் குஞ்சுகளுக்கு இரையாக உடைத்த தானியத்தை யாவது அல்லது நன்ருக நொறுக்கப்பட்ட கோதுமை, கேள்வரகு, அரிசி முதலியவைகளைப் போடவேண்டும். ஓட்ஸ் என்னும் தானிய மாவு கிடைத் தால் இதுதான் இரண்டு வாரங்களுக்கு நல்ல உணவாகும்.

இந்த உணவை தட்டுகளில் வைத்து குஞ்சுகளுக்கு பக்கத்தில் வைக்க வேண்டும்.

குஞ்சுகளைத் தாமாகவே முதலில் இரை பொருக்குவதற்கு பழக்க வேண்டும். இதற்கு தானியம் வைக்கப்பட்டிருக்கும் தட்டை ஆள்காட்டி விரலினுல் மெதுவாக தட்டி குஞ்சுகள் தானியத்தை பொறுக்குவதற்கு அவைகளின் கவனத்தை செலுத்தும்படி செய்யவேண்டியது.

தினம் இரண்டு தடவை அவித்த முட்டையை சிறிய துண்டுகளாக்கி ரொட்டித்துண்டுகளுடன் சேர்த்து இரண்டு வாரங்களுக்கு கொடுக்கவேண் டும். சுத்தமான ஜலம் எப்பொழுதும் குஞ்சுகளுக்கு பக்கத்திலேயே இருக்கவேண்டும். கூடுமானுல் வெண்ணெயெடுத்த பாலும், மோரும் கொடுத்தால் நலமாக விருக்கும்.

பசுந்தாவர உணவு.—குஞ்சுகளின் வளர்ப்புக்கு முக்கியமானது பசுமை யான தாவர உணவாகும். ஆகையால் இவ்வுணவை 2 முதல் 3 வாரங் கள் வரை கொடுக்கவேண்டும். குஞ்சுகள் பசும்புல் தரையில் திரியும் போது இந்த ஆகாரத்தை கொடுக்கவேண்டிய அவசியமில்லை.

இரை கொடுப்பதின் கிரமம்.

குஞ்சுகளின் வயது.	இரை.	தண்ணீர்.
36 மணிவரை ..	இரை கிடையாது	குஞ்சுகளை சூடான வளர் புக்கூட்டில் வைக்க வேண்டும்.
10 நாள் வரை ..	ஒட்ஸ்மாவு அல்லது குருணை அல்லது உடைத்த மக்காச்சோளம், கோதுமை அரிசிக்குருணை முதலியவைகளில் கி டைத்ததைக் கொடுக்கவும். தினந் தோறும் 5 தடவை காலை 6, 9, 11 மணிக்கும், மாலை 1, 4 மணிக்கும் இரை மட்டாக கொடுக்கவும்.	சுத்த ஜலம் அல்லது வெண்ணெயெடுத்த பால் அல்லது ஜலம்விட்டு கல ந்த மோர்.
10 லிருந்து 20 நாள் வரை.	முன் சொன்னதுபோலத் தானிய உணவு; காலை 11-மணிக்கு சிப்பித்தூளுடன் சேர்ந்த அவித்த முட்டையை ரொட் டித்துண்டுகளுடன் கொடுக்கவும். கறையானை சேகரித்து கொடுக்கவும்.	ஷை
20 நாட்களிலிருந்து 1 மாதம் வரை.	முன் சொன்னதுபோல தானிய உணவு; தானியம் லேசாக உடைத்திருக்கவேண் டும். காய் கறிகளின் இலைகளை கொத் தித்தின்னும்படி கட்டித்தொங்கவிட வேண்டும். சிப்பித்தூளும் அடுப்புக் கரியும் குஞ்சுகளுக்கு முன் எப்போதும் இருக்கவேண்டும்.	ஷை
4 லிருந்து 6 வாரம் வரை.	முன் சொன்னது போல தானிய உணவு; தினம் மூன்று தடவை கொடுக்கவும். சிப்பித்தூளும் அடுப்புக்கரியும் இருக்க வேண்டும்.	ஷை
6 வாரம் முதல் $3\frac{1}{2}$ மாதம் வரை.	கலப்பு ஆகாரம்— கோதுமை தவிடு .. 30 ராத்தல். அரிசித் தவிடு .. 30 ஷை கேழ்வரகு மாவு .. 10 ஷை நிலக்கடலை புண்ணுக்கு. 10 ஷை மீன் தூள் .. 10 ஷை சுண்ணும்பும் எலும் புத்தூளும் கலந்த தாது வஸ்து கலப்பு. 3 ஷை உப்பு .. .. 1 ஷை	சுத்த ஜலம், அல்லது வெண்ணெயெடுத்த பால் அல்லது ஜலம்விட்டு கல ந்த மோர்.

குஞ்சுகளின் வயது.	இரை.	தண்ணீர்.
	மேற்சொன்ன வஸ்துக்களை கலந்துவைத்துக்கொண்டு இரண்டு மாதங்கள்வரை ஒரு பாகத்திற்கு இரண்டு பாகம் கோதுமை தவிட்டையும் பிறகு 3½ மாதங்கள் வரை ஒரு பாகம் கோதுமை தவிட்டையும் தண்ணீர்விட்டு பிசைந்து அத்துடன் காய்கரி துண்டுகளை நருக்கிப்போட்டு கொடுக்கவும். சாதமும் மாட்டு இறைச்சியும் ஒரு நாள்விட்டு ஒரு நாள் குஞ்சு பொரித்து ஒரு மாதத்திற்கு பிறகு கொடுக்கவும். சிப்பித் தூளும் அடுப்பு கரியும் எப்பொழுதும் இருக்கவேண்டும்.	

குடிக்கும் தண்ணீர்.—குஞ்சுகள் குடிக்கும் தண்ணீரில் லேசாக சிகப்பு நிறமுண்டாகும்படி "பொட்டாசியம் பெர்மாங்கனேட்" எனப்படும் மருந்தை போடவும். கூடுமானவரை தண்ணீரை அடிக்கடி மாற்றவும். மண் பாத்திரத்தை உபயோகப்படுத்தி அதை எப்பொழுதும் நிழலிலேயே வைக்க வேண்டும்.

குஞ்சுகளை தினந்தோறும் புதிய இடங்களில் சூரிய வெளிச்சத்தில் விட வேண்டும்.

குற்றங்கள்.—போதுமான இட சௌகரியக் குறைவு, நெருக்கடி, குறைந்த உணவு, குறைந்த தாதுவஸ்து, பலவீனமுள்ள குஞ்சுகளை சரியாக பராமரியாமலிருப்பது, குஞ்சுகளின் பருமனில் அதிக மாறுதல் முதலியவைகள், குஞ்சுகளுக்கு காலில் புண்ணுண்டாகி அவைகள் இறப்பதற்கு காரணங்களாகும். மேற்சொன்னவைகளில் அநேகத்தை சிறிது கவனித்தாலும் முயற்சியாலும் தடுத்துவிடலாம். ஆண், பெண் இனங்கள் தெளிவாகத் தெரியப்பட்டவுடன், அவைகளைப் பிரித்து வைக்கவேண்டும்.

குஞ்சுகளை உயர்ந்த இடத்தில் வைத்தல்.—குஞ்சுகளை கூடுமானவரை சீக்கிரத்தில் உயர்ந்த கம்புகளில் நிற்கும்படி செய்யவேண்டியது. இதனால் அவைகளுக்கு அதிக காற்றோட்டமும், சுத்தமான காற்றும் தரையிலிருப்பதைவிட அதிகமாக கிடைக்கிறது.

முடிவுரை.—கடைசியாக மேற்கூறிய முறைகளில் அதிக வரையறுக்கப்பட்ட விதிகள் கிடையாது. நமது இயற்கை அறிவும் அனுபவமும்தான் கோழிப் பண்ணையை வெற்றிகரமாகவும் லாபகரமாகவும் நடத்த ஏதுவாயிருக்கின்றன.

ஆர். டப்ளியு. லிட்டில் வுட்,
கால்நடை டிப்டி டைரக்டர்.

25. வர்த்தகப்பயிர்கள் (பருத்தி) விற்பனைச் சட்டம்.

வர்த்தகப்பயிர்கள் விஷயத்தில் வாங்குதல் விற்பனை செய்தல் இவைகளை இன்னும் அதிகமாக ஒழுங்குபடுத்தவேணடுமென்பது சென்னை கவர்ன்மெண்டாருக்கு மிகவும் உசிதமாய் தோன்றியது. ஷெ வர்த்தகப்பயிர்களில் பருத்தி மிகவும் முக்கியமானது. இதற்காக சர்க்கார் மதருஸ் ஆக்ட் 20/1933 எனச் சட்டம் ஏற்படுத்தியுள்ளார்கள். பருத்தியானது ஒரு சர்வதேசச் சரக்கு. அதன் விலை இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பலவித காரணங்களால் பாதிக்கப்படுகிறது. இதன் விலையில் பல மாறுதல்களுண்டாகிறது. வியாபாரிகள் வெளி நாட்டிலுள்ள விலை விவரங்களை உணர்ந்து அதைக்கொண்டு உள் நாட்டில் தம்மிடமுள்ள நிலைமையை தங்களுடைய நன்மைக்காக உபயோகித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் பருத்திப் பயிர் செய்யும் குடியானவனுக்கு இவ்வளவு விஷயம் தெரியாமையால் அடிக்கடி வெளியாகும் நிலவரமதிப்பின் சூக்ஷ்மத்தை தெரிந்துகொண்டு அதனால் கிட்டும் பிரயோஜனங்களை அடையக்கூடாதவனாயிருக்கிறான். மேலும் நிருத்தலவுகளில் தேசத்திற்கு தேசம் வேற்றுமைபடுகிறது. நமது தேசத்திலேயே ஒரு இடத்திற்கும் மற்றோரிடத்திற்கும் வித்தியாசமிருக்கிறது. நடவடிக்கையில் வியாபாரிகள் குடியானவர்களிடமிருந்து வாங்கும்போது பலவிதமான அலவன்ஸ் அல்லது தள்ளு வழிகள் பெறாமல் விடுவதில்லை. அவைகளில் பெரும்பான்மையானவை நியாயவிரோதமானவை. இப்படியுள்ள பலவிதமான எடை விலை முதலியவற்றின் சிக்கல்கள் ஒரு சாதாரணக் குடியானவனு

டைய அறிவுக்கு எட்டாதது. அதனால்தான் திருப்திகரமான நிபந்தனைகளின்பேரில் விற்பனை செய்வதாக நினைத்துக்கொண்டே உண்மையில் ஏமாந்துபோகிறான். பெரும்பான்மையான சில்லரை வியாபாரிகளின் நிலைமையும் இதுபோலவேதானிருக்கிறது.

பருத்தி வாங்கல் விற்றல் இவைகளைப் பொருத்த விஷயங்களை ஒழுங்குபடுத்தி அதில் ஏற்படும் ஒப்பந்தங்களை ஒருமுறையாக்கி பிரஜைகளுக்கு முக்கியமாக பயிர் செய்வோர்களுக்கு பாதுகாப்பளிக்கவேண்டுமென்று சென்னை அரசாங்கத்தார் வர்த்தகப்பயிர் விற்பனைச் சட்டம் செய்துள்ளார்கள். இந்தச் சட்டத்தின்படி இந்த இராஜதானியில் முன் அறிக்கையுடன் குறிப்பிட்ட முக்கியமான சில பிரதேசங்களில் ஒரு குறித்த வர்த்தகப் பயிரின் விளைபொருளை விற்பதும் வாங்குவதும் அரசாங்கத்தார் குறிப்பிட்டவகையில் அதிகாரத்துக்கு கொண்டுவந்துவிடலாம். சட்டத்தின் கீழ் திருப்பூர் முனிசீபல் எல்லைக்குட்பட்ட இடம் பருத்தி வியாபார விஷயங்களில் அரசாங்கத்தார் நிர்வாகத்துக்குட்பட்டதென்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

பருத்தி வாங்கவோ விற்கவோ ஏற்பட்டிருக்கும் இடங்களுக்கு உதாரணம் மண்டிக்கடைகள் ஜின்னிங் பாக்டரி காம்பவுண்டு முதலியவை சொந்தக்காரர்கள் 4-வது செக்ஷன்படி லைசென்சு பெற்றிக்கவேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள் ஒரு மத்திய இடத்தில் வியாபாரத் தொழில் நடைபெறுவதற்கு ஒரு பேட்டை ஏற்படுத்திக்கொடுக்கப்படும். இந்த எல்லைக்குள் வர்த்தகப்பயிர் சட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்து நடத்த ஒரு மார்க்கட் கமிட்டியிருக்கும். அந்த கமிட்டிக்கு கீழ்கண்டவாறு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பயிர் செய்வோர்க்குள் பயிர் செய்வோர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் 5.

சட்டத்தின் விதிகளில் கண்டபடி லைசென்சு பெற்ற வியாபாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் 4.

அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட நபர்கள் 2.

நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள்ளிருக்கும் ஸ்தல ஸ்தாபனம் (அல்லது) ஸ்தாபனங்கள்) தேர்ந்தெடுக்கும் நபர் 1.

ஆக மொத்தம் நபர்கள் 12

பிரசுரிக்கப்பட்ட எல்லைக்குள் விலைக்கு வாங்கவும் விற்கவும் செய்யும் வியாபாரிகளை கமிட்டி ரெஜிஸ்டர் செய்துகொள்ளும். இந்த வியாபாரத்தில் சம்மந்தப்பட்ட கலாசிகள், தரகர்கள் முதலியோர்கள் லைசென்சு பெற்றிருக்கவேண்டும். லைசென்சு பெற்றவர்கள் மாத்திரம்தான் ஷ தொழில் செய்ய அநுமதிக்கப்படுவார்கள். அவர்கள் அரசங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு கட்டுபட்டு நடக்கவேண்டும். நிறை அளவுகளும் பணமாகவோ அல்லது பொருளாகவோ கொடுபடவேண்டிய தரகு அலவன்சுகளும் வரையறுக்கப்படும். இதனால் அங்கீகாரம் பெறாதவனை தள்ளுபடியும் தரகும் அறவே ஒழிந்து போய்விடும். மேலும் ஷ கமிட்டி அந்தந்தத் தேதி விலை வாசி நிலவரங்களை விளம்பரப்படுத்தி எடைபோடுவதற்கு பொதுவான திராசும், குண்டுகளும் எற்படுத்தும். இதனால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரதேசத்திலுள்ள எல்லாக்கக்ஷியாருக்கும் மிகுந்த பிரயோஜனமுண்டு. முக்கியமாக பருத்தி பயிரிடுவோர்க்கு இது மிகுந்த நன்மையுண்டுபண்ணும். ஏனென்றால் அவர்களுக்கு விஷயங்களை தெரிந்துகொள்வதற்கு சுலபமான வழிகள் வேறு யாதொன்றுமில்லை.

இவ்விதமாக பகிரங்கமாக நேர்முறையான வழியில் பருத்தி வியாபாரத் தொழில் நடத்த எவ்வளவுக்கெவ்வளவு வசதிகள் செய்யமுடியுமோ அவ்வளவும் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் செய்யப்பட்டிருப்பது தெரியவரும். பருத்தி வியாபாரச் சம்மந்தப்பட்ட எல்லோருக்கும் முக்கியமாக பருத்தி பயிர் செய்வோர்க்கும் ஷ வசதிகளால் ஏற்படக்கூடிய அநுகூலங்கள் சொல்லாமலேயே விளங்கும். நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரதேசத்திலுள்ள பகிரங்கமான அரசாங்கத்தாராதரவில் நிர்வகிக்கப்பட்ட பேட்டையையே அதிகமாக எவ்வளவுக்கெவ்வளவு உபயோகிக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு உபயோகிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

II. வெட்டரினரி.

26. வெட்டரினரி இலாகா—அதன் நோக்கம்.

விவசாய டிபார்ட்மெண்ட் எப்படி சம்சாரிகளின் சாகுபடி முறைகளை சீர் திருத்தி அபிவிருத்தி செய்ய உதவுகிறதோ அதுபோலவே வெட்டரினரி டிபார்ட்மெண்ட் குடிகளின் கால்நடைகளை விருத்தி செய்வதற்கும் பராமரிப்பதற்கும் அவைகளின் நோய்களை சிகிச்சை செய்வதற்கும், நோய் வாராமல் தடுப்பதற்கும் உதவி செய்ய ஏற்பட்டு இருக்கிறது. ஒரு விவசாயியின் முக்கிய ஆதாரம் அவன் கால்நடைகளே. இவைகள் நோயில் இறந்துவிட்டால் அவனுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. ஒவ்வொரு வருஷமும் இந்த ராஜதானியில் ஏராளமான கால்நடைகள் நோயினால் முக்கியமாய் தொத்துவியாதிகளினால் ஏராளமாய் மரணமடைகின்றன. மரணத்தினால் நஷ்டமாவதுமல்லாமல் அநேகம் கால்நடைகள் வியாதியினால் பீடிக்கப்பட்டு வேலைசெய்ய முடியாததினால் தற்கால நஷ்டம் ஏற்படுகிறது. கால்நடைகளுக்கு அநேகவிதமான வியாதிகள் உண்டு. ஆனால் அவைகளில் முக்கியமானதும், கடுமையானதும் எவையென்றால் "ரிண்டர் பெஸ்ட்" என்னும் வெக்கை நோவு, தொண்டை அடைப்பான், கோமாரி முதலியன. இவ்வித நோய்கள் எப்பொழுதும் பரவி இருப்பதானது விவசாயத்திற்கு முக்கிய ஆதாரமாய் இருக்கும் கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு பெரிய தடையாய் இருக்கிறது. இந்த டிபார்ட்மெண்டின் நோக்கம் என்னவென்றால்: சம்சாரிகளின் கால்நடைகளுக்கு இப்படிப் பட்ட நோய்கள் வாராமல் தடுத்து அவர்களுக்கு உதவி செய்து அவர்கள் கால் நடைகளைக் காப்பாற்றுவதே.

இதற்காக வெட்டரினரி இலாகாவில் தேர்ச்சிபெற்ற வெட்டரினரி ஸர்ஜன்கள் ஏராளமாக நியமிக்கப்பட்டு, இராஜதானி முற்றிலும் ஜில்லாவுக்கு ஏற்றபடி நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். முக்கியமான பட்டணங்களில் ஸ்திரமாக ஏற்பட்டிருக்கும் வெட்டரினரி ஆஸ்பத்திரியில் இவர்களில் அனேகர் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர ஜில்லாக்களில் ஒரு ஜில்லாவுக்கு மூன்று அல்லது இன்னும் அதிகப்பட்ட உத்தியோகஸ்தர்கள் கால் நடைகளின் வியாதியைத் தடுப்பதற்கும் சிகித்சை செய்வதற்கும் வேண்டிய மருந்து முதலியதான வாட்டத்தோடு உள்நாட்டு கிராமங்களில் அடிக்கடி சர்க்கூட் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

இவ்விராஜதானியில் ஏற்படுத்தப்பட்டு இருக்கும் கால்நடை ஆஸ்பத்திரிகளின் ஜாப்தாவும் சர்கூட் செய்யும் வெட்டரினரி உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய தலைமை ஸ்தானம் (ஹெட் குவார்டர்ஸ்) முதலியவைகளும் இந்தப் பஞ்சாங்கத்தின் இன்னொரு பக்கத்தில் காணலாம்.

சம்சாரிகள் தங்கள் கால்நடைகளைப்பற்றி மேல் சொல்லப்பட்ட உத்தியோகஸ்தர்கள் எவரிடமிருந்தேனும் சிகிச்சைக்கு வேண்டிய உதவியும் மற்றும் ஆலோசனைகளும் பெறலாம்.

கீழ்கண்ட உத்தியோகஸ்தர்களில் ஒருவரிடமிருந்து குடிகள் இருக்கும் ஜில்லாவிற்குத் தக்கவாறு அவர்களுக்கு அப்ளிகேஷன் எழுதி ஆலோசனை முதலிய அபிப்பிராயங்கள் தெரிந்துக்கொள்ளலாம் :—

குடிகள் இருக்குமிடம், ஜில்லாக்கள்.	யாருக்கு எழுதவேண்டும்.	
மதராஸ்	பிரின்ஸிபால், மதராஸ் வேப்பேரி, மதராஸ்	வெட்டரினெரி காலேஜ்,
கஞ்சம், விசாகப்பட்டணம் ..	ஜில்லா வெட்டரினெரி ஆபீஸர்.	விசாகப்பட்டணம்.
மேற்கு கோதாவரி, கிழக்கு கோதாவரி.	ஷை	இராஜமஹேந்திரம்.
கிருஷ்ணா, குண்டூர்	ஷை	பெஜவாடா.
நெல்லூர், கடப்பை	ஷை	நெல்லூர்.
பெல்லாரி, கர்நூல்	ஷை	பெல்லாரி.
அனந்தபூர், சித்தூர்	ஷை	மதனபல்லி.
செங்கற்பட்டு, தென் ஆற்காடு ..	ஷை	மதராஸ்.

வட ஆற்காடு, சேலம்	ஜில்லா வெட்டரினரி ஆபீஸர்.	வேலூர்.
கோயம்புத்தூர், நீலகிரி	ஷை	கோயம்புத்தூர்.
மலையாளம், தென்கன்னடம் ..	ஷை	கள்ளிக்கோட்டை.
திருச்சினுப்பள்ளி, தஞ்சாவூர் ..	ஷை	திருச்சினுப்பள்ளி.
மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி.	ஷை	மதுரை.

பி. டி. ஸான்டர்ஸ்,
டைரெக்டர், மதராஸ் வெட்டரினெரி ஸர்விஸ்.

27. விதை எடுத்தல், காயடித்தல் அல்லது ஆண்மை குறைத்தல்.

ஆண் மிருகங்களை பொலி தொழிலுக்கு உபயோகமற்றவைகளாய் செய்வதற்கும் அவைகளின் இன உற்பத்திக்கு இயலாதவைகளாய் செய்தற்பொருட்டும் விதை எடுக்கப்படுகிறது. தங்கள் தங்கள் ஜீவனத்தை விருத்திசெய்துகொள்ளக் கருதும் குடியானவர்கள் யாவரும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்களில் இது ஒன்று. ஏனெனில் ஆராய்ந்து பொருக்கி எடுக்கப்பட்ட பொலிகாளைகளை உபயோகிப்பதினாலும் ஆண்பெண் இவ்விரு மிருகங்களையும் தகுந்தபடி சேரவிடுவதினாலுமே நல்ல பலன் கிடைக்கும். வேலைகளுக்கு உபயோகிக்கும் காளைகள் குதிரைகளைப்போன்ற மிருகங்களுக்கு விதை எடுத்துக்கொள்ளுதல் அவசியம், ஏனெனில் விதை எடுத்துவிடுவதால் அவைகளிலும் அவைகளைச் சேர்ந்த இதர ஆண் பெண் மிருகங்களோடு கலந்துவைக்க கஷ்டமில்லாது இருக்கும். மேலும், மனிதர்களுக்கு உணவுக்காக உபயோகிக்கும் தேசங்களில் மாடு, செம்மறி, வெள்ளாடு இவைகள் விதை எடுத்துக்கொள்வதற்கு வேறு ஓர் காரணமுண்டு. எங்ஙனமெனில் விதை எடுக்கப்பட்ட ஆடுமாடுகள் சீக்கிரம் கொழுப்படைந்து பருவத்தை அடைகின்றன. இன்னும் இவைகளின் மாமிசம் விதையெடுக்கப்படாத ஆடுமாடுகளின் மாமிசத்தைவிட மிருதுவாயும் வெறுக்கத்தக்க வாசனை இல்லாமலும் இருக்கும். செம்மறியாடுகளில் விதை எடுத்த ஆடுகளின் ரோமம் மிக மிருதுவாயிருக்கும். அதிக விலை மதிக்கக்கூடியதாயும் இருக்கும்.

விதை எடுத்தல் என்றால் என்ன ?

அதாவது, மிருகத்தின் விதைகளை எடுத்து அப்புறப்படுத்திவிடுதல் அல்லது விதைகளை பலன்கொடுக்கவிடாதபடி "சுக்கில நரம்புகளை" தட்டுதலாகும். இக்கிரியை பலமுறைகளில் செய்யமுடியும். என்றாலும் அம்முறைகளில் இத்தேசத்தில் பெரும்பாலும் கையாடப்படுவது "விதையடித்தலாகும்." இது எங்ஙனமெனில் விதைகளையாவது சுக்கில நரம்புகளையாவது துண்டித்து எடுத்துவிடாது இரண்டையும் இரண்டு கற்களுக்கிடையிலோ அல்லது வேறு கடினமான வஸ்துக்களின் நடுவிலோ பிடித்துக்கொண்டு சுத்திகள்போன்ற ஆயுதங்களால் அவைகள் குழம்புபோலாகும்வரை அடித்தல் ; இவ்விதம் செய்ய அரை மணிக்கு மேலாகும். அச்சமயத்தில் அப்பிராணி கொடிய துன்பத்தை அனுபவிக்கும். முற்காலங்களில் பிராணிகளுக்கு மேற்குறித்தபடி "விதை யடித்துக்கொள்ளக்" காரணங்கள் இருந்தன. ஆனால் இப்பொழுதோ சர்க்காரால் இந்த ராஜதானியில் ஒவ்வொரு ஜில்லாவிலும் மிருக வைத்தியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மற்ற முறைகளில் தேர்ந்திருப்பதோடு சாஸ்திரீக முறையில் விதை எடுக்கவும் பழகி இருக்கிறார்கள். ஆகையால் நாகரீகமுள்ள ஒவ்வொரு குடித்தனக்காரரும் தங்கள் பிராணிகளுக்கு "விதையடிக்க" இடங்கொடாது விலக்கிக்கொள்ள இது நல்ல சமயமாகும்.

சர்க்கார் மிருக வைத்தியர்கள் பலமுறைகளில் இதை செய்யப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் ஒரு விதம் "ரணவைத்திய" முறையில் விதைகளைத் துண்டித்து அப்புறப்படுத்திவிடுதல் ஆகும். இம்முறையே

குதிரைகளுக்கு சாதாரணமாய் கையாடப்பட்டுவருகிறது. மாடுகளுக்கு தற்காலத்தில் இரத்தம் சிந்தாத நிலைமையிலும், விதைகளை எடுத்து அப்புறப்படுத்தாத நிலைமையிலும் இக்கிரியை செய்யமுடியும். இதற்கு பர்டிசோ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட "விதையடிப்பான்" என்னும் ஒரு பெரிய ஆயுதத்தை உபயோகிக்கிறார். இக்கருவியைக்கொண்டு "சுக்கில நரம்புகளை" நசுக்கிவிடுகிறார். இக்கருவி ஒரு பெரிய இடுக்கியைப் போலிருக்கும் இக்கருவி அதன் கைப்பிடிகளை இலகுவாய் அமுக்கினாலும், முகவாயில் நசுக்கக்கூடிய பெரும்பலத்தைக் கொடுக்கும் விதமாய் செய்யப்பட்டிருக்கிறது. இக்கருவியின் முகவாய் ஓரங்கள் மூடும் சமயத்தில் அவைகளின் நடுவில் குறிக்கிடும் அங்கக்கட்டுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் நசுக்கக்கூடிய நிலைமையில் அவ்வளவு சூக்ஷமாய்ப் பொருந்தக்கூடியது. ஒவ்வொரு நரம்பும் ஒரே நிமிஷத்தில் நசுக்கப்படுகிறது. அம்மிருகத்திற்கு ஆண்மை குன்றச்செய்யவும் விதைகள் சத்தில்லாமல்போகவும் இதுவே போதுமானது. பின்னால் வேறு எவ்வித வைத்தியமும் செய்யவேண்டியதில்லை. இதற்கு பிறகு இரண்டொரு நாள்கள்வரையில் விதைப்பக்கமும் அண்டகோசமும் வீங்கியிருக்கும். ஆனால் இவ்வீக்கத்தினால் மிருகத்தின் உடம்புக்கு கஷ்டமாவது அசௌகரியமாவது கிடையாது. ஆகவே இம்மிருகத்தை உடனே மந்தையோடு அனுப்பிவிடலாம். இன்னும் இரண்டொரு நாள்கழித்து வேலையும் செய்துகொள்ளலாம்.

எனவே, விதையடித்துக் கொள்வதைவிட பர்டிசோ முறைப்படி விரைபங்கம் செய்துகொள்வதால் உண்டாகும் முக்கியமான சில அனுகூலங்கள் பின்வருமாறு :—

(a) விதையடிப்பதற்கு அரைமணி நேரமாகும். ஆனால் பர்டிசோ முறைப்படி இரண்டே நிமிஷத்தில் செய்யலாம்.

(b) பின் முறைப்படி செய்துகொள்வதில் ஏதோ இரண்டொரு நாளைக்குக் கொஞ்சம் வீக்கமிருந்து வற்றிப்போகிறதைத் தவிர வேறே எவ்வித பாதையும் மிருகத்திற்கு கிடையாது. ஆனால் விதையடிப்பதால் அநேக வாரங்களுக்கு மிருகம் கஷ்டப்படுவதோடு கிரியாஸ்தானத்தில் சீப்பிடித்து அது ஆற அநேக நாள்கள் பிடிக்கும்.

(c) விதையடிப்பதால் அம்மிருகத்திற்கு உண்டாகும் வலியும் கஷ்டமும் மிகக் கொடூரமானது. இந்த முறட்டுத்தனமான செய்கையைக் கண்ணால் கண்டவர்களுக்கே அக்கொடுஞ்செயல் வெளியாகும். ஆனால் பர்டிசோ முறைப்படி செய்வதால் உண்டாகும் கஷ்டம் மிகவும் குறைவு.

(d) இன்னும் பின் முறைப்படி அதிசீக்கிரத்தில் இக்கிரியை செய்யமுடியுமானதால் விதையடிக்கும் பிராணிக்கு மயக்கமருந்து கொடுப்பது வழக்கமல்ல. ஆனால் சொந்தக்காரர் விரும்பினால் மிருக வைத்தியர் பிராணியை மயக்கியே செய்வார். அப்படி மயக்கிச் செய்துகொள்வதால் அம்மிருகம் கஷ்டத்தை சிறிதும் உணருவதில்லை.

(e) இம்முறைப்படி எந்த வயதிலும் விதையடித்துக்கொள்ளலாம்.

ஆகவே தங்கள் தங்கள் மிருகங்களை விதையடித்துக்கொள்ள விரும்பும் ஒவ்வொரு சொந்தக்காரரும் இப்புதிய முறையைக் கைக்கொள்ளத்தக்கதாகும் என்று நம்பப்படுகிறது. இதற்காக மிருக வைத்தியர்களின் உதவியைப் பெறவிரும்புவோர் அவருடைய ஹெட்குவார்ட்டருக்காவது பக்கத்து மிருக ஆஸ்பத்திரிக்காவது அல்லது அத்தாலூகா தாசில்தாருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

28. வெக்கை - ஆட்டு சீக்கு ரத்தத்தினால் உருக்குத்தும் வழி.

வெக்கை அல்லது மாட்டுப் பிளேக் என்பது இந்த இராஜதானியில் கால் நடைகளுக்கு வரும் ஒரு கொடுமையான தொத்து வியாதி என்று கால்நடை வைத்திருப்போர் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்த தொத்து வியாதி கால்நடைகளுக்குக் கண்டால் சீக்குண்ட மாடுகள் அனேகம் சேதமாகிவிடும். இதனால் கால்நடை வைத்திருப்பவர்களுக்கு பொருட்சேதத்தை உண்டுபண்ணுகிறது.

2. கால்நடைகளுக்கு பாதுகாப்பு அல்லது ரக்ஷணை கொடுப்பதற்கு எல்லா கவர்ன்மெண்டு வெட்டரினரி அஸிஸ்டெண்டு சர்ஜன்கள் இரத்த நீரும் சீக்கிரத்தமும் கலந்து தற்காலம் உருக்குத்தும் வழியை கை யாண்டு வருகிருர்கள். இந்த வழியில் சீக்கு கண்டு குணமான மாட்டின் ரத்த நீர் சீக்கில்லாத மாட்டின் தோளுக்குள் குத்தி இறக்கப்படுகிறது. அதே சமயத்தில் சீக்கு ரத்தம் (அதாவது வெக்கை நோய் கண்டு சுரம் ஜாஸ்தியாய் இருக்கும்பொழுது எடுக்கப்பட்ட சீக்கு ரத்தம் மற்றொரு புறம் தோளுக்குள் குத்தி இறக்கப்படுகிறது.

3. இப்பொழுது வெக்கை நோய் தடுப்பதற்கு ஒரு புதியதாகவும் அதிக கஷ்டமில்லாததாகவும் உள்ள ஒரு பாதுகாப்பை கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. அதாவது ஆடுகளுக்கு சாதாரணமாக வெக்கை நோய் வருகிறதில்லை என்றும் ஒரு வேளை அவைகளுக்கு அந்நோய் காணுமாயின் அவைகளினுல் அதிகமாக சேதம் கிடையாது. ஆகையால் ஆடுகளுக்கு இவ்வெக்கை நோயை பொருக்கும் சக்தி உண்டென்பது எல்லோருக்கும் தெரியலாம். வெக்கை நோய் கண்ட மாடுகளிலிருந்து எடுக்கப்பட்ட ரத்தத்தை ஆடுகளுக்குக் குத்தப்படுகிறது. பிறகு இந்த ஆடுகளுக்கு சுரம் மும்மரமாய் இருக்கும்பொழுது அதிலிருந்து ரத்தம் எடுக்கப்பட்டு மாடுகளுக்கு கொடுக்கப்படுகிறது. இந்த வகையாக உருக்குத்தப்பட்ட சில மாடுகளுக்கு கொஞ்சம் சுரம் காணலாம். எருமைகளுக்கும் சுரம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். ஆனுல் இது தானுகவே இறங்கிவிடும்.

4. இரத்தம் நீரும் சீக்கு ரத்தமும் கலந்து செய்யும் வழியில் கால்நடைகளுக்கு எவ்வளவு ரக்ஷணை கொடுக்கிறதோ அவ்வளவு ரக்ஷணை இந்த புதிய ஆட்டு சீக்கு ரத்தம் வழி கொடுக்கிறது.

5. அதிக சேதமில்லாமல் அனேக ஆயிரக்கணக்கான கால்நடைகளுக்கு இம்மாதிரியான ஆட்டு சீக்கு ரத்தவழியில் உருக்குத்தப்பட்டிருக்கின்றன. இந்த உருக்குத்தும் வழியானது அதிக சுலபமானதாயும் செய்வதற்கு அதிக கஷ்டமில்லாததாகவும் விலை மிகவும் குறைவாகவும் இருக்கிறது. இதனுல் எல்லா கால்நடைகள் வைத்திருப்போர்களுக்கு தெரிவிப்பது யாதெனில், எல்லா கால்நடைகளுக்கு இந்த புது மாதிரியான ஆட்டு சீக்கு ரத்த மூலமாய் உருக்குத்தி "வெக்கை" நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டியதென்பதே.

29. ஸீரம் இன்ஸ்டிட்யூட், மதராஸ்.

இப்பொழுது நமது இராஜதானியிலுள்ள எல்லா நகரங்களிலும், கிராமங்களிலும், கால்நடை இலாகாவானது, பெரும்பாலும் மரண ஹேதுவான வெக்கை, தொண்டை அடைப்பான், சப்பைநோவு, அடைப்பான் முதலான கால்நடை தொத்து வியாதிகளின் பயங்கரமான பெருந் தொந்தரவுகளிலிருந்தும் மேற்படி வியாதிகளை வரவொட்டாமல் தடுக்கக்கூடிய அம்மை மருந்துகளால் நன்றாகத் தடுத்துக்கொண்டு வருகிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமேயாகும். ஆனுல் சென்னையில் ஸீரம் இன்ஸ்டிட்யூட் என்று சொல்லக்கூடிய அம்மைப்பால் முதலிய மருந்துகள் தயாரிக்கும் சாலை யொன்று ஸ்தாபனம் செய்யப்பட்டிருப்பதானது மேற்படி பயங்கரமான வியாதிகளைத் தடுப்பதற்கு பெரும்சாதனமாயிருக்கிறதென்பது பெரும்பாலோருக்கு தெரியாமலிருக்கலாம். இவ்விஷயத்தை எல்லோருக்கும் தெரியப்படுத்துவதே இவ்வியாசத்தின் கருத்தாகும்.

2. வெக்கை என்று சொல்லப்படும் இக்கொள்ளை நோயானது நம் தேசத்தில் அனுதிகாலமாய் இருந்துகொண்டு இந்தியாவின் இதர பாகங்களைப்போலவே இந்த இராஜதானியிலும் வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான கால்நடைகளின் மரணத்திற்கு ஹேதுவாக இருக்கிறது. இவ்வியாதியானது எவ்வித சிகிச்சைகளுக்கும் கட்டுப்படாத கொள்ளை நோய்களில் ஒன்று. ஆதலால் இவ்வியாதியை வரவொட்டாமல் தடுப்பதே நல்லது. அவ்விதம் தடுக்கும்பொருட்டு அம்மை வைப்பதற்குபயயோகமானதும்

இவ்வியாதியால் பீடிக்கப்பட்டு அதிலிருந்து சொஸ்தமடைந்த கால்நடைகளிலிருந்து தயாரிக்கப்படுவதான "நிணநீர்" அல்லது "ஸீரம்" என்று சொல்லப்படும். இம்மருந்தானது சென்ற சில வருஷங்களாக இந்த இராஜதானியில் மேற்படி வியாதியை கண்டிக்கும் பொருட்டு "முக்தேசர்" என்கிற ஊரிலிருக்கும் "இம்பீரியல் இன்ஸ்ட்டியூட் ஆப் வெட்டர்னரி ரிசர்ச்" என்கிற பெயரால் வழங்கும் ராஜீய கால்நடை ஆராய்ச்சி சாலையிலிருந்து தருவிக்கப்பட்டு வந்தது. ஆனால் ஒரு பெரிய முயற்சி செய்து இவ்வியாதியை நன்றாகத் தடுப்பதற்கு வேண்டிய அளவு மருந்தை அப்போதைக்கப்போது வேண்டிய சமயங்களில் தருவித்துக்கொள்வதற்கான சிலவு அளவுக்கு மிஞ்சியதாயிற்று. இப்பெருந்தடையை முன்னிட்டு முக்கியமான சில பரிசோதனைகளும் பரீக்ஷைகளும் செய்து அதன் மூலமாக "சீரம்" என்று சொல்லப்படும் இம்மை மருந்தை இச்சென்னையிலேயே தயாரித்து அதை வேண்டிய அளவு குறைந்த சிலவில் உபயோகப்படுத்தக் கூடிய ஓர் பிரேரணை செய்யப்பட்டது. இச்சென்னை கவர்ன்மெண்டார் அப்பிரேரணையை ஆமோதித்ததின்பேரில் "ஸீரம் இன்ஸிடியூட்" என்று வழங்கும் அம்மை மருந்து சாலை சென்ற 1932-ம் ஆண்டு ஏப்ரல் மீ 7-ம் தேதியன்று ஸ்தாபனம் செய்யப்பட்டது.

3. இவ்வாறு ஸ்தாபனம் செய்யப்பட்டது முதல் சென்ற 1936-ம் ஆண்டு மார்ச்சு மீ முடிந்த நான்கு வருஷங்களுக்குள் வெக்கை நோய்க்கு எதிரிடையாக கால்நடை இலாகாவைச் சேர்ந்த ஜில்லா அதிகாரிகளால் 4,37,000 கால்நடைகளுக்கு "சீரம் சமகாலிகமுறை என்ற அம்மைப் பிரயோகத்திற்கு அவசியமான—எதிரிடை வெக்கை ஸீரம்" என்றும்— "வெக்கை விஷநீர்" என்று சொல்லப்படும் இரண்டு மருந்துகளும் - இச்சாலையிலேயே பூறுவும் தயார் செய்து கொடுக்கத் தகுந்த சக்தி வாய்ந்திருக்கிறது. ஆனால் இந்த வெக்கை வியாதியானது, நான்கு வருஷங்களுக்குள் குறிப்பேட்டுக்குள் மிகவும் இறைவாக இருந்ததென்பதும் அதுபற்றி அக்காலத்திலேற்பட்ட வருஷாந்திரமான சங்கியை அதற்கு முந்தியிருந்த வருஷாந்தா சங்கியையின் ஒரு பாகமாகத்தான் இருந்ததென்பதும் கவனிக்கத்தக்க விஷயமாகும். அத்துடன் "சீரம்" என்ற மருந்தை உள்ளூரில் தயார் செய்து வந்ததினால் கவர்ன்மெண்டார்க்கு சில லக்ஷ ரூபாய்கள் லாபத்திற்கிடமாக விருக்கிறதென்பதும் கவனிக்கதக்கதாகும்.

4. தவிரவும் இச்சாலையானது கால்நடைகளை வெக்கை நோயிலிருந்து காப்பாற்றக்கூடிய" வெள்ளாட்டு விஷ நீர் என்று சொல்லப்படும் மற்றொரு மருந்தையும் தயார் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறது. இம்முறையால் 94,000 கால்நடைகள் வெக்கை நோய் வராமல் தடுக்கப்பட்டிருக்கின்றன.

5. தவிரவும் இந்த இன்ஸ்டியூட்டானது, தொண்டை அடைப்பான் என்று சொல்லும் மற்றொரு கொடிய கால்நடை தொத்து வியாதியால் மரணமடையும் கால்நடைகளை காப்பாற்றும் பொருட்டு, "எதிரிடை தொண்டை அடைப்பான் சீரம்" என்னும் மருந்தையும் தயார் செய்துகொண்டு வருகிறது. சென்ற 1936-ம் ஆண்டு மார்ச்சு மீ முடிய, 28,000 டோஸ் (அளவு) தயார் செய்திருக்கிறது.

6. இந்த இன்ஸ்ட்டியூடானது - பெரம்பூர் பாரக்ஸைச் சேர்ந்த - பாரன் ரோட்டில் இருக்கிறது. இதில் நிர்வாகக் கட்டிடங்களைத் தவிர, மேலான உபகரணங்களுடன் கூடிய ரஸாயன சாலையும், குளிர்ச்சிக் கிடங்கும், நல்ல பக்கா கால்நடைத் தொழுவங்களும் அடங்கியிருக்கின்றன.

7. வெக்கை, தொண்டை அடைப்பான் நோய்களைத் தவிர, வேறு இதர கால்நடை தொத்து வியாதிகளுக்கு வேண்டிய சீரம், ஜில்லா அதிகாரிகளின் உபயோகத்தின்பொருட்டு, வேறு இடத்திலிருந்து தருவித்து இச்சாலையிலேயே ஸ்டாக் செய்யப்பட்டு வருகிறது. சமீப காலத்திலேயே இதர வியாதிகளுக்கு வேண்டிய "சீரமும்" - அம்மைப்பாலும் இச்சாலையிலேயே தயார் செய்வதற்குரிய ஏற்பாடுகளை ஒப்புக்கொள்ளுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

கே. கைலாசமய்யர்,
சூப்பிரிண்டெண்டெண்டு, சீரம் இன்ஸ்டிடியூட், சென்னை.

30. கால்நடை வியாதிகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் வைத்தியசாலைகள், மருந்து மாத்திரம் கொடுக்கப்படும் இடங்களின் ஜாபிதாவும் அவைகளுக்கு சிகிச்சை செய்ய ஏற்படும் செலவு விபரங்களும் முதலியன.

மாடுகளுக்கு சிகிச்சை செய்யப்படும் வைத்தியசாலைகள்.

நெ.	ஜில்லா	இடம்.	சிஹிச்சை செலவு வகையரு.	யாருல் போஷிக்கப்பட்டு வருகிறது.
1	விசாகப்பட்டணம் ..	விசாகப்பட்டணம் ..	சிஹிச்சை செலவு வசூலிக்கப்படும்.	கவர்ன்மெண்டு.
2	ஷை	பொப்பிலி ..	சிஹிச்சைக்கு செலவில்லை.	ஷை
3	ஷை	விஜயநகரம் ..	ஷை	விஜயநகரம் சமஸ்தானம்.
4	கீழ் கோதாவரி ..	அமலாபுரம் ..	செலவுண்டு ..	கவர்ன்மெண்டு.
5	ஷை	காகிநாடா ..	சிஹிச்சைக்கு செலவுண்டு.	ஷை
6	ஷை	ராஜமஹேந்திரி ..	ஷை	ஷை
7	ஷை	பித்தாபுரம் ..	செலவில்லை ..	பித்தாபுரம் ராஜா.
8	மேற்கு கோதாவரி ..	எல்லூர்	சிகிச்சைக்கு செலவுண்டு.	கவர்ன்மெண்டு.
9	கிருஷ்ணா	இல்லை	இல்லை	இல்லை.
10	குண்டூர்	குண்டூர்	செலவுண்டு ..	கவர்ன்மெண்டு.
11	ஷை	ஒங்கோல்	இலவசம்	ஷை
12	நெல்லூர்	நெல்லூர் ..	செலவுண்டு ..	ஷை
13	கடப்பா	இல்லை	இல்லை	இல்லை.
14	பல்லாரி	பல்லாரி	இலவசம் ..	கவர்ன்மெண்டு.
15	ஷை	அதோணி	ஷை	ஷை
16	கர்நூல்	கர்நூல்	ஷை	ஷை
17	ஷை	நந்தியால் ..	ஷை	ஷை
18	சித்தூர்	சித்தூர்	ஷை	ஷை
19	ஷை	மதனபள்ளி ..	செலவுண்டு ..	ஷை
20	அநந்தபூர்	ஹிந்திபூர்	செலவில்லை ..	ஷை
21	வட ஆற்காடு	வேலூர்	செலவுண்டு ..	ஷை
22	ஷை	திருவண்ணாமலை.	இலவசம்	ஷை
23	சேலம்	சேலம்	சிஹிச்சைக்கு செலவுண்டு.	ஷை
24	செங்கற்பட்டு	சைதாப்பேட்டை ..	ஷை	ஷை
25	தென் ஆற்காடு	கூடலூர்	ஷை	ஷை
26	தஞ்சாவூர்	தஞ்சாவூர் ..	ஷை ..	ஷை
27	ஷை	கும்பகோணம் ..	ஷை	ஷை
28	ஷை	நாகபட்டணம் ..	ஷை	ஷை
29	திருச்சினாப்பள்ளி ..	திருச்சினாப்பள்ளி.	செலவுண்டு ..	ஷை
30	மதுரை	மதுரை (தல்லாகுளம்)	ஷை ..	ஷை
31	ராமநாதபுரம்	ராஜபாளையம் ..	ஷை	ஷை
32	திருநெல்வேலி ..	திருநெல்வேலி ..	ஷை ..	ஷை
33	கோயம்புத்தூர் ..	கோயம்புத்தூர் ..	ஷை ..	ஷை
34	ஷை	ஈரோடு	ஷை ..	ஷை
35	ஷை	திருப்பூர் ..	1934-ம் ஞு ஜூன் மீ முதல் தேதி முதல் செலவுண்டு.	ஷை
36	நீலகிரி	உதகமண்டலம் ..	செலவுண்டு ..	ஷை
37	ஷை	கூனூர்	ஷை ..	ஷை
38	மலபார்	கள்ளிக்கோட்டை.	ஷை ..	ஷை
39	ஷை	பாலக்காடு ..	ஷை ..	ஷை
40	தென்கன்னடம் ..	மங்களூர்	இலவசம்	ஷை

(மாட்டு வியாதிகளுக்கு) மருந்து மாத்திரம் கொடுக்கப்படுமிடங்களின் விவரம்.

நெ.	ஜில்லா.	இடம்.	சிகிச்சை செலவு வகையறு.	யாரால் போஷிக்கப்பட்டு வருகிறது.
1	கஞ்சம்	சிகாகோல்	இலவசம்	கவர்ன்மெண்டு.
2	டிஷ	தெக்கலி	டிஷ	டிஷ
3	விசாகப்பட்டணம்	பார்வதிபுரம்	டிஷ	டிஷ
4	டிஷ	அனகாபல்லி	டிஷ	டிஷ
5	டிஷ	ஜெயிபூர்	டிஷ	டிஷ
6	கீழ் கோதாவரி	போலாபுரம்	டிஷ	டிஷ
7	டிஷ	கோதாபேட்டை	டிஷ	டிஷ
8	டிஷ	திரக்ஷர்மா	டிஷ	டிஷ
9	டிஷ	பத்ராசலம்	டிஷ	டிஷ
10	டிஷ	பெத்தாபுரம்	டிஷ	டிஷ
11	டிஷ	ராசோல்	டிஷ	டிஷ
12	மேற்கு கோதாவரி	பலகோல்	டிஷ	டிஷ
13	டிஷ	தனுகு	டிஷ	டிஷ
14	கிருஷ்ணு	முசலிப்பட்டணம்.	டிஷ	டிஷ
15	டிஷ	பெஜவாடா	செலவுண்டு	டிஷ
16	டிஷ	குடிவாடா	இலவசம்	டிஷ
17	டிஷ	நஸ்வித்(ட்)	டிஷ	டிஷ
18	டிஷ	ஜெயப்பெட்டா	டிஷ	டிஷ
19	டிஷ	கைகளூர்	டிஷ	டிஷ
20	டிஷ	உய்யூர்	டிஷ	டிஷ
21	குண்டூர்	குர்ஜாலா	டிஷ	டிஷ
22	டிஷ	நரசராபேட்டை	டிஷ	டிஷ
23	டிஷ	தெனுலி	டிஷ	டிஷ
24	நெல்லூர்	காவலி	டிஷ	டிஷ
25	டிஷ	வெங்கடகிரி	டிஷ	டிஷ
26	கடப்பா	கடப்பா	டிஷ	டிஷ
27	டிஷ	பத்வெல்	டிஷ	டிஷ
28	டிஷ	பொரதத்தூர்	டிஷ	டிஷ
29	டிஷ	ராஜம்பேட்டை	டிஷ	டிஷ
30	பல்லாரி	ஹாஸ்பெட்	டிஷ	டிஷ
31	டிஷ	ஹர்பனஹள்ளி	டிஷ	டிஷ
32	கர்னூல்	கோவில்குண்டா	டிஷ	டிஷ
33	டிஷ	நந்திகாட்கூர்	டிஷ	டிஷ
34	சித்தூர்	இல்லை	இல்லை	இல்லை.
35	அனந்தபுரம்	அனந்தபுரம்	இலவசம்	கவர்ன்மெண்டு.
36	டிஷ	தாட்பத்திரி	டிஷ	டிஷ
37	வட ஆற்காடு	ராணிப்பேட்டை	டிஷ	டிஷ
38	சேலம்	நாமக்கல்	டிஷ	டிஷ
39	டிஷ	திருச்செங்கோடு	டிஷ	டிஷ
40	டிஷ	கிருஷ்ணகிரி	டிஷ	டிஷ
41	செங்கற்பட்டு	செங்கல்பட்டு	டிஷ	டிஷ
42	டிஷ	திருவள்ளூர்	டிஷ	டிஷ
43	டிஷ	காஞ்சிவரம்	செலவுண்டு	டிஷ
44	டிஷ	பெரவள்ளூர்	இலவசம்	டிஷ
45	தென் ஆற்காடு	கள்ளக்குறிச்சி	டிஷ	டிஷ
46	டிஷ	சிதம்பரம்	டிஷ	டிஷ
47	டிஷ	திண்டிவனம்	டிஷ	டிஷ
48	தஞ்சாவூர்	திருவாரூர்	டிஷ	டிஷ
49	டிஷ	மாயவரம்	டிஷ	டிஷ
50	டிஷ	நன்நிலம்	டிஷ	டிஷ
51	டிஷ	சீயாழி	டிஷ	டிஷ
52	டிஷ	மன்னார்குடி	டிஷ	டிஷ
53	டிஷ	திருத்துரைப்பூண்டி	டிஷ	டிஷ
54	திருச்சினுப்பள்ளி	அரியலூர்	டிஷ	டிஷ
55	டிஷ	கரூர்	டிஷ	டிஷ
56	டிஷ	லால்குடி	டிஷ	டிஷ
57	மதுரை	மதுரைநகரம்	செலவுண்டு	டிஷ
58	டிஷ	திண்டுக்கல்	இலவசம்	டிஷ
59	டிஷ	கொடைக்கானல்	டிஷ	டிஷ
60	டிஷ	பெரியகுளம்	டிஷ	டிஷ
61	ராமனுதபுரம்	ராமனுதபுரம்	டிஷ	டிஷ
62	டிஷ	தேவகோட்டை	டிஷ	டிஷ

நெ.	ஜில்லா.	இடம்.	சிகிச்சை செலவு வகையரு.	யாரால் போஷிக்கப்பட்டு வருகிறது.
63	ராமநாதபுரம்	விருதுநகர் ..	இலவசம்	கவர்ன்மெண்டு.
64	ஷை	ஸ்ரீவில்லிபுத்தூர்.	ஷை	ஷை
65	திருநெல்வேலி	தூத்துக்குடி ..	செலவுண்டு ..	ஷை
66	கோயம்புத்தூர்	தாராபுரம் ..	1934-மு ஜூன் மீ முதல்தேதி முதல் கட்டணம் வசூலிக்கப்படும்.	ஷை
67	ஷை	கோபிசெட்டிபாளையம்.	ஷை	ஷை
68	ஷை	பொள்ளாச்சி ..	ஷை	ஷை
69	ஷை	நாதகடையூர் ..	இலவசம்	ஷை
70	ஷை	கொள்ளேகால் ..	ஷை	ஷை
71	மலபார்	கன்னனூர் ..	ஷை	ஷை
72	ஷை	தளிச்சேரி ..	ஷை	ஷை
73	தென்கன்னடம் ..	புத்தூர்	ஷை	ஷை

31. சுற்றுப் பிரயாணஞ் செய்யும் வெட்டரினரி அஸிஸ்டெண்டு சர்ஜன்களின் ஜாப்தாவும், அவர்களின் தலைமை இடமும் எல்லைகளும்.

விசாகப்பட்டணம் ஜில்லா வெட்டரினெரி ஆபீசரின் கீழ். கஞ்சம் ஜில்லா.

	உத்தியோகஸ்தரின் பெயரும், அவர்களின் தலைமை இடமும்.	எல்லைகள்.
1	வெட்டரினெரி அஸிஸ்டெண்டு சர்ஜன் இன்சார்ஜ், வெட்டரினெரி டிஸ்பென்ஸரி சிக்காகோல்.	சிக்காகோல் ரிவினியூ பிர்க்கா.

விசாகப்பட்டணம் ஜில்லா.

2	சுற்றுப் பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், நரசபட்டணம்.	நரசபட்டணம் சர்வ சித்தி கூடம்.
3	ஷை விசாகப்பட்டணம்	விசாகப்பட்டணம், ஸ்ருங்கவருப்புக் கோட்டா தாலூகாக்கள்.
4	ஷை விஜயநகரம்	விஜயநகரம், சீப்புருப்பள்ளி தாலூகாக்கள்.
5	ஷை பொப்பிலி	பொப்பிலி, சாலூர் தாலூகாக்கள்.
6	ஷை சோடாவரம்	சோடாவரம், அணக்காப்பள்ளி தாலூகாக்கள்.
7	ஷை பார்வதிப்பூர்	பாலகொண்டா, பார்வதிப்பூர் தாலூகாக்கள்.

ராஜமந்தரி ஜில்லா வெட்டரினெரி ஆபிசரின்கீழ் கீழ் கோதாவரி ஜில்லா.

1	சுற்றுப் பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், ராஜமந்தரி.	ராஜமந்தரி, ராமச்சந்திரபுரம் தாலூகாக்கள்.
2	ஷை காக்கநாடா	காக்கநாடா, பித்தாபுரம் தாலூகாக்கள்.
3	ஷை பெத்தாபுரம்	பெத்தாபுரம், தூனி தாலூகாக்கள்.
4	ஷை அமலாபுரம்	அமலாபுரம், ரஸோல் தாலூகாக்கள்.
5	ஷை போலவரம்	போலவரம், சோடவரம், யெல்லவரம் ஏஜன் தாலூகாக்கள்.
6	ஷை பத்ராசலம்	பத்ராசலம், நூகூர் தாலூகாக்கள்.
7	வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன் இன்சார்ஜ், வெட்டரினெரி டிஸ்பன்ஸரி, பத்ராசலம்.	பத்து மைல் ரேடியஸில் உள்ள இடங்கள் பத்ராசலம் தாலூகா.

மேல் கோதாவரி ஜில்லா.

	உத்தியோகத்தின் பெயரும், அவர்களின் தலைமை இடமும்.	எல்லைகள்.
8	சுற்றுப் பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், பீமாவரம்.	பீமாவரம், நரசபூர், தாணுகு தாலூகாக்கள்.
9	ஷை எல்லூர்	எல்லூர், தாடேபள்ளிகூடம், கொவ்வூர் தாலூகாக்கள்.
10	ஷை சிந்தலபூடி..	சிந்தலபூடி தாலூகா.
11	ஷை தனுக்கு	தனுகு தாலூகாவில், தனுக்குவிலிருந்து 8 மைல் ரேடியஸ்குட்பட்ட இடங்கள்.
12	ஷை பாலக்கோல்	நரசபுரம் தாலூகா, பாலக்கோலிலிருந்து 8 மைல் ரேடியஸ்குள் பட்ட இடங்கள்.

பெஜவாடா ஜில்லா வெட்டரினெரி ஆபீசரின் கீழ்.

கிருஷ்ணா ஜில்லா.

1	சுற்றுப் பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், பந்தர்.	பந்தர், திவி தாலூகாக்கள்.
2	சுற்றுப் பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், பெஜவாடா.	பெஜவாடா, குடிவாடா, தாலூகாக்கள்.
3	ஷை நஸ்விட்	நஸ்விட், கன்னவரம் தாலூகாக்கள்.
4	ஷை ஜக்கய்யபேட்	நந்திகாமா தாலூகா, ஜக்கய்யபேட் சப் தாலூகா.
5	ஷை திருவூர்	திருவூர் தாலூகா.
6	வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன் இன்சார்ஜ், வெட்டரினெரி டிஸ்பென்ஸரி, கைக்களூர்.	கைக்களூர் தாலூகா.

குண்டூர் ஜில்லா.

7	சுற்றுப் பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், சாத்தனபள்ளி.	குண்டூர், சாத்தனபள்ளி தாலூகாக்கள்.
8	ஷை ஓங்கோல்	பொன்னூர் சப்-தாலூகாவைத் தவிர பாபட்லா, ஓங்கோல் தாலூகாக்கள்.
9	ஷை விணுகொண்டா	விணுகொண்டா, நரசராவ்பேட்.
10	ஷை நீடுப்ரோலு	தெனுலி, ரேப்பள்ளி, பொன்னூர் உள் தாலூகாவும்.
11	ஷை மச்செரலா	மச்செரலா தாலூகா.

பெல்லாரி ஜில்லா வெட்டரினெரி ஆபீசரின் கீழ்.

பெல்லாரி ஜில்லா.

1.	சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், பெல்லாரி.	பெல்லாரி, ராயதுர்கம், சிறுகொப்ப தாலூகாக்கள்.
2.	ஷை அதோனி	அதோனி, ஆலூர் தாலூக்காக்கள், எம்மிகானூர் சப்-தாலூகா.
3.	ஷை ஹோஸ்பேட்	ஹோஸ்பேட், குட்லுகி தாலூகாக்கள்.
4.	ஷை ஹடகள்ளி	ஹடகள்ளி, ஹார்ப்பனஹள்ளி தாலூகாக்கள்.

கர்நூல் ஜில்லா.

5.	சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், கர்னூல்.	ஆத்மக்கூர் சப்டிவிஷன் இல்லாமல் கர்னூல், நந்திகோட்டூர் தாலூகாக்கள்.
6.	ஷை நந்தியால்	நந்தியால், ஆத்மகூர் சப்டிவிஷன்.
7.	ஷை தோன்	தோன், பட்டிகொண்டா தாலூகாக்கள்.
8.	ஷை மற்காபூர்	மற்காபூர் தாலூகா, எறகொண்டாபாலம் சப்டிவிஷன்.
9.	ஷை கிட்டலூர்	கம்பம் தாலூகா.
10.	ஷை அல்லகடா	சிர்வல், கோயில்குண்டலா தாலூகா.

நெல்லூர் ஜில்லா வெட்டரினெரி ஆபீசரின் கீழ்.
நெல்லூர் ஜில்லா.

உத்தியோகத்தின் பெயரும், அவர்களின் தலைமை இடமும்.	எல்லைகள்.
1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், நெல்லூர்.	நெல்லூர், ராபூர் தாலூகாக்கள்.
2. ஷை கூடூர்	கூடூர், வெங்கிடகிரி, சூலூர்பேட் தாலூகாக்கள்.
3. ஷை புச்சிரெட்டிபாளையம் ..	கொவ்வூர், ஆத்மகூர் தாலூகாக்கள்.
4. ஷை கந்தகூர்	கந்தகூர் தாலூகா.
5. ஷை கனிகிரி	கனிகிரி தாலூகா.
6. ஷை உதயகிரி	உதயகிரி தாலூகா.
7. ஷை பொடிலி	பொடிலி, தார்சி தாலூகாக்கள்.
8. வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன் இன்சார்ஜ், வெட்டரினெரி டிஸ்பென்ஸரி, காவலி.	காவலி தாலூகா.

கடப்பை ஜில்லா.

1. சுற்றுப்பிராயணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், பத்வேல்.	பத்வேல் தாலூகா.
2. ஷை புரொதத்தூர்	புரொதத்தூர் தாலூகா.
3 ஷை ராஜம்பேட்	ராஜம்பேட் தாலூகா.
4. சுற்றுப்பிராயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், கடப்பை.	கடப்பை, சித்தவட்டம், கமலாபுரம் தாலூகாக்கள்.
5. ஷை ராயசோட்டி	ராயசோட்டி, புலிவெந்தலா தாலூகாக்கள்.
6. ஷை ஜம்மல்மடுகு	ஜம்மல்மடுகு தாலூகாவும், கமலாபுரம் தாலூகாவும்.

மதனபள்ளி ஜில்லா வெட்டரினெரி ஆபீசரின் கீழ்.
சித்தூர் ஜில்லா.

1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், மதனபள்ளி.	மதனபள்ளி, வாயல்பாத், புங்கதாஹூர் தாலூகாக்கள்.
2. ஷை சித்தூர்	சித்தூர் தாலூகா.
3. ஷை திருப்பதி	சந்திரகிரி, காலஹஸ்தி.
4. ஷை திருத்தனி	புத்தூர், திருத்தனி தாலூகா.
5, ஷை பால்மேனர்	பால்மேனர், வெங்கிடகிரி கோட்டைசப் தாலூகா.

அனந்தபுரம் ஜில்லா.

1. சுற்றுப்பிராயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், அனந்தபுரம்.	அனந்தபுரம், கல்யாணதுர்கம் தாலூகாக்கள்.
2 ஷை குத்தி	குத்தி, தாத்பத்திரி தாலூகாக்கள்.
3. ஷை தர்மவரம்	தர்மவரம், கதிரி தாலூகாக்கள்.
4 ஷை ஹிந்துபூர்	பெனுகொண்டா, ஹிந்துபூர், மதகசிரா தாலூகாக்கள்.

மதராஸ் ஜில்லா வெட்டரினெரி ஆபீசரின் கீழ்.
செங்கல்பட்டு ஜில்லா.

1. இரண்டாவது வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், சைதாப்பேட்டை.	சைதாப்பேட்டை தாலூகா.
2. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், பொன்னேரி.	பொன்னேரி, திருவள்ளூர் தாலூகாக்கள்.
3. ஷை செங்கற்பட்டு	செங்கற்பட்டு, மதுராந்தகம் தாலூகாக்கள்.
4. ஷை ஸ்ரீபெரும்பூதூர்	காஞ்சீபுரம், ஸ்ரீபெரும்பூதூர் தாலூகாக்கள்.

தென் ஆற்காடு ஜில்லா.

1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினேரி அசிஸ்டெண்டு சர்ஜன், திண்டிவனம்.	திண்டிவனம், ஜின்ஜி தாலூகாக்கள்.
2. ஷை கடலூர்	கடலூர், வில்லுபுரம்.
3. ஷை திருக்கோவிலூர்	திருக்கோவிலூர் தாலூகாவும் கள்ளக்குரிச்சி தாலூகாவும்.
4. ஷை சிதம்பரம்	சிதம்பரம் தாலூகா (ஆறு மைல் வட்டத்திற்குள்பட்டவை).
5. ஷை விருத்தாசலம்	விருத்தாசலம் தாலூகா, சிதம்பரம், 6 மயில் வட்டத்திற்கு மேல்பட்ட கிராமங்கள்.

வேலூர் ஜில்லா வெட்டரினெரி ஆபீசரின் கீழ்.

வட ஆற்காடு ஜில்லா.

உத்தியோகத்தின் பெயரும், அவர்களின் தலைமை இடமும்.	எல்லைகள்.
1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், வேலூர்.	வேலூர், வாலாஜா, அரக்கோணம் தாலூகாக்கள்.
2. ஷி திருவண்ணாமலை	திருவண்ணாமலை, செங்கம், போளூர் தாலூகாக்கள்.
3. ஷி செய்யார்	செய்யார், வந்தவாசி, ஆரணி தாலூகாக்கள்.
4. ஷி திருப்பத்தூர்	திருப்பத்தூர், குடியாத்தம் தாலூகாக்கள்.

சேலம் ஜில்லா.

1. சுற்றுப்பிராயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், சேலம்.	சேலம், ஆத்தூர், ஏர்காடு தாலூகாக்கள்.
2. ஷி நாமக்கல்	நாமக்கல், ராசிபுரம் தாலூகாக்கள்.
3. ஷி தர்மபுரி	தர்மபுரி, ஹரூர் தாலூகாக்கள்.
4. ஷி ஹோசூர் கால்நடை பண்ணை (தலைமை ஸ்தலம் ஹோசூர் காட்டில் பாரம் போஸ்டு).	ஹோசூர் கிருஷ்ணகிரி தாலூகாக்கள்.
5. ஷி திருசெங்கோடு	திருசெங்கோடு, ஓமலூர், மேட்டூர் தாலூகாக்கள்.

கோயம்புத்தூர் ஜில்லா வெட்டரினெரி ஆபீசரின் கீழ்.

கோயம்புத்தூர் ஜில்லா.

1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், கோயமுத்தூர்.	அவனாசி, கோயமுத்தூர் தாலூகாக்கள்.
2. ஷி கோபிசெட்டிபாளையம்.	பவானி, கோபிசெட்டிபாளையம் தாலூகாக்கள்.
3. ஷி திருப்பூர்	ஈரோடு, பள்ளடம் தாலூகாக்கள்.
4. ஷி பொள்ளாச்சி	பொள்ளாச்சி உடுமலைபேட்டை தாலூகாக்கள்.
5. ஷி கொள்ளேகால்	கொள்ளேகால் தாலூகா.
6. ஷி தாராபுரம்	தாராபுரம் தாலூகா.
7. வெட்டனெரி அசிஸ்டெண்டு சர்ஜன் இன்சார்ஜ், வெட்டனெரி டிஸ்பென்ஸெரி. நாத்தகடையூர்	நாத்தகடையூரிலிருந்து 2 மைல் வட்டத்திற்குள் சுற்றுப்பிரயாணம்.

நீலகிரி ஜில்லா.

1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், உதகமண்டலம்.	உதகமண்டலம், கூனூர் தாலூகாக்கள்.
2. ஷி கூடலூர்	கூடலூர் தாலூகா.

கள்ளிக்கோட்டை ஜில்லா வெட்டரினெரி ஆபீசரின் கீழ்.

மலபார் ஜில்லா.

1. சுற்றுபிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், கள்ளிக்கோட்டை.	கள்ளிக்கோட்டை, குரும்பரநாடு தாலூகாக்கள்.
2. ஷி பாலக்காடு	பாலக்காடு தாலூகாவும், பிரிடிஸ் கொச்சியும்.
3. ஷி தலைச்சேரி	சிரக்கால், கோட்டயம் தாலூகாக்கள்.
4. ஷி மனந்தாடி	வையநாடு தாலூகா.
5. ஷி பெரின்தலைமன்ன	வள்ளுவநாடு தாலூகா.
6. ஷி மஞ்சேரி	எற்னடு, பொன்னானி தாலூகாக்கள்.

தென்கன்னடம் ஜில்லா.

1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், கூண்டப்பூர்.	கூண்டப்பூர் தாலூகா.
2. ஷி காசர்கோடு	காசர்கோடு தாலூகா.
3. ஷி மங்களூர்	மங்களூர், உடுப்பி தாலூகாக்கள்.
4. ஷி புத்தூர்	புத்தூர் தாலூகா.
5. ஷி கார்க்கால்	கர்க்கால் தாலூகா.

திருச்சிறுப்பள்ளி ஜில்லா வெட்டரினெரி ஆபீசரின் கீழ்.

திருச்சிறுப்பள்ளி ஜில்லா.

உத்தியோகத்தின் பெயரும், அவர்களின் தலைமை இடமும்.	எல்லைகள்.
1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், முசிரி.	திருச்சிறுப்பள்ளி, லால்குடி, முசிரி தாலூகாக்கள்.
2. ஷை அரியலூர்	உடையார்பாளையம், பெரம்பலூர் தாலூகாக்கள்.
3. ஷை குளித்தலை	குளித்தலை, கரூர் தாலூக்காகள்.

தஞ்சாவூர் ஜில்லா.

1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், தஞ்சாவூர்.	தஞ்சாவூர், பாபநாசம், கும்பகோணம் தாலூகாக்கள்.
2. ஷை மாயவரம்	மாயவரம், சீர்காழி தாலூகாக்கள்.
3. ஷை திருவாரூர்	நாகப்பட்டணம், நன்னிலம் தாலூகாக்கள்.
4. ஷை பட்டுக்கோட்டை	பட்டுக்கோட்டை அரந்தாங்கி தாலூகாக்கள்.
5. ஷை திருத்துரைப்பூண்டி	திருத்துரைப்.பூண்டி, மன்னார்குடி தாலூகாக்கள்

மதுரை ஜில்லா வெட்டரினெரி ஆபீசரின் கீழ்.

மதுரை ஜில்லா.

1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், மதுரை.	மதுரை, மேலூர் தாலுகாக்கள்.
2. ஷை பெரியகுளம்	கொடைக்கானல், பெரியகுளம் தாலுகாக்கள்.
3. ஷை திருமங்கலம்	திருமங்கலம், நிலக்கோட்டை தாலூகாக்கள்.
4. ஷை பழனி	திண்டுக்கல், பழனி தாலூகாக்கள்.

ராமனாதபுரம் ஜில்லா.

1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், சிவகெங்கை.	சிவகெங்கை, அருப்புக்கோட்டை தாலூகாக்கள்.
2. ஷை பரமக்குடி	ராமனாதபுரம், பரமக்குடி, முதுகுளத்தூர் தாலூகாக்கள்.
3. ஷை ஸ்ரீவில்லிபுத்தூர்	ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலூகாக்கள்.
4. ஷை திருப்பத்தூர்	திருப்பத்தூர், திருவாடனை தாலூகாக்கள்.

திருநெல்வேலி ஜில்லா.

1. சுற்றுப்பிரயாணஞ் செய்யும் வெட்டரினெரி அசிஸ்டெண்டு சர்ஜன், கோவில்பட்டி.	கோவில்பட்டி, சங்கரன்கோவில் தாலூகாக்கள்.
2. ஷை திருநெல்வேலி	திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் தாலூகாக்கள்.
3. ஷை நான்குனேரி	நான்குனேரி, திருச்செந்தூர் தாலூகாக்கள்.
4. ஷை தென்காசி	தென்காசி, அம்பாசமுத்திரம், அஞ்சங்கோ, தங்கச்சேரி தாலூகாக்கள்.

32. மதருஸ் வெட்டரினெரி கலாசாலை.

பிராஸ்பெக்டஸ் 1936.

பொது.—இந்தக் கலாசாலையில் கால்நடைத்தொழிலைச்சார்ந்த விஷயங்களை சாஸ்திர ரீதியாகவும், அனுபோக முறைகளிலும் கற்பித்துக்கொடுக்கப் படுகிறது. தற்காலம் உத்திரவான திட்டப்படி இந்தக் கலாசாலைக்கு ஒரு பிரின்ஸிபாலும், எழு லெச்சரர்களும், உதவி லெச்சரர்களும், கீழ்தர உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மதராஸ் கால்நடை இலாகா டைரெக்டர் அவர்களின் பார்வையின்கீழ் காலேஜின் விசாரணை பொருப்பும் ஒழுங்கும் நடத்த பிரின்ஸிபாலுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. கால்நடை சாஸ்திர டிப்ளோமாவுக்குத் தயாராகும்

மாணவர்களுக்கு கற்பனைக்கு வேண்டிய சகல வியாதி சம்பந்தமாயும் மற்றும் இதர சௌகரியங்களும் கொடுக்கப்படுகிறது. இந்தக் கலா சாலையுடன் ஒரு கால்நடை ஆஸ்பத்திரியும் பௌதீக பரிக்ஷணசாலையும் (Laboratory) பொருட்காட்சிசாலையும், புஸ்தகசாலையும், லாடம்கட்டுமிடமும், மாணவர்களின் விடுதியும் இணைக்கப்பட்டிருக்கிறது.

2. **சேர்க்கும் முறை.**—ஜாதிமத பேதமின்றி மாணவர்களைச் சேர்க்கப் படும். சேரவிரும்பும் மாணவர் சேரும் சமயத்தில் 17 வயதுக்கு கீழ் பட்டிருக்கக்கூடாது. 22 வயதுக்கு மேற்பட்டவர்களை சாதாரணமாய் சேர்க் கப்படமாட்டாது. இந்திய அரசர்களின் தேசத்தில் உள்ளவர்களை சென்னை அரசாங்க உத்தரவின்பேரில் சேர்த்துக்கொள்ளப்படும். காலேஜ் பிரின்ஸி பாலும் சர்க்காரால் நியமிக்கப்பட்ட 4 மெம்பர்களும் கூடிய கம்மிட்டியார் மாணவர்களை தேர்ந்தெடுப்பார்கள். சேர விரும்புவோர் மனுக்களை இதன் கடைசியில் காட்டியிருக்கிற நமூனாவில் எழுதி பிரதிவருஷம் ஜூன் மாதம் 15-ம் தேதிக்குள் பிரின்ஸிபாலுக்கு ஷை நமூனாவில் குறிக்கப்பட்டிருக்கிற நற் சாக்ஷி பத்திரங்களுடன் அனுப்பவேண்டியது. மனுதாரின் குறைந்த பொது வானகல்வித்தகுதி சட்டப்படி கீழ்தர உத்தியோகஸ்தர்கள் வேலைக்கு வேண் டிய படிப்புயிருக்கவேண்டும். ஆனால் உயர்தரக் கல்வித் தகுதியுள்ளவர்கள் சிலாக்கியமாய் கருதப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கும் கமிட்டியாரின் முன் பாக ஆஜராகவேண்டுமென்று பொருக்கி எடுக்கப்பட்ட மனுதாரர்களுக்கு, ஆஜராகவேண்டிய இடமும், காலமும் முன்னதாக தெரிவிக்கப்படும். சேர் க்கப்பட்ட மாணவர்கள் இரண்டு மாதம் வரையில் சோதனையில் வைக்கப் பட்டு, திருப்திகரமில்லாமல் போனால் நீக்கப்படுவார்கள்.

3. **படிப்பின் காலம்.**—சாதாரணமாக பதக்கத்துக்கான படிப்பின் காலம் மூன்று வருஷத்துக்கு மேலாகும். பிரதி வருஷத்தில் படிப்பவர்கள் தனித்தனி வகுப்பில் வைக்கப்படுவார். ஒரு வகுப்பிலிருந்து மறு வகுப் புக்கு மாற்றுவது வருஷாந்திர பரீக்ஷையின் பலனைப்பொருத்திருக்கும்.

4. **கல்வியின் பாடக்கிரமம்.**—(i) முதல் வருஷம்.—(1) (Anatomy) அங் காதிபாத சாஸ்திரம்.

(2) ரசாயன சாஸ்திரம் (Inorganic and organic Chemistry).

(3) ஜீவவர்க்க சாஸ்திரம் (Biology), தாவரசாஸ்திரம், விலங்கியல் நூல் (Botany and Zoology) (and) மிருகங்களை கையாடுதல் (Handling of animals).

மிருகங்களைக் கையாடுதல்.—இந்த வருஷத்தில் மாணவர்களுக்கு மிருகங்களை போஷிக்கும் முறைகளையும், அவைகளுடன் பழகி அவைகளை அடக்கி நடத்தும் முறையும், கால்நடைகளைத்தள்ளி நழுவாமல்கட்டி பந்தோ பஸ்து செய்யும் முறையும், தினசரி வழங்கும் ஆயுதங்களின் பெயரும், கருவிகளை உபயோகிக்கும் முறைகளையும் அப்யாச முறையில் கற்பிக்கப்படு கிறது.

விவசாய டிக்ரி பெற்றுள்ள மாணவர் (Biology) ஜீவவர்க்க சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம் ஆகிய இவ்விரண்டையும் இங்கு படித்து பரீக்ஷக்குப் போகவேண்டியதில்லை. அதேமாதிரி பீ.எ. டிகிரியில் (Botany) தாவர சாஸ்திரத்திலோ, ரசாயன சாஸ்திரத்திலோ தேரினவர்கள் அந்த சாஸ்திரத்தை இங்கு படித்து பரீக்ஷக்குப் போகவேண்டியதில்லை.

(ii) இரண்டாவது வருஷம்.—(1) (Histology and Embriology) ஜீவியதசை சாஸ்திரம், கருஉற்பத்தி சாஸ்திரம்.

(2) (Physiology including Biochemistry) ஜீவரசாயனசாஸ்திரம் உள்பட பிராணிவர்க்க தர்மகுண சாஸ்திரம்.

(3) (Pathology, Bacteriology and Immunology) வியாதியின் இயல்பு சாஸ்திரம், ஜீவிய அணு சாஸ்திரம், தொத்துவியாதி பரிகார சாஸ்திரம்.

(4) (Parasitology including Protozoology) தூக்குணி சாஸ் திரமும் அணுவிலங்கியல் நூலும்.

(5) (Pharmacology including Materia medica) மருந்து பதார்த் தகுணநூலும்.

(6) (Surgical anatomy and shoeing) அங்காதி பாதரண வைத்தியமும் லாடங்கட்டுதலும் இவ்வருஷம் மாணவர்கள் ஆஸ்பத்திரி யில் பழகுவதோடு நோயின் மர்மங்களையும் நேரில் அறிந்துகொள்ளுதல்.

மருந்துச்சாலையிலும், லாடமடிக்குமிடத்திலும் வேலை கற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் அங்காதி பாதரணவைத்தியமும் செய்து காண்பிக் கப்படும்.

குறிப்பு.—ஷ (1), (2), (3), (4) கூடசேர்ந்து பரீக்ஷை நடத்தப்படும்.

(iii) மூன்றும் வருஷம்.—(1) (Surgery including Obstetrics soundness and Jurisprudence) ரணவைத்தியம், பிரசவம், ஆரோக்கியம், நீதி நூல்.

(2) (Therapeutics and Texicology) வியாதி சிகிச்சை நூல், அனு விற்றேன்றும் விஷ நூல்.

(3) (Preventive medicine including meat and milk inspection Sanitary law) பால், மாம்சப் பரிசோதனை உள்பட சுகாதாரச் சட்டமும் நோய்த்தடுக்கும் வைத்தியம்.

(4) (Hygiene including Genetics and nutrition) கரு உற்பத்தி சாஸ்திரமும், போஷணமும் அடங்கிய சுகாதாரம்.

இந்த வருஷம் செத்த மிருகங்களின்மேல் ரண சிகிச்சைசெய்து, மருந்து போட்டு கட்டி, வியாதியின் நுட்பங்களை கற்றுககொண்டபின், உயிர் பிராணிகளுக்கு சிகிச்சை செய்துபழகியும், பிணங்களை சோதனை செய்யும் முறையையும் பொதுவாய் தன் தொழிலுக்கு வேண்டிய சகல முறைகளை யும் கற்கவேண்டும்.

எல்லா மாணவர்களும் குதிரை சவாரிசெய்யப் பழகவேண்டும். எவ ரேனும் அனுமதியின்றி சவாரி பழகாமலாவது, இதைப்பற்றிய லெச்சர் களுக்காவது வராமலிருந்தால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

குறிப்பு.—ஷ 2, 3, பரீக்ஷை சேர்த்து நடத்தப்படும்.

5. **சம்பளம்.**—சென்னை ராஜதானியும் கூர்கு தேச மாணவர்கள் வரு ஷம் 1-க்கு ரூ. 90-ம், மற்றவர்கள் வருஷம் 1-க்கு ரூ. 400-ம் சம்பளம் கொடுக்கவேண்டும். சம்பளத்தை முன் பணமாகவே கட்டவேண்டும்.

வருஷாந்திரப் பரீட்சைக்கும், உப பரீட்சைக்கும் தனியே ரூ. 15 கட்ட வேண்டும். ஒவ்வொரு மாணவரும் விளையாட்டு வகைக்கு முதல் டரமில் 3 ரூபாயும், இரண்டாவது டரமில் 2 ரூபாயும் செலுத்தவேண்டும்.

6. **உபகாரச் சம்பளம்.**—ஒவ்வொரு வருஷத்திலும் மாதம் 1-க்கு ரூ. 15 வீதம் நாலு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். ஷ உபகாரச் சம்பளமானது மதராஸ் கல்வி சட்டம் 17-எ அனுபந்தத் தில் சொல்லியபடி தாழ்த்தப்பட்ட ஜாதியாருக்கு இரண்டும், மற்றொன்று எழிய லாயக்குள்ள மகம்மதியமாணுக்கர்களுக்கும், நாலாவது தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து கிறிஸ்து மதத்தில் சேர்ந்த ஒருவனுக்காவது அல்லது அவன் மகனுக்காவது அல்லது பேரனுக்காவது கொடுக்கப்படும்.

லோகல் போர்டுகளில் இருந்தும் எவரேனும் தன் சொந்த வகையி லிருந்தும் உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்ட மாணவர்களுக்கு சர்க்கார் உபகாரச்சம்பளம் கொடுக்கப்படமாட்டாது. தொடர்ச்சியாக நல்ல நடதை யுள்ளவர்களுக்கு மாத்திரம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும்.

7. **டரங்களும் கால அட்டவணையும்.**—பிரதி வருஷமும் மூன்று டரங் கள் உண்டு. ஜூலை முதல் செப்டம்பர் வரை ஒன்று, அக்டோபர் முதல் டிசம்பர் வரை இரண்டாவது, ஜனவரி முதல் மார்ச்சு வரையில் மூனறு வது; வருஷ ஆரம்பத்தில், நடக்கவேண்டிய பாடங்களும், அதன் கால மும் நோடீஸ் போர்ட்டில் பிரசுரம் செய்யப்படும். மாணவர்களும போத கர்களும் அதை அனுசரித்து நடந்துகொள்ளவேண்டும்.

8. **ஓய்வு**—விடுமுறை நாட்கள்.—பலவித பொது விடுமுறை நாட்களைத் தவிற கீழ்கண்ட நீண்டகால விடுமுறைகள் மாணவர்களுக்கு கொடுக்கப் படும்.

மத்திய கோடை விடுமுறை—மூன்று மாதம்.
மைகேல்மஸ்—ஒரு வாரம்.
கிரிஸ்ட்மஸ், ஈஸ்டர்—கெஜெட்டில் பிரசுரமானபடி.

ஓய்வு நாட்களில் மாணவர்கள் ஆஸ்பத்திரி வேலைகளை ஒருவர் மாறி ஒருவர் செய்துவரவேண்டியது. லீவ் உத்திரவு பிரின்ஸ்பாலிடம் பெற்றுக் கொள்ளவேண்டியது. உபகாரச்சம்பளம் பெருபவர்களுக்கு ஒரே தடவை யில் 5 நாளைக்கு மேற்படாமல் காஷுவல் லீவ் கொடுக்கலாம். ஆனுல் ஒரு வருஷத்தில் 10 நாளைக்கு மேற்படக்கூடாது. வேறு விடுமுறைகளுடன் சேர்த்து காஷுவல் லீவ் சம்பளத்துடன் கொடுக்கக்கூடாது. உபசாரத் சம்பளம் பெரும் நோயாளிக்கு 1 மாத லீவைச் தவிர வேறு எவ்வித லீவும் சம்பளத்துடன் கிடைக்காது. ரிஜிஸ்டர் செய்த டாக்டரின் சர்ட்டிபி கேட்டின்பேரில் வியாதியஸ்தருக்கு லீவ் கொடுக்கப்படும்.

9. **பரீகைஷகள்.**—பிரதி வருஷத்திலும் மார்ச்சு மாதம் எல்லா வகுப் புக்கும், வாய்மொழியாகவும், எழுத்து மூலமாகவும் பரீகைஷகள் நடை பெரும். இந்தக் கலாசாலையில் குறித்த காலம் வாசித்தவர்களும், அந் தந்த் வருஷம் நடக்கும் லெச்சர்களிலும் அனுபோக பயிற்சியிலும் முக்கால் வாசிநாட்கள் ஆஜராயிருந்தவர்களுமே இந்த பரீகைஷக்குப்போக தகுதியுள்ள வர்களாவார்கள். சப்ளிமெண்டரி பரீகைஷகள், முதல் அல்லது இரண்டாவது வகுப்புகளிலிருந்து தற்கால ரீதியாய் உயர்த்தப்பட்ட மாணவர்களுக்கும், பரீகைஷயில் தவறினவர்களுக்கும், கடைசி வருஷ பரீகைஷக்கு அனுமதிக் கப்பட்டுபோகாத மாணவர்களுக்கும், அக்டோபர் மாத ஆரம்பத்தில் நடத் தப்படும்.

10. **டிப்ளோமா பதக்கம்.**—3 வருஷம் காலேஜில் படித்து கடைசி பரீட்சையில் தேறினவர்களுக்கு கால்நடை சாஸ்திரி என்று டிப்ளோமா கொடுக்கப்படும்.

11. **விடுதி.**—120 மாணவர்களுக்கு இடம் கொடுக்கும் விடுதி இக்கலா சாலையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. பெற்றோர்களுடனும், இதர பந்துக் களுடன் தங்கும் மாணவரைத்தவிர மற்றெல்லோரும் கலாசாலை விடுதி யிலேயே வசிக்கவேண்டும். மின்சாரம், தண்ணீர், வரி தவிர விடுதி யில் வசிக்கும் ஒவ்வொரு மாணவரும் மாதம் 1-க்கு 3 ரூபாய் குடிக்கூலி யும், 8 அணு பொது நிதி வகைக்கும் கொடுக்கவேண்டும்; இதைத் தவிற ஒவ்வொரு மாணவரும், குடிக்கூலி, மின்சாரத்திற்கு ரூ. 1 மு ல் $1\frac{1}{2}$ வரை யிலும் தண்ணீருக்கு 8 அணு முதல் 1 ரூபாய் வரையில் வரி முதலிய வ க்கு கட்டவேண்டும். மாசம் 1-க்கு சாப்பாட்டு வகைககு ஒரு மாண வன் ரூ. 15 முதல் ரூ. 20 வரை கொடுக்கவேண்டும்.

13. **காலேஜில் தேறியவர்களின் பிழைப்பு வழிகள்.**—மேற்படி காலே ஜில் தேறி பதக்கம் பெற்றவர்கள் கால்நடை அஸிஸ்டெண்ட் சர்ஜன் வே லைக்கு லாயக்காவார்கள். ஆனுல் அவர்களுக்கு சர்க்காரால் கட்டாயம் உத்தியோகம் கொடுக்கப்படுமென்ற உத்தரவாதமில்லை. தவிற முனிசிபல் கால்நடை இன்ஸ்பெக்டர்களாகவும், சொந்த ஆஸ்பத்திரிகளிலும், இந்திய அரசர் நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளிலும் வேலை கிடைக்கும். தேறின மாணவர்களுக்கு பொருத்தமான வேலை சம்பாதித்துக்கொடுக்க பிரின்ஸி பால் தக்க முயற்சி எடுத்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிருர்.

மதராஸ் கால்நடை கலாசாலையில் சேர அப்ளிகேஷன் பாரம்.

(பிரின்ஸிபாலுக்கு ஜூன்மீ 15உக்குள் அனுப்பவேண்டியது.)

1 விண்ணப்பதாரரின் பூரா பெயர்.
2 தொழில்.
3 பிறந்த இடம் (பிறந்த ஊரும், ஜில்லாவையும் குறிக்கவேண்டும்).
4 பெற்றோர் அல்லது கார்டியன் பெயர்.
5 வசிக்குமிடம்.

6 பெற்றோர் அல்லது கார்டியன் தொழில்.
7 கடைசியாக படித்த பள்ளிக்கூடமும், வகுப்பும்.
8 தேறின உயர்ந்த பரீக்ஷையும், தேறின தேதியும்.
9 பேசும் தாய் பாஷை.
10 வயது, பிறந்த தேதி.
11 மதம் (ஹிந்து, பிராமணர், அல்லது பிராமணரல்லாதாவர், மகம்மதியர், இந்திய கிருஸ்துவர், ஆங்கிலேய இந்தியர், ஐரோப்பியர்), தாழ்த்தப்பட்ட அல்லது முன்னேற்றமடையாத ஜாதியார் எந்த வகுப்பைச் சேர்ந்தவரென்று எழுதவேண்டும்.
12 உயரம், மார்பின் சுற்றளவு.
13 விண்ணப்பதாரரின் முழு விலாசம்.

விண்ணப்பத்தின் தேதி,

விண்ணப்பதாரரின் கையெழுத்து.

குறிப்பு.—விண்ணப்பத்துடன் அடியிற்கண்ட யோக்கியதாப் பத்திரங்களைச் சேர்த்து அனுப்ப வேண்டும். (1) வயது, (2) சரீரத்தகுதி ஸர்டிபிகேட் அஸிஸ்டெண்டு சர்ஜனுக்கு கீழ்ப்படாத வைத்தியர்களிடமிருந்து வாங்கவேண்டும். (3) விண்ணப்பதாரின் சன்மார்க்கப் பத்திரம் அவர் ஸ்கூலின் அல்லது காலேஜ் அல்லது ஆபீஸ் தலைவரிடமிருந்து, (4) மெட்ரிகுலேஷன் அல்லது எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட் அல்லது புஸ்தகத்தின் மார்க்குப் பதிந்த உண்மையான பிரதி.

சர்க்கார் உத்தியோகத்திற்கு போவதற்கு எவ்வளவு மார்க்குகள் தேவையோ அவ்வளவு மார்க்குகள் பெற்றிருக்கவேண்டும். கலாசாலையில் சேர்த்துக்கொள்ளத்தகுதி பெற்ற விவரமும் தெரிவிக்கவேண்டும். மற்றவர்கள் அவர்களுடைய ஸர்டிபிகேட்டோ அல்லது எந்த போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் எந்தப் பக்கத்தில் அவர்கள் பேர் போடப்பட்டிருப்பதென்று தெரிவிக்கவேண்டும்.

எம். அனந்தநாராயண ராவ்,
பிரின்சிபால், மதராஸ் வெட்டரினெரி காலேஜ்.

33. மதராஸ் வெட்டரினெரி காலேஜ்.

பி. வி. எஸ். சி. டிகிரி படிப்பு 1936, பிராஸ்பெக்டஸ்.

மதராஸ் யுனிவர்சிட்டியைச் சேர்ந்த பாச்சலர் ஆப் வெட்டரினெரி சயன்ஸ் (B. V. Sc.) என்ற டிகிரி பரீக்ஷை படிப்பு, வெட்டரினெரி காலேஜில் 1936-வது கல்விக்குறிய வருஷத்திலிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்படும். ஷெ டிகிரி முதலாவது வருஷப்படிப்பு 1936-ம் வருஷம் ஜூலை மீ 2உ ஆரம்பிக்கப்படும். ஷெ டிகிரி படிப்புக்கு சேர விரும்பும் மாணக்கர்கள் வெட்டரினெரி காலேஜ் டிப்ளமா படிப்பிற்குச் சொல்லியிருக்கும் நிபந்தனைகளைப் பெற்றவர்களாயும், மதராஸ் யுனிவர்சிட்டி, இண்டர்மீடியேட் பரீக்ஷையில், ரசாயன சாஸ்திரமோ அல்லது தாவர சாஸ்திரமோ எடுத்துத் தேறினவர்களாக இருக்கவேண்டும்; அல்லது மதராஸ் யூனிவர்சிட்டி சிண்டிகேட்டாரால் சமானமுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்பட்ட வேறு பரீக்ஷையில் தேறினவர்களாகவாவது இருக்கவேண்டும்.

2. பி.வி.எஸ்.சி. டிகிரி பரீக்ஷை படிப்பு மூன்று வருஷமும், ஒரு டர்மும் சேர்ந்துள்ளதாயிருக்கிறது. ஷெ படிப்பு தொடர்ச்சியாக பத்து கல்விக்குரிய டர்முகளைக் கொண்டுள்ளது. கல்வியின் பாடக்கிரமமும், தொகையும், மதராஸ் யூனிவர்சிட்டியாரால் அந்தந்த சமயத்தில் விதிக்கப்பட்ட பிரகாரம் இருக்கும். டிக்கிரி படிப்புக்கு முதல் வருஷக்கடைசியில் (3 டர்ம்ஸ்), ஆரம்பப் பரீக்ஷையும், இரண்டாவது வருஷக்கடைசியில் (3 டர்ம்ஸ்) இண்டர்மீடியட் பரீக்ஷையும், மூன்றுவது வருஷக் கடைசியில் (4 டர்ம்ஸ்) கடைசி பரீக்ஷையும் உண்டு.

3. பி.வி.எஸ் சி. முதல் வருஷ ஆரம்பப் பரீக்ஷக்குரிய பாடங்களாவது, (i) ஜீவ வர்க்க சாஸ்திரமும், (ii) ரஸாயன சாஸ்திரமும்.

மதருஸ் யூனிவர்சிட்டி பி.ஏ.,பி.எஸ்ஸி., பி.எஸ்.சி. ஆனர்ஸ், பி.ஏ. ஆனர்ஸ் பரீக்ஷையில் ரசாயன சாஸ்திரமாவது, விலங்கியல் நூலாவது (Zoology) முக்கியமான பாடமாய் எடுத்துத்தேறின மாணவர்களுக்கும், சிண்டிகேட்டாரால் சமானமுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்பட்ட வேறு எந்த இந்தியன் யூனிவர்சிட்டி பரீக்ஷகளில், பாடங்களிலும், போகவேண்டியதை விட்டு நீக்கப்படுவார்கள். ஆனால் ஷை மாணுக்கர்கள் பூரா பரீக்ஷக்கும் விதிக்கப்பட்ட பணத்தைக் கட்டியாகவேண்டும்.

4. பி.வி.எஸ்சி. இரண்டாவது வருஷம் (3 டர்ம்) இண்டர்மீடியட் படிப்புக்குள்ள பாடங்களாவது (i) ஜீவ ரஸாயன சாஸ்திரம், ஜீவிய தசை சாஸ்திரம் உள்பட பிராணி வர்க்க சாஸ்திரம்.

(ii) வியாதியின் இயல்பு சாஸ்திரம், ஜீவிய அணு சாஸ்திரம், தொத்து வியாதி பரிகார சாஸ்திரம்.

(iii) தூக்குணி சாஸ்திரமும், அணு விலங்கின நூலும்.

5. மூன்ருவது வருஷம் பி.வி.எஸ்சி. டிக்கிரிக்கு உரிய படிப்புகள் :

(i) நோய் தடுக்கும் வைத்தியம், (ii) பால் மாமிச பரிசோதனை, (iii) சுகாதாரம்.

மதருஸ் கவர்ன்மெண்டாரால் அல்லது சிண்டிகேட்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்டதும், விதிக்கப்பட்டபடி பாடங்களை வெட்டரினெரி காலேஜில் கற்றுள்ளவர்களும், வெட்டரினெரி சயன்ஸ் டிப்ளமா பெற்றவர்களும், பி.வி.எஸ்சி. ஆரம்பப்பரீக்ஷயிலும் தேறின மாணவர்களுமே பி.வி.எஸ்சி. கடைசிப்பரீக்ஷக்குப் போக அனுமதிக்கப்படுவார்கள்.

6. கீழ் கண்டபடிக்கு டிக்கிரி கோர்ஸ் மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூலிக்கப்படும் :—

	சென்னை ராஜதானியிலிருந்து வரும் மாணுக்கர்கள், ரூ.	சென்னை ராஜதானிக்கு வெளியிலிருந்து வரும் மாணுக்கர்கள். ரூ.
1-வது வருஷம்	120	430
2-வது வருஷம்	120	430
கடைசி வருஷம் (4 டர்ம்ஸ்) ..	150	460

7. கீழே கொடுத்திருக்கும் அப்ளிகேஷன் பாரத்தில் சேர விரும்பும் மாணுக்கர்கள் ஷை காலேஜ் பிரின்சிபாலுக்கு ஜூன்மீ 15உக்கு முன்பாக அனுப்பவேண்டும்.

பி.வி.எஸ்.சி. டிக்கிரி படிப்பிற்கு, மதருஸ் வெட்டரினெரி கலாசாலையில் சேர—அப்ளிகேஷன் பாரம்.

(பிரின்சிபாலுக்கு ஜூன்மீ 15உக்குள் அனுப்டவேண்டியது)

1 விண்ணப்பதாரரின் பூராப்பெயர்.
2 பெற்றோர் அல்லது கார்டியன் பெயர்.
3 பிறந்த இடம்.
4 கடைசியாகப்படித்த பள்ளிக்கூடமும், வகுப்பும்.
5 தேறின உயர்ந்த பரீக்ஷயும், தேறின தேதியும்.

6 மதருஸ் யூனிவர்சிட்டி இண்டர்மீடியட் பரீக்ஷயிலாவது அல்லது சிண்டிகேட்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பரீக்ஷகளிலாவது, ஆப்ஷனலாக எடுத்துக்கொள்ளப்பட்ட பாடங்கள்.

7 வயது, பிறந்த தேதி.
8 டிப்ளமா படிப்புக்கு சேர்க்க அப்ளிகேஷன் அனுப்பிய தேதி.
9 விண்ணப்பதாரின் பூரா மேல் விலாஸம்.

அப்ளிகேஷன் தேதி,

விண்ணப்பதாரின் கையெழுத்து.

எம். அனந்தநாராயண ராவ்,
பிரின்சிபால், மதருஸ் வெட்டெரினெரி காலேஜ்.

1936-ம் வருஷம் மேமீ 4உ.

III. கூட்டுறவு இலாகா.

34. ஐக்கியத்தின் பத்து விஷயங்கள்.

1. ஐக்கியமென்பது ஒற்றுமை.

2. இவ்வொற்றுமை தானாக சுயேச்சையாக வரவேண்டும்.

3. இவ்வைக்கியபாவம் எழ்மை ஸ்திதியில் இருப்பவர்களுக்கு அவசியம்.

4. அப்படியிருந்தால் ஐக்கிய முறையால் நல்ல நிலைமைக்கு வரலாகும்.

5. அவரவர்களுடைய நாணயம், யோக்கியதை, உழைப்பு இவைகளைக் கொண்டுதான் ஐக்கியம் ஓங்கும்.

6. ஐக்கியத்தில் சம உரிமை முக்கியமானது " எல்லோரும் ஓர் நிறை ".

7. ஐக்கியத்தில் ரகசியத்திற்கு இடமில்லை. நம்பிக்கையும் நாணயமுந்தான் அவசியம்.

8. ஐக்கியத்தில் ஒவ்வொரு மெம்பரும் சங்கத்தின் க்ஷேமத்தைக் கருத வேண்டும்.

9. ஐக்கியத்தில், அங்கத்தினர்கள் ஒவ்வொருவரின் சுகதுக்கங்களையும் சங்கம் அறியவேண்டும். அவ்வாறே அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து சங்கத்தை பலப்படுத்தி அங்கத்தினர்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும்.

10. மொத்தமாக ஐக்கியத்தால் அங்கத்தினர்கள் நல்ல லக்ஷியங்களை அடைந்து க்ஷேமமடையலாம்.

35. ஐக்கிய சாரசங்கிரஹம்,

1. ஐக்கிய சங்கம் தர்ம சத்திரமல்ல. வியாபாரத்திலும் உயர்ந்த வியாபார ஸ்தலமது.

2. தவருமல் செலுத்தினல் கடன் தயங்காமல் கிடைக்கும்.

3. பிரதி மாதமும் பாங்கியில் ஒரு ரூபாய் செலுத்து. எரி ஜலத்தை எதிர் பாராமல் பண மாசூல் வருத்து.

4. மாதம் ஒரு ரூபாய் வீதம் கட்டுமே. 360 மாதங்களில் அது ரூபாய் ஆயிரம் கொணர்ந்து கொட்டுமே.

5. விரைவாய் கட்ட வருவாய் பெருகும்.

6. விற்றலிலும், வாங்கலிலும் சவகார் அடையும் லாபத்தை, உமதாக்கிக்கொள்ளும் ஐக்கிய சங்கத்தை சேர்ந்தது.

7. நாணயத்தின் அருமை தெரியாதவர்களுக்கு நயமாய் கடன் கொடுப்பது அவர்கள் நாசமடைவதற்கே.

36, தூத்துக்குடி கூட்டுறவு வர்த்தக சங்கம் (லிமிடெட்) நெ. 0·831, தூத்துக்குடி.

[1912-ம் வருஷத்திய 2-வது ஆக்ட்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.]

மெம்பர்களின் பருத்தியை வியாபாரம் செய்துகொடுப்பது இச்சங்கத்தின் முக்கியமான நோக்கம். பருத்தியை ஈடாக வைத்துக்கொண்டு மெம்பர்களுக்குக் கடன் கொடுப்பதுண்டு. உயர்தரமான கொட்டை எடுத்த பஞ்சும், கம்போடியா பருத்தி விதைகளும், கருங்கண்ணி பருத்தி விதைகளும், அநுகூலமான விலைக்கு எப்பொழுதும் கிடைக்கும். இதர விவரங்களைப் பற்றி சங்கத்துக்கு காரியதரிசியிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

37. தென் ஆற்காடு செண்ட்ரல் கூட்டுறவு நிலக்கடலை வியாபாரச் சங்கம் (லிமிடெட்).

நிலக்கடலை பயிரிடும் விவசாயிகள்தானே உதவிசெய்து கொள்ளுங்கள்.

தென் ஆற்காடு செண்ட்ரல் கூட்டுறவு நிலக்கடலை வியாபாரச் சங்கமானது கூடலூர் ஒ.டி., விருத்தாசலம், திருக்கோயிலூர் இம்மூன்று இடங்களிலும் கிடங்குகள் ஏற்படுத்தியிருக்கிறது. ஒவ்வொரு கிடங்கும் வேர் ஹவுஸ் ஆபீசர் என்ற பெயருள்ள ஒரு கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் அல்லது விவசாய டிமான்ஸ்ட்ரேடர் மேல்பார்வையில் இருக்கிறது. இவ்வுத்தியோகஸ்தர் விவசாயிகள் கிடங்குக்குக் கொண்டுவரும் நிலக்கடலையை சரியான திராசில் நிறைபோட்டு, விற்பனைக்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறார். நிலக்கடலையை கள்ளத் திராசில் நிறுத்தி எடையில் மோசம் போகாதபடி விவசாயிகளுக்கு இவ்வுத்தியோகஸ்தர் லாபம் செய்துவைக்கிறார். இவ் வியாபாரத்திலேயே நெருங்கிப் பழகி வருவதால் விவசாயிகள் கொண்டு வரும் சரக்கிற்கு, யார் மேலான விலை கொடுத்து வாங்குவார் என்பது இவ்வுத்தியோகஸ்தருக்கு தெரியும். அதிக விலை கிடைக்கும் என்ற நோக்கத்துடன் விவசாயி தன் சரக்கை விற்காமல் நிறுத்தி வைப்பதாயிருந்தால், இவ்வுத்தியோகஸ்தர் ஷை சரக்கை கிடங்கிலேயே வைக்க இடங் கொடுத்து, வேண்டிய தருணத்தில் விற்கச் செய்கிறார். தவிர, வேண்டுபவர்களுக்கு கிடங்கில் வைத்திருக்கும் நிலக்கடலை சரக்கை ஈடாக வைத்துக் கொண்டு வியாபாரச் சங்கத்திலிருந்து கடன் வாங்கியும் கொடுக்கிறார். தென் ஆற்காடு ஜில்லாவில் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் நல்ல ஸ்திதிக்கு வர விரும்பினால், இச்சங்கத்தில் ரூ. 1 கொடுத்து ஒரு பங்கு எடுத்துகொண்டு நிலக்கடலையை இந்த கிடங்கிற்கு கொண்டுபோகலாம். கிடங்கின் மூலமாய் விற்பனை செய்யும் கடலைப்பயிற் ஒவ்வொரு பாரத்திற்கும் ரூ. 0–4–0 கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், விவசாயிகளுக்கு அதனால் லாபம் ஏராளமாக கிடைக்கிறது. விவசாயிகளுக்கு சாகுபடி செய்வதற்காக பண உதவி வேண்டுமானால், அவரவர்கள் ஊரிலிருக்கும் ஐக்கியச் சங்கத்தில் சேர்ந்து குறுகிய காலக் கடன் பெற்றுக் கொள்ளலாம். விவசாயிகள் தற்சமயம் அனுபவித்துவரும் கஷ்டமான நிலைமையையும் விலைவாசிகள் இறங்கிப் போனதையும் உத்தேசித்து, அவர்கள் பயிர்ச் சிலவு செய்ததுபோக ஏதோ சொல்ப லாபமாவது கிடைப்பதற்காக நிலக்கடலை சாகுபடி கடனுக்கு 100-க்கு வருஷம் 1-க்கு ரூ. 9–6–0 ஆக இருந்த வட்டியை ரூ. 7–8–0 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. சாகுபடிக்காக கொடுக்கப்பட்ட கடன்களை, விவசாயிகளிடமிருந்து அவர்கள் பண்டங்களை விற்கும்போது அவர்களுக்கு சிரமம் கொடுக்காமல் சுலபமாக வசூலித்துக்கொள்ளலாம். விவசாயிகள், இக்கிடங்குகள் அவர்கள் நன்மைக்காக ஏற்படுத்தி இருக்கின்றன என்று உணர்ந்தும், சாகுபடிச் செலவுக்காக வேண்டிய பணத்தை உள்ளூரிலிருக்கும் சங்கத்தின் உதவியினால் அடைந்தும், அநேகமாக எல்லா விவசாயிகளும் அவர்கள் நிலக்கடலையை இவ்வியாபாரச்சங்கத்தின் கிடங்குகள் மூலமாக விற்பனை செய்தும்வந்தால் நிலக்கடலையின் விலையை உயர்த்த வழி பிறக்கும். அதனால் பணக் கஷ்டமும் குறையும்.

விவசாயிகளுக்கு இக்கிடங்குகளினால் ஏற்பட்டிருக்கும் அநுகூலங்களை, கீழே குறிக்கப்பட்ட 3 கிடங்குகளில் கடந்த மூன்று வருஷங்களில் நடந்த வியாபாரத்தின் மதிப்பால் தெரிந்துகொள்ளலாம்.

கிடங்குகளின் மூலமாய் விற்பனை செய்யப்பட்ட நிலக்கடலை பயிரின் கிரயம்.

	1933.	1934.	1935.	1936 (30–4–36) வரை.
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
விருத்தாசலம்	13,535	25,263	1,29,788	97,383
கடலூர்	21,911	45,097	58,775	27,959
திருக்கோயிலூர்	26,631	14,444	50,243	29,922
மொத்தம் ..	62,077	85,804	2,38,806	1,55,264

38. அனகாபல்லி ஈட்டுக் கூட்டு விற்பனைச் சங்கம் (லிமிடெட்).

விசாகபட்டணம் ஜில்லாவில் விசேஷமாக கரும்பு பயிர் செய்வது அனகாபல்லி, சோடாவரம் என்ற இரண்டு தாலூகாக்களில்தான். அனகாபல்லி ஈட்டுக்கூட்டு விற்பனைச்சங்கம் ஸ்தாபிப்பதற்குமுன், பயிரிடுபவர்கள் தங்கள் வெல்ல மாசூலை விற்க, அங்கு வியாபாரம் நடத்திவரும் மண்டி வியாபாரிகளின் தயவையே எதிர்பார்த்து, அவர்களின் லாபத்தையே பெருக்கிக் கொண்டுவர நேரிட்டது. ரயத்துகளுக்கு இருந்த இக்கஷ்டத்தை நீக்கும் பொருட்டு, 1927-ம் வருஷம் மார்ச்சு மீ 13௳, அனகாபல்லி ஈட்டுக்கூட்டு விற்பனை சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் ரயத்துகளுக்கு தாராளமாகக் கடன் கொடுத்தும் அவர்களின் ஏஜெண்டாக இருந்து வெல்ல மாசூலை விற்பனை செய்தும் வருகிறது. ஆரம்பித்த நாள் முதலாக இச்சங்கம் மிக்க நன்ருக வேலை செய்து நல்ல பெயர் பெற்றிருக்கிறது. இதில் 165 தனி அங்கத்தினர்களும், 63 சங்கங்களும் மெம்பர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில் வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை ரூ. 4,530 சுமார் ரூ. 1,73,033 வரையிலும் ஜில்லா பாங்கியிலிருந்து கடனுகவும் கேஷ் க்ரெடிட்டாகவும் வரவழைத்துக்கொடுத்து, வருஷக்கடைசியில் திருப்பிச்செலுத்தப்பட்டிருக்கிறது. இச்சங்கம் ரூ. 1,55,485 பொருமான அநேக ரகமான வெல்லத்தை விற்று ரூ. 742-11-0 லாபமடைந்திருக்கிறது. 1935-ம் வருஷத்தில் ஜூன் முடிவு வரையிலும் 113,056 மணங்கு வெல்லம் விற்று இருக்கிறது. எந்த விதமான வெல்லம் வேண்டுமாலுைம், வெல்ல மாசூல் காலமாகிய டிசம்பர் மாத முதல் மே மாதம் வரையில், இச்சங்கத்தில் நியாயமான விலைக்குக் கிடைக்கும். இதர விவரங்களைப்பற்றி, இச்சங்கத்துக் காரியதரிசியிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

39. திருப்பூர் ஐக்கிய வியாபார சங்கம் (லிமிடெட்), கோயமுத்தூர் ஜில்லா.

கோயமுத்தூர் ஜில்லா திருப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திருப்பூர் ஐக்கிய வியாபார சங்கத்தின் முக்கிய நோக்கம் விவசாயிகளின் அறுவடையான மகசூல்களுக்கு நல்ல விலை சம்பாதித்துக்கொடுக்கவேண்டிய பிரயத்தனங்களை எடுத்துக்கொள்ளல், பிரதி விவசாயியும் தம்தம் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நாணயச்சங்கம், விதைச்சங்கம் மூலமாயும் தனிப்படையாயும் இச்சங்கத்தால் கிடைக்ககூடிய பலனை அடையலாம்.

மெம்பர்களின் சௌகரியத்திற்கென்றே அவர்கள் சரக்குகளை சேமித்து பந்தோபஸ்துபடுத்திவைப்பதற்காக ரூ. 8,000ல் ஓர் கிடங்கு கட்டப்பட்டிருக்கிறது. மகசூல்களை ஷை கோடவுனில் பந்தோபஸ்துசெய்து ஈடுகாட்டும் மெம்பர்களுக்கு சரக்கீட்டுக்கடன்கொடுத்துதவி நல்ல விலை வரும்போது சங்கம் விற்றுக்கொடுக்கிறது.

இச்சங்கத்தில் முக்கியமாக கொதுவைவைக்கப்படும் சரக்குகள் பலரகம் பருத்தி, பஞ்சு இவைகளாவன. சொல்பமாக கொதுவைவைத்து சங்கத்தின்மூலம் விற்பனையாகும் சரக்குகள் மிளகாய், ராகி, கொள்ளு, கொத்துமல்லி இவை போலாவன.

1935-ம் வருஷத்தில் விதை உற்பத்திபண்ணைகளில் சேருத விவசாயிகளின் (non seed farm) பருத்தி 2,237 பொதியும், பஞ்சு 138 கண்டியும் விதை உற்பத்தி பண்ணையில் சேர்ந்த விவசாயிகளின் பஞ்சு 1,263 கண்டியும் சங்கத்தின்மூலம் லாபகரமாக விற்பனை செய்யப்பட்டன. ஷை வருஷத்தில் சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்ட மெம்பர்களுடைய எல்லா சரக்குகளும் சேர்ந்து ரூ. 3,66,308 ஆகும். இதர ஜில்லாக்களாகிய சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சினுப்பள்ளி இவைகளிலிருந்துவரும் பருத்திபஞ்சுகளையும் விற்பனைக்காக இச்சங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது.

இச்சங்கமானது இந்த ஜில்லா முழுவதும் பருத்தி பயிரிடுவோர்க்கு கூடுமானவரை ஒரேவிதமான உயர்ந்த நயம் பருத்தி விளைவிக்கச்செய்யும் பொருட்டு நல்ல விதைப்பருத்திக்கொட்டை தயார்செய்து சப்ளைசெய்வதற்காக CO. 2 (கம்போடியா பருத்தி) விதை பெருக்குமுறை ஐந்து வருஷத்திற்கு வேலைசெய்ய இச்சங்கம் ஏற்றுக்கொண்டு வேலைசெய்யப்பட்டுவருகிறது. இந்தவேலை முறையில் முதல்வருஷத்தில் 5,000 மூட்டையும் அடுத்த பிரதி வருஷத்திலும் 5,000 மூட்டை சேர்த்தும் கடைசி வருஷத்தில் 25,000 மூட்டை விதைப்பருத்திக்கொட்டை தயாரித்து பருத்தி விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படல்வேண்டும்.

1935-ம் வருஷத்தில் விவசாய இலாக்காவால் பரீக்ஷிக்கப்பட்ட விதைப் பருத்திக்கொட்டை 13,665 மூட்டைகள் சங்கம் விலைக்கு வாங்கி கோயமுத்தூர் இன்னும் மற்ற ஜில்லாக்களிலும் விநியோகம் செய்தது. உயர்தரமான விதைப்பருத்திக்கொட்டை விநியோகம் செய்யப்பட்டவர்களிடமிருந்து 8,183 பொதி பருத்தி சேகரிக்கப்பட்டது. இப்பருத்தியை அறைத்து பஞ்சாக மாற்றி மார்க்கட்டு நிலவரத்துக்குமேல் கண்டி 1-க்கு ரூ. 10 வீதம் விற்பனை செய்யப்பட்டது.

ஷை திருப்பூர் ஐக்கிய வியாபார சங்கத்தின் அபிவிருத்தியை முன்னிட்டு அதன் உதவிச்சங்கமாக திருப்பூர் பருத்தி விவசாயிகளின் சங்கம் என்று ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு வேலை செய்து வருகிறது. இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் பருத்தி பயிரிடுவோர்களுக்கு பயிர் சிலவுக்காக கடன்கொடுத்துதவுதல். இச்சங்கம் 1935-ம் வருஷத்தில் ரூ. 25,085 மெம்பர்களுக்கு கொடுத்து இவர்களுடைய பருத்தி மகசூலை ஐக்கிய வியாபார சங்கத்தில் கொண்டு சேர்த்து விற்பனைசெய்து விற்பனைத்தொகையிலிருந்து கடன் வசூலிக்கப்பட்டது.

40. கோயமுத்தூர் ஐக்கிய அச்சுக்கூடம் லிமிடெட், நெ. K. 678.

எல்லா ஐக்கிய சங்கங்களுக்கும் தேவையும் உபயோகமுள்ளதுமான புஸ்தகங்கள், பாரங்கள் சப்ளைசெய்யும் நோக்கத்தை முன்னிட்டு 1933-ம் ௵த்தில் கோயமுத்தூர் ஐக்கிய அச்சுக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டது. 1935-ம் ௵ ஜூன்மீ 30உ இச்சங்கத்தில் 4,540 பங்குத்தொகையுடன் 38 நபர்களும், 47 சங்கங்களும் மெம்பர்களாயிருந்தார்கள். 1934–35-ம் ௵த்தில் இவ்வச்சுக்கூடம் ரூ. 10,247 பொறுமான அச்சுவேலைகள் ஏற்றுக்கொண்டு முடித்துக்கொடுத்தது. இச்சங்கம் சொல்பமாக ஸ்டேஷனரி சாமான்களும் விற்பனை செய்தது.

கோயமுத்தூர் தமிழ்நாடு கூட்டுறவு பெடரேஷன் பிரசுரிக்கப்படும் பக்ஷ "கூட்டுறவு" என்ற வெளியீடு இந்த அச்சுக்கூடத்தில்தான் அச்சடிக்கப்படுகிறது. இந்த அச்சுக்கூடத்தினால் மெம்பர்கள் மெத்த அனுகூலங்களடைந்துகொண்டு வருகிறார்கள்.

41. நீலகிரி ஜில்லா உருளைக்கிழங்கு சாகுபடி செய்வோர்களின் லோன் அண்டு சேல் சொசைடி லிமிடெட், நெ. K. 708.

நீலகிரி ஜில்லா உருளைக்கிழங்கு சாகுபடி செய்வோர்களின் லோன் அண்டு சேல் சொசைடி நீலகிரி ஜில்லா உதகமண்டலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் மெம்பர்களுக்கு குறைந்த விலைக்கு உரம் சப்ளை செய்வதும், கிழங்கு விற்பனையில் இருக்கும் மத்திய வியாபாரிகளை நீக்குவதும் ஆகும். ஒவ்வொரு உருளைக்கிழங்கு சாகுபடி செய்யும் நபரும் ஷை சங்கத்தில் மெம்பராகச்சேர்ந்தோ அல்லது தான் மெம்பராக இருக்கும் கிராம ஐக்கிய நாணய சங்கத்தின் மூலமாகவோ இச்சங்கத்தின் அனுகூலங்களை அடையலாம்.

1936-ம் வருஷம் மார்ச்சு-ஏப்ரல் போகத்தின்போது ரூ. 51,042 விலையுள்ள 4,401 உரம் மூட்டைகள் சங்கத்தின் மூலமாக விவசாயிகளுக்கு சப்ளை செய்யப்பட்டன.

இதுவரையில், இச்சங்கம் மெம்பர்களுக்குத் தேவையான உரத்தை சப்ளை செய்துகொண்டு வருகிறது. லாபகரமாக உருளைக்கிழங்கை விற்க வேண்டிய ஏற்பாடுகள் செய்வதைப்பற்றி விசாரணை நடந்துவருகிறது.

சங்கத்தில் ரூ. 1,515 பங்குத்தொகையுடன் 151 நபர்களும் 18 சங்கங்களும் மெம்பர்களாயிருந்து வருகிறார்கள்.

42. லால்குடி (திருச்சிறுப்பள்ளி ஜில்லா) சிவஞான ஐக்கிய விவசாய சங்கம், லிமிடெட், நெ. R. 171.

இச்சங்கத்தின் விவகார எல்லையிலுள்ள குடியானவர்களுக்கும், மிராஸ்தாரர்களுக்கும் நூதன விவசாய அபிவிருத்தி முறைகளை கற்பிப்பதற்கும் சிறந்த எரு, விதை முதலியவைகளை விற்பதற்கும் 1925-ம் வருடம் நிருவப்பட்டு சென்ற 11 ஆண்டுகளாகச் செவ்வனே வேலைசெய்து வருகிறது. சென்ற ஆண்டிலிருந்து குடியானவர்களின் சரக்கின்பேரில் கடன்கொடுத்து நல்ல விலை வரும்வரை வைத்திருந்து லாபகரமாய் விற்றுக்கொடுக்கும் வேலையையும் நடத்திவருகிறது. தற்சமயம் 18 சங்கங்களும் 230 நபர்களும் இச்சங்கத்தில் மெம்பர்களாய் இருக்கிறார்கள். அவர்களால் செலுத்தப்பட்ட பங்குப்பணம் ரூ. 3,041. 1935–36 ம் வருடத்தில் 9½ ஏக்கர் நஞ்சை நிலத்தை குத்தகைக்கு வாங்கி குறுவை, சம்பா நெல் விவசாயத்தை ஜனங்களுக்கு நூதன முறையில் விவசாயம் செய்து காட்டியிருக்கிறது. வழக்கம்போல் இம்பீரியல் கெமிகல் இண்டஸ்டரீஸ் கம்பெனியின் ஏஜண்டாக இருந்து ரூ. 1,66,376-க்கு ரசாயன எருவை கமிஷனுக்கு விற்றுக்கொடுத்திருக்கிறது. ரூ. 20,445-க்கு இயற்கை உரமும் சிறந்த விதையும் விலைக்கு வாங்கி விற்கப்பட்டிருக்கிறது. குடியானவர்களின் சரக்கின்பேரில் ரூ. 21,873 கடன் கொடுக்கப்பெற்று ரூ. 11,417 வசூலித்து 1936-ம்ஸு மார்ச்சுமீ 31உல் ரூ. 15,408 பாக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இச்சங்கத்திற்கு இரண்டு கிளை ஆபீஸ்களும் சுமார் 50 சப் டெப்போக்களும் இருக்கின்றன. பசுக்களை பலன்படுத்துவதற்கு ஒரு பொலி காளை வளர்க்கப்பட்டுவருகிறது. கவர்மெண்டார் 1935–36ம் வருஷத்திற்கு அக்காளைக்காக ரூ. 100 சப்சிடி கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டில் சுமார் ரூ. 3,000 நிகர லாபம் கிடைத்திருக்கிறது. ரூ. 6,615-4-0 வரை க்ஷேம நிதி சேர்க்கப்பட்டிருக்கிறது. ரூ. 8,874 மதிப்புள்ள மூன்று சொந்த கட்டிடங்கள் இச்சங்கத்திற்கு இருக்கின்றன.

43, சேலம் நெசவுக்காரர் ஐக்கிய சங்கம் (லிமிடெட்), வேலையின் சுருக்கம்.

'நெசவுக்காரர்கள் வேலையில்லாதிருப்பதை நிவாரணஞ் செய்யும் நிமித்தமாக 1930-ம்ஸு இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 200 நெசவுக்காரர்களுக்கு வேலை கொடுப்பதுந்தவிர நியாயமான கூலியையும் தருகிறது. இச்சங்கம் மேலானதர நூலை வாங்கி, பிரத்தியேகமாக தேர்ச்சியடைந்த இச்சங்க மெம்பர் ஒருவராலே சாயம் போடப்பட்டு நயம்தரமான சரக்கு தயாரிக்கப்படுகிறது. பிரதி வருஷமும் இச்சங்கம் ரூ. 40,000 பெறுமான சரக்குகளை உற்பத்தி செய்து, சங்கத்திற்கும் சரக்கு வாங்குபவருக்கும ஆகிய இருவருக்கும் நன்மையுண்டாகும்படி விற்பனை செய்து வருகிறது. இச்சங்கத்தின் நிலைமை கீழே குறிக்கப்பட்டிருக்கிறது :—

	ரூ.	அ.	பை.
பங்குத்தொகை	12,586	13	0
க்ஷேம நிதி	1,035	4	0
வரக்கூடாத கடன்களுக்கு ஒதுக்கி வைத்தது.	3,501	0	0

சென்னப்பட்டணத்திலுள்ள சங்கங்களுக்கு தேவையான துணிகளை எஜண்டுகள் மூலமாக விற்பனை செய்கிறது. கொள் முதல் விற்பனைகளை நிகா செய்து கொள்வதற்கு சங்கத்தின் செலவில் ஒரு வியாபார உத்தியோகஸ்தர் நியமித்திருக்கிறார்கள்.

கீழே குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு எஜெண்டுகள் அழைக்கப்படுகிறது :—

(1) எஜெண்டுகள் சங்கத்திற்கு மாதம் ஒரு முறை சரக்கு விற்பனையானதும் இருப்பிலிருப்பது பற்றியும் விவரங்கள் அனுப்பவேண்டும்.

(2) சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் இருப்பையும் கணக்கையும் பரீக்ஷை செய்ய அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யவேண்டும்.

(3) சாமான்களின்மேல் குறிக்கப்பட்டிருக்கும் விலைகளின் பேரில் கீழ்கண்ட விகிதப்படி கமிஷன் கொடுக்கப்படும் :—

(a) ரூ. 50 வரையுள்ளவைகளுக்கு ரூ. 1க்கு 1 அணு வீதம்.
(b) ரூ. 50க்குமேல், ரூ. 500 வரை ரூ 1க்கு 1 அணு 6பை வீதம்.
(c) ரூ. 500 க்கு மேல் ஒரு மாதத்தில் ரூ. 1க்கு 2 அணு.

(4) சாமான்களின்மேல் குறிக்கப்பட்டிருக்கும் விலைகள் சேலம் ஆபீசில் கொடுக்கக்கூடியவை. எஜெண்டுகள் இதர ஏற்றுமதிச் சிலவுகளை அவர்களே பொறுக்கவேண்டும்.

(5) எஜெண்டுகளிடமிருந்து வரவேண்டிய பாக்கி அவர்கள் கட்டியிருக்கும் டிபாசிட்டுத்துகையில் இருபங்குக்குமேல் இருக்கக்கூடாது.

(6) விற்கப்படாத சாமான்களை வாபீஸ் எடுத்துக்கொள்ளமுடியாது. ஆனால் சில காரணங்களை முன்னிட்டு, கீழே குறிக்கப்பட்ட பிரகாரம் வாபீஸ் எடுக்கலாம் :

(a) சாமான்கள் அதிகமாக கைபடாமலும் கசங்காமலும் இருக்கவேண்டும்.

(b) சாமான்களை எஜெண்டின் சிலவில் அனுப்பவேண்டும்.

(c) எந்த காரணத்தினாலும் எஜெண்டு வாங்கிய சாமான்களை 100க்கு 5 பங்குக்கு அதிகப்படாமல் திரும்பி வாங்கிக்கொள்ளலாம்.

44. ராசிபுரம் கூட்டுறவு விற்பனை சங்கம் (லிமிடெட்.)

இச்சங்கம் சேலம் ஜில்லா, ராசிபுரம் கிராமத்தில் இருக்கிறது. இதன் வேலை சேலம் ஜில்லா முழுவதிலும் நடக்கிறது. விவசாயிகளின் மகசூலை நல்ல விலைக்கு விற்றுக்கொடுப்பதுதான் இச்சங்கத்தின் பிரதான நோக்கம். இச்சங்கத்துக்கு ராசிபுரத்தில் ஒரு கிடங்கும், அங்கிருந்து 16 மைல்களுக்கு அப்பால் உள்ள சேந்தமங்கலத்தில் ஒரு கிடங்கும் இருந்து வருகிறது. சென்ற ஒரு வருஷம் மூன்று மாதங்களிலும் இச்சங்கத்தின் வேலையாவது :

	1935.			1936-ம் ஞு மார்ச்சு மீ 31உ முடிய.		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
பருத்தி விற்றது, நிலக்கடலை விற்றது	71,878	1	0	10,394	1	11
பருத்தி, நிலக்கடலை இவற்றின் ஈட்டின் பேரில் கொடுபட்ட கடன் துகைகள்	16,320	1	0	5,446	0	0
கிரோசின் ஆயில் விற்றது	76	4	6	442	7	0
மாட்டுத்தீவனம் விற்றது	1,030	7	10	3,226	13	3
தவுடு விற்றது	23	1	0	86	6	9
உப்பு	..			13	8	0

(2) சம்சாரிகளின் பருத்தி நிலக்கடலை முதலியவற்றை பிரதி வெள்ளிக்கிழமையும் வியாபாரிகளுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படுகிறது. ராசிபுரம், சேலம், திருச்செங்கோடு முதலிய இடங்களிலிருந்தும், சில சமயங்களில் பவானி, திருப்பூரிலிருந்து வியாபாரிகள் வந்து ஏலத்தில் போட்டி கூறுகிறார்கள். இம்மாதிரி போட்டியிருப்பதால், திருப்பூரில் கிடைப்பதைவிட ரூ. 1 அல்லது ரூ. 2 அதிகமாகவே விலை கிடைக்கிறது.

இதுவும் தவிர, கிராமங்களில் சுற்றிவரும் வியாபாரிகளின் கள்ள எடைகள் படிக்கல் இவற்றினின்றும் காக்கப்படுகிறார்கள். சங்கத்தார் அவர் திராசில் சரியான எடைக்கல் போட்டு நிறுவை செய்கிறார்கள். இந்த மாதிரி திராசின் உபயோகத்தால் மெம்பர்களுக்கு ஒருபொதி பருத்தியின் பேரில் 10 முதல் 30 ராத்தல் வரை மீதமாகிறது. இதே விதமாய் கடலை விலைகள் எடை முதலியவற்றிலும் லாபம் கிடைக்கிறது.

இச்சங்கத்தைச் சேர்ந்த கிடங்கு ஐக்கிய இலாகா இன்ஸ்பெக்டர் ஒருவரால் மேற் பார்த்து வரப்படுகிறது. பருத்திக்கு பொதி 1 க்கு அணு 8 வீதமும் நிலக்கடலை மூட்டை 1-க்கு அணு 1 வீதமும் கமிஷன் வசூலிக்கப்படுகிறது. கிடங்குகளில் வைக்கப்பட்ட சரக்குகள் ஒரு வாரத்திற்குமேல் இருந்தால் அவைகளுக்கு பொதி 1க்கு 1 அணு வாடகையும், பைசா 3 இன்ஷியூரன்ஸ் கட்டணமும் வசூலிக்கப்படுகின்றது. மார்க்கெட் விலையை அனுசரித்து அப்படி கிடங்கில் வைக்கப்படும் சரக்கின் ஈட்டின்பேரில் ரூ. 100க்கு 70 வீதம் லோன் கொடுக்கப்படும். ஷை லோனுக்கு வருஷம் 1க்கு 100க்கு ரூ. 7-8-0 வட்டி விகிதம் ஆறு மாதத் தவணைக்கு கொடுக்கப்படும்.

இச்சங்கம் கிரோசின், மாட்டுத்தீவனம், உப்பு, துணிமணிகள், தவுடு முதலியனவும் விற்பனை செய்கிறது. பருத்தியையும், நிலக்கடலையும் விற்றுவிட்டு வீடு திரும்பும் சம்சாரிகள் ஷை சாமான்களை மற்றக்கடை விலைக்கும் சகாயமான விலைக்கு வாங்கிப்போகிறார்கள். இதன் காரணம் இச்சங்கம் மொத்தமாக சரக்குகள் வாங்கி வைப்பதால்தான்.

விவசாயிகளும், ஐக்கிய சங்கங்களும் இச்சங்கத்தில் மெம்பர்களாகச் சேரலாம். ஐக்கிய சங்கங்கள் ரூ. 5 பங்குத்துகை கட்டி A கிளாசிலும், தனிப்பட்ட நபர்கள் பங்குத்துகை ரூ. 1 கட்டி B கிளாசிலும் சேரலாம். சேலம் ஜில்லாவிலுள்ள விவசாயிகளும், விவசாய சங்கங்களும் மெம்பர்களாகச் சேரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. பருத்தி, நிலக்கடலை மொத்த வியாபாரிகளையும் சங்கத்துக்கு விஜயஞ்செய்து அதன் காரியங்களில் தலையிட்டுக் கொள்ளக் கோரப்படுகிறது.

45. மதராஸ் ஜில்லா கூலிக்காரர்கள் ஐக்கிய சங்கம்.

1936-ம் ஞு ஜனவரிமீ கூலிக்கண்டிராக்டு சொசைடி யென்று மதராஸ் ஜில்லாவிற்காக ஆரம்பிக்கப்பட்டது. முக்கியமாக கூலியாட்களுக்கு கவர்ன் மெண்டு, பொதுஜன நாயகங்கள், தனிப்பட்ட ஜனங்கள் இவர்களிடமிருந்து கண்டிராக்டுக்கு எடுத்து நல்ல கூலி சம்பாதித்துக் கொடுக்கவேண்டுமென்பதே இச்சங்கத்தின் நோக்கம். சங்கத்தின் மூலமாகவோ அல்லது மெம்பர்கள் மூலமாகவோ வேலைகளை முடித்துக்கொடுக்க உதவி செய்வது இதன் நோக்கம்.

சொசைடியின் மெம்பர்கள் நல்ல யோக்கியதையும், வேலைத்திறமை வாய்ந்தவர்கள். இதன் மானேஜ்மெண்டுக்கு 7 டைரெக்டர்கள் இருக்கிறார்கள். இதில் மூன்றுக்கு குறையாமல் கூலியாட்களிருந்தும், பாக்கி இரண்டு பேர்கள் ரிஜிஸ்தராரால் குறிக்கப்பட்டவருமாவார். இதற்கு யோசனை புகட்டுவதற்கும், தொழில் முறைகளை ஆராய்வதற்கும், கூலியாட்கள் மெம்பர்களின் வேலையும் மேற்பார்ப்பதற்கு ஒரு போர்டும் இருந்துவருகிறது. டைரெக்டர்கள் பொதுஜன நாயகங்களிலிருந்தும், சொந்த ஜனங்களிடமிருந்தும் வேலைகள் கண்டிராக்டுக்கு பிடித்து சங்கத்தின் சார்பாக செய்து வருகிறார்கள். எப்போதுமே, ஒழுங்குபட்ட ஒரு சங்கத்தின் நடப்பை தனிப்பட்ட ஜனங்களைப்பார்க்கிலும் மேன்பட நடத்துதல் சுலபமாக இருக்கும். இது விஷயத்து பொதுஜன சகாயமும், அவர்கள் ஆதரவும் வேண்டியதவசியம். இந்தச் சங்கத்தை திறந்துவைத்த கனம் மந்திரியவர்கள் இந்த மாதிரியான சங்கம் நெடுநாளாக அபேக்ஷித்த சங்கம் என்றும், அதற்கு பிந்திய அபிவிருத்திக்கு வழி விசேஷமாகயிருப்பதாயும் பாராட்டி பேசியிருக்கிறார்.

ஷை சங்கம் விஷயங்கள் தெரிய விரும்புவோர் காரியதரிசி, 'ஸ்ரீ நகர் நுங்கம்பாக்கம், மதராஸ்" என்வருக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

46 வேளாச்சேரி விவசாய அபிவிருத்தி ஐக்கிய சங்கம் (லிமிடெட்)

செங்கல்பட்டு ஜில்லா, சைதாப்பேட்டை தாலூகா, வேளாச்சேரி கிராமத்தில் 1935-ம் ஹு ஆகஸ்டு மீ விவசாய அபிவிருத்தி ஐக்கிய சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதன் முக்கிய வேலைகளாவன :—

(1) விவசாய டிபார்ட்டுமெண்டாரால் மலிவான சீமைக்கலப்பை யால் உழுது காட்டுதல்.

(2) மேலான ராசி காணக்கூடிய நெல் விதைகளை சப்ளை செய்தல் கோ. நெ. 5, நெல் நல்ல மகசூலையும் நயம் அரிசி காணக்கூடியதாயும் நல்ல வைக்கோலையும் கொடுத்திருக்கிறது.

(3) இஞ்சி, மஞ்சள், நிலக்கடலை ஆகிய இவை போன்ற பணப்பயிர் களை சாகுபடி செய்தல்.

(4) நாட்டுக் காய்கறித் தினுசுகளையும், சீமைக் காய்கறிகள் தினுசு களையும் நூதன முறைமையால் சாகுபடி செய்தல்.

(5) பழ மரங்கள் வைத்தல்—ஒரு மெம்பர் ஆரம்பித்திருக்கிறார்.

(6) கோழி வளர்த்தல் தேனி வளர்த்தல்—நிரூபணைக்காக ஆரம்ப மாயிருக்கிறது.

(7) வீட்டுக்குப்பைகளை நல்ல உரமாக்கும் விஷயமாக வழி காட்டவும், யோசனை புகட்டுவதும்.

(8) ஆறு ஈக்களை துலைக்கும் பொறிகள் கொடுபட்டது.

(9) இதர கிராம சௌக்கிய வசதிகளைக் கவனித்தல்.

ஷை விஷயம் சோதனை ஸ்திதியில் இருந்து வருகிறது. அதன் வேலைகள் விவசாய, ஐக்கிய, வெட்டரினெரி முதலிய இலாகாவின் உத்தியோகஸ்தர்களால் உதவி செய்யப்படுகிறது.

IV. கைத்தொழில் இலாகா.

47. சிற்பவித்தை சம்பந்தமாகவும் கைத்தொழில் சம்பந்தமாகவும் சென்னை ராஜதானியில் ஏற்படுத்தப்பட்டுள்ள கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களின் ஜாபிதா.

பெயர்.	கற்பிக்கப்படும் விஷயங்கள்.
1 ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ் அண்டு கிராப்ட்ஸ், சென்னை.	மேஜை, நாற்காலி முதலிய மரச்சாமான்களைச் செய்வது, மரத்தில் சித்திரம் செதுக்குவது, பதிப்பு வேலை உலோகத்தில் செய்யும் வேலை, பொன்னிலும், வெள்ளியிலும் செய்யும் கம்மிய வேலை, நகைகள் செய்யும் வேலை, அரக்குச்சாய வேலை, அலங்காரத்தமாய் வர்ணத்தினால் சித்திரம் தீட்டுவது, பிரதி ரூபம் செய்வது, கொத்துவேலை, துணியில் வர்ணத்தினால் சித்திரம் தீட்டுவது, குறிப்பு படம் எழுதுவது, பிரம்பு வேலை, பொதுவாய் சித்திரம் வரைவதும், வர்ண சித்திரம் வரைவதும், வர்ண சித்திர வித்தையும்.
2 ஸ்கூல் ஆப் டெக்னாலஜி	மெகானிகல் இன்ஜினீரிங் என்னும் யந்திர சிற்ப வித்தை, எலெக்ட்ரிகல் என்ஜினீரிங் என்னும் மின்சார சிற்ப வித்தை, எலெக்டிரிகல் வையரிங், பிளம்பிங் அண்டு சானிடரி ஸயன்ஸ் (குழாய்போடுவது, சுகாதாரம் சம்பந்தமான சாஸ்திரம்), மெகானிகல் டிராயிங் என்னும் யந்திர சம்பந்தமான சித்திரம் வரைவது, அச்சுக்கோர்ப்பது.
2 எ. சிற்பங்களாக விரும்பும் நபர்களுக்காக பொதுக்கல்வி போதிக்கும் ப்ரிபரேடரி டிரேட் ஸ்கூல்.	கைத்தொழில் வேலை கற்றுக்கொள்ள விரும்பும் மாணாக்கர்களுக்கு பொதுக்கல்வி போதிப்பது.
3 கவர்ன்மெண்ட் டெக்ஸ்டைல் இன்ஸ்டிட்யூட், வாஷர்மேன்பேட், சென்னை.	பஞ்சிலிருந்து நூல் நூற்பது, கைத்தரி நெசவு, கம்பளம் நெய்வது, பட்டுப்பூச்சி வளர்ப்பது, பட்டுப்பூச்சி கூட்டிலிருந்து பட்டைச் சுகிர்ந்திழைப்பது, பட்டுநூல்நூற்றல் மிருதுவான ஆட்டு ரோமக் கம்பளங்கள், நாடா மேஜோடு முதலியவைகளைத் தயார் செய்வது, சாயமிடுவது, நெசவு சம்பந்தமான பரீட்சை செய்வது, கம்பளி நூல் நூற்பது.

4 கவர்ன்மெண்ட் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல், மதுரை.	மரவேலை செய்வது, கொல்லவேலை, ஆயில் என்ஜினை மராமரிப்பது தொழில்கள்.
5 கவர்ன்மெண்ட் ட்ரேட் ஸ்கூல், மங்களூர்.	யந்திர வேலைக்காரருக்கு பயிற்சி முறை, மரவேலை செய்பவருக்கு பயிற்சிமுறை, மின்ஸார விளக்குகளுக்கு கம்பி போடுவது.
6 கவர்ன்மெண்ட் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல், கள்ளிக்கோட்டை.	மேஜை, நாற்காலி முதலிய மரச்சாமான்கள் செய்வது, கொல்லவேலை, ஆயில் என்ஜின் பராமரிப்பது தொழில்கள்.
7 கவர்ன்மெண்ட் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல், பல்லாரி.	மேஜை, நாற்காலி முதலிய மரச்சாமான்கள் செய்வது, கொல்லவேலை ஆயில் என்ஜின்கள் ஓட்டுவது.
8 கேரளா சோப்பு செய்யும் தொழிற் சாலை, கள்ளிக்கோட்டை.	சோப்கள் செய்வது, எண்ணெயை சுத்தம் செய்வது, எண்ணெய், கொழுப்பு, மெழுகு, சோப்கள் இன்னும் இவைகளைச்சேர்ந்ததை ரஸாயன சாஸ்திர மூலமாக பரீட்சை செய்வது, கொஞ்ச சிலவில் எண்ணெய்களையும் மற்றவைகளையும் பரீட்சை செய்வது, நற்சாட்சி பத்திரங்கள் கொடுப்பது. மற்ற விவரங்களுக்கு இச் சாலையின் சூப்பிரண்டெண்டெண்டுக்கு மனுச் செய்து கொள்ளவும்.

மேலேகண்ட ஸ்தாபனங்கள் கவர்ன்மெண்டாரின் நேர் விசாரணையின் கீழ் இருக்கின்றன. இவைகளைத் தவிர கவர்ன்மெண்டாரிடம் உதவிபெற்று நடத்தப்பட்டுவரும் கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் இந்த ராஜதானியில் சுமார் எழுபது இருக்கின்றன. கைத்தொழில் கல்வியைப்பற்றிப் பின்னும் விவரம் எதாகிலும்தெரிந்துகொள்ளவேண்டுமானுல் கைத்தொழில் இலாகா டைரெக்டர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

சென்னைக் கைத்தொழில் இலாகா.

48. கைத்தொழில் இலாகாவைச் சேர்ந்த என்ஜீனிரிங் பிரிவாரால் செய்யப்படும் வேலைக்காகக் கட்டணங்கள் விதித்து வாங்குவது சம்பந்தமான விதிகள்.

கைத்தொழில் இலாகாதார் - பொதுவாக சங்கதி தெரிவிப்பதும் ஆலோசனை சொல்வதும் மாத்திரமேயல்லாமல், (plans) நக்ஷாக்கள் தயார்செய்யும் விஷயத்திலும் யந்திரங்களைக் கிரயத்துக்கு வாங்கி அமைக்கும் விஷயத்திலும் உதவியும் செய்வார்கள். மேலும், அவர்கள் - அமைக்கப்பட்ட யந்திர முதலியவைகளைக் கிரமமாய்ப் பார்வையிட எற்றுக்கொண்டு, அடியிற்கண்ட உபகரணங்களைப் பொது ஜனங்களுக்கு உபயோகப்படும்படி வைத்திருக்கிறார்கள். ஆனுல், அவர்கள் அந்தப்படி செய்யும்போது அடியிற்கண்ட விதிகளின்படி நடந்துகொள்வார்கள். மேலே கண்ட உபகரணங்கள் எவையென்றால் :—

(i) (கிணறு முதலியவை தோண்டுவதற்காக) கையினுல் தொளை போடும் உபகரணங்கள்.

(ii) சக்தியை உபயோகித்துத் தொளை போடும் கருவிகள்.

(iii) சுலபமாய் எடுத்துக்கொண்டு போகக்கூடிய பம்பிங் ப்ளாண்ட் என்னும் தண்ணீர் இறைப்பதற்கான உபகரணங்கள்.

(iv) வெடிமருந்து முதலியவைகளைக்கொண்டு கற்பாறைகளை உடைப்பதற்கான உபகரணங்கள்.

(v) கரும்பு பிழியும் ஆலை.

இந்த உபகரணங்கள் அடியிற்கண்ட வரிசைக் கிரமப்படி வாடகைக்கு விடப்படும் :—

I-வது வகுப்பு.—(a) விவசாயக்காரர்கள்—வாஸ்தவத்தில் விவசாய சம்பந்தமான காரியங்களுக்காக மாத்திரம் உல்லாசத் தோட்டங்களுக்காவது அதைப்போன்ற மனேகரங்களுக்காவது கிணறுகள் வெட்டுவதில் ஷை யந்திரங்கள் உபயோகிக்கப்படவுமாட்டா, சிப்பந்திகள் அமர்த்திக்கொள்ளப்படவுமாட்டார்கள்,

(b) சிறிய அளவிலே கைத்தொழில் செய்பவர்கள் விவசாயக்காரர்களைப்போலவே நடத்தப்படுவார்கள்.

(c) தனி நபர்களுக்காகவல்லாமல் பொது ஜனங்களுக்காக உத்தேசிக்கப்பட்ட கிராம ஜல சர்ப்பரா ஏற்பாடுகள்.

(d) கவர்ன்மெண்டைச் சேர்ந்த தொழில் இலாகாவும் கூட்டுறவு இலாகாவும் இதர இலாகாக்களும்.

II-வது வகுப்பு.—லோகல் போர்டுகளும் மியுனிஸிபாலிடிகளும் இதர பொது அதிகார சபைகளும்.

III-வது வகுப்பு.—வரிசைக் கிரமத்தில் இவைகளுக்கு முந்தியுள்ள சகல விண்ணப்பங்களும் நிறைவேற்றப்பட்ட பிறகு, மேற்குக் கடற்கரைப் பிரதேசத்திலும், வீடெட் டிஸ்ட்ரிக்டுகள் என்னும் ஜில்லாக்களிலும், குறைவுள்ள ஜல சர்ப்பராவைச் சீர்திருத்துவது மிகவும் அவசியமென்று ருஜுப்படுத்தக்கூடிய இடங்களிலும் உள்ள தனி நபர்களுக்குரிய ஜல சர்ப்பரா ஏற்பாடுகள்.

IV-வது வகுப்பு.—பெரிய அளவிலே கைத்தொழில் செய்பவர்கள்.

குறிப்பு.—கைத்தொழில் சம்பந்தமான எந்த ஸ்தாபனங்களில் 500 வேலையாட்களும் அதற்கு மேற்பட்ட வேலையாட்களும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கிறார்களோ அல்லது 1,000 ப்ரேக் ஹார்ஸ் பவர் என்னும் சக்தியும் அதற்கு மேற்பட்ட சக்தியும் உபயோகிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட சகல ஸ்தாபனங்களும் "பெரிய அளவிலே கைத்தொழில் செய்பவர்கள்" என்று கருதப்படுவார்கள்.

V-வது வகுப்பு.—ரெயில்வேக்கள்.

2. அடியிற்கண்ட பொது திட்டங்களுக்குட்பட்டு இந்த இலாகாதார் வேலை செய்ய ஒப்புக்கொள்ளுகிறார்கள் :—

(i) இந்த இலாகாதார் செய்யும் உதவிக்குச் சம்பந்தப்பட்ட விதிகளின்படி விதித்து வாங்கக்கூடிய சகல கட்டண முதலிய செலவுத் தொகைகளையும் கண்டிப்பாய் முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

குறிப்பு.—(1) கூட்டுறவு சங்கங்களுக்குச் செய்யும் வேலைகளுக்காக, சாதாரணமாய் வாங்கும் வீதங்களில் பாதிவீதங்களின்படி மாத்திரமே கட்டணம் வாங்கப்படும். ஆனால் சாமான்களைக் கொண்டுபோகும் வேலையைக் கூட்டுறவு சங்கங்களே தங்கள் சொந்த செலவில் செய்ய ஏற்றுக்கொண்டாலன்றி மற்றப்படி, சாமான்களைக் கொண்டுபோவதற்கான செலவு முழுவதும் விதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வீதங்களின் பிரகாரம் வசூல் செய்யப்படும்.

(2) சில விசேஷ சந்தர்ப்பங்களில், இந்தக் கட்டணங்களையாவது இதர செலவுத் தொகைகளையாவது விதித்து வாங்குவதனால் கூட்டுறவு சங்கங்கள் உட்பட சொற்ப வருமானமுள்ள விண்ணப்பதாரர்களுக்கு வெகுசாய் அதிக கஷ்டம் உண்டாகக்கூடியதாயிருக்கும்பட்சத்தில், டைரெக்டர் ஆவ் இண்டஸ்ட்ரீஸ் என்னும் கைத்தொழில் இலாகா டைரெக்டர் - தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அந்தக் கட்டணங்களை அல்லது செலவுத் தொகைகளை முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது வஜா செய்யலாம். ஆனால், வாடகைக் கட்டணமாயிராத வேறே யாதொரு செலவுத் தொகையைக் கைத்தொழில் இலாகா டைரெக்டர் வஜா செய்யும்போதெல்லாம் அதைக்குறித்து கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட் செய்யவேண்டுமென்னும் திட்டத்துக்குட்பட்டு மேலேகண்டபடி வஜா செய்யவேண்டும்.

(ii) இந்த விதிகளின்படி விதித்து வாங்கப்படும் சகல கட்டண முதலிய செலவுத் தொகைகளும் கவர்ன்மெண்டுக்கு வரவு வைக்கப்படும்.

(iii) செலுத்தப்பட்ட கட்டணங்கள் சாதாரணமாய் வாபஸ் செய்யப்படமாட்டா. ஆனால், முன்பணமாகச் செலுத்தியிருக்கும் தொகைகளின் விஷயத்தில் வேலை முடிவான பிறகு செலவாகாமல் ஏதாவது தொகை மிகுந்திருந்தால் அதை திருப்பிக் கொடுத்துவிடப்படும்.

(iv) பொது ஜனங்கள் நியாயமாய்க் கேட்கும் காரியங்களைக் கூடுமான மட்டில் சீக்கிரமாய்ச் செய்துமுடிக்க சகல பிரயத்தனமும் செய்யப்படும். ஆனபோதிலும், இன்ன கால அளவுக்குள் செய்துமுடிக்கப்படுமென்று இந்த இலாகாதார் உத்தரவாதம் எதுவும் ஏற்றுக்கொள்ளுவதில்லை.

(v) இந்த இலாகாதாரின் வேலையை ஒப்புக்கொள்ளும்பட்சத்தில், இந்த விளம்பரத்தில் கண்ட பொது விதிகளையும் திட்டங்களையும் ஒப்புக்கொண்டதாக ஏற்படும்.

(vi) இந்த இலாகாவைச் சேர்ந்த உபகரணங்களை வாடகைக்கு எடுத்துக்கொள்ளுகிறவர்கள் அவைகளை எவ்வித சந்தர்ப்பங்களிலும் கீழ்வாடகைக்குக் கொடுக்க அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

3. வியாபார முறையில் நடத்தப்படும் யாதொரு இலாகாவுக்கு அல்லது கவர்ன்மெண்டார் வியாபாரமுறையில் செய்ய ஏற்றுக்கொண்டிருக்கும் யாதொரு வேலைக்குத் தவிர கவர்ன்மெண்டைச் சேர்ந்த இதர இலாகாக்களுக்கு வேலை செய்வதற்காவது வஸ்துக்கள் சர்ப்பரா செய்வதற்காவது கட்டணங்கள் எவையும் வாங்கப்படமாட்டா. ஆயினும், மேலேகண்டபடி செய்யப்பட்ட வேலையின் அல்லது சர்ப்பரா செய்யப்பட்ட வஸ்துக்களின் மதிப்பைப் பெற்றுக்கொண்டதாக எழுதிக்கொடுக்கும் சீட்டை சம்பந்தப்பட்ட இலாகாதாரிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

I.—சங்கதி தெரிவிப்பதும் ஆலோசனை சொல்வதும்.

4. பிரஸ்தாப இடத்தைப் பார்வையிடாமலே பொதுவாய்ச் சங்கதிகள் கிடைக்கக்கூடிய வரையிலும் ஆலோசனை சொல்லக்கூடிய வரையிலும் கட்டணம் எதுவும் வாங்காமலே சங்கதிகள் தெரிவிக்கப்படுவதுமல்லாமல், ஆலோசனையும் சொல்லப்படுகிறது.

5. பிரஸ்தாப இடத்தைப் பார்வையிட்ட பிறகே சங்கதி தெரிவித்து ஆலோசனைக்கு சொல்லக்கூடிய விஷயங்களில், 1-வது விதியில் சொல்லியிருக்கும் I-வது, II-வது, III-வது வகுப்புக்களுக்காக 10 ரூபாய் கட்டணமும், IV-வது, V-வது வகுப்புக்களுக்காக 100 ரூபாய் கட்டணமும் செலுத்தப்படுவதன்மேல், மேலேகண்டபடி பார்வையிட ஏற்பாடு செய்யப்படும். விசேஷ கடன் விதிகளின்படி கடன்களுக்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்கள் விஷயமாய் விசாரணைகள் செய்கையில் பிரஸ்தாப இடங்களைப் பார்வையிடுவதற்காக அப்படிப்பட்ட கட்டணம் எதுவும் விதித்து வாங்கப்படமாட்டாது.

6. உபகரணங்களை அமைப்பது சம்பந்தமாய் மேலேகண்டபடி பார்வையிடப்பட்டிருந்து, அந்த உபகரணங்களைக் கைத்தொழில் இலாகாதாரின் உதவியில்லாமல் விண்ணப்பதாரர் கிரயத்துக்கு வாங்கவோ அமைக்கவோ உத்தேசிக்கும் பட்சத்தில், இன்ன வகையான உபகரணங்கள் அவசியமென்பதைக் காட்டும் ஒரு ஸ்டேட்மெண்டும் தோராயமாய் வடிவம் குறிப்பிட்டுள்ள ஒரு நக்ஷாவும் பார்வையிட்டது சம்பந்தமான ரிப்போர்ட்டில் அடங்கியிருக்கும்.

7. உபகரணங்களை ஷை இலாகாதார் கிரயத்துக்கு வாங்கித்தரவேண்டுமென்றாவது அமைக்கவேண்டுமென்றாவது விண்ணப்பதாரர் விரும்பும் விஷயங்களில், "யந்திரங்களைக் கிரயத்துக்கு வாங்குவதும் அமைப்பதும்" என்னும் II-வது பிரிவில் காட்டப்பட்டிருக்கிற வீதங்களின்படி செலவுத் தொகை விதித்து வாங்கப்படும்.

II.—யந்திரங்களைக் கிரயத்துக்கு வாங்குவதும் அமைப்பதும்.

8. உபகரணங்களைத் தருவித்துக் கொடுக்கும்படியாவது நக்ஷாக்களைத் தயார் செய்யும்படியாவது யந்திரங்களை அமைக்கும்போது மேற்பார்வையிடும்படியாவது விரும்பினால், ஷை இலாகாதார் அந்த வேலைகளை ஏற்றுக்கொள்வார்கள். அப்படிப்பட்ட விஷயங்களில், 250 ரூபாய் அல்லது உபகரணங்களின் விலையில் தோராயமாய் நூற்றுக்கு 15 வீதமுள்ள தொகை ஆகிய இவைகளில் எது அதிகமாயிருக்கிறதோ அந்தத் தொகைக்குக் குறையாமல் டேவணித் தொகை கட்டவேண்டும். கட்டணங்களைக் கணக்கிடும் காரியங்களுக்காக, பழைய உபகரணங்களின் விலையே அவைகளின் தற்போதைய விலையாகக் கொள்ளப்படும்.

இம்மாதிரி வேலைக்காக வாஸ்தவத்தில் வாங்கப்படும் கட்டணமானது I-வது, II-வது, III-வது வகுப்புக்களுக்காக யந்திரங்களின் சரியான விலையில் நூற்றுக்கு 2 வீதமுள்ள தொகையும் பார்வையிடுவதற்கான கட்டணம் 10 ரூபாயும், IV-வது, V-வது வகுப்புக்களுக்காக யந்திரங்களின்

சரியான விலையில் நூற்றுக்கு 10 வீதமுள்ள தொகையும் பார்வையிடுவதற்கான கட்டணம் 100 ரூபாயும், யந்திரங்களின் விலை 1,250 ரூபாய்க்கு மேற்படும் விஷயங்களில் நக்ஷாக்களைத் தயார் செய்வதற்காக சகல வகுப்புகளுக்காகவும் 10 ரூபாயுமாகும். பார்வையிடுவதற்கான கட்டணமானது அதே ஏற்பாட்டுக்காக முன்னதாகவே செலுத்தப்பட்டிருந்தால், பார்வையிடுவதற்கான கட்டணம் பின்னும் எதுவும் கேட்கப்படமாட்டாது.

கட்டிட வேலையைப் பார்வையிடவேண்டியிருந்தாலும் தளவாடத்தின் விலை 10,000 ரூபாய்க்கு மேற்படுவதாயிருந்தாலும், பிரத்தியேகமான ஷரத்துகள் ஏற்படுத்தப்படும்.

9. பார்வையிட்டான பிறகும் எவையேனும் உபகரணங்களை அனுப்பும்படி எழுதுவதற்கு முன்பும் யாதொரு விண்ணப்பதாரர் தம்முடைய ஏற்பாட்டை விட்டுவிட விரும்புகிற பட்சத்திலே, செலுத்தப்பட்ட சகல கட்டணங்களிலும் டேவணித் தொகைகளிலும் பார்வையிடுவதற்கான கட்டணமும் நீல அச்சு நக்ஷாக்கள் தயார் செய்யப்பட்டிருந்தால் அந்த நக்ஷாக்களைத் தயார் செய்வதற்காக 10 ரூபாயும் போக மீதி நிற்கும் தொகை வாபஸ் செய்துவிடப்படும்.

10. உபகரணங்கள் அனுப்பும்படி எழுதின பிறகு விண்ணப்பதாரர்கள் தங்கள் உத்தேசத்தை மாற்றிவிடுகிறபட்சத்திலே, அதனால் ஏற்படும் எவ்வித நஷ்டங்களுக்கும் இந்த இலாகாதார் உத்தரவாதம் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

11. சகல சாமான்களையும் கூலியாட்களையும் விண்ணப்பதாரரே சவதரிக்கவேண்டும்.

12. உபகரணங்களை சர்ப்பரா செய்யும் கம்பெனியாரே அவைகளை அமைப்பதாயிருந்தாலன்றி மற்றப்படியாவது அவைகளை அமைக்கும் வேலையைக் கைத்தொழில் இலாகாதார் மேற்பார்வையிடுவதாயிருந்தாலன்றி மற்றபடியாவது, நக்ஷாக்கள் எவையும் தயார் செய்யப்படவுமாட்டா, உபகரணங்கள் அனுப்பும்படி எழுதப்படவுமாட்டது.

13. ஏற்கனவே உபகரணங்களைக் கிரயத்துக்கு வாங்கியிருக்கும் நபர்கள் - அவைகளை அமைக்கும் வேலையை மேலேகண்ட ஷரத்துகளின்படியே இந்த இலாகாதார் பார்வையிடவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்ளலாம். ஆயினும், நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்படுவதன்மேல் ஷை உபகரணங்களைப் பார்வையிடச் செய்யும் உரிமை டைரெக்டருக்கே உண்டு. மேலும், அந்தப்படி பார்வையிட்டிருந்துங்கூட, ஷை உபகரணங்கள் தகுதியற்றவையென்றாவது சரியாய் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை யென்றாவது வேறெந்த வகையிலாகிலும் ஆட்சேபனைக்குட்பட்டவை யென்றாவது டைரெக்டர் அபிப்பிராயப்படுகிறபட்சத்திலே, அவர் - இந்த இலாகாதார் உதவி செய்வதற்கு அனுமதி கொடுக்கமுடியாதென்று மறுக்கலாம்.

14. உபகரணங்களைப் பிரதமத்தில் அமைக்கும் காரியங்களுக்காகவல்லாமல் வேறே காரியங்களுக்காக இந்த இலாகாவைச் சேர்ந்த என்ஜினீரிங் பிரிவாரின் உதவி வேண்டியதாயிருந்தால், அப்படிப்பட்ட ஊழியங்களுக்காக அடியிற்கண்ட பிரகாரம் தினசரி வீதங்களின்படி கட்டணம் வாங்கப்படும் :—

ஒரு ஸூபர்வைஸருக்கு	முதல் தினத்துக்கு 10 ரூபாயும் அடுத்த ஒவ்வொரு தினத்துக்கும் 6 ரூபாயும்.
ஒரு (மெகானிக்) யந்திர வேலைக்காரருக்கு.	முதல் தினத்துக்கு ரூ. 7–8–0-ம் அடுத்த ஒவ்வொரு தினத்துக்கும் 4 ரூபாயும்.

விண்ணப்பதாரர்கள் உத்தரவாதியாயுள்ள காரணங்களினால் வேலை தொடர்ச்சியாய்ச் செய்யப்படாமல் இடையில் நிறுத்தப்பட்டால், வேலையை மறுபடியும் ஆரம்பித்த பிறகு முதல் தினத்துக்கு ஒரு ஸூபர்வைஸருக்கு 10 ரூபாயும் ஒரு யந்திர வேலைக்காரருக்கு ரூ. 7–8–0-ம் கட்டணம் விதித்து வாங்கப்படும்.

15. 8-வது விதியில் கண்ட ஷரத்துகளின்படி உபகரணங்களை அமைக்கும் வேலையை ஏற்றுக்கொண்டிருந்தால் அந்த வேலை நடந்துவரும்போது, உபகரணங்களை அமைப்பதற்கு வேண்டிய சாமான்கள் சர்ப்பரா செய்வதிலாகிலும் கூலியாள்களைச் சவதரிப்பதிலாகிலும் ஆலசியம் ஏற்படுவது காரணமாக ஸூபர்வைஸராவது யந்திர வேலைக்காரராவது சும்மா இருக்க வேண்டியிருக்கிறதென்று டைரெக்டருக்குத் தோற்றும்பட்சத்திலே, 14-வது விதியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தினசரி வீத முறைப்படி கட்டணம் வாங்கும் உரிமை அவருக்கே உண்டு.

III.—அமைக்கப்பட்ட யந்திர முதலியவைகளைக் கிரமமாய்ப் பார்வையிடுவது.

16. அமைக்கப்பட்ட யந்திர முதலியவைகளைக் கிரமமாய்ப் பார்வையிடுவதற்காக இந்த இலாகாதார் ஏற்பாடு செய்வார்கள். பார்வையிடுவது என்பது - இலாகாதாரின் சௌகரியத்தை அனுசரித்து "முறைப்படி பார்வையிடுவது" என்றும், விண்ணப்பதாரர் அவசரமாய்க் கேட்டுக்கொள்வதன் மேல் "விஷேஷமாய்ப் பார்வையிடுவது" என்றும் இருவகைப்படும்.

17. I-வது, II-வது, III-வது வகுப்புகளுக்காக 10 ரூபாயும், IV-வது V-வது வகுப்புகளுக்காக 50 ரூபாயும் பிரதம கட்டணமாக வாங்கப்படும். மூன்று தரம் முறைப்படி பார்வையிடுவதற்கு வேண்டிய தொகை இதில் அடங்கும். ஆனால், கட்டணத் தொகையளவுக்குப் பூர்த்தியாய்ப் பார்வையிடப்படாவிட்டால், அதில் எவ்வளவும் வாபஸ் செய்யப்படமாட்டது. வருஷத்தில் இரண்டு முறைக்கு மேற்படாமல் யந்திரங்கள் திடீரெனக் கெட்டுப் போகும் விஷயத்தில், பிரத்தியேகமாய் வந்துபோவதற்காகச் செலுத்த வேண்டிய தொகையும் ஷை கட்டணத்தில் அடங்கும். எத்தனை தரம் பார்வையிடுவதற்காக அல்லது போய்ப்பார்ப்பதற்காக பிரதம கட்டணம் உத்தேசிக்கப்பட்டதோ அத்தனை தரத்துக்கு அதிகமாக விசேஷமாய்ப் பார்வையிடவேண்டியிருந்தாலும் போய்ப்பார்க்கவேண்டியிருந்தாலும், அந்தப்படி போய்ப்பார்க்கும் தடவை ஒன்றுக்கு யந்திர வேலைக்காரருக்காக 5 ரூபாய் வீதமும் ஸூபர்வைஸருக்காக ரூ. 7–8–0 வீதமும் கட்டணம் வாங்கப்படும்.

18. போய்ப்பார்ப்பதற்காக ராஜி ஏற்பாடு செய்துகொண்டு செலுத்தப்படும் வருஷாந்தர கட்டணமாவது போய்ப்பார்க்கும் தடவை ஒன்றுக்குச் செலுத்தப்படும் விசேஷ கட்டணமாவது முன்னதாகச் செலுத்தப்பட்டாலொழிய, அமைக்கப்பட்டிருக்கும் எந்த யந்திரங்களும் பார்வையிடப்படமாட்டா. ராஜி ஏற்பாடு செய்துகொண்டு எந்தக் கால அளவுக்காக கட்டணம் செலுத்தப்பட்டிருக்கிறதோ அந்தக் கால அளவு கழிந்துபோவதன் மேல், இலாகாதார் போய்ப்பார்த்துக்கொண்டே வரவேண்டுமென்று விண்ணப்பம் வரப்பெற்றுக்கொள்ளப்படாதிருக்கும் விஷயங்களிலும் ராஜி ஏற்பாடு செய்துகொண்டதன்மேல் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்படாதிருக்கும் விஷயங்களிலும் இலாகாதார் நோடீஸ் அனுப்புவார்கள்.

19. 17-வது விதியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டணங்களுடன்கூட, விண்ணப்பதாரரானவர் - இந்த இலாகாதாரால் செய்யப்படவேண்டிய மராமத்து வேலைக்காக அவசியமாயுள்ள சாமான்களையும் கூலியாட்களையும் சர்ப்பரா செய்யவேண்டியவராவார்.

20. உபகரணங்களைப் பரிசோதித்துப் பார்த்து அவை நல்ல ஸ்திதியில் இருப்பதாகத் தெரியவந்த பிறகே, அவைகளைக் கிரமப்படி ஒழுங்காய்ப் பார்வையிட ஏற்றுக்கொள்ளுவார்கள். உபகரணங்கள் நல்ல ஸ்திதியில் இல்லையென்று தெரியவந்தால், அவைகளுக்கு இன்ன மராமத்துகள் செய்வது அவசியமென்று விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படும். அந்த மராமத்துகள் செய்து முடிக்கப்பட்ட பிறகுதான் கிரமப்படி ஒழுங்காய்ப் பார்வையிட ஏற்றுக்கொள்ளப்படும். இலாகாதாரின் மேற்பார்வையின் கீழ் ஷை மராமத்துகள் செய்து முடிக்கப்படவேண்டுமென்று விண்ணப்பதாரர் விரும்புகிறபட்சத்தில், 14-வது விதியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டணங்கள் செலுத்தப்படுவதன்மேல், அந்தப்படி பார்வையிட ஏற்பாடு செய்யப்படும்.

21. கைத்தொழில் இலாகா டைரக்டர் - எந்த உபகரணங்களேயாவது அமைக்கப்பட்ட எந்த யந்திரங்களேயாவது கிரமப்படி பார்வையிட ஏற்றுக் கொள்ளமுடியாதென்று சொல்லிவிடலாம். அதற்கு அவர் காரணம் சொல்லவேண்டிய அவசியமில்லே.

IV.—(கிணறு முதலியவை தோண்டுவதற்காக) தொளே போடும் உபகரணங்கள்—கையினுல் தொளே போடும் கருவிகள்.

22. கையினுல் தொளே போடும் உபகரணங்களேப்பற்றி விசாரித்து சங்கதிகள் தெரிந்துகொள்ளவேண்டியிருந்தால், முதலில் பிரதேச கைத்தொழில் இலாகா ஸூபர்வைஸருக்காவது, பிரதேச அஸிஸ்டெண்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீருக்காவது 432-ம் நெ. தபால் பெட்டி, சேப்பாக்கம், சென்னே, யென்று மேல்விலாசமிட்டு கைத்தொழில் இலாகா டைரெக்டருக்காவது எழுதித் தெரிந்துகொள்ளவேண்டும்.

23. இந்த இலாகாதார் வசத்தில் இருக்கும் கையினுல் தொளே போடும் கருவிகள் சாதாரண நிலங்களில் 200 முதல் 300 அடி ஆழம் வரையில் சாதாரணமாய் பூமியைத் தொளேக்கும். ஆனல், பாறை நிலங்களில் தொளே போடுவதற்கு இவை தகுதியானவையல்ல. பூமியைப் பின்னும் ஆழமாகத் தொளேக்கவேண்டியிருந்தாலும் பாறை நிலங்களில் தொளே போடவேண்டியிருந்தாலும், சக்தியை உபயோகித்துக் தொளே போடும் கருவியை உபயோகிக்கவேண்டும்—கீழே V-வது பிரிவைப் பார்க்கவும். யாதொரு தொளே கையினுல் தொளேபோடும் கருவியைக்கொண்டு போடப் பட்டதாயிருந்தாலுஞ்சரி சக்தியை உபயோகித்துத் தொளேபோடும் கருவியைக்கொண்டு போடப்பட்டதாயிருந்தாலுஞ்சரி அதனுல் சித்திகரமான பலன் ஏற்படுமென்ருவது, உவர்ப்பில்லாத ஜலம் அல்லது உவரான ஜலம்தான் வெளிப்படுமென்ருவது இந்த இலாகாதார் உத்தரவாதம் செய்யமுடியாது.

வேலே செய்யப்படும் பூமியின் லட்சணத்தைக் கவனிக்கும்போது உபகரணங்களுக்குப் பிரமாதமாய்க் கெடுதி உண்டாகக்கூடுமென்று தெரிய வந்தால், அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீரானவர் - 150 அடிக்கு மேற்பட்ட ஆழத்தில் தொளே போடும் எந்த தசையிலாகிலும் அந்த வேலேயை நிறுத்திவிடலாம். ஏற்படக்கூடிய பலாபலன்களேக் கவனிக்காமலே தொளே போடும் வேலேயை நடத்திக்கொண்டுபோக விண்ணப்பதாரர் இஷ்டப்பட்டு, நேரிடக்கூடிய சகல நஷ்டம் அல்லது சேதத்தையும் இந்த இலாகாதாருக்குக் கட்டிக் கொடுப்பதாக ஒத்துக்கொண்டு டைரெக்டருக்குத் திருப்திகரமாய்ப் பத்திரம் எழுதிக்கொடுக்க அவர் தயாராயிருந்தால், டைரக்டரானவர் - தாம் விதிக்கக்கூடிய திட்டங்களுக்கு உட்பட்டு வேலேயை நடத்திக் கொண்டுபோக தமக்கு யுக்தமாய்த் தோற்றுகிறபடி அனுமதி கொடுக்கலாம்.

24. தொளேபோடுவது சம்பந்தமான சாமான்களேக் கொண்டுபோவதற்குரிய அடியிற்கண்ட கட்டணமும் அடியிற்கண்ட முன்பணத்தொகையும் செலுத்தப்படுவதன்மேல், தொளே போடுவதற்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்கள் ரெஜிஸ்டர் செய்யப்படும் :—

I-வது, II-வது, III-வது வகுப்புகளின்கீழ் வரும் விண்ணப்பங்கள்—சாமான்களே கொண்டுபோவதற்கான கட்டணம் ரூ. 7–8–0-ம், நான்கு தினத்துக்குச் சேரவேண்டிய கட்டணத்தின்பொருட்டு முன் பணம் ரூ. 8-ம்.

IV-வது, V-வது வகுப்புகளின்கீழ் வரும் விண்ணப்பங்கள்—சாமான்களேக் கொண்டுபோவதற்கான கட்டணம் ரூ. 37–8–0-ம், நான்கு தினத்துக்குச் சேரவேண்டிய கட்டணத்தின்பொருட்டு முன் பணம் ரூ. 80-ம்.

ஆயினும், தொளை போடுவதாகச் சொன்ன தேதியிலிருந்து ஐந்து தினத்துக்குள் உபகரணங்களைத் தாமே தம்முடைய சொந்த செலவில் கொண்டுபோகத் தயாராயிருப்பதாக விண்ணப்பதாரர் தம்முடைய விண்ணப்பத்தில் தெரிவித்திருந்தால், சாமான்களைக் கொண்டுபோவதற்காக முன்னதாய்ச் செலுத்தவேண்டிய கட்டணம் வாங்காமல் விட்டுவிடப்படும்.

உபகரணங்களைக்கொண்டு யாதொரு கிணற்றில் வேலை செய்யவேண்டியிருக்கிற விஷயங்களில், வேலை முடிந்த பிறகாவது நிறுத்திவிடப்பட்ட பிறகாவது உபகரணங்களைக் கிணற்றிலிருந்து அப்புறப்படுத்துவதற்காகக் கூலியாள்களைச் சவதரிப்பதில் காலதாமதம் ஏதாகிலும் ஏற்பட்டால் அதற்காகச் செலுத்தவேண்டிய கட்டணத்தின்பொருட்டு பின்னும் முன்பணமாக அதே தொகை செலுத்தவேண்டும்.

25. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இன்ன வரிசைக்கிரமப்படி கவனிக்கப்படுமென்னும் விஷயத்தை, தொளை போடவேண்டிருக்கும் பிரதேசத்தை அனுசரித்து இந்த இலாகாதார் நிச்சயிப்பார்கள். மேலும், தொளை போடும் உபகரணங்கள் இன்ன காலத்தில் விண்ணப்பதாரர்களின் உபயோகத்துக்கு விடப்படுமென்னும் விஷயம் கிரமப்படி அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். தொளை போடவேண்டிய இடத்துக்கு ஷை உபகரணங்களைக் கொண்டுவந்த பிறகு அவை உபயோகிக்கப்படாவிட்டால், அவைகளைக் கொண்டுவருவதற்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் ஏதாவது இருந்தால் அதை இழந்துவிடவேண்டும். ஆனால், முன்பணத் தொகை வாபஸ் செய்யப்படும்.

26. சாமான்களைக் கொண்டுவருவதற்காக வாங்கும் கட்டணமானது - தொளை போட உத்தேசித்திருக்கும் இடத்துக்குக் கருவிகளைக் கொண்டுவருவதற்காகப் பிடிக்கும் செலவைச் செய்ய உத்தேசிக்கப்பட்டது. குறித்த யாதொரு விஷயத்தில் சாமான்களைக் கொண்டுவருவதற்காக என்ன செலவு பிடித்தாலுஞ்சரி ஷை கட்டணத்தில் எவ்வளவும் வாபஸ் செய்யப்படமாட்டாது. மேலும், அந்தப்படி கொண்டுவருவதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துக்கு அதிகமாய்ச் செலவு பிடித்தாலுங்கூட அதற்காகப் பின்னும் கட்டணம் எதுவும் வாங்கப்படமாட்டாது.

27. கையினால் தொளை போடும் கருவிகளை உபயோகிப்பதற்காக, I-வது, II-வது, III-வது வகுப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 2 ரூபாயும் IV-வது V-வது வகுப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 20 ரூபாயும் கட்டணமாகும். இந்தக் கட்டணத்தில் ஷை கருவிகளுக்காகச் செலுத்தவேண்டிய வாடகையும் அவைகளைப் பார்த்துக்கொள்ளும் மேஸ்திரியின் சம்பளமும் அடங்கும். ஆயினும், யந்திரங்களைகொண்டு வேலை செய்வதற்கு அவசியமாயுள்ள கூலியாள்களையும் சாமான்களையும் விண்ணப்பதாரர் சவதரிக்கவேண்டும்.

28. முதலில் செலுத்தப்பட்ட முன்பணத் தொகையில் நான்கு தினத்துக்குச் சேரவேண்டிய கட்டணம் அடங்கும். அது செலவாய்விட்டால், குறைந்த பட்சம், முதலில் செலுத்தப்பட்ட முன்பணத் தொகைக்குச் சமமான பின்னும் முன்பணத் தொகையை உடனே செலுத்தவேண்டும். தொளை போடும் வேலை எந்தக் காரணத்தைக்கொண்டும் கடனுக்குச் செய்யப்படமாட்டாது. ஆகையால், முன்பணத் தொகை செலவாய்விட்ட பிறகு பின்னும் முன்பணத் தொகைகள் உடனே செலுத்தப்பட்டாலொழிய, இந்த வேலை நிறுத்திவிடப்படுவதுமல்லாமல் கருவிகளும் அப்புறப்படுத்தப்படும்.

29. தொளை போடும் வேலை முடிந்தவுடனே, விண்ணப்பதாரருக்கு இன்னும் சேரவேண்டியதாயிருக்கும் தொகை ஏதாகிலும் இருந்தால், அது வாபஸ் செய்துவிடப்படும். கிணற்றில் தொளை போடும் வேலை நடந்திருந்தால், வேலை முடிந்த பிறகு அல்லது நிறுத்திவிடப்பட்ட பிறகு 48 மணி நேரத்துக்குள் பிரஸ்தாப உபகரணங்களைக் கிணற்றிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு விண்ணப்பதாரர் கூலியாள்களைச் சவதரிக்கவேண்டும். அவர் அந்தப்படி செய்யத் தவறிப்போனால், அந்த உபகரணங்களைக் கடைசியாய்க் கிணற்றிலிருந்து அப்புறப்படுத்தி கொண்டுபோவதற்காக வண்டிகளில் ஏற்றுகிற காலம்வரையில், அவர் அதிகப்படியாய் வாடகைத் தொகை செலுத்

தவேண்டியவராவார். 24-வது விதியின்படி அதிகப்படியாய் வாங்கப்படும் முன்பணத் தொகை இதற்காக உபயோகிக்கப்படும். ஆயினும், கூலியாள்களைச் சவதரிப்பதில் ஆலசியம் எதுவும் இருந்திராவிட்டால், பின்னே சொல்லப்பட்ட முன்பணத் தொகை விண்ணப்பதாரருக்கு வாபஸ் செய்துவிடப்படும்.

30. தொளை போடும் கருவிகள் வேலை நடக்கும் இடத்தில் இருந்துவருகிற ஒவ்வொரு தினத்துக்காகவும், முன்பணத் தொகை செலவாய்விட்டது காரணமாகவாவது கூலியாள்களைச் சவதரிப்பதில் ஏற்பட்ட ஆலசியம் காரணமாகவாவது தவிர்க்கப்படத்தக்க இதர காரணங்களினாலாவது எந்த தினங்களில் அந்தக் கருவிகள் வேலையில்லாமல் சும்மா வைத்திருக்கப்படுகின்றனவோ அந்த தினங்களுக்காகவும் ஷெ கருவிகளின் உபயோகத்துக்காகக் கட்டணங்கள் வாங்கப்படும். ஆனால், தற்செயலாய் விபத்து நேரிட்டது காரணமாகவோ பலத்த மழை பெய்தது காரணமாகவோ விண்ணப்பதாரர்களால் தவிர்க்கமுடியாத வேறே காரணங்களினாலோ ஷெ கருவிகளை வேலையில்லாமல் சும்மா வைத்துக்கொண்டிருக்கும் காலத்துக்குக் கட்டணம் எதுவும் வாங்கப்படமாட்டாது. மேலும், அனுமதிக்கப்பட்டிருக்கும் விடுமுறை தினங்களிலாவது பிரதேச சந்தை தினங்களிலாவது வேலையை நிறுத்துவதற்காகக் கட்டணம் எதுவும் வாங்கப்படமாட்டாது. கருவிகள் மாதக் கணக்காய் வாடகைக்கு வாங்கிக்கொள்ளப்பட்டிருக்கும் விஷயங்களில், அனுமதிக்கப்பட்டிருக்கும் விடுமுறை தினங்களிலாவது பிரதேச சந்தை தினங்களிலாவது வேலையை நிறுத்துவதற்காகக் கட்டணங்கள் வாங்கப்படும்.

ஆயினும், கருவிகளுக்காவது லைனிங் ட்யூப் என்னும் குழாய்களுக்காவது தொளைத்தெடுக்கும் துவாரங்களுக்காவது தற்செயலாய்க் கெடுதி நேரிடும் விஷயங்களில், அந்தக் கருவிகளையாகிலும் குழாய்களையாகிலும் மீண்டும் அடையும்பொருட்டு யந்திரங்களைக்கொண்டு வேலை செய்வதற்கு அவசியமாயுள்ள கூலியாள்களையும் சாமான்களையும் விண்ணப்பதாரர் சவதரிக்கவேண்டும். டைரக்டரானவர் - தமக்கு யுக்தமாய்த் தோற்றுகிறபடி, பிடித்த செலவை முழுவதுமாவது சிறிது மட்டிலாவது விசேஷ சந்தர்ப்பங்களில் வசூல் செய்யாமல் விட்டுவிடலாம்.

31. தொளை போட்டதனால் ஏற்பட்ட முடிவுகள் இன்னவையென்று விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படும். மேலும், அங்கே கிடைக்கக்கூடிய தண்ணீரை உபயோகிப்பதற்கு அவர் என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பதைக்குறித்து அவருக்கு யோசனை சொல்லப்படும். ஆயினும், தொளைத்தெடுக்கும் துவாரத்தைச் சோதிப்பதற்கு அவசியமாயுள்ள கூலியாள்களையும் சமான்களையும் விண்ணப்பதாரர் சவதரிக்கவேண்டும்.

32. (ஆர்டீஷியன்) ஊற்றுத் தண்ணீராவது (ஸப்-ஆர்டீஷியன்) கீழ் ஊற்றுத் தண்ணீராவது காணப்படும் விஷயங்களில், லைனிங் ட்யூப் என்னும் குழாய்களைத் தொளைத்தெடுக்கும் துவாரத்திலேயே விட்டுவிடவேண்டுமென்று விண்ணப்பதாரர் விரும்புகிறபட்சத்திலே, அவை அப்படியே விட்டுவிடப்படும் ; குழாய்களின் விலையை அவர் ஏற்றுக்கொள்ளவேண்டும். தொளை போட்டது சித்திகரமாயிராத விஷயங்களில், விண்ணப்பதாரர் - லைனிங் ட்யூப் என்னும் குழாய்களைத் தொளைத்தெடுக்கும் துவாரத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்குக் கூலியாள்களைச் சவதரிக்கவேண்டும்.

33. கையினால் தொளை போடும் உபகரணங்களை அடியிற்கண்ட வீதங்களின்படி முன்பணம் செலுத்தி மாதக் கணக்காகவும் வாடகைக்கு எடுத்துக்கொள்ளலாம் :—

	I-வது II-வது III-வது வகுப்புகளுக்காக.	IV-வது, V-வது வகுப்புகளுக்காக.
ஒரு மாதம் வரையிலுள்ள கால அளவுகளுக்கு.	மாதம் ஒன்றுக்கு 40 ரூபாய்க்கு மேற்படாமல் தினம் ஒன்றுக்கு 2 ரூபாய்.	மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய்க்கு மேற்படாமல் தினம் ஒன்றுக்கு 20 ரூபாய்.
ஒரு மாதத்துக்கு மேற்பட்டு மூன்று மாதத்துக்கு மேற்படாதிருக்கும் கால அளவுகளுக்கு.	100 ரூபாய்க்கு மேற்படாமல், மாதம் ஒன்றுக்கு 40 ரூபாய்.	1,000 ரூபாய்க்கு மேற்படாமல் மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய்.

	I-வது II-வது, III-வது வகுப்புகளுக்காக.	IV-வது, V-வது வகுப்புகளுக்காக.
ஆறு மாதத்துக்கு மேற்படாத கால அளவுகளுக்கு.	முழுகால அளவுக்கும் 200 ரூபாய்க்கு மேற்படாமல், முதல் மூன்று மாதத்துக்கு 100 ரூபாயும், மீதியுள்ள காலத்துக்கு மாதம் ஒன்றுக்கு 40 ரூபாயும்.	முழுகால அளவுக்கும் 2,000 ரூபாய்க்கு மேற்படாமல், முதல் மூன்று மாதத்துக்கு 1,000 ரூபாயும், மீதியுள்ள காலத்துக்கு மாதம் ஒன்றுக்கு 400 ரூபாயும்.
ஆறு மாதத்துக்கு மேற்பட்ட காள அளவுகளுக்கு.	மூன்று மாதம் கொண்ட பிரதி கால அளவுக்கும் 100 ரூபாய்க்கு மேற்படாமல், முதல் ஆறு மாதத்துக்கு 200 ரூபாயும், மீதியுள்ள காலத்துக்கு மாதம் ஒன்றுக்கு 40 ரூபாயும்.	மூன்று மாதம் கொண்ட பிரதி காள அளவுக்கும் 1,000 ரூபாய்க்கு மேற்படாமல், முதல் ஆறு மாதத்துக்கு 2,000 ரூபாயும், மீதியுள்ள காலத்துக்கு மாதம் ஒன்றுக்கு 400 ரூபாயும்.

(இந்தக் கட்டணங்களில் உபகரணங்களைக் கொண்டுபோவதற்காகச் செலுத்தும் கட்டணம் அடங்காது.)

34 கையினால் வேலை செய்யும் தொளை போடும் கருவிகளைக்கொண்டு தொளை போட்டது சித்திகரமாயிராத விஷயத்தில் விண்ணப்பதாரர்கள் முன் பணமாகச் செலுத்தின தொகையும் அன்றாட வாடகையும் வாபஸ் செய்து விடப்படும். ஆனால், சாமான்களைக் கொண்டுபோவதற்காக அவர்கள் செலுத்தின தொகைகள் வாபஸ் செய்யப்படமாட்டா. தொளை போட்டது சித்திகரமாயிருக்கிறதா இல்லையா என்பது ஒவ்வொரு விஷயத்தின் சந்தர்ப்பங்களையும் அனுசரித்து கைத்தொழில் இலாகா டைரக்டரால் தீர்மானிக்கப்படும். அவருடைய தீர்மானம் முடிவானதாகும். போட்ட தொளையிலிருந்து உவரான அல்லது உப்பான தண்ணீர் வெளிப்பட்டால், அது சித்திகரமற்றதாயிருப்பதாகக் கருதப்படமாட்டாது. மேலும், அப்படிப்பட்ட விஷயங்களில் எந்தத் தொகையும் வாபஸ் செய்யப்படமாட்டாது.

35. கைத்தொழில் இலாகா டைரக்டரானவர் - எவ்விடத்திலாகிலும் தொளை போட மறுத்து, விண்ணப்பதாரர் தொகை ஏதேனும் செலுத்தியிருந்தால் அதை அவருக்கு வாப்ஸ் செய்துவிடலாம். அந்தப்படிச் செய்வதற்கு அவர் காரணம் எதுவும் சொல்லவேண்டியதில்லை.

V.—(கிணறு முதலியவை தோண்டுவதற்காக) தொளை போடும் உபகரணங்கள்—சக்தியை உபயோகித்துத் தொளை போடும் கருவிகள்.

36. சக்தியை உபயோகித்துத் தொளை போடுதவற்காக இந்த இலாகா தாரிடத்தில் இருக்கும் கருவிகள் - எப்படிப்பட்ட பாறையாயிருந்தாலுஞ்சரி, சாதாரணமாய் 500 அடி ஆழத்துக்குப் பூமியைத் தொளைக்கும். வேலை செய்யப்படும் பூமியின் லட்சணத்தைக் கவனிக்கும்போது தொளை போடும் கருவிக்குப் பிரமாதமாய்க் கெடுதி உண்டாக்ககூடுமென்று தெரியவந்தால், அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீர்கள் 350 அடிக்கு மேற்பட்ட ஆழத்தில் தொளை போடும் எந்த தசையிலாகிலும் அந்த வேலையை நிறுத்திவிடலாம். ஏற்படக்கூடிய பலாபலன்களைப்பற்றிக் கவனிக்காமலே தொளை போடும் வேலையை நடத்த விண்ணப்பதாரர் இஷ்டப்பட்டு, நேரிடக்கூடிய சகல நஷ்டம் அல்லது சேதத்தையும் இலாகாதாருக்குத் கட்டிக்கொடுப்பதாக ஒத்துக்கொண்டு டைரெக்டருக்குத் திருப்திகரமாய்ப் பத்திரம் எழுதிக்கொடுக்க அவர் தயாராயிருந்தால், டைரெக்டரானவர் - தாம் விதிக்கக்கூடிய திட்டங்களுக்கு உட்பட்டு வேலையை நடத்திக்கொண்டுபோக தமக்கு யுத்தமாய்த் தோற்றுகிறபடி அனுமதி கொடுக்கலாம்.

37. சக்தியை உபயோகித்துத் தொளை போடும் கருவிகளைப்பற்றி விசாரித்து சங்கதிகள் தெரிந்துகொள்ளவேண்டியிருந்தால், பிரதேச கைத்தொழில் இலாகா ஸூபர்வைஸருக்காவது, பிரதேச அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீருக்காவது, 432-ம் ந. தபால்பெட்டி, சேப்பாக்கம், சென்னையென்று மேல்விலாசமிட்டு கைத்தொழில் இலாகா டைரெக்டருக்காவது எழுதித் தெரிந்துகொள்ளவேண்டும்.

38. முதலில் கட்டணங்களாவது முன்பணத் தொகைகளாவது செலுத்தும்படிக் கேட்கப்படமாட்டாது. ஆனால், சக்தியைக்கொண்டு தொளைபோடும் கருவிகளை உபயோகிப்பதற்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களைக் குறித்து ரெஜிஸ்டர் ஒன்று வைத்துவரப்படும்.

39. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இன்ன வரிசைக்கிரமப்படி கவனிக்கப்படுமென்னும் விஷயத்தைத் தொளை போடவேண்டியிருக்கும் பிரதேசத்தை அனுசரித்துக் கைதொழில் இலாகா டைரெக்டர் தீர்மானிப்பார். சக்தியை உபயோகித்துத் தொளை போடும் கருவி இன்ன காலத்தில் விண்ணப்பதாரர்களின் உபயோகத்துக்கு விடப்படுமென்னும் விஷயம் கிரமப்படி அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். அது சம்பந்தமான நோடிஸ் வந்து சேர்ந்தவுடனே விண்ணப்பதாரர் அதை கொண்டுவருவதற்காகச் செலுத்த வேண்டிய அடியிற்கண்ட கட்டணத்தையும் அடியிற்கண்ட முன்பணத் தொகையையும் அனுப்பவேண்டும் :—

I-வது, II-வது, III-வது வகுப்புகளின்கீழ் வரும் விண்ணப்பதாரர்—சாமான்களை கொண்டுபோவதற்கான கட்டணம் 75 ரூபாயும் முன் பணத் தொகை 100 ரூபாயும்.

IV-வது, V-வது வகுப்புகளின்கீழ் வரும் விண்ணப்பதாரர்—சாமான்களை கொண்டுபோவதற்கான கட்டணம் 150 ரூபாயும் முன்பணத் தொகை 1,000 ரூபாயும்

நோடிஸ் வந்து சேர்ந்த பிறகு ஐந்து தினத்துக்குள் ஷை தொகை செலுத்தப்படாவிட்டால், விண்ணப்பம் ரத்துசெய்யப்பட்டதாக பாவிக்கப்படும்.

ஆயினும், உபகரணங்கள் வாடகைக்குக் கொடுக்கப்படுவதற்குச் சித்தமாயிருக்கின்றனவென்று நோடிஸ் வரப்பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஐந்து தினத்துக்குள் தொளை போடும் கருவியைத் தாமே தம்முடைய சொந்த செலவில் கொண்டுபோகத் தயாராயிருப்பதாக விண்ணப்பதாரர் தம்முடைய விண்ணப்பத்தில் தெரிவித்தால், சாமான்களைக்கொண்டு போவதற்காக முன்பணமாய்ச் செலுத்தவேண்டிய கட்டணம் வாங்காமல் விட்டுவிடப்படும்.

40. குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் உபகரணங்களைத் தாங்களே கொண்டு போக விண்ணப்பதாரர்கள் ஏற்றுக்கொள்ளுகிற விஷயங்களில் தவிர மற்ற விஷயங்களில், தொளை போட உத்தேசித்திருக்கும் இடத்துக்குத் தொளை போடும் கருவியைக் கொண்டுபோவதற்காக இந்த இலாகாதார் சாதாரணமாய் ஏற்பாடு செய்வார்கள். சாமான்களைக் கொண்டுபோவதற்காக வாங்கும் கட்டணமானது - அவைகளை எடுத்துகொண்டுபோவதற்காகப் பிடிக்கும் செலவைச் செய்ய உத்தேசிக்கப்பட்டது. குறித்த யாதொரு விஷயத்தில் சாமான்களைக் கொண்டுவருவதற்காக என்ன செலவு பிடித்தாலுஞ்சரி, ஷை கட்டணத்தில் எவ்வளவும் வாபஸ் செய்யப்படமாட்டாது. மேலும், அந்தப்படி கொண்டுவருவதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துக்கு அதிகமாய்ச் செலவு பிடித்தாலும்கூட அதற்காகப் பின்னும் கட்டணம் எதுவும் வாங்கப்படமாட்டாது. தொளை போடும் கருவி பிரஸ்தாப இடத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது உபயோகிக்கப்படாவிட்டால், அதைக் கொண்டுவருவதற்காகச் செலுத்தப்பட்ட கட்டணத்தை இழந்துவிடவேண்டும்.

41. சக்தியைக்கொண்டு தொளை போடும் கருவியை உபயோகிப்பதற்காக, I-வது, II-வது, III-வது வகுப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 6 ரூபாய் கட்டணமாகும் ; ஆனால், இது ஒரு தடவைக்கு 30 ரூபாய்க்குக் குறைவாய் வாங்கப்படமாட்டாது ; IV-வது, V-வது வகுப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 60 ரூபாய் கட்டணமாகும் ; ஆனால், இது ஒரு தடவைக்கு 300 ரூபாய்க்குக் குறைவாய் வாங்கப்படமாட்டாது. இந்தக் கட்டணத்தில், தொளை போடும் கருவியை உபயோகிப்பதற்காக வாடகையும் அதை வைத்து வேலை செய்வதற்கு அவசியமாயுள்ள பழக்கப்பட்ட சிப்பந்தியின் சம்பளமும் அடங்கும். கூலியாள்கள், விறகு, எண்ணெய், இதர சாமான்கள்

ஆகிய இவைகளுக்குப் பிடிக்கும் செலவைப்போன்ற பிரஸ்தாப வேலைக்குச் சம்பந்தப்பட்ட மற்ற சகல செலவுகளையும் விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

42. பிரதமத்தில் செலுத்தப்படும் முன்பணத் தொகையில் தொளை போடும் கருவியைச் சுமார் பதினைறு தினங்களுக்கு உபயோகிப்பதற்கான வாடகையும் அடங்கும், அது செலவாய்விட்டால், பிரதம முன்பணத்தொகையில் பாதிக்குக் குறையாத பின்னும் முன்பணத் தொகைகளை உடனே செலுத்தவேண்டும். தொளைபோடும் வேலை எந்தக் காரணத்தைக்கொண்டும் கடனுக்குச் செய்யப்படமாட்டாது. ஆகையால் முன்பணத் தொகை செலவாய்விட்ட பிறகு பின்னும் முன்பணத் தொகைகள் உடனே கிரமமாய்ச் செலுத்தப்பட்டாலொழிய வேலை நிறுத்திவிடப்படுவதுமல்லாமல் தொளை போடும் கருவியும் அப்புறப்படுத்திவிடப்படும்.

43. தொளை போடும் வேலை முடிவாவதன்மேல், விண்ணப்பதாரருக்கு இன்னும் சேரவேண்டியதாயிருக்கும் தொகை ஏதாகிலும் இருந்தால், அது வாபஸ் செய்துவிடப்படும். ஆனால், அந்தப்படி வாபஸ் செய்யும்போது 41-வது விதியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் அதம கட்டணத்தொகையை கழித்துக்கொண்டு வாபஸ் செய்யப்படும்.

44. தொளை போடும் கருவி வேலை நடக்கும் இடத்தில் இருந்துவரும் ஒவ்வொரு தினத்துக்காகவும் முன்பணத் தொகை செலவாய்விட்டது காரணமாகவாவது, கூலியாள்களையும் விறகு முதலிய சாமான்களையும் சவதரிப்பதில் ஏற்பட்ட ஆலசியம் காரணமாகவாவது தவிர்க்கப்படத்தக்க இதர காரணங்களினலாவது எந்த தினங்களில் தொளை போடும் கருவி வேலையில்லாமல் சும்மா வைத்திருக்கப்படுகிறதோ அந்த தினங்களுக்காகவும் ஷை கருவியின் உபயோகத்துக்காகக் கட்டணம் வாங்கப்படும். தற்செயலாய் விபத்து நேரிட்டது காரணமாகவோ, பலத்த மழை பெய்தது காரணமாகவோ, விண்ணப்பதாரர்களால் தவிர்க்கமுடியாத வேறே காரணங்களினலோ ஷை கருவியை வேலையில்லாமல் சும்மா வைத்துக்கொண்டிருக்கும் காலத்துக்குக் கட்டணம் எதுவும் வாங்கப்படமாட்டாது. மேலும், அனுமதிக்கப்பட்டிருக்கும் விடுமுறை தினங்களிலாவது பிரதேச சந்தை தினங்களிலாவது வேலையை நிறுத்துவதற்காகக் கட்டணம் எதுவும் வாங்கப்படமாட்டாது. ஆயினும், கருவிகளுக்காவது லைனிங் ட்யூப் என்னும் குழாய்களுக்காவது தொளைத்தெடுக்கும் துவாரங்களுக்காவது தற்செயலாய்க் கெடுதி நேரிடும் விஷயங்களில், அந்தக் கருவிகளையாகிலும் குழாய்களையாகிலும் மீண்டும் அடையும்பொருட்டு, உபகரணங்களைக்கொண்டு வேலை செய்வதற்கு அவசியமாயுள்ள கூலியாள்களையும் விறகையும் எண்ணெய் முதலியசாமான்களையும் விண்ணப்பதாரர் சவதரிக்கவேண்டும். கைத்தொழில் இலாகா டைரெக்டரானவர்-தமக்கு யுக்தமாய்த் தோற்றுகிறபடி, பிடித்த செலவை முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது விசேஷ சந்தர்ப்பங்களில் வசூல் செய்யாமல் விட்டுவிடலாம்.

45. தொளை போட்டதனுல் ஏற்பட்ட முடிவுகள் இன்னவையென்று விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படும். மேலும், அங்கே கிடைக்கக்கூடிய தண்ணீரை உபயோகிப்பதற்கு அவர் என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பதைக்குறித்து அவருக்கு யோசனை சொல்லப்படும். ஆயினும், தொளைத்தெடுக்கும் துவாரத்தைப் பரிசோதிப்பதற்கு அவசியமாயுள்ள கூலியாள்களையும் சாமான்களையும் விண்ணப்பதாரர் சவதரிக்கவேண்டும்.

46. (ஆர்டீஷியன்) ஊற்றுத் தண்ணீராவது (ஸப்-ஆர்டீஷியன்) கீழ் ஊற்றுத் தண்ணீராவது காணப்படும் விஷயங்களில், லைனிங் ட்யூப் என்னும் குழாய்களைத் தொளைத்தெடுக்கும் துவாரத்திலேயே விட்டுவிடவேண்டுமென்று விண்ணப்பதாரர் விரும்புகிறபட்சத்திலே, அவைகள் அப்படியே விட்டுவிடப்படும்; மேலும், குழாய்களின் விலையை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். தொளை போட்டது சித்திகரமாயிராத விஷயங்களில், விண்ணப்பதாரர்கள் - லைனிங் ட்யூப் என்னும் குழாய்களைத் தொளைத்தெடுக்கும் துவாரத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு அவசியமாயுள்ள கூலியாள்களையும் விறகையும் எண்ணெய் முதலிய சாமான்களையும் சவதரிக்கவேண்டும்.

47. கைத்தொழில் இலாகா டைரெக்டரானவர் - எவ்விடத்திலாகிலும் தொளை போட மறுத்து, விண்ணப்பதாரர் தொகை ஏதேனும் செலுத்தியிருந்தால் அதை அவருக்கு வாபஸ் செய்துவிடலாம். அந்தப்படி செய்வதற்கு அவர் காரணம் எதுவும் சொல்லவேண்டியதில்லை.

VI.—பம்பிங் ப்ளான்ட் என்னும் தண்ணீர் இறைப்பதற்கான உபகரணங்கள்.

48. இந்த இலாகாதாரிடத்தில் இருக்கும் என்ஜின்களைக்கொண்டு மொத்தத்தில் 50 அடி உயரத்துக்குத் தண்ணீர் ஏறவேண்டியிருந்தால் நிமிஷம் ஒன்றுக்கு 150 காலன் முதல் 325 காலன் வரையில் தண்ணீர் இறைக்கலாம். சோதித்துப் பார்ப்பதற்கான அதிக வேகமுடைய என்ஜின்களைக் கொண்டு ஒரே தடவையில் 4 மணி நேரத்துக்கு அதிகமாகவாகிலும், ஒரு பகல் ஒரு ராத்திரியில், அதாவது 24 மணி நேரத்தில், 8 மணி நேரத்துக்கு அதிகமாகவாகிலும் வேலை செய்யப்படமாட்டாது. (க்ரூட் ஆயில் என்னும் சுத்தி செய்யப்படாத எண்ணெயைக்கொண்டு வேலை செய்யப்படும்.) சாதாரணமான தண்ணீர் இறைக்கும் என்ஜின்களுக்குங்கூட இந்த விதியின் பிற்பகுதி பிரயோகப்படுகிறது.

49. தண்ணீர் இறைக்கும் உபகரணங்களைப்பற்றி விசாரித்து சங்கதிகள் தெரிந்துகொள்ளவேண்டியிருந்தால், பிரதேச கைத்தொழில் இலாகா ஸூபர்வைஸருக்காவது, பிரதேச அஸிஸ்டன்ட் இண்டஸ்ரியல் என்ஜினீருக்காவது, 432-ம் நெ. தபால் பெட்டி, சேப்பாக்கம், சென்னை, யென்று மேல் விலாசமிட்டு கைத்தொழில் இலாகா டைரெக்டருக்காவது எழுதித் தெரிந்துகொள்ளவேண்டும்.

50. முதலில் கட்டணங்களாவது முன்பணத் தொகைகளாவது செலுத்தும்படிக் கேட்கப்படமாட்டாது. ஆனால், தண்ணீர் இறைக்கும் என்ஜின்களை உபயோகிப்பதற்காக விண்ணப்பம் செய்துகொள்பவர்களைக் குறித்த ரெஜிஸ்டர் ஒன்று வைத்துவரப்படும்.

51. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இன்ன வரிசைக்கிரமப்படி கவனிக்கப்படுமென்னும் விஷயத்தை ஷ உபகரணங்களை உபயோகிக்க வேண்டியிருக்கும் பிரதேசத்தை அனுசரித்து அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீர் தீர்மானிப்பார். மேலும், தண்ணீர் இறைக்கும் உபகரணங்கள் இன்ன காலத்தில் விண்ணப்பதாரர்களின் உபயோகத்துக்கு விடப்படுமென்னும் விஷயம் கிரமப்படி அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். அது சம்பந்தமான நோடிஸ் வந்து சேர்ந்தவுடனே, I-வது, II-வது, III-வது வகுப்புகளின் விஷயத்தில், விண்ணப்பதாரர் அவைகளைக் கொண்டுவருவதற்காகச் செலுத்தப்படும் கட்டணம் 50 ரூபாயும் முன்பணத் தொகை 20 ரூபாயும் செலுத்தவேண்டும். IV-வது, V-வது வகுப்புகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள், உபகரணங்களைக் கொண்டுவருவதற்காக 100 ரூபாயும் முன்பணத் தொகை 200 ரூபாயும் செலுத்தவேண்டும். நோடிஸ் வந்து சேர்ந்த பிறகு ஐந்து தினத்துக்குள் ஷ தொகை செலுத்தப்படாவிட்டால், விண்ணப்பமானது ரத்துசெய்யப்பட்டதாக பாவிக்கப்படும். ஆயினும், உபகரணங்களைக் கொடுப்பதாகச் சொன்ன தேதியிலிருந்து ஐந்து தினத்துக்குள் உபகரணங்களைத் தாமே தம்முடைய சொந்த செலவில் கொண்டுபோகத் தயாராயிருப்பதாக விண்ணப்பதாரர் தம்முடைய விண்ணப்பத்தில் தெரிவித்தால், சாமான்களைக் கொண்டுபோவதற்காக முன்பணமாய்ச் செலுத்தவேண்டிய கட்டணம் வாங்காமல் விட்டுவிடப்படும்.

52. குறிப்பிட்ட காலத்துக்குள் உபகரணங்களைத் தாங்களே கொண்டுபோக விண்ணப்பதாரர்கள் ஏற்றுக்கொள்ளுகிற விஷயங்கள் தவிர மற்ற விஷயங்களில், உபகரணங்களைப் பிரஸ்தாப ஸ்தலத்துக்குக் கொண்டுவருவதற்காக இந்த இலாகாதார் சாதாரணமாய் ஏற்பாடு செய்வார்கள். உபகரணங்களைக் கொண்டுவருவதற்காக வாங்கும் கட்டணமானது அவைகளைக் கொண்டுவருவதற்காகப் பிடிக்கும் செலவைச்செய்ய உத்தேசிக்கப்பட்டது. குறித்த யாதொரு விஷயத்தில் உபகரணங்களைக் கொண்டுவருவதற்காக

என்ன செலவு பிடித்தாலுஞ்சரி ஷை கட்டணத்தில் எவ்வளவும் வாபஸ் செய்யப்படமாட்டாது. மேலும், அந்தப்படி கொண்டுவருவதற்காக மேற்படி தொகைக்கு அதிகமாய்ச் செலவு பிடித்தாலுங்கூட அதற்காக அதிகப்படியாய்க் கட்டணம் எதுவும் வாங்கப்படமாட்டாது. ஷை உபகரணங்கள் பிரஸ்தாப இடத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், அவைகளைக் கொண்டுவருவதற்காகச் செலுத்தப்பட்ட கட்டணத்தை இழந்துவிடவேண்டும்.

53. தண்ணீர் இறைக்கும் உபகரணங்களை உபயோகிப்பதற்காக,—I-வது, II-வது, III-வது வகுப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 3 ரூபாய் கட்டணமாகும் ; ஆனால், இது ஒரு தடவையில் 15 ரூபாய்க்குக் குறைவாக வாங்கப்படமாட்டாது ; IV-வது, V-வது வகுப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 30 ரூபாய் கட்டணமாகும் ; ஆனால், இது ஒரு தடவைக்கு 150 ரூபாய்க்குக் குறைவாக வாங்கப்படமாட்டாது. இந்தக் கட்டணத்தில் பிரஸ்தாப உபகரணங்களை உபயோகிப்பதற்கு வாடகையும் அவைகளைப் பார்த்துக்கொள்ளும் பழக்கப்பட்ட ட்ரைவரின் (ஓட்டுகிறவரின்) சம்பளமும் அடங்கும். கூலியாள்களுக்கும் விறகுக்கும் எண்ணெய் முதலிய சாமான்களுக்கும் பிடிக்கும் செலவைப் போன்ற இந்த வேலைக்குச் சம்பந்தப்பட்ட மற்ற சகல செலவுகளையும் விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

54. பிரதமத்தில் செலுத்தப்படும் முன்பணத் தொகையில் இந்த உபகரணங்களைச் சுமார் ஆறு தினங்களுக்கு உபயோகிப்பதற்கு வாடகையும் அடங்கும். அது செலவாய்விட்டால், பிரதமத்தில் செலுத்தப்பட்ட முன்பணத் தொகைக்குக் குறைந்தபட்சம் சரியான பின்னும் முன்பணத் தொகைகளை உடனே செலுத்தவேண்டும். தண்ணீர் இறைக்கும் வேலை எந்தக் காரணத்தைக்கொண்டும் கடனுக்குச் செய்யப்படமாட்டாது. ஆகையால், முன்பணத் தொகை செலவாய்விட்ட பிறகு பின்னும் முன்பணத் தொகைகள் உடனே கிரமமாய்ச் செலுத்தப்பட்டாலொழிய, வேலை நிறுத்தி விடப்படுவதுமல்லாமல் ஷை உபகரணங்களும் அப்புறப்படுத்திவிடப்படும்.

55. தண்ணீர் இறைக்கும் வேலை முடிவாவதன்மேல், விண்ணப்பதாருக்கு இன்னும் சேரவேண்டியதாயிருக்கும் தொகை ஏதாகிலும் இருந்தால், அது வாபஸ் செய்துவிடப்படும். ஆனால், அந்தப்படி வாபஸ் செய்யும்போது 53-வது விதியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் அதம கட்டணத் தொகையைக் கழித்துக்கொண்டு வாபஸ் செய்யப்படும்.

56. தண்ணீர் இறைக்கும் வேலை நடக்கும் இடத்தில் ஷை உபகரணங்கள் இருந்துவரும் ஒவ்வொரு தினத்துக்காகவும், முன்பணத் தொகை செலவாய்விட்டது காரணமாகவாவது, கூலியாள்களையும் விறகையும் சவதரிப்பதில் ஏற்பட்ட ஆலசியம் காரணமாகவாவது தவிர்க்கப்படத்தக்க இதர காரணங்களினாலாவது எந்த தினங்களில் தண்ணீர் இறைப்பதற்கான உபகரணங்கள் வேலையில்லாமல் சும்மா வைத்திருக்கப்படுகின்றனவோ அந்த தினங்களுக்காகவும் அவைகளின் உபயோகத்துக்காகக் கட்டணம் வாங்கப்படும். தற்செயலாய் விபத்து நேரிட்டது காரணமாகவோ, பலத்த மழை பெய்தது காரணமாகவோ, விண்ணப்பதாரர்களால் தவிர்க்கமுடியாத இதர காரணங்களினாலோ ஷை உபகரணங்களை வேலையில்லாமல் சும்மா வைத்துக் கொண்டிருக்கும் காலத்துக்குக் கட்டணம் எதுவும் வாங்கப்படமாட்டாது. மேலும், அனுமதிக்கப்பட்ட விடுமுறை தினங்களிலாவது பிரதேச சந்தை தினங்களிலாவது வேலையை நிறுத்துவதற்காகக் கட்டணம் எதுவும் வாங்கப்படமாட்டாது. கருவிகள் மாதக்கணக்காய் வாடகைக்கு வாங்கிக்கொள்ளப்பட்டிருக்கும் விஷயங்களில், அனுமதிக்கப்பட்டிருக்கும் விடுமுறை தினங்களிலாவது பிரதேச சந்தை தினங்களிலாவது வேலையை நிறுத்துவதற்காகக் கட்டணங்கள் வாங்கப்படும்.

ஆயினும், என்ஜினுக்காவது கிணற்றுக்காவது தற்செயலாய்க் கெடுதி நேரிடும் விஷயங்களில், கிணற்றிலிருந்து உபகரணங்களை அப்புறப்படுத்துவதற்கு அவசியமாயுள்ள கூலியாள்கள் முதலியவற்றை விண்ணப்பதாரர் சவதரிக்கவேண்டும். டைரெக்டரானவர் - தமக்கு யுக்தமாய்த் தோற்றுகிறபடி, பிடித்த செலவை விசேஷ சந்தர்ப்பங்களில் வசூலிக்காமல் விட்டுவிடலாம்.

57. உபகரணங்கள் வேண்டியிருக்கும் நபரால் சவதரிக்கப்படும் திரவரூபமாயுள்ள எரி வஸ்துவை உபயோகித்து வேலை செய்யும் சில விசேஷமான தண்ணீர் இறைக்கும் உபகரணங்கள்கூட இந்த இலாகாதாரிடத்தில் கிடைக்கும். ஆனால், அவைகளுக்கு அடியிற்கண்ட திட்டங்களின்படி மாத வாடகை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும் :—

	I-வது, II-வது, III-வது வகுப்புகளுக்காக.	IV-வது, V-வது வகுப்புகளுக்காக.
	ரூ.	ரூ.
ஒரு மாதத்துக்கு	75	750
மூன்று மாதத்துக்கு ..	200	2,000
ஆறு மாதத்துக்கு	400	4,000

குறிப்பிட்ட காலத்துக்குள் உபகரணங்களைத் தாங்களே கொண்டுபோக விண்ணப்பதாரர்கள் ஏற்றுக்கொள்ளுகிற விஷயங்கள் தவிர மற்ற விஷயங்களில் ஷெ தொகையுடன்கூட, உபகரணங்களைக் கொண்டுவருவதற்காகப் பிடிக்கும் செலவின்பொருட்டு 51-வது விதியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டணமும் வாங்கப்படும். மற்ற விஷயங்களில், மாத வாடகைக்குச் சம்பந்தப்பட்ட திட்டங்கள் தின வாடகைக்குச் சம்பந்தப்பட்ட திட்டங்களைப்போலவேயிருக்கும். விண்ணப்பதாரர்கள் - வாடகைக்கு வாங்கிக்கொள்ளும் கால அளவை, மேற்கண்ட வீத நிர்ணயப்படி ஏற்படும் வித்தியாசத்தைச் செலுத்தி அதிகப்படுத்திக்கொள்ளலாம். ஆனால், வாடகைக்கு வாங்கிக்கொள்ளும் கால அளவு தொடர்ச்சியாயிருக்கவேண்டும்.

58. கைத்தொழில் இலாகா டைரெக்டரானவர் - தண்ணீர் இறைப்பதற்கான உபகரணங்களை வாடகைக்குக் கொடுக்க மறுத்து, விண்ணப்பதாரர் ஏதாகிலும் தொகை செலுத்தியிருந்தால் அதை அவருக்கு வாபஸ் செய்துவிடலாம். அந்தப்படி செய்யும்போது அவர் காரணம் எதுவும் சொல்லவேண்டியதில்லை.

VII.—வெடிமருந்து முதலியவைகளைக்கொண்டு கற்பாறைகளை உடைப்பதற்கான உபகரணங்கள்.

59. இந்த இலாகாதாரிடத்தில் இருக்கும் (கற்பாறைகளை) உடைப்பதற்கான உபகரணங்கள் - தண்ணீர் சர்ப்பராவின் அளவை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் கிணறுகளிலோ தொளைத்தெடுக்கும் துவாரங்களிலோ இருக்கும் பாறையை வெடிமூலமாய் உடைப்பதற்காக உத்தேசிக்கப்பட்டவை. வெடிமூலமாய் உடைக்கும் முறையானது கெட்டியாயிருக்கும் பாறை நிலங்களில் மாத்திரமே சாதாரணமாக உபயோகமாயிருக்கும்.

60. (கற்பாறைகளை) உடைப்பதற்கான உபகரணங்களைப்பற்றி விசாரித்து சங்கதிகள் தெரிந்துகொள்ளவேண்டியிருந்தால், பிரதேச கைத்தொழில் இலாகா ஸூபர்வைஸருக்காவது, பிரதேச அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீருக்காவது, 432-ம் நெ. தபால் பெட்டி, சேப்பாக்கம், சென்னையென்று மேல்விலாசமிட்டு கைத்தொழில் இலாகா டைரெக்டருக்காவது எழுதித் தெரிந்துகொள்ளவேண்டும்.

61. இந்த உபகரணங்களை உபயோகிப்பதற்காகச் செய்துகொள்ளும் விண்ணப்பங்கள் I-வது, II-வது, III-வது வகுப்புகளுக்காக 10 ரூபாயும் IV-வது, V-து வகுப்புகளுக்காக 15 ரூபாயும் முன்பணத் தொகை செலுத்தப்படுவதன்மேல் ரெஜிஸ்டர் செய்யப்படும். ரெஜிஸ்டர் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இன்ன வரிசைக்கிரமப்படி கவனிக்கப்படுமென்னும் விஷயத்தைப் கற்பாறைகளையும் உடைக்கவேண்டியிருக்கும் பிரதேசத்தை அனுசரித்து அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீர் தீர்மானிப்பார். மேலும், இந்த உபகரணங்கள் இன்ன காலத்தில் விண்ணப்பதாரர்களின் உபயோகத்துக்கு விடப்படுமென்னும் விஷயம் அவர்களுக்குக் கிரமமாய்த் தெரிவிக்கப்படும். கற்பாறைகளை உடைப்பதற்கான உபகரணங்கள் கொடுக்கப்படும்போது ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், முன்பணத் தொகையை இழந்துவிடவேண்டும்.

62. ஒரு தடவை கற்பாறைகளை உடைப்பதற்குப் பிடிக்கும் செலவு ஷெ முன்பணத் தொகையில் அடங்கியிருக்கிறது. அதிகப்படியாய் கற்பாறைகளை உடைக்கும் ஒவ்வொரு தடவைக்கும் I-வது, II-வது, III-வது வகுப்புகளுக்காக ரூ. 7-8-0ம் IV-வது, V-வது வகுப்புகளுக்காக ரூ. 12-8-0 ம் கட்டணம் வாங்கப்படும்.

63. கற்பாறைகளை உடைத்ததனுல் ஏற்பட்ட முடிவுகள் இன்னவையென்று விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படும். மேலும், அவர் இன்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பதைக்குறித்து அவருக்குக் கிடைத்த முடிவுகளை அனுசரித்து யோசனை சொல்லப்படும்.

64. கைத்தொழில் இலாகா டைரெக்டரானவர் - எந்த இடத்திலாகிலும் கற்பாறைகளை உடைக்கும் வேலை செய்ய மறுத்து, விண்ணப்பதாரர் தொகை ஏதாகிலும் செலுத்தியிருந்தால் அதை அவருக்கு வாபஸ் செய்துவிடலாம். அந்தப்படி செய்யும்போது அவர் காரணம் எதுவும் சொல்லவேண்டியதில்லை.

VIII.—கரும்பு பிழியும் ஆலை.

65. சக்தியை உபயோகித்து ஓட்டும் கரும்பு பிழியும் ஆலைகள் சில இந்த இலாகாதார் வசத்தில் இருக்கின்றன. அவை வாடகைக்குக் கிடைக்கும்.

66. கரும்பு பிழியும் ஆலைகளைப்பற்றி விசாரித்து சங்கதிகள் தெரிந்து கொள்ளவேண்டியிருந்தால், பிரதேச கைத்தொழில் இலாகா ஸூபர்வைஸருக்காவது, பிரதேச அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீருக்காவது, 432-ம் நெ. தபால் பெட்டி, சேப்பாக்கம், சென்னை யென்று மேல்விலாசமிட்டு கைத்தொழில் இலாகா டைரெக்டருக்காவது எழுதித் தெரிந்து கொள்ளவேண்டும்.

67. முதலில் கட்டணங்களாவது முன்பணத் தொகைகளாவது செலுத்தும்படிக் கேட்கப்படமாட்டாது. ஆனுல், ஷெ ஆலைகளை உபயோகித்துக்கொள்வதற்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களைக்குறித்த ரெஜிஸ்டர் ஒன்று வைத்துவரப்படும்.

68. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இன்ன வரிசைக்கிரமப்படி கவனிக்கப்படுமென்னும் விஷயத்தைப் பிரஸ்தாப பிரதேசத்தை அனுசரித்துக் கைத்தொழில் இலாகா டைரெக்டர் தீர்மானிப்பார். ஆலை இன்ன காலத்தில் விண்ணப்பதாரர்களின் வசத்தில் விடப்படுமென்னும் விஷயம் கிரமப்படி அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். அது சம்பந்தமான நோடிஸ் வந்து சேர்ந்தவுடனே, விண்ணப்பதாரர் - ஆலை மாத்திரமே வேண்டியிருந்தால் 50 ரூபாயும், ஆலையும் என்ஜினும் ஒன்றுசேர்ந்துள்ள யந்திரம் வேண்டியிருந்தால் 100 ரூபாயும் முன்பணமாய்ச் செலுத்தவேண்டும். நோடிஸ் வந்து சேர்ந்த பிறகு ஐந்து தினத்துக்குள் இந்தத் தொகை செலுத்தப்படாவிட்டால், விண்ணப்பம் ரத்துசெய்யப்பட்டதாக பாவிக்கப்படும்.

69. உபகரணங்களைக் கொண்டுபோவதற்காக 50 ரூபாய் கட்டணம் வாங்கப்படும். ஆயினும், உபகரணங்களைக் கொடுப்பதற்காகச் சொன்ன தேதியிலிருந்து ஐந்து தினத்துக்குள் தாமே தம்முடைய சொந்த செலவில் அவைகளைக் கொண்டுபோவதற்குத் தயாராயிருப்பதாக விண்ணப்பதாரர் தம்முடைய விண்ணப்பத்தில் தெரிவித்தால், கொண்டுபோவதற்காக முன்பணமாய்ச் செலுத்தவேண்டிய ஷெ கட்டணம் வாங்காமல் விட்டுவிடப்படும்.

70. உபகரணங்களை உபயோகித்துக்கொள்வதற்காக ஆலைக்கு 50 ரூபாயும் ஆலையும் என்ஜினும் ஒன்றுசேர்ந்துள்ள யந்திரத்துக்கு 100 ரூபாயும் மாதாந்தர வாடகைத் தொகைகளாகும். இந்தத் தொகைகளில் உபகரணங்களின் வாடகையும் என்ஜினைப் பார்த்துக்கொள்ளும் ட்ரைவரின் சம்பளமும் அடங்கும். கூலியாள்களுக்கும் விறகுக்கும் எண்ணெய் முதலிய சாமான்களுக்கும் பிடிக்கும் செலவைப்போன்ற இந்த வேலை சம்பந்தமான மற்ற சகல செலவுகளையும் விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

71. சந்தர்ப்பத்துக்கேற்றபடி செலுத்தப்படும் முன்பணத் தொகையாகிய 50 ரூபாய் அல்லது 100 ரூபாயில் ஒரு மாதத்துக்கு உபகரணங்களின் வாடகையும் அடங்கும். அந்தத் தொகை செலவாய்விட்டால், குறைந்த பட்சம் ஒரு மாத வாடகைக்குச் சமமான பின்னும் முன்பணத் தொகைகளை உடனே செலுத்தவேண்டும். ஷை உபகரணங்கள் எந்தக் காரணத்தைக்கொண்டும் கடனுக்குக் கொடுக்கப்படமாட்டா. ஆகையால், முன்பணத் தொகை செலவாய்விட்ட பிறகு பின்னும் முன்பணத் தொகைகள் உடனே கிரமமாய்ச் செலுத்தப்பட்டாலொழிய, வேலை நிறுத்திவிடப் படுவதுமல்லாமல் உபகரணங்களும் அப்புறப்படுத்திவிடப்படும்.

ஆபிஸர்களின் ஹெட் க்வார்ட்டர்கள் (ஆபிஸ் தலைமை ஸ்தானங்கள்).

பெஜவாடா டிவிஷன்.

ஜில்லா.	அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீரின் ஹெட்க்வார்ட்டர்கள்.	ஸூபர்வைஸரின் ஹெட்க்வார்ட்டர்கள்.
கஞ்சம்	பெஜவாடா	விசாகப்பட்டணம்.
விசாகப்பட்டணம்		
கிருஷ்ணா	ஷை	பெஜவாடா.
குண்டூர்		
கிழக்குக் கோதாவரி	ஷை	ராஜமந்திரி.
மேற்குக் கோதாவரி		
நெல்லூர்	ஷை	நெல்லூர்.
பல்லாரி	ஷை	பல்லாரி.
கர்நூல்		

கோயம்புத்தூர் டிவிஷன்.

ஜில்லா.	அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீரின் ஹெட்க்வார்ட்டர்கள்.	ஸூபர்வைஸரின் ஹெட்க்வார்ட்டர்கள்.
கடப்பை	கோயம்புத்தூர்	கடப்பை.
அனந்தபுரம்		
வட ஆற்காடு	ஷை	வேலூர்.
சித்தூர்		
மலையாளம்		
தென்கன்னடம்	ஷை	மங்களூர்.
அஞ்செங்கோ		
கோயம்புத்தூர்		
நீலகிரி	ஷை	கோயம்புத்தூர்.
சேலம்		

தஞ்சாவூர் டிவிஷன்.

ஜில்லா.	அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீரின் ஹெட்க்வார்ட்டர்கள்.	ஸூபர்வைஸரின் ஹெட்க்வார்ட்டர்கள்.
தென் ஆற்காடு	தஞ்சாவூர்	கூடலூர்.
தஞ்சாவூர்	ஷை	தஞ்சாவூர்.
திருச்சினாப்பள்ளி	ஷை	திருச்சினாப்பள்ளி.
மதுரை		
ராமநாதபுரம்	ஷை	திருநெல்வேலி.
திருநெல்வேலி		

சென்னை ஸப் டிவிஷன்.

ஜில்லா.	அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீரின் ஹெட்க்வார்ட்டர்கள்.	ஸூபர்வைஸரின் ஹெட்க்வார்ட்டர்கள்.
சென்னை	இண்டஸ்ட்ரியல் என்ஜினீர், சென்னை.	சென்னை.
செங்கல்பட்டு		

குறிப்பு.—அஸிஸ்டன்ட் இண்டஸ்ட்ரியல் என்ஜினீரின் விசாரணைக்குட்பட்டிருக்கும் பிரதேசம் டிவிஷன் என்றும், ஸூபர்வைஸரின் விசாரணைக்குட்பட்டிருக்கும் பிரதேசம் ஸப்டிவிஷன் என்றும் சொல்லப்படும். ஒவ்வொரு விசாரணைப் பிரதேசத்துக்கும் அதன் விசாரணை வகிக்கும் ஆபிஸரின் ஹெட்க்வார்ட்டரை அனுசரித்துப் பெயர் கொடுக்கப்படும்.

IX.—வெள்ளைச் சர்க்கரை செய்வது.

திறந்த கொப்பரை உபயோகிக்கும் முறைப்படி கரும்பிலிருந்து சிறிய அளவில் சர்க்கரை செய்வதற்காக அடுப்புகள் ஏற்படுத்தும் விஷயமாகவும் யந்திரங்களை ஸ்தாபிக்கும் விஷயமாகவும் இந்த இலாகாதார் அவசியமான ஆலோசனை சொல்லுவதுமல்லாமல் சாங்கேதிகமான உதவிகளும் செய்வார்கள். ஷை சர்க்கரை செய்யும் தொழிலை நடத்த விரும்பும் குடியானவர்களுக்கு இரவல் கொடுப்பதற்காக சில (Sugar centrifugals) சுகர் செண்டிரிப்யூகல் என்னும் உபகரணங்களுக்கும் கொதிக்கவைக்கும்

கொப்பரைகளும் (fire bars) நெருப்புக் கம்பிகள் முதலியவைகளும் இருக்கின்றன. இந்த இலாகாதார் செய்யும் உதவிக்காகத் தற்போது வாடகை அல்லது கட்டணம் விதித்து வாங்கப்படுவதில்லை. ஆனால், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு கொண்டுபோவதற்கான செலவு வேலை செய்வதற்கான செலவு முதலியவைகளைப்போல் இது சம்பந்தமாக பிடிக்கும் எல்லா செலவுகளையும் குடியானவர்களே செய்யவேண்டும்.

இன்னும் அதிகப்படியான விவரங்களுக்காக சென்னை சேப்பாக்கம் நெ. 432-ம் தபால் பெட்டி விலாசமுள்ள கைத்தொழில் இலாகா டைரெக்டர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவும்.

X.—விலையைத் தவணைகளாக வாங்கிக்கொள்ளும் முறைப்படி (Pinto) பிண்டோ செக்கை விற்பனை செய்வது.

இந்தப் பஞ்சாங்கத்திலே வேறொரு இடத்தில் படத்துடன் கூடிய பிண்டோ செக்கைக் குறித்த விவரத்தைக் காணலாம். ஆகாரத்திற் குறிய எண்ணைகள் எடுப்பதற்காக ஷை செக்குகளை உபயோகிக்க ஜனங்கள் அதிகமாய் விரும்புகிறார்கள். இந்தச் செக்குகளில் வறையறுக்கப்பட்ட சங்கியையுள்ளவைகளே விலையைத் தவணைகளாக வாங்கிக்கொள்ளும் முறைப்படி விற்பனைக்குக் கிடைக்கும். இந்தச் செக்கை சென்னை வண்ணாரப்பேட்டையிலுள்ள இண்டஸ்டிரியல் என்ஜினீரிங் ஒர்க்ஷாப்பில் ஒப்புவிப்பதாயிருந்தால் அதன் நிகர விலை 550 ரூபாயாகும். இந்தத் தொகையானது அரை வருஷத்துக்கு ஒரு தடவை சரி சமானமாய்ப் பத்து தவணைகளில் அப்போதைக்கப்போது செலுத்தப்படாமல் பாக்கியிருக்கும் தொகையின் மேல் வருஷம் 1-க்கு நூற்றுக்கு $7\frac{1}{2}$ வீதம் வட்டி சகிதமாய்ச் செலுத்தப்படத்தக்கதாகும். ஷை செக்கை கிரயத்துக்கு வாங்குபவர் போதுமான ஜாமீன் சவதரித்து, இது காரியத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட நமூனாப்படி ஒரு உடன்படிக்கை எழுதிக்கொடுக்கவேண்டும். இன்னும் அதிகப்படியான விவரங்களுக்காக சென்னை சேப்பாக்கம் நெ. 432-ம் தபால் பெட்டி விலாஸமுள்ள கைத்தொழில் இலாகா டைரெக்டர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவும்.

49. கைத்தொழில்களுக்கு இராஜாங்க உதவி.

தேசீய திரவிய அபிவிருத்திக்கு முக்கியமாய் சம்பந்தப்பட்டிருக்கும் கைத்தொழில்களுக்கு கடன் கொடுப்பதற்காக இந்த வருஷத்து பட்ஜெட்டில் கைத்தொழில்களுக்கு செய்யப்படும் இராஜாங்க உதவியைக்குறித்து (1923-ம்வருஷத்து 5-வது ஆக்ட்) ஆக்டின்படி ரூ. 20,000 ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. அக்கடன்கள் அடியில் கண்டவைகளுக்குக் கொடுக்கபடும் :—

(*a*) நூதன (புதிய) கைத்தொழில்கள் அல்லது ஆரம்பஸ்திதியில் உள்ளவைகள், அல்லது

(*b*) கைத்தொழில்கள் அபிவிருத்தி அடையாமல் இருக்கிற இடங்களில் புதிதாய் ஏற்படுத்தப்போகும் கைத்தொழில்கள், அல்லது

(*c*) குடிசைக் கைத்தொழில்கள்.

ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் மூலதனம் வைத்து நடத்தப்படுகிற கைத்தொழில்களும் குடிசைக் கைத்தொழில்களுமல்லாத கைத்தொழில் சம்பந்தமான இதர வேலைகள் அல்லது முயற்சிகளைச் சேர்ந்த ஆஸ்தியின் மதிப்பிலிருந்து அவைகளின்மேல் ஏற்பட்டிருக்கும் வில்லங்கங்கள் ஏதேனும் ஏற்பட்டிருந்தால் அவைபோக பாக்கி நிற்கும் நிகரத் தொகையில் நூற்றுக்கு ஐம்பதுக்கு மேற்பட்டு அவைகளுக்கு கடன் கொடுக்கப்படமாட்டாது. ஆயினும் 40,000 ரூபாய்க்கு மேற்படாத ஒரு தொகையை அது ஷை சொத்தின் மதிப்பில் நூற்றுக்கு 50 வீதத்திற்கு மேற்பட்டிருந்தாலுங்கூட கடனாகக் கொடுக்கலாம். அனுமதிக்கப்படும் கடனுக்கு ஈடாக பிரஸ்தாப வேலை அல்லது தொழிற் முயற்சிக்குறிய ஆஸ்தியின் மேல் கடன் கொடுக்கப்படும் காலத்தில் அவற்றின்மேல் உள்ள வில்லங்கங்களுக்கு உட்பட்டு அந்தப் பூரா ஆஸ்தியின் ஈட்டின்பேரில் கடன் கொடுக்கப்படும்.

ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் மூலதனம் வைத்து நடத்தப்படும் கைத்தொழில் சம்பந்தமான வேலைகள் அல்லது முயற்சிகளின் விஷயத்திலும், குடிசைக் கைத்தொழில்களின் விஷயத்திலும் கொடுக்கப்படக்கூடிய கடன் தொகை கொடுக்கப்படும் ஈட்டின் மதிப்புக்கு மேற்படாது. அந்தக் கடனுக்கு ஈடாக—

(*a*) பிரஸ்தாப வேலை தொழில் முயற்சி அல்லது குடிசைக் கைத்தொழிலின் ஆஸ்தி முழுவதின்பேரிலும் கொதுவையோ அல்லது மேலே கண்டபடி குறிப்பிட்டிராத வேறேவகையான பொறுப்போ ஏற்படுத்தப்படும், அல்லது

(*b*) விண்ணப்பதாரரின் ஆஸ்தியின்பேரில் கொதுவையோ அல்லது மேலேகண்டபடி குறிப்பிட்டிராத வேறே வகையான பொறுப்போ ஏற்படுத்தப்படும், அல்லது

(*c*) விண்ணப்பதாரரின் ஜாமீன்தாரர் அல்லது ஜாமீன்தாரர்களுடைய ஆஸ்தியின்பேரில் கொதுவையோ அல்லது மேலேகண்டபடி குறிப்பிட்டிராத வேறே வகையான பொறுப்போ ஏற்படுத்தப்படும், அல்லது

(*d*) ஐந்நூறு ரூபாய் வரையில் விண்ணப்பதாரரிடமிருந்து நபர் ஜாமீனோ, விண்ணப்பதாரரிடமிருந்தும் இன்னும் ஒருவர் அல்லது பலரிடமிருந்தும் கூட்டாக நபர் ஜாமீன் வாங்கப்படும். ஆனால் இந்த ஜாமீனானது சாதாரணமாய் மேலே ஜாமீனாக மாத்திரமே வாங்கப்படும், அல்லது

(*e*) மேலேகண்ட ஜாமீன் வகைகளில் சிலவற்றைச் சேர்த்து ஜாமீன் வாங்கப்படும்.

ஷை ஆக்டின்படி கொடுக்கப்படும் கடன்களுக்கு இப்போது நூற்றுக்கு 5 வீதம் வட்டி வாங்கப்படுகிறது.

கடனுக்காக விண்ணப்பம் செய்துகொள்ள உத்தேசிக்கும் நபர்கள் இது விஷயமாய் பின்னும் ஏதேனும் சங்கதி தெரிந்துகொள்ளவேண்டுமானால் சென்னை சேப்பாக்கத்தில் பழய இன்ஜினீரிங் காலேஜ் கட்டிடத்திலிருக்கும் கைத்தொழில் இலாகா டைரெக்டருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

50. நெசவுப் பிரிவார் செய்துவரும் வேலைகளைப் பற்றிய குறிப்புகள்.

கவர்ன்மெண்ட் டெக்ஸ்டைல் இன்ஸ்டிடியூட் என்னும் ஓர் நெசவு பள்ளிக்கூடம், வண்ணாரப்பேட்டை, கத்திவாக்கம் ஹைரோட்டில் டிராம் டெர்மினஸ்க்கும் வண்ணாரப்பேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்கும் சமீபத்தில் இருக்கிறது. பருத்தி நூல்கள் பாவு தயார் செய்யும் பிரிவு, தார் சுத்தும் பிரிவு, கம்பளி நூல் தயார் செய்யும் பிரிவு, பட்டுத் தயார் செய்யும் பிரிவு, நூல் பரிசோதனை செய்யும் பிரிவு, தரி நெசவுப் பிரிவு, மேஜோடு, பனியன் முதலியவை செய்யும் பிரிவு, நெசவு சம்பந்தமாய் ரசாயன வேலையும், சாய வேலையும் செய்யும் பிரிவு, ஆகிய இவைகளில் தற்காலத்தில் உபயோகப்பட்டுவரும் நவீன உபகரணங்களும், யந்திரங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

யந்திர உதவியைக் கொண்டு பருத்திநூல் நூற்கும் பிரிவு ஒன்றும் இந்த இன்ஸ்டிடியூட்டில் 1933–34-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஷை இன்ஸ்டிடியூட்டின் பிராஸ்பக்டஸ் (Prospectus) தேவை உள்ளோர் பட்டணம் வண்ணாரப்பேட்டை நெசவு இன்ஸ்டிடியூட் பிரின்ஸ்பால் அவர்களுக்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

51. சென்னை ராஜதானியில் பருத்திக் கைத்தறி நெசவுத்தொழிலை விருத்தி பண்ணுவதற்குரிய ஏற்பாடு.

கைத்தொழில் இலாகாவினுல் தயார் செய்யப்பட்டு இந்தியா கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில், கைத்தறி நெசவுக்காரர்கள் சார்பாகக் கூட்டுறவு முறையில் கிரயத்துக்கு வாங்குவதையும் விற்பனை செய்வதையும் விருத்தி பண்ணும்பொருட்டு ஜில்லா பிரதம உற்பத்தி சங்கங்கள் அனேகம் சேர்ந்த ஒரு மத்திய மாகாண கூட்டுறவு சங்கத்தைச் சென்னையில் ஸ்தாபிப்பதற்காகவும், கைநெசவுத் துணிவகைகளுக்குக் கடைசியாகப் பார்வை கொடுப்பதும் அவைகளுக்கு அதிக கிராக்கியை உண்டு பண்ணுவதும் சாத்தியமாயிருக்கும்பொருட்டு சக்தியால் இயங்கும் ஒரு காலெண்டரிங்க் (மழமழப்பாக்கும்) யந்திரத்தைப் பிற்பாடு அமைப்பதற்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 1935-36-வது வருஷத்தில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான சென்னை மாகாண கைத்தறி நெசவுக்காரர்களின் கூட்டுறவு சங்கத்துக்கு பொருள் உதவி கொடுப்பதற்காக பொருள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. பங்கு ஒன்று 50 ரூபாய் வீதம் 10,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்ட 5 லட்ச ரூபாய் மூலதனம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்த சங்கமானது 1935-ம் ஆகஸ்டு 12௳ வேலை செய்ய ஆரம்பித்தது. உற்பத்தி சங்கங்களை மேற்பார்வையிடுவதற்காக அனேக சூப்பர்வைஸர்கள் செப்டம்பர்மாதம் நியமிக்கப்பட்டார்கள்; மேலும், ஜில்லாக்களில் வேலை செய்யும் இடங்களும் தீர்மானிக்கப்பட்டன. ஷ மாகாண சங்கம் ஸ்தாபிக்கப்பட்டபோது, 29 முதன்மை நெசவாளிகள் உற்பத்தி சங்கங்கள் இந்த ராஜதானியில் இருந்தன. ஆனால், அவைகளில் அனேகம் உண்மையில் துணிவகைகளை உற்பத்தி செய்யும் வேலையில் ஈடுபட்டிருக்கவில்லை; அவைகளில் பல செயலற்றவைகளாயிருந்தன; மற்றவைகளும் (லிக்வி டேஷன்) கலைக்க வேண்டிய நிலைமையில் இருந்தன. உற்பத்தி சங்கங்களின் சூப்பர்வைஸர்கள் கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களின் உதவியைக் கொண்டு புதிய சங்கங்களை அமைத்ததுடன், சிலசங்கங்களை மீண்டும் வேலை நடத்தும்படியும் செய்தார்கள்; மேலும், அவர்கள் ஏற்கெனவே இருந்த நெசவாளிகளின் நாணயச் சங்கங்களை உற்பத்தி சங்கங்களாக மாற்றி அமைத்தார்கள். 1936-ம் ஜூன் 3௳யோடு முடிவான கூட்டுறவு வருஷக் கடைசியில், ரெஜிஸ்டர் செய்யப்பட்டவைகளும் உற்பத்தித் தொழிலை நடத்தி வந்தவைகளுமான 43 சங்கங்கள் ஷ மாகாண சங்கத்தின் ஜாபிதாக்களில் பதியப்பட்டிருந்தன. மேலும், நிர்வாகத்தின் பொருட்டுஏற்படும் செலவுகளுக்காக 31 சங்கங்களுக்கு பொருளுதவி அனுமதிக்கப்பட்டன. இந்த சங்கங்களுக்கு நூல் வாங்கவும் உற்பத்தி செய்யும் சரக்குகளை விலைப்படுத்தவும் உதவி செய்யப்படுகிறது. ஏதாவதொரு சங்கம் விண்ணப்பம் செய்துகொண்டால் அந்த வட்டகையிலுள்ள டெப்யுடி ரெஜிஸ்ட்ராரானவர் ஷ சங்கத்துக்கு எவ்வளவு தொகை வரையில் நூல் கொடுக்கலாமென்று சிபாரிசு செய்கிறார்; ஷ சங்கமானது இன்னவிதமான நூல் தனக்கு தேவையாயிருக்கிறதென்றும் இன்னமில்லிலிருந்து தனக்கு நூல் வேண்டுமென்றும் குறிப்பிடவேண்டும். மாகாண சங்கத்தின் உத்தரவாதத்தின் மேல் பிரதம சங்கங்களுக்கு நூல் உதவி செய்யவும், பணம் செலுத்த 30 தினம் வரையில் கெடு கொடுக்கவும் ஐந்து மில்லுகள் சம்மதித்திருக்கின்றன. நூல் உதவி செய்வதற்காக ஷ மில்லுகளுக்கு இதுவரையிலும் உத்தரவாதம் செய்திருக்கும் தொகை 29,420 ரூபாயாகும். கைத்தறி நெசவு தொழிலில் நெசவு செய்த துணியை விலைப்படுத்துவதே முதன்மையான இடையூறு. கைநெசவுத்துணியை மொத்த வியாபாரிகளுக்கு பொது ஜனங்களுக்கும் இஷ்டமாகும்படிச் செய்வதற்காகவும், பிரதம நெசவுக்காரர் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணிவகைகளை விலையாகும்படிச் செய்வதற்காகவும் சென்னையில் ஒரு (எம்போரியம்) வர்த்தகசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பெஜவாடா, மதுரை, கள்ளிக்கோட்டை ஆகிய இந்த இடங்களில் விற்பனைசாலைகளை ஏற்படுத்தும் நோக்கமானது தற்போது கருத்தில் இருந்து வருகிறது. கைத்தறி நெசவுத் தொழிலின் முன்னேற்றத்திற்காக

இந்தியா கவர்ன்மெண்டார் 1934-35-ம் வருஷத்திலே மொத்தத்தில் 26,500 ரூபாயும், 1935–36-ம் வருஷத்திலே 59,500 ரூபாயும் சகாயத் தொகையாக அனுமதிக்கிறார்கள். நடக்கும் 1936–37-ம் வருஷத்தில் இன்னும் அதிகமான தொகை கிடைக்கும். கைத்தறி நெசவுத் தொழிலுக்காக இந்தியா கவர்ன்மென்டாரால் செய்யப்படும் பொருளுதவியைச் குறித்த நிர்வாகமும் மேல் பார்வையும் அது சம்பந்தமாய் சென்னை கைத்தறி நெசவுக்காரர்களின் மாகாண கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகமும் மேல் பார்வையும் கூட்டுறவு சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் செய்யவேண்டிய வேலைகளாகும். கைத்தொழில் இலாகா டைரெக்டரும் அவருடைய சிப்பந்தியும் கூட்டுறவு இலாகாவுக்கும் ஷ மாகாண சங்கத்துக்கும் வேண்டிய ஆலோசனை சொல்லி உதவி புரியவேண்டும். பிரதம சங்கங்களுக்குச் சகாயத்தொகை கொடுக்கும்படிச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களையும், சென்னை கைத்தறி நெசவுக்காரர்களின் மாகாண கூட்டுறவு சங்கத்தின் வேலைகளைப்பற்றிய மற்ற சகல கடிதங்களையும், சென்னை மவுண்ட் ரோட், 1/159-ம் நெ. கட்டிடத்தில் இருக்கும் சென்னை கைத்தறி நெசவுக்காரர்களின் மாகாணகூட்டுறவு சங்கத்தின் நிர்வாக உத்தியோகஸ்தருக்கு எழுதி அனுப்பவேண்டும்.

52. பட்டுப்பூச்சி வளர்க்கும் பிரிவார் செய்துவரும் வேலைகளைப்பற்றிய குறிப்புகள்.

சர்க்கார் பட்டுநூல் வல்லோர்கொள்ளேகாலத்தில் இருக்கிறார்.

சர்க்கார் பட்டு பண்ணைகள்.—இந்த ராஜதானியில் நான்கு பட்டுப்பூச்சி வளர்க்கும் பண்ணைகள் வேலை நடத்திவருகின்றன. இவ்விடங்களில் விதை கூண்டுகள் உற்பத்தி செய்யப்பட்டு கொள்ளேகாலில் விநியோகப்படுத்தப்படுகிறது. மேலும், ஜாஸ்தி பட்டு உற்பத்தி செய்யக்கூடுமானவையும் திடமான ஜாதியானவையுமான பட்டுப்புழுக்களை அனுஷ்டித்துவரவேணுமென்ற நோக்கத்துடன் அப்படியான வர்க்கங்களை உண்டாக்குவதற்காக சாஸ்திரீக முறையில் அனேக சோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. முசுக்கட்டை செடியிலும் சீர்திருத்தம் செய்யவேண்டிய வழியிலும் இந்தப் பண்ணைகளில் கவனம் செலுத்தப்படுகின்றது. கீழ்கண்ட இடங்களில் இந்த நாலு பண்ணைகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன :—(1) கூனூர், (2) மத்திகிரி (ஹோசூர்), (3) பலமனேர், (4) தாட்குன்னி கிராமம் (கொள்ளேகால் தாலூகா).

ஜில்லா வேலை.—இந்த ராஜதானியிலே தகுந்த விஸ்தீர்ணங்களில் பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழில் நடத்தும் உத்தேசத்துடன் பட்டுப்பூச்சி வளர்ப்பதில் பழக்கமுள்ள ஐந்து நபர்களை வேலையில் அமர்த்திக் கொண்டு, அவர்கள் அடியில் கண்ட இடங்களில் வேலை பார்க்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. (1) ஏலூர், (2) மங்களகிரி, (3) வடக்காங்குளம், (4) பெனுகொண்டா, (5) குப்பம். கொள்ளேகாலத்தில் இந்தக் கைத்தொழிலை ஒரு குடிசைக் கைத்தொழிலாக மிகவும் மும்மரமாய்ச் செய்கிறார்கள். இந்த இடம் தவிர, பட்டுப்பூச்சிச் செடி (முசுக்கட்டை செடி) வைத்துப் பயிராக்கும் முறையும் பட்டுப்பூச்சிகளை வளர்க்கும் முறையும் அடியிற்கண்ட புதிய இடங்களில் சித்திகரமாய் செய்து காட்டப்பட்டிருக்கின்றன :—

(1) திருநெல்வேலி ஜில்லாவின் பாகங்கள், (2) சித்தூர் ஜில்லாவின் பாகங்கள், (3) கோயம்புத்தூர் ஜில்லாவின் பாகங்கள், (4) கிருஷ்ணா ஜில்லாவின் பாகங்கள், (5) செங்கல்பட்டு ஜில்லாவின் பாகங்கள், (6) சேலம் ஜில்லாவின் பாகங்கள், (7) அனந்தபுரம் ஜில்லாவின் பாகங்கள்.

கொள்ளேகாலத்திலுள்ள நாடித்திரியும் வளர்ப்புக் கூட்டம்.—பட்டுப்பூச்சி பரிசோதனை செய்பவர்கள் ஐந்துபேரும் வளர்ப்பவர் ஒருவரும் சேர்ந்த கூட்டமானது கொள்ளேகாலம் தாலூகாவைச் சேர்ந்த அடியிற்கண்ட இடங்களில் ஒரு ஸில்க் ஸூபரின்டெண்டின் மேல் விசாரணையின்கீழ் வேலை செய்து வருகிறது:—(1) முடிகுண்டம், (2) ஹல்ஹள்ளி, (3) குந்தூர், (4)

சூராபுரம், (5) பாளையம், (6) காமக்கேரை, (7) கண்ணூர். ஷை கூட்டத்தார் அடியிற்கண்ட விஷயங்களில் தங்களுடைய முழு கவனத்தையும் செலுத்தி வேலை செய்து வருகிறார்கள். (1) நோய் பிடித்திராத விதையைப் பட்டுப் பூச்சி வளர்ப்பவர்களுக்கு சேகரித்துக்கொடுப்பது, (2) பட்டுப்பூச்சி வளர்ப்ப வர்களிடத்தில் இருக்கும் விதைக்காகிய பட்டுப்பூச்சி கூடுகளை அவர்களு டைய வீடுகளிலேயே பூதக்கண்ணாடியைக் கொண்டு பரீட்சை செய்து பார்ப் பது, (3) பட்டுப்பூச்சிகளைப் பூதக்கண்ணாடியைக் கொண்டு பரீட்சை செய்யும் வித்தையைப் புத்திசாலிகளாயுள்ள பட்டுப்பூச்சி வளர்ப்பவர்களுக்குக் கற் பிப்பது, (4) (Grainages) புதிய நெசவு ஏற்படுத்தும் விஷயத்தை ஆதரிப்பது, (5) சீர்திருத்தமான யந்திரங்களைக் கொண்டு பட்டை சுகிர்ந் திழைக்கும் வேலையைச் செய்து காட்டுவதும், பட்டை சுகிர்ந்திழைக்கும் ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதும், சீர் திருத்தமான முறைப்படி பட்டை சுகிர்ந்திழைக்கும் தொழிலைக் குடிசைத் தொழிலாக ஏற்படுத்துவதும், (6) பட்டுப்பூச்சி செடியிலிருந்து வெட்டின துண்டுகளையும் பட்டுப்பூச்சி விதைகளையும் பற்பல ஜில்லாக்களிலுள்ள பிரதான இடங்களுக்கு சவ தரித்துக் கொடுப்பதும், (7) பட்டுப்பூச்சி செடி பயிராகும் தோட்டங்களில் தழை எரு போடுவது, (8) பட்டுப்பூச்சிச் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச் சும் பொருட்டு கிணறு வெட்டும் விஷயத்தையும், குளங்களின் வரப்பு களில் பட்டுப்பூச்சிச் செடியைப் பயிராக்குவதையும் புழக்கடைத் தோட்டங் களில் இளமரங்களை நடுவதையும் ஆதரிப்பது.

கொள்ளேகாலில் உள்ள பட்டுப்பூச்சி வளர்ப்பவர்களின் உபயோகத்துக் காக வியாதி இல்லாத முட்டை இடும் சங்கியையை அதிகப்படுத்துவ தற்காக, முக்கியமாக பட்டுப்பூச்சி வளர்ப்பவரின் இடங்களில் ஊரூராய் பட்டுப்பூச்சி வளர்ப்பது விஷயமாய் போதிக்கும் கூட்டத்தாரை நியமிக்கப் பட்டிருக்கிறது. இவர்கள் மைசூரிலிருந்தும் விதைக் கூடுகளை விலைக்கு வாங்கி சோதித்து, விநியோகம் செய்யவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(Ericulture) எரிகல்ச்சர் என்னும் பட்டுத்தொழில்.—இந்த ராஜ தானியில் பல ஜில்லாக்களில் எரிகல்ச்சர் என்னும் பட்டுத் தொழில் சித்தி கரமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உலக முழுவதும் ஏற்பட்டுள்ள வியா பார மந்தத்தின் காரணமாக பட்டுப்பூச்சி கூடுகளை யாரும் வாங்குவதில்லை யாகையால், இந்த இலாகாவின் நூல் நூற்கும் ராட்டினம் அல்லது தக்ளி யைக் கொண்டு ஷை கூடுகளிலிருந்து நூல் எடுத்து, அந்த நூலைக்கொண்டு துணி நெய்வது உசிதமாகும். எரி பட்டுத்துணியானது உறுதியாகவும் வெகு காலம் நீடித்திருக்கக்கூடியதாகவும் இருப்பதுமல்லாமல், இந்த ராஜதானியில் நிச்சயமாக நன்றாய் விலையாகும்.

எரி கூடுகளிலிருந்து நூல் நூற்பதற்காக சீர்திருத்தமான ராட்டினம் ஒன்றை இந்த இலாகா அனுஷ்டானத்தில் கொண்டுவந்திருக்கிறது. அனே கமாய் எல்லா சர்க்கார் பண்ணைகளுக்கும் நிரூபண ஸ்தலங்களுக்கும் இந்த ராட்டினங்களை சவதரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எரி பட்டுப் பூச்சி வளர்ப்பதிலும், எரி பட்டு நூல் நூற்பதிலும் சிரத்தையுள்ளவர் களுக்கு கற்பிப்பதற்காக, ஒருவித சிலவும் இல்லாமல், எரி பட்டு நூற் பதில் அனுபவமுள்ளவர் ஒருவர் பல இடங்களுக்கும் சுற்றிவர அனுப்பப் படுகிறார்.

V. பிஷரீஸ் மீன் இலாகா.

53. சர்க்கார் பிஷரீஸ் ட்ரெயினிங் இன்ஸ்டிடிடுட், கள்ளிக்கோட்டை.

சென்னை ராஜதானியில் நீண்ட கடற்கரைப் பிரதேசம் இருப்பதனாலி யில் தென் பக்கத்திலும் முக்கியமாக மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தி லும் மீன் பிடிக்கும் தொழிலுக்கு மிருந்த வசதி இருக்கிறது. **விவசாயத் துக்கு அடுத்தபடியாக மீன் பிடித்தலே முக்கியமான ஆகாரம் உற்பத்தி செய்யும் தொழிலாகும்.** அதிலும் இரண்டு காரணங்களுக்காக ஆகாரம்

நிமித்தமான தொழிலாக மிகவும் முக்கியமானது. முதலாவது தானியப் பயிர்களில் அதாவது அரிசியல் அதிகமாக இல்லாததும் நம்முடைய ஆகாரத்தில் இன்றியமையாமல் இருக்கவேண்டியதுமான (Proteid) ப்ரொடீடு, என்னும் உணவுப் பொருள் இதில் விசேஷமாக இருக்கிறது. இரண்டாவது, பயிர்தொழிலைப்போல் இந்தத் தொழிலானது பருவக்காற்றுகளையே அதிகமாக நம்பியிருக்கவேண்டியதில்லை. பருவக்காற்று தவறினால் பயிர்தொழிலுக்குக் கெடுதி ஏற்பட்டு பஞ்சமும் உண்டாகலாம். இந்தியாவைப்போல, பயிர்த் தொழிலே முதன்மையாகவுள்ள ஒரு தேசத்துக்கு பருவக்காற்று, மழைகளை எதிர்பாராமல் செய்யக்கூடிய தொழில் மிகவும் உபயோகமானது. ஆகாரத்தை தவிர, முத்து, சங்கு, மீன் எண்ணெ, மீன் எரு முதலிய அனேக இந்தத் தொழிலில் கிடைக்கிறது.

மீன் பிடிப்பதற்கும், பிடித்த மீனை உபயோகப்படுத்தும் முறைகளுக்கும் தற்போது உள்ள முறைகளை அபிவிருத்தி செய்வதற்கும், புதிய முறைகளை அனுஷ்டானத்திற்கு கொண்டுவரவும் மீன் இலாகா முயற்சி செய்து வருகிறது. ஆனால் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஜனங்களின் ஊக்கமும் ஒத்துழைப்பும் இல்லாமல் சர்க்கார் இலாகா அதிகமாக முன்னேக்கி வேலை செய்யமுடியாது. இந்தச் சந்தர்ப்பத்தில் முட்டுக்கட்டை போட்டதைப்போல் வேலைக்கு ஒரு கஷ்டம் ஏற்பட்டது. மீன் பிடிக்கும் செம்படவர்கள் படிப்பு இல்லாதவர்களாக இருப்பதுமன்னியில் அனேக விதமான புருதனக் கொள்கைகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் மீன் பிடிக்கும் முறைகளும் மிகவும் புராதனமாக இருக்கிறது. இந்தத் தொழிலில் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்குமுந்தி, இவர்களுக்கு கல்வி அபிவிருத்தி செய்யவேண்டியது முக்யமான காரியம் என்று தெரிய வந்தது. ஆனபடியால் சென்னை மீன் இலாகாதார், செம்படவர்களுக்கு கல்வி பயிர்க்கும் விஷயத்தை ஒரு வேலையாக எடுத்துக்கொள்ளவேண்டியதாயிற்று.

கல்வித்துறையில் அனுபவமுள்ளவர்கள் எல்லாரும் ஒரு குழந்தைக்குச் செய்யவேண்டிய பயிற்சியானது அதன் வாழ்க்கை ஸ்தானத்துக்குப் பொருந்தியதாக இருக்கவேணுமென்பதை அறிவார்கள். நம் தேசத்தில் பெரும்பான்மையானவர் பயிர்த் தொழிலில் ஈடுபட்டவர்களாகவும், கிராம வாழ்க்கையில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகையால் இந்த மாதிரி வாழ்க்கைக்குப் பொருந்தினதான சாதாரண எலிமெண்டரி பாடசாலை முறையை இங்கும் அனுசரிக்குமாறு கல்வி இலாகா முயற்சி செய்துவருகிறார்கள். ஆனபோதிலும் எவ்வளவுக் கெவ்வளவு விவசாய சம்பந்தமாக இந்த சாதாரண எலிமெண்டரி படிப்பு அனுசரித்துவருகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு மற்ற தொழிலாளிகளுக்கு அது பொருந்தாமல் போகிறது.—உதாரணமாக செம்படவர்கள் வாழ்க்கை விவசாயிகளின் வாழ்கைக்கு மிகவும் பேதப்படுகிறதால் செம்படவர்களுக்கு இந்த மாதிரி படிப்பு பொருந்தாது. ஆகையால் செம்படவர்களுக்கு பொருந்தினதான ஒரு எலிமெண்டரி கல்வி முறையை மீன் இலாகாதார் ஏற்படுத்தவேண்டியதாயிற்று. இந்த வேலையை ஏற்றுக்கொண்டு செய்யத் தகுதியான பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள் கிடைப்பது இதற்கு பிரதானமாயிற்று. ஆகையால் இதற்காகவே உபாத்தியாயர்களுக்கு பயிற்சி செய்வதற்கு, 1919-ம் வருஷம் கள்ளிக்கோட்டையில் சர்க்கார் பிஷரிஸ் ட்ரெய்னிங் இன்ஸ்டிடியூட் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த பிஷரீஸ் ட்ரெய்னிங் இன்ஸ்டிடியூட் உபாத்தியாயர்களை பயிற்சி செய்வதற்காகவே பிரதானமாக ஏற்பட்டது. ஆனால் எல்லாப் பாடங்களும் மீன் பிடிக்கும் தொழில் சார்பாகவே சொல்லிக்கொடுக்கப்படுகிறது. அதாவது இயற்கைப் பொருள் பாடத்தில் கடலுக்குள்ளும், கடற்கரையிலும் உள்ள ஸ்தாவர வர்க்கங்களைப்பற்றியும், பிராணி வர்க்கங்களைப் பற்றியுமாக படிப்பில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. இங்கே பயிற்சி செய்துவரும் மாணுக்கர்கள் சமுத்திரத்தில் அனுபவரீதியாக கற்றுக்கொள்ளுமாறு வேலை செய்யப்படுகிறார்கள். இதற்காக இந்த இன்ஸ்ட்டிடியூட்டுக்கு மூன்று மீன் பிடிக்கும் படகுகளும், உள்ளூரில் உபயோகப்படுகிற

வேலைகளும் இருக்கின்றன. ஒவ்வொரு டரத்திலும் மாணுக்கர்கள் சில காலம் தானூரிலுள்ள சர்க்கார் பிஷரீஸ் பரிசோதனை ஸ்தலத்தில் இருந்து மீன் பதப்படுத்தல், புகை போடுதல், தூள் செய்தல், மீன் எண்ணெ, மீன் எரு செய்யும் விதம் முதலிய மீன் உபயோகப்படுத்தி அதிலிருந்து செய்யக்கூடியவைகள் விஷயமான தொழில்களைக் கற்றுக்கொள்ளுகிருர்கள். இந்த வருஷம் முதற்கொண்டு மீனைப் பதம் செய்து டப்பியில் அடைத்தல், மீன் எண்ணெ, எரு செய்தல், மீன் வளர்த்தல் முதலியவைகளை அனுபவரீதியாகக் கற்றுக்கொடுப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. சாதாரணக் கல்வி போதனையைத் தவிர, இந்த மீன் விஷயமாக போதிக்கும் உபாத்தியாயர்கள் கிராம முன்னேற்ற விஷயமாகவும் வேலைசெய்ய எதிர் பார்க்கப்படுகிருர்கள். ஆகையால் அவர்கள் பயிற்சிபயிலும் காலத்தில், அவர்களுக்கு பொருளாதாரம், ஐக்கிய முறைகள், மது விலக்குப் பிரசாரம் முதலிய முறைகளில் ஆரம்பக் கல்வியும் போதிக்கப்படுகிறது. சௌக்கியமுறைகளில் அனுபவரீதியாக பயிற்சிபெறும்பொருட்டு கடல் சாரணர் தொகுதி ஒன்றும் இந்த இன்ஸ்டிடியூட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடத்தில் 1921-ம் வருஷம் ரிஜிஸ்தரான ஐக்கிய சங்கத்தில் மெம்பராக சேர்வதினுல் ஐக்கிய முறைகளிலும் இந்த மாணுக்கர்களுக்கு அனுபவரீதியாகப் பயிற்சி உண்டாகிறது.

இது மூன்று வருஷப்படிப்பு, சர்க்காரால் நியமிக்கப்பட்ட, அனேகமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களாகவே கூடப்பட்ட ஒரு கமிட்டியால் இந்த பள்ளிக்கூடத்திற்கு மாணுக்கர்கள் பொருக்கப்படுகிருர்கள். இதில் செம்படவர்கள் குலத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பெரும்பான்மையான இடம் கொடுக்கப்படும்.

மாணுக்கர்கள் குறைந்தது III பாரமாவது VIII-வது வகுப்பாவது தேறி இருக்கவேண்டும். III பாரமாவது 8-வது வகுப்பாவது தேறியிருந்து, ஆனுல் ஹை ஸ்கூல் படிப்பு முடிக்காதவர்களுக்கு, முதல் இரண்டு வருஷம் ரூ. 12, மூன்ருவது வருஷம் ரூ. 14, உபகாரச் சம்பளமும் கொடுக்கப்படும். (தற்காலம் 100-க்கு 25 வீதம் இந்த உபகாரச் சம்பளமும் குறைக்கப்பட்டிருக்கிறது). கள்ளிக்கோட்டை ஜில்லா கல்வி ஆபீஸர் பிரஸிடெண்டாக உள்ள ஒரு பரீக்ஷை செய்யும் போர்டாரால் மாணுக்கர்கள் 3-ம் வருஷ முடிவில் பரீக்ஷிக்கப்படுவார்கள். இந்தப் பரீக்ஷையில் தேறின மாணுக்கர்களை, கல்வி இலாகாதார், அவரவர்கள் பொதுக்கல்வியளவின்படி, ஹயர் எலிமெண்டரி அல்லது செகண்டரி கிரேட் பயிற்சியான உபாத்தியாயர்களாக ஒப்புக்கொள்ளுகிருர்கள். இதுவரையில் இந்தப் படிப்பை முடித்து தேறினவர்களுக்கு மீன் இலாகா செகண்டரி பள்ளிக்கூடங்களில் உத்யோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் இப்பொழுது 37 இருக்கின்றன.

மீன் இலாக, மலேயாளம், தென்கன்னடம் இந்த 2 ஜில்லாக்களில் எலிமெண்டரி பள்ளிக்கூடங்கள் வைத்திருக்கிறபடியால், மலேயாளம், கன்னடம் இந்த பாஷை தெரிந்தவர்கள்தான் பள்ளிக்கூடத்தில் தற்சமயம் சேர்க்கப்படுகிருர்கள். மலேயாளம் பேசப்படும் பிரதேசத்தில் இந்த இன்ஸ்டிடியூட் இருப்பதால் கன்னடம் தெரிந்த மாணுக்கர்கள், மங்களூர் சர்க்கார் ஹயர் எலிமெண்டரி ட்ரெயினிங் ஸ்கூலில் இரண்டு வருஷ சாதாரணப்படிப்பு முடித்த பிறகு, இன்னம் ஒரு வருஷப் படிப்பு கள்ளிக்கோட்டையில் இந்த இன்ஸ்டிடியூட்டில் படித்து பிஷரிஸ் உபாத்தியாயர்களாக இந்தப் பயிற்சியை முடிக்கிருர்கள்.

54. கிழிஞ்சல் தூளும், கோழி வளர்த்தலும்.

கிழிஞ்சல் தூளானது, மொலக்ஸ் (Molluscs) முதலிய கிழிஞ்சல்களை இயந்திரத்தில் கொடுத்து அரைப்பதினுல் செய்யப்படுகிறது.

கோழிகளுக்குப்போடும் தீனியில் கொஞ்சம் கிழிஞ்சல்தூள் சேர்த்தால் அவைகள் நன்றாய் விருத்தியாவதுடன், உறுதியானதும் நல்லதுமான ஓடுகளுடைய முட்டைகளிடுமென்பது அனுபவப்பூர்வமாய்த் தெரிந்த விஷயம். இவ்விஷயத்தை அறிவதற்கு கோழியின் குடலைப்பற்றிய விவரம் தெரிவது அவசியம்.

கோழியின் குடல் அநேக பாகங்களுள்ளன. அது வாயினின்று துவக்கி நீண்டதும் குறுகியதுமான குழலாய், கழுத்தின் அடிப்பாகம் வரைக்கும் ஊடுருவி, அவ்விடத்தில் ஒரு பையாய் விரிகின்றது. கோழி அவசரமாய் உட்கொள்ளும் தீனியானது இப்பையிலிருந்து ஊறுவதால் மிருதுவாக்கப்படுகிறது. கோழியானது நன்றாய் தீனியை தின்றதும் இப்பை பெருத்துவிடும். இது வெளியினின்றே நன்றாய்த் தெரியும். இப்பையானது ஒரு குறிகிய குழாய் அகன்றதும், கனத்து தசையுள்ளதுமான இரப்பையில் செல்லுகின்றது. கோழிகள் விழுங்கியிருக்கும் மணல் கல்தூள்கள் இவ்விரைப்பையிலிருக்கின்றன. இத்தூள்களிலுல்தான் கோழியின் ஆகாரம் வயிற்றில் அரைக்கப்படுகிறது. இரைப்பையின்று நீண்டதும், அதிகமாய் சுற்றிக் கொண்டிருப்பதுமான குழல் அதாவது அடிக்குடல் வயிற்றில் வேறு அவையவங்களுடனிருக்கிறது.

பக்ஷிகளுக்குப் பற்களில்லாததினால், நம்மைப்போல் அவைகள் ஆகாரத்தை மெல்லமுடியாது. விசேஷமாய்க் கெட்டியான தானியம், விதை முதலியவைகளையே தின்னும். கோழி, காடை, மயில் முதலிய வீட்டில் வளர்க்கும் பறவைகளுக்கும் அவைகளைப்போன்ற வேறு பறைவைகளுக்கும் மிக கனத்ததும் தசையுள்ளதுமான இரப்பையிருக்கின்றது. அவைகளில் கல், மணல் தூள்களுமிருக்கின்றன. இரப்பை சுருங்கி பெருகுங்காலத்து இத்தூள்களின் உதவியால் இப்பக்ஷிகள் உட்கொண்டிருக்கும் தீனியை அரைத்து மிருதுவாக்குகிறது. அதாவது வேறு மிருகங்களில் பற்கள் செய்யும் வேலையை இத்தூள்கள் செய்கின்றன.

பண்ணைகளிலும், கூடுகளிலும் வளர்க்கப்படும் கோழிகள் இத்தூள்களின்மையால் கஷ்டப்படுகின்றன. கிழிஞ்சல் தூள்கள் கோழியின் தீனியை அரைப்பதில் உபயோகப்படுவதுடன் வேறொரு சௌகரியமும் செய்கின்றன. அதாவது, சுண்ணும்பு சேர்ந்துள்ளதாகிய கிழிஞ்சல் தூளும் கொஞ்ச அளவு அரைக்கப்பட்டு தீனியுடன் கலந்து விடுகிறது. ஆகையின் கோழியின் ஆகாரத்துடன் கொஞ்சம் சுண்ணும்பும் கலந்துவிடுகிறது. அதுவும் இரத்தத்துடன் சேர்ந்துவிடுகிறது.

எல்லாப் பறவைகளும், சுண்ணும்பு கலந்துள்ள உறுதியான ஓடுகளுள்ள முட்டைகளிடுகின்றன. இவ்வோடுகளின் உறுதியானது அவைகளிலுள்ள சுண்ணும்பைப் பொருத்திருக்கிறது. வேண்டிய அளவு சுண்ணும்பில்லாவிடின் இவ்வோடுகள் மிருதுவாயிருக்கும். வீட்டில் வளர்க்கும் கோழிகளுள் இக்கெடுதலிருக்கிறதென்பது கோழி வளர்ப்போருக்குத் தெரிந்த விஷயம். மிருதுவான ஓடுகளுள்ள முட்டைகள் பார்வையிரா. விற்பனையாவதும் கஷ்டம். அவைகள் குஞ்சு பொரிப்பதும் சிரமம். **ஆனால் மேற்சொன்னவிதம் செய்யப்பட்ட கிழிஞ்சல்தூள் கோழியின் ஆகாரத்தில் கொஞ்சம் சேர்ந்திருப்பின், தேவையான சுண்ணும்பு தீனியில் சேருவதால், மிருதுவான ஓடுகளுள்ள முட்டையிடும் கெடுதலில்லாமல் போகும்.**

கோழிகளுக்குத் தீனிபோடும் தொட்டி அல்லது கூண்டில் கொஞ்சம் கிழிஞ்சல் தூளைப்போட்டால் அவைகள் அதை உட்கொள்ளும்.

இத்தூளின் கிரய விவரம்.

சென்னைக்குச் சமீபமாயுள்ள என்னூர் ஸ்டேஷன் (எம்.எஸ். எம்.ஆர்.) பாஸ் டெலிவரிக்கு, 80 ராத்தலின் கிரையம் ரூ. 4–4–0, 60 ராத்தலின் கிரையம் ரூ. 3–4–0, 40 ராத்தலின் கிரையம் ரூ. 2–4–0, 20 ராத்தலின் கிரையம் ரூ. 1–4–0. கோழிகள் வளர்க்கப்படும் இடத்தில் கொஞ்சம் கிழிஞ்சல் தூளை ஒரு பாத்திரத்தில் போட்டுவைத்தால் கோழிகள் தங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளும். ரயில்வே பார்சலில் வரவழைத்தால்

ரயில்வே கட்டணம் அதிகமாகுமானதால், மணுக்கணக்காய் (80 ராத்தல்) ரெயில்வே கூட்ஸ் மூலமாய் வரவழைத்தால் நலம். சென்னை மீன் இலாகாதார் மேற்சொன்ன தூளைத் தயார் செய்கிறார்கள். இது வெளிதேசங்களினின்று வரவழைக்கப்படும் சரக்கைவிட மெத்த வலிவானது. இந்தியா பர்மா முதலிய தேசங்களில் அதிக கோழிகளை வளர்ப்பவர்கள் என்னூர் மீன் சாலையினின்றுதான் இத்தூளை வாங்குகிறார்கள்.

இதைப்பற்றிய விவரங்களுக்கு என்னூர் சர்க்கார் மீன் சாலையிலுள்ள ரிசர்ச் அஸிஸ்டெண்டுக்கெழுதிக்கொள்ளவேண்டியது.

VI. சுகாதார இலாகா.

55. கிராம சுகாதாரத்தில் ஏற்படும் முக்கியமான கஷ்டத்தை நிவர்த்தி செய்வது குழிக் கக்கூஸ்களே.

பெரும்பான்மையான ஜனங்கள் கிராமாந்தரங்களிலேயே வசித்துவரும் நமது இந்தியா நாட்டின் சுகாதார நிலைமை, சாஸ்திரீகமான முறைகளை அனுசரித்து முன்னேற்றமடைந்து வாழும் மற்ற நாடுகளைப்போலில்லாமல், நாகரீகமற்றதாகவே இருக்கிறது. நமது கிராமங்களின் சுகாதாரம் சிறிதும் கவனிக்கப்படுவதேயில்லை. குப்பை கூளங்களும், மாட்டுச்சாணம், மனிதர் மலம் முதலிய உரங்களும் மலைமலையாய் எல்லா இடங்களிலும் குவிக்கப்பட்டிருப்பதே இதற்கு அத்தாக்ஷி. சுத்தமான குடிதண்ணீர் கொடுக்கவும், கழிவுநீர் தங்காமல் செல்வதற்குத்தகுந்த ஜல தாரைகள் ஏற்படுத்தவும், குப்பை கூளங்களையும் மலம் முதலியவைகளையும் மனிதர் வசிக்குமிடத்திலிருந்து வெகு தூரத்தில் கொண்டுபோய்ப் போடவும் செய்ய வேண்டிய ஏற்பாடுகளே, சுகாதார முன்னேற்றத்திற்காக அனுசரிக்க வேண்டிய முக்கியமான விதிகள். நல்ல கக்கூஸ்களையும், சரியான கழிவு நீர்ப்போக்குகளையும் காண்பது மிகவும் அரிதாய் இருக்கிறது. மற்றவருக்கு ஆபாசமாயும் இடைஞ்சலாயும் இருக்கக்கூடிய இடங்களிலும், பொதுஜன உபயோகத்திற்காக உள்ள குடி தண்ணீரை அசுத்தமாக்கக்கூடிய இடங்களிலும், ஈக்கள் மூலமாக ஆகாரத்தை அசுத்தமாக்கக்கூடிய இடங்களிலும் ஒவ்வொருவரும் மலம் கழிப்பதே வழக்கமாய் இருக்கின்றது. இம்மாதிரி நிலைமைகள் ஏற்படவேண்டிய காரணங்கள், முதலாவதாக சாதாரண மனிதனுக்கு, பிறருக்காக உழைக்கவேண்டிய பொறுப்பையும் சுகாதாரத்தையும் பற்றிய அறிவு இல்லாததாலும்; இரண்டாவதாக அதற்கு வேண்டிய வசதிகள் இல்லாததாலுமாம்.

கிராமங்களில் வசிக்கும் ஜனங்களுக்குப் போதிய சுத்தமான கக்கூஸ்களில்லாமையே, அவர்கள் வயல்களிலும், வாய்க்கால் கரைகளிலும், தெருக்களிலும், சந்துகளிலும், வேலிகளுக்கு அருகிலும், கள்ளிப்புதர் மறைவிலும், இன்னும் நினைத்த இடங்களிலும் கண்டபடி மலம் கழித்து அசுத்தமாக்குவதன் காரணமாகும். மனிதர் மலத்தினால் மண் அசுத்தமாக்கப்படுவது, நமது கிராமங்களில் மிகவும் முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டிய பொதுஜன சுகாதார விஷயம். கொடிய வியாதிகள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுவதற்கு முக்கிய காரணமாயிருப்பது இதுதான். இதன் மூலமாகவே விஷஜுரம் பரவுகிறது. தவிரவும் காலரா, வயிற்றுக் கடுப்பு முதலிய குடல் சம்பந்தமான எல்லா வியாதிகளும் இதன் விதமாகவே பரவுகின்றன. எங்கும் அதிகமாய்ப் பாவியிருக்கும் கொக்கிப் புழு வியாதியும் அசுத்தமாக்கப்படும் மண்ணினாலேயே உண்டாகின்றது.

வியாதிக் கிருமிகள் நிறைந்திருக்கும் இந்த அசுத்தமான மண், ஈக்களால் ஆகாரத்திற்கும்; மழையினால் கிணறு, குளம், வாய்க்கால் முதலிய நீர் நிலைகளுக்கும் கொண்டுபோய்ச் சேர்க்கப்படுகிறது. பன்றிகள், கோழிகள், இவைபோன்ற மற்றப் பிராணிகளும் மலத்தைக் கண்டவிடத்தில் பரப்பும். ஆகையால் ஒவ்வொரு கிராமத்திலும் போதுமானக் கக்கூஸ்கள் ஏற்படுத்தவேண்டும். பிரசங்கங்கள், பேச்சுகள், புத்திமதிகள், படக்காட்சிகள் முதலியவை மூலமாக, மலஜலம் கழிப்பதற்கு இக்கக்கூஸ்களுக்கே செல்லும்படி, கிராமவாசிகளைத் தூண்டவேண்டும்.

சாதாரணமாக எங்கும் காணப்படும் மாதிரிக் கக்கூஸ்களைக் கிராமங்களுக்கு வேண்டிய அளவு கட்டுவதில் ஏற்படும் மிகவும் அதிகமான பணச் செலவே இதிலுள்ள முக்கியமான கஷ்டம். இக்கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்காக, ஒரு புது மாதிரியான கக்கூஸ் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது மலிவாகவும் மிகவும் சுத்தமாகவும் இருக்கிறது. இதைக் கட்டுவது மிகவும் சுலபம் ; கட்டியபின் இதை அதிகம் கவனிக்கவேண்டியதில்லை. இதுதான் குழிக் கக்கூஸ் என்பது.

குழிக்கக்கூஸ் என்பது 14 அங்குல அகலத்தில், 10 முதல் 20 அடி ஆழம் வரை தரையில் தோண்டப்படும் ஒரு வட்டமான குழியே. இக் குழியின்மேல், உட்காருவதற்காக $2\frac{1}{2}$ அடி சதுரமுள்ள ஒரு சிமிண்டுக் கல் வைக்கப்படும். இக்கல்லைச் சுற்றி 5 முதல் 6 அடி வரை உயரமுள்ள மறைவு கட்டப்படும். இம்மறைவு மண்சுவர்களினாலாவது, தார் அடித்த மூங்கில் தட்டிகளினாலாவது, வளைவுள்ள துத்தநாகத் தகடுகளினாலாவது ஏற்படுத்தப்படலாம். இவைகளில் துத்தநாகத் தகட்டு மறைவுகளே நன்றாகவும் சுத்தமாகவும், நாளடைவில் அதிகப் பணச்செலவு இல்லாமலும் இருக்கும். குழிகள் அதற்கென்று ஏற்பட்டுள்ள மண்தோண்டும் ஆயுதங்களால் தோண்டப்படுகின்றன. சாதாரணமான (சுமாரான) கெட்டித்தரையில், மூன்று மனிதர்கள் இந்த ஆயுதத்தால் 15 அடி ஆழமுள்ள குழியை 17 நாளில் தோண்டிவிடுகிறார்கள். குழி தோண்டும் ஆயுதங்களைச் சொந்தமாக வாங்கிவிடலாம். இல்லாவிட்டால் மிகவும் குறைந்த வாடகைக்கு, சென்னை சுகாதார டைரெக்டர் அவர்கள் ஆபீஸிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

குழிக்கக்கூஸ் கட்ட ஏற்படும் செலவுகள் முக்கியமாக, உட்காரும் சிமிண்டுக் கல் பலகைக்கும், குழி தோண்டும் கூலியாட்களுக்கும் ஏற்படும் செலவுகள்தான். ஒரு ஜில்லாவில் அதிகமாய்க் குழிக் கக்கூஸ்கள் கட்டவேண்டியிருந்தால், அவ்விடத்திலேயே உட்காரும் சிமிண்டுக் கல்பலகைகளைச் செய்ய ஏற்பாடு செய்வது மிகவும் நல்லது. அப்படிச் செய்தால்தான் அவைகளுக்காக ஏற்படும் செலவு மிகவும் சுருக்கமாகும். குழி தோண்ட உபயோகிக்கும் ஆயுதத்தின் நயம் ; தரை இருக்கும் உறுதி ; வேலை செய்யும் கூலியாட்களின் திறமை, அனுபோகம் ; மேற்பார்வையிடும் அளவு இவைகளைப் பொறுத்து குழிதோண்டும் செலவு அதிகமாகவோ குறைவாகவோ ஆகும். சாதாரணமாக ஒரு சிமண்டுக்கல்லின் விலை 3 ரூபாயும், 15 அடி ஆழமுள்ள குழி தோண்டச் செலவாகும் கூலி 2 ரூபாயும்தான்.

இக்குழியில், தரை மட்டத்திலிருந்து இரண்டடி ஆழம்வரை மலம் நிரம்பிவிட்டால், உடனே உலர்ந்த மண்ணால் குழியை மூடிவிடவேண்டும். அவ்விடத்திலிருந்து சிறிது தூரத்தில் ஒரு புதிய குழி தோண்டி, அதன்மேல் பழைய இடத்திலிருந்த சிமிண்டுக் கல்லைக் கொண்டுபோய் வைக்கவேண்டும். பழைய இடத்திலிருந்த மறைவையும் புதிய இடத்துக்குக் கொண்டுபோய் வைத்துவிட்டால், புதிய கக்கூஸ் உடனே உபயோகிக்கலாம். இந்தச் சிமிண்டுக் கல்லையே திரும்பத் திரும்ப உபயோகிக்கலாம். புதிய குழிகள் தோண்ட ஏற்படும் செலவுதான், புதிய கக்கூஸ்கள் கட்டுவதற்கும் ஆகும். செங்கல், சுண்ணாம்பு முதலியவைகளால் கட்டப்படும் உறுதியான கக்கூஸ்களைக் கட்டவும், சுத்தமாக வைக்கவும் ஏற்படும் செலவைவிட, குழிக்கக்கூஸ்களின் செலவு எவ்வளவோ குறைவுதான். உபயோகப்படுத்திய குழிகளை மூடியபின் ஆறு மாதங்களில், அதில் இருந்த மலம் மக்கி மண்ணாய்விடும். பிறகு அக்குழியிலேயே மறுபடியும் தோண்டி, கக்கூஸ்களாக உபயோகிக்கலாம். இக்குழிகளிலிருந்து எடுக்கப்படும் மண் மிகவும் சிறந்த உரமாக உபயோகப்படும். சாதாரணமான உபயோகத்தில், ஒரு குழிக் கக்கூஸ் ஒன்று அல்லது இரண்டு வருஷங்களில் தான் நிரம்பும்.

குழிக்கக்கூஸ்களை உபயோகிப்பதில் ஞாபகம் வைக்கவேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், சரியானபடி உபயோகித்தால் அவை சிறந்த கக்கூஸ்ாகவே விளங்கும் என்பதே. மலம் கழிக்கும் கிராமவாசி, அதற்காக ஏற்படுத்தப்படிருக்கும் தொளைக்கு நேராக உட்காரவேண்டும்.

[சிமிண்டுக்கல் பலகையில் இதற்காகவே வைக்கப்பட்டிருக்கும் பாத மேடுகளில் பாதங்களை வைத்து உட்கார்ந்து மலம் கழிக்கவேண்டும்.] இவ்வாறு செய்யாமல், கக்கூஸின் அருகிலாவது, நுழையும் வழியிலாவது, கக்கூஸ் அறைக்கும் சிமிண்டுக்கல் பலகையின் மேலாவது மலம் கழிக்கக்கூடாது. இப்படி அக்கக்கூஸ்களில் ஆபாசம் செய்தால், மற்றவர்கள் அருவருப்புக் கொண்டு அவைகளை உபயோகிக்கமாட்டார்கள். அதனால் அவைகள் பிரபலமாவது மிகவும் அரிதாய்விடும். இவ்வாறு ஆபாசம் செய்வதைத் தடுப்பதற்காகவே, வழியின் அகலம், உட்காரும் சிமிண்டுக்கல் பலகையின் அளவு, கக்கூஸுக்குள் அவசியமில்லாத இடம் இவைகள் கூடுமானவரை குறைத்தே வைக்கப்பட்டிருக்கிறது. இதற்குமேல் செய்யவேண்டியது பொதுஜன அபிப்பிராயத்தையும், கிராம சுகாதாரத்திலும் நன்மையிலும் ஆவல்கொண்ட அறிஞர்கள், மற்றவர்களுக்கு இவ்விஷயங்களை நன்கு எடுத்துச் சொல்வதையும் பொறுத்திருக்கிறது.

56. கொக்கிப்புழு.

கிராமங்களில் வாழும் ஜனங்களில் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் சுறுசுறுப்பாய்க் காணப்படுகிறார்கள். அவர்கள் வெகு நாழிகை வேலைசெய்தபோதிலும் சீக்கிரம் களைப்படைகிறதில்லை. தங்களது வாழ்க்கையில் மிகவும் உற்சாகங்கொண்டு, வேண்டிய பொருள் சம்பாதித்துச் சுகமடைகின்றனர். இவ்வாறு நல்லதிர்ஷ்டத்துடன் வாழ்பவர்கள், கொக்கிப் புழு நோயின் கொடுமைக்கு ஆளாகாமல் தப்பியவர்களே என்று நீங்கள் எப்பொழுதாவது நினைத்ததுண்டா? கொக்கிப்புழு, வியாதியஸ்தனுடைய ரத்தத்தை உறிஞ்சிக் குடித்து சிறிது சிறிதாக அவனது தேகத்தில் விஷத்தைச் செலுத்தி, நாளடைவில் அவனது தேக சுகத்தை வேரறுக்கிறது. உடனே கொல்லாவிட்டாலும், அவை அவனுடைய தேகபலத்தை முற்றிலும் கெடுத்து பல கொடிய வியாதிகள் வருவதற்கு இடமுண்டாக்குகிறது.

கொக்கிப்புழு சுமார் அரை அங்குல நீளமும், சாதாரண குண்டூசியின் அளவு கனமும் உள்ளது. அதன் வாயில் கொக்கியைப்போன்ற கூர்மையான பற்கள் உண்டு. இப்பற்களின் உதவியால்தான் அது மனிதனுடைய குடலின் உட்புறத் தசையில் தொத்திக்கொண்டிருக்கிறது. தாய்ப் புழு குடலில் ஒரு நாளைக்கு ஆயிரம் முட்டைகளுக்குமேல் இடுகிறது. இம்முட்டைகள் மலத்துடன் வெளியேறுகின்றன. ஈரம், உஷ்ணம் இவைகள் உள்ள மண்ணின்மேல் மலத்துடன் கலந்த இம்முட்டைகள் விழுந்தால், இம் முட்டைகளிலிருந்து சிறு கொக்கிப்புழுக் குஞ்சுகள் வெளியே வருகின்றன. இச்சிறு புழுக்குஞ்சுகள் சில மாறுதலடைந்தபின், மனிதனது தோலைத் துளைத்துக்கொண்டு, அவனது தேகத்திற்குள் நுழைகிறது. இம்மாதிரிக் குஞ்சுகள் நிறைந்த மண்ணில் வெறுங்காலுடன் நடந்து செல்பவர்களும், அவ்விடத்தில் குழிகள் முதலியவை தோண்டி அம்மண்ணைக் கையாடுபவர்களும்தான் இவ்வியாதிக்கு ஆளாகிறார்கள். சாதாரணமாக இக்குஞ்சுகள் கால்விரல்களுக்கிடையில் உள்ள மிருதுவான தோலைத் துளைத்துக் கொண்டு செல்கின்றன. இம்மாதிரி அது துளைத்துச் சென்ற இடத்தில் ஒரு வித அரிப்பு ஏற்பட்டு, சீக்கிரம் அவ்விடம் புண்ணாகிறது. இதுதான் "சேற்றுப்புண்" என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு தேகத்தின் நுழையும் குஞ்சுகள் ரத்தத்தின் மூலமாக, தேகத்தின் பல பாகங்களிலும் சுற்றிக் கடைசியில் குடலில் வந்து சேர்ந்து, அங்கேயே வசித்து விருத்தியாகின்றன. பெண் புழு பெரியதானதும் முட்டையிட யாரம்பிக்கிறது. முன்போலவே முட்டைகள் மலத்துடன் வெளியேறி மறுபடியும் தேகத்துள் நுழைகிறது. இவ்வாறே, புழுக்குஞ்சுகள் தேகத்துள் நுழைவது, மலத்துடன் முட்டைகள் வெளியேறிக் குஞ்சுகளாகி மண்ணை அசுத்தமாக்குவது, மறுபடியும் குஞ்சுகள் தேகத்துள் நுழைவது முதலியவை திரும்பத் திரும்ப எப்பொழுதும் நடந்துகொண்டே இருக்கின்றன.

ஒரு மனிதனுடைய குடலில் உள்ள புழுக்களின் தொகைக்கும், அவன் வசிக்கும் இடத்தின் நன்மைக்கும் ஏற்றப்போல் இவ்வியாதியின் கொடுமைகள் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். சிலருடைய குடலிம

மிகவும் அதிகமான புழுக்கள் இருந்தபோதிலும், அவைகள் இருப்பது வெளியில் தெரிகிறதேயில்லை. வேறு சிலருடைய குடலில் சில புழுக்களே இருந்தபோதிலும் அவர்களிடம் இவ்வியாதியின் கொடுமை அதிகமாகத் தெரிகிறது. வியாதி லேசாய் இருந்தால், தேகம் மனம் இரண்டிலும் பல ஹீனம் ஏற்பட்டு, தேகம் சிறிது வெளுத்திருக்கும். லேசான வயிற்று வலி, தலைவலி, தலைக்கிறுகிறுப்பு, சில சமயங்களில் ஏற்படும் அஜீரணம், களிமண், மண், காகிதம், சாம்பல் இவைகளைத் தின்பதற்கும் ஏற்படும் தடுக்க முடியாத ஆவல் இவைகளே கொக்குப்புழு வியாதியின் அறிகுறிகள். வியாதி மிகவும் கடுமையாய் இருந்தால், கால்களும் பாதங்களும் வீங்கி, தேகமெங்கும் மிகவும் வெளுத்து, சதைப்பற்றுக் குறைந்து எலும்பும் தோலுமாகி, வயிறு பெருத்து, கன்னங்கள் ஊதலெடுத்து, மூளை மழுங்கி மிகவும் பலஹீனம் ஏற்படும். கர்ப்ப ஸ்திரீகளுடைய கர்ப்பம் குலைந்து போகும்.

கொக்கிப்புழு வியாதி, வியாதியஸ்தர்களுடைய வேலை செய்யும் சக்தியை குறைக்கிறது. அதனால் அவர்கள் தங்கள் பிழைப்புக்கு வேண்டிய பொருள் சம்பாதிக்கமுடியாமல் கஷ்டப்படுவார்கள். குழந்தைகளுக்கு இவ் வியாதி வந்தால், அவர்களது வளர்ச்சி குன்றி விருத்தி குறைகிறது. அவர்களுடைய தேகத்தில் ரத்தம் குறைந்து வெளுத்துப்போய், அவர்களால் தேகத்தினாலும், மனத்தினாலும் வேலை செய்ய முடிகிறதில்லை. அவர்களுடைய புத்தி மழுங்கி, வாலிபத்தில் (இளம்பருவத்தில்) இருக்கவேண்டிய பலமும் உற்சாகமும் இல்லாமற் போகிறது. அவர்கள் தேகபலத்திலும் மனோபலத்திலும் விருத்தியடைந்து சிறந்த ஆண்மகனாகவும் பெண்மணியாகவும் ஒருபோதும் ஆகிறதேயில்லை.

இவ்வியாதியை எளிதில் கண்டுபிடித்து, வைத்தியம் செய்து சௌக்கியமாக்கலாம். மலத்திலுள்ள முட்டைகளை **அணுதரிசினி** என்னும் பூதக் கண்ணாடியின் மூலம் கண்டுபிடிக்கலாம். மலத்தில் முட்டைகள் இருந்தால் குடலில் பெரிய புழுக்கள் இருக்கின்றன என்பது நிச்சயம். ஏனெனில் பெரிய புழுக்கள் இல்லாமல் முட்டைகள் வராதல்லவா? குடலில் வாழும் இப்புழுக்களைக் கொன்று வெளியேற்றுவதற்குத் தகுந்த சக்தியுள்ள மருந்துகள் பல இருக்கின்றன. சிலசமயம் ஒருவேளை மருந்து சாப்பிட்டபோதிலும் வியாதி குணமாகிறது. எல்லாக் கவர்ன்மெண்டு (சர்க்கார்) ஆஸ்பத்திரிகளிலும் லோகல் பண்டு ஆஸ்பத்திரிகளிலும் கொக்கிப்புழு வியாதிக்கு இனமாக வைத்தியம் செய்யப்படுகிறது. நீங்கள் இவ்வியாதியால் அவஸ்தைப்பட்டால், உடனே சென்று மருந்து சாப்பிடுங்கள். அதனால் உங்களுக்கு சுகமும் சந்தோஷமும் உண்டாகும்.

இவ்வாறு நீங்கள் சௌக்கியமடைந்தபின், மறுபடியும் இவ்வியாதி வராமல் காத்துக்கொள்ளவேண்டும். மண்ணில் கொக்கிப்புழுக் குஞ்சுகள் நிறைந்திருக்கும்படி விட்டால், இவ்வியாதி மறுபடியும் வந்துவிடும். திறந்த வெளிகளில் கண்டபடி மலம் கழிக்கக்கூடாது. கண்டவிடத்தில் மலம் கழிக்கக்கூடாதென்று, உங்கள் வீட்டுக்கு அருகில் உள்ளவர்களுக்கெல்லாம் கூறுங்கள். இவ்வாறு கண்டவிடங்களில் மலம் கழித்து மண்ணை அசுத்தமாக்குவதால் கொக்கிப்புழு நோய், காலரா, டைப்பாய்டு என்னும் விஷஜுரம், வயிற்றுக்கடுப்பு, வயிற்றுப்போக்கு முதலிய வியாதிகள் பரவுகின்றன, ஆகையால் இந்தக்கொடிய வழக்கத்தை நாம் ஏன் அனுசரிக்க வேண்டும்? உங்கள் ஊர்களில் சரியான கக்கூஸ்கள் ஏற்படுத்தி, அதில் மலம் கழியுங்கள். அதனால் உங்கள் ஊரும் சுத்தமாய் இருக்கும். உங்களுக்கும் கொடிய வியாதிகள் ஒன்றும் வராது.

57. காலரா.

காலரா என்னும் கொடிய கொள்ளைநோய் வருஷத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்களைக் கொல்லுகிறது. இது அணுப் பரிமாணமுள்ள காலராக் கிருமிகளால் உண்டாகிறது. காலரா வியாதியஸ்தனுடைய மலத்திலும் வாந்தியிலும் இக்கிருமிகள் கோடிக்கணக்காய் வெளியேறுகின்றன. இத

னுல்தான் இந்நோய் ஒரு கிராமத்தில் ஆரம்பித்தால் வெகு சீக்கிரத்தி லும் அதிகமாயும் பரவுகிறது. இக்கிருமிகள் ஆகாரம், தண்ணீர் இவை களின் மூலமாகவே மனிதர் தேகத்துட்புகுந்து தமது கொடிய வேலையைச் செய்கின்றன. காலரா வியாதியஸ்தனுடைய மலஜல வாந்திகளுடன் சம் பந்தப்படுவதினுல் கிருமிகள் நிறைந்திருக்கும் ஆகாரம் தண்ணீர் இவை களை உட்கொண்டாலொழிய ஒருவருக்கும் காலரா வராது.

பின்வரும் தடுக்குமுறைகளை அனுசரித்தால், காலரா வராமல் லேசாய் காத்துக்கொள்ளலாம் :—

(1) அசுத்தமாக்காமல் காக்கப்பட்ட தண்ணீர் இல்லாத இடத்தில் கொதிக்கவைத்த தண்ணீரையே குடிக்கவேண்டும். கொதிக்க வைப்பதி னுல் காலராக் கிருமிகள் இறந்துவிடுகின்றன. காலரா வியாதியஸ்தனு டைய மல ஜல வாந்திகள் சிறிதும் சம்பந்தப்படாத இடத்திலிருந்தே, மற்ற வேலைகளுக்கு வேண்டிய தண்ணீரை எடுத்துக்கொள்ளவேண்டும்.

(2) ஆகாரத்தில் ஈ மொய்க்காமலும், தூசி விழாமலும் மூடிவைக்க வேண்டும். ஈக்கள், கக்கூஸ்களிலிருந்தும் மலக் குவியல்களிலிருந்தும், மலத்தையும் அபாயகரமான காலரா கிருமிகளையும், தங்கள் கால்களிலும் சிறகுகளிலும் கொண்டு செல்லுகின்றன. இவ்வாறு செல்லும் அவை ஆகாரத்தின்மேல் உட்காருவதால், இந்த மலமும் கிருமிகளும் அந்த ஆகாரத்திலும் கலந்துவிடுகின்றன.

(3) காலரா வியாதி ஊரில் ஆரம்பிக்கும் காலத்திற்கு முன்பாகவே, நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் இனுகுலேஷன் செய்துகொண்டு காலரா வராமல் காத்துக்கொள்ளுங்கள். இனுகுலேஷன் செய்துகொண்டால் கா லரா வராமல் தப்பலாம்.

(4) ஊரில் காலரா கண்டிருக்கும் சமயத்தில் பேதியாவதற்கு மருந்து சாப்பிடக்கூடாது : அதிகமாய்ப் பழுத்த பழங்களையும், பழுக்காத பழங்களை யும் தின்னக்கூடாது. இவைகளில் வயிற்று உளைச்சல் ஏற்பட்டு, காலரா வியாதி எளிதில் வருவதற்கு எதுவாகும்.

(5) யாருக்காவது காலரா கண்டால், உடனே டாக்டரைக் கூப்பிட வேண்டும். தாமதம் அபாயகரமானது எவ்வளவு சீக்கிரம் வைத்தியம் (சிகிச்சை) செய்கிருேமோ, அவ்வளவு எளிதில் நோய் குணப்பட இடமுண்டு.

(6) காலரா வியாதியஸ்தனை ஒரு தனி அறையிலாவது தாழ்வாரத்தி லாவது வைக்கவேண்டும். அவனைக் கவனிப்பதற்கு ஒருவர் அல்லது இரு வர்தான் அருகில் இருக்கலாம். வியாதியஸ்தனுடைய ஆடைகளையும், அவன் உபயோகித்த பாத்திரங்களையும் தனியாய் வைக்கவேண்டும். கிருமி நாசகாரியால் சுத்தம் செய்யுமுன் அவைகளை ஒருவரும் உபயோகிக்கக் கூடாது.

(7) வியாதியஸ்தனுடைய மல ஜல வாந்திகளில் காலராக் கிருமிகள் நிறைந்திருக்குமாகையால், அவைகளை உடனே எறிக்கவேண்டும். அவை களை ரம்பத்தூள், வைக்கோல் முதலியவைகளோடு கலந்து, மண்ணெண் ணெய் ஊற்றி எரித்துவிடவேண்டும். அவனுடைய ஆடைகளை வண்ணு னிடம் வெளுக்கக் கொடுப்பதற்கு முன், தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைக்கவேண்டும் அல்லது நல்ல கிருமி நாசகாரியில் ஒரு மணி நேரம் ஊரவைக்கவேண்டும்.

(8) காலரா வியாதியஸ்தன் உபயோகித்த அந்த ஆடைகளையும் பாத் திரங்களையும், குளம், கிணறு, ஆறு முதலியவைகளிலாவது, அவைகளின் அருகிலாவது சுத்தம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் அந்தத் தண் ணீர்களிலும் கிருமிகள் கலந்துவிடும். அதனுல் அந்தத் தண்ணீர்களைக் குடிப்பவர்களுக்கும் காலரா வந்துவிடும்.

(9) காலரா வியாதியஸ்தனைக கவனித்துவிட்டு வந்ததும் கைகளில் சோப்பும் வெந்நீரும் தேய்த்துக் கழுவவேண்டும். நகத்திடுக்குகளில் கா லரா கிருமிகள் தங்கியிருக்கும். ஆகையால் நகங்களையும் நன்றுய்ச் சுத் தம் செய்யவேண்டும். கிருமி நாசகாரி இருந்தால் அதில் கைகளைக் கழுவு வது நலம்.

(10) கிராம முன்சீபிடமாவது, சுகாதார இன்ஸ்பெக்டரிடமாவது காலராக்கண்ட விவரத்தைத் தெரிவிக்கவேண்டும். ஊரைவிட்டுக் காலரா வியாதியை ஒழிப்பதற்காக, அவர்கள் உங்களுக்கு வேண்டிய எவ்வித உதவியும் செய்வார்கள்.

(11) ஊரில் **காலரா** வியாதி நிற்கும் வரையில் தினந்தோறும் கிணறுகளிலும், குளங்களிலும் மருந்து போட்டுச் சுத்தம் செய்யவேண்டும். ஒருபோதும் வாய்க்கால் தண்ணீரைக் குடிக்கக்கூடாது.

58. மலேரியா ஜுரமும் கொசுக்களும்.

மலேரியா என்னும் **முறை ஜுரம்**.—சிற்சில மாதிரிக் கொசுக்கள் கடிப்பதால்தான் உண்டாகிறது. வேறு எந்த விதத்திலும் இந்த ஜுரம் வராது. இம்மலேரியா ஜுரத்தினுல் அவஸ்தைப்படும் மனிதனுடைய ரத்தத்தில் மலேரியாக் கிருமிகள் ஏராளமாய் இருக்கின்றன. இம்மனிதனைக் கொசு கடிக்கும்போது ரத்தத்தோடு மலேரியாக் கிருமிகளையும் விழுங்குகிறது. இக்கிருமிகள் கொசுவின் வயற்றில் விருத்தியாகின்றன. பிறகு இக்கொசு வியாதியில்லாத மனிதனைக் கடிக்கும்போது, மலேரியாக் கிருமிகளை அவனுடைய ரத்தத்தில் சேர்த்துவிடுகிறது. யானைக்கால் ஜுரம், முடக்கு ஜுரம் முதலிய பல ஜுரங்களும் கொசுக்கடியினுல்தான் உண்டாகின்றன. கொசு இல்லாமல் இவ்வியாதிகள் பரவுகிறதில்லை.

தண்ணீர்த் தேக்கங்களில்தான் கொசுக்கள் உற்பத்தியாகின்றன. கொசு தண்ணீரில் நூற்றுக்கணக்கான முட்டைகளை இடுகிறது. பிறகு இரண்டொரு நாளில், இம்முட்டைகளிலிருந்து புழுப்போன்ற சிறு குஞ்சுகள் வெளியேவந்து துள்ளி விளையாடும். சில நாட்களுக்குப் பின் இச்சிறு புழு **கூட்டுப் புழுவாகி**, கடைசியில் இக்கூட்டிலிருந்து கொசு வெளியேறுகிறது. 7 முதல் 10 நாட்களில் முட்டை கொசுவாய்விடும். நல்ல தண்ணீர் அசுத்தமான தண்ணீர் முதலிய எந்தத் தண்ணீர்த் தேக்கத்திலும் கொசு உற்பத்தியாகும். உடைந்த பானையோடுகள், புட்டிகள், பீப்பாய்கள், தொட்டிகள் முதலியவற்றிலும், வளைகள், குழிகள், குட்டைகள், ஜலதாரைகள் முதலியவற்றிலும் இத்தண்ணீர்த் தேக்கங்கள் ஏற்படுவது மிகவும் சகஜம் (சர்வ சாதாரணம்).

மலேரியா ஜுரம் பரவுவதற்குப் பின்வரும் மூன்று விஷயங்களே காரணம் ; அவையாவன :—

(1) மலேரியா ஜுரத்தால் வருந்தும் மனிதனது ரத்தத்தில் நிறைந்திருக்கும் மலேரியாக் கிருமிகள்.

(2) மலேரியா வியாதியஸ்தனிடமிருந்து இக்கிருமிகளைக்கொண்டு சென்று, வியாதியில்லாதவனுடைய ரத்தத்தில் செலுத்தும் ஒருவிதக் கொசுக்கள்.

(3) இக்கொசுக்கள் மனிதரைக் கடிப்பதற்கு ஏற்படும் வசதிகள்.

மலேரியா ஜுரம் வராமல் தடுத்து வேரறுக்க வேண்டுமானுல், மேற்கூறிய மூன்று விஷயங்களையும் எதிர்த்து வேலைசெய்யவேண்டும். சரியானபடி வேலை செய்தால், இதைத் தடுப்பதில் சிறிதும் கஷ்டமேயில்லை. பின்வரும் முறைகளை அனுசரித்து, மலேரியா ஜுரத்திலிருந்து தப்பிக்கொள்ளுங்கள் :—

(1) மலேரியா கிருமிகளைக் கொல்லும் சக்தியுள்ளது கொய்னு என்னும் மருந்துதான். மலேரியா ஜுரத்தால் வருந்துபவர்கள் தங்கள் ரத்தத்தில் உள்ள கிருமிகளைக் கொல்வதற்கு வேண்டிய அளவு **கொய்னு** மருந்தைச் சாப்பிடவேண்டும். ஜுரம் வந்தால் உடனே பக்கத்தில் உள்ள டாக்டரிடம் செல்லுங்கள். நீங்கள் செய்யவேண்டியது அவர் கூறுவார். சரியானபடி கொய்னு மருந்தைச் சாப்பிட்டால், உங்களுக்கு மலேரியா ஜுரம் சௌக்கியமாய்விடும் ; அதனுல் மற்றவர்களுக்கும் இந்த ஜுரம் பரவுவதற்கு நீங்கள் காரணமாகமாட்டீர்கள். எல்லாத் தபாலாபீஸுகளிலும் கொய்னு மருந்து சுலபமாய்க் கிடைக்கும்.

(2) உங்கள் வீட்டிலும் அதற்கருகிலும் கொசுக்கள் உற்பத்தியாவதை தடுத்திடுங்கள். தண்ணீருள்ள இடங்களில்தான் கொசுக்கள் உற்பத்தியாகும். ஆகையால் சிறு குளங்களேயும் குட்டைகளேயும் மூடிவிடுங்கள், உங்கள் வீட்டுச் சாக்கடைகளேயும் ஜலதாரைக் குழிகளேயும் சுத்தமாக வையுங்கள்; வீட்டுக்கு அருகிலுள்ள உடைந்த பானேயோடுகள், புட்டிகள், பீப்பாய்கள் முதலியவைகளே அப்புறப்படுத்துங்கள். காலி செய்யவும் முடியாத தண்ணீர்த் தேக்கங்களில் உள்ள கொசுக் குஞ்சுகளேக் கொல்வதற்காக வாரத்திற்கொரு முறை எண்ணே தெளிக்கவேண்டும். இவ்வாறு கேரொஸின் என்னும் மண்ணெண்ணேயைத் தண்ணீரின்மேல் லேசாகப் பரப்பினுல் கொசுக்குஞ்சுகள் மூச்சுவிடமுடியாமல் திக்குமுக்காடி இறந்து போம்.

(3) கொசுக்கடியால் வியாதி உண்டாகாவிட்டாலும், அதனுல் ஏற்படும் தொந்தரவும் கஷ்டமும் மிக அதிகம். ஆகையால் கொசு வலேக்குள் படுத்துறங்கி, கொசுக்கள் உங்களேக் கடிக்காமல் காத்துக்கொள்ளுங்கள்.

59. வைசூரி.

வைசூரி என்னும் கொடிய நோயை உங்களில் அநேகர் அறிவீர்கள். இது குளிர், ஜுரம், தலேவலி, தேகமெங்கும் வலி முதலியவைகளுடன் ஆரம்பிக்கும் மிகக்கொடிய ஒரு தொத்து நோய். மூன்று நாள் ஜுரத்துக்குப்பின், முகத்திலும் கைகளிலும் அம்மை முத்துக்கள் தோன்றி மெதுவாகப்பரவும், நோய் கடுமையாகக் கண்டால், இம்முத்துக்கள் ஒன்று சேர்ந்து பெரிய புண்ணுய்விடும்.

வைசூரி ஆயிரக்கணக்கான மரணங்கள் நமது நாட்டில் ஏற்படுவதற்குக் காரணமான ஒரு கொடிய தொத்து வியாதி. சிலர் அதிர்ஷ்ட வசமாக மரணத்திலிருந்து தப்பியப்போதிலும், தங்கள் ஆயுள் உள்ளளவும் விகார ரூபத்தோடும், கண் பார்வையை இழந்தும் தவிக்கின்றனர்.

வியாதியஸ்தனிடமிருந்து மற்றவர்களுக்கு வைசூரி காற்றுமூலமாக பரவுகிறது. வியாதியஸ்தனுடைய ஆடைகளிலும், படுக்கையிலும் இதன் விஷம் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அதனுல் அவைகளேத் தொட்டுக்கையாடுபவர்களுக்கும் இவ்வியாதி பரவுகிறது. வியாதியஸ்தனேக் கவனிப்பவர்களும், அவனுடன் அவ்வீட்டிலேயே வசிப்பவர்களும் இவ்வியாதிக்கு ஆளாகிருர்கள். இதனுல்தான் இவ்வைசூரிக்குத் தப்பும் வழிகள் தெரியாமலிருந்த முன் காலங்களில் ஒரு கிராமத்தில் இக்கொடிய வியாதி தோன்றினுல், இதற்குத் தப்புபவர் மிகவும் அரிது.

இப்பொழுது வைசூரியின் கொடுமை ஒழிந்துவிட்டது. அம்மைக் குத்திக்கொள்ளுவதால், இவ்வியாதி வராமல் சுலபமாய்த் தடுத்துவிடலாம். அம்மை குத்திக்கொண்டால் நிச்சயமாய் இவ்வியாதி வராது. அம்மை குத்துவது ஏற்படும் நாட்களுக்குமுன், அநேகமாய் ஒவ்வொருவருக்கும் ஆயுளில் ஒரு தடவை வைசூரி வார்க்கும். ஆனுல் இப்போது நீங்கள் அம்மை குத்திக்கொண்டால், வைசூரிக்கு ஆளாகாமல் தப்பலாம். அம்மை குத்திக்கொள்ளாதவர்களுக்கே இவ்வியாதி வருகிறது.

கன்றுக்குட்டியிலிருந்து எடுக்கப்படும் அம்மைப்பாலில் ஒரு சிறு துளி மேல் கையில் வைத்து, லேசாகக் கீறிவிடுவதுதான் அம்மை குத்துவது. இவ்வாறு கீறப்பட்ட இடத்தில் சில நாட்களில் சிறு முத்துக் கிளம்பும். அம்முத்தைச் சுத்தமாகவைத்து ஒன்றும் செய்யாமல் இருந்தால், அது சுலபத்தில் ஆறி, அவ்விடத்தில் ஒரு சிறு தழும்பு ஏற்படும்.

மூன்று முதல் ஆறு மாதங்களுக்குள் குழந்தைக்கு அம்மை குத்திவிடவேண்டும். இவ்விதம் முதல் தடவை அம்மை குத்துவதால் ஏற்படும் பாதுகாப்பு நாளடைவில் குறைந்துவிடுகிறது. ஆகையால் ஒவ்வொரு பத்து வருஷங்களுக்கும் ஒரு முறை மறு அம்மை குத்திக்கொள்ளவேண்டும். ஊரில் வைசூரி நோய் பரவியிருக்கும்போதெல்லாம் மறு அம்மை குத்திக்கொள்வதும் நன்மையே. அதனுல் உங்களுக்கு யாதொரு கெடுதலுமில்லே. ஆனுல் வைசூரி நோய் வராமல் நிச்சயமாய்க் காத்துக்கொள்ளலாம்.

60. பிளேக்.

நமது கிராமங்களில் அடிக்கடி பரவும் கொள்ளை நோய்களில் மிகவும் கொடியது **பிளேக்** என்னும் மகாமாரி நோய். இது மற்றக் கொள்ளை நோய்களைப் போலல்லாமல், மனிதருக்கும் எலிகளுக்குமே உண்டாகிறது. இறந்துவிழும் எலிகளே, ஓர் இடத்தில் பிளேக் வரப்போவதை அறிவிக்கும் முன் அறிகுறியாகும்.

பிளேக் கிருமிகள் என்னும் அணுப் பரிமாணமுள்ள கிருமிகளால்தான் பிளேக் நோய் உண்டாகிறது. இந்நோய் கண்ட மனிதனது ரத்தத்திலும் எலியின் ரத்தத்திலும் கிருமிகள் ஏராளமாய் இருக்கும். எலிகளின் ரோமங்களுக்கிடையில் **தெள்ளுப் பூச்சி** என்ற சிறு பூச்சி இருக்கிறது. இப்பூச்சிகள் எலிகளின் ரத்தத்தைக்குடித்து ஜீவிக்கின்றன. ஒரு எலி ப்ளேக் நோய் கண்டு இறந்துபோனால், அதன்மேல் உள்ள தெள்ளுப் பூச்சிகள் அந்த எலியை விட்டுவிட்டு, அவ்வறையிலுள்ள மற்ற எலிகளின் மேல் பாய்ந்து தொத்திக்கொள்ளும். எலிகள் இல்லாவிட்டால் மனிதர் மேல் பாய்ந்து கடிக்கும். இந்த மாதிரியே பிளேக் கிருமிகள் நோய்கண்ட எலியிலிருந்து நோயில்லாத எலிகளுக்கும் மனிதருக்கும் பரவுகிறது. எலிகள் இல்லாவிட்டாலும், எலிகள் இறந்து விழாவிட்டாலும் பிளேக் நோய் ஒருபோதும் உண்டாகாது. நமது கிராமங்களில் எலிகள் ஏராளமாய் இருக்கின்றன. இதனால் ஒரு இடத்தில் பிளேக் நோய் ஆரம்பித்தால் அது வெகு சீக்கிரத்தில் அதிகமாகி, தீவிரமாகப் பரவுகிறது. எலிகளால் நமக்கு யாதொரு உபயோகமில்லை. நமது ஆகாரத்திற்காகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் தானியங்களைத் தின்று அவை வாழுகின்றன. இதனால் ஏற்படும் பொருள் நஷ்டம் மிகவும் அதிகம். ஆகையால் நமக்குப் பலவிதத்திலும் தொந்தரவு கொடுக்கும் இந்த எலிகளைக் கொன்று, பிளேக் நோய் வராமல் நம்மைக் காத்துக்கொள்ளவேண்டியது அவசியமல்லவா ?

பின்வரும் தடுக்குமுறைகளை அனுசரித்தால் உங்கள் ஊரில் பிளேக் நோய் வராமல் பாதுகாக்கலாம் :—

(1) தானியங்கள் முதலிய ஆகார பதார்த்தங்கள் அடங்கிய மூட்டைகள், பிளேக் நோயுள்ள கிராமத்தை விட்டுப் பயந்து ஓடும் ஜனங்களுடைய துணிமணிகள் முதலியவைகள் மூலமாகவே தெள்ளுப்பூச்சிகள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு கொண்டுபோகப்படுகின்றன. பிளேக் நோய்கண்ட கிராமத்திலிருந்து வருபவர்களை உங்கள் கிராமத்திற்குள் நுழைய விடாதீர்கள். அவர்களுடைய துணிகள், மூட்டைகள் முதலியவற்றை நன்றாய் வெயிலில் காயப் போட்டு, அவர்களும் சுத்தம் செய்துக்கொண்ட பின்பே உங்கள் கிராமத்துள் நுழைய விடவேண்டும். அவ்வூரிலிருந்துவரும் தானிய மூட்டைகளையும் நன்றாய் வெயிலில் காயவைத்து பின்பு தான் உங்கள் கிராமத்திற்குள் விடவேண்டும்.

(2) எலிகளை நாசம் செய்யும் வேலையை மும்முரமாகச் செய்யுங்கள். எல்லா எலிகளையும் கொல்லுங்கள். எலி இல்லையேல் உங்கள் கிராமத்தில் பிளேக்கும் இராது.

(3) உங்கள் கிராமத்தைக் சுத்தம் செய்யுங்கள். முக்கியமாக உங்கள் வீட்டையும் அதைச்சுற்றியும் சுத்தம் செய்யுங்கள். வீட்டிலுள்ள கந்தைகளையும் கழிவு சாமான்களையும் காலி செய்யுங்கள். இவைகள் இருக்குமிடத்தில்தான் எலிகள் வசிக்கின்றன. தானியங்களையும் ஆகார பதார்த்தங்களையும் மூடி வைய்யுங்கள். குப்பை கூளங்கள், ஆகாரங்கள் முதலியவை வீட்டிலும் அதற்கருகிலும் சிதறிக் கிடக்கும்படி விடக்கூடாது. குப்பை கூளங்களினால் எலிகள் விருத்தியாகும்.

(4) எலிகள் நுழைய முடியாத களஞ்சியங்களும் கிடங்குகளும் கட்டுங்கள்.

(5) பிளேக் வரும் காலத்திற்கு முன்பாகவே நீங்களும் உங்கள் குடும்பத்தாரும், பிளேக் வராமல் காத்துக்கொள்ள, இனுகுலேஷன் செய்துக்கொள்ளுங்கள். இனுகுலேஷன் செய்துக்கொண்டால் உங்களுக்கு பிளேக் வராது.

(6) கிராமத்தில் எங்கேயாவது இறந்த எலிகளைக் கண்டாலும், யாருக்காவது சந்தேகமான ஜுரம் கண்டிருந்தாலும் அவ்விஷயத்தை உடனே கிராம முன்சீப்புக்காவது சுகாதார இன்ஸ்பெக்டருக்காவது அறிவிக்கவேண்டும்.

(7) யாருக்காவது பிளேக் நோய் கண்டால், உடனே அவனைத்தொத்து வியாதி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகவேண்டும். அங்கு அவனுக்கு வேண்டிய சௌகரியங்கள் கிடைக்கும்.

(8) வீட்டில் பிளேக் நோய் இருக்கிறது என்பதை இறந்து விழும் எலி முன்பாகவே நமக்கு அறிவிக்கிறது. உடனே அவ்வீட்டைவிட்டு நீங்கவேண்டும். அப்படி நீங்காமல் அவ்விட்டிலேயே இருப்பதால் நாமே நமக்கு கேட்டை வரவழைத்துக்கொள்ளுகிறோம். ஊருக்கு வெளியில் இதற்கென்றே கட்டப்பட்டிருக்கும் சுகாதார விடுதிகளில் சென்று வசியுங்கள். அங்கு உங்களுக்கு வேண்டிய வசதிகள் கிடைக்கும்.

(9) யாதொரு கெடுதலும் இல்லை என்று சுகாதார அதிகாரிகள் தீர்மானமாய் கூறுமுன் உங்கள் வீட்டிற்குத் திரும்பக்கூடாது. அவர்கள் உங்களுடைய வீட்டைச் சுத்தம் செய்வார்கள். எலி, தெள்ளுப்பூச்சி முதலியவைகளை நாசம் செய்து கிருமி நாசகாரி மருந்து தெளித்து, நீங்கள் திரும்பிச் சென்று வசிப்பதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்துவைப்பார்கள்.

(10) எல்லாவற்றிலும் முக்கியமாக, நீங்கள் சிறிதும் பயப்படவே கூடாது தைரியமாய் மேற்கூறிய முறைகளை அனுசரியுங்கள். அவ்வாரு செய்தால் உங்களையும் மற்ற அயல் வீட்டார்களையும் காப்பாற்றிக்கொள்ளலாம்.

VII. இதர விவரங்கள்.

61. சென்னை இராஜதானியிலுள்ள பல ஜில்லாக்களில் கூடும் வார கால்நடைச் சந்தைகளைக் காண்பிக்கும் ஜாபிதா.

தாலுகா.	கால்நடை சந்தைகூடும் கிராமம்.	கால்நடை சந்தை கூடும் தினம்.	அருகாமையிலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்.
	வட ஆற்காடு ஜில்லா.		
வாலாஜா ..	ராணிப்பேட்டை ..	ஒவ்வொரு வெள்ளிக்கிழமை.	ராணிப்பேட்டை.
வந்தவாசி ..	மலையூர்	ஷை வெள்ளிக்கிழமை.	போளூர்.
ஷை ..	தெல்லார் ..	ஷை வியாழக்கிழமை..	திண்டிவனம்.
செய்யார் ..	புரிசை ..	ஷை ஞாயிற்றுக்கிழமை.	காஞ்சீபுரம்.
ஷை ..	திருவத்திபுரம் ..	ஷை திங்கட்கிழமை ..	ஷை
ஷை ..	கூழமந்தல் ..	ஷை புதன்கிழமை ..	ஷை
ஆரணி ..	ஆரணி ..	ஷை ஞாயிற்றுக்கிழமை.	ஆரணி ரோட்டு.
ஷை ..	தேவிகாபுரம் ..	ஷை செவ்வாய்கிழமை.	போளூர்.
ஷை ..	ஒன்னுபுரம் ..	ஷை வியாழக்கிழமை	ஒன்னுபுரம்.
குடியாத்தம் ..	லத்தேரி ..	ஷை ஞாயிற்றுக்கிழமை.	லத்தேரி.
ஷை ..	வடுகன்தாங்கல் ..	ஷை புதன்கிழமை ..	விரிசின்புரம்.
ஷை ..	பேரணம்பட்டு ..	ஷை திங்கட்கிழமை ..	மெயில்பட்டி.
ஷை ..	குடியாத்தம் ..	ஷை செவ்வாய்கிழமை.	குடியாத்தம்.
வேலூர் ..	பென்னாத்தூர் ..	ஷை புதன்கிழமை ..	பென்னாத்தூர்.
போளூர் ..	வடமாடைமங்கலம்.	ஷை திங்கட்கிழமை ..	மாதிமங்கலம்.
ஷை	கலசபாக்கம் ..	ஷை வெள்ளிக்கிழமை.	கலசபாக்கம்.
ஷை	படவேடு	ஷை வெள்ளிக்கிழமை.	ஆரணி ரோடு.
திருப்பத்தூர் ..	மத்தரபள்ளி ..	ஷை செவ்வாய்கிழமை.	திருப்பத்தூர்.
ஷை ..	புதுபேட்டை ..	ஷை வியாழக்கிழமை..	புதுபேட்டை.
ஷை ..	ஜோலார்பேட்டை ..	ஷை புதன்கிழமை ..	ஜோலார்பேட்டை.
ஷை	வாணியம்பாடி ..	ஷை சனிக்கிழமை ..	வாணியம்பாடி.

தாலூகா.	கால் நடை சந்தைகூடும் கிராமம்.	கால் நடை சந்தை கூடும் தினம்.	அருகாமையிலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்.
தென் ஆற்காடு ஜில்லா.			
கடலூர்	வளையக்காரன்குப்பம்.	ஒவ்வொரு வெள்ளிக்கிழமை.	மேல்பட்டாம்பாக்கம்.
ஷை	குள்ளஞ்சாவடி	ஷை ஞாயிற்றுக்கிழமை.	குள்ளஞ்சாவடி.
ஷை	கோனமங்கலம்	ஷை திங்கட்கிழமை	நெல்லிக்குப்பம்.
ஷை	கருங்குழி	ஷை வியாழக்கிழமை	குறிஞ்சிபாடி.
ஷை	குறிஞ்சிப்பாடி	ஷை திங்கட்கிழமை	ஷை
ஷை	கரமாணிகுப்பம்.	ஷை திங்கட்கிழமை	வரகால்பட்டு.
கள்ளக்குறிச்சி	ரிஷிவந்தியம்	ஷை வியாழக்கிழமை	திருக்கோயிலூர்.
சிதம்பரம்	புவனகிரி	ஷை வெள்ளிக்கிழமை.	சிதம்பரம்.
ஷை	வல்லம்படுகை	ஷை திங்கட்கிழமை	ஷை
விருத்தாசலம்	பெண்ணாடம்	ஷை (செவ்வாய்கிழமை எப்ரல் முதல் ஜூலை முடிய).	பெண்ணாடம்.
ஷை	காட்டுபரூர்	ஷை வியாழக்கிழமை	பூவனூர்.
விழுப்புரம்	ராதாபுரம்	ஷை திங்கட்கிழமை	முண்டியம்பாக்கம்.
ஷை	முட்டத்தூர்	ஷை செவ்வாய்கிழமை.	பேரணி.
ஷை	பஞ்சமாதேவி	ஷை வியாழக்கிழமை	சேர்ந்தனூர்.
ஷை	கிடார்	ஷை வியாழக்கிழமை	மாம்பலப்பட்டு.
செஞ்சி	செட்டிப்பாளையம்.	ஷை வெள்ளிக்கிழமை.	திண்டிவனம்.
ஷை	வாளத்தி	ஷை ஞாயிற்றுக்கிழமை.	ஷை
திண்டிவனம்	கூட்டேரிப்பட்டு	ஷை ஞாயிற்றுக்கிழமை	மைலம்
ஷை	ஓங்கூர்	ஷை செவ்வாய்கிழமை.	தாடுபேடு.
விழுப்புரம்	ஆத்தியூர் திருவாடி.	ஷை வெள்ளிக்கிழமை.	கண்டமானடி.
ஷை	பிரெஞ்சுமடகாடிபட்டு.	ஷை செவ்வாய்கிழமை.	பல்லிநீலயனூர்.
சித்தூர் ஜில்லா.			
பல்மனேரி	பல்மனேரி	ஒவ்வொரு வெள்ளிக்கிழமை.	சித்தூர் (25 மைல்)
செங்கல்பட்டு ஜில்லா.			
காஞ்சீபுரம்	வாலாஜாபாத்	ஒவ்வொரு திங்கட்கிழமை	வாலாஜாபாத்.
ஷை	காஞ்சீவரம்	ஷை ஞாயிற்றுக்கிழமை.	காஞ்சீபுரம்.
செங்கல்பட்டு	சிங்கப்பெருமாள் கோவில்.	ஷை புதன்கிழமை	சிங்கப்பெருமாள் கோவில்.
மதுராந்தகம்	அச்சரபாக்கம்	ஷை ஞாயிற்றுக்கிழமை.	அச்சரபாக்கம்.
ஷை	அணைகட்	ஷை வெள்ளிக்கிழமை.	மதுராந்தகம்.
சைதாப்பேட்டை	பல்லாவரம்	ஷை வெள்ளிக்கிழமை.	பல்லாவரம்.
கோயம்பத்தூர் ஜில்லா.			
அவஞசி	அன்னூர்	ஒவ்வொரு சனிக்கிழமை	சோமனூர்.
பவானி	அந்தியூர்	ஷை திங்கட்கிழமை	ஈரோடு.
ஷை	பூதபாடி	ஷை செவ்வாய்கிழமை.	ஷை
ஷை	கவுண்டபாடி	ஷை புதன்கிழமை	ஷை
ஷை	கோலத்தூர்	ஷை வெள்ளிக்கிழமை.	ஷை
ஷை	மைலம்பாடி	ஷை சனிக்கிழமை	ஷை
கோயம்பத்தூர்	கோயம்பத்தூர்	ஷை ஞாயிற்றுக்கிழமை.	கோயம்பத்தூர்.
ஷை	வெள்ளலூர்	ஷை செவ்வாய்கிழமை.	போத்தனூர்.
ஷை	துடியலூர்	ஷை திங்கட்கிழமை	துடியலூர்.
ஷை	கோயில்பாளையம்.	ஷை புதன்கிழமை	கோயம்பத்தூர்.
கோபிச்செட்டி பாளையம்.	புஞ்சைபுளியம்பட்டி	ஷை வியாழக்கிழமை	வஞ்சிபாளையம்.
ஷை	சிறுவலூர்	ஷை செவ்வாய்கிழமை.	பெருந்துரை.
ஷை	மொடச்சூர்	ஷை சனிக்கிழமை.	ஊத்துக்குளி.
பொள்ளாச்சி	பொள்ளாச்சி	ஷை வியாழக்கிழமை	பொள்ளாச்சி.
கஞ்சம் ஜில்லா.			
பர்லாக்கிமிடி	பர்லாக்கிமிடி	ஒவ்வொரு சனிக்கிழமை	பர்லாக்கிமிடி.
சத்திருப்பூர்	நரேந்திரபூர்	ஷை புதன்கிழமை	ஜகன்னாதபூர் (2 பர்லாங்).
ஷை	ஹன்சிலி	ஷை சனிக்கிழமை	பர்ஹாம்பூர் (14 மைல்).
ஷை	கொன்சுரு	ஷை ஞாயிற்றுக்கிழமை.	பர்ஹாம்பூர் (11 மைல்).

தாலூகா.	கால் நடை சந்தைகூடும் கிராமம்.	கால் நடை சந்தை கூடும் தினம்.	அருகாமையிலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்.
கஞ்சம் ஜில்லா—தொடர்ச்சி.			
ஜி. உடயகிரி ..	ஜி. உடயகிரி ..	ஒவ்வொரு சனிக்கிழமை ..	பர்ஹாம்பூர் (77 மைல்).
ஷை ..	குட்டின்ஜியா ..	ஷை வியாழக்கிழமை..	பர்ஹாம்பூர் (92 மைல்).
J ல்லிகுடா ..	பல்லிகுடா ..	ஷை சனிக்கிழமை ..	பர்ஹாம்பூர் (120 மைல்).
ஷை ..	கோர்ஜமெண்டி ..	ஷை ஞாயிற்றுக்கிழமை.	பர்ஹாம்பூர்.
ஷை ..	கோட்கார் ..	ஷை செவ்வாய்கிழமை.	முனிகுடா.
ஆர். உடயகிரி ..	செல்லிக்கோடு ..	ஷை புதன்கிழமை ..	பர்லாக்கிமிடி.
சிகாகோல் ..	நாராயணவலசா	ஷை வியாழக்கிழமை	கிற்லாறு.
பர்லாக்கிமிடி ..	உப்பலாதா ..	ஷை ஞாயிற்றுக்கிழமை.	பர்லாக்கிமிடி.
ஷை ..	பாலடா ..	ஷை வியாழக்கிழமை..	வார்ஞசி.
கும்சூர் ..	பெல்லுகுண்டா ..	ஷை திங்கட்கிழமை ..	பெர்காம்பூர் (55 மைல்).
சிகாகோல் ..	காரு	ஷை செவ்வாய்கிழமை.	சிகாகோல் (8 மைல்).
உதயகிரி	திக்காபல்லி ..	ஷை வெள்ளிக்கிழமை.	பெர்மகாம்பூர்.
ஷை	ரெய்கா	ஷை வியாழக்கிழமை..	ஷை
பர்லாக்கிமடி ..	ஆர்வகோடா ..	ஷை வியாழக்கிழமை..	திலாறு.
ஷை ..	கொசமாலா ..	ஷை வியாழக்கிழமை..	பர்லாக்கிமடி.
ஷை ..	தெந்புரு ..	ஷை வியாழக்கிழமை..	தெந்புரு.
சிகாகோல் ..	அமிதாலவலசா ..	ஷை சனிக்கிழமை	சிகாகோல் ரோடு.
ஷை	சிந்தாடா ..	ஷை சனிக்கிழமை ..	சிகாகோல் ரோடு (2½ மைல்).
ஷை ..	சரிபுஜிரி ..	ஷை வெள்ளிக்கிழமை.	சிகாகோல் ரோடு (11 மைல்).
கிழக்கு கோதாவரி ஜில்லா.			
ராமசந்திரபுரம் ..	ஆலமூர் ..	ஒவ்வொரு செவ்வாய்கிழமை.	தூவாராபூடி.
ஷை ..	துவாராபுடி ..	ஷை புதன்கிழமை ..	ஷை
ஷை ..	திருக்ஷரும் ..	ஷை திங்கட்கிழமை ..	திருக்ஷரும்.
அமலாபுரம் ..	அம்பிஜிபேட்டை ..	ஷை புதன்கிழமை ..	கோடிபள்ளி.
பெத்தாபூரம் ..	ஜெகம்பேட்டை (தல்லுருபக்கம்).	ஷை திங்கட்கிழமை ..	சாமல்கோட்டை.
ஷை ..	யீலேஸ்வரம் ..	ஷை வியாழக்கிழமை..	ஷை
பீதாபுரம் ..	பீதாபுரம் ..	ஷை சனிக்கிழமை ..	பீதாபுரம்.
தூணி	தூணி	ஷை ஞாயிற்றுக்கிழமை.	தூணி.
மேற்கு கோதாவரி ஜில்லா.			
நரசாபூர் ..	பாலக்கோல் ..	ஒவ்வொரு சனிக்கிழமை ..	பாலக்கோல்.
தாடேபல்லிகூடம்.	தாடேபல்லிகூடம்.	ஷை ஞாயிற்றுக்கிழமை.	தாடேபல்லிகூடம்.
பீமாவரம் ..	உண்டி ..	ஷை செவ்வாய்கிழமை.	உண்டி.
ஷை ..	பீமாவரம் ..	ஷை புதன்கிழமை ..	பீமாவரம்.
டனுகு	பேணுகொண்டா ..	ஷை புதன்கிழமை ..	பாலகோல்.
கிருஷ்ண ஜில்லா.			
கைகலூர் ..	கைகலூர் ..	ஜூன், ஆகஸ்டு மாதங்களில் ஒவ்வொரு சனிக்கிழமை.	கைகலூர்.
மதுரை ஜில்லா.			
பழனி	விருபாக்ஷி ..	ஒவ்வொரு வியாழக்கிழமை.	ஒட்டன் சத்திரம் (3 மைல்).
திருமங்கலம் ..	உசிலம்பட்டி ..	ஷை புதன்கிழமை ..	உசிலம்பட்டி.
பெரியகுளம் ..	தேனீ	ஷை ஞாயிற்றுக்கிழமை.	தேனீ.
மேலூர் ..	மேலூர் ..	ஷை திங்கட்கிழமை ..	மதுரை (19 மைல்).
மலையாளம் ஜில்லா.			
வள்ளுவநாடு ..	வாணியங்குளம் .	ஒவ்வொரு வியாழக்கிழமை.	ஒத்தபாலம் (4 மைல்).
ஷை ..	பேரூர் அம்சம் பத்திபலா கால் நடைசந்தை.	ஷை ஞாயிற்றுக்கிழமை.	லக்கிடி.

தாலூகா.	கால் நடை சந்தைகூடும் இராமம்.	கால் நடை சந்தை கூடும் தினம்.	அருகாமையிலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்.

மலையாளம் ஜில்லா—தொடர்ச்சி.

பொன்னானி ..	மானத்தாலா அம்சம் குட்டின் கல் சந்தை.	ஒவ்வொரு புதன்கிழமை ..	பட்டாம்பி.
எர்னாட்	வாண்டூர் ..	ஷை செவ்வாய்கிழமை.	வானியம்பாலம்.
ஷை	கோட்டக்கல் ..	ஷை சனிக்கிழமை ..	டினூர்.
ஷை ..	மஞ்சேரி ..	ஷை புதன்கிழமை ..	அங்காடிபுரம்.

சேலம் ஜில்லா.

ஹோசூர் ..	கெலமங்கலம்	ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை.	கெலமங்கலம்.
தர்மபுரி டிவிஷன்.	கம்பெய நல்லூர்.	ஷை வெள்ளிக்கிழமை.	மொரப்பூர்.
ஷை ..	கடத்தூர் ..	ஷை ஞாயிற்றுக்கிழமை	ஷை
சேலம் ..	நாமமலை ..	ஷை ஞாயிற்றுக்கிழமை	சேலம் டவுன்.
சங்கேரிதுர்கம் டிவிஷன்.	மனியனூர் பள்ளி பாளையம்.	ஷை ஞாயிற்றுக்கிழமை	சங்கேரிதுர்கம்.
தர்மபுரி டிவிஷன்	சங்கமுனியப்பன் கோவில்.	ஷை திங்கட்கிழமை ..	சங்கேரிதுர்கம் (7 மைல்).
ஷை	பள்ளிபாளையம் ..	ஷை புதன்கிழமை ..	காவேரி (2 மைல்).
ஷை	எடப்பாடி ..	ஷை புதன்கிழமை ..	மக்டனல் சத்திரம் (11 மைல்).
ஷை	ராஜபாளையம்.		
ஷை	கோளிகல் நத்தம்.	ஷை சனிக்கிழமை ..	சங்கேரி துர்கம் (3 மைல்).

தஞ்சாவூர் ஜில்லா.

தஞ்சாவூர் ..	ஒரத்தநாடு ..	ஒவ்வொரு சனிக்கிழமை ..	தஞ்சாவூர் (14 மைல்).
சீயாழி ..	கூத்தியம்பேட்டை.	ஷை திங்கட்கிழமை ..	கொள்ளிடம் (1 மைல்).
ஷை ..	திருமலையடி கிராமத்தை சேர்ந்த தைய்கால்.	ஷை திங்கட்கிழமை ..	ஷை
பட்டுக்கோட்டை ..	பட்டுக்கோட்டை ..	ஷை திங்கட்கிழமை ..	பட்டுக்கோட்டை.
ஷை ..	பேராவூரணி ..	ஷை ஞாயிற்றுக்கிழமை.	பேராவூரணி.
அரந்தாங்கி ..	அரந்தாங்கி ..	ஷை செவ்வாய்கிழமை.	அரந்தாங்கி.
மன்னார்குடி ..	நெடுவாக்கோட்டை.	ஷை செவ்வாய்கிழமை	ஹரித்திராநதி (1½ மைல்).

திருநெல்வேலி ஜில்லா.

திருநெல்வேலி	கொடகாநல்லூர்.	ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை.	மேலகல்லூர்.

திருச்சிறுப்பள்ளி ஜில்லா.

குளித்தலை ..	மனப்பாரை ..	ஒவ்வொரு புதன்கிழமை	மணப்பாறை.
உடயார்பாளையம் ..	அரியலூர் ..	ஷை புதன்கிழமை ..	அரியலூர் (4 பர்லாங்கு).
கரூர்	பரமத்தி ..	ஷை செவ்வாய்கிழமை.	நொய்யல் (8 மைல்).
ஷை	உப்பிட்டமங்கலம்.	ஷை ஞாயிற்றுக்கிழமை.	புலியூர் (3 மைல்).
ஷை	மேயனூர் ..	ஷை திங்கட்கிழமை ..	மேயனூர்.
ஷை	கோசூர் ..	ஷை வியாழக்கிழமை ..	மணப்பாறை.
ஷை	தோகைமலை ..	ஷை வெள்ளிக்கிழமை.	ஷை
ஷை	எரும்போத்திப்பட்டி.	ஷை சனிக்கிழமை ..	குளித்தலை.
ஷை	அரியாவூர் ..	ஷை ஞாயிற்றுக்கிழமை.	பூங்குடி.
ஷை	நாகமங்கலம் ..	ஷை வியாழக்கிழமை ..	ஷை

விசாகப்பட்டணம் ஜில்லா.

கோல்கொண்டா	கொட்டவித்லா	ஒவ்வொரு சனிக்கிழமை ..	நரசபட்டம் ரோட்டு.
ஷை	கொட்டகொட்டா.	ஷை சனிக்கிழமை ..	ஷை
ஷை	ரோலுகொண்டா.	ஷை வியாழக்கிழமை ..	ஷை
ஷை	புசிம்பேட்டா	ஷை திங்கட்கிழமை ..	ஷை
ஷை	சிடிகும்மாலா ..	ஷை ஞாயிற்றுக்கிழமை.	ஷை
ஷை	நரசாபுரம் ..	ஷை சனிக்கிழமை ..	ஷை
ஷை	வேமூலப்பட்டி	ஷை புதன்கிழமை ..	ஷை
ஷை	மகரபெலம் ..	ஷை செவ்வாய்கிழமை.	ஷை

விசாகப்பட்டணம் ஜில்லா—தொடர்ச்சி.

தாலூகா.	கால் நடை சந்தை கூடும் கிரமம்.		கால் நடைச் சந்தை கூடும் தினம்.	அருகாமையிலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்.
சர்வசித்தி ..	நேகபல்லி ..	ஒவ்வொரு	புதன்கிழமை ..	நரசபட்டம் ரோட்டு.
ஷை ..	ராயவரம் ..	ஷை	திங்கட்கிழமை ..	ரேகுபலம்.
ஷை ..	எல்லம்மஞ்சிலி ..	ஷை	வியாழக்கிழமை ..	எல்லம்மஞ்சிலி.
அனகாபள்ளி ..	பரவதா ..	ஷை	செவ்வாய்கிழமை.	டுவ்வாடா.
ஷை ..	அகநாம்புடி ..	ஷை	புதன்கிழமை ..	ஷை
சிப்புரபுள்ளி ..	கொட்ஞண்டி ..	ஷை	திங்கட்கிழமை ..	சிப்புரபள்ளி.
ஷை ..	பெச்சிபுரம் ..	ஷை	திங்கட்கிழமை ..	ஷை
பிச்சம்கட்டாக் ..	முனிகுலா ..	ஷை	வியாழக்கிழமை ..	முனிகுடா.
சாலூர் ..	பச்சிபெண்டா ..	ஷை	வியாழக்கிழமை ..	சாலூர்.
ஷை ..	தோணம் ..	ஷை	சனிக்கிழமை ..	ஷை
ஷை ..	துக்கெரு ..	ஷை	வியாழக்கிழமை ..	ஷை
பொட்டாங்கி ..	புக்கிலி ..	ஷை	சனிக்கிழமை ..	ஷை
ஷை ..	பெட்டா ..	ஷை	ஞாயிற்றுக்கிழமை.	ஷை
ஷை ..	ராயசிங்கி ..	ஷை	திங்கட்கிழமை ..	ஷை
ஷை ..	சொகுரு ..	ஷை	வெள்ளிக்கிழமை.	ஷை
ஷை ..	நந்தாபூர் ..	ஷை	வெள்ளிக்கிழமை	ஷை
ஷை ..	குண்டிலி ..	ஷை	வெள்ளிக்கிழமை	ஷை
ஷை ..	தும்மிரிபெட் ..	ஷை	சனிக்கிழமை	ஷை
கோருபுட் ..	டும்மரிபுட் ..	ஷை	சனிக்கிழமை	ஷை
வீரவள்ளி .	வட்டாடி ..	ஷை	ஞாயிற்றுக்கிழமை.	அனக்காபள்ளி.
ஷை ..	பகிரிஷாபேட்டை ..	ஷை	செவ்வாய்கிழமை.	ஷை
ஷை ..	திமிரம் ..	ஷை	வெள்ளிக்கிழமை.	ஷை
ஷை ..	மாட்கோல் ..	ஷை	திங்கட்கிழமை ..	ஷை
ஷை ..	மடிவாடா ..	ஷை	செவ்வாய்கிழமை.	ஷை
சுருங்கவரப்புட்டா. கோ	அலமந்தா ..	ஷை	திங்கட்கிழமை ..	அலமந்தா.
ஷை	கொட்டவலசா ..	ஷை	செவ்வாய்க்கிழமை.	கொட்டவலசா.
சிப்புரபள்ளி ..	நிம்மவலசா ..	ஷை	ஞாயிற்றுகிழமை.	சிகாடம்.
ஷை ..	ரவேதா	ஷை	புதன்கிழமை ..	சிப்புரபள்ளி.
பால்கொண்டா ..	உங்கராடா ..		ஷை ..	ஷை
ஷை ..	ரஜமா	ஷை	வியாழக்கிழமை ..	ஷை
பொப்பிலி ..	பாலிகிபேட்டை ..	ஷை	வெள்ளிக்கிழமை.	பொப்பிளி.
ஷை ..	வன்தரவிள்ளி ..	ஷை	ஞாயிற்றுகிழமை.	தொங்கினவலசா.
ஷை ..	கோமிட்டிபள்ளி (மனபுரம்பாக்கம்). ..	ஷை	சனிக்கிழமை ..	கோமிட்டிபள்ளி.
சாலூர்	சாலூர்		ஷை ..	சாலூர்.
ஷை ..	பெதபாடம் ..	ஷை	புதன்கிழமை ..	ஷை
நௌரங்கபூர் ..	ஹத்தேபரண்டி ..	ஷை	திங்கட்கிழமை ..	தமதேரி.
ஷை ..	தெந்தளிகுண்டா ..		ஷை ..	சாலூர்.
ஷை ..	கேட்டகம் ..	ஷை	செவ்வாய்க்கிழமை.	ஷை
ஷை ..	நௌரங்கபூர் ..	ஷை	திங்கட்கிழமை ..	ஷை
ஷை ..	மோகார ..	ஷை	புதன்கிழமை ..	தம்தேரி.
பொட்டாங்கி ..	சோகுகி	ஷை	வெள்ளிக்கிழமை.	சாலூர்.
ஷை ..	லிம்கிரி	ஷை	ஞாயிற்றுகிழமை.	ஷை
ஷை ..	துமரிபேட்டை ..	ஷை	சனிக்கிழமை ..	ஷை
மல்கனகிரி ..	மொண்டிகுடா ..	ஷை	ஞாயிற்றுகிழமை.	ஷை
ஷை ..	பெஜ்ஜகுடா ..	ஷை	சனிக்கிழமை ..	ஷை
விஜயநகரம் ..	விஜயநகரம் ..	ஷை	ஞாயிற்றுகிழமை.	விஜயநகரம்.
ஷை ..	பேடதாரினி ..	ஷை	திங்கட்கிழமை ..	குஜ்ஜங்கிவலசா.
ஜெய்பூர் ..	சேப்டோம்பா ..	ஷை	வியாழக்கிழமை ..	சாலூர்.
ஷை ..	பேதோயம்பாடா.	ஷை	திங்கட்கிழமை ..	ஷை
ஷை ..	தசமந்தபூர் ..	ஷை	புதன்கிழமை ..	ஷை
ஷை ..	பொபியா ..	ஷை	சனிக்கிழமை ..	ஷை
அனக்காபள்ளி ..	தும்மபாலா ..	ஷை	ஷை ..	அனக்காபள்ளி.
குணுப்பூர் ..	பண்ணி	ஷை	ஷை ..	குணுப்பூர்.
அனக்காபள்ளி ..	தல்லபள்ளம் ..	ஷை	திங்கட்கிழமை ..	பையாவரம்.
விஜயநகரம் ..	மனப்புரம் ..	ஷை	சனிக்கிழமை ..	கோமட்டிபள்ளி.
சாலூர்	பச்சிபெண்டா ..	ஷை	வியாழக்கிழமை ..	சாலூர்.
ஷை ..	தோனம் ..	ஷை	சனிக்கிழமை ..	ஷை
ஷை ..	துக்கேரு ..	ஷை	வியாழக்கிழமை ..	ஷை
ரேயகாடா ..	சசிகேலு	ஷை	சனிக்கிழமை ..	சுடிபெட்ட..
ஷை ..	மச்சிகுடா ..	ஷை	செவ்வாய்கிழமை.	தெருமலே.
ஷை ..	அமலபட்டா ..	ஷை	ஞாயிற்றுகிழமை.	கல்யாணி-சிங்கப்பூர் ரோட்.

62. சென்னை விவசாய டிபார்ட்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்ட துண்டு பத்திரிகைகள் ஜாப்தா எ பிரிவு.

விவசாய டிபார்ட்மெண்டு.

I. இலவச பத்திரிகைகள்.

A. கிருஷிகள் சதாசெய்ய வேண்டிய குறிப்புகள்.

நெம்பரும் விஷய விவரமும்.	இன்னாரால் எழுதப்பட்டது.	பாஷை.	பிரசுரமான வருஷம்.
1. உங்களுடைய மாடுகளை சரியாக போஷியுங்கள்.	ஜி. ஆர். ஹில்சன் ..	இங்கிலீஷ், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம்.	1930.
2 உங்களுடைய பசுக்களை போஷியுங்கள்.	லிட்டில்வுட் ..	இங்லீஷ், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம்.	1930.
3 காலத்தில் உழவேண்டும் ..	டி. ஆனந்த ராவ்.	ஷை	1931.
4 நன்றாய் உழவேண்டும் ..	ஷை	ஷை	1931.
5 சிறந்த விதை விதைக்கவும் ..	ஜி. ஆர். ஹில்சன் ..	ஷை	1931.
6 களைகளைப்பற்றி உஷார்	ஷை ..	ஷை	1931.
7 உங்கள் பசு மாடுகளை சரியாய் போஷித்து அவைகளை வேலை வாங்குங்கள்.	லிட்டில்வுட் ..	ஷை	1932.
8 ஒங்கோல் ஜாதி பொலிகாளைகளை சாமி காளைகளாக விடுதல்.	ஷை	ஷை	1932.

B பத்திரிகைகள்.

1 ஹோசூர் கால் நடை பண்ணையிலுள்ள புல்தரையை சாகுபடி செய்தலும், பராமரித்தலும்.	லிட்டில்வுட் ..	இங்கிலீஷ் ..	1930.
2 பாலூர் பண்ணையில் செய்த பரிசோதனை முடிவுகள்.	ஆனந்த ராவ் ..	ஷை ..	1930.
3 வெள்ளலூரில் 1925-ம் முதல் 1930-ம் முடிய வெற்றிலை பயிரில் செய்த ரசாயன, பூச்சி, பூஞ்சான பரிசோதனைகளின் முடிவுகள்.	பி. விஸ்வநாத், ஒய். ராமசந்திர ராவ், எஸ். சுந்தர ராமன்.	இங்கிலீஷ், தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம்.	1931.
4 சாமல்கோட்டை பண்ணையில் 1920-ம் முதல் 1929-ம் முடிய பத்து வருஷத்திய வேலைகளில் அறிந்துகொண்ட பரிசோதனை முடிவுகள்.	ஜோகி ராஜு ..	இங்கிலீஷ் ..	1931.
5 பூச்சிகளை கொல்லும் மருந்துகள்.	டி. வி. ராமகிருஷ்ணய்யர்.	இங்கிலீஷ், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம்.	1931.
6 தென் இந்தியாவில் நெல் பயிரை நாசம் செய்யும் பூச்சிகள்.	ஷை	ஷை	1933.
7 கரும்பு சாகுபடி செய்யப்பட்டவர்களுக்கு சில அனுபவமான வழிகள்.	எஸ். சீதாரும பட்ருடு.	இங்கிலீஷ், தெலுங்கு.	1934.
8 தென்னை சாகுபடி	டாக்டர் ஜே. எஸ். படேல்.	இங்கிலீஷ் ..	1936.
9 சென்னை ராஜதானியில் உரங்களை உபயோகித்தல்.	பி. வெங்கிட்டருமய்யா.	ஷை ..	1936.

C குறிப்புகள்.

1 கலப்பில்லாத நெல் விதைகள், எட்டாவது சர்க்கிள்.	பிராட் புட் ..	இங்கிலீஷ், தமிழ்.	1931.
2 கலப்பில்லாத நெல் விதைகள் முதல் சர்க்கில்	எட்மண்ட்ஸ் ..	ஷை	1931.

C. குறிப்புகள்—தொடர்ச்சி.

நெம்பரும், விஷய விவரமும்.	இன்னாரால் எழுதப்பட்டது.	பாஷை.	பிரசுரமான வருஷம்.
3 கலப்பில்லாத நெல் விதைகள் ஆருவது சர்க்கிள்.	பி. ராமய்யா ..	இங்கிலீஷ், தமிழ்.	1931.
4 நான்காவது சர்க்கிள் கிருஷிக்காரர்கள் கலப்பில்லாத விதை நெல் சேகரிக்கவேண்டிய விதம்.	கோவிந்த கிடாவு	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு.	1931.
5 கேழ்வரகு தட்டையை கோயம்பத்தூர் ஜில்லாவில் பச்சத்தீனி செய்யும் முறை.	கோபாலகிருஷ்ண ராஜூ.	இங்கிலீஷ் தமிழ், மலேயாளம், தெலுங்கு, கன்னடம்.	1931.
6 கலப்பில்லாத நெல் விதை, ஐந்தாவது சர்க்கிள்.	குழந்தசாமி பிள்ளை.	இங்கிலீஷ், தமிழ்.	1931.
7 கலப்பில்லாத நெல் விதை, இரண்டாவது சர்க்கிள்.	பாலகிருஷ்ணமூர்த்தி.	இங்கிலீஷ், தெலுங்கு.	1931.
8 கலப்பில்லாத நெல், ஏழாவது சர்க்கிள்.	கே. டி. ஆள்வா ..	இங்கிலீஷ், மலையாளம், கன்னடம்.	1931.
9 தேவாலயங்களையும், விலையுயர்ந்த கட்டடங்களையும் அழியாமல் காற்கும் விதம்.	எஸ். சுந்தரராமன் ..	இங்கிலீஷ் ..	1932.
10 தெலுங்கு ஜில்லாக்களில் கலப்பில்லாத நெல் விதை சேகரித்து பத்திரம் செய்யும் விதம்.	கே. டி. ஆல்வா ..	இங்கிலீஷும் கன்னடமும்.	1933.
11 வாழை நோயின் குறிப்புகள்.	எஸ். சுந்தரராம அய்யர்.	இங்கிலீஷ் ..	1933.
12 கால் நடை எருவை சேகரிப்பதற்கு சில லேசான சில வில்லாத முறைகள்.	டி. புத்தவிதய ராவ் நாயுடு.	தெலுங்கு ..	1933.
13 எப்படி விளைவை சாஸ்திப்படுத்தி சுகத்தை அடையலாம்.	ஷை	ஷை ..	1936.
14 பட்டாம்பி விவசாய பரிசோதனைப் பண்ணையிலிருந்து வெளியிடப்பட்ட விதைகளின் சில முக்கிய குறிப்புகள்.	ஷை	மலயாளம் ..	1936.

D துண்டு பிரசுரங்கள்.

1 கால் நடைகளை போஷிக்கும் முறை	லிட்டில்வுட் ..	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலேயாளம்.	1929.
2 பொலிகாளைகளுக்கு சர்க்கார் பணம் உதவி செய்ய அனுசரிக்கவேண்டிய முறைகள்.	ஷை ..	ஷை	1929.
3 பசுமாடுகளுக்கும், மறத்த பசுமாடுகளுக்கும் கன்றுகளுக்கு தீவனம்.	ஷை ..	ஷை	1930.
4 சோளத்தினின்று குழந்தைகளுக்கும் வியாதியஸ்தர்களுக்கும் ஆகாரம் செய்யும் முறை.	பி. விஸ்வநாத் ..	ஷை	1930.
5 மால்ட் ஆகாரம் சோளத்தினின்று செய்யும் முறை.	ஷை ..	ஷை	1930.
6 மல்லிகை பூச்சியை தடுக்கும் விதம்.	ஒய். ராமசந்திர ராவ்.	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, கன்னடம்.	1930.
7 பச்சதீவனம் செய்யும் முறை.	லிட்டில்வுட்	ஷை	1930.
8 தண்ணித்தீர்வை இல்லாமல் குடியானவர்கள் செய்யும் பயிர்கள் விவரம்.	..	ஷை	1930.
9 புரம்போக்கில் மரங்கள் வளர்க்க.	..	ஷை	1930.
10 குடியானவர்களுக்கு தக்காவி கடன்கள்.	..	ஷை	1930.

D. துண்டு பிரசுரங்கள்—தொடர்ச்சி.

நெம்பரும், விஷய விவரமும்.	இன்னாரால் எழுதப்பட்டது.	பாஷை.	பிரசுரமான வருஷம்.
11 கோதாவரி, விசாகபட்டணம், கஞ்சம் ஜில்லாக்களில் தழை எரு.	எட்மண்ட்ஸ் ..	இங்கிலீஷ், தெலுங்கு, உரியா.	1929.
12 மாட்டு தீவன உற்பத்தியும் பசுந்தாள் உரமும்.	ஷை ..	இங்கிலீஷ், தெலுங்கு.	1924.
13 சப்பாத்தியை எருவாக்குதல்.	பி. விஸ்வநாத் ..	இங்கிலீஷ், தெலுங்கு. தமிழ், மலையாளம், கன்னடம்.	1930.
14 நெல் புழு	ராமச்சந்திர ராவ் ..	ஷை	1931.
15 நெல் வயலில் வண்டு பிடிக்கும் விதம்.	கே. வெங்கடருமன் ..	ஷை	1928.
16 விசாகபட்டணம் ஜில்லா கரும்பு தினுசுகள்.	எட்மண்ட்ஸ் ..	இங்கிலீஷ் ..	1929.
17 கரும்பு விருத்தி செய்கிறது.	ஷை ..	இங்கிலீஷ், தெலுங்கு.	1929.
18 உருளை கிழங்கு	எப். எச். புச்சர் ..	இங்கிலீஷ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.	1930.
19 பள்ளிக்கூடத்தோட்டம் ..	..	ஷை	1930.
20 மஞ்சள் சாகுபடி	..	ஷை	1930.
21 மாதிரி அனுப்பும் விதம் ..	எஸ். சீனிவாச அய்யங்கார்.	ஷை	1930.
22 பண்ணையாள்களுக்கு கற்றுக் கொடுப்பது.	..	ஷை	1928.
23 சிகப்புக்கம்பிளி பூச்சி	ராமசந்தர ராவ் ..	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, கன்னடம்.	1930.
24 தென்னிந்தியாவில் தொழு எரு காப்பாற்றும் முறை.	வி. முத்துசாமி அய்யர்	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.	1931.
25 பசுந்தாள் உரம்	பி. ராமய்யா ..	ஷை	1931.
26 மரவள்ளிக்கிழங்கு சாகுபடி.	கே. உன்னிகிருஷ்ண மேனன்.	ஷை	1931.
27 நெல் சாகுபடியைப்பற்றி தெலுங்கு பாட்டுகள்.	பாலகிருஷ்ணமூர்த்தி.	தெலுங்கு ..	1931.
28 களை ! களை ! களை !	டி. டி. சாட்விக் ..	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.	1931.
29 சிந்துவாகி அடுப்பு (வெல்லம் காய்ச்ச).	சி. நாராயண அய்யர்.	ஷை	1931.
30 கரும்பில் விழும் செந் நோய்.	எஸ். சுந்தரராமன் ..	ஷை	1931.
31 கரும்பில் விழும் தேமல் நோய்.	ஷை	ஷை	1931.
32 தென்னை சார்வடிதல் நோய்.	ஷை	ஷை	1931.
33 சுத்தமான பருத்தி	பி. ராமய்யா ..	இங்கிலீஷ், தமிழ்.	1931.
34 மருந்து தெளிக்கும் பீச்சாங் குழல்.	எஸ். சுந்தரராமண	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.	1931.
35 சப்பாத்திக்கள்ளி பூச்சி ..	ஒய். ராமசந்திர ராவ்.	ஷை	1931.
36 பனமரகுருத்து அழுகல் நோய்.	எஸ். சுந்தரராம அய்யர்.	ஷை	1931.
37 திராட்சை பூஞ்சாள நோய், அதை தடுக்கும் விதம்.	எஸ். சுந்தரரமண அய்யர்.	ஷை	1931.
38 ஆகாய தாமரை	டி. டி. சாட்விக் ..	ஷை	1931.
39 வெட்டுக்கிளி பூச்சி	ஒய். ராசந்தர ராவ்.	ஷை	1931.
40 நெல் புழு	ராமகிருஷ்ணய்யா ..	ஷை	1931.
41 நெல் நாவர பூச்சி ..	ஷை	ஷை	1931.
42 நெல் பூச்சி (ஹிஸ்பா) ..	ஷை	ஷை	1931.

D. துண்டு பிரசுரங்கள்—தொடர்ச்சி.

நெம்பரும், விஷய விவரமும்.	இன்னாரால் எழுதப்பட்டது.	பாஷை.	பிரசுரமான வருஷம்.
43 சோளம், தென்னை கரிப்பூட்டை நோய்.	எஸ். சுந்தரராம அய்யர்.	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.	1931.
44 மலையாளத்தில் நெல் வெட்டுக்கிளியை தடுக்கும் முறை.	ஒய். ராமசந்திர ராவ்.	மலையாளம் ..	1931.
45 கம்போடியா பருத்தி முந்தி விதைத்தல்.	வி. ராமனுத அய்யர்.	இங்கிலீஷ், தமிழ் ..	1932.
46 மேற்கு கடற்கரையில் வளரும் மிந்திரி துளிர்களை பட்டுப்போம் நோய்.	..	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்.	1933.
47 மிந்திரிமரம் பயிரிடும் விதம்.	டாக்டர் ஜே. எஸ். படேல்.		
48 நெல் வெட்டுகிளி பூச்சி ..	டாக்டர் டி. வி. ராமகிருஷ்ண அய்யர்.	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, உரியா.	1933.
49 நன்கொடை வாங்கும் பொலிகாளைகளுக்கு பிறந்த கன்றுகளுக்கு வெகுமானங்கள் ஏற்படுத்தல்.	எஸ். வி. ராமமூர்த்தி.	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்.	1933.
50 தென் இந்தியா நிலக்கடலையின் தன்மையை விருத்தி செய்தல்.	ஜே. எஸ். படேல் ..	ஷை	1933.
51 திறந்த கொப்பரைவைத்து வெள்ளை ஜீனி செய்யும் விதை.	எஸ். சீதாரும் பட்ருடு.	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்.	1933.
52 தென்னையில் பொறுக்கி எடுத்தல்.	ஜே. எஸ். படேல் ..	ஷை	1933, 1934.
53 பாக்கிலும், தென்னையிலும் விழும் மாஹாளி அல்லது கொலரோகோ நோய்.	எஸ். சுந்தரரும அய்யர்.	இங்கிலீஷ் ..	1934.
54. கோழி வளர்ப்பதினுல் சில அனுகூலங்கள்.	ஆர். டப்ள்யூ. லிட்டில் உட்.	இங்கிலீஷ், தெலுங்கு, கன்னடம்,	1934.
55 இயற்கையில் குஞ்சு பொறிப்பது.	ஷை	இங்கிலீஷ், கன்னடம்.	1934.
56 குஞ்சுகளை வளர்ப்பது ..	ஷை	இங்கிலீஷ், தெலுங்கு.	1934.
57 கோழிகளை வளர்க்கும் விதம்.	ஆர். டப்ள்யூ லிட்லிட் உட், எச். நரஹரி ராவ்.	இங்கிலீஷ் ..	1934.
58 லூசர்ன்	ஆர். டப்ள்யூ. லிட்டில் உட்.	ஷை	1934.
59 புஞ்சை சாகுபடியில் தென்னை அபிவிர்த்தி செய்வது.	கே. டப்ள்யூ சக்ரபாணி மாரார்.	ஷை	1934.
60 கரிசல் பூமிகளில் கம்போடியா பருத்தியை புஞ்சை பயிருக சாகுபடி செய்தல்.	பி. கோபாலரத்தினம்.	தெலுங்கு ..	1934.
61 வரப்புபோடும் கருவி	என். சி. சார்லி ..	இங்கிலீஷ் ..	1935.
62 கொத்தமல்லி அதை விற்பதற்கு அதன் குணத்தை எப்படி விர்த்தி செய்வது.	பி. வி. ருமய்யா ..	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்.	1934.
63 சேலம் ஜில்லாவில் கம்போடியா பருத்தியை பொருக்கி எடுத்து விற்பனை செய்வது.	கே. ராகவாசாரியா ..	இங்கிலீஷ், தமிழ்.	1934.
64 வீட்டு ஈக்களின் தொந்தரவும், அவைகளை புழுப்பொறியைக் கொண்டு அடக்கும் முறையும்.	டி. வி. ருமகிருஷ்ணய்யர்.	இங்கிலீஷ், கன்னடம், மலையாளம்.	1935.
65 களஞ்சியத்தில் வைத்திருக்கும் நெல்லில் விழும் பூச்சி.	டி. வி. ராமகிருஷ்ணய்யர்.	இங்கிலீஸ், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்.	1935.
66 பருத்தி	எ. ஷி. எட்மண்ட்ஸ்.	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, கன்னடம்.	1935.

நெம்பரும், விஷய விவரமும்.	இன்னாரால் எழுதப்பட்டது.	பாஷை.	பிரசுரமான வருஷம்.
67 நரகலிலிருந்து பௌட்ரெட் செய்வது.	பி. வி. ருமய்யா ..	இங்கிலீஷ், தமிழ் அச்சுக்கு கொடுத்திருக்கிறது.	1935.
68 களஞ்சியத்தில் வைத்திருக்கும் நெல்லில் விழும் பூச்சிகளும், பூஞ்சாள நோய்களும்.	டி. வி. ருமகிருஷ்ணய்யர்.	இங்கிலீஷ் ..	1935.
69 டோக்ரு-புகையிலையில் விழும் பூச்சி.	டி. புத்தவிதய ருவ் நாயுடு.	இங்கிலீஷ், தெலுங்கு.	1935.
70 கால் நடை வளர்ப்பது ..	ஆர். டப்ள்யூ. லிட்டில் உட்.	இங்கிலீஷ் ..	1936.
71 பொலிக்காளைகளும் அவைகளை காப்பாற்றுவதும்.	ஷை	ஷை	1936.
72 மாருடெரு விவசாய பரிசோதனைப்பண்ணையில், முக்கியமான நெல் தினுசுகளிலிருந்து பொறுக்கி எடுத்த விதைகளைப்பற்றிய விவரமான குறிப்புகள்.	கே. ருமய்யா ..	ஷை	1936.
73 மிளகாயில் தோன்றும் இலை நோய்.	எம். ஜி. சொரியன்.	ஷை	1936.

II. விலையுள்ள பிரசுரங்கள்.

A. பத்திரிகைகள்.

நெம்பரும், விஷய விவரமும்.	இன்னாரால் எழுதப்பட்டது.	பாஷை.	விலை. ரூ.	அ.	பை.	பிரசுரமான வருஷம்.
1 சென்னை பால், தயிர் வியாபாரம்.	எ. கருத் ..	இங்கிலீஷ் ..	0	12	0	1931.
2 கால் நடை செக்ஷனில் நடந்த வேலை.	லிட்டில்வுட் ..	ஷை ..	0	6	0	1929.
3 சிலபயிர்களைப்பற்றி முழு விவரம்.	..	ஷை	0	2	0	1927.
4 கோயம்பத்தூர் காலேஜ் பால் கிடங்கு.	டி. ஆனந்த ராவ்.	ஷை	1	0	0	1921.
5 பயிர் சோதனை செய்யும் விதம்.	ஆர். வோ. அயிலீப் பி. விஸ்வநாத்.	ஷை	1	4	0	1928.
6 காலிஷியம்சையநட் உரத்தைப்பற்றி பரிசோதனைகள்.	பி. விஸ்வநாத், காசிநாத அய்யர்.	ஷை	0	4	0	1929.
7 திராட்சை பயிரிடுதல் ..		ஷை	0	2	0	1929.
8 மங்கநெல்லூரில் நடந்த நெல் சோதனை.	என். எஸ். குழந்தைசாமி.	ஷை	0	14	0	1923.
9 எரு விடுதலும் அதன் விஷயங்களும்.	ஆனஸ்டெட் ..	ஷை	0	2	0	1928.
10 மேற்கு கடற்கரையில் மிளகு பயிர்.	எம். கோவிந்த கிடாவு, பி.எ. வெங்கடேஸ்வரன்.	இங்கிலீஷ், மலையாளம்.	0	2	0	1929.
11 கோதாவரியில் வாழை சாகுபடி.	ஜி. ஜோகி ராஜு ..	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு.	0	2	0	1928, 1929.
12 சாமல்கோட்டையில் நடந்த பரிசீலனை.	எ. ஸி. எட்மண்ட்ஸ்.	இங்கிலீஷ் ..	0	2	0	1929.
13 கரும்பில் தேமல் நோய்.	எஸ். சுந்தரராமன்.	ஷை ..	0	6	0	1928.
14 தஞ்சாவூர் ஜில்லா நிலங்களின் தன்மை.	ஹாரிசன் விஸ்வநாத்.	ஷை ..	0	6	0	1921.
15 குண்டூர் ஜில்லா நிலங்களின் தன்மை.	ஹாரிசன், ரெகுநாதசாமி அய்யங்கார்.	ஷை ..	1	8	0	1915.
16 கோதாவரி ஜில்லா நிலங்களின் தன்மை.	ஆர். வி. நாரில் ..	ஷை ..	2	12	0	1922.
17 பெரியார் நிலங்களின் தன்மை.	ஷை	ஷை ..	1	14	0	1923.
18 கிருஷ்ணா ஜில்லா நிலங்களின் தன்மை.	ஹாரிசன் எம். ஆர். சிவன்.	ஷை ..	2	4	0	1928.

A. பத்திரிகைகள்—தொடர்ச்சி

நெம்பரும், விஷய விவரமும்.	இன்னாரால் எழுதப்பட்டது.	பாஷை.	விலை. ரூ.	அ.	பை.	பிரசுரமான வருஷம்.
19 மலையாளம் ஜில்லா நிலங்களின் தன்மை.	விஸ்வநாத், ராமசுப்பிரமணிய அய்யர்.	இங்கிலீஷ் ..	1	6	0	1928.
20 நீர்ப்பாய்ச்சல்	உட்	ஷை ..	1	0	0	1921.
21 உதகமண்டலப்பண்ணையில் விற்கும் செடிகள் ஜாப்தா.	புச்சர்	..	0	4	0	1930.
22 மணிலாக்கொட்டை ..	..	இங்கிலீஷ் ..	0	4	0	1923.
23 கோயம்பத்தூரில் புல் பயிர்.	மன்ரோ ..	இங்கிலீஷ், தமிழ்.	0	2	0	1931.
24 ஒட்டுமாஞ்செடி பயிரிடும் விதம்.	ஜி. ஜோகிராஜு ..	இங்கிலீஷ், தெலுங்கு.	0	2	0	1931.
25 தென்னிந்தியாவில் நெல் பயிரில் விழும் பூச்சிகள்.	டி. வி. ராமகிருஷ்ண அய்யர்.	இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.	0	3	0	1931.
26 புகயிலை ப்யிர் பூச்சிகள்.	ஷை	ஷை	0	2	0	1932.
27 தென்னிந்தியாவில் பயிர்களில் விழும் பூச்சிகள்.	ஷை	ஷை	0	8	0	1932.
28 பருத்தி செடிகளில் விழும் பூச்சி.	ஷை	ஷை	0	4	0	1932.
29 விவசாய தமிழ் வசனங்களும் பழமொழிகளும்.	..	தமிழ் ..	0	12	0	1933.
30 தென்னிந்தியாவில் கோயம்பத்தூர் விதை கரும்பு சாகுபடி.	எ.வி. எட்மண்ட்ஸ்ல், சீதாராம பாத்ருடு.	இங்கிலீஷ் ..	0	4	0	1933.
31 விவசாய தெலுங்கு வசனங்கள்.	..	தெலுங்கு (இங்கிலீஷிலும், மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது).	0	8	0	1933.
32 சென்னை ராஜதானியில் சில முக்கிய பயிர்களில் விழும் பூஞ்சான நோய்கள்.	சுந்தரருமய்யர், சி. எஸ். கிருஷ்ணசாமி.	இங்கிலீஷ் ..	1	2	0	1933.
33 தென்னிந்தியா மாட்டு தீவனங்கள்.	பி. வி. ராமய்யா.	ஷை ..	0	4	0	1933.
34 தென்னிந்தியா காய்கறிகளுக்கும் புஷ்ப செடிகளுக்கும் விழும் பூச்சிகள்.	டாக்டர் டி. வி. ராமகிருஷ்ண அய்யர்.	ஷை ..	0	6	0	1933.
35 விவசாய சம்பந்தமாக கனரீஸ் பழமொழிகள்.	..	கானரீஸ், இங்கிலீஷ்.	0	1	0	1934.
36 விவசாய விஷயமாய் மலையாளத்தில் சொற்களும் பழமொழிகளும்.	..	மலையாளம் ..	0	3	0	1934.
37 தென்னிந்தியாவில் தேனீ வளர்ப்பது.	எஸ். ராமச்சந்திரன்.	இங்கிலீஷ் ..	1	0	0	1935.
38 கரும்பு சாகுபடி ..	எ. வி. எட்மண்ட்ஸ்.	ஷை ..	0	4	0	1935.
39 நெல் உமியிலிருந்து ஆக்டிவ் சார்கோல் தயாரித்து, அதை உபயோகித்து அதிலிருந்து சுத்தமான வெல்லம் எடுப்பதற்கு கண்டுபிடிக்கப்பட்ட சில நூதன முறைகள்.	பி. விஸ்வநாத் ..	ஷை ..	0	10	0	1935.
40 விசாகபட்டணம் ஜில்லாவில் சம்சாரிகளின் நிலமையும் அதை விருத்திசெய்யும் முறையும்.	ஜோகிராஜு ..	ஷை ..	0	6	0	1935.

B. புஸ்தகங்கள்.

	நெம்பரும், விஷய விவரமும்.	இன்னாரால் எழுதப்பட்டது.	பாஷை.	விலை. ரூ. அ. பை.	பிரசுரமான வருஷம்.
1	விவசாய விஷயமான சம்பந்தங்களும் குறிப்புகளும்.	ஆ. சி.உட் ..	இங்கிலீஷ் ..	1 0 0	
2	அனுபதத்துவ சாஸ்திரம்.	கே. ரெங்காசாரி ..	ஷை ..	1 8 0	
3	சென்னை ராஜதானியிலுள்ள செடி விவரங்கள்.	க்ராம்பிள் (1 முதல் 8 வால்யூம்).	ஷை ..	6 8 0	ஒரு வால்யூம்.
4	தென்னிந்தியாவில் புல் தினுசுகள்.	கே. ரெங்காசாரி ..	ஷை ..	4 8 0	
5	டிபார்ட்மெண்டின் நிர்வாக ரிப்போர்டு (பிரதி வருஷமும் பிரசுரமாகிறது).	..	ஷை ..		
6	கீழ்தர உத்தியோகஸ்தர்கள் ரிபோர்ட்டு (பிரதி வருஷமும் பிரசுரமாகிறது).	..	ஷை ..	விலையெழுதி தெரிந்துகொள்ளலாம்.	
7	தென்னிந்தியாவிலுள்ள களை செடிகள்.	தாதுலிங்கம் நாராயண.	ஷை ..	4 0 0	
8	இந்தியாவுக்கு செடி நூலுக்குரிய மூலதாரமான கையேடு.	கே. ரங்காசாரியார்.	ஷை ..	4 0 0	1935.

ஈஸ்வரஹ்ஷ சித்திரைமீ—

ஏப்ரல்மீ

உத்தராயணம்—வஸந்தருது—மேஷமீ

இங்கிலீஷ் மாதம், தேதி.	தமிழ். தேதி.	தமிழ். வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.
13	க	செவ்வாய் ..	திரிதியை சரு - உங ..	பரணி ரு - உச, கிருத்திகை ருகூ - ரு .. ..
14	உ	புதன் ..	சதுர்த்தி ஙஎ - ஙகூ ..	ரோகிணி ருங - ஙஎ. ..
15	ங	வியாழன் ..	பஞ்சமி ஙO - ருரு ..	மிருகசிரம் சகூ - கஅ ..
16	ச	வெள்ளி ..	ஷஷ்டி உரு - ஙஉ ..	ஆருத்திரை சசா - கசா ..
17	ரு	சனி ..	ஸப்தமி உக - சக ..	புநர்வசு சச - சங ..
18	சா	ஞாயிறு ..	அஷ்டமி ககூ - கசா ..	பூசம் சச - ஙஅ .. ..
19	எ	திங்கள் ..	நவமி கஅ - 20	ஆயில்யம் சரு - ருஅ ..
20	அ	செவ்வ்வாய் ..	தசமி கஅ - சஎ ..	மகம் சஅ ஙஎ ..
21	கூ	புதன் ..	ஏகாதசி 20 - உஅ ..	பூரம் ருஉ - உஎ ..
22	கO	வியாழன் ..	துவாதசி உங - கஅ ..	உத்திரம் ருஎ - உஉ ..
23	கக	வெள்ளி ..	திரயோதசி உஎ - அ ..	ஹஸ்தம் சாO - O .. ..
24	கஉ	சனி ..	சதுர்தசி ஙக - ருஎ ..	ஹஸ்தம் ஙஎ .. ..
25	கங	ஞாயிறு ..	◯ பௌர்ணமி ஙஎ - உகூ. ..	சித்திரை கூ - சச ..
26	கச	திங்கள் ..	பிரதமை சங - ஙரு ..	ஸ்வாதி கசா - ருரு ..
27	கரு	செவ்வாய்.	துவிதியை ருO - ச ..	விசாகம் உச - ஙச ..
28	கசா	புதன் ..	திரிதியை ருசா - ஙக ..	அநுஷம் ஙஉ - உரு ..
29	கஎ	வியாழன்	சதுர்த்தி சாO - O	கேட்டை சO - ச .. ..
30	கஅ	வெள்ளி ..	சதுர்த்தி உ - சO ..	மூலம் சஎ - எ ..
1	ககூ	சனி ..	பஞ்சமி அ - சா	பூராடம் ருங - எ ..
2	உO	ஞாயிறு ..	ஷஷ்டி கஉ - ககூ ..	உத்திராடம் ருஎ - சச ..
3	உக	திங்கள் ..	ஸப்தமி கச - ருங ..	ஸ்ரீவணம் சாO - O ..
4	உஉ	செவ்வாய்	அஷ்டமி கரு - ஙரு ..	ஸ்ரீவணம் O - ஙங ..
5	உங	புதன் ..	நவமி கச - கஉ ..	அவிட்டம் க - உச ..
6	உச	வியாழன்	தசமி கO - சஅ	சதயம் O - கரு, பூரட்டாதி ருஎ - கச .. ..
7	உரு	வெள்ளி ..	ஏகாதசி ரு - ஙங, துவாதசி ருஅ - சச ..	உத்திரட்டாதி ருஉ - ஙசா.
8	உசா	சனி ..	திரயோதசி ருO - சக ..	ரேவதி சசா - சO ..
9	உஎ	ஞாயிறு ..	சதுர்தசி சக - ருO ..	அசுவனி ஙசா - ருஉ ..
10	உஅ	திங்கள் ..	● அமாவாசை ஙஉ - உஅ.	பரணி ஙஉ - ஙங ..
11	உகூ	செவ்வாய்.	பிரதமை உஉ - ருகூ ..	கிருத்திகை உரு - கO ..
12	ஙO	புதன் ..	துவிதியை கச - அ ..	ரோகிணி கஅ - கஎ ..
13	ஙக	வியாழன் ..	திரிதியை ரு - ஙச, சதுர்த்தி ருஅ - ருச ..	மிருகசிரம் கஉ - கரு ..

1937-ம் ௵ ஏப்ரல் ௴-மே ௴.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள், விரதங்கள் முதலியவை, *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.
க	சித்தம்; சித்தம்; அமிர்தம்.	மேஷ ரவி எ - ருஉ, விஷுவத் புண்ணிய காலம்; கிருத்திகா விரதம்.
உ	சித்தம்	1356-ம் ௵ ஸபர் ௴ 2உ.
ங	மரணம்	....
ச	சித்தம்	சீர்காழி திருமுலைப்பால்.
ரு	சித்தம்	....
சு	சித்தம்	கரிநாள் .. ..
எ	சித்தம்; மரணம் ..	*ஸ்ரீராம நவமி .. ..
அ	சித்தம்	திருக்கடவூர் காலன் சம்ஹாரம்.
கூ	அமிர்தம்	ஸர்வைகாதசி .. ..
க0	மரணம்; சித்தம் ..	பிரதோஷம் .. ..
கக	அமிர்தம்	மதுரை, ஸ்ரீமுஷ்ணம்—திருவள்ளூர் ரதம்.
கஉ	மரணம்	....
கங	சித்தம்	சித்திரா பூர்ணிமை; சித்திரகுப்தர் கல்லியாணம்; தாராதாஜி.
கச	அமிர்தம்; மரணம்;	சைத்ர பகுளம் .. ..
கரு	மரணம்; சித்தம்..	கரிநாள், திருவல்லிக்கேணி கருடன்.
கசு	அமிர்தம்; சித்தம்.	....
கஎ	பிரபலா; சித்தம் ..	திருநீர்மலைக் கருடன் ..
கஅ	அமிர்தம்; பிரபலா.	....
ககூ	சித்தம்	....
உ0	அமிர்தம்	....
உக	அமிர்தம்	நடராஜரபிஷேகம் ..
உஉ	சித்தம்	....
உங	பிரபலா; சித்தம் ..	அகரிசார்ஷம்பா ..
உச	மரணம்; சித்தம்; சித்தம்.	* அஸென்ஷன் டே ..
உரு	சித்தம்; அமிர்தம்.	ஸர்வைகாதசி .. ..
உசு	பிரபலா; சித்தம் ..	பிரதோஷம், சிவராத்திரி.
உஎ	சித்தம்; பிரபலா ..	ஸ்ரீ முஷ்ணம் வராஹ ஜயந்தி.
உஅ	சித்தம்; மரணம் ..	சோமவார அமாவாசை; கிருத்திகை.
உகூ	சித்தம்; அமிர்தம்..	வைசாக சுத்தம் .. ..
ங0	சித்தம்	அக்ஷயத்திரியா; ரப்யூலவல் ௴ கஉ.
ஙக	மரணம்	எம்பெருமானுர் சாத்துமுறை.

கால்நடைச் சந்தை கால்நடைக் காக்ஷி விவசாய காக்ஷி.

பெல்லாரி ஜில்லா அடோனி தாலூகா, டிவாம்டின்ல் நாலு நாளைக்கு ஸ்ரீராமநவமியிலிருந்து கால்நடைச் சந்தைகூடும். பக்கத்து ரயில்வே ஸ்டேஷன் அடோனி—24 மைல்.

கோயம்புத்தூர் ஜில்லா, அவனுசியில் ஒரு வாரத்திற்கு 1937-ம் வருஷம் எப்ரல் ௴ 21உயிலிருந்து 28உ முடிய ரத உத்சவத்தன்று கால்நடைச் சந்தை கூடும். பக்கத்து ரயில்வே ஸ்டேஷன் வஞ்சிப்பாளையம்.

தென்ஆற்காடு ஜில்லா, திருக்கோயிலூர் தாலூகா, கூவகத்தில் 1937-ம் ௵ எப்ரல் ௴ 26-ம்உ யிலிருந்து ஒரு வாரத்துக்கு கால் நடைச் சந்தை கூடும் பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் இருண்டை.

பெல்லாரி ஜில்லா, அடோணி தாலூகா, கல்லுடி வகுண்டாவில் 1937-ம் ௵ எப்ரல் ௴ 25உயிலிருந்து நாலு நாளைக்கு கால்நடைச் சந்தைகூடும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் துங்கபத்திரா 3 மைல்.

சேலம் ஜில்லா, தர்மபுரி தாலூகா, நந்தரத்தகல்லியில் சித்திரை பௌர்ணமியிலிருந்து காளியம்மன் சத்திரையின் போது 5 நாளைக்கு கால்நடைச் சந்தை கூடும். பக்கத்து ரயில்வே ஸ்டேஷன், தர்மபுரி-7 மைல்.

தாராபுரம் தாலூகா பச்சப்பாளையம் மஜரா கண்ணபுரத்தில் 1937-ம் ௵ மே ௴ முதல் வாரத்தில் கால்நடை சந்தைகூடும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் திருப்பூர்.

மதுரையில் அழகர் உற்சவக் காலத்தில் 1937-ம் ௵ மே ௴ முதல் வாரத்தில் பொருள் காட்சியும் கால்நடைச் சந்தை கூடும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் மதுரை.

உதகமண்டலத்தில் 1937-ம் ௵ மே ௴ விவசாய காக்ஷி நடைபெறும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் உதகமண்டலம்.

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலூகா, வீரபாண்டியில் 1937-ம் ௵ மே ௴ 10ம்உயிலிருந்து 25உ முடிய பதினைந்து நாளைக்கு மாரியமமன் உத்ஸவத்தை ஒட்டி கால்நடைச் சந்தை கூடும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் தேனி-5 மைல்.

அமிர்தம்—அமிர்த யோகம்.
சித்தம்—சித்த யோகம் } சுபம்.

மரணம்—மரண யோகம்.
உத்பாதம்—உத்பாத யோகம்
பிரபலம்—பிரபலா நிஷ்ட யோகம் } அசுபம்.

ஈசுவர௵ வைகாசி௴—

உத்தராயணம்—வசந்தருது—ரிஷப௴

இங்கிலீஷ் மாதம்,	தேதி.	தமிழ் தேதி.	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.
மே௴	14	க	வெள்ளி ..	பஞ்சமி ருங - கரு ..	ஆருத்திரை எ - உஉ ..
	15	உ	சனி ..	ஷஷ்டி சகூ - கச ..	புனர்வசு ங - ருரு ..
	16	ங	ஞாயிறு ..	ஸப்தமி சசா - ருகூ ..	பூசம் உ - கக .. ..
	17	ச	திங்கள் ...	அஷ்டமி சசா - ஙஉ ..	ஆயில்யம் உ - கக ..
	18	ரு	செவ்வாய்.	நவமி சஎ - ருo ..	மகம் ங - ருசா ..
	19	சா	புதன் ..	தசமி ருo - சக	பூரம் எ - ககூ .. ..
	20	எ	வியாழன்	ஏகாதசி ருச - சஅ ..	உத்திரம் கஉ - சா ..
	21	அ	வெள்ளி ..	துவாதசி ருகூ - ருசா ..	ஹஸ்தம் கஅ - ச ..
	22	கூ	சனி ..	திரயோதசி சாo - o ..	சித்திரை உச - ருரு ..
	23	கo	ஞாயிறு ..	திரயோதசி ரு - சரு ..	ஸ்வாதி ஙஉ - உச ..
	24	கக	திங்கள் ..	சதுர்த்தசி கஉ - உ ..	விசாகம் சo - ங ..
	25	கஉ	செவ்வாய்	○பௌர்ணமி கஅ - உங..	அநுஷம் சஎ - ருக ..
	26	கங.	புதன் ..	பிரதமை உச - சக ..	கேட்டை ருரு - ககூ ..
	27	கச	வியாழன் ..	துவிதியை ஙo - உஅ ..	மூலம் சாo - o .. ..
	28	கரு	வெள்ளி ..	திரிதியை ஙரு - ஙங ..	மூலம் உ - கங ..
	29	கசா	சனி ..	சதுர்த்தி ஙகூ - ஙசா ..	பூராடம் அ - உo .. ..
	30	கஎ	ஞாயிறு ..	பஞ்சமி சஉ - உசா ..	உத்திராடம் கங - உஉ ..
	31	கஅ	திங்கள் ..	ஷஷ்டி சங - சசா ..	ஸ்ரீவணம் கஎ - சா ..
ஜூன்௴	1	ககூ	செவ்வாய்.	ஸப்தமி சங - உஅ ..	அவிட்டம் ககூ - கச ..
	2	உo	புதன் ..	அஷ்டமி சக - உகூ ..	சதயம் ககூ - சங ..
	3	உக	வியாழன்	நவமி ஙஎ - சஎ ..	பூரட்டாதி கஅ - உசா ..
	4	உஉ	வெள்ளி ..	தசமி ஙஉ - ஙஉ ..	உத்திரட்டாதி கரு - ஙச...
	5	உங	சனி ..	ஏகாதசி உரு - சஅ ..	ரேவதி கக - கங ..
	6	உச	ஞாயிறு ..	துவாதசி கஎ - ருஎ ..	அசுவினி ரு - சo பரணி ருகூ - கஅ .. ..
	7	உரு	திங்கள் ..	திரயோதசி கூ - கஅ, சதுர்தசி ருகூ - ஙச.	கிருத்திகை ருஉ - உங ..
	8	உசா	செவ்வாய்.	●அமாவாசை ருக - கச ..	ரோகிணி சரு - உஉ. ..
	9	உஎ	புதன் ..	பிரதமை சஉ - உஎ ..	மிருகசிரம் ஙஅ - ஙஎ ..
	10	உஅ	வியாழன்	துவிதியை ஙரு - உச ..	ஆருத்திரை ஙஉ - ஙo ..
	11	உகூ	வெள்ளி ..	திரிதியை உஎ - உக ..	புநர்வசு உஎ - ஙங ..
	12	ஙo	சனி ..	சதுர்த்தி உக - ருச ..	பூசம் உச - ச .. ..
	13	ஙக	ஞாயிறு ..	பஞ்சமி கஅ - கக ..	ஆயில்யம் உஉ - கஎ ..

1937-ம் ௵ மேமீ௴-ஜூன்மீ௴.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள், விரதங்கள் முதலியவை *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.	கால் நடைச் சந்தை கால்நடைக் காக்ஷி விவசாயக்காக்ஷி.
௧	சித்தம்	ரிஷபரவி ௦ - ௪௬ ; விஷ்ணுபதி, ஸ்ரீ சங்கர ஜயந்தி.	மதுரை ஜில்லா, நிலக்கோட்டை தாலூகா செம்பட்டியில் ஒரு வாரத்துக்கு 1937-ம் ௵ மேமீ௴ 14௳ லிருந்து கால்நடைச் சந்தை கூடும். பக்கத்து அம்பாத்துரை 3¼ மைல் ஸ்டேஷன்.
௨	சித்தம்	....	
௩	சித்தம்	விட் சண்டே	
௪	சித்தம் ; மரணம்.	சிங்கப்பெருமாள் கோயில் கருடன்.	மதுரை ஜில்லா நில கோட்டையில் ஒருவாரத்திற்கு 1937-ம் ௵ மேமீ௴ 19தேதியிலிருந்துகால் நடைசந்தை கூடும் பக்கத்து ரயில்வே ஸ்டேஷன் கொடைக்கானல் ரோட் 6 மைல்.
௫	சித்தம்	....	கடலூர் என்.டி.யில் மேமீ௴ 3-வது வாரத்தில் பாடலீஸ்வரர் பிரம்மோத்ஸவ உத்ஸவத்தை முன்னிட்டுவிவசாய,காக்ஷி நடைபெரும்.
௬	அமிர்தம்	....	
௭	மரணம் ; சித்தம் ..	கரிநாள் ; ஸர்வைகாதசி.	
௮	அமிர்தம் ; சித்தம்.	....	சிதம்பரம் தாலுகா, கொத்தட்டையில் மேமீ௴ 2-வது வாரத்தில் கால்நடைக் காக்ஷி நடைபெறும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் புதுச்சத்திரம்.
௯	மரணம் ; அமிர்தம்.	சனிப்பிரதோஷம் ..	
௧௦	சித்தம் ; உத்பாதம்.	ஸ்ரீ நரசிம்ம ஜயந்தி ; * பராவபடமட	
௧௧	மரணம் ; சித்தம். மட	ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி ; எம்ப்யர்டே,	தென்ஆற்காடு ஜில்லா, திருக்கோயிலூர் தாலூகா பரிக்கல்லில் 1937-ம் ௵ மேமீ௴ முதல் தேதியிலிருந்து ஒரு வாரத்துக்கு கால்நடைச் சந்தை கூடும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் இருண்டை.
௧௨	சித்தம் ; உத்பாதம்.	கஞ்சி கருடன்	
௧௩	சித்தம் ; மரணம் ..	வைசாக பகுளம் ..	
௧௪	சித்தம்	கார்பஸ் கிரிஸ்டி ..	
௧௫	அமிர்தம் ; பிரபலா.	....	
௧௬	சித்தம்	....	
௧௭	அமிர்தம்	கரிநாள் ; கஞ்சி ரதம் ..	திருநெல்வேலி ஜில்லா, கோயில்பட்டி தாலூகா பசுவந்தனையில் 1937-ம் ௵ மேமீ௴ 6-ம் ௳ முதல் பதினைந்து நாளைக்கு கால் நடைச் சந்தை. சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் கடம்பூர் 7 மைல்.
௧௮	அமிர்தம் ; சித்தம்.	கரிநாள்	
௧௯	சித்தம் ; மரணம்	....	
௨௦	சித்தம், அமிர்தம் ..	....	கர்நூல் ஜில்லா கொடூரில் 1937-ம் ௵ மேமீ௴ 23௳ முதல் மேமீ௴ 25௳ முடிய கால் நடைச் சந்தை. சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் கர்நூல்.
௨௧	சித்தம்	....	
௨௨	சித்தம் ; அமிர்தம்.	....	
௨௩	பிரபலா ; சித்தம்.	ஸர்வைகாதசி	சித்தூர் ஜில்லா பால்மனேரி தாலூகாவில் குழிப்பள்ளியில் மேமீ௴ 10௳யிலிருந்து 20௳ முடிய கால்நடைச் சந்தை. சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் குப்பம்.
௨௪	சித்தம் ; பிரபலா ; சித்தம்.	பிரதோஷம்	
௨௫	மரணம் ; அமிர்தம்.	கிருத்திகை ; சிவராத்திரி.	சித்தூர் ஜில்லா வயல்பாட் தாலூகா தாரிகொண்டாவில் 1937-ம் ௵ மேமீ௴த்தில் கால் நடைச் சந்தை. சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் வயல்பாட். நாலு மைல்.
௨௬	அமிர்தம் ; சித்தம்.	அமாவாசை.	
௨௭	சித்தம்	ஜயேஷ்ட சுத்தம் ..	
௨௮	மரணம் ; அமிர்தம்.	....	சித்தூர் ஜில்லா வயல்பாட் தாலூகா பைலரில் மேமீ௴ த்தில் கால் நடைச் சந்தைகூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் பைலர் 1 மைல்.
௨௯	சித்தம் ; உத்பாதம்.	ரப்யூஸானிமீ௴ ௧௨ ..	
௩௦	சித்தம் ; மரணம்.	....	சித்தூர் ஜில்லா புங்கநூரில் மேமீ௴த்தில் கால் நடைச் சந்தை. சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் மதனப்பள்ளி-26 மைல்.
௩௧	சித்தம் ; மரணம்.	திருமாகாளம் யாக உத்ஸவம்.	

அமிர்த — அமிர்தயோகம்.
சித்த — சித்தயோகம். } சுபம்.

{ மரண — மரணயோகம்.
உத்பாத — உத்பாதயோகம்.
பிரபலா — பிரபலா நிஷ்டயோகம். } அசுபம்.

ஈஸ்வர௵ ஆனிமீ —

உத்தராயணம்—கிரீஷ்மருது—மிதுனமீ

இங்கிலீஷ் மாதம்,	தேதி.	தமிழ் தேதி.	தமிழ் வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.
ஜூன்௴	14	க	திங்கள்	ஷஷ்டி கசு - கஎ	மகம் உஉ - உரு
	15	உ	செவ்வாய்	ஸப்தமி கசு - உச	பூரம் உச - ௩௦
	16	௩	புதன்	அஷ்டமி கஎ - அ	உத்திரம் உஅ - கஎ
	17	ச	வியாழன்	நவமி உக - சச	ஹஸ்தம் ௩௩ - சரு
	18	ரு	வெள்ளி	தசமி உசு - ரு௦	சித்திரை ச௦ - உஅ
	19	சு	சனி	ஏகாதசி ௩உ - சசு	ஸ்வாதி சஎ - ருஎ
	20	எ	ஞாயிறு	துவாதசி ௩௯ - சு	விசாகம் ருரு - சக
	21	அ	திங்கள்	திரயோதசி சரு - உரு	அநுஷம் சு௦ - ௦
	22	௯	செவ்வாய்	சதுர்த்தசி ருக - உக	அநுஷம் ௩ - உ௦
	23	க௦	புதன்	○பௌர்ணமி ருசு - ௩அ	கேட்டை க௦ - ௩௯
	24	கக	வியாழன்	பிரதமை சு௦ - ௦	மூலம் கஎ - க௦
	25	கஉ	வெள்ளி	பிரதமை க - ச	பூராடம் உஉ - சஅ
	26	க௩	சனி	துவிதியை ச - உஅ	உத்திராடம் உஎ - ௩க
	27	கச	ஞாயிறு	திரிதியை சு - சக	ஸ்ரீவணம் ௩௦ - ரு௯
	28	கரு	திங்கள்	சதுர்த்தி எ - ச௯	அவிட்டம் ௩௩ - க௯
	29	கசு	செவ்வாய்	பஞ்சமி எ - ௩அ	சதயம் ௩ச - க௯
	30	கஎ	புதன்	ஷஷ்டி சு - ௯	பூரட்டாதி ௩ச - அ
ஜூலை௴	1	கஅ	வியாழன்	ஸப்தமி ௩ - உசு, அஷ்டமி ரு௯ - உ௯.	உத்திரட்டாதி ௩உ - ச௩
	2	க௯	வெள்ளி	நவமி ருச - உச	ரேவதி ௩௦ - சு
	3	உ0	சனி	தசமி சஅ - கசு	அசுவனி உசு - கஅ
	4	உக	ஞாயிறு	ஏகாதசி சக - கசு	பரணி உக - ௩அ
	5	உஉ	திங்கள்	துவாதசி ௩௩ - ௩எ	கிருத்திகை கசு - அ
	6	உ௩	செவ்வாய்	திரயோதசி உரு - ௩சு	ரோகிணி க௦ - கரு
	7	உச	புதன்	சதுர்த்தசி கஎ - உ௯	மிருகசீரம் ச - கச ஆருத்திரை ருஅ - உச
	8	உரு	வியாழன்	●அமாவாசை ௯ - சச	புனர்வசு ரு௩ - கஉ
	9	உசு	வெள்ளி	பிரதமை உ - ௩அ, துவிதியை ருசு - ௩சு.	பூசம் சஅ - ருரு
	10	உஎ	சனி	திரிதியை ருக - ரு௦	ஆயில்யம் சரு - ருரு
	11	உஅ	ஞாயிறு	சதுர்த்தி கஅ - சசு	மகம் சச - ௩அ
	12	உ௯	திங்கள்	பஞ்சமி ச எ- ௩எ	பூரம் சரு - கஉ
	13	௩௦	செவ்வாய்	ஷஷ்டி சஅ - உசு	உத்திரம் சஎ - சஉ
	14	௩க	புதன்	ஸப்தமி ருக - க௦	ஹஸ்தம் ருஉ - ௩
	15	௩உ	வியாழன்	அஷ்டமி ருரு - ௩௩	சித்திரை ருஅ - க

1937-ம௵ ஜூன்மீ-ஜூலைமீ.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள் விரதங்கள் முதலியவைகள், *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.
க	மரணம் ; சித்தம் ..	மிதுனரவி கஎ - உரு, ஷடசீதி ; கரிநாள்.
உ	சித்தம் ; அமிர்தம்.	சீவரம் கருடசேர்வை ..
௩	அமிர்தம் ; மரணம்.	....
ச	சித்தம்	....
ரு	சித்தம்	....
சு	அமிர்தம் ; சித்தம்.	கரிநாள் ஸர்வைகாதசி ஆனி கருடன்.
எ	உத்பாத - மரணம்,	....
அ	சித்தம்	பிரதோஷம் ; * கார்வீன்
கூ	சித்தம் ; உத்பாத	ஜ்யேஷ்டாபிஷேகம். ..
க0	சித்தம் ; மரணம்.	கோயம்பேடு-களத்தூர், கருடன், மஹாராஜாபிறந்த நாள்.
கக	சித்தம்	ஜயேஷ்டபகுளம் ..
கஉ	பிரபலா ; சித்தம்.	திருவல்லிக்கேணி ரதம்.
க௩	சித்தம்	....
கச	அமிர்தம் ; மரணம்	....
கரு	சித்தம்	....
கசு	மரணம்	....
கஎ	அமிர்தம் ; சித்தம்.	....
கஅ	சித்தம்	....
ககூ	அமிர்தம்	....
உ0	சித்தம்	....
உக	பிரபலா ; சித்தம்.	கிருத்திகை ; ஸர்வைகாதசி
உஉ	மரணம் ; அமிர்தம்.	பிரதோஷம் .. ..
உ௩	அமிர்தம் ; சித்தம்.	சிவராத்திரி .. ..
உச	சித்தம்	ஆனி அமாவசை ; திருவள்ளூர் தெப்பம்.
உரு	அமிர்தம்	....
உசு	உத்பாதம் ; மரணம்	ஆஷாட சுத்தம். ..
உஎ	மரணம் ; அமிர்தம்.	ஜமாதிலவல்மீ கஉ ..
உஅ	மரணம் ; சித்தம்.	....
உகூ	சித்தம்	....
௩0	அமிர்தம் ; சித்தம்.	ஆனி திருமஞ்சனம் ..
௩க	மரணம் ; சித்தம்	....
௩உ	சித்தம் ; அமிர்தம்.	கடகரேவி சச - உசு ; தக்ஷிணாயனம் ; திருவள்ளூர் ஜ்யேஷ்டாபிஷேகம்.

கால்நடைச் சந்தை கால்நடைக் காக்ஷி விவசாயக் காக்ஷி.

அனந்தப்பூர் ஜில்லா பேனுகொண்டா தாலூகா கொத்தச் செருவில் சங்கமேஸ்வரஸ்வாமி உத்ஸவத்தை முன்னிட்டு மேமீ 27௳யிலிருந்து ஒரு வாரத்துக்கு கால்நடைச் சந்தை கூடும். சமீபத்திய ரயில்வே ஸ்டேஷன் மக்காஜ்பாலா. 13 மைல்.

கோயமுத்தூர் ஜில்லாவில் திருப்பூர் ரத உத்ஸவத்தன்று மேமீ 24௳ கால்நடைச் சந்தை கூடும். விவசாயக்காக்ஷி, மாடு குதிரை காக்ஷி நடை பெறும். சமீபத்திய ஸ்டேஷன் திருப்பூர்.

ராமனுதபுரம் ஜில்லா சிவகங்கை தாலூகா காளயார் கோவிலில் 1937-ம௵ மேமீ 25௳யிலிருந்து ஜூன்மீ 30௳ முடிய கால்நடைச் சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வேஸ்டேஷன் நாட்டரசன் கோட்டை.

ராமனுதபுரம் ஜில்லா சாத்தூர் தாலூகாகள்ளிச்சேரியில் மூன்று வாரத்துக்கு வைகாசி பௌர்ணமியிலிருந்து கால்நடைச் சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் துலுக்கப்பட்டி - 2½ மைல்.

திருநெல்வேலி ஜில்லா கீழ வீரராகவபுரத்தில் ஜூன் 5௳யிலிருந்து 10௳ முடிய கால்நடைச் சந்தை. சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் குரிச்சி.

திருநெல்வேலி ஜில்லா திருச்செந்தூர் தாலூகா ஆழ்வார் திருநகரியில் விசாகம் திருநாளை ஒட்டி 15 நாளைக்கு ஜூன் மீத்தில் கால்நடைச் சந்தை கூடும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் ஆழ்வார் திருநகரி.

மதுரை ஜில்லா பழனி தாலூகா ஆத்திக்கொம்பையில் ஜூன்மீ 2-வது வாரத்தில் நகி மாகாளி அம்மன் உத்சவத்தை முன்னிட்டு ஒரு வாரத்திற்கு கால்நடைச் சந்தை கூடும். சமீபத்திய ஸ்டேஷன் ஒட்டன் சத்திரம் 1½ மைல்.

திருநெல்வேலி ஜில்லா கோவில்பட்டி தாலூகா முத்தளாபுரத்தில் ஜூன் 20௳ யிலிருந்து ஜூலைமீ 11௳ முடிய கால்நடைச் சந்தை. சமீபத்திய ஸ்டேஷன் நள்ளி 8 மைல்.

கூனூரில் ஜூன்மீ த்தில் புஷ்பக் காக்ஷி நடைபெறும். சமீபத்திய ஸ்டேஷன் கூனூர்.

அமிர்த — அமிர்தயோகம்.
சித்த — சித்தயோகம்.
} சுபம்.

மரண — மரணயோகம்.
உத்பாத — உத்பாதயோகம்.
பிரபலா — பிரபலா நிஷ்டயோகம்.
} அசுபம்.

ஈஸ்வர வருஷ ஆடி மீ—

தக்ஷிணாயனம்—கிரீஷ்மருது கடகமீ.

ஜூலை மீ.

இங்கிலிஷ் மாதம், தேதி.	தமிழ்: தேதி.	தமிழ்: வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.
16	க	வெள்ளி ..	நவமி சூ0 - 0	ஸ்வாதி சூ0 - 0 .. ..
17	உ	சனி	நவமி க - கக	ஸ்வாதி ரு - உ .. ..
18	௩	ஞாயிறு ..	தசமி எ - கஅ	விசாகம் கஉ - ச௩ ..
19	ச	திங்கள் ..	ஏகாதசி க௩ - ௩சூ ..	அநுஷம் உ0 - உச ..
20	ரு	செவ்வாய் ..	துவாதசி க௯ - உஅ ..	கேட்டை உஎ - ௩சூ ..
21	சூ	புதன் ..	திரயோதசி உச - உசூ ..	மூலம் ௩௩ - ருசூ ..
22	எ	வியாழன் ..	சதுர்தசி உஅ - க௯ ..	பூராடம் ௩௯ - ரு ..
23	அ	வெள்ளி ..	◯ பௌர்ணமி ௩0 - சசூ.	உத்திராடம் ச௩ - 0 ..
24	௯	சனி	பிரதமை ௩உ - ரு ..	ஸ்ரீவணம் சரு - ச௩ ..
25	க0	ஞாயிறு ..	துவிதியை ௩உ - அ ..	அவிட்டம் சஎ - கஎ ..
26	கக	திங்கள் ..	திரிதியை ௩க - எ ..	சதயம் சஎ - சசூ ..
27	கஉ	செவ்வாய் ..	சதுர்த்தி உசூ - எ ..	பூரட்டாதி சஎ - உக ..
28	க௩	புதன் ..	பஞ்சமி உசூ - கசூ ..	உத்திரட்டாதி சசூ - ரு ..
29	கச	வியாழன் ..	ஷஷ்டி உஉ - ௩ரு ..	ரேவதி சச - ரு .. ..
30	கரு	வெள்ளி ..	ஸப்தமி கஅ - ௯	அசுவினி சக - உரு ..
31	கசூ	சனி	அஷ்டமி க௩ - கக ..	பரணி ௩அ - அ .. ..

ஆகஸ்டு மீ.

இங்கிலிஷ் மாதம், தேதி.	தமிழ்: தேதி.	தமிழ்: வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.
1	கஎ	ஞாயிறு ..	நவமி எ - ௩சூ	கிருத்திகை ௩ச - கஅ ..
2	கஅ	திங்கள் ..	தசமி க - ௩ச, ஏகாதசி ருரு - கக.	ரோகிணி ௩0 - ரு ..
3	க௯	செவ்வாய் ..	துவாதசி சஅ - ௩எ ..	மிருகசிரம் உரு - ௩ரு ..
4	உ0	புதன் ..	திரயோதசி சஉ - அ ..	ஆருத்திரை உ0 - ருஅ ..
5	உக	வியாழன் ..	சதுர்தசி ௩ரு - ருசூ ..	புநர்வசு கசூ - ௩எ ..
6	உஉ	வெள்ளி ..	● அமாவாஸ்ய ௩0 - உக ..	பூசம் கஉ - சக .. ..
7	உ௩	சனி	பிரதமை உரு - சஅ ..	ஆயில்யம் ௯ - ருச ..
8	உச	ஞாயிறு ..	துவிதியை உஉ - ௩ச ..	மகம் அ - கச .. ..
9	உரு	திங்கள் ..	திரிதியை உ0 - ருசூ ..	பூரம் அ - 0 .. ..
10	உசூ	செவ்வாய் ..	சதுர்த்தி உக - எ ..	உத்திரம் ௯ - உ௯ ..
11	உஎ	புதன் ..	பஞ்சமி உ௩ - எ	ஹஸ்தம் கஉ - சஎ ..
12	உஅ	வியாழன் ..	ஷஷ்டி உசூ - ரு0 ..	சித்திரை கஎ - சஅ ..
13	உ௯	வெள்ளி ..	ஸப்தமி ௩க - ரு௯ ..	ஸ்வாதி உச - கரு ..
14	௩0	சனி	அஷ்டமி ௩அ - ச ..	விசாகம் ௩க - ௩எ ..
15	௩க	ஞாயிறு ..	நவமி சச - உஉ	அநுஷம் ௩௯ - கக ..

1937-ம் ஞு ஜூலைமீ-ஆகஸ்டுமீ.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள் விரதங்கள் முதலியவை *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.
க	சித்த	..
உ	அமிர்த ; சித்த	கரி நாள்
ந	உத்பாத ; மரண	..
ச	சித்த	ஸர்வைகாதசி
ரு	உத்பாத ; அமிர்த	பிரதோஷம்
சு	மரண ; அமிர்த	..
எ	சித்த	..
அ	சித்த ; மரண	கஜேந்திர மோக்ஷம்
கூ	சித்த	ஆஷாடபகுளம்
கo	மரண ; சித்த	கரி நாள்
கக	சித்த	..
கஉ	மரண ; அமிர்த	..
கந	சித்த ; உத்பாத	..
கச	சித்த ; அமிர்த	..
கரு	அமிர்த ; சித்த	..
கசு	சித்த ; அமிர்த	..
கஎ	சித்த	ஆடி கிருத்திகை.
கஅ	அமிர்த	காவேரி பெருக்கு.
ககூ	சித்த ; மரண	வைஷ்ண வைகாதசி.
உo	சித்த	பிரதோஷம், சிவராத்திரி, கரிநாள்.
உக	அமிர்த	..
உஉ	உத்பாத ; மரண	ஆடி அமாவாசை.
உந	மரண ; அமிர்த	ஸ்ராவண சுத்தம்.
உச	மரண ; சித்த	திருவாடிப்பூரம் ; ஜமாதிஸானிமீ கஉ.
உரு	சித்த	..
உசு	அமிர்த ; சித்த	கருட-நாக-பஞ்சமி.
உஎ	மரண ; சித்த	..
உஅ	சித்த ; அமிர்த	..
உகூ	சித்த	..
நo	சித்த	..
நக	மரண	ஆடி பண்டிகை ; *அஸ்ஸம்ஷன்டே.

கால்நடைச் சந்தை கால்நடைக் காக்ஷி விவசாயக் காக்ஷி.

மதுரை ஜில்லா நிலக்கோட்டை தாலூகா செம்பட்டியில் 1937-ம் ஞு சூலைமீ 16-ம் தேதியிலிருந்து ஒரு வாரத்துக்கு கால்நடைச்சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் அம்பாதுரை. 3½ மைல்.

திண்டுக்கல் தாலூகா வடமதுரையில் 1937-ம் ஞு சூலைமீ மூன்றுவது வாரத்தில் சுமார் ஒரு வாரத்துக்கு கால் நடைச்சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் வடமதுரை.

திருநெல்வேலி ஜில்லா சங்கரன் கோவிலில் 1937-ம் ஞு சூலைமீ 24-ம் தேதியிலிருந்து ஆகஸ்ட் 8-ம் தேதி முடிய ஆடித்தபசை ஒட்டி கால் நடை சந்தை கூடும்.

பவானி தாலூகா செட்டி சமுத்திர கிராமத்தின் மஜரு புதுப்பாளையத்தில் 1937-ம் ஞு ஆகஸ்ட்டுமீ 20-ம் தேதியிலிருந்து 23 தேதி முடிய மூன்று நாளைக்கு குருநாதஸ்வாமி கோவில்உத்ஸவத்தை முன்னிட்டு வருஷ கால் நடை சந்தை கூடும். கிட்டின ரெயில்வேஸ்டேஷன் ஈரோடு.

திண்டிவனம் தாலூகா மைலத்தில் ஆடி மாதத்தில் ஆடி கிருத்திகை உத்ஸவத்தை முன்னிட்டு 3 நாளைக்கு கால் நடைச் சந்தை. பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் மைலம்.

அமிர்த — அமிர்தயோகம்.
சித்த — சித்தயோகம். } சுபம்.

மரண — மரணயோகம்.
உத்பாத — உத்பாதயோகம்.
பிரபலா — பிரபலா நிஷ்டயோகம். } அசுபம்.

ஈஸ்வர௵ ஆவணி௴—

இங்கிலீஷ் மாதம், தேதி.		தமிழ். தேதி.	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.
ஆகஸ்டு௴.	16	க	திங்கள்	தசமி ௫௦ - க௫	கேட்டை ௪௬ - ௪க
	17	உ	செவ்வாய்	ஏகாதசி ௫௫ - க௬	மூலம் ௫௩ - க௦
	18	௩	புதன்	துவாதசி ௫௮ - ௫௪	பூராடம் ௫௮ - உ௦
	19	௪	வியாழன்	திரயோதசி ௬௦ - ௦	உத்திராடம் ௬௦ - ௦
	20	௫	வெள்ளி	திரயோதசி க - ௦	உத்திராடம் உ - க
	21	௬	சனி	சதுர்தசி க - ௩௦	ஶ்ரீவணம் ௪ - க௦
	22	௭	ஞாயிறு	○ பௌர்ணமி ௦-௩க பிரதமை ௫௮ - க௫	அவிட்டம் ௪ - ௫உ
	23	௮	திங்கள்	துவிதியை ௫௫ - ௦	சதயம் ௪ - கக
	24	௯	செவ்வாய்	திரிதியை ௫௦ - ௫௬	பூரட்டாதி உ - ௪௯
	25	க௦	புதன்	சதுர்த்தி ௪௬ - உஉ	உத்திரட்டாதி ௦ - ௩௩, ரேவதி ௫௭ - ௪௯
	26	கக	வியாழன்	பஞ்சமி ௪க - உ௫	அசுவினி ௫௪ - ௪௪
	27	கஉ	வெள்ளி	ஷஷ்டி ௩௬ - க௯	பரணி ௫க - ௩௦
	28	க௩	சனி	ஸப்தமி ௩க - ௬	கிருத்திகை ௪௮ - கக
	29	க௪	ஞாயிறு	அஷ்டமி உ௫ - ௫க	ரோகிணி ௪௪ - ௫உ
	30	க௫	திங்கள்	நவமி உ௦ - ௪௦	மிருகசிரம் ௪க - ௩௬
	31	க௬	செவ்வாய்	தசமி க௫ - ௩க	ஆருத்திரை ௩௮ - உ௭
செப்டம்பர்௴.	1	க௭	புதன்	ஏகாதசி க௦ - ௩௫	புநர்வசு ௩௫ - ௩உ
	2	க௮	வியாழன்	துவாதசி ௫ - ௫௯	பூசம் ௩உ - ௫௯
	3	க௯	வெள்ளி	திரயோதசி க - ௫௪ சதுர்த்தசி ௫௮ - ௩க	ஆயில்யம் ௩க - க
	4	உ௦	சனி	● அமாவாசை ௫௬ - ௬	மகம் உ௯ - ௫௪
	5	உக	ஞாயிறு	பிரதமை ௫௪ - ௫௪	பூரம் உ௯ - ௫௪
	6	உஉ	திங்கள்	துவிதியை ௫௫ - க௪	உத்திரம் ௩க - க௬
	7	உ௩	செவ்வாய்	திரிதியை ௫௭ - ௭	ஹஸ்தம் ௩௪ - கக
	8	உ௪	புதன்	சதுர்த்தி ௬௦ - ௦	சித்திரை ௩௮ - ௪க
	9	உ௫	வியாழன்	சதுர்த்தி ௦ - ௩	ஸ்வாதி ௪௪ - ௩௬
	10	உ௬	வெள்ளி	பஞ்சமி ௫ - உ௯	விசாகம் ௫க - ௩௮
	11	உ௭	சனி	ஷஷ்டி கக - உ௫	அநுஷம் ௫௯ - உ௩
	12	உ௮	ஞாயிறு	ஸப்தமி க௭ - ௫௮	கேட்டை ௬௦ - ௦
	13	உ௯	திங்கள்	அஷ்டமி உ௪ - ௮	கேட்டை ௭ - ௦
	14	௩௦	செவ்வாய்	நவமி உ௯ - ௩௮	மூலம் க௩ - ௫௯
	15	௩க	புதன்	தசமி ௩௩ - ௩௯	பூராடம் க௯ - ௫உ

1937-ம் ஆகஸ்ட்-செப்டம்பர்.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள், விரதங்கள் முதலியவை, *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.	கால் நடைச் சந்தை காக்ஷி / விவசாய காக்ஷி / கால் நடை காக்ஷி.
௧	சித்த ..	.. ஹிம்மோஜி ௩-௧௩ விஷ்ணுபதி கொல்லமாண்டு.	திருநெல்வேலி ஜில்லா, திருச்செந்தூரில் 1937-ம் ஆகஸ்ட்டு மாசத்தில் ஆவணி உத்ஸவத்தில் 15 நாளைக்கு கால் நடைச் சந்தை கூடும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் திருச்செந்தூர்.
௨	அமிர்த ; சித்த ..	ஸர்வைகாசி, கரி நாள் ..	
௩	அமிர்த ..	.. காதர்வாலி உரூஸ் ..	
௪	சித்த ..	.. பிரதோஷம்	
௫	சித்த ; மரண ..	வரலக்ஷிமி விரதம் ; * ஓணம் ருக் உபாகர்மம்.	
௬	சித்த ..	.. * யஜுருபாகர்மம் ..	
௭	மரண ; சித்த ..	ஸ்ரீரவணபகுளம் ..	
௮	சித்த ..	.. ..	
௯	மரண ; அமிர்த ..	..	
௧௦	சித்த ; உத்பாதம் ; மரண.	..	
௧௧	அமிர்த ; சித்த ..	..	
௧௨	சித்த ..	.. ..	
௧௩	அமிர்த ..	.. கோகுலாஷ்டமி, முனித்திரய ஸ்ரீஜயந்தி.	
௧௪	சித்த ..	.. * கிருத்திகை, ஸ்ரீஜயந்தி.	
௧௫	அமிர்த ; சித்த ..	..	
௧௬	மரண ; சித்த ..	..	
௧௭	சித்த ..	.. ஸர்வைகாதசி	
௧௮	அமிர்த ; சித்த ..	பிரதோஷம்	திருநெல்வேலி ஜில்லா, சீவலப்பேரியில் 1937-ம் செப்டம்பர் 1-ந்தேதியிலிருந்து 15-ந்தேதி வரை கால்நடைச்சந்தை கூடும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் கெங்கைகொண்டான்—3 மைல்.
௧௯	மரண ..	.. சிவராத்திரி	
௨௦	அமிர்த ; சித்த ..	அமாவாசை ..	
௨௧	சித்த ; அமிர்த ..	பாத்திரபதசுத்தம் ..	
௨௨	சித்த ..	.. ..	
௨௩	சித்த ..	.. ரஜ்ஜப்மீ ௧௨ ; ஸாமோபாகர்மம்.	
௨௪	சித்த ..	.. * விநாயகசதுர்த்தி ..	
௨௫	அமிர்த ; சித்த ..	ருஷிபஞ்சமி	
௨௬	சித்த ..	.. ..	
௨௭	சித்த ..	.. ..	திருநெல்வேலி ஜில்லா, நாங்குநேரி தாலூகா, சிங்கிகுளத்தில் 1937-ம் செப்டம்பர் மத்தியில் கால்நடைச் சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் திருநெல்வேலி ஜங்ஷன்—15 மைல்.
௨௮	மரண ..	.. கரி நாள்	
௨௯	சித்த ..	.. ..	
௩௦	அமிர்த ; சித்த ..	ஆவணிமூலம் ; மதுரை பிட்டுத்திருநாள்.	
௩௧	அமிர்த ..	.. ..	

அமிர்த — அமிர்தயோகம்.
சித்த — சித்தயோகம். } சுபம்.

மரண — மரணயோகம்.
உத்பாத — உத்பாதயோகம்.
பிரபலா — பிரபலா நிஷ்டயோகம். } அசுபம்.

ஈஸ்வரஸ்ரீ புரட்டாசிமீ—

தக்ஷிணாயனம்—வருஷருது—கன்யாயீ

இங்கிலீஷ் மாதம், தேதி.	தமிழ். தேதி.	தமிழ். வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.
செப்டம்பர் 16	க	வியாழன் ..	ஏகாதசி ௩௫ - ௫எ ..	உத்திராடம் உ௪ – ௬ ..
17	உ	வெள்ளி ..	துவாதசி ௩௬ - உஉ ..	ஸ்ரீவணம் உ௬ - ௩க ..
18	௩	சனி ..	திரியோதசி ௩௬ - ௫௪ ..	அவிட்டம் உஎ - அ ..
19	௪	ஞாயிறு ..	சதுர்தசி ௩க - ௫௬ ..	சதயம் உ௫ - ௫௯ ..
20	௫	திங்கள் ..	○பௌர்ணமி உஎ - ௩உ	பூரட்டாதி உ௩ - உ௪ ..
21	௬	செவ்வாய் ..	பிரதமை உஉ - க ..	உத்திரட்டாதி க௬ - ௫௫ ..
22	எ	புதன்	துவிதியை க௫ - ௫௫ ..	ரேவதி க௫ - க௫ ..
23	அ	வியாஷன் ..	திரிதியை ௯ - உ௬ ..	அசுவனி கக - கஅ ..
24	௯	வெள்ளி ..	சதுர்த்தி ௩ - ௪, பஞ்சமி ௫௬ - ௪௯	பரணி ௬ - ௪௪ .. ..
25	க0	சனி	ஷஷ்டி ௫0 - ௫௫ ..	கிருத்திகை உ - உ௫, ரோகிணி ௫அ - உஎ ..
26	கக	ஞாயிறு ..	ஸப்தமி ௪௫ - ௩உ ..	மிருகசிரம் ௫௫ - உ ..
27	கஉ	திங்கள் ..	அஷ்டமி ௪0 - ௪௪ ..	ஆருத்திரை ௫உ - க௩ ..
28	க௩	செவ்வாய் ..	நவமி ௩௬ - ௩௩	புனர்வசு ௫0 - 0 ..
29	க௪	புதன் ..	தசமி ௩௩ - ௪	பூசம் ௪அ - உ௯ .. ..
30	க௫	வியாழன் ..	ஏகாதசி ௩0 - கஅ ..	ஆயில்யம் ௪எ - ௪உ ..
அக்டோபர் 1	க௬	வெள்ளி ..	துவாதசி உஅ - உஉ ..	மகம் ௪எ - ௪௪ .. ..
2	கஎ	சனி	திரயோதசி உஎ - உக ..	பூரம் ௪அ - ௪௩ .. ..
3	கஅ	ஞாயிறு ..	சதுர்த்தசி உஎ - உ௩ ..	உத்திரம் ௫0 - ௪௬ ..
4	க௯	திங்கள் ..	●அமாவாசை உஅ - ௩உ.	ஹஸ்தம் ௫௪ - 0 ..
5	உ0	செவ்வாய் ..	பிரதமை ௩க - எ ..	சித்திரை ௫அ - ௩க ..
6	உக	புதன் ..	துவிதியை ௩௪ - ௫அ ..	ஸ்வாதி ௬0 - 0 .. ..
7	உஉ	வியாழன் ..	திரிதியை ௪0 - ௩ ..	ஸ்வாதி ௪ - க௪ .. ..
8	உ௩	வெள்ளி ..	சதுர்தசி ௪௬ - ௫ ..	விசாகம் கக - ௩ ..
9	உ௪	சனி	பஞ்சமி ௫உ - ௪௩ ..	அனுஷம் கஅ - ௩௬ ..
10	உ௫	ஞாயிறு ..	ஷஷ்டி ௫௯ - க௯ ..	கேட்டை உ௬ - ௩௪ ..
11	உ௬	திங்கள் ..	ஸப்தமி ௬0 - 0	மூலம் ௩௪ - ௯ .. ..
12	உஎ	செவ்வாய் ..	ஸப்தமி ௫ - உக	பூராடம் ௪0 - ௫உ ..
13	உஅ	புதன் ..	அஷ்டமி க0 - க௩ ..	உத்திராடம் ௪௬ - அ ..
14	உ௯	வியாழன் ..	நவமி க௩ - உ௩	ஸ்ரீவணம் ௪௯ - ௩அ ..
15	௩0	வெள்ளி ..	தசமி க௪ - ௩௩ ..	அவிட்டம் ௫க - ௯ ..
16	௩க	சனி ..	ஏகாதசி க௩ - ௪க ..	சதயம் ௫0 - ௪0 .. ..

1937-ம்ஸூ செப்டம்பர்மீ-அக்டோபர்மீ.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள் விரதங்கள் முதலியவை. *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.	கால் நடைச் சந்தை கால் நடைக் காக்ஷி விவசாயக் காக்ஷி.
க	சித்த.	கன்யாரவி - ச - ௩௯, ஷடசீதி ; ஸர்வைகாதசி.	மங்களூரில் 1937-ம்ஸூ செப்டம்பர்மீ த்தில் புஷ்பமும் காய்கறி காக்ஷியும் நடைபெறும்.
உ	மரண ; சித்த	ஸ்ரீவண துவாதசி	
௩	சித்த ; அமிர்த	சனிப்பிரதோஷம்	
ச	சித்த	அனந்தபத்மநாப விரதம்	
ரு	சித்த	....	
சு	அமிர்த ; சித்த	பாத்திரபதபகுளம் மஹாளயமாரம்பம்.	
எ	உத்பாத ; மரண	....	
அ	அமிர்த ; சித்த	மஹாபரணி	
௯	சித்த	கிருத்திகா விரதம்	
௧௦	அமிர்த ; அமிர்த ; சித்த.	....	
கக	சித்த	....	
கஉ	சித்த ; அமிர்த	மத்தியாஷ்டமி	
க௩	சித்த	....	
கச	சித்த	அர்சுமைகேல்	
கரு	சித்த ; அமிர்த	ஸர்வைகாதசி	
கசு	மரண ; சித்த	கரிநாள், பிரதோஷம்	
கஎ	சித்த ; உத்பாத	சிவராத்திரி, ஈடீரஜ்ஜப்	
கஅ	அமிர்த	....	
க௯	சித்த ; பிரபலா	மஹாலய சோமவார அமாவாசை.	
உ௦	சித்த	ஆகவீஜசுத்தம், நவராத்திரி பூஜாரம்பம்.	
உக	சித்த	....	
உஉ	அமிர்த ; சித்த	ஷாபான்மீ கஉ	
உ௩	சித்த	....	திருநெல்வேலி ஜில்லா கீழ வீரராகவபுரத்தில் 1937-ம்ஸூ அக்டோபர்மீ 1௳யிலிருந்து 31௳ முடிய கால்நடைச் சந்தை கூடும். சமீபத்திய ரயில்வே ஸ்டேஷன் குரிச்சி—1 மைல்.
உச	சித்த	....	
உரு	மரண ; அமிர்த	....	
உசு	சித்த ; உத்பாத	மைசூர், மதுரை, மஹிடாசுர ஸம்ஹாரம்.	
உஎ	சித்த ; பிரலாப	....	
உஅ	அமிர்த ; சித்த	....	
உ௯	சித்த	கரிநாள், மஹா நவமி, ஆயுத பூஜா, விஜயதசமி,	
௩௦	சித்த	மத்வ ஜயந்தி	
௩க	அமிர்த ; மரண	துலாரவி ௩ச - சசு, விஷுவத், ஸர்வைகாதசி, பத்மநாப விரதம்.	

அமிர்த — அமிர்தயோகம்.
சித்த — சித்தயோகம். } சுபம்.

மரண — மரணயோகம்.
உத்பாத — உத்பாதயோகம்.
பிரபலா — பிரபலா நிஷ்டயோகம். } அசுபம்

ஈஸ்வர௵ ஐப்பசிமீ—

தக்ஷிணாயனம்—சரத்ருது—துலாமீ

இங்கிலீஷ் மாதம்,	தேதி.	தமிழ் தேதி.	தமிழ் வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.
அக்டோபர்ீ	17	க	ஞாயிறு ..	துவாதசி கo - சஅ ..	பூரட்டாதி சஅ - கஅ ..
	18	உ	திங்கள் ..	திரியோதசி சு - கூ ..	உத்திரட்டாதி சச - ௩சு ..
	19	௩	செவ்வாய் ..	சதுர்தசி o - ச, ○ பௌர்ணமி ௫௩ - ".	ரேவதி ௩கூ - ௩எ ..
	20	ச	புதன் ..	பிரதமை ச௫ - க௫ ..	அசுவினி ௩௩ - ௫௩ ..
	21	௫	வியாழன் ..	துவிதியை ௩எ - கக ..	பரணி உஎ - ச௫ ..
	22	சு	வெள்ளி ..	திரிதியை உகூ - கஉ ..	கிருத்திகை உக - ௩கூ ..
	23	எ	சனி	சதுர்த்தி உக - சஉ ..	ரோகிணி க௫ - ௫சு ..
	24	அ	ஞாயிறு ..	பஞ்சமி கச - ௫ச ..	மிருகசிரம் கo - ௫சு ..
	25	கூ	திங்கள் ..	ஷஷ்டி கூ - உ	ஆருத்திரை சு - சகூ ..
	26	கo	செவ்வாய் ..	ஸப்தமி ச - க௫	புனர்வசு ௩ - சசு ..
	27	கக	புதன் ..	அஷ்டமி o-௩கூ, நவமி ௫அ-கசு.	பூசம் க - ௫௫ ..
	28	கஉ	வியாழன் ..	தசமி ௫எ - அ	ஆயில்யம் க - கச ..
	29	க௩	வெள்ளி ..	ஏகாதசி ௫எ - க௫ ..	மகம் க - சசு ..
	30	கச	சனி	துவாதசி ௫அ - ௩௩ ..	பூரம் ௩ - ௩க .. ..
	31	க௫	ஞாயிறு ..	திரியோதசி சுo-o ..	உத்திரம் சு - உசு ..
நவம்பர்ீ	1	கசு	திங்கள் ..	திரியோதசி க -o ..	ஹஸ்தம் கo - உ௫ ..
	2	கஎ	செவ்வாய் ..	சதுர்தசி ச - ௩௫ ..	சித்திரை க௫ - உஅ ..
	3	கஅ	புதன் ..	● அமாவாசை கூ - கஉ ..	ஸ்வாதி உக - ௩க ..
	4	ககூ	வியாழன் ..	பிரதமை கச - ச௩ ..	விசாகம் உஅ - உக ..
	5	உo	வெள்ளி ..	துவிதியை உக - ௩ ..	அநுஷம் ௩௫ - ௫எ ..
	6	உக	சனி	திரிதியை உஎ - ச௫ ..	கேட்டை ச௩ - ௫க ..
	7	உஉ	ஞாயிறு ..	சதுர்த்தி ௩ச - ௩சு ..	மூலம் ௫க - சக ..
	8	உ௩	திங்கள் ..	பஞ்சமி சo - ௫சு ..	பூராடம் ௫கூ - ௩ ..
	9	உச	செவ்வாய் ..	ஷஷ்டி சசு - உகூ ..	உத்திராடம் சுo - o ..
	10	உ௫	புதன் ..	ஸப்தமி ௫o - ௩சு ..	உத்திராடம் ௫ - உசு ..
	11	உசு	வியாழன் ..	அஷ்டமி ௫உ - ௫அ ..	ஸ்ரீவணம் கo - உo ..
	12	உஎ	வெள்ளி ..	நவமி ௫௩ - உகூ	அவிட்டம் க௩ - ௩o ..
	13	உஅ	சனி	தசமி ௫க - ௩எ	சதயம் கச - ச௩ ..
	14	உகூ	ஞாயிறு ..	ஏகாதசி சஎ - ௫௫ ..	பூரட்டாதி க௩ - ௫o ..
	15	௩o	திங்கள் ..	துவாதசி சஉ - உஅ ..	உத்திரட்டாதி கக - ௩ ..

1937-ம௵ அக்டோபர்மீ-நவம்பர்மீ.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள், விரதங்கள் முதலியவை. *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.	கால் நடைச் சந்தை கால் நடைக் காக்ஷி விவசாயக் காக்ஷி.
க	சித்த ; அமிர்த ..	பிரதோஷம், துலாஸ்நான மாரம்பம்.	
உ	சித்த	....	
௩	சித்த	அன்னாபிஷேகம் ..	
௪	மரண ; சித்த ..	ஆசுவீஜ பகுளம் ..	
௫	சித்த ; மரண ..	கிருத்திகா விரதம் ; ஷபப ராத்.	
௬	சித்த ; மரண ..	கரிநாள்	
௭	அமிர்த ; சித்த ..	ஸ்ரீரங்கம் டோலோத்ஸவம்.	
௮	சித்த	....	
௯	சித்த ; அமிர்த ..	....	
க0	சித்த	....	
கக	சித்த	....	
கஉ	சித்த ; அமிர்த ..	....	
க௩	மரண ; சித்த ..	ஸ்மார்த்த ஏகாதசி ..	
க௪	சித்த ; உத்பாத ..	வைஷ்ணவ ஏகாதசி ..	
க௫	அமிர்த	பிரதோஷம்	
க௬	சித்த ; பிரபலா ..	சிவராத்திரி	
க௭	சித்த	அமாவாசை ; தீபாவளி பண்டிகை, கேதார விரதம்.	
க௮	சித்த	....	
க௯	சித்த	கார்த்திகை சுத்தம், விக்ரமசகம்.	
உ0	சித்த ; மரண ..	கரிநாள், ரம்ஜான்மீ கஉ.	தென்கனரு ஜில்லா, புத்தூர் தாலூகா சுப்பிரமணிய கிராமத்தின் மஜரா குல்குண்டாவில் கார்த்திகைமீ பௌர்ணமியிலிருந்து பதினைந்து நாளைக்கு கால்நடைச் சந்தை கூடும் சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் மங்களூர், 67 மைல்.
உக	சித்த	....	
உஉ	அமிர்த ; சித்த ..	....	
உ௩	உத்பாத ; மரண ..	....	
உ௪	பிரபலா	ஸ்கந்த ஷஷ்டி	
உ௫	அமிர்த ; சித்த ..	திருவிந்தளூர் கருடன் ..	
உ௬	சித்த	....	
உ௭	சித்த	....	
உ௮	அமிர்த ; மரண ..	....	
உ௯	சித்த ; அமிர்த ..	ஸர்வைகாதசி	
௩0	சித்த	விருச்சிகரவி ௩௩ - ௫௬ ; விஷ்ணுபதி; துலாஸ்நானம் முடிவு.	

அமிர்த — அமிர்தயோகம்.
சித்த — சித்தயோகம்.
} சுபம்.

மரண — மரணயோகம்.
உத்பாத — உத்பாதயோகம்.
பிரபலா — பிரபலா நிஷ்டயோகம்.
} அபசும்.

ஈஸ்வர ௵ கார்த்திகை ௴—

இங்கிலீஷ் மாதம்,	தேதி.	தமிழ் தேதி.	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.
நவம்பர்௴.	16	க	செவ்வாய்.	திரியோதசி ஙரு - ஙசு ..	ரேவதி சு - ச0 ..
	17	உ	புதன் ..	சதுர்தசி உஎ - உஅ ..	அசுவினி 0 - ருஅ ; பரணி ருச - உச.
	18	ங	வியாழன்.	○ பௌர்ணமி கஅ - ஙசு.	கிருத்திகை சஎ - கச ..
	19	ச	வெள்ளி ..	பிரதமை கூ - உஎ ..	ரோகிணி ச0 - க ..
	20	ரு	சனி ..	துவிதியை 0 - உஅ, திரிதியை ருஉ - 0.	மிருகசிரம் ஙங - சு ..
	21	சு	ஞாயிறு ..	சதுர்த்தி சச - ககூ ..	ஆருத்திரை உகூ - ருச.
	22	எ	திங்கள் ..	பஞ்சமி ஙஎ - சஎ ..	புநர்வசு உக - ருச ..
	23	அ	செவ்வாய்.	ஷஷ்டி ஙஉ - சஉ ..	பூசம் கஅ - கங ..
	24	கூ	புதன் ..	ஸப்தமி உகூ - ககூ ..	ஆயில்யம் கசு - கூ ..
	25	க0	வியாழன் ..	அஷ்டமி உஎ - சசு ..	மகம் கரு - சசு ..
	26	கக	வெள்ளி ..	நவமி உஎ - ருங ..	பூரம் கசு - சக ..
	27	கஉ	சனி ..	தசமி உகூ - ச0	உத்திரம் ககூ - ருச ..
	28	கங	ஞாயிறு ..	ஏகாதசி ஙஉ - ருஎ ..	ஹஸ்தம் உச - கரு ..
	29	கச	திங்கள் ..	துவாதசி ஙஎ - ஙஉ ..	சித்திரை உகூ - சகூ ..
	30	கரு	செவ்வாய் ..	திரயோதசி சங - ச ..	ஸ்வாதி ஙசு - உச ..
டிசம்பர்௴.	1	கசு	புதன் ..	சதுர்தசி சகூ - கரு ..	விசாகம் சங - ஙகூ ..
	2	கஎ	வியாழன்.	● அமாவாசை ருரு - ருஉ.	அநுஷம் ருக - கஎ ..
	3	கஅ	வெள்ளி ..	பிரதமை சு0 - 0 ..	கேட்டை ருகூ - கூ ..
	4	ககூ	சனி ..	பிரதமை உ - சஉ ..	மூலம் சு0 - 0 .. ..
	5	உ0	ஞாயிறு ..	துவிதியை கூ - உங ..	மூலம் சு - ருஉ ..
	6	உக	திங்கள் ..	திரிதியை கரு - ஙஅ ..	பூராடம் கச - கங ..
	7	உஉ	செவ்வாய் ..	சதுர்த்தி உக - கச ..	உத்திராடம் உ0 - ருசு ..
	8	உங	புதன் ..	பஞ்சமி உரு - சஅ ..	ஶ்ரீவணம் உசு - சஉ ..
	9	உச	வியாழன் ..	ஷஷ்டி உகூ - க ..	அவிட்டம் ஙக - எ ..
	10	உரு	வெள்ளி ..	ஸப்தமி ங0 - ஙரு ..	சதயம் ஙங - ருஎ ..
	11	உசு	சனி ..	அஷ்டமி ங0 - உஉ ..	பூரட்டாதி ஙரு - ச ..
	12	உஎ	ஞாயிறு ..	நவமி உஅ - கஎ ..	உத்திரட்டாதி ஙச - உசு ..
	13	உஅ	திங்கள் ..	தசமி உச - ககூ ..	ரேவதி ஙக - ருங ..
	14	உகூ	செவ்வாய் ..	ஏகாதசி கஅ - ஙரு ..	அசுவினி உஎ - சசு ..

தக்ஷிணாயனம்—சரத்ருது—விருச்சிக௴.

1937-ம்௵ நவம்பர்௴-டிசம்பர்௴.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள், விரதங்கள் முதலியவை. *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.	கால்நடைச் சந்தை கால் நடைக் காக்ஷி விவசாய காக்ஷி.
க	சித்த	பிரதோஷம், கரிநாள், முடவன் முழுக்கு.	வட ஆற்காடு ஜில்லா திருவண்ணுமலையில் வருஷத் திருக்கார்த்திகை திருநாளை முன்னிட்டு கால்நடைச்சந்தை கூடும். சமீபதிய ரெயில்வே ஸ்டேஷன் திருவண்ணுமலை.
உ	மரண ; சித்த ; அமிர்த.	....	
ங	மரண; உத்பாத	கிருத்திகா தீபம்-சர்வாலய தீபம். கிருத்திகா விரதம். ..	
ச	மரண ; சித்த ..	கார்த்திக பகுளம் ..	
ரு	சித்த	..	
சு	சித்த		
எ	அமிர்த ; சித்த ..		
அ	சித்த		
கூ	சித்த		
க0	அமிர்த ; சித்த ..	கரிநாள்	
கக	சித்த	..	
கஉ	உத்பாத ; மரண ..	..	
கங	அமிர்த ; சித்த ..	ஸர்வைகாதசி ; ஆகமன ஞாயிறு	
கச	பிரபலா ; அமிர்த ..	..	
கரு	சித்த ; மரண ..	பிரதோஷம்	
கசு	சித்த; அமிர்த ..	சிவராத்திரி	
கஎ	சித்த ; பிரபலா ..	கரிநாள் ; அமாவாசை.	
கஅ	மரண ; அமிர்த ..	மார்க்கசிர சுத்தம்.	
ககூ	சித்த	..	
உ0	அமிர்த ; சித்த ..	ஷவ்வால்௴ கஉ* குத்பா.	
உக	உத்பாத ; மரண ..	..	மலபார் ஜில்லா, குரும்பரநாத் தாலூகா கீழூரில் 1937-ம் ௵ டிசம்பர்௴ 10உயிலிருந்து 16-ம் தேதி முடிய கால்நடைச் சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் திக்கோட்டி.
உஉ	பிரபலா ; சித்த ..	..	
உங	சித்த ; பிரபலா ..	நாகபூஜா, நாகபஞ்சமி.	
உச	சித்த ; மரண ..	ஸ்கந்த ஷஷ்டி	
உரு	சித்த	..	
உசு	மரண ; சித்த	..	
உஎ	அமிர்த	விரிஞ்சிபுர கடை ஞாயிறு உத்ஸவம்.	
உஅ	சித்த	திருக்கழுக்குன்றம் 1008 சங்கு அபிஷேகம்.	
உகூ	சித்த	கைசீக ஏகாதசி.	

அமிர்த — அமிர்தயோகம்.
சித்த — சித்தயோகம்.
} சுபம்.

மரண — மரணயோகம்.
உத்பாத — உத்பாதயோகம்.
பிரபலா — பிரபலா நிஷ்டயோகம்.
} அசுபம்.

ஈஸ்வர வருஷம் மார்கழி மீ—

டிசம்பர் மீ. (15–31); 1938-ம் வருஷம் ஜனவரி மீ. (1–13)

தக்ஷிணாயனம்—ஹேமந்தருது—தனுர் மீ.

இங்கிலீஷ் மாதம், தேதி.	தமிழ். தேதி.	தமிழ். வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.
15	க	புதன் ..	துவாதசி கக - உரு ..	பரணி உஉ - அ .. ..
16	உ	வியாழன் ..	திரயோதசி ந-எ; சதுர்தசி ருச - கூ.	இருத்திகை ககூ - உகூ ..
17	ங	வெள்ளி ..	○ பௌர்ணமி சச - சஎ.	ரோகிணி அ - கஉ ..
18	ச	சனி ..	பிரதமை நசு - உசு ..	மிருகசிரம் ௦ - ச௦, ஆறுத்திரை ருங - உ௦.
19	ரு	ஞாயிறு ..	துவிதியை உசு - ங௦ ..	புநர்வசு - சகூ - ஙஅ ..
20	சு	திங்கள் ..	திரிதியை கஅ - ஙகூ ..	பூசம் ச௦ - ருகூ .. ..
21	எ	செவ்வாய் ..	சதுர்த்தி கஉ - ச ..	ஆயில்யம் ஙகூ - சஉ ..
22	அ	புதன் ..	பஞ்சமி எ - க௦	மகம் ஙச - கச ..
23	கூ	வியாழன் ..	ஷஷ்டி ச - எ	பூரம் ஙங - சசு ..
24	க௦	வெள்ளி ..	ஸப்தமி ங - க௦ ..	உத்திரம் ஙரு - உச ..
25	கக	சனி ..	அஷ்டமி ச - உ௦ ..	ஹஸ்தம் ஙஅ - ருகூ ..
26	கஉ	ஞாயிறு ..	நவமி எ - உங ..	சித்திரை சச - கசு ..
27	கங	திங்கள் ..	தசமி கஉ - ரு	ஸ்வாதி ரு௦ - ருக ..
28	கச	செவ்வாய் ..	ஏகாதசி கஎ - ருஅ ..	விசாகம் ருஅ - கரு ..
29	கரு	புதன் ..	துவாதசி உச - ஙஎ ..	அநுஷம் கூ௦ - ௦ ..
30	கசு	வியாழன் ..	திரயோதசி ஙக - ங௦ ..	அநுஷம் கூ - அ .. ..
31	கஎ	வெள்ளி ..	சதுர்தசி ஙஅ - உச ..	கேட்டை கச - க ..
1	கஅ	சனி ..	● அமாவாசை சங - சஅ.	மூலம் உக - ஙசு ..
2	ககூ	ஞாயிறு ..	பிரதமை சஅ - ௦ ..	பூராடம் உஎ - ஙரு ..
3	உ௦	திங்கள் ..	துவிதியை ருக - ஙரு ..	உத்திராடம் ஙக - ருகூ ..
4	உக	செவ்வாய் ..	திரிதியை ருங - ருகூ ..	ஶ்ரீவணம் ஙஎ - கஉ ..
5	உஉ	புதன் ..	சதுர்த்தி ருரு - சஎ ..	அவிட்டம் ச௦ - சஎ ..
6	உங	வியாழன்.	பஞ்சமி ருசு - உங ..	சதயம் சஉ - ஙரு ..
7	உச	வெள்ளி ..	ஷஷ்டி ருரு - சஅ ..	பூரட்டாதி சங - கக ..
8	உரு	சனி ..	ஸப்தமி ருச - ௦ ..	உத்திரட்டாதி சஉ - ஙஎ ..
9	உகூ	ஞாயிறு ..	அஷ்டமி ருக - உ ..	ரேவதி ச௦ - சஅ .. ..
10	உஎ	திங்கள் ..	நவமி சசு - கச ..	அசுவினி ஙகூ - ௦ ..
11	உச	செவ்வாய்	தசமி சக - உரு ..	பரணி ஙரு - ருகூ ..
12	உகூ	புதன் ..	ஏகாதசி ஙரு - ருகூ ..	இருத்திகை ஙஉ - உங ..
13	ங௦	வியாழன் ..	துவாதசி ங௦ - க ..	ரோகிணி உஅ - கஉ ..

1937-ம்ஹூ டிசம்பர்மீ-1938-ம்ஹூ ஜனவரிமீ.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள் விரதங்கள், முதலியவை *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.	கால் நடைச் சந்தை கால் நடை காக்ஷி விவசாய காக்ஷி.
க	சித்த ; அமிர்த ..	சாய ரவி கூ- டுக ஷடசித்தி கிருத்திகை.	
உ	மரண ; உத்பாத ..	..	
ங	மரண ; சித்த	..	
ச	சித்த	மார்க்கசிர பகுளம்.	
ரு	சித்த	ஆருத்திரா தரிசனம்.	
சு	சித்த	கரிநாள்.	
எ	சித்த	..	
அ	சித்த ; அமிர்த ..	..	
கூ	சித்த ; மரண ..	கரிநாள்.	
கo	சித்த ; அமிர்த ..	* கிரிஸ்துமஸ் ஆரம்பம் ..	
கக	மரண	கரிநாள்*, கிறிஸ்து பிறந்தது.	
கஉ	சித்த	..	
கங	அமிர்த ; மரண ..	..	
கச	மரண ; சித்த ..	ஸர்வைகாதசி	
கரு	அமிர்த	..	
கசு	சித்த ; பிரபலா ..	பிரதோஷம், சிவராத்திரி.	
கஎ	மரண ; அமிர்த ..	..	
கஅ	சித்த	* வருஷப் பிறப்பு ..	தென் ஆற்காடு ஜில்லா சிதம்பரத்தில் 1938-ம்ஹூ ஜனவரிமீ முதல் வாரத்தில் ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு விவசாயகாக்ஷி நடைபெறும். சமீபத்து ரெயில்வே ஸ்டேஷன் சிதம்பரம்.
ககூ	சித்த ; அமிர்த ..	* கிரிஸ்துமஸ் முடிவு ..	
உo	மரண ; அமிர்த ..	..	
உக	சித்த	ஜில்காத்மீ கஉ ..	
உஉ	பிரபலா ; சித்த ..	..	
உங	மரண ; சித்த ..	மூன்று ராஜாக்கள் ..	
உச	சித்த	..	
உரு	சித்த ; பிரபலா ..	..	திண்டிவனம் தாலூகா மைலத்தில் தை மாசத்தில் தை கார்த்திகை உத்ஸவத்தை முன்னிட்டு கால்நடைச்சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் மைலம்.
உசு	அமிர்த ; சித்த ..	..	
உஎ	சித்த	கூடாரவல்லி	
உஅ	சித்த	..	
உகூ	அமிர்த ; சித்த ..	வைகுண்ட ஏகாதசி, இருத்திகா விரதம்.	
ஙo	உத்பாத ; மரண ..	மகரோவி ங்ரு, சரு போகி.	

அமிர்த — அமிர்தயோகம்.
சித்த — சித்தயோகம். } சுபம்

மரண — மரணயோகம்.
உத்பாத — உத்பாதயோகம்.
பிரபலா — பிரபலா நிஷ்டயோகம். } அசுபம்.

ஈஸ்வர௵ தைமீ—

உத்தராயணம்—ஹேமந்தருது மகரமீ.

இங்கிலீஷ் மாதம்,	தேதி.	தமிழ் தேதி.	வாரம்.		திதி.		நக்ஷத்திரம்.	
ஜனவரிமீ.	14	க	வெள்ளி	..	திரயோதசி உச - ௦	..	மிருகசிரம் உச - ௦	..
	15	உ	சனி	..	ச்துர்தசி கஅ - ௦	..	ஆருத்திரை கக - சஅ	.,
	16	௩	ஞாயிறு	..	○பௌர்ணமி கஉ - ௩௬.		புநர்வசு க௬ - கஉ	..
	17	ச	திங்கள்	..	பிரதமை எ - சஅ	..	பூசம் கஉ - ௩௬	..
	18	ரு	செவ்வாய்	..	துவிதியை ௩ - ௩௬	..	ஆயில்யம் க௦ - கஉ	..
	19	௬	புதன்	..	திரிதியை ௦ - உ ; சதுர்த்தி ருஎ - ௦.		மகம் அ - உச ..	..
	20	எ	வியாழன்	..	பஞ்சமி ருரு - சஅ	..	பூரம் எ - சஅ ..	..
	21	அ	வெள்ளி	..	ஸஷ்டி ருரு - கஉ	..	உத்திரம் எ - சஅ	..
	22	க	சனி	..	ஸப்தமி ரு௬ - உச	..	ஹஸ்தம் க - ௦	..
	23	க௦	ஞாயிறு	..	அஷ்டமி ருஅ - கஉ	..	சித்திரை கக - உச	..
	24	கக	திங்கள்	..	நவமி ௬௦ - ௦ ..	..	ஸ்வாதி கரு - ௩௬	..
	25	கஉ	செவ்வாய்	..	நவமி உ - உச ..	..	விசாகம் உ௦ - உச	..
	26	க௩	புதன்	..	தசமி எ - கஉ ..	..	அநுஷம் உ௬ - உச	..
	27	கச	வியாழன்.		ஏகாதசி கக - உச	..	கேட்டை ௩௩ - ௦	..
	28	கரு	வெள்ளி	..	துவாதசி கஎ - உச	..	மூலம் ௩க - ௩௬	..
	29	க௬	சனி	..	திரயோதசி உஉ - சஅ	..	பூராடம் சரு - ௩௬	..
	30	கஎ	ஞாயிறு	..	சதுர்தசி உஎ - ௩௬	..	உத்திராடம் ருக - ௦	..
	31	கஅ	திங்கள்	..	●அமாவாசை ௩க - கஉ.		ஸ்ரீவணம் ருரு - சஅ	..
பிப்ரவரிமீ.	1	கக	செவ்வாய்.		பிரதமை ௩௩ - ௦	..	அவிட்டம் ருக - உச	..
	2	உ௦	புதன்	..	துவிதியை ௩ச - கஉ	..	சதயம் க௦ - ௦ ..	..
	3	உக	வியாழன்.		திரிதியை ௩ச - சஅ	..	சதயம் க - சஅ	..
	4	உஉ	வெள்ளி	..	சதுர்த்தி ௩ச - கஉ	..	பூரட்டாதி உ - உச	..
	5	உ௩	சனி	..	பஞ்சமி ௩க - சஅ	..	உத்திரட்டாதி உ - உச	..
	6	உச	ஞாயிறு	..	ஷஷ்டி உஅ - கஉ	..	ரேவதி க - கஉ, அசுவினி ருக - உச.	
	7	உரு	திங்கள்	..	ஸப்தமி உச - ௦	..	பரணி ருரு - சஅ	..
	8	உ௬	செவ்வாய்.		அஷ்டமி கக - கஉ	..	கிருத்திகை ருஉ - கஉ	..
	9	உஎ	புதன்	..	நவமி க௩ - சஅ	..	ரோகிணி சஅ - ௩௬	..
	10	உஅ	வியாழன்.		தசமி எ -- சஅ ..	..	மிருச்சிரம் சச - உச	..
	11	உக	வெள்ளி	..	ஏகாதசி க - சஅ, துவாதசி ருரு - சஅ.		ஆருத்திரை ச௦ - கஉ	..

1938-ம் ஞூ ஜனவரிமீ-பிப்ரவரிமீ.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள் விரதங்கள், முதலியவை *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.	கால்நடைச் சந்தை கால் நடைக் காக்ஷி விவசாய காக்ஷி.
க	சித்த	உத்தராயனம், கரிநாள் ..	திருநெல்வேலி ஜில்லா, கோயில்பட்டி தாலூகா, கழுகுமலையில் தைபூசம் உத்ஸவத்தை ஒட்டி 1938-ம் ஞூ ஜனவரிமீ 26-ம் வ யிலிருந்து 15 நாளைக்கு கால் நடைச் சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் கோயில்பட்டி 2 மைல் அல்லது நாலாட்டின் புதூர் 8 மைல்.
உ	சித்த	மாட்டுப்பொங்கல், கரிநாள்.	
௩	சித்த	கரிநாள்	
௪	சித்த	புஷ்யபகுளம், தைபூசம்.	
௫	சித்த	..	
௬	சித்த ; அமிர்த ..	..	
எ	சித்த ; மரண ..	அ-வது எட்வர்டு மஹாராஜா பட்டமேரியது.	
அ	சித்த ; அமிர்த ..	..	
கூ	மரண	..	
க0	சித்த	..	
கக	அமிர்த ; மரண ..	கரிநாள்	
கஉ	மரண ; சித்த ..	..	
க௩	அமிர்த ; சித்த ..	..	
க௪	பிரபலா ; சித்த ..	..	
க௫	அமிர்த ; பிரபலா.	..	
க௬	சித்த	..	
கஎ	அமிர்த	கரிநாள்.	
கஅ	அமிர்த ; சித்த ..	சோமவார தை அமாவாசை.	
ககூ	சித்த ; மரண ..	மாக சுத்தம்	திருநெல்வேலி ஜில்லா திருச்செந்தூரில் மாசி மஹத்தை ஒட்டி 1938-ம் ஞூ பிப்ரவரிமீ 15 நாளைக்குகால்நடைச்சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் திருச்செந்தூர்.
உ0	சித்த	..	
உக	மரண ; சித்த ..	ஜில்ஷேஜ்மீ கஉ ..	
உஉ	சித்த	குந்த-வா-சதுர்த்தி ..	
உ௩	சித்த ; பிரபலா ..	..	
உ௪	அமிர்த ; சித்த ; பிரபலா.	..	
உ௫	சித்த ; மரண ..	ரதஸப்தமி	
உ௬	சித்த ; அமிர்த ..	..	தென் ஆற்காடு ஜில்லா, ஜிஞ்சி தாலூகா, மேல்மாயநூரில் அங்களம்மா அம்மன் கோயில் உத்ஸவத்தை முன்னிட்டு 1938-ம் ஞூ பிப்ரவரி கடைசியில் கால்நடைச் சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் திண்டிவனம்.
உஎ	சித்த	..	
உஅ	மரண	..	
உகூ	சித்த	ஸர்வைகாதசி	

அமிர்த — அமிர்தயோகம்.
சித்த — சித்தயோகம். } சுபம்.

மரண — மரணயோகம்.
உத்பாத — உத்பாதயோகம்.
பிரபலா — பிரபலா நிஷ்டயோகம். } அசுபம்.

ஈஸ்வர௵ மாசிமீ—

இங்கிலீஷ் மாதம்,	தேதி.	தமிழ் தேதி.	தமிழ் வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.
பிப்ரவரிமீ.	12	௧	சனி	திரயோதசி ௫௦ - ௨௪	புநர்வசு ௩௬ - ௩௬
	13	௨	ஞாயிறு	சதுர்தசி ௪௫ - ௦	பூசம் ௩௩ - ௦
	14	௩	திங்கள்	○ பௌர்ணமி ௪௦ - ௪௮	ஆயில்யம் ௩௦ - ௦
	15	௪	செவ்வாய்	பிரதமை ௩௭ - ௪௮	மகம் ௨௮ - ௧௨
	16	௫	புதன்	துவிதியை ௩௫ - ௨௪	பூரம் ௨௭ - ௦
	17	௬	வியாழன்	திரிதியை ௩௩ - ௩௬	உத்திரம் ௨௭ - ௦
	18	௭	வெள்ளி	சதுர்த்தி ௩௨ - ௨௪	ஹஸ்தம் ௨௮ - ௧௨
	19	௮	சனி	பஞ்சமி ௩௩ - ௩௬	சித்திரை ௩௦ - ௦
	20	௯	ஞாயிறு	ஷஷ்டி ௩௬ - ௦	ஸ்வாதி ௩௩ - ௩௬
	21	௧௦	திங்கள்	ஸப்தமி ௩௯ - ௩௬	விசாகம் ௩௯ - ௦
	22	௧௧	செவ்வாய்	அஷ்டமி ௪௪ - ௨௪	அநுஷம் ௪௪ - ௨௪
	23	௧௨	புதன்	நவமி ௪௯ - ௪௮	கேட்டை ௫௧ - ௦
	24	௧௩	வியாழன்	தசமி ௫௫ - ௧௨	மூலம் ௫௭ - ௩௬
	25	௧௪	வெள்ளி	ஏகாதசி ௬௦ - ௦	பூராடம் ௬௦ - ௦
	26	௧௫	சனி	ஏகாதசி ௦ - ௧௬	பூராடம் ௩ - ௩௬
	27	௧௬	ஞாயிறு	துவாதசி ௪ - ௧௨	உத்திராடம் ௯ - ௩௬
	28	௧௭	திங்கள்	திரயோதசி ௭ - ௪௮	ஸ்ரவணம் ௧௪ - ௨௪
மார்ச்சுமீ.	1	௧௮	செவ்வாய்	சதுர்தசி ௧௦ - ௪௮	அவிட்டம் ௧௮ - ௦
	2	௧௯	புதன்	● அமாவாசை ௧௨ - ௦	சதயம் ௨௦ - ௨௪
	3	௨௦	வியாழன்	பிரதமை ௧௨ - ௦	பூரட்டாதி ௨௧ - ௩௬
	4	௨௧	வெள்ளி	துவிதியை ௧௦ - ௪௮	உத்திரட்டாதி ௨௨ - ௧௨
	5	௨௨	சனி	திரிதியை ௮ - ௨௪	ரேவதி ௨௧ - ௦
	6	௨௩	ஞாயிறு	சதுர்த்தி ௪ - ௪௮	அசுவினி ௧௯ - ௧௨
	7	௨௪	திங்கள்	பஞ்சமி ௦ - ௩௬, ஷஷ்டி ௫௫ - ௪௮.	பரணி ௧௬ - ௧௨
	8	௨௫	செவ்வாய்	ஸப்தமி ௫௦ - ௨௪	கிருத்திகை ௧௨ - ௩௬
	9	௨௬	புதன்	அஷ்டமி ௪௪ - ௨௪	ரோஹிணி ௯ - ௦
	10	௨௭	வியாழன்	நவமி ௩௮ - ௨௪	மிருகசிரம் ௪ - ௪௮
	11	௨௮	வெள்ளி	தசமி ௩௨ - ௨௪	ஆருத்திரை ௦ - ௩௬, புனர்வசு ௫௬ - ௨௪
	12	௨௯	சனி	ஏகாதசி ௨௬ - ௨௪	பூசம் ௫ - ௪௮
	13	௩௦	ஞாயிறு	துவாதசி ௨௧ - ௦	ஆயில்யம் ௪௯ - ௪௮

உத்திராயணம்—சிசிரருது—கும்பமீ.

1938-ம் ௵ பிப்ரவரி௴-மார்ச்சு௴.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள், விரதங்கள் முதலியவை *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.	கால் நடைச் சந்தை கால்நடை காக்ஷி விவசாய காக்ஷி.
க	சித்த	கும்பேரவி அ-கக ; விஷ்ணுபதி,* பக்ரீத் ; பிரதோஷம் திருவொற்றியூர் மகிழடி.	திருநெல்வேலி ஜில்லா கீழவீரருகவபுரத்தில் 1938-ம் ௵ மார்ச்சு௴ 1௳யிலிருந்து 15௳ முடிய கால் நடைச்சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் குரிச்சி—1 மைல்.
உ	சித்த		
ங	சித்த ; மரண ..	..	
ச	சித்த	மாகபகுளம்	
ரு	அமிர்த	..	
சா	மரணம் ; சித்த ..	..	
எ	அமிர்தம் ; சித்த	..	
அ	மரண ; அமிர்த ..	..	
கூ	சித்த ; உத்பாத ..	..	
கo	மரண ; சித்த ..	..	
கக	சித்த ; உத்பாத ..	..	
கஉ	சித்த ; மரண ..	..	
கங	சித்த	..	
கச	பிரபலா	ஸ்மார்த்த ஏகாதசி ..	
கரு	சித்த	கரிநாள் ; வைஷ்ணவ ஏகாதசி.	
கசா	அமிர்த	கரிநாள் ; பிரதோஷம்.	
கஎ	அமிர்த ; சித்த ..	* மஹா சிவராத்திரி ; கரிநாள்.	
கஅ	சித்த ; மரண ..	அமாவாசை ; திருவல்லிக்கேணி தெப்பம்.	
ககூ	சித்த ; அமிர்த ..	* ஆஷ்வெட்னஸ்டே ..	
உo	சித்த	பால்குணசுத்தம் ..	
உக	சித்த ; அமிர்த ..	..	
உஉ	அமிர்த ; சித்த ..	..	
உங	சித்த ; பிரபலா ..	..	
உச	சித்த ; மரண ..	..	
உரு	சித்த ; அமிர்த ..	..	
உசா	சித்த	..	
உஎ	மரண	..	
உஅ	சித்த ; சித்த ; உத்பாத.	..	
உகூ	சித்த ; மரண ..	திருநாராயணபுர வைரமுடி ; ஸர்வைகாதசி.	
நo	சித்த ; மரண ..	மோஹரம்—10-வது நாள் ; மயிலை அறுபத்துமூவர்.	

அமிர்த — அமிர்தயோகம்.
சித்த — சித்தயோகம். } சுபம்.

மரண — மரணயோகம்.
உத்பாத — உத்பாதயோகம்.
பிரபலா — பிரபலா நிஷ்டயோகம். } அசுபம்.

ஈஸ்வரஃப பங்குனிமீ—

இங்கிலீஷ் மாதம்	இங்கிலீஷ் தேதி		தமிழ் தேதி	தமிழ் வாரம்	திதி	நக்ஷத்திரம்
மார்ச்சுமீ.	14	உத்திராயணம்—இருது—மீனமீ.	௧	திங்கள்	திரயோதசி ௧௬ - ௪௮	மகம் ௪௮ - ௦
	15		௨	செவ்வாய்	சதுர்தசி ௧௩ - ௧௨	பூரம் ௪௬ - ௪௮
	16		௩	புதன்	○ பௌர்ணமி ௧௦ - ௪௮	உத்திரம் ௪௬ - ௧௨
	17		௪	வியாழன்	பிரதமை ௯ - ௦	ஹஸ்தம் ௪௬ - ௪௮
	18		௫	வெள்ளி	துவிதியை ௮ - ௨௪	சித்திரை ௪௯ - ௧௨
	19		௬	சனி	திரிதியை ௧௦ - ௧௨	ஸ்வாதி ௫௨ - ௪௮
	20		௭	ஞாயிறு	சதுர்த்தி ௧௨ - ௩௬	விசாகம் ௫௭ - ௦
	21		௮	திங்கள்	பஞ்சமி ௧௫ - ௩௬	அநுஷம் ௬௦ - ௦
	22		௯	செவ்வாய்	ஷஷ்டி ௨௦ - ௨௪	அநுஷம் ௨ - ௨௪
	23		௧௦	புதன்	ஸப்தமி ௨௫ - ௪௮	கேட்டை ௮ - ௨௦
	24		௧௧	வியாழன்	அஷ்டமி ௩௧ - ௧௨	மூலம் ௧௫ - ௦
	25		௧௨	வெள்ளி	நவமி ௩௬ - ௦	பூராடம் ௨௧ - ௩௬
	26		௧௩	சனி	தசமி ௪௦ - ௧௨	உத்திராடம் ௨௭ - ௩௬
	27		௧௪	ஞாயிறு	ஏகாதசி ௪௩ - ௪௮	ஸ்ரவணம் ௩௩ - ௦
	28		௧௫	திங்கள்	துவாதசி ௪௬ - ௧௨	அவிட்டம் ௩௬ - ௩௬
	29		௧௬	செவ்வாய்	திரயோதசி ௪௬ - ௪௮	சதயம் ௩௯ - ௩௬
	30		௧௭	புதன்	சதுர்தசி ௪௬ - ௪௮	பூரட்டாதி ௪௧ - ௨௪
	31		௧௮	வியாழன்	● அமாவாசை ௪௫ - ௩௬	உத்திரட்டாதி ௪௨ - ௦
	1		௧௯	வெள்ளி	பிரதமை ௪௩ - ௧௨	ரேவதி ௪௦ - ௪௮
ஏப்ரல்மீ.	2		௨௦	சனி	துவிதியை ௩௯ - ௩௬	அசுவினி ௩௯ - ௦
	3		௨௧	ஞாயிறு	திரிதியை ௩௫ - ௨௪	பரணி ௩௬ - ௦
	4		௨௨	திங்கள்	சதுர்த்தி ௩௦ - ௦	கிருத்திகை ௩௩ - ௦
	5		௨௩	செவ்வாய்	பஞ்சமி ௨௪ - ௦	ரோகிணி ௨௯ - ௨௧
	6		௨௪	புதன்	ஷஷ்டி ௧௮ - ௦	மிருகசிரம் ௨௫ - ௧௨
	7		௨௫	வியாழன்	ஸப்தமி ௧௨ - ௦	ஆருத்திரை ௨௧ - ௦
	8		௨௬	வெள்ளி	அஷ்டமி ௬ - ௦	புநர்வுசு ௧௬ - ௪௮
	9		௨௭	சனி	நவமி ௦ - ௨ ; தசமி ௫௫ - ௧௨.	பூசம் ௧௩ - ௧௨.
	10		௨௮	ஞாயிறு	ஏகாதசி ௫௦ - ௨௪	ஆயில்யம் ௧௦ - ௧௨
	11		௨௯	திங்கள்	துவாதசி ௪௬ - ௪௮	மகம் ௭ - ௪௮
	12		௩௦	செவ்வாய்	திரயோதசி ௪௪ - ௨௪	பூரம் ௬ - ௩௬

1938-ம்௵ மார்ச்சுமீ - ஏப்ரல்மீ.

தேதி.	அமிர்தாதி யோகம்.	பண்டிகைகள், விரதங்கள் முதலியவை *கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள்.
க	மரண ; சித்த ..	மீனே ரவி க-க ..
உ	சித்த ; அமிர்த ..	ஹோலி பண்டிகை ..
ங	அமிர்த ; மரண ..	..
ச	சித்த	பால் குணபகுளம் ..
ரு	சித்த	புட்லூர் உத்ஸவம் ..
சா	அமிர்த ; சித்த ..	கரிநாள் .. ..
எ	உத்பாத ; மரண ..	..
அ	சித்த	..
கூ	சித்த ; உத்பாத ..	..
கo	சித்த ; மரண ..	..
கக	சித்த	..
கஉ	பிரபலா ; சித்த ..	தேவமாதாவுக்கு மங்களவாக்களித்தது.
கங	சித்த	..
கச	அமிர்த ; மரண ..	..
கரு	சித்த	கரிநாள் .. .. ..
கசா	மரண	..
கஎ	அமிர்த ; சித்த ..	..
கஅ	சித்த	..
ககூ	அமிர்த	* யுகாதி ; தெலுங்கு வருஷப்பிறப்பு ; சைத்ரசுத்தம் ; கரிநாள்.
உo	சித்த	..
உக	பிரபலா ; சித்த ..	..
உஉ	மரண ; அமிர்த ..	ராஜமன்னார் வெண்ணெய்த்தாழி.
உங	அமிர்த ; சித்த ..	..
உச	சித்த	..
உரு	மரண ; அமிர்த ..	ஸ்லேமன் பார்சீ உரூஸ் ..
உசா	சித்த ; உத்பாத ..	* ஸ்ரீராமநவமி .. ..
உஎ	சித்த ; மரண ..	..
உஅ	சித்த ; மரண ..	குறுத்தோலை திருநாள் ; ஏகாதசி .. ..
உகூ	மரண ; சித்த ..	..
ஙo	சித்த ; அமிர்த ..	பங்குனி உத்திரம் ; பீர் பீல்வான் உரூஸ்.

கால் நடைச் சந்தை கால் நடை காக்ஷி விவசாய காக்ஷி.

மதுரை ஜில்லா, பழனி தாலூகா, இடயகோட்டையில் ஏப்ரல்மீ முதல் வாரத்தில் மாரியம்மன் உத்ஸவத்தன்று 5 நாளைக்கு கால்நடைச்சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் புலக்கநூத்து—8 மைல்.

மதுரை ஜில்லா, நிலக்கோட்டை தாலூகா, ஆத்தூரில் 1937-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 13-ம் தேதியிலிருந்து ஒரு வாரத்துக்கு கால்நடைச்சந்தை கூடும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன். அம்பாதுரை—6 மைல்.

திருநெல்வேலி ஜில்லா, சிவலப்பேரியில் 1937-ம் வருஷம் ஏப்ரல்மீ 12-ம் தேதியிலிருந்து 26-ம் தேதி முடிய கால் நடைச்சந்தை கூடும் சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன் கெங்கைகொண்டான்—3 மைல்.

சித்தூர் ஜில்லா, வாயல்பாட் தாலூகா, எல்லத்லாவில் 1937-ம் வருஷம் ஏப்ரல் மாசத்தில் கால்நடைச்சந்தை கூடும். பக்கத்து ரெயில்வே ஸ்டேஷன் வாயல்பாடு—15 மைல்.

சேலம் ஜில்லா, ராசிபுரம் தாலூகா, புதுப்பட்டியில் மாரியம்மன் திருவிளாவின்போது ஏப்ரல் மாதம் 7-ந் தேதியிலிருந்து 11-ந் தேதி முடிய கால்நடைச்சந்தை கூடும். சமீபத்திய ரெயில்வே ஸ்டேஷன், சேலம் டவுன்—25 மைல்.

அமிர்த — அமிர்தயோகம்.
சித்த — சித்தயோகம்.
} சுபம்.

மரண — மரணயோகம்.
உத்பாத — உத்பாதயோகம்.
பிரபலா — பிரபலா நிஷ்டயோகம்.
} அசுபம்.

இராகு, குளிகை காலங்கள்.

இராகு காலம். (அசுபம்).	நாட்கள்.	குளிகை காலம். (சுபம்).
மாலை 4½ மணியிலிருந்து 6 மணி வரைக்கும்.	ஞாயிறு ..	மாலை 3 மணியிலிருந்து 4½ மணி வரைக்கும்.
காலை 7½ மணியிலிருந்து 9 மணி வரைக்கும்.	திங்கள் ..	பகல் 1½ மணியிலிருந்து 3 மணி வரைக்கும்.
மாலை 3 மணியிலிருந்து 4½ மணி வரைக்கும்.	செவ்வாய் ..	பகல் 12 மணியிலிருந்து 1½ மணி வரைக்கும்.
பகல் 12 மணியிலிருந்து 1½ மணி வரைக்கும்.	புதன் ..	காலை 10½ மணியிலிருந்து பகல் 12 மணி வரைக்கும்,
பகல் 1½ மணியிலிருந்து 3 மணி வரைக்கும்.	வியாழன் ..	காலை 9 மணியிலிருந்து 10½ மணி வரைக்கும்.
காலை 10½ மணியிலிருந்து பகல் 12 மணி வரைக்கும்.	வெள்ளி ..	காலை 7½ மணியிலிருந்து 9 மணி வரைக்கும்.
காலை 9 மணியிலிருந்து 10½ மணி வரைக்கும்.	சனி ..	காலை 6 மணியிலிருந்து 7½ மணி வரைக்கும்.

மேல் குறித்திருக்கும் காலங்கள் சூரிய உதயம் 6 மணியுள்ள தினங்களுக்குப் பொருந்தும். மற்ற தினங்களுக்கு 6 மணிக்கும் சூரிய உதயகாலத்திற்குமுள்ள வித்தியாசத்தை இதில் குறித்திருக்கும் காலங்களுடன் கூட்டியோ கழித்தோ பார்க்க காலங்கள் ஏற்படும்.

sym